செம்மொழித் தமிழ்
அகப்பொருள் களஞ்சியம்

தொகுதி–12

பொருள்வயிற்பிரிவு - 5
போர்வயிற்பிரிவு

முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன்

செம்மொழித் தமிழ்
அகப்பொருள் களஞ்சியம்

பொருள்வயிற்பிரிவு - 5
போர்வயிற்பிரிவு

தொகுதி - 12

முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன்

பழனியப்பா பிரதர்ஸ்
'கோனார் மாளிகை'
25, பீட்டர்ஸ் சாலை, இராயப்பேட்டை,
சென்னை - 600 014.
தொலைபேசி : 044-28132863 / 43408000
e-mail: sales@palaniappabrothers.com
கிளைகள்
திருச்சி - 620 002
சேலம் - 636 001
கோயம்புத்தூர் - 641 001
மதுரை - 625 001
ஈரோடு - 638 001

முதல் பதிப்பு : 2017
© உரிமை – ஆசிரியருக்கு

ISBN: 978-81-8379-767-2 (Set of 14)
978-81-8379-779-5 (Vol-12)

தனிப்பிரதி விலை ரூ. 520/–
(தொகுதி–12)

மொத்த விலை ரூ. 7200/–
(14 தொகுதிகள்)

கணினி அச்சு : திருமதி இந்திராகாந்தி ரவி
ரமணா கணினி வரையகம், 97890 65515

ஏசியன் பிரிண்டர்ஸ், சென்னை - 600 014.

கிளைகள்

திருச்சி
பழனியப்பா பிரதர்ஸ்
அஞ்சல் பெட்டி எண். 312,
தெப்பக்குளம்,
திருச்சிராப்பள்ளி – 620 002
தொலைபேசி : 0431–2702160

சேலம்
பழனியப்பா பிரதர்ஸ்
கதவு இலக்கம் 77,
(பழைய எண் 39) செர்ரி சாலை,
சேலம் – 636 001
தொலைபேசி : 0427–2450711

கோவை
பழனியப்பா பிரதர்ஸ்
683, ராஜா தெரு,
கோயமுத்தூர் – 641 001
தொலைபேசி : 0422–2393704

மதுரை
பழனியப்பா பிரதர்ஸ்
23-A, மேற்கு கோபுரத் தெரு,
மதுரை – 625 001
தொலைபேசி : 0452–2346258

ஈரோடு
பழனியப்பா பிரதர்ஸ்
950, ப்ரோக் சாலை,
ஈரோடு – 638 001
தொலைபேசி : 0424–2256261

பொருளடக்கம்

களஞ்சிய வாயில் xv

மதிப்புரை xx

பதிப்புரை xxi

அகத்திணை xxiii

பொருள்வயிற்பிரிவு - 5

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
அகநானூறு 9	கொல்வினைப்	கல்லாடனார்	1510
அகநானூறு 29	தொடங்குவினை	வெள்ளாடியனார்	1608
அகநானூறு 34	சிறுகரும்	மதுரை மருதனிளநாகனார்	1486
அகநானூறு 39	ஒழித்தது	மதுரைச் செங்கண்ணனார்	1611
அகநானூறு 64	களையும்	ஆர்க்காடு கிழார் மகனார் வெள்ளைக் கண்ணத்தனார்	1486
அகநானூறு 94	தேம்படு	நல்லூர்ச் சிறுமேதாவியார்	1505
அகநானூறு 114	கேளாய்	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	1492
அகநானூறு 125	அரம்போழ்	பரணர்	1542
அகநானூறு 134	வானம்	சீத்தலைச் சாத்தனார்	1507
அகநானூறு 154	படுமழை	பொதும்பிற் புல்லாளங்கண்ணியார்	1454
அகநானூறு 184	கடவுள்	மதுரை மருதனிளநாகனார்	1564
அகநானூறு 234	கார்பயம்	பேயனார்	1481
அகநானூறு 244	பசைபடு	மதுரை மள்ளனார்	1456

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
அகநானூறு 269	தொடிதோள்	மதுரை மருதனிளநாகனார்	1526
அகநானூறு 274	இருவிசும்பு	இடைக்காடனார்	1503
அகநானூறு 284	சிறியிலை	இடைக்காடனார்	1501
அகநானூறு 314	நீலத்து	மதுரை அளக்கர் ஞாழார் மகனார் அம்மள்ளனார்	1560
அகநானூறு 317	மாக	வடமோதங்கிழார்	1574
அகநானூறு 324	விருந்தும்	ஒக்கூர் மாசாத்தியார்	1637
அகநானூறு 344	வளமழை	மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார்	1484
அகநானூறு 351	வேற்றுநாட்டு	பொருந்தில் இளங்கீரனார்	1514
அகநானூறு 363	நிரைசெலல்	மதுரைப் பொன்செய் கொல்லன் வெண்ணாகனார்	1538
ஐங்குறுநூறு 324	எரிகவர்ந்து	ஓதலாந்தையார்	1615
ஐங்குறுநூறு 325	வேனில்	ஓதலாந்தையார்	1618
ஐங்குறுநூறு 328	நுண்மழை	ஓதலாந்தையார்	1523
ஐங்குறுநூறு 351	அத்தப்	ஓதலாந்தையார்	1578
ஐங்குறுநூறு 352	விழுத்தொடை	ஓதலாந்தையார்	1559
ஐங்குறுநூறு 353	எரிக்கொடி	ஓதலாந்தையார்	1579
ஐங்குறுநூறு 354	ஈர்ம்பிணவு	ஓதலாந்தையார்	1551

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
ஐங்குறுநூறு 355	திருந்துஇழை	ஓதலாந்தையார்	1605
ஐங்குறுநூறு 356	உள்ளுதற்கு	ஓதலாந்தையார்	1587
ஐங்குறுநூறு 357	குரவம்	ஓதலாந்தையார்	1581
ஐங்குறுநூறு 358	கோடுயர்	ஓதலாந்தையார்	1571
ஐங்குறுநூறு 359	அரும்பொருள்	ஓதலாந்தையார்	1616
ஐங்குறுநூறு 360	எரிகவர்ந்து	ஓதலாந்தையார்	1588
ஐங்குறுநூறு 362	பதுக்கைத்து	ஓதலாந்தையார்	1568
ஐங்குறுநூறு 411	ஆர்குரல்	பேயனார்	1602
ஐங்குறுநூறு 412	காயா	பேயனார்	1597
ஐங்குறுநூறு 413	நின்நுதல்	பேயனார்	1600
ஐங்குறுநூறு 414	புள்ளும்	பேயனார்	1599
ஐங்குறுநூறு 415	இதுவே,	பேயனார்	1594
ஐங்குறுநூறு 416	போதார்	பேயனார்	1596
ஐங்குறுநூறு 417	கார்கலந்	பேயனார்	1603
ஐங்குறுநூறு 418	வானம்	பேயனார்	1606
ஐங்குறுநூறு 419	உயிர்கலந்து	பேயனார்	1595
ஐங்குறுநூறு 421	மாலை	பேயனார்	1636
ஐங்குறுநூறு 422	கடும்பரிப்	பேயனார்	1467
ஐங்குறுநூறு 425	புன்புறப்	பேயனார்	1468
ஐங்குறுநூறு 481	சாய்இறைப்	பேயனார்	1469
ஐங்குறுநூறு 482	தெரிஇழை	பேயனார்	1470

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
ஐங்குறுநூறு 483	ஆறு	பேயனார்	1471
ஐங்குறுநூறு 484	வேனில்	பேயனார்	1472
ஐங்குறுநூறு 485	அரும்படர்	பேயனார்	1473
ஐங்குறுநூறு 486	பெரும்புன்	பேயனார்	1474
ஐங்குறுநூறு 487	இதுமன்	பேயனார்	1475
ஐங்குறுநூறு 488	கருவி	பேயனார்	1476
ஐங்குறுநூறு 489	அம்சிறை	பேயனார்	1477
ஐங்குறுநூறு 490	அம்தீங்	பேயனார்	1478
ஐங்குறுநூறு 491	கார்எதிர்	பேயனார்	1592
ஐங்குறுநூறு 492	நின்னே	பேயனார்	1590
ஐங்குறுநூறு 493	ஏறுமுரண்	பேயனார்	1591
ஐங்குறுநூறு 494	வண்டுதாது	பேயனார்	1585
ஐங்குறுநூறு 495	செல்நில	பேயனார்	1586
ஐங்குறுநூறு 496	மாபுதல்	பேயனார்	1580
ஐங்குறுநூறு 499	பிடவம்	பேயனார்	1573
ஐங்குறுநூறு 500	கொன்றைப்	பேயனார்	1569
ஐந்திணை ஐம்பது 10	நூல்நவின்ற	மாறன் பொறையனார்	1446
கலித்தொகை 16	பாடின்றிப்	பாலை பாடிய பெருங்கடுங்கோ	1554
கலித்தொகை 120	அருள்தீர்ந்த	நல்லந்துவனார்	1625
கலித்தொகை 130	நயனும்,	நல்லந்துவனார்	1633
கலித்தொகை 134	மல்லரை	நல்லந்துவனார்	1629

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
கார் நாற்பது 19	நாஞ்சில்	மதுரைக் கண்ணங்கூத்தனார்	1464
கார் நாற்பது 21	பொறிமாண்	மதுரைக் கண்ணங்கூத்தனார்	1466
கார் நாற்பது 22	இளையரும்	மதுரைக் கண்ணங்கூத்தனார்	1460
கார் நாற்பது 24	எல்லா	மதுரைக் கண்ணங்கூத்தனார்	1459
கார் நாற்பது 31	கார்ச்சேண்	மதுரைக் கண்ணங்கூத்தனார்	1463
கார் நாற்பது 32	கடாஅவுக	மதுரைக் கண்ணங்கூத்தனார்	1461
கார் நாற்பது 33	கடல்நீர்	மதுரைக் கண்ணங்கூத்தனார்	1462
கார் நாற்பது 36	சிரல்வாய்	மதுரைக் கண்ணங்கூத்தனார்	1522
குறுந்தொகை 99	உள்ளினென்	ஔவையார்	1621
குறுந்தொகை 107	குவிஇணர்த்	மதுரைக் கண்ணனார்	1647
குறுந்தொகை 209	அறம்தலைப்	பாலை பாடிய பெருங்கடுங்கோ	1623
குறுந்தொகை 210	திண்தேர்	காக்கை பாடினியார் நச்செள்ளையார்	1619
குறுந்தொகை 237	அஞ்சுவது	அள்ளூர் நன்முல்லை	1445
குறுந்தொகை 250	பரல்அவல்	நாமலார் மகனார் இளங்கண்ணனார்	1479

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
குறுந்தொகை 270	தாழ்இருள்	பாண்டியன் பன்னாடுதந்தான்	1643
குறுந்தொகை 400	சேயாறு	பேயனார்	1524
கைந்நிலை 27	....ா ஒல்கப்	புல்லங்காடனார்	1553
கைந்நிலை 28	.....பெய்த	புல்லங்காடனார்	1552
கைந்நிலை 34	முல்லை	புல்லங்காடனார்	1570
திணைமாலை நூற்றைம்பது 115	படுந்தடங்கண்	கணிமேதாவியார்	1558
திணைமாலை நூற்றைம்பது 123	இம்மையால்	கணிமேதாவியார்	1642
திருக்குறள் 1257	நாண்என	திருவள்ளுவர்	1661
திருக்குறள் 1258	பன்மாயக்	திருவள்ளுவர்	1662
திருக்குறள் 1259	புலப்பல்	திருவள்ளுவர்	1664
திருக்குறள் 1260	நிணம்தீயில்	திருவள்ளுவர்	1665
திருக்குறள் 1271	கரப்பினும்	திருவள்ளுவர்	1651
திருக்குறள் 1272	கண்நிறைந்த	திருவள்ளுவர்	1652
திருக்குறள் 1273	மணியில்	திருவள்ளுவர்	1653
திருக்குறள் 1274	முகைமொக்குள்	திருவள்ளுவர்	1655
திருக்குறள் 1275	செறிதொடி	திருவள்ளுவர்	1656
திருக்குறள் 1276	பெரி(து)ஆற்றிப்	திருவள்ளுவர்	1657
திருக்குறள் 1277	தண்அம்	திருவள்ளுவர்	1659
திருக்குறள் 1278	நெருநற்றுச்	திருவள்ளுவர்	1660
நற்றிணை 42	மறத்தற்கு	கீரத்தனார்	1452

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
நற்றிணை 59	உடும்பு	கபிலர்	1499
நற்றிணை 86	அறவர்	நக்கீரர்	1583
நற்றிணை 89	கொண்டல்	இளம்புல்லூர்க் காவிதியார்	1545
நற்றிணை 106	அறிதலும்	தொண்டைமான் இளந்திரையன்	1495
நற்றிணை 139	உலகிற்கு	பெருங்கௌசிகனார்	1645
நற்றிணை 142	வான்இகுபு	இடைக்காடனார்	1497
நற்றிணை 164	உறைதுறந்	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	1536
நற்றிணை 174	கற்றை	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	1648
நற்றிணை 181	உள்இறைக்	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	1548
நற்றிணை 212	பார்வை	குடவாயிற்கீரத்தனார்	1531
நற்றிணை 221	மணிகண்	இளவேட்டனார்	1517
நற்றிணை 242	இலைஇல	விழிக்கட்பேதைப் பெருங்கண்ணனார்	1450
நற்றிணை 321	செந்நிலப்	மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார்	1520
நற்றிணை 361	சிறுவீ	மதுரைப் பேராலவாயர்	1640
நற்றிணை 367	கொடுங்கண்	நக்கீரர்	1533
நற்றிணை 371	காயாங்	ஔவையார்	1448

போர்வயிற்பிரிவு

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
அகநானூறு 24	வேளாப்	ஆவூர் மூலங்கிழார்	1718
அகநானூறு 44	வந்துவினை	குடவாயில் கீரத்தனார்	1757
அகநானூறு 54	விருந்தின்	மாற்றூர்கிழார் மகனார் கொற்றங் கொற்றனார்	1761
அகநானூறு 74	வினைவலம்	மதுரைக் கவுணியன் பூதத்தனார்	1733
அகநானூறு 84	மலைமிசைக்	மதுரை எழுத்தாளன்	1678
அகநானூறு 104	வேந்துவினை	மதுரை மருதனிளநாகனார்	1798
அகநானூறு 124	நன்கலம்	மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்	1764
அகநானூறு 144	வருதும்	மதுரை அளக்கர் ஞாழலார் மகனார் மள்ளனார்	1754
அகநானூறு 164	கதிர்கை	மதுரைத் தமிழ்க்கூத்தன் நாகன் தேவனார்	1712
அகநானூறு 174	இருபெரு	மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார்	1686
அகநானூறு 194	பேர்உறை	இடைக்காடனார்	1689

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
அகநானூறு 204	உலகுஉடன்	மதுரைக் காமக்கணி நப்பாலத்தனார்	1767
அகநானூறு 214	அகல்இரு	வடமவண்ணக்கன் பேரி சாத்தனார்	1684
அகநானூறு 215	விலங்குஇருஞ்	இறங்குகுடிக் குன்ற நாடன்	1668
அகநானூறு 224	செல்க	ஆவூர் மூலங்கிழார் மகனார் பெருந்தலைச் சாத்தனார்	1769
அகநானூறு 254	நரைவிரா	மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்	1789
அகநானூறு 264	மழைஇல்	உம்பற்காட்டு இளங்கண்ணனார்	1728
அகநானூறு 294	மல்குல்	கழார்க்கீரன் எயிற்றியார்	1726
அகநானூறு 304	இருவிசும்பு	இடைக்காடனார்	1680
அகநானூறு 334	ஓடா	மதுரைக் கூத்தனார்	1772
அகநானூறு 354	மதவலி	மதுரைத் தமிழ்க்கூத்தன் கடுவன் மள்ளனார்	1793
அகநானூறு 364	மாதிரம்	மதுரை மருதங்கிழார் மகனார் பெருங்கண்ணனார்	1731
அகநானூறு 374	மாக்கடல்	இடைக்காடனார்	1775
அகநானூறு 384	இருந்த	ஒக்கூர் மாசாத்தியார்	1795
ஐங்குறுநூறு 426	வெல்வேல்	பேயனார்	1809

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
ஐங்குறுநூறு 427	பேரமர்	பேயனார்	1811
ஐங்குறுநூறு 428	தேர்செலவு	பேயனார்	1812
ஐங்குறுநூறு 429	பல்இருங்	பேயனார்	1675
ஐங்குறுநூறு 441	ஐய	பேயனார்	1721
ஐங்குறுநூறு 442	பெருஞ்சின	பேயனார்	1700
ஐங்குறுநூறு 443	நனிசேய்த்து	பேயனார்	1701
ஐங்குறுநூறு 444	பெருந்தோள்	பேயனார்	1702
ஐங்குறுநூறு 445	புகழ்சால்	பேயனார்	1714
ஐங்குறுநூறு 446	முல்லை	பேயனார்	1717
ஐங்குறுநூறு 447	பிணிவீடு	பேயனார்	1704
ஐங்குறுநூறு 448	தழங்குகுரல்	பேயனார்	1715
ஐங்குறுநூறு 449	முரம்புகண்	பேயனார்	1705
ஐங்குறுநூறு 450	முரசுமாறி	பேயனார்	1706
ஐங்குறுநூறு 451	கார்செய்	பேயனார்	1737
ஐங்குறுநூறு 452	வறந்த	பேயனார்	1741
ஐங்குறுநூறு 455	அரசுபகை	பேயனார்	1739
ஐங்குறுநூறு 459	மெல்இறைப்	பேயனார்	1743
ஐங்குறுநூறு 460	பெருஞ்சின	பேயனார்	1740
ஐங்குறுநூறு 461	வான்பிசிர்க்	பேயனார்	1696
ஐங்குறுநூறு 463	புதல்மிசை	பேயனார்	1694
ஐங்குறுநூறு 465	நீர்இகுவு	பேயனார்	1697

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
ஐங்குறுநூறு 466	வேந்துவிடு	பேயனார்	1698
ஐங்குறுநூறு 467	புனைஇழை	பேயனார்	1693
ஐங்குறுநூறு 474	மையறு	பேயனார்	1736
ஐங்குறுநூறு 477	பனிமலர்	பேயனார்	1792
ஐங்குறுநூறு 478	நீடினம்	பேயனார்	1723
ஐங்குறுநூறு 479	சொல்லுமதி	பேயனார்	1724
ஐங்குறுநூறு 480	நினக்குயாம்	பேயனார்	1748
ஐங்குறுநூறு 497	குறும்பல்	பேயனார்	1802
ஐங்குறுநூறு 498	தோள்கவின்	பேயனார்	1803
கலித்தொகை 17	படைபண்ணிப்	பாலை பாடிய பெருங்கடுங்கோ	1671
கலித்தொகை 26	ஒருகுழை	பாலை பாடிய பெருங்கடுங்கோ	1749
கலித்தொகை 30	அருந்தவம்	பாலை பாடிய பெருங்கடுங்கோ	1744
கலித்தொகை 31	கடும்புனல்	பாலை பாடிய பெருங்கடுங்கோ	1805
கார் நாற்பது 20	வீறுசால்	மதுரைக் கண்ணங்கூத்தனார்	1786
கார் நாற்பது 37	கருங்கடல்	மதுரைக் கண்ணங்கூத்தனார்	1692
குறுந்தொகை 189	இன்றே	மதுரை ஈழத்துப் பூதன் தேவனார்	1787
கைந்நிலை 60	பொன்அம்	புல்லங்காடனார்	1801

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
திருக்குறள் 1268	வினைகலந்து	திருவள்ளுவர்	1708
திருக்குறள் 1269	ஒருநாள்	திருவள்ளுவர்	1709
திருக்குறள் 1270	பெறின்என்ஆம்	திருவள்ளுவர்	1710
நற்றிணை 21	விரைப்பரி	மருதனிளநாகனார்	1777
நற்றிணை 81	இருநிலம்	அகம்பன் மாலாதனார்	1780
நற்றிணை 121	விதையர்	ஒருசிறைப் பெரியனார்	1782
நற்றிணை 161	இறையும்	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	1784
நற்றிணை 341	வங்க	மதுரை மருதனிளநாகனார்	1676

களஞ்சிய வாயில்

சிலம்பொலி சு. செல்லப்பன்

ஒரு மொழியின் பயன்பாடு உயிர்ப்புடன் இருக்க வேண்டுமெனின் அம்மொழிக்குரிய வேர்களை உயிர்ப்புடன் திகழுமாறு காக்க வேண்டும். மொழிக்கு வேர்கள் என்பவை அதன் இலக்கியங்களே! நூல்களெங்கும் பரந்து கிடக்கும் இலக்கியச்சுவை, ஒரு பூவினடியில் அமைந்திருக்கும் அமிழ்தத்தை ஒத்தது. ஒட்டுமொத்த தமிழ்ச்சமுதாயமும் இலக்கியங்களின் சுவையை அறிந்து மகிழுமாறு செய்ய, ஒவ்வொரு பூவிலும் உறிஞ்சி எடுத்த அமிழ்தத் துளிகளைச் சேகரித்துச் சுவையான தேனடையாக உருவாக்கித் தரும் தேனீயின் உழைப்பினையொத்த அயராத பணி இன்றியமையாததாகிறது. இவ்வாறான பணியை ஒவ்வொரு காலகட்டத்திலும் வெவ்வேறு தமிழறிஞர்கள் மேற்கொண்டுள்ளனர் என்றாலும், 'செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியம்' என்னும் இந்நூலின் தொகுதிகள் உருவாக மேற்கொள்ளப்பட்ட முயற்சி தனித்தன்மை வாய்ந்ததாகும்.

இதுவரை சொல்லப்பட்ட எதையும் தாண்டிச் சொல்லப்படவில்லை என்றாலும், இதுவரை சொல்லப்பட்ட ஒன்றை, இதுவரை யாரும் சொல்லாத முறையில் சொல்ல மேற்கொண்ட முயற்சியால் உருவானதே இக்களஞ்சியமாகும்.

'உரை' என்பதற்கும் 'திரட்டு' என்பதற்கும் உழைப்பு அளவிலேயே வேறுபாடு இருக்கிறது. சிலப்பதிகாரம் உள்ளிட்ட எத்தனையோ நூல்களுக்கு உரை எழுதியிருக்கிறேன். அவை ஒரு நெடுஞ்சாலைப் பயணம்போல் சீராகத் தொடங்கி முடிந்துள்ளன. ஆனால், குறிப்பிட்ட ஒரு பாடுபொருளை, குறித்த ஒரு கால எல்லைக்குள், அது

பாடப்பட்டுள்ள இலக்கிய நூல் ஒன்றுவிடாமல் தேடியெடுத்து, உரிய விளக்கத்துடன் தந்துள்ள இம்முயற்சி, என் வாழ்நாளில், எனக்கு வாழ்க்கை தந்த தமிழுக்கு, என் நன்றிக் கடனைச் செலுத்தக் கிடைத்த ஒரு நல்வாய்ப்பாய் எண்ணி மகிழ்கிறேன்.

'செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியத்தை' உருவாக்க நான் மேற்கொண்ட முயற்சி ஓர் அகழ்வாராய்ச்சிக்கு இணையானது எனலாம். செம்மொழித் தமிழ் இலக்கிய நூல்களிலுள்ள 2586 அகப்பாடல்கள் பதினான்கு தொகுதிகளில் விளக்கம் பெற்றுள்ளன. இக்களஞ்சியம் வெறும் அகத்திரட்டு மட்டுமன்று; ஒரு யுகத்திரட்டு. ஒரு வகையில் இதனைத் தமிழ் அகப்பொருள் கலைக்களஞ்சியம் (Encyclopedia) என்று கூடச் சொல்லலாம்.

நூல் உருவாக்கம்

தமிழ் அகத்திணையில் இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியிற் கூட்டம், குறியிடம், சிறைப்புறம், ஒருவழித்தணத்தல், வரைவு நீட்டிப்பு, வரைவு கடாயது, அறத்தொடு நிற்றல், வரைவிடைப் பிரிவு, வரைவு மலிதல், உடன்போக்கு, ஏறு தழுவுதல், மங்கல மனையறம், பொருள்வயிற் பிரிவு, பரத்தையிற்பிரிவு என்பவற்றோடு இன்னும் பல துறைகள் உள்ளன. ஒவ்வொரு துறை சார்ந்த பாடல்கள் ஒவ்வொரு நூலினின்றும் முதலில் திரட்டப்பட்டன; பின்னர் ஒவ்வொரு துறைக்குமுரிய பாடல்கள் அனைத்தும் ஒன்று சேர்க்கப்பட்டு இக்களஞ்சியம் உருவாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு துறைக்குமுரிய பாடல்கள் அனைத்தையும் ஒரேயிடத்தில், நிகழ்ச்சி நடைபெறும் வரிசை முறையில், தக்க விளக்கத்துடன் இக்களஞ்சியத்தில் காணமுடியும். களவு, கற்பு என்னும் நிலைகளில் ஒவ்வொரு துறைக்குமுரிய பாடல்களைத் தனியே ஓரிடத்தே காண்பதற்கான வாய்ப்பு இக்களஞ்சியத்தில் உள்ளது.

பதிப்பில் பின்பற்றப்பட்டுள்ள நெறிமுறைகள்

மூல பாடம் பலவற்றுள் சிறந்தது என்று கருதப்பட்டது இந்நூலில் எடுத்தாளப்பட்டுள்ளது.

அக்காலப் பாடல் நடையமைப்புச் சற்றுக் கடினமானதுதான். ஆதலின் எளிதில் படித்துப் பொருளறியும் முறையில் சொற்கள் பிரிக்கப்பட்டு அசையும் சீரும் சிதையாவண்ணம் பாடல்கள் தரப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பாடலும் யாருடைய கூற்று என்பது முதலில் தரப்பட்டுள்ளது. அடுத்த அடியில் அப்பாடல் எந்த நூலில் எத்தனையாவது எண்ணில் அமைந்துள்ளது என்பதும், அதனை இயற்றிய ஆசிரியர் எவர் என்பதும் தரப்பட்டுள்ளன. அடுத்துப் பாடல் எத்திணையைச் சார்ந்தது என்பது கொடுக்கப்பட்டுள்ளது. அதனையடுத்துப் பாடலின் கூற்றும், கூற்று விளக்கமும் இடம் பெற்றுள்ளன. இவற்றையடுத்துப் பாடலும், பாடலின் தெளிவுரையும், கருத்துச் சுருக்கமும் உள்ளன.

மேற்கொண்டு விளக்கமும், தேவையான குறிப்புகளும் உள்ளன. சில பாடல்களுக்கு இறைச்சி, உள்ளுறைப் பொருள் ஆகியன தரப்பட்டுள்ளன. இறுதியில் பாடலிலுள்ள இன்றியமையாச் சொற்களுக்குப் பொருள் கொடுக்கப்பட்டுள்ளது. சொல்லுக்கு நேரடிப் பொருளோடு, பாடலைப் புரிந்துகொள்ளும் வகையில் மேலும் தேவைப்படும் சொற்களும் இணைக்கப்பட்டுள்ளன. அதனால், பாடலையும் சொற்பொருளையும் ஒன்றிணைத்துப் படித்தால் பாடலின் பொருள் உரையின்றியே நன்கு விளங்குவதை அறியலாம்.

நன்றி மலர்

களஞ்சியத்தை உருவாக்க எனக்குத் துணை நின்றவர், பலர்.

நான் எழுதியதைச் செப்பனிட்டு வரிசையாக்கி, நூல் முழுவதையும் படித்துத் தக்க திருத்தங்களை வழங்கியவர், என் மருகர் பொறிஞர்

நா. புஷ்பராசு. அவருக்கு வாழ்க்கைத்துணையாக மட்டுமன்றி இப்பணிக்குப் பெரிதும் துணை நின்ற என் மகள் முனைவர் மணிமேகலை, இவர்களுக்கு இனிய ஒத்துழைப்பு நல்கிய பொறிஞர் அ. இரவீந்திரன்,

நூல் முழுமைக்கும் மெய்ப்புப் பார்த்துத் துணை செய்ததோடு 'அகத்திணை அஞ்சிறைத் தும்பி' எனப் பாராட்டுரையையும் தந்துள்ள கவிமாமணி தேனி திருமாவளவன்,

'ஆழங்காற்பட்ட அகப்பொருள் நுணுக்கம்' எனும் நுண்ணிய ஆய்வுரையை வழங்கியுள்ள பேராசிரியர் முனைவர் இராம. குருநாதன்,

உள்ளம் கொள்ளை கொள்ளும் வகையில் அருமையானதோர் அணிந்துரை நல்கியுள்ள பேராசிரியர் முனைவர் மறைமலை இலக்குவனார்,

எத்தனை திருத்தங்கள், மாற்றங்கள் செய்தாலும் சலிப்பின்றி அத்தனையையும் உடனுக்குடன் கணினிமூலம் செம்மையாய்ச் செய்து வெளிவர உதவிய திருமதி இந்திரா காந்தி ரவி,

தரமான இலக்கிய நூல்களைப் பதிப்பிப்போர் என்றதும் முதலில் நினைவில் நிற்பவர் பழனியப்பா பிரதர்ஸ் நிறுவனத்தார் ஆவர். அவர்கள் இக்களஞ்சியத்தைக் காண்பவர் பாராட்டும் வகையில் பதிப்பித்து வெளியிட்டுள்ளனர். அவர்கள் தந்துள்ள பதிப்புரை என் நெஞ்சில் என்றென்றும் பதிந்திருக்கும். அத்தகைய பதிப்பக உரிமையாளர் திரு. ப. செல்லப்பன், பதிப்பில் எனக்கு எல்லா வகையிலும் துணை நிற்கும் சுப்பு என்கிற திரு. இராம. சுப்பையா, களஞ்சியம் சிறந்த முறையில் உருவாக முன்னின்று முழு மூச்சுடன் பாடுபட்ட முனைவர் ப. முத்துக்குமாரசாமி,

முகப்போவியத்தை அழகுற வடிவமைத்துத் தந்துள்ள ஓவியர் ஜீவா,

கடின உழைப்பில் என் உடல் நலம் கெட்டுவிடாதவாறு பேணி வந்ததோடு, களஞ்சியம் வெளிவருவதில் பெரிதும் ஆர்வம் காட்டிய

என் மகன் செ. கொங்குவேள், மருமகள் மருத்துவர் ஈஸ்வரி மற்றும் குடும்பத்தினர் ஆகிய

அனைவரையும் பாராட்டிப் புகழ ஏற்ற சொற்கள் எனக்குக் கிட்டவில்லை என்பதால், 'நன்றி' என்னும் ஒரு சொல்லை என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து வெளிப்படுத்தி வணங்குகின்றேன்.

களஞ்சியப் பொருளைப் பாதுகாத்தல் மட்டும் போதாது; அதனை நாமும் துய்த்து அனைவர்க்கும் வாரிவாரி வழங்க வேண்டும். களஞ்சியத்தைத் துய்த்தால், தமிழரின் வீரம் செறிந்த, அறஞ்சார்ந்த காதல் வாழ்க்கை முறையினைச் சற்றே வாழ்ந்துவிட்ட நுகர்வும், இவ்வளவு மென்மையும் உயர்வும் அரியதும் ஆனதா தமிழ்க்காதல் என்னும் உள்ளுணர்வும் மேலோங்கி நிற்கும் என்பது உறுதி.

களஞ்சியத்தைப் பயன்படுத்துங்கள்; மேலும் மேலும் விரிவடையச் செய்யுங்கள்.

என்றும் உங்கள்

சு. செல்லப்பன்

மதிப்புரை

அகத்திணை அஞ்சிறைத் தும்பி

கவிமாமணி தேனி **திருமாவளவன்**

தனி ஒருவராய், இருபது ஆண்டுகள் இடைவிடாது முயன்று, பல மணி நேர உழைப்பை நல்கி, வெற்றிகரமாய் முடித்துள்ளார், சிலம்பொலி. இந்த இமாலயச் சாதனையை எவ்வாறு போற்றிப் புகழ்வது? சிலம்பொலியின் இந்நூல் தமிழறிவைத் தழைத்திடச் செய்யும். பேச்சாற்றலைப் பெருக்கிடப் பயன்படும். ஆராய்ச்சியாளர்க்கு அருந்துணையாகும். மாணவர்க்கு மாங்கனியாகும். ஆசிரியருக்கு உரை நூல் ஆகும். இந்நூலை ஒவ்வொருவரும் பயின்று, "பெருமை கொள்வாய் தமிழா – தமிழ்நாட்டில் பிறந்ததனால் மிகச் சிறந்தவன் நான் என்று" மகிழ்ந்திட வேண்டுகிறேன்...

ஆழங்காற்பட்ட அகப்பொருள் நுணுக்கம்

பேராசிரியர் முனைவர் **இராம. குருநாதன்**

அகப்பொருள் சார்ந்த இப்பெருநூலினைத் தமிழுலகம் நன்கறிந்த முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பனார் இலக்கிய இன்பம் தோய இதனைப் படைத் துள்ளார். இந்நூல் செல்லப்பனாரின் சொற்சிறப்பச்சிகரம் என்று செப்புவது மிகையான கூற்றன்று. அகப்பொருள் கருத்தாக்கத்தை இவர் போல் சொல்லு வதற்கு இனி ஒருவர் உண்டோ என்று சொல்லும் அளவிற்கு இந்நூல் சிறந்து விளங்குகிறது. இஃது இவரது வாழ்நாள் சாதனை என்று நவின்று, இதற்கு வரவேற்பு வளையம் வைத்துக் கொண்டாடலாம். இந்நூலினை உருவாக்கி உலவ விட்டமைக்குத் தமிழுலகம் நன்றி சொல்லும். கொண்டாடும்...

தமிழ்க்களஞ்சியத்திற்கு ஒரு தங்கத் திறவுகோல்

பேராசிரியர் முனைவர் **மறைமலை இலக்குவனார்**

மிக எளிமையாகவும், இனிய எளிய நடையிலும், பாடல்களில் கருத்து களையும் சிறப்புகளையும் சுவைபடவும், பயன்பாடு மிக்கதாகவும் சிலம்பொலி செல்லப்பனார் வழங்கியுள்ள அகப்பொருள் களஞ்சியம் தமிழ்கூறும் நல்லுலகத் திற்கு ஒரு மகத்தான கொடை என உறுதியாகக் கூறலாம். மிகவும் அரிதின் முயன்று, நீண்ட காலம் அயராது உழைத்து, சங்க இலக்கியம் எனும் கடலில் மூழ்கிச் சிறந்த முத்துகளைத் தேடியெடுத்தது போன்று மிகச் சிறந்த படைப்பு களுள் ஒன்றாகவும், தமிழிலக்கியச் செவ்வியற்கால அகப்பொருள் செய்திகளை நிரல்படக் கூறும் கருத்துப்பெட்டகமாகவும் விளங்குகின்றது. தமிழ்க்களஞ்சியத் திற்கு ஒரு தங்கத் திறவுகோலை இதோ சிலம்பொலி செல்லப்பனார் வழங்கி யுள்ளார். களஞ்சியப் பொருளைக் கைக்கொள்க! பயன் பெறுக!

பதிப்புரை

சொல்வேந்தர் சிலம்பொலிக்குச் சூட்டுகின்றோம் மணிமகுடம்

பழனியப்பா பிரதர்ஸ்

பொன்னொளியே! பூமழையே!
　　பூவணியும் காவிரியே!
தண்ணமுதே! தாமரையே!
　　தாழம்பூ நறுமணமே!
தென்பொதிகைச் சந்தனமே!
　　தேனிழைக்கும் வண்டினமே!
கன்மலையின் நறுஞ்சுனையே!
　　கண்ணகலா ஆழ்கடலே!
செண்பகமே! கற்பகமே!
　　சிலம்பொலியே! வலம்புரியே!

பண்டையநல் புலவர்களும்
　　பாராட்டும் வகையினிலே
கண்டுகண்டு பாடல்களைக்
　　காட்சிவழி நீதொகுத்துச்
செண்டெனவே தந்தனையே
　　செந்தமிழர் கரங்களிலே!
இன்தமிழும் புதியதொரு
　　ஏற்றமுற வழியமைத்தாய்!
குன்றெனவே இமயமலை
　　குன்றிடவே நீஉயர்ந்தாய்!

என்னபணி! இரவுபகல்
　　எத்தனைநாள் பேருழைப்பு!
என்னுமொரு சிந்தனையில்
　　எம்இதயம் கனக்கிறது!
உன்நூல்கள் பலதொகுப்பாய்
　　நன்னூலாய் யாம்அளித்தோம்!

உன்கழுத்தில் இன்றணியும்
 ஒவ்வொருபூ மாலையிலும்
நன்மலரை ஒன்றிணைக்கும்
 நாரெனவே யாம்அமைந்தோம்!

கங்குகரை காணாத
 கடல்மூழ்கி எழுவோரே
சங்கொடுநல் முத்துகளைத்
 தாம்வாரிக் கொணர்ந்திடுவார்!
பொங்கியெழும் நறுமணத்தைப்
 பூங்காவில் நுழையாமல்
எங்ஙனந்தான் பெறக்கூடும்
 இயம்பிடுக தோழர்களே!
அங்ஙனமே நீர்விரும்பி
 இந்நூலின் தொகுதிகளை

வாங்கிடுக! படித்திடுக!
 வரிவரியாய்ப் பொருளறிந்தே
ஓங்கிடுக! உணர்ந்திடுக
 உள்ளூறும் கலைநயத்தை!
தேங்கிநின்று மறைபொருளாய்த்
 திரட்டுப்பால் போலினிக்கும்
பாங்கான உவமைநலம்
 பலர்போற்றும் 'இறைச்சி'யுமே!
வீங்கிடுமே உம்முடலும்
 விள்ளரிய பெருமிதத்தால்!

பல்கலையின் கூடமன்றோ
 பழனியப்பா பிரதர்ஸும்!
நல்லறிஞர், கவிவல்லார்,
 நாடறிந்த பேச்சாளர்,
துள்ளுநடை சிறுவர்க்குச்
 சுவைக்கதைகள் படைத்திடுவோர்,
வல்லமையால் எழுத்துலகில்
 வந்தமர்ந்தோர் நடுவினிலே
சொல்வேந்தர் சிலம்பொலிக்குச்
 சூட்டுகின்றோம் மணிமகுடம்!

அகத்திணை

பொழிலிலோ புனத்திலோ எழிலார்ந்த வேறோர் இடத்திலோ ஆண்மகன் ஒருவன், பெண்மகள் ஒருத்தி, தன் விளையாட்டுத் தோழியர் எவருமின்றித் தனித்து நிற்பதைக் காண்கிறான். எல்லா வகையிலும் தன்னை ஒத்திருக்கும் அவள்பால் அவனையுமறியாமல் ஓர் இயற்கை ஈர்ப்பால் அவள் ஒருத்திமீது மட்டுமே அவன் உள்ளம் செல்லுகிறது. அவளும் அவனை மட்டுமே விரும்புபவளாய் இருக்கிறாள். எதிர்ப்படும் எல்லாரிடமும் ஆண், பெண் உள்ளம் சென்றுவிடாது. அவளது அழகு கண்டு, 'இவள் தெய்வ மகளோ', 'உண்மையிலேயே மானிடப் பெண்தானோ' என ஐயுறுகிறான்; சில செய்கைகளால் அவள் மானிடப் பெண்ணே என்று தெளிவடைகின்றான். தன்னைப்போல அவளும் தன்னை விரும்புகிறாளா என்பதைக் குறிப்புகளால் உணர்கிறான். இருவரும் ஒருவரையொருவர் காண்கின்றனரெனினும், பெண்ணை ஆண் கண்டான் என்று சொல்வதே செய்யுள் வழக்கம். அவ்வாறு காதல் கொள்பவருள் ஆண்மகனைக் 'காதலன்' என்றோ, 'தலைவன்' என்றோ, 'கிழவன்' என்றோ, பெண்மகளைக் 'காதலி' என்றோ, 'தலைவி' என்றோ, 'கிழத்தி' என்றோ இலக்கியங்கள் வழங்குகின்றன.

தலைவனும் தலைவியும் ஒரு நிலத்தைச் சார்ந்தவராகவோ, வெவ்வேறு நிலத்தைச் சார்ந்தவராகவோ இருக்கக்கூடும். ஐவகை

நிலங்களுள் எந்நிலத்தவராயும் இருக்கலாம். எனினும், காதலனும் காதலியும் குறிஞ்சி நிலத்தில் ஒருவரை ஒருவர் கண்டு காதல் கொள்கின்றனர் என்று சொல்வதே அக இலக்கிய வழக்கம். எல்லா நிலங்களிலும் காதல் தோன்றத்தான் செய்யும்! 'பின்புலம் இயற்கை யழகு வாய்ந்ததாய் இருந்தால்தான் காதல் காட்சி சிறப்புறும்.' பாலைநிலத்திலும் கடுமையாய் வெயில் வீசும் பசுமையற்ற பின்புலத் திலும் காதல் காட்சியைக் காண எவரும் விரும்பார். எனவேதான், குறிஞ்சி நிலத்தைப் பின்புலமாய்க்கொண்டு, அங்கு ஒருவனும் ஒருத்தியும் எதிர்ப்பட்டுக் காதல் கொள்வதாய் அமைக்கின்றனர். இவ்வாறே காதல் கொள்ளும்போது ஏற்படும் மாறுபட்ட நிலைகளுக் கேற்பப் பின்புலங்களாய் முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகியன அமையும்.

ஒருவனும் ஒருத்தியும் கண்டுகொள்வதைக் 'காட்சி' என்பர். தான் கண்ட பெண் எவ்விடத்தினளோ, யார் மகளோ, நம் காதலுக்கு இசைவளோ என்றெல்லாம் ஆண்மகன் ஐயுறுவான். இஃது 'ஐயம்' எனப்படும்.

அணிகலன்கள் அணிந்திருத்தல், காமப் பார்வை பார்த்தல், புதிதாய்த் தன்னைக் கண்டதால் உடலில் நடுக்கம் தோன்றுதல், தான் நோக்கும்போது அவள் தன்னைப் பார்க்காது நிலத்தைப் பார்த்தல், தான் காணாதிருக்கும்போது அவள் தன்னை நோக்குதல் போன்ற குறிப்புகளால் ஆண்மகன் ஐயம் நீங்கி அவள் தன்மீது காதல் கொண்டுள்ளாள் எனத் தெளிவடைகிறான்.

தலைவி அணிந்துள்ள பூக்களில் வண்டுகள் மொய்த்திருத்தல், சிறந்த அணிகலன்களை அவள் அணிந்திருத்தல், அவள் மார்பு மற்றும் உடலில் ஓவியம் எழுதப்பட்டிருத்தல், அணிந்துள்ள மலர்மாலையில் மலர் வாடியிருத்தல், மருண்ட பார்வை கொண்டிருத்தல், கண்களை இமைத்தல், முகத்தில் அச்சம் தோன்றுதல் போன்றவற்றாலும் இன்ன பிறவற்றாலும் காதலன் தன் ஐயம் நீங்கி அவள் மானிடப் பெண்ணே என முடிவு செய்வான்.

"வண்டே இழையே வள்ளி பூவே
கண்ணே அலமரல் இமைப்பே அச்சம் என்(று)
அன்னவை பிறவும் ஆங்கவண் நிகழ
நின்றவை களையும் கருவி என்ப" (தொல். கள. 4)

என்பது தொல்காப்பிய நூற்பா.

இயற்கைப் புணர்ச்சி

தலைவி தன்மீது காதல் கொண்டுள்ளாள் எனத் தெளிந்த தலைவன், தன் காதலை உணர்த்தத் துணிவான்; தலைவியும் தன் காதற்குறிப்பை உணர்த்துவாள். நாணத்தால் தலைவி, தன் காதலை வெளிப்படையாய் உணர்த்தாது குறிப்பினாலேயே உணர்த்துவாள்.

தன்னை அவள் விரும்புவதுணர்ந்த பின்னரே அவன் அவளைத் தனிமையில் சென்றடைந்து, ஒன்றுகூடி இன்புறுவான். இவ்வாறு தலைவனும் தலைவியும் ஒருவரையொருவர் கண்டு முதல்நாளில் கூடியிருத்தலை 'இயற்கைப் புணர்ச்சி' என்பர்.

தலைவிக்கு முதன்மைத்தோழி ஒருத்தியும், உடன் விளையாடும் மகளிரும் (ஆயத்தார்) இருப்பர். ஆண்மகனின் பாங்கறிந்தொழுகும் உயிர்த்தோழன் பாங்கன் என்று வழங்கப்படுவான்.

இடந்தலைப்பாடு

தற்செயலாய்க் கண்ட ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் விரும்பி, முதல் நாள் ஒன்றுபட்டுக் காதலராயினர். இவ்வாறு இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைவன், தன் காதலியை முதல் நாள் கண்ட அதே இடத்தில் மறுநாளும் காணலாம் எனச் செல்கிறான்; காதல் மிக்க தலைவியும் அங்கு வந்து நிற்பாள். தோழியரோடு விளையாடாது, பூப்பறித்து மாலை தொடுத்திடாது தனித்திருக்கும் தலைவியிடம் தலைவன், "தனித்து நிற்கும் நீ யாரோ? உன்னைத் தொழுது கேட்கிறேன்" என்று தன் காதல் உள்ளத்தை வெளிப்படுத்துவான். அது கேட்டுத் தலைவி நாணி நிற்பாளேயன்றி மறுமொழி எதுவும் கூறமாட்டாள். தலைவன் அவளை நெருங்கித் தன் காதலை உறுதிப்

படுத்திக்கொள்வான். யாருமறியாதவாறு தலைவன் தனியே வந்து, தலைவியை முதல்நாள் கண்ட அதே இடத்திலேயே இரண்டாம் நாளும் கண்டு, கூடிக் களிப்பது 'இடந்தலைப்பாடு' எனப்படும்.

பாங்கற்கூட்டம்

தலைவியைக் கண்டது முதற்கொண்டு தலைவன் மனஞ்சோர்ந்து, உடல் தளர்ந்து உயிர்க்களையற்றிருப்பான். ஆண்மை மிக்க அவன் அவ்வாறு சோர்ந்திருப்பது எதனால் எனப் பாங்கன் கேட்பான். அது பெண் ஒருத்தியால் நிகழ்ந்ததென்பான், தலைவன். பகைவரும் கண்டஞ்சும் வீரமிக்க அவன், பெண் ஒருத்தியால் இடிந்துபோய் இருத்தல் கூடாதெனப் பாங்கன் இடித்துரைப்பான். இதனைப் பாங்கன் கழறுதல் (இடித்துரைத்தல்) என்பர். பாங்கன் இடித்துரைத்ததை மறுத்துத் தலைவன், 'நீ அவளைக் கண்டாயானால் என்னை இவ்வாறு இழிவாய்ப் பேசமாட்டாய்' என்று கூறுவான். தோழனின் கூற்றினைத் தலைவன் மறுத்துப் பேசுவதைக் 'கழற்றெதிர் மறை' என்பர்.

தலைவனின் காதற்பெருக்கையும், அதை அவன் தாங்க இயலாது தவிப்பதையும் கண்டு, "அப்பெண் யார்? எவ்விடத்துள்ளாள்? எத்தன்மையள்?" என்று பாங்கன் கேட்டறிந்து, அவ்விடம் சென்று, தலைவன் குறிப்பிட்ட அவளைக் கண்டு, தலைவன் அவளை விரும்பியது சரியெனத் தெளிவான்; தலைவனுக்கு எல்லா வகையிலும் துணை நிற்கவும் உறுதி பூணுவான்; தலைவனைத் தலைவி இருக்கு மிடத்திற்கு அழைத்துச் செல்வான். தலைவி இருக்கும் இடத்தைப் பாங்கன் காட்டத் தலைவனோடு தலைவிக்கு ஒருநாள் கூட்டம் நிகழும். இது 'பாங்கற்கூட்டம்' எனப்படும்.

பாங்கியிற்கூட்டம் (தோழியிற்புணர்ச்சி)

தலைவிக்கு விளையாட்டுத்தோழியர் பலராய் இருப்பர். தலைவி அவர்களை விட்டுப்பிரிந்து எப்பொழுதும் மறைந்து செல்லல் அரிது. அவர்களைத் தனியே விட்டுப் பிரிந்து சென்றால் திடீரென்று வந்து தலைவியை அடைவர், தோழியர். இது போன்ற இடையூறுகளை

யெல்லாம் கடந்து, தலைவியைத் தன்னிடம் கொண்டுவந்து விடத் தலைவிக்குத் தோழியராய் உள்ளவருள் முக்கியமான ஒருத்தியை அறியத் தலைவன் முற்படுவான்.

தலைவியைப் பெற்றெடுத்தவள், நற்றாய்; வளர்த்தவள், செவிலித் தாய். நற்றாய், செவிலிக்குத் தலைவியும் தோழியும் ஆவாள். அதே போலவே, செவிலிக்கு மகள், நற்றாய் பெற்ற மகளான தலைவிக்கு உயிர்த்தோழியாய் இருப்பாள். இருவரும் ஈருடலும் ஒருயிருமாயிருப்பர். அத்தகைய தோழியை அறிந்து, அவளிடம் தன் குறையைக் கூறி, அவள் வழிநடத்துதலின்படி தலைவியைக் கூடிடத் தலைவன் விரும்புவான்.

தலைவியைச் சூழ ஒரு படைபோலக் கூட்டமாய்த் தோழியர் வருகின்றனர். அவர்களுள் யார் முதன்மையானவள் என்பதை எவ்வாறு அறிவது? தோழியர் கூட்டத்தை நன்கு கவனித்துப் பார்க்கிறான், தலைவன். அவர்களுள் ஒருத்தி எதைச் சொன்னாலும் தலைவி அதை ஏற்பதையும், அவள் செய்வதுபோலவே தலைவி செய்வதையும் கண்டு, அவள்தான் தலைவிக்கு உயிர்த்தோழி என்றறிகிறான்.

குறையிரத்தல்

அத்தோழியின் தோழமையைப் பெற்றாலன்றித் தலைவியின் நட்பைப் பெறுதல் அரிது என்றுணர்ந்தான், தலைவன். அவன், தான் தலைவி மீது கொண்டுள்ள காதலை அத்தோழியிடம் தெரிவிப்பான். தலைவியைத் தனியே சந்திக்க இயலாதிருப்பதைக் கூறி, அக் குறையை நீக்கித் தான் தலைவியை அடையத் துணை நிற்குமாறு மிகவும் இரங்கிக் கேட்பான். இது 'குறையிரத்தல்' எனப்படும்.

தோழியும் தலைவியும் ஒருங்கே இருக்கும்போது சென்று, வெளிப் படையாகவோ குறிப்பாகவோ தன் நிலையைத் தலைவன் நயமாய்ப் புலப்படுத்துவான். முதலில் தோழி தலைவனுக்குத் துணை நிற்க மறுப்பாள்.

மதியுடம்பாடு

தலைவன் தன்னிடம் கூறியவற்றையும், தலைவியின் செயல்களையும் தனித்தனியாகவும், சேர்த்தும் ஆராய்ந்து, அவர்கள் இருவரும் ஒரே வகையான இன்பதுன்பங்களைக் கொண்டிருத்தலையும், இருவர் அறிவும் ஒன்றாய் இருத்தலையும் தோழி உணர்ந்தறிவாள். தலைவன் தலைவியர் உணர்வோடு தோழியின் உணர்வும் ஒத்துச்செல்லும் நிலை உண்டாதலை, 'மதியுடம்பாடு' என்பர்.

மதியுடம்பட்ட தோழி, தலைவியின் குறிப்பறிய முற்படுவாள். தலைவி, தான் ஒருவனைக் கண்டு காதலுற்றிருப்பதை நாண மிகுதியால் தோழியிடம் கூறமாட்டாள். தலைவி ஆயத்தோடு கூடாது தனித்திருத்தல், ஏதோ ஒன்றை நினைந்து வருந்தியிருத்தல் போன்ற நிகழ்வுகளால், அவள் காதலைத் தான் அறிந்திருந்தும் அறியாதவள் போலத் தலைவியிடம் மறைமுகமாய்க் கூறி, தலைவியின் நாணம் ஊறுபடாதவாறு, தோழி அவள் நெஞ்சக்கருத்தை அறிவாள்.

சேட்படை

தோழியைக் குறையிரந்து வரும் தலைவன், காணிக்கை (கையுறை)யாய் அரிய தழை, முத்து முதலியவற்றைக் கொண்டுவந்து அவற்றைத் தலைவியிடம் தந்து, அவளை எவ்வாறாயினும் தன்னுடன் கூட்டி வைத்திடுமாறு தோழியிடம் வேண்டுவான்.

'நாம் விரும்பியபடி இவள் எளிதிலே நமக்குக் கிடைக்கக் கூடியவள் அல்லள்' என்று கருதும் தலைவன், தழையும் கண்ணியும் கொண்டு வந்து தோழிக்குப் பின்னின்று குறையிரப்பான். அவன் உணரும்படியாகத் தோழி அவனைச் சேட்படுத்துவள் – அஃதாவது, தலைவனைத் தலைவியுடன் நெருக்கமாய்ப் பழக விடாது சற்று அகற்றி வைப்பாள் (சேட்படுத்தல் – அகற்றுதல்).

மடலேறுதல்

தலைவன் தலைவியரின் ஆழமான காதலை அறிந்த பின்னும் தோழி, அவர்கள் எளிதில் சந்திக்க இடமளிக்க மாட்டாள்; காதலன் அரிதின்

முயன்று ஆர்வத்தோடு கொண்டுவரும் கையுறையை ஏற்க மறுப்பாள்; பல்வேறு தடைகளை ஏற்படுத்துவாள். தலைவன் தலைவிமீது கொண்டுள்ள காதல் உறுதியானதுதானா என்பதை அறிவதற்கே இத்தகு செயல்களைத் தோழி செய்வதற்கான நோக்கமாகும்.

தோழி வேண்டுமென்றே தன் குறைக்குச் செவிசாய்க்காது காலங் கடத்துவதைக் காணும் தலைவன், தன் எண்ணம் ஈடேறுவதற்காகத் தான் மடலேற உறுதி பூண்டுள்ளதைத் தோழியிடம் தெரிவிப்பான்.

மடல் மா என்பது பனங்கருக்கினால் செய்யப்பட்ட குதிரையைக் குறிக்கும். தான் காதலித்த பெண்ணை எய்தப்பெறாதவன் தன் உடல் முழுவதிலும் திருநீற்றைப் பூசிக்கொண்டு, ஆவிரம் பூ மாலையை மார்பிலும், எருக்கம்பூ மாலையைத் தலையிலும் அணிந்துகொண்டு பனங்கருக்கால் செய்யப்பட்ட குதிரைமேல் ஏறிக்கொள்வான்; தான் விரும்பும் காதலியின் படத்தைத் துணியில் எழுதிக் கையில் பிடித்திருப்பான். அக்குதிரையைச் சிலர் வீதியில் இழுத்துச் செல்வர். இது மடலேறுதல் எனப்படும். இதனால் அவன் உறுதியான காதல் வெளிப்படும்; மேலும், அரம் போன்ற பனங்கருக்கு உடலினை அறுத்தலால் வெளிப்படும் குருதிப்பெருக்கும் இரக்கத்தை ஏற்படுத்தும். ஊரார், இவ்வளவு காதல் கொண்டுள்ளவனுக்கு மகளைக் கொடுக்க மறுக்கலாமா எனப் பெண்ணைப் பெற்றோரைக் குறை கூறுவர்; அவர்களை அணுகி, எடுத்துரைத்து, அவளை அவனுக்கு மணம் முடித்து வைப்பர். மடல் ஏறுவேன் என வாயளவில் சொல்லுவது ஐந்திணையின்பாற்படும்; சொன்னபடி மடலேறிக் காட்டுவது பெருந்திணையின்பாற்படும். சங்க இலக்கியங்களில் மடலேறுவதாய்ச் சொல்லும் நிலை மட்டுமே உள்ளது; மடல் ஏறியதாய்ப் பாடல் எதுவும் இல்லை.

மடலேறுவேன் என்று தலைவன் சொன்னதும், அவனது காதல் திட்பத்தினைக் கண்ட தோழி, அவனுக்குத் துணை செய்ய முற்படுவாள்.

குறியிடம்

தலைவன் தந்த கையுறையைத் தலைவியிடம் கொடுத்து அவன் குறிப்பினை உணர்ந்துகொள்வாள், தோழி. தலைவன் குறையைத்

தலைவி நயக்கவே, அவ்விருவரும் ஒருவரை ஒருவர் சந்திப்பதற்கேற்ற வகையில் 'இன்ன இடத்திற்கு வந்தால் தலைவியைக் களவிற் கூடலாம்' என்று தோழி குறியிடங் கூறுவாள்.

தலைவியைத் தலைவன் பகலில் கூடுதற்கு ஓர் இடத்தை வரையறுத்துத் தோழி குறிப்பிடுவாள். இது 'பகற்குறி' எனப்படும்.

அடுக்காய் உள்ள மலைப்பக்கமாகவோ, அழகிய மலர்ச் சோலையாகவோ, காதலுணர்வை மிகுவிக்கும் இன்ன பிற இடங்களாகவோ பகற்குறி அமையும். அவ்விடங்கள் பலவகைப்பட்ட மரங்களால் பொலிவு பெற்றனவாயும், வெளியிலிருப்போர் உள்ளிருப்போரை எளிதில் காண்பதற்கு இயலாதனவாயும், ஆனால், உள்ளே இருப்போர் வெளியிலிருப்பவரை எளிதில் கண்டு கொள்ளத்தக்கனவாயும், ஆசைகளை விட்டொழித்தோரையும் ஆசை கொள்ளத் தூண்டும் தன்மையனவாயும் இருக்கும். பகலில் கூடுமிடம் வீட்டிற்குப் புறத்தே, தலைவி வழியறிந்து வரக்கூடியதாயும், அவளுக்குப் பழக்கமான இடமாயும் அமைந்திருக்கும்.

பகற்குறி நாடி வந்த தலைவன், அக்குறிக்கண் செல்ல இயலாதவாறு தடைகள் சில நேர்வதுமுண்டு. (பகற்குறி இடையீடு)

அந்நிலையில், தலைவன் விருப்பத்தை ஈடேற்றுதலை அறமாய்க் கருதும் தலைவி, அவன் விரும்பியவாறே இரவில் வந்து தன்னைச் சந்திப்பதற்கு வரையறுத்துரைக்குமிடம் 'இரவுக்குறி' எனப்படும். அவ்விடம் தலைவியின் இல்லத்து மதில் எல்லைக்குள் இருக்கும்; இல்லத்தவர் பேசும் பேச்சினை வெளியிலிருந்து கேட்குமளவிற்கு அண்மையில் அகமனைக்கும் புறமனைக்கும் நடுவே அமைந்திருக்கும். அது, தலைவியின் வீட்டு எல்லைக்கு உட்பட்டிருக்கும் செய்குன்று, இளமரக்கா, பூப்பந்தர், விளையாட்டிடம் போல்வனவற்றுள் ஏதேனும் ஒன்றாயிருக்கும். தலைவன், தான் இரவுக்குறியிடத்துக்கு வந்திருப் பதைத் தெரிவிக்க அங்குள்ள நீர்நிலையில் கல்லெறிந்து ஒலி எழுப்பல், மரங்களில் தங்கியிருக்கும் பறவைகளை எழுப்பிவிடல் போன்ற

அடையாளக்குறிகளைச் செய்வான். அவ்வொலி கேட்டுத் தலைவி அங்கு வந்து சேர்வாள்.

சில சமயம், தலைவன் செய்ய வேண்டிய குறி காற்றசைவு போன்றவற்றால் இயற்கையாய் நிகழ்ந்துவிடும். அதை அவன் செய்ததாய் எண்ணி வந்து தலைவி ஏமாந்து திரும்புவாள். பிறகு அங்கு வந்த தலைவன் குறி எழுப்ப, அதைக் கேட்கும் தலைவி, அது தலைவன் எழுப்பிய குறியன்று என்று கருதி வாராதிருப்பாள். அதனால் தலைவன் சந்திப்பு நேராமலே திரும்புவான். இஃது 'அல்ல குறிப்படுதல்' ஆகும்.

சிறைப்புறம்

ஒருவரை ஒருவர் கண்ணால் பார்க்க வாய்ப்பு இல்லாததாயும், ஆனால், ஒருவர் கூறியதை மற்றவர் காதால் கேட்கும் தொலைவில் உள்ளதாயும் இருக்கும் பகுதி 'சிறைப்புறம்' எனப்படும். அதை வீட்டருகே உள்ள ஓர் இடம்; பச்சை உயிர்வேலி எனலாம்.

தோழிக்கும் தலைவிக்கும் இடையே நிகழும் உரையாடல்களைத் தலைவன் மறைந்திருந்து கேட்டு அறிதற்கு வசதியாய் மனைக்குப் புறமாய்க் காவலாய் அமைக்கப்பட்டுள்ள வேலி அமைப்பினைச் சிறைப்புறம் எனலாம்.

இற்செறிப்பு

தலைவன் தலைவியரிடையே ஏற்பட்டுள்ள களவுறவை ஊரார் அறிந்து பழிச்சொல் கூற முற்படுவர். இப்பழிச்சொல் 'அலர்' எனப்படும். ஊரெங்கும் பழிச்சொல் ஏற்பட்டிடவே தலைவி வீட்டார் அவளை வீட்டை விட்டு எங்கும் வெளிச் செல்லாதவாறு வீட்டுக்காவலில் வைப்பர். இஃது 'இற்செறிப்பு' எனப்படும்.

தலைவியின் தோற்ற மாறுபாட்டைக் கண்டும், ஊரவர் குறிப்பாய்ப் பேசிக்கொள்வதைக் கேட்டும், விளையாடல் முதலியவற்றிற்குத் தன் இல்லத்தைவிட்டுத் தலைவி வெளியே செல்ல இயலாதவாறு செவிலி அவளை இல்லத்திற்குள்ளேயே தங்கச்செய்வாள்.

ஒருவழித்தணத்தல்

அலர் அடங்குமாறு தலைவன் தலைவியைக் காண வாராது, தன் ஊரிலேயே சில காலம் தங்கி இருப்பான். இதனை 'ஒருவழித்தணத்தல்' என்பர்.

வரைவு கடாயது

தலைவன் சிறைப்புறத்தானாயிருக்க, ஊரார் அலர் கூறுவதையோ, தலைவிக்கு இற்செறிப்பு ஏற்பட்டிருப்பதையோ, அயலவர் மணம் பேசி வருகின்றனர் என்பதை அறிவித்தோ, இனியும் களவொழுக்கம் நீட இடந்தரலாகாது என்றும், உடனே அவன் வரைவு மேற்கொள்ள வேண்டும் என்றும் தலைவியும் தோழியும் வற்புறுத்திக் கூறுவர். தலைவன் சிறைப்புறமிருக்க, தலைவியும் தோழியும் அவன் கேட்குமாறு தம்முள் பேசி, அவனை உடனடியாக வரைந்துகொள்ளவும் தூண்டுவர்.

வெறியாட்டு

தலைவனோடு களவொழுக்கம் மேற்கொண்டுள்ள தலைவி, அவன் பிரிவைப் பொறுக்க இயலாது உடல் மெலிவாள். தன் மகளின் உடல், நாள்தோறும் மெலிவதற்கான காரணத்தை அறியாது அவள் தாய் கலங்குவாள். உடல் மெலிவு முருகனால் ஏற்பட்டது என நம்பி, செவிலி முருக பூசை செய்ய முனைவாள். முருக பூசை செய்வதற்குரிய பூசாரி, வேலன் எனப்படுவான். அவன் முருகனைக் கூவி அழைத்தும், வெறி யாட்டுக் கூத்தாடியும், கழற்சிக்காயிட்டும் தலைவியின் நோய்க்குக் காரணம் முருகனே என்பான்.

தெய்வம் மக்கள்மீது ஏறி ஆடுவதை 'வெறியாட்டு' என்பர். வெறியாடுபவன் தன் கையில் வேலைத் தாங்கி ஆடுவான். ஆதலின், இவன் வேலன் என்று வழங்கப்பட்டான்.

வெறியாடும் இடத்தில் பல்வகை மலர்களையும் பரப்பி, அழகுறச் செய்து முருகனை வழிபட்டு வேலன் வெறியாட்டயர்வான். அவ் விடத்தை 'வெறியாடு களம்' என்பர். அங்கு வேலன், ஆட்டுக்குட்டியை வெட்டிப் பலி கொடுத்துப் பூசை செய்வான்.

கட்டுவிச்சியை அழைத்து மகளின் நோய்க்குக் காரணம் யாது என வினவுவதும் உண்டு. முறத்தில் நெற்களைப் பரப்பி, எண்ணிக் குறி சொல்வது கட்டுவிச்சியின் வழக்கம்.

அறத்தொடு நிற்றல்

வெறியாட்டு நடத்தச் செவிலி முற்படும்போது தலைவி தோழியிடம், தன் காதலைத் தக்கவாறு செவிலியிடம் கூறி வெறியாட்டினை நிறுத்துமாறு வேண்டுவாள். இஃது 'அறத்தொடு நிற்றல்' எனப்படும்.

செவிலித்தாய் தோழியிடம் 'தலைவிக்கு இவ்வேறுபாடு எதனால் ஏற்பட்டது?' என்று கேட்பாள். தோழி மிக்க கவனத்தோடும் விழிப்போடும், எவர்க்கும் கெடுதியும் துன்பமும் நேராதபடி செவிலி யிடம் உரைப்பாள். கற்பு அழியாதவாறு, தலைவி தலைவனொடு ஒழுகிவந்த களவொழுக்கத்தைப்பற்றிச் செவிலியிடம் வெளிப் படுத்துவாள். இது, 'தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்றல்' எனப்படும். தலைவி தோழியிடமும், தோழி, தன் தாயாகிய செவிலியிடமும் அறத்தொடு நிற்பர். செவிலி, தன் தோழியும், தலைவியைப் பெற்றெடுத்தவளுமாய நற்றாய்க்கு அறத்தொடு நிற்பாள். நற்றாய் தலைவியின் தமையன்மார்க்கும் தந்தைக்கும் அறத்தொடு நிற்பாள். தலைவியின் ஆழ்ந்த காதலை அறிந்த அவள் பெற்றோர் திருமணத் திற்கு உடன்படுவர்.

வரைவிடைப்பிரிவு

அறத்தொடு நின்ற நிலையில், பெற்றோர் வரைவுக்கு உடன்படு வராயின், மகட்கொடையாகவும் மண நிகழ்வுக்காகவும் தலைவியைப் பெற்றோர்க்குத் தலைவன் பொருள் தரவேண்டும். இவ்வாறு அளிக்கப்படும் பொருள், மகட்கொடை, முலை விலை என்னும் பெயர்களால் வழங்கப்படும். இப்பொருளைத் தேடி வரத் தலைவன் தலைவியைப் பிரிந்து செல்வான். இது 'வரைவிடைப்பிரிவு' எனப்படும். வரைவிடைப்பிரிவால், தலைவி ஆற்றாது வருந்தத் தோழி அவளைத் தேற்றுவிப்பாள்.

தலைவன் வரைபொருட்காகப் பிரிந்து சென்று, பொருள் திரட்டி மீண்டதும் தன் சுற்றத்தவர்களை முற்கொண்டு, தலைவியில்லம் போந்து, பெண் தருமாறு வேண்டுவான்; சுற்றத்தவர் அல்லாமல் அறநிலை சான்ற வேறு சான்றோர்களை முற்கொண்டும் பெண் தருமாறு வேண்டுதலுமுண்டு; பின்னர், முறைப்படி திருமணம் நிறைவேறும். (வதுவை அயர்தல்)

உடன்போக்கு

பெற்றோர் சிலர் தம் மகளின் களவொழுக்கத்தை அறியாத நிலையிலும் அறிந்த நிலையிலும் தலைவியை வீட்டை விட்டு வெளிப் போகாதவாறு வீட்டினுள் வைத்துக் காத்து வருவர். அந்நிலையில் தலைவியின் வருத்த மிகுதியைக் காணும் தோழி, தலைவி, தலைவன் ஆகிய இருவர் ஒப்புதலையும் பெற்று, எவருமறியாதவாறு தலைவியைத் தலைவனுடன் அவன் ஊர் செல்ல அனுப்பி வைப்பாள். அவ்வாறு தலைவனுடன் தலைவி செல்லுதல் 'உடன்போக்கு' என்றும், 'கொண்டுதலைக் கழிதல்' என்றும் வழங்கப்பெறும். ஏதமிக்க காட்டு வழியில் தன்னுடன் வரும் தலைவிக்குத் துன்பம் எதுவும் தோன்றா வண்ணம் தலைவன் அவளிடம் இன்மொழி பேசியும் நற்செயல்களைச் செய்தும் அழைத்துச் செல்வான்.

உடன்போகும் காதலர்களை வழியிடையே காண்பவர் அவர்கட்கு ஆதரவாய் இருப்பர். 'பொழுது சென்று இருள் வந்தது; வழி துன்பமானது. இந்நேரத்தில் தனியே செல்லுதல் தகாது. இரவு எம்மூரில் தங்கிச் செல்லுங்கள்' என்று அன்போடு வேண்டுவர்.

தலைவி தம் வீட்டை விட்டு வெளியே சென்றதை அறிந்த நற்றாயும் செவிலியும் மிகவும் வருந்துவர். 'காதலனிடம் மகள் கொண்ட அன்பு இவ்வளவினது என யாம் அறிந்திருந்தால் எம் வீட்டிலேயே திருமணத்தை முடித்து வைத்திருப்போமே' என்பர். உடன்போக்குச் சென்ற மகளைச் செவிலித்தாய் தேடியும் செல்வாள். அவளை எதிர்ப் படும் ஆன்றோர், அவள் நிலை கண்டு இரங்கி, "உன் மகள் அறவழி

யினையே மேற்கொண்டுள்ளாள். அவளைத் தடுக்க வேண்டா; அவளை அவள்வழிச் செல்ல விடுங்கள்" என ஆறுதல் கூறி அனுப்பி வைப்பர்.

தலைவன் தலைவியைத் தன்னூர் அழைத்துச் சென்றதும் அங்கு அவளை மணந்துகொள்வான். களவொழுக்கத்தைத் தலைவியைப் பெற்றோர் ஏற்றனரென்றால் திருமணம் அவர்கள் வீட்டிலும், அவ்வாறன்றித் தலைவனுடன் தலைவி உடன்போக்கில் சென்றால் திருமணம் தலைவன் இல்லத்திலும் நடைபெறும். திருமணம் எங்கு நடைபெற்றாலும் திருமணத்திற்குப் பின்பு இருவீட்டாரும் ஒன்று பட்டிருப்பர்.

மங்கல மனையறம்

திருமணத்தின் பயனாய்த் தலைவன் தலைவியர் இல்வாழ்க்கை யினை மேற்கொள்ளத் தலைப்படுவர். இல்வாழ்க்கை மேற்கொள்ளும் தலைவனுக்குத் தன்னைச் சார்ந்த மனைவி, மக்கள், பெற்றோர், உற்றார், ஏனை உறவின் முறையினர், ஆன்றோர், விருந்தினர் ஆகியோரை உண்டி, உடை, உறையுள் முதலியவற்றால் பாதுகாக்கும் கடமையும், இவையொழிய இன்னும் ஏனையவாயமைந்துள்ள இல்வாழ்க்கைக் கடமைகளும் உண்டாகின்றன. அவ்வெல்லாக் கடமைகளையும் முறைப்படி அவ்வக் காலங்களில் செய்வதற்குப் பொருள் இன்றியமையாததாகும்.

பொருள்வயிற் பிரிவு

தலைவன் திருமணம் செய்துகொள்ளுதற்கு முன் வரைதற் பொருட்டுப் பொருள் தேடியது, திருமணக் கடமைகளுக்காக மட்டுமே. திருமணத்திற்குப் பின்னர்த் தனது இல்வாழ்க்கைக்குரிய கடமைகளை நிறைவேற்றும்பொருட்டும் பொருளைத் தேட வேண்டியவனாகிறான்.

முன்னோர் தேடிய பொருள் தன்னிடம் மிகுதியாய் இருக்குமாயினும் தலைவன் தன் முயற்சியால் பெற்ற பொருள் கொண்டு இல்வாழ்க்கை யினை நடத்துவதையே பெருமையாகவும் சிறப்பாகவும் கருதுவான்.

பொருள் தேடி வரச் செல்லக் கருதும் தலைவன், தலைவி தன் பிரிவை ஆற்றியிராள் என்பதுணர்ந்து சில காலம் பயணத்தைத் தவிர்ப்பான். பின்னர்த் தோழியிடம் கூறித் தலைவியிடம் தன் பிரிவை அறிவிக்கச் சொல்வான். முதலில் தோழியே செலவினை மறுப்பாள்; நீண்ட பிரிவாய் இருக்குமென்பதால் தலைவியும் ஒருப்படாள்; ஆயினும், அறங்கருதித் தலைவி இசைவாள். நாடுகளை நீங்கியும் காடுகளைக் கடந்தும் தொலைவில் சென்று, பொருளீட்ட வேண்டும். இச்செயலைச் செய்து முடிக்க வேனிற்காலமே ஏற்றதாகும். வேனிற்பருவத்தே பிரிந்து செல்லும் தலைவன் கார்காலத் தொடக்கத்தில் திரும்பி வருவதாய்க் கூறிச் செல்வான்.

தலைவன் சென்றதும் தலைவி துயர் தாளாது மிகவும் வருந்தி யிருப்பாள்; தோழி அவளை ஆற்றுவிப்பாள். தான் புறப்படும்போது சொல்லிச் சென்றவண்ணம் கார்காலத் தொடக்கத்தே தலைவன் வாராதிருப்பின் தலைவியின் துயரம் மிகுதியாகும். கார்காலத்திற்குரிய அறிகுறிகள் தென்பட்டாலும் அவை கார்காலத்திற்குரியவை அன்று என்று கூறித் தலைவியைத் தோழி தேற்றுவிப்பாள்.

பொருள் தேடப் பிரிந்த தலைவனும், தலைவியைப் பிரிந்திருக்க இயலாதவனாய்த் தவிப்பான்; இடைவழியிலேயே திரும்பிவிடலாமா என்றுகூட எண்ணுவான்; ஆயினும், கடமையில் கருத்தூன்றி, பொருள் தேடி முடித்த பின்னரே திரும்புவான். திரும்புங்கால், விரைந்து சென்று தலைவியை அடைய வேண்டும் என்னும் வேட்கையில் தேரினை விரைவாய்ச் செலுத்துமாறு பாகனிடம் கூறுவான். அவ்வாறே பாகனும் செலுத்தத் தலைவன் தன் இல்லமடைந்து தலைவியைக் கூடி மகிழ்ந்து இனிதே நல்வாழ்க்கை நடத்துவான். இனிய மக்கட்பேறும் வாய்க்க அவர்கள் இல்லறம் மேலும் சிறப்புறும். காதலர் அன்புடையராய், விருந்தோம்பி, நடுவுநிலைமை மேற்கொண்டு, ஒப்புரவறிந்து, ஈகை மேற்கொண்டு புகழ் வாழ்வு வாழ்வர்.

தலைவன் பொருள் தேடுவதற்காக மட்டுமன்றி, உயர்கல்வி கற்பதற்காகவும், அரசனுக்காகப் போர்மேற்செல்வதற்காகவும் பிரிந்து செல்வதுண்டு.

களவுக்காலத்தில் ஒருவழித்தணத்தல், வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல் எனத் தலைவன் பிரியும் நிலைகள் உண்டு.

கற்புக்காலத்தில் ஓதல், காவல், தூது, பொருள் தேடல், வேந்தற்கு உற்றுழி உதவல் முதலியன கருதித் தலைவியை விடுத்துப் பிரிதல் உண்டு.

தலைவன் பிரிந்திருக்கும் காலங்களில் தோழி தலைவியைத் தேற்றுவித்துத் துணை நிற்பாள்.

பரத்தையிற்பிரிவு

இல்லற வாழ்வில் தலைவனோடு தொடர்பு கொள்வதைத் தன் வாழ்க்கைநெறியாய்க் கொண்டிருப்பவள் மனைவி. அவ்வாறு அல்லாது ஆடவர் பலரோடு தொடர்பு கொள்ள விரும்பும் மகளிர் பரத்தையர் எனப்படுவர். இவர்கள் திருமணம் என்னும் வரையறைக்கு உட்பட்டவர் அல்லர். தம்மை நாடி வருபவர்க்கு இன்பமளிப்பதே இவர் தொழில். அதனால் இவரை, 'வரைவின் மகளிர்', 'பொருள்விலைப் பெண்டிர்' என்றும் கூறுவர்.

தலைவன் தலைவியைப் பிரிந்து சென்று, பரத்தையர் இல்லத்தில் தங்கி இன்பம் பெறுவதுண்டு.

தலைவன் தன்னைப் பிரிந்து பரத்தையிடம் சென்றதால் தலைவி வெகுண்டு ஊடியிருப்பாள். தலைவனது இல்வாழ்க்கையில் நிகழும் ஊடல் முதலியவற்றைப் போக்கும் வழிகளாய் இருப்பவர் 'வாயில்கள்' எனப்படுவர்.

பரத்தையிற்பிரிவுக்குப்பின் தன் இல்லத்திற்கு வரும் தலைவன், ஊடிய தலைவியை நேர்விக்கத் தோழியை வாயிலாக வேண்டுவான். வாயிலாக வந்தவர்க்கு முகங்கொடுக்க மறுத்தல் 'வாயில்' மறுத்தலாம். தோழியே தலைவனைக் கண்டித்து வாயில் மறுப்பாள். பாணன், விறலியர் முதலியோரையும் தலைவன் வாயிலாக அனுப்புவதுண்டு. தோழியும் தலைவியும் அவர்களைக் கடிந்து திருப்புவர்.

தலைவன் பல முறை பணிந்து வேண்டியதால், தோழி மனமிரங்கித் தலைவியிடம் உரையாடி, தலைவனை ஏற்று ஊடல் தணியுமாறு செய்து வாயில் நேர்விப்பாள்.

வாயிலை ஏற்று, தலைவனுக்கு இடங்கொடுத்து அவனைத் தலைவி சேர்த்துக்கொள்வாள். ஊடலும் கூடலுமாய் அவர்கள் வாழ்க்கை இன்பமாய் அமையும்.

வாழ்க்கை, காதல் ஒழுக்கத்தால் அமைவது. தமிழ் மக்களின் காதல் வாழ்க்கை களவு, கற்பு என இரு வகைப்படும். தலைவன், தலைவியைக் கண்டு காதல் கொண்டது முதல் அவளைத் திருமணம் செய்து கொள்ளும்வரை உள்ள பகுதி களவு எனப்படும். இது களவியல், களவு நெறி, களவொழுக்கம் என்றும் வழங்கப்பெறும்.

திருமணம் முடிந்த பின் தொடங்கும் இல்லற வாழ்க்கை, கற்பொழுக்கம் என்று வழங்கப்படும்.

நாகரிகத்தில் மேம்பட்டிருந்த பண்டைக் காலத்தில் தமிழர் மேற்கொண்டிருந்த இனிய இல்லற நெறிகளே களவும் கற்புமாகும்.

பொருள்வயிற்பிரிவு – 5

தொகுதி 12

பக்கம் 1445 முதல் 1666 வரை

போர்வயிற்பிரிவு

பக்கம் 1667 முதல் 1813 வரை

தலைவன் கூற்று

குறுந்தொகை 237 **அள்ளூர் நன்முல்லை**

திணை : பாலை

கூற்று

பொருள் முற்றி மீள்வான் தேர்ப்பாகனுக்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவியைப் பிரிந்து பொருளீட்டச் சென்ற தலைவன் அதனை ஈட்டி மீண்டு வரும்போது தேர்ப்பாகனிடம் சொல்லியது.

அஞ்சுவது அறியாது, அமர்துணை தழீஇய,
நெஞ்சுநப் பிரிந்தன்று; ஆயினும், எஞ்சிய
கைபிணி நெகிழின்அஃது எவனோ? நன்றும்
சேய அம்ம, இருவாம் இடையே
மாக்கடல் திரையின் முழங்கி, வலன்ஏர்பு
கோட்புலி வழங்கும் சோலை
எனைத்துஎன்று எண்ணுகோ முயக்கிடை மலைவே?

தெளிவுரை

"*பாக! (குறித்த பருவம் தவறினால், தலைவி என்னாகுவளோ என்று) நான் அஞ்சுவது அறியாது என் நெஞ்சானது, நாம் விரும்புகின்ற தலைவியைத் தழுவுவதற்கு நம்மைப் பிரிந்து சென்று விட்டது. ஆயினும், பயன் என்ன? கைகளால் ஆரத் தழுவி, கையின் இறுக்கம் நெகிழும்போது ஏற்படும் உணர்வு நெஞ்சால் தழுவும்போது இருக்க இயலாது. தலைவிக்கும் எனக்கும் இடையில் உள்ள தொலைவு மிக அதிகமாய் உள்ளது. இன்றே சென்று, அவளைத் தழுவுவதற்குத் தடைகளாய் இருப்பவை ஒன்றா, இரண்டா? கரிய கடலலைபோல் முழங்கி, வலப்புறமாய் எழுந்து கொலை செய்ய வல்ல புலிகள் திரியும் சோலைகள் எத்தனை என்று எண்ணுவேன்?*"

கருத்து

தலைவி உள்ள இடம் நெடுந்தொலைவில் உள்ளது. நம் நெஞ்சு மட்டும் அவளை அடைந்து என்ன பயன்?

குறிப்பு

நம் நெஞ்சு விரைந்து சென்றதற்கேற்ப, நாமும் விரைந்து செல்ல வேண்டும்.

இது பாகனை விரைந்து தேரைச் செலுத்தத் தூண்டுவது.

சொற்பொருள்

1. அஞ்சுவது அறியாது - (நான் அவள் நிலையை நினைத்து) அஞ்சுவதை உணராமல்; அமர்துணை - நான் விரும்புகின்ற தலைவியை; தழீஇய - தழுவுவதற்காக.
2. நெஞ்சு - நெஞ்சம்; நப் பிரிந்தன்று - நம்மைப் பிரிந்து சென்றது; ஆயினும் - ஆனாலும்; எஞ்சிய - குறைபாடாய் உள்ள.
3. கைபிணி - கையால் தழுவிக் கொள்வது; நெகிழின் - தளர்ச்சி யடையுமானால் (இயலாவிட்டால்); அஃது எவனோ? - (நெஞ்சு மட்டும் சென்று தழுவிக்கொள்வதால்) என்ன பயன்?
4. இருவாம் இடையே - இருவருக்கும் இடையே உள்ள இடைவெளி; நன்றும் சேய - மிகவும் நெடுந்தொலைவில் உள்ளது.
5. மா - பெரிய; திரை - அலை; வலன்ஏர்பு - வலமாய் எழுந்து.
6. கோட்புலி - கொல்லும் புலி; வழங்கும் - அலையும்; சோலை - சோலைகள்.
7. எனைத்து என்று எண்ணுகோ? - எத்தனை என்று எண்ணுவேன்?; முயக்கிடை - அவளை நான் தழுவிக்கொள்வதற்கு; மலைவு - தடை.

தலைவன் கூற்று

ஐந்திணை ஐம்பது 10 **மாறன் பொறையனார்**

திணை : முல்லை

கூற்று

வினைமுற்றிய தலைமகன் தேர்ப்பாகன் கேட்பச் சொல்லியது. (வினை முற்றல் - செய்யக் கருதிய வேலை முற்றும் முடிதல்.)

கூற்று விளக்கம்

தலைவியைப் பிரிந்து சென்று ஒரு செயலைச் செய்து முடிக்கக் கருதிய தலைவன், அதை முடித்துத் தன் தேர்ப்பாகனிடம் கூறியது.

நூல்நவின்ற பாக!தேர் நொவ்விதாகச் சென்றீக;
தேன்நவின்ற கானத்து எழில்நோக்கித் – தான்நவின்ற
கற்புத்தாள் வீழ்த்துக் கவுள்மிசைக் கையூன்றி
நிற்பாள் நிலைஉணர்கம் யாம்.

தெளிவுரை

'நூல்களைக் கற்றுணர்ந்த தேர்ப்பாகனே! தேன்கூடுகள் பொருந்திய காட்டில் கார் மழையால் உண்டான அழகைக் காணுவதுபோல, என் வரவை எதிர்பார்த்துக்கொண்டு நிற்பாள், தலைவி. அவள் தான் இளமையிலேயே கற்ற கற்பு என்னும் கருத்தை உள்ளத்தில் தேக்கி, உயிரைக் காப்பாற்றிக் கவலையுடன் மேவாய்மீது இடக்கையூன்றி நிற்கும் நிலைமை என் கண்முன் நிற்கிறது. அவளைக் காண்பதற்கு ஏற்ப, நம் தேர் விரைவில் செல்லட்டும்' எனத் தலைவன் தேர்ப்பாகனை நோக்கிக் கூறினான்.

கருத்து

தலைவி என் வரவை எதிர்நோக்கிக் காத்து நிற்பாள். பாக! அவளைச் சென்று காணத் தேரினை விரைவில் ஓட்டு.

சொற்பொருள்

1. நூல் நவின்ற - நூல்களைக் கற்றுணர்ந்த; நொவ்விது ஆ - விரைவாய்; சென்றீக - செல்லட்டும்.
2. தேன் நவின்ற - தேன் கூடுகள் மிகுந்த; கானம் - காடு; தான் நவின்ற - தான் இளமையிலேயே கற்ற.
3. கற்புத் தாள் வீழ்த்து - கற்பாகிய தாழ்ப்பாளினை மனத்தில் செறிந்து; கவுள் - மேவாய்; மிசை - மீது.

தலைவன் கூற்று

நற்றிணை 371 **ஔவையார்**

திணை : முல்லை

கூற்று

வினை முற்றி மறுத்தராநின்றான் பாகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

வினை முடித்து மீள்கின்ற தலைவன் தேர்ப்பாகனிடம், 'பாக! கார்ப் பருவம் தொடங்கிவிட்டது. இதைக் கண்டு தலைவி அழத் தொடங்கி யிருப்பாள். எனவே, தேரினை விரைந்து செலுத்து' என்று கூறியது.

காயாங் குன்றத்துக் கொன்றை போல,
மாமலை விடரகம் விளங்க மின்னி,
மாயோள் இருந்த தேஎம் நோக்கி,
வியல்இரு விசும்பகம் புதையப் பாஅய்ப்
பெயல்தொடங் கினவே பெய்யா வானம்
நிழல்திகழ் சுடர்த்தொடி ஞெகிழ ஏங்கி
அழல்தொடங் கினளே ஆயிழை; அதனெதிர்
குழல்தொடங் கினரே கோவலர் –
தழங்குகுரல் உருமின் கங்கு லானே!

தெளிவுரை

"பாகனே! மலர்ந்துள்ள ஏராளமான காயா மரங்கள் மலையிடத்தே இடையிடையே சரக்கொன்றைகள் மலர்ந்ததுபோல மலையின் பிளவுகளெல்லாம் புலப்படும்படியாக மின்னல் மின்னுகிறது. மாந்தளிர் மேனியளாகிய தலைவி இருக்கும் திசை நோக்கி வானத்தில் சென்ற கருமையான மேகங்கள் மழை பெய்யத் தொடங்கிவிட்டன. அவ்வாறு மழை பெய்வதால், ஆராய்ந்தெடுத்த அணிகலன்களைப் பூண்ட என் காதலி ஒளி பொருந்திய கைவளைகள் கழலுமாறு வருந்தி அழத் தொடங்கி யிருப்பாள். அவள் அழுகையை மிகுவிக்கும் வகையில் ஆயர்களும் குழலூதத் தொடங்கியிருப்பர். ஆதலின் பாக! தேரை விரைவாய்ச் செலுத்து" என்று கூறினான், தலைவன்.

கருத்து

கார்ப்பருவம் தொடங்கிவிட்டது; பாகனே! தேரினை விரைவில் செலுத்து.

விளக்கம்

“பாக! கார்ப்பருவம் தொடங்கிவிட்டது. மின்னல் மின்னி இடி இடித்து மழை பெய்கிறது. திரும்பி வருவதாய் நான் தலைவியிடம் கூறியிருந்த பருவம் தொடங்கியும், நான் இன்னும் வந்து சேரவில்லையே எனத் தலைவி அழத் தொடங்கியிருப் பாள். அவள் வருத்தத்தை மிகுதிப்படுத்துமாறு கோவலர்களும் மாலைப்பொழுதில் குழல் ஊதியவண்ணம் இருப்பர். தலைவி யின் அழுகையை நிறுத்த, பாகனே! விரைவாய்த் தேரினைச் செலுத்திச் சென்று வீட்டின்முன் நிறுத்து” என்று பாகனிடம் தலைவன் கூறினான்.

உவமை

காயாவின் கருநீல மலர்கள் நிரம்பிய குன்றத்தின் இடை யிடையே சரக்கொன்றை மலர்கள் தோன்றுவது, இருண்ட வானத்தில் மின்னல் ஒளிவிட்டுத் தோன்றுவதுபோல இருக் கிறது.

(காயாம்பூ - நீல வானம்; கொன்றைப்பூ - ஒளிவிடும் மின்னல்.)

சொற்பொருள்

1. காயா - காயா மரம்.
2. விடரகம் - மலைப்பிளவு.
3. மாயோள் - மாந்தளிர் மேனியைக் கொண்ட தலைவி.
4. வியல்இரு - அகன்ற கரிய; விசும்பு - வானம்; புதைய - மறைய; பாஅய் - பரந்து.
5. பெயல் - மழை பெய்தல்.
6. நிழல் திகழ் - ஒளி செய்யும்; தொடி - வளையல்; ஞெகிழ - நெகிழ.
7. அழல் தொடங்கினள் - ஓங்கி அழத் தொடங்கினாள்.
8. குழல் - புல்லாங்குழல் (ஊத); கோவலர் - இடையர்.
9. தழங்குகுரல் - ஒலி முழக்கம்; உரும் - இடி; கங்குல் - இருள்.

தலைவன் கூற்று

நற்றிணை 242 **விழிக்கட்பேதைப் பெருங்கண்ணனார்**

திணை : முல்லை

கூற்று

வினைமுற்றி மறுத்தராநின்ற தலைமகன் கார் கண்டு பாகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள் தேடிவரப் புறப்பட்ட தலைவன் தலைவியிடம் தான் கார் காலத்தில் திரும்பிவிடுவதாய்க் கூறியிருந்தான். வந்த வேலை முடிந்தது; கார்ப்பருவமும் தொடங்கிவிட்டது; சொன்ன சொல் தவறாது தலைவியைச் சென்று காணத் தேரினை விரைந்து ஓட்டுமாறு தலைவன் பாகனிடம் சொல்லியது.

இலைஇல பிடவம் ஈர்மலர் அரும்ப,
புதல்இவர் தளவம் பூங்கொடி அவிழ,
பொன்எனக் கொன்றை மலர, மணிஎனப்
பல்மலர் காயாங் குறுஞ்சினை கஞல,
கார்தொடங் கின்றே காலை; வல்விரைந்து
செல்க பாக!நின் தேரே; உவக்காண்
கழிப்பெயர் களரில் போகிய மடமான்
விழிக்கண் பேதையொடு இனன்இரிந்து ஓட,
காமர் நெஞ்சமொடு அகலா,
தேடூஉ நின்ற இரலை ஏறே.

தெளிவுரை

“பாகனே! தம் பிடவங்களெல்லாம் பழுத்த இலைகளை உதிர்த்துவிட்டு மெல்லிய மலர்கள் விளங்குமாறு மொட்டு களைத் தோற்றுவித்துள்ளன; புதர்மேல் பற்றிப் படரும் முல்லைக்கொடிகள் யாவும் மலர்ந்துள்ளன; கொன்றை மரங்களில் பொன் போன்ற மலர்கள் மலர்ந்துள்ளன; காயா மரங்கள், நீலமணி போன்ற மலர்களைத் தாங்கிக் கொண் டுள்ளன; இவ்வாறு மலர்கள் பல மலருமாறு கார்ப்பருவம்

தொடங்கிவிட்டது. பாக! இதோ பார். கழிநீர் பெருகிப் பரவும் களர் நிலத்தே (தேர் அரவம் கேட்ட) மானினம் மருண்டோடு கின்றன. அவற்றுள் கன்றீன்ற மான் ஒன்று தன் கன்றைத் தொடர்ந்து ஏனைத் தன் இனமான கூட்டத்திலிருந்து நீங்கி ஓடுகிறது. இதைக் காணும் அதன் ஆண்மானாகிய கலைமான் அதனைப் பின்தொடர இயலாமலும், இனத்தினின்றும் நீங்க இயலாமலும் மயங்கி நிற்பதைப் பார்!"

கருத்து

கார் தோன்றிவிட்டது; தலைவியை உடனே சேர வேண்டும். பாக! தேரினை விரைந்து ஓட்டு.

விளக்கம்

"*பாக! கார் காலத்தில் திரும்பி வருவதாய்த் தலைவியிடத்தில் கூறிவிட்டு வந்தோம். கார் காலத்திற்குரிய மலர்கள் அனைத்தும் மலர்ந்துவிட்டன. மான்கள் இணையோடு களித்திருக்கின்றன. நாமும் தலைவியை உடனே காணவேண்டும். ஆதலால், உன் தேரினை விரைந்து செலுத்து" என்று பாகனிடம் தலைவன் கூறுகின்றான்.*

சொற்பொருள்

1. இலைஇல - இலைகள் உதிர்ந்த; பிடவம் - பிடவ மரம்.
2. இவர் - படரும்; தளவம் - முல்லைக்கொடி; அவிழ - மலர.
3. பொன்என - பொன் போன்று; மணிஎன - நீலமணி போன்று.
4. காயா - காயா மரம்; கஞல - விளங்க.
5. வல் விரைந்து - மிகவும் விரைவாய்.
6. உவக்காண் - இதோ பார்.
7. கழிப்பெயர் - உப்பங்கழி நீர் பரவும்; களர் - களர் நிலம்; போகிய - சென்ற; மடமான் - இளைய மான்.
8. விழிக்கண் - மருண்டு விழிக்கும் கண்களைக் கொண்ட; பேதை - மான் குட்டியோடு; இனன் - மான் கூட்டம்; இரிந்து - நீங்கி.
9. காமர் - விருப்பம்; அகலா - நின்ற இடத்திலிருந்து அகல இயலாது.
10. தேடூஉ - தேடி; இரலை - இரலை மான்; ஏறு - ஆண்.

தலைவன் கூற்று

நற்றிணை 42 **கீரத்தனார்**

திணை : முல்லை

கூற்று

வினைமுற்றி மீள்வான் தேர்ப்பாகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருளீட்டப் பிற நாடு சென்ற தலைவன் பொருள் தேடி முடித்துத் திரும்புகிறான். இல்லத்தில் அவன் மனைவி காத்திருப்பாளாதலால் தேர்ப்பாகனிடம் விரைந்து தேரைச் செலுத்துமாறு அவன் கூறியது.

மறத்தற்கு அரிதால் பாக! பல்நாள்
வறத்தொடு வருந்திய உலகுதொழில் கொளீஇய
பழமழை பொழிந்த புதுநீர் அவல
நாநவில் பல்கிளை கறங்க, நாவுடை
மணிஒலி கேளாள், வாள்நுதல்; அதனால்,
ஏகுமின் என்ற இளையர் வல்லே
இல்புக்கு அறியுந ராக மெல்லென
மண்ணாக் கூந்தல் மாசறக் கழீஇ,
சில்போது கொண்டு பல்குரல் அழுத்திய
அந்நிலை புகுதலின், மெய்வருத் துறாஅ
அவிழ்பூ முடியினள் கவைஇய
மடமா அரிவை மகிழ்ந்துஅயர் நிலையே.

தெளிவுரை

"பாகனே! சிறப்பாக மழை பெய்ததால் நெடுநாள்களாக நீரின்மையால் வறட்சியுற்றிருந்த நிலங்களிலுள்ள பள்ளங்களிலெல்லாம் நீர் நிறைந்து உழவுத்தொழில் தொடங்கியுள்ளது. பள்ளங்களில் உள்ள தவளைகள் பலவும் ஒலித்தலால் தேர் வரும் மணியோசையைத் தலைவியால் கேட்டிருக்க இயலாது. ஆதலால், 'முன்னரே செல்லுங்கள்' என ஏவப்பட்ட நம் ஏவலாளர்கள் விரைவாய்ச் சென்று நம் வரவைத் தலைவிக்குத் தெரிவித்துள்ளனர். உடனே அவள் இதுவரை ஒப்பனை செய்யப்படாதிருந்த கூந்தலை அழுக்கு நீங்க நன்றாய்க் கழுவிச்

சில மலர்களைச் சூடிக் கூந்தலைப் பலவாய் முடித்திருப்பாள். இந்நிலையில் நான் வீட்டினுள் நுழைந்ததும், என்னைப் பார்க்கும் தலைவி, தான் வருந்தியிருந்தது புலப்படாதவாறு, தன் கூந்தல் அவிழ என்னைத் தழுவிக்கொள்வாள். பாக! இதனை நான் மறக்க இயலாது! ஆகவே, தேரினை விரைவாய்ச் செலுத்து."

கருத்து

நான் இல்லினுள் நுழைந்ததும், தலைவி என்னை இறுகத் தழுவிக் கொள்வாள்.

விளக்கம்

பாகனே! மழை பெய்து பள்ளங்களில் நீர் நிறைந்து தவளைகள் கூடி ஒலித்துக்கொண்டேயிருப்பதால், தலைவியால் நம் தேர்மணியின் ஒலியைக் கேட்க இயலாது; இன்னும் வர வில்லையே என அவள் என்னை எதிர்பார்த்திருப்பாள்! தேரை விரைவாய்ச் செலுத்து! என்னைக் கண்டதும் அவள் விரைந் தோடி வந்து அணைத்துக் கொள்ளும் காட்சி என் கண்முன் நிற்கிறது.

சொற்பொருள்

2. வறம் - வறட்சி; உலகு தொழில் - உழவுத்தொழில்; கொளீஇய - மேற்கொள்ளும்பொருட்டு.
3. அவல - பள்ளத்தில்.
4. நாநவில் பல்கிளை - நாவால் கத்தும் பல இனமாகிய தவளை; கறங்க - ஒலிக்க.

4-5. நாவுடை மணி ஒலி - நாவினைக் கொண்ட தேர்மணியின் ஒலியை; வாள்நுதல் - ஒளி பொருந்திய நெற்றியையுடைய தலைவி.

6. ஏகுமின் - (முன்னரே) செல்லுங்கள்; என்ற - என்று ஏவப்பட்ட; இளையர் - ஏவலாளர்கள்; வல்லே - விரைவாய்ச் சென்று.
7. இல் புக்கு - இல்லத்தில் நுழைந்து; அறியுநராக - நம் வரவை முன்கூட்டிச் சொல்லினராதலின்.
8. மண்ணா - கழுவப்படாத; மாசுஅற - அழுக்கு நீங்க; கழீஇ - கழுவி.
9. சில்போது - சில மலர்கள்; பல்குரல் - பலவாகிய நீண்ட கூந்தல்; அழுத்திய - சூடிக்கொண்டிருந்த.

10. அந்நிலை புகுதலின் - அந்த நேரத்தில் நான் உள்ளே நுழைந்ததும்; மெய்வருத்துறாஅ - தான் வருந்தியிருந்தது புலப்படாதவாறு.
11. அவிழ்பூ முடி - பூ முடிந்த கூந்தல் அவிழ; கவைஇய - தழுவிய.
12. மகிழ்ந்து அயர் - மகிழ்ந்து விரும்பிய.

தலைவன் கூற்று

அகநானூறு 154 **பொதும்பிற் புல்லாளங்கண்ணியார்**

திணை : முல்லை

கூற்று

வினை முற்றிய தலைமகன், தேர்ப்பாகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

வினைமேற்பிரிந்து சென்ற தலைவன் வினையை முடித்தான். தான் திரும்புவதாய்த் தலைவியிடம் கூறிச் சென்ற கார் காலமும் தொடங்கிவிட்டது. ஆதலால், தேரினை விரைவாய்ச் செலுத்துமாறு பாகனிடம் கூறியது.

படுமழை பொழிந்த பயம்மிகு புறவின்
நெடுநீர் அவல பகுவாய்த் தேரை
சிறுபல் இயத்தின் நெடுநெறிக் கறங்க,
குறும்புதல் பிடவின் நெடுங்கால் அலரி
செந்நில மருங்கின் நுண்அயிர் வரிப்ப,
வெஞ்சின அரவின் பைஅணந் தன்ன,
தண்கமழ் கோடல் தாதுபிணி அவிழ,
திரிமருப்பு இரலை தெள்அறல் பருகிக்
காமர் துணையொடு ஏமுற வதியக்
காடுகவின் பெற்ற தண்பதப் பெருவழி;
ஓடுபரி மெலியாக் கொய்சுவல் புரவித்
தாள்தாழ் தார்மணி தயங்குபு இயம்ப,
ஊர்மதி– வலவ! தேரே சீர்மிகுபு–
நம்வயிற் புரிந்த கொள்கை
அம்மா அரிவையைத் துன்னுகம், விரைந்தே.

தெளிவுரை

"பாகனே! மிகுந்த மழை பொழிந்து முல்லை நிலம் பசுமைப் பயன் பெற்றுள்ளது. ஆழமான பள்ளங்களிலெல்லாம் நீர் நிறைந்திருக்கும். அங்கு வாழும் தவளைகள் நீண்ட வழியெங்கும் வாச்சியங்கள்போல் ஒலித்துக்கொண்டிருக்கும். குறிய புதராகிய பிடவின் நீண்ட காம்பினைக் கொண்ட மலர்கள் செந்நிற நிலத்தில் நுண்ணிய மணலில் உதிர்ந்து கோலம் செய்யும். கொடிய சினம் கொண்ட பாம்பு படமெடுத்தாற்போல, குளிர்ச்சி பெற்று மணம் கமழும் காந்தள் பூக்கள் மலர்ந்திருக்கும். முறுக்கிய கொம்பினைக் கொண்ட ஆண்மான் தெளிந்த நீரைப் பருகி அன்பு கொண்ட பெண்மானோடு இனிதே தங்கியிருக்கும். இவ்வாறு அழகு பெற்றுள்ள காட்டின் குளிர்ச்சிமிக்க பெருவழி(யில் நாம் செல்ல வேண்டும்.) வேகத்தைக் குறைக்க இறுதிவரை ஓடும் குதிரைகளின் பிடரி மயிர் கத்திரிக்கப் பட்டுள்ளது; அவற்றின் கால்வரை தொங்கும் மாலையில் உள்ள மணிகள் ஒலிக்கின்றன. அக்குதிரைகளைப் பூட்டித் தேரைச் செலுத்து. அழகினால் சிறப்புற்றவளும், நம்மை விரும்புகின்ற வளும், மாமை நிற மங்கையுமாகிய தலைவியை விரைந்து சென்று அடைவோம்."

கருத்து

கார் காலம் தொடங்கிவிட்டது. தேரினை விரைந்து செலுத்து; தலைவியை அடைவோம்.

விளக்கம்

'கார் கால மழையால் காடுகள் அழகு பெற்றுள்ளன. குளிர்ச்சி பொருந்திய வழியில், விரைந்து செல்லும் குதிரை களைப் பூட்டியுள்ள தேரினை விரைந்து செலுத்து. நம்மீது அன்புமிகக் கொண்ட தலைவியை நாம் சென்றடைவோம்.'

சொற்பொருள்

1. படுமழை - மிக்க மழை; பயம்மிகு - பயன் மிக்க.
2. நெடுநீர் - ஆழமான நீர்; அவல - பள்ளம்; பகுவாய் - பிளந்த.
3. பல் இயம் - பல வகையான வாச்சியங்கள்; கறங்க - ஒலிக்க.

4. புதல் - புதர்; நெடுங்கால் - நீண்ட காம்பு; அலரி - மலர்.
5. நுண்அயிர் - நுண்ணிய மணல்; வரித்தல் - கோலஞ்செய்தல்.
6. அரவு - பாம்பு; பை - படம்; அணத்தல் - மேலெழுதல்.
7. கோடல் - காந்தள்.
8. திரிமருப்பு - முறுக்குண்ட கொம்பு; இரலை - ஆண்; தெள்அறல் - தெளிந்த நீர்.
9. காமர் - விருப்பம்; துணை - பெண்மான்; ஏமுற - இன்பமுற; வதிதல் - தங்குதல்.
10. கவின் - அழகு; பதம் - தன்மை.
11. ஓடுபரி மெலியா - ஓடும் வேகம் குறையாத; கொய் - கொய்யப்பட்ட, வெட்டப்பட்ட.
12. தாள்தாழ் - கால்வரை தாழ்ந்துள்ள; தயங்குபு - விளங்கி.
13. ஊர் - ஓட்டு; சீர்மிகுபு - அழகு மிக்க.
14. நம்வயின் - நம்மிடம்; புரிந்த - அன்பு கொண்ட.
15. மாஅரிவை - மாமை நிறம் கொண்ட பெண், தலைவி; துன்னுகம் - விரைந்து சென்று அடைவோம்.

தலைவன் கூற்று

அகநானூறு 244 — **மதுரை மள்ளனார்**

திணை : முல்லை

கூற்று

வினை முற்றிய தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருளீட்டி வரத் தலைவியை விட்டுப் பிரிந்தான். கார் காலம் தொடங்கிவிட்டது; அவன் சென்ற செயலும் முடிவுற்றது. பாகனை நோக்கித் 'தலைவியின் துயர் தீர இப்பொழுதே தேரை விரைந்து செலுத்திச் செல்' எனத் தலைவன் கூறியது.

'பசைபடு பச்சை நெய்தோய்த் தன்ன,
சேய்உயர் சினைய மாச்சிறைப் பறவை,
பகல்உறை முதுமரம் புலம்பப் போகி,
முகைவாய் திறந்த நகைவாய் முல்லை,
கடிமகள் கதுப்பின் நாறி கொடிமிசை,

வண்டினம் தவிர்க்கும் தண்பதக் காலை
வரினும், வாரார் ஆயினும், ஆண்டுஅவர்க்கு
இனிதுகொல், வாழி, தோழி?' எனத்தன்,
பல்இதழ் மழைக்கண் நல்லகம் சிவப்ப,
அருந்துயர் உடையள் இவள்'என விரும்பிப்
பாணன் வந்தனன், தூதே, நீயும்
புல்ஆர் புரவி, வல்விரைந்து பூட்டி,
நெடுந்தேர் ஊர்மதி, வலவ!—
முடிந்தன்று அம்ம,நாம் முன்னிய வினையே!

தெளிவுரை

"பாகனே! கார் காலம் தொடங்கிவிட்டது. எங்கும் குளிர்ந்த சூழ்நிலை; வெளவால்கள் பகலெல்லாம் தாம் தொங்கியிருந்த உயர்ந்த கிளைகளைக் கொண்ட முதிர்ந்த மரத்திலிருந்து, தோலை நெய்யில் தோய்ந்தாற் போன்ற கரிய சிறகுகளை விரித்துப் பறக்கின்றன. முல்லைக்கொடிகள் மணமகளின் கூந்தலைப் போல், மலர்ந்து அவற்றில் மொய்க்கும் வண்டுகள் வேறு மலர்களுக்குச் செல்லாதவாறு மணம் பரப்புகின்றன.

"இந்நேரத்தில் தலைவி தோழியைப் பார்த்து, 'அவர் இங்கு வந்தாலும், வாராவிட்டாலும், அவர் சென்று தங்கியிருக்கும் இடம் இனிதாய் இருக்கட்டும்' என்று கூறிக் குளிர்ச்சி பொருந்திய தாமரை போன்ற தன் கண்கள் சிவக்க அழுது கொண்டிருக்கிறாள் என்று பாணன் வந்து சொல்கிறான். நாம் மேற்கொண்ட செயல் முடிந்து விட்டதால், நீயும் குதிரைகளைத் தேரில் பூட்டித் தேரை விரைவாய்ச் செலுத்து" என்று தலைவன் பாகனிடம் கூறினான்.

கருத்து

பாகனே! பாணனும் தூது வந்தனன். கார் காலமும் தொடங்கிவிட்டது. தலைவி துயர் தீரத் தேரினை விரைவாய் இல்லம் நோக்கிச் செலுத்து.

விளக்கம்

"பாக! 'குளிர்ச்சி பொருந்திய இக்கார் காலத்தே தலைவர் வரினும், வாராது இருப்பினும், அவர் சென்ற இடம் அவர்க்கு

இனியதாய் இருக்கட்டும். அவர் வாழ்க!' என்று பொறுத்தற்கரிய துயர் கொண்டவளாய்த் தலைவி சொல்லிக்கொண்டேயிருப்ப தாய்த் தூது வந்த பாணன் சொன்னான். ஆதலின், வலவ! நாம் கருதிய வினையும் முடிந்ததால், நீயும் தேரை விரைந்து செலுத்து" என்று தலைவன் பாகனிடம் கூறினான்.

குறிப்பு

'அவர் வந்து நமது துன்பத்தைப் போக்காவிட்டாலும், அவர் தங்கி யிருக்கும் இடம் அவர்க்கு இன்பத்தைத் தரட்டும்' எனத் தலைவி குறிப்பிடுவது, அவளது பெருந் துயரத்தைக் காட்டுகிறது.

சொற்பொருள்

1. பசைபடு பச்சை - பசை பொருந்திய தோல்.
2. சேய்உயர் சினை - மிக உயர்ந்த கிளை; மாச்சிறை - கரிய சிறகு; பறவை - வௌவால்.
3. பகல்உறை - பகலில் தங்கிய; முதுமரம் - முதிர்ந்த மரம்; புலம்ப - தனித்திட.
4. முகைவாய் திறந்த - அரும்புகள் வாய் திறந்தமையால்; நகைவாய் - ஒளி பொருந்திய.
5. கடிமகள் - மணமகள்; நாறி - மணந்து; மிசை - மேலே.
6. தவிர்க்கும் - (கொடி, தன்னைவிட்டுச்) சென்றுவிடாது தடுக்கும்; தண்பதக் காலை - குளிர்ச்சி பொருந்திய தன்மையைக் கொண்ட கார் காலம்.
7. ஆண்டு - அவர் சென்றுள்ள இடம்; அவர் - தலைவர்.
9. பல்இதழ் - பல இதழ்களைக் கொண்ட; நல்அகம் - சிறந்த உள்ளிடம்.
10. விரும்பி - விருப்பமுற்று.
12. புல்ஆர் - புல்லினைத் தின்ற; புரவி - குதிரை; வல்விரைந்து - மிக விரைவாய்.
13. ஊர்மதி - செலுத்துக; வலவ - பாகனே!
14. முன்னிய - கருதிய; வினை - செயல்.

தலைவன் கூற்று

கார் நாற்பது 24 **மதுரைக் கண்ணங்கூத்தனார்**

திணை : முல்லை

கூற்று

வினை முற்றிய தலைமகன் நெஞ்சோடு சொல்லியது.

கூற்று விளக்கம்

தான் மேற்கொண்ட செயல் முடியப்பெற்றதும் தலைவன் தன் உள்ளத்திடம் கூறியது.

எல்லா வினையும் கிடப்ப எழுநெஞ்சே
கல்லோங்கு கானம் களிற்றின் மதநாறும்
பல்லிருங் கூந்தல் பணிநோனாள் கார்வானம்
மெல்லவும் தோன்றும் பெயல்.

தெளிவுரை

“நெஞ்சமே! மலைகள் உயர்ந்த காடுகளில் யானையின் மதநீர் நாறும். கரிய வானத்தில் பெரிய மழைக்கான குறிப்புத் தோன்றும். இவை கார் கால வரவை என் தலைவிக்குச் சொல்லும். ‘கார் காலத்தில் திரும்பி வருவேன்’ என்ற என் உறுதி மொழியையும் அவளுக்கு நினைவூட்டும். அடர்ந்த கூந்தலைக் கொண்ட என் தலைவி துயரம் பொறுக்க மாட்டாள். எல்லா வேலைகளும் அப்படியே இருக்கட்டும். நீ தலைவியைக் காண உடனே புறப்படு” எனத் தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறினான்.

கருத்து

நெஞ்சே! கார் காலத்தில் திரும்புவேன் என்று தலைவியிடம் சொல்லி யுள்ளேன். கார் காலம் தொடங்கிவிட்டது. தலைவியைக் காண உடனே புறப்படு.

சொற்பொருள்

1. வினை - செயல்.
2. கல் - மலை; ஓங்கு - உயர்ந்துள்ள; மதம் - மதநீர்.
3. நோனாள் - பொறுத்திட மாட்டாள்.

3-4 கார் வானம் தோன்றும் பெயல் - கரிய வானத்தில் மழைக்குறிப்பு தோன்றுகிறது.

தலைவன் கூற்று

கார் நாற்பது 22 **மதுரைக் கண்ணங்கூத்தனார்**

திணை : முல்லை

கூற்று

வினை முற்றிய தலைமகன் பாகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள் ஈட்டுவதற்காகச் சென்ற தலைவன், தன் பணி முடிந்து திரும்பும்போது தன் பாகனிடம் சொன்னது.

இளையரும் ஈர்ங்கட்டு அயர உளைஅணிந்து
புல்உண் கலிமாவும் பூட்டிய – நல்லார்
இளநலம் போலக் கவினி வளமுடையார்
ஆக்கம்போல் பூத்தன காடு.

தெளிவுரை

"வலவ! பணிபுரியும் இளைய வயதினரும் கார் காலத்திற்கு ஏற்ற ஆடையை உடுத்துள்ளனர். தலை ஆட்டத்தை அணிந்து புல்லைத் தின்று மகிழும் குதிரையையும் தேரில் பூட்டி ஓட்டு. பயணம் செய்யும் வழியில் காட்டுச் செடிகொடிகள், நல்ல குணம் கொண்ட மகளிரின் இளமையழகு போன்ற அழகினையும், செல்வம் கொண்டவர் செல்வம் போன்ற செழிப்பினையும் பெற்றுப் பூத்து விளங்குகின்றன." (இவை கார் வரவை அறிவுறுத்துகின்றன. என் தலைவி காத்திருப்பாள். விரைவில் தேரை ஓட்டு.)

கருத்து

பாகனே! கார் வரவைக் காட்டக் காடுகளில் பூக்கள் பூத்துள்ளன. எனவே, விரைவில் தேரைச் செலுத்து.

குறிப்பு

காட்டு மலர்கள் இளமகளிரின் அழகினைக் கொண்டும், செல்வர்களின் செல்வப் பெருக்கினைப்போல மிகுதியாயும் பூத்திருந்தன.

சொற்பொருள்

1. இளையர் - இளைய வயதினர், ஏவலாளர்; ஈர்ங்கட்டு - கார்கால உடை; அயர - உடுத்தியிருக்க அயர்தல் - விரும்புதல்; உளை - தலையாட்டம்.
2. கலிமா - செருக்கினைக் கொண்ட குதிரை; நல்லார் - பெண்கள்.
3. இளநலம் - இளமை அழகு; வளம் - செல்வம்.
4. ஆக்கம் - பெருக்கு.

தலைவன் கூற்று

கார் நாற்பது 32 **மதுரைக் கண்ணங்கூத்தனார்**

திணை : முல்லை

கூற்று

வினை முற்றிய தலைமகன் பாகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள் ஈட்டுவதற்காகச் சென்ற தலைவன், தன் பணி முடிந்து திரும்பும்போது தன் பாகனிடம் சொன்னது.

கடாஅவுக பாக!தேர் காரோடக் கண்டே
கெடாஅப் புகழ்வேட்கைச் செல்வர் மனம்போல்
படாஅ மகிழ்வண்டு பாண்முரலும் கானம்
பிடாஅப் பெருந்தகை நன்கு.

தெளிவுரை

"பாகனே! அழியாத புகழை விரும்பும் செல்வரின் உள்ளத்தைப் போல மகிழ்ச்சி கொண்ட வண்டுகள் பிடவ மலர் அருகே சென்று இசை பாடும். மேகம் ஓடுவதைக் கண்டு நீ தேரை விரைவாய்ச் செலுத்து."

கருத்து

பாகனே! நாம் திரும்புவதாய்க் கூறிய காலம் இது! தேரை விரைவில் செலுத்து.

குறிப்பு

பிடவம் என்பது தழையால் புதர்போலச் செறிந்துள்ள குறிய சிறுமரம்; கார்ப் பருவத்தில் முல்லை நிலத்தில் கொத்தாய்ப் பூக்கும்.

சொற்பொருள்

1. கடாவுக - செலுத்துக; கார் - மேகம்; ஓடக் கண்டு - ஓடுவதைக் கண்டு.
2. கெடாஅ - அழியாத; வேட்கை - விரும்பும்.
3. படாஅ - தோன்றும்; பாண் - இசைப்பாட்டு; முரலும் - ஒலிக்கும், பாடும்; கானம் - காடு.
4. பிடாஅ - பிடவ மரம்.

தலைவன் கூற்று

கார் நாற்பது 33 **மதுரைக் கண்ணங்கூத்தனார்**

திணை : முல்லை

கூற்று

வினை முற்றிய தலைமகன் பாகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள் ஈட்டுவதற்காகச் சென்ற தலைவன், தன் பணி முடிந்து திரும்பும்போது தன் பாகனிடம் சொன்னது.

கடல்நீர் முகந்த கமஞ்சூல் எழிலி
குடமலை யாகத்துக் கொள்அப்பு இறைக்கும்
இடமென ஆங்கே குறிசெய்தேம் பேதை
மடமொழி எவ்வம் கெட.

தெளிவுரை

"கடல்நீரைப் பருகி நீரால் கருவுற்ற மேகம் தான் பருகி வந்த நீரை மேற்கு மலையில் பொழியும். அம்மழைக்காலமே நாம் திரும்பும் காலம் என்று நாம் பிரியும்போது தலைவியிடம் சொன்னேன். என் அன்பிற்கு உரிய தலைவியின் துன்பம் நீங்குமாறு நான் உடனே அவளைச் சென்றடைய வேண்டும்."

கருத்து

பாகனே! நாம் திரும்பிச் செல்ல வேண்டிய காலம் இது! தேரை விரைவில் செலுத்து.

சொற்பொருள்

1. முகந்த - பருகிய; கமம்சூல் - நீரால் கருவுற்ற; எழிலி - கருமேகம்.
2. குடமலை - மேற்கு மலை; ஆகம் - உடல் (நடுவில்); கொள் அப்பு - தான் கொண்டுள்ள நீர் (அப்பு - நீர்).
3. இடம் என - (அக் காலமே) திரும்பும் காலம் என்று; குறி - குறிப்பு.
4. மடமொழி - இளமையும் இனிய மொழியும் கொண்ட தலைவி; எவ்வம் - துன்பம்; கெட - நீங்க.

தலைவன் கூற்று

கார் நாற்பது 31 **மதுரைக் கண்ணங்கூத்தனார்**

திணை : முல்லை

கூற்று

வினை முற்றிய தலைமகன் பாகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள் ஈட்டுவதற்காகச் சென்ற தலைவன் தன் பணி முடிந்து திரும்பும்போது தன் பாகனிடம் சொன்னது.

கார்ச்சேண் இகந்த கரைமருங்கின் நீர்ச்சேர்ந்து
எருமை எழிலேறு எறிபவர் சூடிச்
செருமிகு மள்ளரில் செம்மாக்குஞ் செவ்வி
திருநுதற்கு யாம்செய் குறி.

தெளிவுரை

“எழுச்சியினைக் கொண்ட ஆண்எருமை கரைக்குப் பக்கத்தே இருக்கும் நீர் நிலையை அடைந்து, அங்கு எறியப்பட்ட செடி கொடிகளைச் சூடிக்கொண்டு போரில் சிறந்த வீரரைப்போல் இறுமாந்திருக்கும். நான் திரும்பி வருவதாய்த் தலைவியிடம் குறிப்பிட்டுச் சொன்ன பருவம் இதுவே ஆகும் (என்பதைப் பாகனே! அறிக.)”

கருத்து

பாகனே! தலைவியை விரைவில் சென்றடையத் தேரினை விரைந்து ஓட்டு.

சொற்பொருள்

1. கார் - மேகம்; சேண் இகந்த - நெடுந்தொலைவைக் கடந்த; மருங்கு - பக்கம்.
2. எருமை ஏறு - ஆண் எருமை; எறிபவர் - எறியப்பட்ட கொடிகள் (பவர் - கொடிக்கூட்டம்).
3. செருமிகு - போரில் சிறந்த; மள்ளர் - வீரர்; செம்மாக்கும் - இறுமாந்திருக்கும்; செவ்வி - பருவம்.
4. திருநுதற்கு - அழகிய நெற்றியைக் கொண்ட தலைவிக்கு; யாம் செய்ய - நான் திரும்பி வருவதாய்ச் சொன்ன; குறி - குறிப்பு.

தலைவன் கூற்று

கார் நாற்பது 19 **மதுரைக் கண்ணங்கூத்தனார்**

திணை : முல்லை

கூற்று

வினை முற்றிய தலைமகன் பாகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள் ஈட்டுவதற்காகச் சென்ற தலைவன், தன் பணி முடிந்து திரும்பும்போது தன் பாகனிடம் சொன்னது.

நாஞ்சில் வலவன் நிறம்போலப் பூஞ்சினைச்
செங்கால் மராஅம் தகைந்தன – பைங்கோல்
தொடிபொலி முன்கையாள் தோள்துணையா வேண்டி
நெடுஇடைச் சென்றதென் னெஞ்சு.

தெளிவுரை

“*கலப்பையை ஆயுதமாய்க் கொண்ட பலராமனின் வெண்மை யான நிறம்போல் பூங்கொம்பையும் சிறந்த அடிமரத்தையும்*

கொண்ட வெண்கடம்ப மரங்கள் மலர்ந்து அழகு பெற்றன. இவற்றைக் கண்டதும் அழகிய வளையல்களை அணிந்திருக்கும் என் தலைவியின் தோள்களைப் பற்றிய நினைவு எழுந்து விட்டது. நீண்ட காட்டுவழியைக் கடந்து என் நெஞ்சு அவளைத் தொட்டுவிட்டது. விரைவில் என் தலைவியை நேரில் காண வேகமாய்த் தேரை ஓட்டு."

கருத்து

பாகனே! என் தலைவியைக் காண வேண்டும்; வேகமாய்த் தேரை ஓட்டு.

விளக்கம்

பலராமன், கண்ணனுக்கு அண்ணன். தூய வெண்ணிறம் கொண்டவன்; கலப்பையை ஆயுதமாய்க் கொண்டவன். வெண் கடம்ப மரங்களின் மலர்கள் அவன் நிறத்தை ஒத்திருந்தன.

நெஞ்சால் தலைவியை அணைத்துவிட்டேன்; நேரில் அணைத்துக்கொள்ளப் பாகனே! விரைந்து ஓட்டு.

குறிப்பு

செங்கடம்பு, வெண்கடம்பு ஆகிய இரண்டற்கும் பொதுப்பெயர் மராஅம் என்பது. மராஅம் என்றாலும் மரவம் என்றாலும் ஒன்றே. மராஅம் என்பது இரண்டற்கும் பொதுவேயாயினும், இலக்கியங்களில் பெரும் பாலான இடங்களில் வெண்கடம்பையே குறிக்கிறது. கடம்பு என்னும் பெயர் செங்கடம்பைக் குறிக்கும்.

சொற்பொருள்

1. நாஞ்சில் - கலப்பை; வலவன் - வெற்றியாளன் (கலப்பையை ஆயுதமாய்க் கொண்ட பலராமன்); நிறம் - வெண்ணிறம்; சினை - கிளை.
2. மராஅம் - மரா மரம், வெண்கடம்பு மரம்; தகைதல் - அழகு பெறுதல்; பைங்கோல் - பசுமையான.
3. தொடிபொலி - வளையல்கள் அணிந்துள்ள.
4. நெடுஇடை - நீண்ட வழி.

தலைவன் கூற்று

கார் நாற்பது 21 **மதுரைக் கண்ணங்கூத்தனார்**

திணை : முல்லை

கூற்று

வினை முற்றிய தலைமகன் பாகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள் ஈட்டுவதற்காகச் சென்ற தலைவன் தன் பணி முடிந்து திரும்பும்போது தன் பாகனிடம் சொன்னது.

பொறிமாண் புனைதிண்தேர் போந்த வழியே
சிறுமுல்லைப் போதெல்லாம் செவ்வி – நறுநுதல்
செல்வ மழைத்தடங்கண் சின்மொழிப் பேதைவாய்
முள்எயிறு ஏய்ப்ப வடிந்து.

தெளிவுரை

“இயந்திரங்களால் அழகாகச் செய்யப்பட்ட வலிமையான நம் தேர் செல்லும் வழியெல்லாம் சிறிய முல்லைப்பூக்கள் பூத்துள்ளன. அழகிய நெற்றியையும், குளிர்ச்சி பொருந்திய கண்களையும், சில சொற்களையே பேசும் ஆற்றலையும் கொண்ட என் தலைவியின் பற்களைப் போன்ற வடிவுடைய முல்லை அரும்புகள் பரந்துள்ள காட்டின் வழியே, தலைவியைக் காணச் செல்வோம். (எனவே, தேரை விரைவாய்ச் செலுத்து.)”

கருத்து

முல்லைப்பூக்கள் தலைவியின் பற்களை நினைவூட்டுகின்றன. பாகனே! தேரை விரைந்து செலுத்து; அவளைக் காண வேண்டும்.

சொற்பொருள்

1. பொறிமாண் - இயந்திரங்களால் அழகாக; புனை - செய்யப்பட்ட; திண் - வலிமை; போந்த - செல்லும்.
2. போது - பூ; செவ்வி - அழகு.
3. மழைத் தடங்கண் - குளிர்ச்சி பொருந்திய பெரிய கண்; சின்மொழி - சில சொல் பேசும்.
4. முள் - கூரிய; எயிறு - பல்; ஏய்ப்ப - போன்ற, ஒத்திருக்கும்; வடிந்து - பரந்துள்ள.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 422 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

மீள்கின்ற தலைமகன் தன் தேர்ப்பாகன் கேட்பச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தான் விரும்பிச் சென்ற செயலை முடித்துத் திரும்புகின்ற தலைவன், வழியில் தேர்ப்பாகனிடம் சொல்லியது.

கடும்பரிப் புரவிக் கால்வல் நெடுந்தேர்
நெடுங்கொடி முல்லையொடு தளவுமலர் உதிர
விரையுபு கடைஇநாம் செல்லின்
நிரைவளை முன்கை வருந்தலோ இலளே!

தெளிவுரை

"விரைந்தோடக்கூடிய குதிரைகளை, வலிமையான சக்கரங் களைக் கொண்ட உயர்ந்த தேரில் பூட்டியோட்டும் பாகனே! நீண்ட முல்லைக்கொடியும் செம்முல்லைக்கொடியும் தம் மலர்களை உதிர்க்கும் வண்ணம் வண்டியினை விரைவாய் நாம் செலுத்திச் செல்வோமாயின், முன்கைகளில் அடுக்கடுக்காய் வளையல்களை அணிந்துள்ள என் காதலி வருத்தம் தவிர்வாள்."

கருத்து

தேர் விரைவாய்ச் சென்று சேர்ந்தால் தலைவி வருத்தம் நீங்குவாள்.

சொற்பொருள்

1. கடும்பரி - விரைந்து ஓடக்கூடிய; கால்வல் - வலிமையான சக்கரங்களைக் கொண்ட.
2. தளவு - செம்முல்லை.
3. விரையுபு - விரைவாய்; கடைஇ - செலுத்தி.
4. நிரைவளை - அடுக்கடுக்கான வளையல்; முன் கை - முன் கையைக் கொண்ட தலைவி; வருந்தலோ இலள் - வருத்தம் அடைய மாட்டாள்.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 425 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

வினைமுற்றி மீளும் தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது:

கூற்று விளக்கம்

காரியத்தைச் செய்து முடித்துத் திரும்பி வரும்போது, தலைவன் தன் தேர் ஓட்டியிடம் சொல்லியது.

புன்புறப் பேடை, சேவல் இன்புற
மன்னர் இயவரின் இரங்கும் கானம்
வல்லை நெடுந்தேர் கடவின்
அல்லல் அருநோய் ஒழித்தல்எமக்கு எளிதே.

தெளிவுரை

"*சிறிய வெளிச்சிறகினைக் கொண்ட பேடை, தன் அன்புக் குரிய சேவல் மகிழுமாறு மன்னர்களின் வாச்சியக்காரர்கள் எழுப்பும் இசையொலிபோல இன்னொலி எழுப்பும்! இக் காட்டின் வழியே உன்னுடைய நெடிய தேரினை, பாகனே! நீ விரைவாய்ச் செலுத்தினால், என் பிரிவால் வருந்தும் தலைவி யின் பிரிவுத் துயரத்தினைப் போக்குவது எளிது.*"

கருத்து

தேர் விரைந்து சென்றடைந்தால், தலைவியின் துயர் தீர்ப்பது எளிது.

சொற்பொருள்

1. புன்புறம் - சிறிய வெளிச்சிறகு; பேடை - பெட்டை.
2. மன்னர் இயவர் - மன்னரின் வாச்சியக்காரர்; இரங்கும் - இசை ஒலி எழுப்பும்.
3. வல்லை - விரைவாய்; கடவின் - செலுத்தினால்.
4. அல்லல் அருநோய் - தலைவியின் பிரிவுத்துன்பம்; ஒழித்தல் - நீக்குதல்.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 481 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

வினைமுற்றி மீண்ட தலைமகன் தேர்ப்பாகற்குக் கூறியது.

கூற்று விளக்கம்

செயலை முடித்துத் திரும்புகின்ற தலைவன் தன் தேர்ப்பாகனிடம் தேரை விரைவாய்ச் செலுத்துமாறு கூறியது.

சாய்இறைப் பணைத்தோள் அவ்வரி அல்குல்
சேய்இழை மாதரை உள்ளி நோய்விட
முள்ளிட்டு ஊர்மதி வலவ,நின்
புன்இயல் கலிமாப் பூண்ட தேரே.

தெளிவுரை

"*பாகனே! வளைந்த சந்தினைக் கொண்ட தோள்களையும், அழகிய வரிகளைக் கொண்ட அல்குலையும், சிவந்த அணிகலன் களையும் கொண்டவள், என் காதலி. அவளை நினைப்பதால் உண்டாகும் வருத்தம் தீர, பறவைபோல விரைவாய்ப் பறந்து ஓடும் உன் குதிரைகள்மீது தாற்றுக்கோலை மேலும் விரைந்து செலுத்து.*"

கருத்து

வலவ! என்னை எதிர்நோக்கிக் காத்திருக்கும் காதலியைச் சென்றடைய நீ உன் குதிரையை விரைவாய்ச் செலுத்து.

குறிப்பு

தேரில் பூட்டப்பட்டுள்ள குதிரைகள் விரைவாய்ச் செல்லும் இயல்பின என்றாலும், மேலும் விரைவாய்ச் செல்ல அவற்றின்மீது தாற்றுக்கோலை இட்டு முடுக்குமாறு கூறினான்.

சொற்பொருள்

1. சாய் - வளைந்த; இறை - சந்து; பணைத்தோள் - பருத்த தோள்; அவ்வரி - அழகிய வரிகள்.

2. சேயிழை - சிவந்த (செம்பொன்) அணிகலன் பூண்ட; மாதரை - அழகிய தலைவியை; உள்ளி - நினைந்து; நோய்விட - (பிரிவுத்) துன்பம் நீங்க.
3. முள் இட்டு - தாற்றுக்கோல் இட்டு; ஊர்மதி - செலுத்து; வலவ - தேர் ஓட்டுபவனே.
4. புள்இயல் - பறவை போல விரைந்து செல்லும்; கலி மா - கனைக்கும் குதிரை.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 482 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

வினைமுற்றி மீண்ட தலைமகன் தேர்ப்பாகற்குக் கூறியது.

கூற்று விளக்கம்

தான் விரும்பிய செயலை முடித்துத் திரும்புகின்ற தலைவன், தேர்ப்பாகனிடம் தேரை விரைவாய்ச் செலுத்துமாறு கூறியது.

தெரிஇழை அரிவைக்குப் பெருவிருந் தாக
வல்விரைந்து கடவுமதி பாக! வெள்வேல்
வென்றுஅடு தானை வேந்தனொடு
நாள்இடைச் சேப்பின் ஊழியின் நெடிதே .

தெளிவுரை

"பாகனே! வேலைத் தாங்கிப் பகைவரை வென்றழிக்கும் சேனையினைக் கொண்ட நம் வேந்தனொடு இடைவழியில் ஒருநாளே நான் தங்கினாலும், அது ஊழிக்காலத்தினும் நெடிதாய்த் தோன்றி என் காதலியை வருத்தும். தெரிந்தெடுத்த அணிகலன்களைக் கொண்ட அவளுக்குப் பெருவிருந்தாய் அமையுமாறு நான் சென்று சேர்வதற்கு உன் தேரினை மிகவும் விரைவாய்ச் செலுத்து!"

கருத்து

பாகனே! என்னை வரவேற்கக் காத்திருக்கும் காதலியைச் சென்றடையத் தேரினை நீ விரைந்து செலுத்து.

சொற்பொருள்

1. தெரியிழை - தெரிந்தெடுத்த அணிகலன்கள்; இழை - அணிகலன்.
2. வல்விரைந்து - மிகவும் விரைவாய்; கடவு - செலுத்து; வெள் வேல் - வெள்ளிய வேல்.
3. வென்றுஅடு - வென்று அழிக்கும்; தானை - சேனை.
4. நாள்இடை - இடையில் ஒரு நாள்; சேப்பின் - தங்கினால்; ஊழி - நெடுங்காலம், ஊழிக்காலம்; நெடிதே - நீண்டதாயுள்ளது.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 483 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

வினைமுற்றி மீண்ட தலைமகன் தேர்ப்பாகற்குக் கூறியது.

கூற்று விளக்கம்

தான் விரும்பிச் சென்ற செயலை முடித்துத் திரும்புகின்ற தலைவன், தேர்ப்பாகனிடம் தேரை விரைவாய்ச் செலுத்துமாறு கூறியது.

ஆறு வனப்பெய்த, அலர்தா யினவே
வேந்துவிட் டனனே மாவிரைந் தனவே
முன்உறக் கடவுமதி பாக
நள்நுதல் அரிவை தன்நலம் பெறவே.

தெளிவுரை

"வழி அழகு பெறுமாறு பூத்த மலர்கள் உதிர்ந்து கிடக்கின்றன; அரசனும் போர்த்தொழிலை விட்டுவிட்டான்; குதிரைகளும் விரைவாய்ச் செல்லுகின்றன; ஆதலின், நல்ல நெற்றியைக் கொண்ட தலைவியின் நலம் முழுவதையும் நான் விரைவில் பெறுமாறு, பாகனே! உன் தேரினை இன்னும் விரைவாய்த் தூண்டிச் செலுத்து."

கருத்து

பாகனே! அனைவருக்கும் முற்படச் செல்லுமாறு தேரினை விரையச் செலுத்து.

சொற்பொருள்

1. ஆறு - வழி; அலர் தாயின - பூக்கள் உதிர்ந்து கிடக்கின்றன.
2. வேந்து - அரசன்; விட்டனன் - போரினை நிறுத்தினான்; மா - குதிரைகள்.
3. முன்னுற - அனைவர்க்கும் முன்னே செல்லுமாறு.
4. அரிவை - பெண் (தலைவி).

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 484 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

வினைமுற்றி மீண்ட தலைமகன் தேர்ப்பாகற்குக் கூறியது.

கூற்று விளக்கம்

தான் மேற்கொண்ட செயலை முடித்துத் திரும்புகின்ற தலைவன், தேர்ப் பாகனிடம் தேரை விரைவாய்ச் செலுத்துமாறு கூறியது.

வேனில் நீங்கக் கார்மழை தலைஇக்
காடு,கவின் கொண்டன்று பொழுது பாடுசிறந்து
கடியக் கடவுமதி பாக
நெடிய நீடினம், நேரிழை மறந்தே.

தெளிவுரை

"*பாகனே! வேனிற்பருவம் நீங்குமாறு கார் கால மழை பெய்யத் தொடங்கியது. காடும் அழகினைக் கொண்டது. நேரிழையான தலைவியை மறந்து நானும் பிரிந்துறைதலை நெடுங்காலம் நீட்டித்து விட்டேன். அதனாலே உன் தேரினை மிகவும் விரைவாய்ச் செலுத்து.*"

கருத்து

நீண்ட காலம் பிரிந்திருக்கும் தலைவியைச் சென்றடையத் தேர் விரை வாய்ச் செல்லட்டும்.

சொற்பொருள்

1. வேனில் - வேனிற்பருவம்; கார்மழை - கார் காலப் பருவமழை.
2. கவின் - அழகு; கொண்டன்று - கொண்டது; பாடு - பெருமை.
3. கடிய - விரைவாய்; பாகன் - குதிரை ஓட்டுபவன்.
4. நெடிய - நெடுங்காலம்; நீடினம் : நீட்டித்திருந்துவிட்டோம்; நேரிழை - நேரிய அணிகலன்களை அணிந்தவள்.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 485 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

வினைமுற்றி மீண்ட தலைமகன் தேர்ப்பாகற்குக் கூறியது.

கூற்று விளக்கம்

தான் மேற்கொண்ட செயலை முடித்துத் திரும்புகின்ற தலைவன், தேர்ப் பாகனிடம் தேரை விரைவாய்ச் செலுத்துமாறு கூறியது.

அரும்படர் அவலம் அவளும் தீரப்
பெருந்தோள் நலம்வர யாமும் முயங்க
ஏமதி வலவ தேரே!
மாமருண்டு உகளும் மலர்அணிப் புறவே.

தெளிவுரை

"*பிரிவுத்துன்பத்தைத் தலைவியும் நீங்குவாள். அவள் தோள்களும் அழகு பெறும்; நானும் தழுவி மகிழ்வேன். அதனால் பாகனே! விலங்கினங்கள் மகிழ்ச்சியோடு துள்ளித் திரியும் மலர்கள் நிறைந்த முல்லைக்காட்டில் நமது தேரை விரையச் செலுத்து.*"

கருத்து

தலைவி தன் பிரிவுத்துன்பம் நீங்கி என்னைத் தழுவி மகிழத் தேரினை விரைந்து ஓட்டு.

சொற்பொருள்

1. அரும் படர் - பொறுத்தற்கு அரிய துன்பம்; அவலம் - துன்பம்.
2. பெருந்தோள் - பெரிய தோள்; நலம் வர - (இழந்த) அழகு (மீளவும்) பெற; முயங்க : தழுவ.
3. ஏமதி - செலுத்து.
4. மா - விலங்குகள், மான்கள்; மருண்டு - மயங்கி; உகளும் - துள்ளும், திரியும்; மலர்அணிப் புறவு - மலர் வகைகளாலே அழகு பெற்ற முல்லை நிலக் காடு.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 486 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

வினைமுற்றி மீண்ட தலைமகன் தேர்ப்பாகற்குக் கூறியது.

கூற்று விளக்கம்

தான் மேற்கொண்ட செயலை முடித்துத் திரும்புகின்ற தலைவன், தேர்ப் பாகனிடம் தேரை விரைவாய்ச் செலுத்துமாறு கூறியது.

பெரும்புன் மாலை ஆனாது நினைஇ
அரும்படர் உழத்தல் யாவது? என்றும்
புல்லி ஆற்றாப் புரையோள் காண
வள்புதெரிந்து ஊர்மதி வலவ!நின்
புள்இயல் கலிமாப் பூண்ட தேரே!

தெளிவுரை

"பாகனே! மிகவும் துன்பம் எழும் மாலைப்பொழுதில் இடைவிடாது என்னை நினைந்து பொறுத்தற்கரிய பிரிவுத்துயரத்தினை என் தலைவி இனிமேலும் அடைய வேண்டா. தழுவத் தழுவக் குறையாது பேரின்பம் தருபவள், அவள். அவளை இன்றே சென்று நான் காணும்படி பறவையைப் போல விரைந்து செல்லும் குதிரை பூண்ட தேரினை, வார்களின் வகை தெரிந்து பற்றி இன்னும் விரைவாய் ஓட்டு!"

கருத்து

என் காதலியை இன்றே காணும்படி தேரினை நன்றே செலுத்து.

சொற்பொருள்

1. பெரும் புன்மாலை - மிகவும் துன்பம் எழும் மாலை; ஆனாது - இடைவிடாது; நினைஇ - நினைந்து.
2. படர் - துன்பம்; உழத்தல் - அடைதல்; யாவது? - எதற்காக?
3. புல்லி - தழுவி; ஆற்றா - குறையாத; புரையோள் - உயர்நலம் வாய்ந்தோள்.
4 வள்பு - வார்; தெரிந்து - தெரிந்து பிடித்து இயக்கி; ஊர்மதி - ஓட்டு வாயாக.
5. புள்இயல் - பறவைபோலப் பறக்கும் இயல்பு கொண்ட; கலிமா - கனைக்கும் குதிரை.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 487 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

வினைமுற்றி மீண்ட தலைமகன் தேர்ப்பாகற்குக் கூறியது.

கூற்று விளக்கம்

தான் மேற்கொண்ட செயலை முடித்துத் திரும்புகின்ற தலைவன், தேர்ப் பாகனிடம் தேரை விரைவாய்ச் செலுத்துமாறு கூறியது.

இதுமன் பிரிந்தோர் உள்ளும் பொழுதே
செறிதொடி உள்ளம் உவப்ப
மதியுடை வலவ ஏமதி தேரே.

தெளிவுரை

"பிரிந்தவர் ஒருவரையொருவர் நினைக்கத் தூண்டும் கார் காலம் இது. கை நிறைய வளையல்களை அணிந்த காதலியின் உள்ளம் மகிழும்படியாக நாம் சென்று சேர வேண்டும். தேர் ஓட்டும் முறைகளை நன்று கற்றறிந்திருக்கும் பாகனே! தேரினை விரைவாய் ஓட்டு."

கருத்து

அவள் உள்ளம் உவப்ப விரைந்து செல்வோம்; ஓட்டு தேரை.

சொற்பொருள்

1. இதுமன் - இதுவே; உள்ளும் - நினைக்கும்.
2. செறி தொடி - செறிக்கப்படும் தொடி (தலைவி); உவப்ப - மகிழ.
3. மதி உடை - (குதிரையை நன்கு செலுத்துதற்குரிய) அறிவு கொண்ட; ஏமதி - செலுத்துவாயாக.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 488 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

வினைமுற்றி மீண்ட தலைமகன் தேர்ப்பாகற்குக் கூறியது.

கூற்று விளக்கம்

தான் மேற்கொண்ட செயலை முடித்துத் திரும்புகின்ற தலைவன், தேர்ப் பாகனிடம் தேரை விரைவாய்ச் செலுத்துமாறு கூறியது.

கருவி வானம் பெயல்தொடங் கின்றே
பெருவிறல் காதலி கருதும் பொழுதே!
விரியுளை நன்மாப் பூட்டிப்
பருவரல் தீரக் கடவுமதி தேரே!

தெளிவுரை

"*மின்னல், இடி முதலியவற்றைக் கொண்ட மேகங்கள் மழை பெய்யத் தொடங்கிவிட்டன. பெருமையில் சிறந்த காதலி என்னை நினைத்து ஏங்கும் கார் காலப்பொழுது இது. பாணனே! அவள் வருத்தம் தீர நான் சென்று சேர்வதற்கு உதவியாக விரிந்திருக்கும் பிடரி மயிரினைக் கொண்ட நல்ல குதிரைகளைப் பூட்டித் தேரினை விரையச் செலுத்து!*"

கருத்து

காதலி கார் காலத்தில் ஏங்காதிருக்கப் பாகனே, தேரை விரைந்து செலுத்து.

சொற்பொருள்

1. கருவி வானம் - மின்னல், இடி முதலிய தொகுதியைக் கொண்ட கார்கால மேகங்கள்; பெயல் தொடங்கின்று - பெய்யத் தொடங்கி விட்டன.
2. பெருவிறல் காதலி - மிகுந்த பெருமையினைக் கொண்ட காதலி; கருதும் - நினைக்கும்; பொழுதே - காலமாகும்.
3. விரிஉளை - விரிந்த பிடரி மயிர்; நன்மா - நல்ல குதிரை.
4. பருவரல் - துன்பம்.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 489 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

வினைமுற்றி மீண்ட தலைமகன் தேர்ப்பாகற்குக் கூறியது.

கூற்று விளக்கம்

தான் மேற்கொண்ட செயலை முடித்துத் திரும்புகின்ற தலைவன், தேர்ப் பாகனிடம் தேரை விரைவாய்ச் செலுத்துமாறு கூறியது.

அம்சிறை வண்டின் அரிஇனம் மொய்ப்ப
மென்புல முல்லை மலரும் மாலைப்
பையுள் நெஞ்சின் தையல் உவப்ப
நுண்புரி வன்கயிறு இயக்கி,நின்
வண்பரி நெடுந்தேர் கடவுமதி விரைந்தே.

தெளிவுரை

"*பாகனே! அழகான சிறகுகளைக் கொண்ட அரித்தெழும் ஓசையினைச் செய்கின்ற வண்டுக் கூட்டம் மொய்க்குமாறு,*

மென்னிலக் காட்டில் முல்லை முகைகள் மாலைக்காலத்திலே இதழ் விரிந்து மலர்ந்திருக்கும். அவ்வேளையிலே வருத்தமுற்ற நெஞ்சினளாய் வாடியிருக்கும் தலைவி உவப்படையுமாறு நான் சென்றடைய வேண்டும். அதற்காக, நுண்ணிய புரிகளைக் கொண்ட வன்மையான கயிற்றினை இயக்கி, வளமான குதிரைகள் பூட்டப்பெற்ற உன் நெடிய தேரினை விரையச் செலுத்து."

கருத்து

பாக! என் காதலியை மாலை நேரத்தில் மகிழ்ச்சிக்குள்ளாக்கும்படி நான் சென்று சேரத் தேரினை விரைந்து ஓட்டு.

சொற்பொருள்

1. அம்சிறை - அழகிய சிறகுகள்; அரிஇனம் - அழகிய வண்டுக்கூட்டம்.
2. மென்புலம் - மென்மையான காடு, முல்லை நிலம்.
3. பையுள் - வருத்தம்; தையல் - பெண், காதலி; உவப்ப - மகிழ.
4. நுண்புரி - நுண்ணிய புரிகள்; வன்கயிறு - வலிமையான கயிறு.
5. வண்பரி - வளமையான குதிரை.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 490 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

வினைமுற்றி மீண்ட தலைமகன் தேர்ப்பாகற்குக் கூறியது.

கூற்று விளக்கம்

தான் மேற்கொண்ட செயலை முடித்துத் திரும்புகின்ற தலைவன் தேர்ப் பாகனிடம் தேரை விரைவாய்ச் செலுத்துமாறு கூறியது.

அம்தீங் கிளவி தான்தர எம்வயின்
வந்தன்று மாதோ காரே; ஆவயின்
ஆய்தொடி அரும்படர் தீர
ஆய்மணி நெடுந்தேர் கடவுமதி விரைந்தே!

தெளிவுரை

"பாகனே! அழகும் இனிமையும் அமைந்த பேச்சினைக் கொண்ட என் காதலியை நான் சென்றடைவதற்குரிய கார்ப் பருவமும் இதோ தொடங்கிவிட்டது. அங்கே தலைவி பெருந் துயரத்தோடு காத்திருக்கிறாள். ஆய்ந்தெடுத்த அணிகலன்களை அணிந்துள்ள அவளது அரிய துன்பம் நீங்கும்படி, தெளிந்த மணிகள் விளங்குகின்ற நெடிய தேரினை விரைந்து செலுத்து."

கருத்து

அவள் துயரம் தீர விரைந்து செல்வோம்; தேரினை விரைந்து ஓட்டு.

சொற்பொருள்

1. அம் தீம் கிளவி - அழகிய இனிய பேச்சு.
2. வந்தன்று - வந்து சேர்ந்தது; கார் - கார்ப்பருவம்.
3. ஆய்தொடி - ஆய்ந்து அணியும் தொடி; அரும்படர் - பொறுத்தற்கரிய பிரிவுத்துன்பம்.
4. கடவு - செலுத்து.

தலைவன் கூற்று

குறுந்தொகை 250 **நாமலார் மகனார் இளங்கண்ணனார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பாகற்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

பொருளீட்டச் சென்ற தலைவன் அதனை ஈட்டித் திரும்பும்போது, தலைவியை விரைந்து காணும் அவாவினால், பாகனிடம் தேரினை விரைந்து செலுத்துமாறு கூறியது.

பரல்அவல் படுநீர் மாந்தி, துணையோடு,
இரலை நல்மான் நெறிமுதல் உகளும்
மாலை வாரா அளவை, கால்இயல்

கடுமாக் கடவுமதி பாக! நெடுநீர்ப்
பொருகயல் முரணிய உண்கண்
தெரிதீம் கிளவி தெருமரல் உயவே.

தெளிவுரை

"வலவ! ஆழமான பொய்கையில் ஒன்றோடொன்று போரிட்டுக் கொள்ளும் கயல்மீன்களைப் போல, ஒன்றை யொன்று போரிடுவது போன்ற மையுண்ட கண்களையும் ஆராய்ந்த இனிய சொற்களையும் கொண்டவள், தலைவி. அவள் துன்பத்தை நீக்க, பரல் கற்களையுடைய பள்ளங்களில் கிடக்கும் நீரைப் பருகி, அழகிய ஆண்மான் தன் பெண்மானுடன் விளை யாடும் மாலைப்பொழுது வருவதற்கு முன்னரே, காற்றைப் போல விரைந்து செல்லும் குதிரைகளை வேகமாய்ச் செலுத்து" என்று தலைவன் வலவனிடம் கூறுகிறான்.

கருத்து

மாலை தொடங்குமுன்னர்த் தலைவி இருக்கும் இடத்திற்குத் தேரினை விரைந்து செலுத்து!

விளக்கம்

'மாலை தொடங்கினால் தலைவி காமம் மிக்குத் துன்புறு வாள். இணைந்து விளையாடும் இந்த மான்களைப் போல, நாம் தலைவியோடு சேர்ந்து இன்புற வேண்டும்' என்னும் ஆசை மிகுதியால் தலைவன் பாகனிடம் குதிரையை விரைந்து செலுத்துமாறு சொல்கிறான்.

சொற்பொருள்

4. பாக! - பாகனே!
1. பரல் - பருக்கைக் கற்கள்; அவல் - பள்ளம்; படும் - கிடக்கும்; நீர் - நீரை; மாந்தி - குடித்து; துணையோடு - பெண்மானோடு,
2. இரலை நல்மான் - நல்ல ஆண்மான்; நெறிமுதல் - வழியிடத்திலே; உகளும் - தாவும்.
3. வாரா அளவை - வருவதன் முன்; கால் இயல் - காற்றின் தன்மை போல.
4. கடுமா - விரைந்து செல்லும் குதிரை; கடவு - செலுத்து; நெடு நீர்- ஆழமான பொய்கை.

5. பொருகயல் - ஒன்றோடொன்று போரிட்டுக்கொள்ளும் கயல் மீன்களோடு; முரணிய - ஒன்றோடொன்று போரிடுகின்ற.
6. தெரி - ஆராய்ந்த; தீம் - இனிய; கிளவி - சொற்கள் (கொண்ட தலைவி); தெருமரல் - துன்பத்திலிருந்து; உய - தப்புதற்கு.

தலைவன் கூற்று

அகநானூறு 234 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

வினை முடிந்த பின்னர், தன்னைக் காணத் துடித்திருக்கும் காதலியின் நினைவு மேலெழத் தலைவன் தன் பாகனிடம் தேரினை விரைந்து செலுத்துமாறு கூறியது.

காா்பயம் பொழிந்த நீர்திகழ் காலை,
நுண்அயிர் பரந்த தண்அயம் மருங்கின்,
நிரைபறை அன்னத்து அன்ன, விரைபரிப்
புல்உளைக் கலிமா மெல்லிதின் கொளீஇய,
வள்புஒருங்கு அமையப் பற்றி, முள்கிய
பல்கதிர் ஆழி மெல்வழி அறுப்ப,
கால்என மருள, ஏறி, நூல்இயல்
கண்நோக்கு ஒழிக்கும் பண்அமை நெடுந்தேர்
வல்விரைந்து ஊர்மதி – நல்வலம் பெறுந!–
ததர்தழை முனைஇய தெறிநடை மடப்பிணை
ஏறுபுணர் உவகைய ஊறுஇல உகள,
அம்சிறை வண்டின் மென்பறைத் தொழுதி
முல்லை நறுமலர்த் தாதுநயந்து ஊத,
எல்லை போகிய புல்லென் மாலை,
புறவுஅடைந் திருந்த உறைவுஇன் நல்ஊர்,
கழிபடர் உழந்த பனிவார் உண்கண்

நல்நிறம் பரந்த பசலையள்
மின்நேர் ஓதிப் பின்னுப்பிணி விடவே.

தெளிவுரை

பாகனே! தலைவி தொலைவில் நம் ஊரில் உள்ளாள். நான் திரும்புவதாய்ச் சொல்லிவந்த கார் காலம் தொடங்கிவிட்டது. அவள் தங்கியுள்ள ஊருக்குப் பக்கத்தில் முல்லைநிலத்தில் பெண் மான்கள் துள்ளி ஓடும்; அவை தழையை மிகுதியாய்த் தின்று ஆண்மான்களோடு சேர்க்கை பெற்று மகிழ்ச்சியாய்த் துள்ளித் திரியும். அழகிய சிறகுகளைக் கொண்ட வண்டுக்கூட்டம் முல்லை மலர்களைச் சுற்றி மகரந்தப்பொடியினை உண்டு இசை பாடும். சூரியன் மறைந்து பொலிவுற்றுள்ள மாலைக்காலத்தில் தலைவி துயரமே வடிவாய் அமர்ந்திருப்பாள். பிரிவுத் துன்பத் தால் மையுண்ட அவள் கண்கள் நீர் சொரியும்; மேனியில் பசலை படரும்; மின்னலை ஒத்த கூந்தலை எண்ணெயிட்டு வாரி ஒப்பனையும் செய்யாள். அதனால், கூந்தல் சிக்குண்டு கிடக்கும். அக்கூந்தல் மீண்டும் அழகு பெற வேண்டும். கார் காலத்து மழை பொழிந்ததால் எங்குப் பார்த்தாலும் வெள்ளம் நிரம்பி ஓடு கின்றது. குளங்களின் கரையில் கருமணல் பரவிக் கிடக்கிறது. வரிசையாய் அன்னங்கள் தாழ்வாகப் பறக்கின்றன. நம் குதிரைகளை மென்மையாய் அவை நோகாவண்ணம், ஆனால், காண்போர் பார்வைக்குக் காற்றெனச் செல்லுமாறு, விரை வாய்ச் செலுத்து.”

கருத்து

மாலை நேரத்தில் தலைவி என்னை நோக்கிக் காத்திருப்பாள். பாகனே! தேரினை விரைவாய்ச் செலுத்து.

விளக்கம்

பிரிந்து சென்று மீண்டு வருகின்ற தலைவன் தேர்ப்பாகனை நோக்கி, “வெற்றி மிக்க பாகனே! முல்லைநிலச் சிற்றூரில் பொலிவுற்றுள்ள மாலை நேரத்தில் என் தலைவி என்னை நினைந்து மிகவும் வருந்தியிருப்பாள். நீண்ட கண்ணும் நிறமிழந்த மேனியும் கொண்டுள்ள தலைவியின் கூந்தலில் உள்ள சிக்கினை

நீக்கவும் ஒப்பனை செய்யவும், நெடிய தேரை விரையச் செலுத்து" என்று கூறினான்.

சொற்பொருள்

1. கார் - மேகம்; பயம் பொழிந்த - பயனுள்ள மழையைப் பொழிந்ததால்; நீர் - வெள்ளம்.
2. அயிர் -மணல்; தண்அயம் - குளிர்ந்த நீர்நிலை.
3. நிரைபறை - வரிசையாய்ப் பறக்கும்; விரைபரி - விரைந்த செல வினைக் கொண்ட.
4. புல்உளை - புல்லிய பிடரி மயிர்; கலி - செருக்கு வாய்ந்த; மா - குதிரை; கொளீஇய - பூட்டிய.
5. வள்பு - கடிவாளம்; முள்கிய - பதிந்த.
6. பல்கதிர் - பல ஆரங்கள்; ஆழி - சக்கரம்.
7. கால் - காற்று; மருள - வியக்க; ஏறி - ஏறியமர்ந்து; நூல் இயல் - நூல் நெறிப்படி இயன்ற.
8. பண்அமை - நன்கு இயற்றப்பட்ட.
9. வல்விரைந்து - மிக விரைந்து; ஊர்மதி - செலுத்துக; வலம் - வெற்றி.
10. ததர் - நெருங்கிய; முனைஇய - (மிகத் தின்று) வெறுத்த; தெறிநடை - துள்ளு நடை.
11. ஏறு - ஆண்மான்; ஊறுஇல - இடையூறின்றி; உகள - துள்ளித் திரிய.
12. மென்பறை - மென்மையாய்ப் பறக்கும்; தொழுதி - கூட்டம்.
13. தாது - பூந்துகள்; நயந்து - விரும்பி; ஊத - உண்டு இசைக்கும்.
14. எல்லை - பகற்பொழுது.
15. புறவு - முல்லை நிலம்; உறைவு - தங்குதற்கு.
16. கழிபடர் - மிக்க துன்பம்; பனிவார் - நீர் சொரியும்.
17. நல்நிறம் - நல்ல மேனி.
18. மின் - மின்னல்; ஓதி - கூந்தல்; பின்னுப் பிணி - பின்னிக் கிடக்கும் சிக்கல்; விட - நீங்க.

தலைவன் கூற்று

அகநானூறு 344 **மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார்**

திணை : முல்லை

கூற்று

வினை முற்றிய தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

வினைவயிற் பிரிந்த தலைவன் தான் மேற்கொண்ட வினை முற்றுப் பெற்றமையால், தலைவியைக் காண விரும்பும் உள்ளத்தோடு தேர்ப் பாகனைத் தேரினை விரைந்து செலுத்துமாறு கூறியது.

வளமழை பொழிந்த வால்நிறக் களரி,
உளர்தரு தண்வளி உறுதொறும், நிலவுஎனத்
தொகுமுகை விரிந்த முடக்காற் பிடவின்,
வைஎர் வால்எயிற்று, ஒள்நுதல், மகளிர்
கைமாண் தோளி கடுப்ப, பையென,
மயிலினம் பயிலும் மரம்பயில் கானம்
எல்இடை உறாஅ அளவை, வல்லே,
கழல்ஒலி நாவின் தெண்மணி கறங்க,
நிழல்ஒளிப் பன்ன நிமிர்பரிப் புரவி
வயக்குஉறு கொடிஞ்சி பொலிய, வள்புஆய்ந்து,
இயக்குமதி- வாழியோ, கையுடை வலவ!-
பசப்புறு படர்அட வருந்திய
நயப்புஇன் காதலி நகைமுகம் பெறவே!

தெளிவுரை

தேர் செலுத்துவதில் வல்லமை கொண்ட பாகனே! நீ வாழ்க! பசலை படர்ந்து துன்பமுற்று வாடியிருக்கும் அன்புமிக்க தலைவியின் மகிழ்ச்சி பொருந்திய முகத்தினைக் காண, நீ உதவுக.

வளந்தரும் மழை பொழிந்த வெண்ணிறமான களர் நிலக் காட்டில் பிடா மரத்தில் குளிர் காற்று வீசுகின்ற போதெல்லாம், நிலவின் ஒளி என்று சொல்லுமாறு கூட்டமாய் அதன் அரும்புகள் விரியும். கூர்மையான பற்களையும், ஒளி பொருந்திய

நெற்றியினையும் கொண்ட, மகளிரது ஒழுங்குபட்ட 'தோளி' என்னும் விளையாட்டைப் போன்று மெல்லென மயிலினங்கள் கூடி ஆடி இயங்கும், மரங்கள் அடர்ந்த காட்டுவழி அது.

அவ்வழியில் இருள் சூழும் முன்னர் நீ உன் குதிரைகளை வயப்படுத்திக் கடிவாளத்தை ஆய்ந்து, மணிகள் ஒலிக்கக் கொடுஞ்சி மொட்டு அழகுடன் விளங்கும் தேரினை விரைந்து செலுத்து.

கருத்து

பணி முடிந்தது; தலைவியின் நகை முகத்தைக் காண வேண்டும். ஆதலால், பாக! தேரினை விரைவில் செலுத்து.

விளக்கம்

வினைமுற்றி மீண்டு வருகின்ற தலைவன் தேர்ப்பாகனிடம் சொல்லுகின்றான்: "வலவ! வாழ்க! அன்புமிக்க காதலியின் சிரிப்புடன் கூடிய முகத்தினைக் காண வேண்டும்; காட்டு வழியில் இருள் வந்து சேரும் முன்னர், விரைந்து குதிரைகளின் கடிவாளத்தை இழுத்துப் பிடித்து ஓட்டு" எனத் தன் ஆர்வ மிகுதி தோன்றக் கூறினான்.

குறிப்பு

தோளி - மகளிர் விளையாட்டுகளுள் ஒன்று; தோளை வீசி ஆடுதலின் 'தோளி' எனப்பட்டது என்பதைச் சிலப்பதிகார அரங்கேற்றுக்காதை உரையால் அறியலாம்.

சொற்பொருள்

1. வால் நிறம் - வெண்மை நிறம்; களரி - களர் நிலம்.
2. உளர்தரு - வீசுகின்ற; உறுதொறும் - மிகுந்தொறும், மோதும் போதும்.
3. தொகுமுகை - தொகுதியான அரும்புகள்; முடம் - வளைவு; பிடவு - பிடவ மரம்.
4. வை - கூரிய; ஏர் - அழகிய.
5. கைமாண் - கை வீசுதல் மாட்சியுற்ற; தோளி - ஒரு வகை வரிக்கூத்து; பையென - மெல்லென.
6. பயில் - நெருங்கிய.

7. எல் - இருள்.
9. நிழல் ஒளிப்பன்ன - ஒளி தழைத்தாற்போன்ற.
10. வயக்குஉறு - விளக்கமுறும்; கொடிஞ்சி - தேர் உறுப்புகளுள் ஒன்று; வள்பு - கடிவாளம்.
11. இயக்கு - செலுத்து, நடத்து; கையுடை - தேர் செலுத்துவதில் கை தேர்ந்த.
12. படர் - துன்பம்.
13. நயப்பு இன் - அன்புமிக்க இனிய; நகை - முறுவல், சிரிப்பு.

தலைவன் கூற்று

அகநானூறு 34 **மதுரை மருதனிளநாகனார்**

திணை : முல்லை

கூற்று

வினை முற்றிய தலைமகன், தேர்ப்பாகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

செயல் முற்றுப் பெற்று மீண்டு வரும் தலைவன் இடைவழியில் தேர்ப் பாகனை நோக்கி, 'என் இல்லத்திலுள்ள தலைவியின் உயர் நலத்தைப் பெற்று நுகர, தேரை விரைவில் செலுத்து' என்று கூறியது.

சிறுகரும் பிடவின் வெண்தலைக் குறும்புதல்
கண்ணியின் மலரும் தண்நறும் புறவில்,
தொடுதோல் கானவன் கவைபொறுத் தன்ன,
இருதிரி மருப்பின் அண்ணல் இரலை
செறிஇலைப் பதவின் செங்கோல் மென்குரல்
மறிஆடு மருங்கின் மடப்பிணை அருத்தி,
தெள்அறல் தழீஇய வார்மணல் அடைகரை,
மெல்கிடு கவுள துஞ்சுபுறம் காக்கும்
பெருந்தகைக்கு உடைந்த நெஞ்சம் ஏமுற,
செல்க தேரே– நல்வலம் பெறுந!–
பசைகொல் மெல்விரல், பெருந்தோள், புலைத்தி

துறைவிட் டன்ன தூமயிர் எகினம்
துணையொடு திளைக்கும் காப்புடை வரைப்பில்,
செந்தார்ப் பைங்கிளி முன்கை ஏந்தி,
இன்றுவரல் உரைமோ, சென்றிசினோர் திறத்துஎன
இல்லவர் அறிதல் அஞ்சி, மெல்லென
மழலை இன்சொல் பயிற்றும்
நாணுடை அரிவை மாண்நலம் பெறவே.

தெளிவுரை

"பாகனே! வினை முடித்து வீட்டிற்குச் செல்லுகின்றோம். பிடவ மரத்தின் உச்சிவரை வளர்ந்துள்ள புதரில் முல்லைப்பூ பூத்திருக்கும் காட்டுவழியில் ஆண்மான்கள் தம் குட்டிகளோடு கூடிய பெண்மான்களைப் பாதுகாத்திருக்கும்.

"செருப்பணிந்த வேடன் ஒருவன் கவைக்கோலைச் சுமப்பது போன்ற கிளைத்த தோற்றம் உடைய கொம்பைக் கொண்ட ஆண்மான், அங்குக் கிடைக்கும் தண்டோடு கூடிய அருகம் புல்லின் கொத்துகளைக் குட்டியோடிருக்கும் பெண்மானை உண்ணச் செய்து, அதனை அருகில் உள்ள மணற்கரையில் தூங்கச்செய்து, தான் பாதுகாத்து நிற்கும். அதுபோல, நாம் நம் தலைவியைப் பேண வேண்டும் என இங்குத் தனித்திருக்கும் என் நெஞ்சம் தவிக்கிறது. அந்நெஞ்சம் தளர்ச்சி நீங்கி இன்பம் கொள்ள நீ விரைந்து ஊர் சென்றடையத் தேரை ஓட்டு.

"ஆடைக்குக் கஞ்சி இடும் அழகிய விரலும் நல்ல தோளும் உடைய ஆடை வெளுப்பவள், துணிக்கு இட்ட கஞ்சியை நீர்த்துறையில் அலசி விட்டாள். பிழிந்து விட்ட அப்பசையின் நிறம் போன்ற இறகுகளைக் கொண்ட, அன்னங்கள் விளையாடும் கட்டுக்காவல் மிக்க வீட்டில் தலைவி இருக்கிறாள். அவள் முன்னங் கையில் ஏந்தியுள்ள கிளியிடம், 'இன்று தலைவன் வருவான் என்று கூறு' என யார்க்கும் தெரியாமல் மழலைமொழி பயிற்றுவித்து, அதனைத் திருப்பித் திருப்பிச் சொல்லக் கேட்டு நாணத்தோடு நிற்கும் அவள் மாண்பைக் காண, விரைந்து தேரைச் செலுத்து."

கருத்து

என்னை எதிர்பார்த்துக் காத்திருக்கும் தலைவியைச் சென்றடைந்து, நான் அவள் நலம் நுகர, பாகனே! தேரினை விரைவில் செலுத்து.

விளக்கம்

"பாக! முல்லை நிலத்தில் இரலை மான், தன் பெண்மானை உண்ணச்செய்யும்; அப்பெண்மான் ஆற்றங்கரையில் அசை போட்டுத் தூங்கும்போது, ஆண்மான் அதற்கு அருகே நின்று பாதுகாக்கும். அதைக் கண்டு நாம் நம் மனைவியை இவ்வாறு பாதுகாக்க இயலாமல் தனித்து இங்கு இருக்கிறோமே என உள்ளம் தளர்ச்சியடைகிறது. இம்மனத்தளர்ச்சி நீங்கத் தலைவியை நாம் உடனே சென்றடைய வேண்டும். தலைவி, அன்னம் தன் துணையோடு விளையாடும் இல்லத்தில் இருந்து, தான் வளர்க்கும் கிளியை முன் கையில் ஏந்தி, 'பிரிந்து சென்ற தலைவர் இன்று வருவார் என்னும் நல்ல சொல்லைச் சொல்' என்று அக்கிளியிடம் பல முறையும் நாணத்துடன் கேட்டுக் கொண்டிருப்பாள். அவளுடைய நலத்தை நுகர்ந்து இன்பம் பெற, பாகனே! நீ தேரினை விரைவில் செலுத்து" என வினை முற்றி மீண்டுவரும் தலைவன் இடைவழியில் தேர்ப்பாகனை நோக்கிச் சொல்லுகிறான்.

குறிப்பு

தலைவன் பிரிந்திருந்த காலத்தில், 'அவர் இன்று வருவார்' என்று கிளிக்குப் பயிற்றுவித்து, அவ்வாறே அஃது அடுத்து அடுத்துச் சொல் வதைக் காதாரக் கேட்டுத் தலைவி தன் ஆற்றாமையைக் குறைத்துக் கொள்ளும் பழக்கம் அன்று இருந்ததை இப்பாடல் வழி அறிய இயல்கிறது.

சொற்பொருள்

1. பிடவு - பிடவ மரம்; வெண்தலை - வெள்ளிய உச்சி.
2. கண்ணி - மாலை.
3. தொடுதோல் - செருப்பு; கவை - கவைக்கோல்; பொறுத்தல் - சுமத்தல்.
4. இரு - பெரிய; திரி - முறுக்குண்ட; மருப்பு - கொம்பு; அண்ணல் - பெருமை தங்கிய; இரலை - ஆண்மான்.
5. பதவு - அறுகம்புல்; மென்குரல் - மெல்லிய கொத்து.

6. மறி - குட்டி; மடப்பிணை - இளைய பெண்மான்; அருத்தி - உண்ணச் செய்து.
7. தெள்அறல் - தெளிந்த அறல் நீர்.
8. மெல்கிடும் - அசை போடும்; கவுள் - கன்னம்; துஞ்சுபுறம் - தூங்கும் இடம்.
9. பெருந்தகைக்கு - (இதுபோலப்) பெருந்தன்மையாய்க் (காக்க இயலவில்லையே); உடைந்த - தளர்ந்த; ஏமுற - இன்பமடைய.
10. வலம் - திறமை, வெற்றி.
11. பசைகொல் - (ஆடைகளில் தோய்ந்துள்ள) கஞ்சிப்பசையினைக் கரைத்துவிடும்; புலைத்தி - ஆடை துவைப்பவள்.
12. துறை - துணி துவைக்கும் துறை; விட்டன்ன - அலசிவிட்டது போல; எகினம் - அன்னப்பறவை.
13. துணையொடு - தன் பெடையுடன்; திளைக்கும் - விளையாடி மகிழும்; வரைப்பில் - வீட்டு எல்லைக்குள்.
14. செந்தார் - சிவந்த மாலை (அணிந்தது போன்ற கழுத்தினைக் கொண்ட).
15. உரைமோ - சொல்வாய்; சென்றிசினோர் - நம்மைப் பிரிந்து சென்ற தலைவர்.
16. இல்லவர் - வீட்டில் உள்ளவர்.
17. பயிற்றும் - சொல்.

தலைவன் கூற்று

அகநானூறு 64 ஆர்க்காடு கிழார் மகனார் வெள்ளைக் கண்ணத்தனார்

திணை : முல்லை

கூற்று

வினை முற்றி மீளும் தலைமகன், தேர்ப்பாகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியைப் பிரிந்து சென்று, செயல் முடித்து மீண்டு வரும் தலைவன், பாகனை நோக்கித் தலைவியைக் காண வேண்டித் தேரை விரைந்து செலுத்துமாறு சொல்லியது.

களையும் இடனால் – பாக! உளைஅணி!
உலகு கடப்பன்ன புள்இயல் கலிமா
வகைஅமை வனப்பின் வள்புநீ தெரியத்
தளவுப்பிணி அவிழ்ந்த தண்பதப் பெருவழி,
ஐதுஇலங்கு அகல்இலை நெய்கனி நோன்காழ்
வெண்வேல் இளையர் வீங்குபரி முடுகச்
செலவுநாம் அயர்ந்தனம் ஆயின், பெயல
கடுநீர் வரித்த செந்நில மருங்கின்,
விடுநெறி ஈர்மணல், வாரணம் சிதரப்
பாம்புஉறை புற்றத்து ஈர்ம்புறம் குத்தி,
மண்ணுடைக் கோட்ட அண்ணல் ஏஎறு
உடன்நிலை வேட்கையின் மடநாகு தழீஇ,
ஊர்வயின் பெயரும் பொழுதில், சேர்புஉடன்,
கன்றுபயிர் குரல, மன்றுநிறை புகுதரும்
ஆபூண் தெண்மணி ஐதுஇயம்பு இன்இசை
புலம்புகொள் மாலை கேட்டொறும்
கலங்கினள் உறைவோள் கையறு நிலையே.

தெளிவுரை

"பாக! உலகத்தையே தாண்டுவது போலப் பறக்கும் இயல் பினைக் கொண்ட பறவையினது வேகம் கொண்ட குதிரையைச் செலுத்தவல்ல கடிவாளத்தின் தன்மை அறிந்தவனே! முல்லை அரும்புகள் விரியும் குளிர்ந்த தன்மை கொண்ட பெரிய வழியில், இலை வடிவில் அமைந்த நெய் பூசப்பெற்ற வலிமையான வேலை ஏந்திய வீரர்கள் செல்லும் வேகத்தைவிட, நாம் விரைந்து பயணத்தை மேற்கொள்ள வேண்டும்.

"வழியில் செம்மண் நிலத்தில் தேர் செல்லும் வழியில் ஈர மணலைக் காட்டுக்கோழிகள் காலால் கிளறும். பாம்புப்புற்றைக் குத்தியதற்கு அடையாளமாய் மண்ணுடன் கூடிய கொம்பு களைக் கொண்ட காளை, தான் விரும்பும் இளைய பசுவைத் தழுவி ஊர் திரும்பும்; அதனுடன் திரும்பும் பசுக்கள், தங்கள் கன்றுகளை நினைத்து அழைக்கின்ற கனைப்புக் குரலோடு கழுத்தில் கட்டப்பட்டிருக்கும் மணிகள் மெல்ல ஒலிக்கத்

தொழுவத்துள் புகும். மாலை நேரத் தனிமையால் இம்மணி யொலி கேட்டு மயங்கி நிற்கும் தலைவியின் துயரத்தை நீக்க, நீ தேரை விரைந்து செலுத்தினால்தான் இயலும். அவள் துயரை நீக்க இதுவே தக்க காலம்."

கருத்து

மாலை நேரத்தில், தனிமையில் வருந்தியிருக்கும் தலைவியின் துயரை நீக்கப் பாகனே, நீ தேரை விரைவில் செலுத்து.

விளக்கம்

பிரிந்து சென்று வினை முடித்துத் திரும்பி வரும் தலைவன் தேர்ப்பாகனிடம் சொல்லியது:

"பாக! முல்லைநில வழியில் வேலேந்திய வீரர்கள் செல்லும் வேகத்தைவிட, நம் தேர் விரைந்து செல்ல வேண்டும். வழியில் காட்டுக்கோழிகள் ஈர மணலினைத் தம் காலால் கிளறிக் கொண்டிருக்கும். புற்றினைத் தன் கொம்பால் குத்தியதால் மண் படிந்த கொம்புடன் காளை தான் விரும்பும் இளைய பசுவுடன் செல்லும். ஆயர்கள் குழல் ஊதி வர, பசுக்கூட்டம் தம் கன்று களை நினைந்து பால் சுரக்கும் பெரிய மடிகளுடன் மாலையில் தொழுவத்தில் நுழையும். பசுக்களின் கழுத்துமணியொலி கேட்டுத் தனிமையில் தவிக்கும் தலைவியின் துயரை நீக்கப் பாகனே! தேரை விரைந்து செலுத்து."

சொற்பொருள்

1. களையும் இடன் - தலைவியின் துன்பத்தை நீக்கும் காலம் இதுவே; உளைஅணி - பிடரி மயிர் அணிந்த.
2. உலகு கடப்பு அன்ன - உலகத்தையே கடந்து செல்வது போன்ற; புள்இயல் - பறவையினை ஒத்த (வேகம் கொண்ட); கலிமா - செருக்குக் கொண்ட குதிரை.
3. வள்பு - கடிவாளம்; நீ தெரிய - நீ ஆராய்ந்து செலுத்த.
4. தளவு - செம்முல்லை; தண்பதம் - குளிர்ந்த தன்மை.
5. ஐதுஇலங்கு - அழகியதாய் விளங்கும்; அகல்இலை - அகன்ற இலை; நெய்கனி - எண்ணெய் பூசப்பெற்ற; நோன்காழ் - வலிய தண்டு.

6. வென்வேல் - வெற்றி பொருந்திய வேல்; இளையர் - ஏவலாளர்; வீங்குபரி - மிகுந்த வேகம் (பரி - வேகம்); முடுக - விரைய.
7. அயர்தல் - விரும்புதல்; பெயல - மழையினைக் கொண்ட.
8. வரித்த - வரிவரியாய் இழைத்த.
9. விடுநெறி - தேர் விடும் வழி; வாரணம் - காட்டுக்கோழி.
10. ஈர்ம்புறம் - ஈரமான வெளிப்புறம்.
11. கோட்ட - கொம்பினைக் கொண்ட; அண்ணல் ஏஎறு - தலைமை கொண்ட காளை.
12. உடனிலை - தன்னொடு உடன் நிற்கும்; மடநாகு - இளமையான பெண் பசு.
13. சேர்பு உடன் - யாவும் ஒருங்கு சேர்ந்து.
14. பயிர்தல் - அழைத்தல்; மன்று - தொழுவம், கொட்டில்.
15. ஐதுஇயம்பு - மெல்ல ஒலிக்கும்.
16. புலம்பு - தனிமை; கேட்டொறும் - கேட்கும் பொழுதெல்லாம்.
17. கையறு - செயலற்ற.

தலைவன் கூற்று

அகநானூறு 114 — **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : முல்லை

கூற்று

வினை முற்றி மீளும் தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தான் மேற்கொண்ட பணி காரணமாய்ப் பிரிந்து சென்ற தலைவன், தன் செயல் முடிந்தவுடன் தலைவியைக் காண விருப்பங்கொண்டவனாய்த் தேர்ப்பாகனிடம் தேரினை விரைவாய்ச் செலுத்துமாறு கூறியது.

'கேளாய், எல்ல! தோழி! வேலன்
வெறிஅயர் களத்துச் சிறுபல தாஅய
விரவுவீ உறைத்த ஈர்நறும் புறவின்,
உரவுக்கதிர் மழுங்கிய கல்சேர் ஞாயிறு,
அரவுநுங்கு மதியின், ஐயென மறையும்
சிறுபுன் மாலையும் உள்ளார், அவர்'என,
நப்புலந்து உறையும் எவ்வம் நீங்க,

நூல்அறி வலவ! கடவுமதி, உவக்காண்—
நெடுங்கொடி நுடங்கும் வான்தோய் புரிசை,
யாமம் கொள்பவர் நாட்டிய நளிசுடர்
வானக மீனின் விளங்கித் தோன்றும்,
அருங்கடிக் காப்பின், அஞ்சுவரு மூதூர்த்
திருநகர் அடங்கிய மாசுஇல் கற்பின்,
அரிமதர் மழைக்கண், அமைபுரை பணைத்தோள்,
அணங்குசால், அரிவையைக் காண்குவம்—
பொலம்படைக் கலிமாப் பூண்ட தேரே.

தெளிவுரை

"குதிரைக்குரிய இலக்கணத்தையெல்லாம் நன்கு அறிந்துள்ள தேர்ப்பாகனே!

"ஊரில் உள்ள தலைவி தன் தோழியிடம், 'தோழி! வெறியாடு களத்தில் பல்வேறு பூக்கள் பரந்து கிடப்பதுபோல, குளிர்ந்த நறிய முல்லை நிலத்தில், பூக்கள் உதிர்ந்து கிடக்கின்றன.

"இராகு என்னும் பாம்பு மெல்ல மெல்ல விழுங்கும்போது திங்கள் ஒளி மங்குவதுபோல, வலிமைமிக்க கதிரின் வெம்மை குறைந்து ஞாயிறு மேற்கு மலையைச் சேர்தலால் மாலையும் வந்து சேர்ந்தது.

" 'இந்த நேரத்திலும் நம் தலைவர் நம்மைக் காணவேண்டும் என நினையாதுள்ளாரே!' எனத் தலைவி நம்மை வெறுத்துக் கூறிக் கொண்டிருப்பாள்.

"அதோ பார், நெடிய கொடி அசையும் வானளாவிய பெரிய மதிலில், இரவுக் காவலர் ஏற்றி வைத்த விளக்குகள், வானில் தோன்றும் நட்சத்திரங்களைப் போலத் தோன்றுகின்றன. அச்சம் பொருந்திய காவல் காட்டினைக் கொண்ட பழமையான அந்த ஊரில், செல்வம் நிறைந்த வீட்டில் குற்றமற்ற கற்பினைக் கொண்ட என் தலைவி உள்ளாள். செவ்வரி படர்ந்த, மதர்த்த, குளிர்ச்சி பொருந்திய கண்களையும், மூங்கிலை ஒத்த பெருத்த தோளினையும் கொண்டு தெய்வம்போல் சிறந்தவளாகிய அவளைக் காண, பொன்னாலான சேணமணிந்து, செருக்கினைக்

கொண்டுள்ள உன் குதிரைகள் பூட்டப்பட்ட தேரினை அங்குச் செலுத்து.”

கருத்து

‘இன்னும் வரவில்லையே’ என என்னை எதிர்பார்த்துக் காத்திருக்கும் தலைவியைச் சென்றடைய, பாகனே! தேரினை விரைந்து செலுத்து.

விளக்கம்

“வலவ! வெயில் மறையும் மாலை வேளையில், பழமையான ஊரில், செல்வமிக்க மாளிகையில் தங்கியிருக்கும் என் தலைவி, ‘இந்த மாலை நேரத்திலும் தலைவர் நம்மை நினையாது உள்ளாரே’ என வருந்தித் தோழியிடம் கூறிக்கொண்டிருப்பாள். கற்பினைக் கொண்ட அவளை நான் காண வேண்டும். ஆதலின், தேரினை விரைந்து ஓட்டு” எனத் தலைவன் பாகனிடம் கூறுகிறான்.

சொற்பொருள்

1. எல்ல தோழி - ஏடி தோழி!; வேலன் - வெறியாடுபவன்.
2. வெறிஅயர் களம் - வெறியாட்டெடுக்கும் களம்.
3. உறைத்த - உதிர்ந்த.
4. உரவுக்கதிர் - வலிய கதிர்; மழுங்கிய - வெம்மை குறைந்த; கல் - (மேற்கு) மலை.
5. நுங்கு - விழுங்கும்; ஐஎன - மெல்லென.
6. உள்ளார் - நினையார்; அவர் - தலைவர்.
7. நப்புலந்து - என்னை வெறுத்து; எவ்வம் - துன்பம்.
8. நூல்அறி - குதிரை இலக்கண நூல் அறிந்து; கடவு - செலுத்து; உவக்காண்- உங்கே பார்.
9. நுடங்கும் - அசையும்; வான் - வானம்; புரிசை - கோட்டை.
10. கொள்பவர் - காத்திருப்பவர்; நாட்டிய - ஏற்றி வைத்த; நளிசுடர் - நெருங்கிய விளக்குகள்.
12. அருங்கடி - அணுகுதற்கரிய; கடி - மிக்க; காப்பு - காவல்; அஞ்சு வரும் - அச்சத்தினைத் தரும்; மூதூர் - பழமையான ஊர்.
14. அரி - செவ்வரி (படர்ந்த); மதர் - மதர்த்த; மழைக்கண் - குளிர்ச்சி பொருந்திய கண்; அமை - மூங்கில்; பணை - பெரிய.
15. அணங்குசால் - தெய்வம்போல் சிறந்த.
16. பொலம்படை - பொன் சேணம்; கலிமா - செருக்கினைக் கொண்ட குதிரை.

தலைவன் கூற்று

நற்றிணை 106 **தொண்டைமான் இளந்திரையன்**

திணை : நெய்தல்

கூற்று

பருவ வரவின்கண் பண்டு நிகழ்ந்ததோர் குறிப்புணர்ந்த தலைமகன், அதனைக் கண்டு தாங்ககில்லானாய் மீள்கின்றான், தேர்ப்பாகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

"பொருள் தேடச் சென்ற தலைவன் தன் பணியினை முடித்துத் திரும்புகின்றான். தன் மனைவியை விரைந்து சென்றடைய விரும்பிய அவன், தேர்ப்பாகனிடம், 'பாக! நான் பொருள் தேடப் பிரிவதைத் தலைவியிடம் கூறியபோது, அவளடைந்த வருத்தத்தை நீ அறிவாய். வருந்தியிருக்கும் அவளைத் தேற்ற வேண்டும்; அதனால் தேரினை விரைந்து செலுத்து' என்று தேர்ப்பாகனிடம் தலைவன் கூறியது.

அறிதலும் அறிதியோ பாக! பெருங்கடல்
எறிதிரை கொழீஇய எக்கர் வெறிகொள,
ஆடுவரி அலவன் ஓடுவயின் ஆற்றாது,
அசைஇஉள் ஒழிந்த வசைநீர் குறுமகட்கு
உயவினென் சென்றுயான் உள்நோய் உரைப்ப,
மறுமொழி பெயர்த்தல் ஆற்றாள், நறுமலர்
ஞாழல் அஞ்சினைத் தாழ்இணர் கொழுதி,
முறிதிமிர்ந்து உதிர்த்த கையள்,
அறிவுஅஞர் உறுவி ஆய்மட நிலையே?

தெளிவுரை

"*பாக! பெருங்கடலில் எழுந்து வீசுகின்ற அலைகள், கொண்டு வந்து குவிக்கும் புலால் நாற்றம் கமழும் மணல்மேடு; அங்குப் புள்ளிகள் பொருந்திய நண்டுகளைப் பிடிக்கச் சென்று, அவற்றோடு ஓட இயலாது அவ்விளையாட்டு முயற்சியைக் கைவிட்டனள், என் இளைய தலைவி. அவளிடம் வருத்தம் மிக்கவனாய்ச் சென்று நெருங்கி, நான் பொருள் தேடப் பிரிய எண்ணியுள்ளதைக் கூறினேன். அதற்கு மறுமொழி ஏதும் கூற*

இயலாதவளாய் மணம் மிக்க மலருடன் தாழ்ந்து விளங்கும் ஞாழல் மரத்தின் பூங்கொத்துகளின் இதழ்களைப் பிய்த்துப் பிசைந்து உதிர்த்தனள். அவ்வாறு அறிவு மயக்கமுற்றவளின் நிலையை நீ அறிவாய். வருந்தியிருக்கும் அவளை உடனே சென்று தேற்ற வேண்டுமன்றோ? ஆதலின், நீ தேரினை விரைவாய்ச் செலுத்து" என்று தலைவன் தேர்ப்பாகனிடம் கூறினான்.

கருத்து

"பாக! நான் பொருள் தேடப் பிரியவிருக்கும் எண்ணத்தைத் தலைவியிடம் சொல்லியபோது, அவள் மறுமொழி ஏதும் கூறாது, ஞாழல் மரப்பூங்கொத்தின் இதழ்களைப் பிய்த்துப் பிசைந்து வருந்தி நின்றதை நீ அறிவாய். அவள் வருத்தத்தைப் போக்கத் தேரினை நீ விரைந்து செலுத்து" எனப் பாகனிடம் தலைவன் கூறினான்.

சொற்பொருள்

1. அறிதலும் அறிதியோ - இதனை நீ நன்கு அறிவாயன்றோ?
2. எறிதிரை - மோதுகின்ற அலை; கொழீஇய - குவித்த; எக்கர் - மணல்மேடு; வெறி - மணம்.
3. ஆடு - விளையாடுகின்ற; வரி - வரிகளைக் கொண்ட; அலவன் - நண்டு; ஓடுவயின் - ஓடுமிடத்திற்கு.
4. அசைஇ - (அதனோடு ஓட இயலாமையால்) வருந்தி; உள் - உள்ளம்; ஒழிந்த - விளையாடலைக் கைவிட்டு; குறுமகள் - இளைய பெண், தலைவி.
5. உயவினென் - வருத்தமுற்று; உள்நோய் - பிரிதலாகிய மனநோய்.
6. பெயர்த்தல் - கூறுதல்; ஆற்றாள் - இயலாதவளாய்.
7. ஞாழல் - ஞாழல் மரம்; தாழ் இணர் - தாழ்ந்து தொங்கும் பூங்கொத்து; கொழுதி - பறித்து.
8. முறி - தளிர்; திமிர்தல் - வாரி இறைத்தல்.
9. அறிவுஅருர் - அறிவு மயக்கம்; உறுவி - உற்றனள்; மடநிலை - மடப்பம் செறிந்த நிலை.

தலைவன் கூற்று

நற்றிணை 142 **இடைக்காடனார்**

திணை : முல்லை

கூற்று

வினைமுற்றி மீளும் தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியை பிரிந்து சென்று வினை முடித்து மீளும் தலைவன் பாகனிடம், 'தலைவியின் ஊர் நெடுந்தொலைவில் காட்டுப்பகுதியில் உள்ளது. அவள் நம் வரவை எதிர்நோக்கியவண்ணம் இருப்பாள்; ஆதலின், தேரினை விரைவாய்ச் செலுத்து' என்று கூறியது.

வான்இகுபு சொரிந்த வயங்குபெயல் கடைநாள்,
பாணி கொண்ட பல்கால் மெல்உறி
ஞெலிகோல் கலப்பை அதனொடு சுருக்கிப்
பறிப்புறத்து இட்ட பால்நொடை இடையன்
நுண்பல் துவலை ஒருதிறம் நனைப்பத்
தண்டுகால் வைத்த ஒடுங்குநிலை மடிவிளி
சிறுதலைத் தொழுதி ஏமார்த்து அல்கும்
புறவி னதுவே, பொய்யா யாணர்,
அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்,
முல்லை சான்ற கற்பின்,
மெல்லியல் குறுமகள் உறைவின் ஊரே.

தெளிவுரை

"இரவில் விருந்து வந்தாலும் இன்முகத்துடன் வரவேற்பாள், என் தலைவி. அவள் நல்லறம் நாடும் கற்பும் மென்மையான இயல்பும் கொண்டவள்.

மழைக்கால் இறங்கிப் பொழிகின்ற மழைக் காலத்து இறுதி நாள்; பால் விலை கூறும் இடையன், தன் கையிலுள்ள பலவாகிய காலிட்டுப் பின்னிய உறியுடன் தீக்கடை கோல் முதலான கருவிகள் பலவற்றைக் கொண்டுள்ள தோற்பையையும் ஒன்றாய்ச் சேர்த்துச் சுருக்கிட்டுக் கட்டுவான்; அவற்றைப் பனையோலைப் பாயோடு சேர்த்துக் கட்டி முதுகின் ஒரு பகுதியில் சுமந்து

செல்வான். அவன் அங்ஙனம் செல்லும்போது சுமையின்றியுள்ள அவன் தோளின் இன்னொரு பகுதியை நுண்ணிய பல நீர்த்துளிகள் நனைக்கும்; அவன் தன் கையிலிருக்கும் கோலைத் தரையில் ஊன்றித் தன் ஒரு காலைத் தூக்கி அக்கோலின்மீது ஊன்றியவனாய் நாக்கை மடித்துச் சீட்டி ஒலியை எழுப்புவான். அவ்வொலி கேட்டுப் பல்வேறிடங்களில் மேய்ந்துகொண்டிருக்கும் ஆட்டுக் கூட்டம் அவனை நோக்கி வரும். (அவற்றையெல்லாம் ஓட்டிக்கொண்டு ஊர் திரும்புவான்.) அத்தகைய காட்டுப்பகுதியில் அமைந்துள்ளது, என் தலைவியின் ஊர். (பாகனே! அவ்வூரை நோக்கி உன் தேரினை விரைவாய்ச் செலுத்து)" என்கிறான், தலைவன்.

கருத்து

'பாக! வந்த வினை முடிந்து மீள்கிறோம். என் தலைவியின் ஊர் இடையர்கள் நிறைந்த காட்டுப்பகுதியில் உள்ளது என்பதை நீ அறிவாய். நாம் விரைவில் வீட்டை அடையுமாறு தேரினை விரைந்து செலுத்து' எனப் பாகனிடம் தலைவன் கூறினான்.

சொற்பொருள்

1. வான் இகுபு - வானம் கால் இறங்கி; சொரிந்த - மழை பெய்த; பெயல் கடை நாள் - மழைக்காலத்து இறுதி நாள்.
2. பாணி - கை; பல்கால் - பலவாகப் பின்னிய.
3. ஞெலிகோல் - தீக்கடைகோல்; கலப்பை - பண்டங்களைக் கொண்ட பை; அதளொடு சுருக்கி - தோற்பைக்குள் வைத்துச் சுருக்கிட்டுக் கட்டி.
4. பறிப்புறத்து இட்ட - பனையோலைப் பாயை முதுகில் இட்டுக் கொண்ட (பறி - பனை ஓலைப்பாய்); பால்நொடை - பால் விற்கும்.
5. துவலை - மழைத் துளிகள்; ஒருதிறம் - ஒரு பக்கம்.
6. தண்டு - கோல் : கால் வைத்த - (தண்டினைத் தரையில் ஊன்றி அதன்மேல் தன்) ஒருகாலை மடித்து ஊன்றி; மடிவிளி - நாக்கை மடித்துச் சீட்டி அடித்தல்.
7. சிறுதலைத் தொழுதி - சிறிய தலைகளைக் கொண்ட ஆட்டுக் கூட்டம்; ஏமார்த்து அல்கும் - மயங்கித் தங்கும்.
8. புறவு - முல்லை நிலம்; யாணர் - புது வருவாய்.
9. அல் - இரவு; உவக்கும் - மகிழும்.
11. உறைவுஇன் ஊர் - தங்குகின்ற இனிய ஊர்.

தலைவன் கூற்று

நற்றிணை 59 **கபிலர்**

திணை : முல்லை

கூற்று

வினைமுற்றி மீள்வான் தேர்ப்பாகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தான் விரும்பிய பணியை முடித்துத் தலைவன் ஊர் திரும்பிக் கொண்டிருக்கின்றான். தலைவி நெடுந்தொலைவில் முல்லைக் காட்டிடையே உள்ள வீட்டில் இருக்கிறாள். அவள் தன்னைக் காணாது வருந்தியிருப்பாள் என்பதைக் கூறித் தேரை விரைவாய் ஓட்டுமாறு தலைவன் தேர்ப்பாகனிடம் கூறியது.

உடும்பு கொலீஇ, வரிநுணல் அகழ்ந்து,
நெடுங்கோட்டுப் புற்றத்து ஈயல் கெண்டி,
எல்லுமுயல் எறிந்த வேட்டுவன், சுவல
பல்வேறு பண்டத் தொடைமறந்து, இல்லத்து
இருமடைக் கள்ளின் இன்களி செருக்கும்;
வன்புலக் காட்டுநாட் டதுவே அன்புகலந்து
நம்வயின் புரிந்த கொள்கையொடு, நெஞ்சத்து
உள்ளினள் உறைவோள் ஊரே; முல்லை
நுண்முகை அவிழ்ந்த புறவின்
பொறைதலை மணந்தன்று; உயவுமார் இனியே.

தெளிவுரை

"நம்மீது மிகுந்த அன்பு கொண்டு, நம்மை நன்கு புரிந்து கொண்ட கொள்கையுடன் என்றும் நம்மைத் தன் நெஞ்சிலே நினைந்து வாழும் தலைவியின் ஊர், வன்புலமாகிய முல்லைக் காட்டிடையே உள்ளது. அங்குள்ள வேட்டுவன் உடும்பைக் கொன்றும், மண்ணின் கீழுள்ள வரிகள் பொருந்திய தவளை யைத் தோண்டி எடுத்தும், நெடிய உச்சிகளைக் கொண்ட புற்றுகளை வெட்டி அங்கிருக்கும் ஈசல்களை வாரி எடுத்தும், பகலில் முயல் வேட்டை ஆடியுமிருப்பான். இரவில் தன் அழகிய தோளில் சுமந்துவந்த பல்வேறு வகைப் பண்டங்களையும்

பொதிந்து வைத்துள்ள மூட்டையோடு, ஏனைய கருவிகளையும் வீட்டின் ஒரு பக்கத்தே போடுவான். பின், மிகுதியாய்ப் பருகிய கள்ளின் மயக்கத்தில் வீழ்ந்து அவற்றை மறந்து கிடப்பான். முல்லை மலரின் நுண்ணிய அரும்புகள் காட்டிடையேயுள்ள அவ்வூரில் மலர்ந்திருக்கும். அத்தகைய ஊரில் இருந்தாலும், இதுவரை அவள் உள்ளம் நம் பிரிவை ஆற்றியிருந்தது. இன்று நாம் செல்லாவிடில், அவள் உள்ளம் மிகவும் வருந்தும். எனவே, பாகனே! தேரை விரைவாய்ச் செலுத்து."

கருத்து

தலைவி வாழும் ஊர் நெடுந்தொலைவில் காட்டிடையே உள்ளது. அங்குப் பொறுமையாய்க் காத்திருக்கும் தலைவி, குறித்த பருவத்தே என்னைக் காணாவிடில் மிகவும் துன்புறுவாள். அவள் பொறுமை இழக்குமுன் விரைந்து செல்ல வேண்டும். ஆதலின், தேரினை விரைவாய்ச் செலுத்து என்று தலைவன் தேர்ப்பாகனிடம் கூறினான்.

சொற்பொருள்

1. கொலீஇ - கொன்று; வரிநுணல் - வரிகளைக் கொண்ட தவளை.
2. கோடு - உச்சி; புற்றத்து - புற்றிலுள்ள; ஈயல் - ஈசல்; கெண்டி - தோண்டி.
3. எறிந்த - கொன்ற; எல் - இரவில்; சுவல - தோள்மேல்.
4. தொடை - (பல்வேறு பண்டங்களைத்) தொகுத்த மூட்டை, சுமை.
5. இருமடைக் கள் - பெரிதும் சமைத்துச் செய்யப்பெற்ற கள்; இன்கலி - இனிய கள் மயக்கம் (போதையில்); செருக்கும் - மகிழ்வான்.
6. வன்புலம் - வன் நிலமாகிய முல்லை நிலம்.
7. நம் வயின் - நம்மிடம்; புரிந்த கொள்கை - நன்கு புரிந்துகொண்ட கொள்கையுடன்.
8. உறைவோள் - வாழ்பவள்.
9. நுண்முகை - நுண்ணிய அரும்பு; அவிழ்ந்த - மலர்ந்த; புறவு - முல்லை நிலம்.
10. பொறை தலை மணந்தன்று - (இதுகாறும் நமது) பிரிவைப் பொறுத் திருந்தது; இனி உயவும் - (சேர வேண்டிய காலத்தில் சேராமையால்) இனி வருந்தும்.

தலைவன் கூற்று

அகநானூறு 284 **இடைக்காடனார்**

திணை : முல்லை

கூற்று

வினை முற்றிய தலைமகன், தேர்ப்பாகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தான் பிரிந்து சென்று மேற்கொண்ட பணியினை முடித்த தலைவன், தலைவியைக் காண விழையும் நெஞ்சத்துடன் தேர்ப்பாகனிடம் கூறியது.

சிறியிலை நெல்லிக் காய்கண் டன்ன,
குறுவிழிக் கண்ண கூரல்அம் குறுமுயல்,
முடந்தை வரகின் வீங்குபீள் அருந்துபு,
குடந்தைஅம் செவிய கோட்பவர் ஒடுங்கி,
இன்துயில் எழுந்து துணையொடு போகி,
முன்றில் சிறுநிறை, நீர்கண்டு உண்ணும்,
புன்புலம் தழீஇய பொறைமுதல் சிறுகுடி,
தினைக்கள் உண்ட தெறிகோல் மறவர்,
விசைத்த வில்லர் வேட்டம் போகி,
முல்லைப் படப்பைப் புல்வாய் கெண்டும்
காமர் புறவி னதுவே– காமம்
நம்மினும் தான்தலை மயங்கிய
அம்மா அரிவை உறைவு இன்ஊரே.

தெளிவுரை

"நெல்லிக்காயை ஒத்த குறுகிய விழியும் கூரிய மென்மையான மயிரும் கொண்ட அழகிய சிறிய முயல்கள், வளைந்து கிடக்கும் வரகின் பெருத்த குருத்துகளை உண்ணும். அழகிய குவிந்த செவிகளைக் கொண்ட அம்முயல்கள், காய்களைக் கொண்ட கொடிகளுக்குள்ளே புகுந்து கிடந்து உறங்கும்; பின்னர்த் தம் இனிய உறக்கத்தினின்றும் எழுந்து, துணையினொடும் சென்று, முல்லை நிலங்கள் சூழ்ந்த சிறிய குடியிருப்புகளிலேயுள்ள வீட்டு முற்றங்களில் உள்ள சிறிய சால்களில் உள்ள நீரைப் பருகும். அத்தகைய தன்மையினைக் கொண்டது, முல்லைக்காடு.

மேலும், தினையிலிருந்து வடித்த கள்ளினைக் குடித்த மறவர்கள், நாண் தெறித்து, அம்பு எய்யும் வில்லினராய்ச் சென்று வேட்டையாடி, முல்லை நிலத் தோட்டத்திலிருந்து கொண்டுவந்த மானினை அறுத்துத் தின்றுகொண்டிருப்பர். என் தலைவியின் ஊர் அத்தகைய அழகிய காட்டிடத்தேயுள்ளது."

கருத்து

நம்மினும் மிகுதியும் வருந்தியிருக்கும் தலைவியின் ஊர் முல்லைக் காட்டில் உள்ளது. (அவ்விடத்தினை நோக்கித் தேரினை விரைவாய்ச் செலுத்து எனத் தலைவன் கூறுகிறான்.)

விளக்கம்

தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் வினைமுற்றி மீண்டு வருகிறான். அப்போது பாகனை நோக்கி, 'வலவ! நம் தலைவி தங்கியிருக்கும் ஊர் முல்லைநிலக் காட்டிடத்திலே உள்ளது' என்று கூறி மனம் நெகிழ்கிறான்.

சொற்பொருள்

1. காய்கண்டன்ன - காயைக் காண்பதுபோல.
2. கூரல் - கூரிய மயிர்.
3. முடந்தை - வளைந்த; வரகு - ஒரு வகைப் பயிர்; வீங்கு - பருத்த; பீள் - குருத்து.
4. குடந்தை - வளைந்த; கோள்பவர் - காய்களைக் கொண்ட கொடிகள்.
5. துணையொடு போகி - (முயல்கள்) தத்தம் துணையொடு சென்று.
6. நிறை - நீர்ச்சால்.
7. பொறை - குன்று; முதல் - அடி.
8. தினைக்கள் - தினையிலிருந்து தயாரிக்கப்பட்ட கள்; தெறிகோல் - நாணினைத் தெறித்து விடுக்கும் அம்பு.
9. விசைத்த வில்லர் - வேகமாய் இழுத்துவிடும் வில்லினைக் கொண்டவர்; வேட்டம் - வேட்டை.
10. படப்பை - தோட்டம்; புல்வாய் - மான்; கெண்டும் - அறுத்துத் தின்னும்.
11. காமம் - விருப்பம் தரும்; புறவு - முல்லைக்காடு.
12. தலை மயங்கிய - பெரிதும் மயக்கமுற்ற.
13. உறைவு - தங்கும்.

தலைவன் கூற்று

அகநானூறு 274 **இடைக்காடனார்**

திணை : முல்லை

கூற்று

தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தன் வினை முடித்துத் தான் வீடு திரும்புவதற்கான காலம் வந்ததாக, தன் தேர்ப்பாகனிடம் கூறித் தன் வீட்டின் இருப்பிடத்தைத் தெரிவித்துத் தேரினை விரைவில் செலுத்தத் தூண்டியது.

இருவிசும்பு அதிர முழங்கி, அரநலிந்து,
இகுபெயல் அழிதுளி தலைஇ, வானம்
பருவம் செய்த பானாட் கங்குல்,
ஆடுதலைத் துருவின் தோடுஏ மார்ப்ப,
கடைகோல் சிறுதீ அடைய மாட்டி,
திண்கால் உறியன், பானையன், அதளன்,
நுண்பல் துவலை ஒருதிறம் நனைப்ப,
தண்டுகால் ஊன்றிய தனிநிலை இடையன்,
மடிவிடு வீளை கடிதுசென்று இசைப்ப,
தெறிமறி பார்க்கும் குறுநரி வெரீஇ,
முள்ளுடைக் குறுந்தூறு இரியப் போகும்
தண்நறும் புறவி னதுவே– நறுமலர்
முல்லை சான்ற கற்பின்
மெல்இயற் குறுமகள் உறைவுஇன் ஊரே.

தெளிவுரை

"*பாகனே! இது கார் காலம். தலைவி முல்லைப்பூவைச் சூடி, என் வரவை எதிர்பார்த்துக் காத்திருப்பாள். அவள் கற்பிற்கு உறைவிடம். நறுமண முல்லை மலரணிந்த, மென்மைத் தன்மை வாய்ந்த அவள் ஊர் குளிர்ச்சி பொருந்திய முல்லைக்காட்டில் உள்ளது. அக்காட்டில் புன்செய் நிலத்தில் எருவிற்காக ஆட்டுக்கிடையை நிறுத்தி இடையர் காவல் இருப்பர். மேகம் இடி இடித்துப் பாம்புகளை நடுங்கச்செய்து பெருமழை பெய்யும்*

நள்ளிரவிலும், இடையர் கருத்துடன் காவல் செய்வர். செம்மறி யாட்டுக்கிடையைக் காவல் செய்யும் ஓர் ஆயன், தன் வலிமை யான கோலின் ஒரு பக்கம் சோற்றுப்பானை வைக்கப்பட்ட உறியைத் தொங்கவிட்டு, மறு பக்கம் தோல் படுக்கையைக் கட்டியிருப்பான். மழை தன் ஒரு பக்கத்தை நனைக்கக் கோலைக் காலுடன் சார்த்திக்கொண்டு நிற்பான்; அருகில் தீக்கடை கோலால் தீ மூட்டி விறகை எரியவிட்டு, குளிர் காய்வான்; வாயை மடித்துச் சீழ்க்கை ஒலி நெடுந்தொலைவு கேட்குமாறு எழுப்பு வான். துள்ளு நடையைக் கொண்ட ஆட்டுக்குட்டிகளைக் கௌவிச் செல்லச் சமயம் பார்த்திருக்கும் குள்ளநரி, இடை யனின் சீழ்க்கை ஒலியைக் கேட்டு, முட்புதரில் விழுந்து எழுந்து அஞ்சி ஓடும்.

கருத்து

பாகனே! முல்லைநிலக் காட்டுக்குள் இருக்கும் தலைவியின் ஊருக்குத் தேரினை விரைந்து ஓட்டு.

விளக்கம்

தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன், வினை முடித்துத் திரும்பும்போது தேர்ப்பாகனிடம், 'பாக! முல்லை சான்ற கற்பினைக் கொண்ட மெல்லிய இயல்பு வாய்ந்த தலைவி வாழும் இனிய ஊர், குளிர்ச்சி பொருந்திய இனிய முல்லை நிலத்தில் உள்ளது' என்று இடம் சுட்டுகிறான்.

சொற்பொருள்

1. இருவிசும்பு - பரந்த ஆகாயம்; அர - அரவு - பாம்பு; நலிந்து - வருந்தி.
2. இகுபெயல் - சொரியும் மழை; அழிதுளி - மிக்க துளிகள்; தலைஇ - பொருந்தி.
3. பருவம் - கார்ப்பருவம்; பானாள் - பாதி இரவு.
4. துரு - செம்மறியாடு; தோடு - தொகுதி; ஏமார்ப்ப - பாதுகாவலைப் பெற.
5. கடைகோல் - தீயை உண்டாக்கக் கடையப் பயன்படும் கோல்; அடைய - தீயை வளர்க்க; அடைய (அதனை விறகில்) சேர்த்து.
6. திண்கால் உறியன் - வலிமையான கோலில் சோற்றுப்பானை வைக்கப்பட்ட உறியைக் கொண்டவன்; அதள் - தோல்; அதளன் - (மறுபக்கம்) தோல் படுக்கையைக் கட்டி வைத்திருப்பவன்.

7. ஒருதிறம் - ஒரு பக்கம்.
8. தண்டுகால் ஊன்றிய - கோலினைக் காலுடன் சேர்த்து ஊன்றிய.
9. மடிவிடு - வாய மடித்து எழுப்பும்; வீளை - சீழ்க்கை, சீட்டி; இசைப்ப - ஒலிக்க.
10. தெறிமறி - துள்ளு நடையைக் கொண்ட ஆட்டுக்குட்டி; குறுநரி - குள்ள நரி; வெரீஇ - அஞ்சி.
11. தூறு - புதர்; இரியப் போகும் - ஓடிப் போகும்.
12. புறவு - முல்லைக்காடு.
13. முல்லை சான்ற கற்பு - கற்புக்கு அடையாளமான முல்லைப்பூ.
14. உறைவுஇன் - தங்கியிருக்கும் இனிய.

தலைவன் கூற்று

அகநானூறு 94 **நல்லூர்ச் சிறுமேதாவியார்**

திணை : முல்லை

கூற்று

வினை முற்றி மீளும் தலைமகன், தேர்ப்பாகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியைப் பிரிந்து பொருளீட்டச் சென்ற தலைவன் பொருளீட்டித் திரும்புகையில் தலைவியைக் காணும் விருப்பத்தால், தேரை விரைந்து செலுத்துமாறு தேர்ப்பாகற்குச் சொல்லியது.

தேம்படு சிமயப் பாங்கர்ப் பம்பிய
குவைஇலை முசுண்டை வெண்பூக் குழைய,
வான்எனப் பூத்த பால்நாள் கங்குல்,
மறித்துரூஉத் தொகுத்த பறிப்புற இடையன்
தண்கமழ் முல்லை தோன்றியொடு விரைஇ,
வண்டுபடத் தொடுத்த நீர்வார் கண்ணியன்,
ஐதுபடு கொள்ளி அங்கை காய,
குறுநரி உளம்பும் கூர்இருள் நெடுவிளி
சிறுகண் பன்றிப் பெருநிரை கடிய,
முதைப்புனம் காவலர் நினைத்திருந்து ஊதும்
கருங்கோட்டு ஓசையொடு ஒருங்குவந்து இசைக்கும்

வன்புலக் காட்டு நாட்டதுவே– அன்புகலந்து
ஆர்வம் சிறந்த சாயல்,
இரும்பல் கூந்தல் திருந்திழை ஊரே!

தெளிவுரை

"தேனடையுள்ள மலை உச்சியில் முசுண்டையின் மலர்கள் நட்சத்திரம்போல் பூத்துக் குலுங்கும் இரவு; ஆட்டுக்குட்டி களைக் காக்கும் இடையன் முதுகில் மழையைத் தடுப்பதற்கு ஓலைப்பாயால் வளைத்து இயற்றிய குடலையைப் போர்த்துக் கொண்டு திரிவான்; அவன் மணமிக்க முல்லைப் பூக்களைத் தோன்றிப் பூக்களுடன் சேர்த்துக் கட்டித் தலையில் கண்ணி யாகச் சூடியிருப்பான்; கொள்ளிக்கட்டையில் எரியும் தீயில் கையைக் காட்டிக் குளிரைப் போக்கிக்கொள்வான்; ஆட்டுக் குட்டிகளைத் தின்ன வரும் ஓலமிடும் குள்ள நரிகளை ஓட்டு வதற்குப் பெருத்த ஓசையை எழுப்புவான்; அந்த ஓசை, தினைப் புனம் காப்போர் தினையைக் கவர்ந்து உண்ண வரும், பன்றிக் கூட்டத்தை ஓட்ட ஊதப்படும் கரிய ஊதுகொம்பின் ஓசையோடு ஒன்றுசேர்ந்து கேட்கும்; வன்னிலமாகிய அந்தக் காட்டில்தான் அன்பால் என் மனம் கலந்த ஆர்வம் கொண்ட தலைவியின் ஊர் உள்ளது."

கருத்து

அன்பால் மனம் கலந்த தலைவியின் ஊர் வன்னிலமாகிய காட்டில் உள்ளது.

விளக்கம்

"வானத்தில் மீன் பூத்ததுபோல வெண்மையான பூக்கள் விளங்கும் நள்ளிரவு; இடையன் முதுகில் ஓலைப்பாயோடு, ஆட்டுக் குட்டிகளைக் கவர வரும் குள்ளநரிகளை ஓட்டப் பேரொலி எழுப்புவான். அந்த ஒலி, தினைப்புனம் காப்போர் தினையைத் தின்ன வரும் பன்றிகளை விரட்ட ஊதப்படும் கொம் பொலியுடன் சேர்ந்து கேட்கும். இத்தகைய வன்னிலத்தில்தான் தலைவியின் ஊர் உள்ளது" எனத் தலைவன் தேர்ப்பாகனிடம் கூறுகிறான்.

சொற்பொருள்

1. தேம்படு - தேனடை பொருந்திய; சிமயம் - உச்சிமலை; பாங்கர் - பக்கம்; பம்பிய - செறிந்த.
2. குவை - குவிந்த; முசுண்டை - ஒருவகைக் கொடி; குழைதல் - தழைத்தல்.
3. வான்எனப் பூத்த - வானத்தில் மீன் பூத்ததுபோல; பால்நாள் - நடுஇரவு; கங்குல் - இருள்.
4. மறித்துரூஉ - செம்மறியாட்டுக்குட்டி (துரூஉ - செம்மறியாடு; மறி - குட்டி)
5. தோன்றி - தோன்றிப்பூ; விரைஇ - சேர்த்து.
6. பட - மொய்த்த; கண்ணியன் - தலைமாலைக் கொண்டவன்.
7. ஐதுபடு - மென்மை வாய்ந்த; அங்கை - அகங்கை; காய - வெப்பம் படும்படி செய்து கொள்ள.
8. உளம்பும் - அலைத்து ஓட்டும்; நெடுவிளி - நீண்ட ஒலி.
9. பெருநிரை - பெருங்கூட்டம்; கடிய - ஓட்ட.
10. முதைப்புனம் - முற்றிய தினைப்புனம்.
11. கருங்கோடு - கரிய ஊதுகொம்பு; இசைக்கும் - ஒலிக்கும்.
12. வன்புலம் - வன்நிலம் (குறிஞ்சியும் முல்லையும் கலந்தது).
13. சாயல் - மென்மைத் தன்மை.
14. இரும்பல் கூந்தல் - கரிய நெருங்கிய கூந்தல்.

தலைவன் கூற்று

அகநானூறு 134 **சீத்தலைச் சாத்தனார்**

திணை : முல்லை

கூற்று

வினை முற்றி மீண்ட தலைமகன், பாகற்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

தொழில் கருதித் தன் காதலியைப் பிரிந்து சென்ற தலைவன், அவ்வினையை முடித்துத் திரும்பும்போது தன் பாகனை நோக்கிக் கூறியது.

வானம் வாய்ப்பக் கவினி, கானம்
கமஞ்சூல் மாமழை கார்பயந்து இறுத்தென,
மணிமருள் பூவை அணிமலர் இடைஇடை,
செம்புற மூதாய் பரத்தலின், நன்பல
முல்லை வீகழல் தாஅய் வல்லோன்
செய்கை அன்ன செந்நிலப் புறவின்,
வாஅப் பாணி வயங்குதொழிற் கலிமாத்
தாஅத் தாள்இணை மெல்ல ஒதுங்க,
இடிமறந்து, ஏமதி– வலவ! குவிமுகை
வாழை வான்பூ ஊழுறுபு உதிர்ந்த
ஒழிகுலை அன்ன திரிமருப்பு ஏற்றொடு
கணைக்கால் அம்பிணைக் காமர் புணர்நிலை
கடுமான் தேர்ஒலி கேட்பின்,
நடுநாள் கூட்டம் ஆகலும் உண்டே.

தெளிவுரை

"கார் கால மேகம் பெய்து முல்லைக்காடு அழகு பெற்று விளங்குகிறது. நீலமணியை ஒத்த காயாம்பூக்கள் தரையில் கிடக்கின்றன. அவற்றின் இடையிடையே செந்நிற முதுகினைக் கொண்ட தம்பலப்பூச்சிகள் ஊர்ந்துகொண்டுள்ளன. இவற்றோடு முல்லைக்கொடிகள் அசையப் பூக்கள் கழன்று உதிர்ந்துள்ளன. இவை ஒன்றிணைந்த காட்சியால் முல்லை நிலம் ஓவியம் வல்ல ஒருவன் தீட்டிய சித்திரம்போலத் தோன்றுகின்றது.

"பாக! இவ்வழகிய நிலத்தில் தாவிச் செல்லும் குதிரைகளை ஓட்டிக் கொண்டிருக்கின்றாய். குதிரையின் காலடி ஒலி, தாள ஒலிபோலச் சீராய்க் கேட்டுக்கொண்டிருக்கிறது. காட்டில், வாழையின் பெரிய பூ மடல்கள் முறையாக முற்றி உதிர்ந்த பின், கடைசியாகத் தங்கும் குவிந்த மொட்டும் உதிர்ந்து நிலைத்துள்ள தண்டினைப் போன்ற முறுக்குண்ட கொம்புகளைக் கொண்ட ஆண்மான், திரண்ட கால்களைக் கொண்ட பெண்மானுடன் விருப்புடன் சேர்ந்திருக்கும் சேர்க்கை, குதிரையின் காலடி

கேட்டால் தொடராது (அஞ்சிப் பிரியும்). ஆதலால், (அம்மான் களின் சேர்க்கைக்கு இடையூறு இல்லாமல்) தாவிச் செல்லும் குதிரைகளைத் தாற்றுக்கோலால் குத்தாமல் மெல்லென ஓடச் செய்.”

கருத்து

“பாகனே! ஆண்மானும் பெண்மானும் கொள்ளும் இனச் சேர்க்கைக்குக் குதிரையின் காலடிச்சத்தம் இடையூறாய் இல்லாமல் மெல்லென ஓட்டு.”

விளக்கம்

“பாகனே! தாவித் தாள கதியில் ஒலியெழுப்பிச் செருக்கொடு செல்லும் குதிரைகள் பூட்டப்பட்ட தேரினை ஓட்டிக்கொண்டி ருக்கிறாய். முறுக்கிய கொம்பினைக் கொண்ட ஆண்மான், திரண்ட காலினைக் கொண்ட பெண்மானுடன் விருப்பமாய்ப் புணர்ந்துகொண்டிருக்கும். அவற்றின் இந்த இன்பப் புணர்ச்சி யைக் குதிரையின் காலடிச் சத்தம் கலைத்துவிடாமல் மெல்லென ஓட்டு.”

குறிப்பு

தலைவியைக் கூடுதற்காகத் தலைவன் விரைந்துகொண்டிருக்கிறான். அந்த வேளையிலும் மான்களின் புணர்ச்சிக்குத் தேரொலி இடையூறாய் இருக்கக் கூடாது என அருள் உள்ளத்தால் கூறுகின்றான்.

சொற்பொருள்

1. வானம் வாய்ப்ப - மழை தப்பாது பெய்தலால்; கவினி - அழகு பெற்று.
2. கமம் சூல் - நிறைந்த சூலினைக் கொண்ட; மாமழை - கரிய மேகங்கள்; கார்பயந்து - கார் காலத்தினைத் தோற்றுவித்து; இறுத்தென - தங்கிற்றாக.
3. மணி - நீலமணி; பூவை அணிமலர் - காயாம் பூவின் அழகிய மலர்கள்; இடையிடை - இடையிடையே.
4. செம்புற - மேற்புறம் சிவப்பாய் அமையப் பெற்ற; மூதாய் - தம்பலப் பூச்சிகள்; பரத்தல் - பரவியிருத்தல்.
5. முல்லை கழல் நன்பல - முல்லையினின்றும் உதிர்ந்த நல்ல பல; வீ - பூ; தாய் - பரவிக் கிடப்பது; வல்லோன் - ஓவியம் வரைவதில் வல்லவன்.

6. செய்கை அன்ன - ஓவியம் போன்ற; புறவு - முல்லை நிலம்.
7. வாஅ - தாவிச் செல்லும்; பாணி - தாளச்சீர்; வயங்கு - விளங்கும்; தொழில் - நடையினைக் கொண்ட; கலிமா - செருக்கினைக் கொண்ட குதிரை.
8. தாஅத் தாள்இணை - தாவிச் செல்லும் இணையொத்த கால்கள்; மெல்ல ஒதுங்க - (ஒலி கேட்காமல்) மெல்லச் செல்லும்படி.
9. இடிமறந்து - தாற்றுக்கோலால் குத்துதலை விட்டு; ஏமதி- செலுத்து; குவிமுகை - குவிந்த மொட்டு.
10. வாழை - வாழை மரத்தின்; வான்பூ - பெரிய மடல்கள்; ஊழ் உறுபு உதிர்ந்த - முறையாய் முற்றி உதிர்ந்த.
11. ஒழிகுலை அன்ன - பூவின் உதிர்ந்த (மடல்களும், எஞ்சிய குவிந்த மொட்டும்) நீங்கிய நிலையை ஒத்த; திரிமருப்பு - முறுக்குண்ட கொம்பு; ஏறு - ஆண்மான்.
12. கணைக்கால் - திரண்ட காலினைக் கொண்ட; அம் பிணை - அழகிய பெண்மான்; காமர் - விருப்பம் தரும் நிலையினதாகிய; புணர் நிலை - சேர்ந்திருக்கும் நிலை.
14. நடுநாள் கூட்டம் - நள்ளிரவின் புணர்ச்சி; ஆகலும் உண்டே - நிகழ்ந்திடவும் இயலுமா? (இயலாது ஆதலின் மானின் புணர்ச்சிக்கு இடையூறு இல்லாமல் காலடிச் சத்தம் எழாதவாறு குதிரையினை மெதுவாய் ஓட்டு).

தலைவன் கூற்று

அகநானூறு 9 **கல்லாடனார்**

திணை : பாலை

கூற்று

வினைமுற்றி மீண்ட தலைமகன், தேர்ப்பாகன் கேட்பச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தான் சென்ற வேலை முடிந்து மீண்டு வரும் தலைவன், விரைந்து செல்லும் தேரினை மேலும் விரைந்து செலுத்துமாறு, பாகன் கேட்குமாறு தன் நெஞ்சத்தினிடம் நயமாய்ச் சொல்லியது.

கொல்வினைப் பொலிந்த கூர்ங்குறும் புழுகின்,
வில்லோர் தூணி வீங்கப் பெய்த
அப்புநுனை ஏய்ப்ப அரும்பிய இருப்பை,
செப்புஅடர் அன்ன செங்குழை அகம்தோறும்,
இழுதின் அன்ன தீம்புழல் துய்வாய்
உழுதுகாண் துளைய ஆகி, ஆர்கழல்பு,
ஆலி வானின் காலொடு பாறி,
துப்பின் அன்ன செங்கோட்டு இயவின்,
நெய்த்தோர் மீமிசை நிணத்தின் பரிக்கும்
அத்தம் நண்ணிய அம்குடிச் சீறூர் –
கொடுநுண் ஓதி மகளிர் ஒக்கிய
தொடிமாண் உலக்கைத் தூண்டுஉரல் பாணி,
நெடுமால் வரைய குடிஞையோடு இரட்டும்
குன்றுபின் ஒழியப் போகி, உரம்துரந்து,
ஞாயிறு படினும், 'ஊர்சேய்த்து' எனாது,
துனைபரி துரக்கும் துஞ்சாச் செலவின்
எம்மினும், விரைந்துவல் எய்தி, பல்மாண்,
ஓங்கிய நல்இல் ஒருசிறை நிலைஇ,
பாங்கர்ப் பல்லி படுதொறும் பரவி,
கன்றுபுகு மாலை நின்றோள் எய்தி
கைகவியாச் சென்று, கண்புதையாக் குறுகி,
பிடிக்கை அன்ன பின்னகம் தீண்டி,
தொடிக்கை தைவரத் தோய்ந்தன்று கொல்லோ–
நாணொடு மிடைந்த கற்பின், வாள்நுதல்,
அம்தீம் கிளவிக் குறுமகள்
மென்தோள் பெறநசைஇச் சென்றஎன் நெஞ்சே?

தெளிவுரை

"*பாக! என்னைக் காட்டிலும் என் நெஞ்சம் தலைவியைச் சென்றடைய முற்பட்டுப் புறப்பட்டுச் சென்றுவிட்டது. அம்பறாத் தூணியில் உள்ள அம்பின் நுனியில் பொருத்தப் பட்டிருக்கும் குப்பியைப் போல, இலுப்பை மரத்தில் பஞ்சு போன்ற மெல்லிய இனிய துளையுள்ள பூக்கள் பூத்திருக்கும்;*

காற்றினால் அப்பூக்கள் காம்பினின்றும் கழன்று, வானின்று விழும் ஆலங்கட்டிபோலச் சிவந்த மேட்டுநிலத்தில் விழுந் திருக்கும். அக்காட்சி செந்நிறக் குருதியின்மீது வெண்ணிறக் கொழுப்புத் துண்டுகள் பொருந்தியிருப்பதை ஒக்கும். அக்காட்டு வழியேதான் தலைவியின் ஊருக்குச் செல்ல வேண்டும்.

"அவள் ஊரில், பூண் பொருந்திய உலக்கைகளை உயர்த்தி மகளிர் உரலைக் குற்றும்போது எழும் பாட்டொலி, மலைச் சாரலின் ஆந்தை ஒலியோடு மாறி மாறிக் கேட்கும்.

"இத்தகு ஒலிகள் கேட்கும் வழியில் சூரியன் மறைந்தாலும், ஊர், தொலைவில் உள்ளது என்று மனந்தளராமல் விரைந் தோடும் தேர்க்குதிரைகளைச் செலுத்திச் செல்லும் நம்மைக் காட்டிலும், முன்னரே என் நெஞ்சம் தலைவியைச் சென்ற டைந்து விட்டது.

"என் வரவை எதிர்நோக்கியிருக்கும் தலைவி, பல கட்டுகளைக் கொண்ட என் பெரிய இல்லத்தின் ஒரு பக்கத்தே நின்று பல்லி கூறும் நன்னிமித்தம் கேட்டு, அப்பல்லியைப் போற்றியபடி இருப்பாள். அத்தகையோளை நான் அவள் பின்னலைத் தொட்டு, கண்களைப் பொத்தி, வளையலணிந்த கைகளால் அவள் என்னைப் பற்றித் தழுவி அணைத்துக்கொள்ளும் நினைப்புடன் என் நெஞ்சம் அவளிடம் சென்றுவிட்டது."

கருத்து

தலைவி நன்னிமித்தம் கேட்டுப் பல்லியை வேண்டி நிற்பாள். தேர் சென்று வீட்டினைச் சேருமுன்னே, என் நெஞ்சு என் இல்லம் சென்று தலைவியைத் தழுவி நிற்கிறது.

விளக்கம்

தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன், தான் மேற்கொண்ட செயல் முடிந்து திரும்பும் பொழுது தேர்ப்பாகனை நோக்கிச் சொல்கிறான்:

"பாக! இன்சொல் கொண்ட என் தலைவியின் தோளினைப் பெற விரும்பிச் சென்ற என் நெஞ்சு மலைகள் பிற்பட விரைந்து

சென்றது; மாலைக் காலத்தில் தலைவி பல கட்டுகள் அமைந்த வீட்டில் ஒரு பக்கத்தே நின்று, பல்லி சொல்லுந்தோறும் என் வருகையை நினைந்து வழிபட்டு வருந்தி நிற்பாள். விரைந்து சென்ற என் நெஞ்சு, நான் செய்வதுபோலத் தலைவியின் பின்னலைத் தொட்டு, கை கவித்துச் சென்று, கண் புதைத்து, நெருங்கி அவள் வளைக்கை தன்னைத் தடவும்படி அணைத்ததோ?"

உவமைகள்

1. இலுப்பையின் அரும்பிற்கு அம்பின் நுனியில் பொருத்தப் பட்டிருக்கும் குப்பி உவமை.

2. செம்மண் மேட்டுநிலத்தில் வெண்ணிறமுள்ள இலுப்பைப் பூக்கள் விழுந்து கிடப்பது, குருதியின்மேல் வெண்மையான கொழுப்புத் துண்டுகள் படிந்திருப்பது போன்றிருக்கிறது.

குறிப்பு

பல்லி சொல் பலனை நம்பும் வழக்கம் அக்காலத்தில் இருந்திருக்கிறது.

சொற்பொருள்

1. கொல்வினை - கொல்லும் தொழில்; கூர் - கூரிய; குறும் - குறிய; புழுகு - அம்பின் தலையில் செறிக்கப்படும் குப்பி.
2. தூணி - அம்புக்கூடு; வீங்க - மிக.
3. அப்புநுனை - குப்பி நுனி; இருப்பை - இலுப்பை மரம்.
4. செப்புஅடர் - செப்புத்தகடு; செங்குழை - சிவந்த தளிர்; அகம் தோறும் - இடந்தோறும்.
5 இழுது - நெய், வெண்ணெய்; தீம்புழல் - இனிய துளையுள்ள; துய்வாய் - பூ (துய் - பஞ்சு).
6. உழுதுகாண்டல் - காம்பினை நீக்கிக் காணத்தக்க; (உழுதல் - நீக்குதல்); துளைய ஆகி - துளையைக் கொண்டவனாய்; ஆர் - ஆர்க்கு (இலைக்காம்பு); கழல்பு - கழன்று.
7. ஆலி - பனிக்கட்டி; காலொடு பாறி - காற்றால் சிதறுண்டு (கால் - காற்று).
8. துப்பு - பவளம்; செங்கோடு - சிவப்பான மேடு; இயவு - வழி.
9. நெய்த்தோர் - இரத்தம்; மீமிசை - மீது; நிணம் - கொழுப்பு; பரிக்கும் - பரந்திருக்கும்.
11. கொடு - வளைந்த; ஓக்கிய - எடுத்த, தூக்கிய.

12. தொடி - பூண்; மாண் - மாட்சிமைப்பட்ட; தூண்டுஉரல் - குற்றும் உரலி(னின்று எழும்); பாணி - ஒலி. (தூண்டு உரல் பாணி - உலக்கை யால் உரலில் குத்தும்போது பாடும் பாட்டு.)
13. நெடுமால் - நெடிய, பெரிய; வரை - மலை; குடிஞை - ஆந்தை; இரட்டும் - அலறும்.
14. உரம்துரந்து - வலிமையொடு செலுத்தி.
15 படினும் - மறையினும், சேய்த்து - தொலைவில் உள்ளது.
16. துனைபரி - விரைந்து செல்லும் குதிரை; துரக்கும் - மேலும் மேலும் விரைவுபடுத்துகின்ற; துஞ்சா - சோம்பலின்றி.
17. வல் எய்தி - விரைந்து சென்று.
18. ஒருசிறை - ஓரிடத்தில்; நிலைஇ - நின்று.
19. பாங்கர் - நாற்பக்கம்; படுதொறும் - ஒலிக்குந்தோறும்; பரவி - அதனைப் போற்றி.
20. எய்தி - அடைந்து.
21. கை கவியா - கையைக் கவித்து; புதையா - புதைத்து, மூடி.
22. பிடி - பெண்யானை; பின்னகம் - பின்னிய கூந்தல்.
23. தைவரல் - தடவுதல்; தோய்தல் - தழுவிக்கொள்ளுதல்.
24. மிடைதல் - கலத்தல்.
25 கிளவி - சொல்.
26. நசைஇ - விரும்பி.

தலைவன் கூற்று

அகநானூறு 351 **பொருந்தில் இளங்கீரனார்**

திணை : பாலை

கூற்று

பொருள் முற்றி மறுத்தராநின்ற தலைமகன், தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியைப் பிரிந்து போய்த் தான் வேண்டுமளவும் பொருள் ஈட்டி மீண்டு வருகின்றான்; வருபவன் இடைச்சுரத்தில் தலைவியை நினைத்து, அவளுக்காக இரங்கித் தன் நெஞ்சத்தினிடம் சொல்லியது.

வேற்றுநாட்டு உறையுள் விருப்புறப் பேணி,
பெறல்அருங் கேளிர் பின்வந்து விடுப்ப,
பொருள்அகப் படுத்த புகல்மலி நெஞ்சமொடு
குறைவினை முடித்த நிறைவுஇன் இயக்கம்–
அறிவுறூஉம் கொல்லோ தானே – கதிர்தெற,
சுழல்இலை உகுத்த கால்பொரு தாழ்சினை,
அழல்அசைந் தன்ன அம்குழைப் பொதும்பில்
புழல்வீ இருப்பைப் புன்காட்டு அத்தம்,
மறுதரல் உள்ளமொடு குறுகத் தோற்றிய,
செய்குறி ஆழி வைகல்தோறு, எண்ணி
எழுதுசுவர் நனைந்த அழுதுவார் மழைக்கண்
விலங்கிவீழ் அரிப்பனி பொலங்குழைத் தெறிப்ப,
திருந்துஇழை முன்கை அணல்அசைத்து ஊன்றி,
இருந்துஅணை மீது, பொருந்துழிக் கிடக்கை,
வருந்துதோள் பூசல் களையும் மருந்துஎன
உள்ளுதொறு படூஉம் பல்லி,
புள்ளுத்தொழுது உறைவி செவிமுத லானே.

தெளிவுரை

"நெஞ்சே! வேற்று நாட்டில் தங்கிப் பொருள் ஈட்டி வர வேண்டும் என்னும் குறிக்கோளுடன் சுற்றத்தார் பின்வந்து வழியனுப்பத் தலைவியைப் பிரிந்து வந்தேன்; பெரும் பொருளும் ஈட்டினேன்; இன்று செய்வினை முடித்த நிறைந்த உள்ளத்தோடு தலைவியைக் காணும் விருப்புடன் மீண்டு செல்லுகின்றேன்.

"ஞாயிறு சுட்டெரிக்க, கழன்ற இலைகள் உதிர்ந்து வீழுமாறு காற்றுச் சுழன்றடிக்க, தாழ்ந்த கிளைகளில் நெருப்புக் கப்புவிட்டு எரிந்தாற்போன்ற அழகிய தளிர்களையும், உள்துளை பொருந்திய பூக்களையும் கொண்ட இலுப்பை மரங்கள் செறிந்த பொலிவு பெற்ற காட்டுவழியினைக் கடந்து வந்துகொண்டிருக்கின்றேன்.

"எம் வருகை குறித்து எம் தலைவி சுவரில் சுழித்த செய் குறியாய வட்டத்தை நாள்தோறும் எண்ணி எண்ணிச் சுவர் நனையுமாறு அழுத கண்ணீர் காதிலணிந்த பொற்குழை

நனையுமாறு தெறித்து வீழும்; படுக்கையில் தலையணைமீது திருத்தமாய்ச் செய்யப்பெற்ற அணிகலன்களைக் கொண்ட முன் கையைக் கன்னத்தில் வைத்து ஊன்றியவண்ணம், வருந்தி, பின்பு படுக்கையில் சாய்ந்து, தோளின் மெலிவினைப் போக்கும் மருந்து 'தலைவனின் வருகை' என நினைக்கும் பொழுதெல்லாம் நிமித்தத்தைப் போற்றித் தொழுது வாழும் எம் தலைவியின் செவியில் கேட்குமாறு பல்லி ஒலித்து என் வரவினைச் சொல்லி அறிவுறுத்துமோ?"

கருத்து

நெஞ்சே! நம் வரவை, பல்லி நன்னிமித்தம் சொல்லித் தலைவியை ஆற்றுவிக்குமோ?

விளக்கம்

'நெஞ்சே! பொருள் தேடத் தலைவியைப் பிரிந்து வந்த நான் பொருளை முழுமையாய் ஈட்டித் திரும்பிக்கொண்டிருக்கிறேன். வீட்டினில் மனைவி, நிமித்தம் கூறும் புள்ளினங்களைத் தொழுது வேண்டிக்கொண்டிருப்பாள். அவள் செவியில் விழுமாறு, பல்லி ஒலித்து நன்னிமித்தமாய் என் வரவை அறி வுறுத்துமோ?' எனத் தலைவன் தன் நெஞ்சிற்குச் சொல்லு கிறான்.

சொற்பொருள்

1. உறையுள் - தங்குதல்; பேணி - குறிக்கொண்டு.
2. கேளிர் - சுற்றத்தார்; பின்வந்து - பின்னே வந்து; விடுப்ப - விடைதர.
3. அகப்படுத்த - ஈட்ட; புகல் மலி - விருப்பம் மிக்க (புகல் - விருப்பம்).
4. குறைவினை முடித்த - செய்வினை முடித்த; நிறைவு - (உள்ள) நிறைவு(டன் கூடிய); இன் இயக்கம் - இனிய செலவு.
5. அறிவுறூஉம் கொல்லோ - அறிவுறுத்துமோ; கதிர் - சூரியன்; தெற - வெதுப்ப.
6. சுழல் இலை - சுழன்ற இலைகளை; கால் - காற்று; தாழ்சினை - தாழ்ந்த கிளை.
7. அழல் - தீ; அசைந்து அன்ன - கப்பு விட்டாற்போன்ற; குழை - தளிர்; பொதும்பு - சோலை.

8. புழல் வீ - உள் துளையைக் கொண்ட பூ; இருப்பை - ஒருவகை மரம்; புன் காடு - பொலிவுற்ற காடு.
9. மறுதரல் - மீளுதல்; குறுக - வந்துகொண்டிருக்க; தோற்றிய - சுழித்த.
10. செய்குறி ஆழி - செய்குறியாய் (சுழித்த) வட்டம்; வைகல் தோறும் - நாள்தோறும்.
11. எழுது சுவர் - எழுதப்பட்ட சுவர்; அழுது - அழுதலால்; வார் - நீண்ட.
12. விலங்கிவீழ் - விலகி விழும்; அரிப்பனி - மெல்லிய கண்ணீர்த்துளிகள்; பொலங்குழை - பொன்னாலான காதணி; தெறிப்ப - தெறித்து விழ.
13. அணல் - கவுள்; அசைத்து - பொருந்த வைத்து.
14. அணை - தலையணை; இருந்து - (மீது) கிடந்து; கிடக்கை பொருந்துழி - படுக்கையில் பொருந்தியபோது (அணைமீது இருந்து கிடக்கை பொருந்துழி என மாற்றுக.)
15. பூசல் - வருத்தம்; களையும் - போக்கும்.
16. படூஉம் - ஒலிக்கும்.
17. புள்ளுத்தொழுது - புள் நிமித்தம் கேட்டு; உறைவி - வாழ்ந்திருக்கும் தலைவி.

தலைவன் கூற்று

நற்றிணை 221 **இளவேட்டனார்**

திணை : முல்லை

கூற்று

வினைமுற்றி மறுத்தராநின்றா தலைமகன் பாகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

“பாகனே! பொருளீட்டச் சென்ற பணி முடிந்து திரும்பிக்கொண்டிருக் கிறோம். தலைவி காலையில் துயிலும் குழந்தையை, ‘எந்தையே! வருக!’ என்று கூவி எழுப்பும் மொழியை நாம் கேட்டு மகிழும்வண்ணம் தேரை விரைவாய்ச் செலுத்து” என்று தலைவன் பாகனிடம் கூறியது.

மணிகண் டன்ன மாநிறக் கருவிளை
ஒண்பூந் தோன்றியொடு தண்புதல் அணிய,
பொன்தொடர்ந் தன்ன தகைய நன்மலர்க்

கொன்றை ஒள்இணர் கோடுதொறும் தூங்க,
வம்புவிரிந் தன்ன செம்புலப் புறவில்,
நீர்அணிப் பெருவழி நீள்இடைப் போழச்
செல்க பாகநின் செய்வினை நெடுந்தேர்;
விருந்து விருப்புறூஉம் பெருந்தோட் குறுமகள்,
மின்ஒளிர் அவிர்இழை நல்நகர் விளங்க,
நடைநாள் செய்த நவிலாச் சீறடிப்
பூங்கண் புதல்வன் உறங்குவயின் ஒல்கி,
'வந்தீக எந்தை!' என்னும்
அம்தீம் கிளவி கேட்கம் நாமே.

தெளிவுரை

"பாகனே! என் காதலி, வரும் விருந்தினரை விரும்பி ஏற்றுக் கொள்பவள்; பெரிய மென்மையான தோளினைக் கொண்டவள்; மின்னல் போலும் ஒளிவிட்டுத் திகழ்கின்ற அணிகலன்களை அணிந்துள்ளவள்; நம் நல்ல மாளிகை பொலிவு பெற விளங்கிக் கொண்டிருப்பவள்; நடந்தறியாத மென்மையான பாதங்களையும், பூப்போன்ற கண்களையும் கொண்ட புதல்வன் தூங்குமிடத்திற்கு விடியற்பொழுதில் சென்று, 'எந்தை வருக' என அவனை அழைத்து எழுப்புவாள். அந்த அழகிய இனிய குரலை நானும் கேட்க வேண்டும்.

"நீலமணி போன்ற கரிய நிறம் கொண்ட காக்கணங்கொடி, ஒளியுடன் விளங்கும் காந்தளுடன் மலர்ந்து குளிர்ச்சி பொருந்திய புதல்தோறும் அழகினைத் தோற்றுவிக்கும். பொற்காசினைத் தொங்கவிட்டதுபோலச் சரக்கொன்றையின் பூங்கொத்துகள் கிளைதோறும் தொங்கும். இத்தகைய செந்நிறம் கொண்ட முல்லை நிலத்தில் நீர் அமையப்பெற்ற பெரிய வழியில் சுவடு பதியக் கைவினைச் சிறப்பினைக் கொண்ட நெடிய உன் தேர் விரைந்து செல்லட்டும்."

கருத்து

தலைவி புதல்வனைத் துயில் எழுப்பும் இனிய குரலை நாளைக் காலையில் நான் கேட்கும்படியாகத் தேரினை விரைவில் செலுத்து.

விளக்கம்

"பாக! விடியற்காலையில் துவளும் நடையினைக் கொண்டவளாய்த் தலைவி வந்து புதல்வனை எழுப்புவாள். அப்போது அவளை நான் கண்டிடவும், அவளது இனிய குரலைக் கேட்டிடவும் தேரை விரைவில் செலுத்து" என்று பாகனிடம் தலைவன் கூறினான்.

சொற்பொருள்

1. மணி - நீலமணி; மா - கரிய.
2. தோன்றி - காந்தள்; அணிய - அழகினைச் செய்ய.
3. பொன் - பொன் காசுகள்.
4. ஒள் இணர் - ஒளி பொருந்திய பூங்கொத்துகள்; கோடு - கிளை; தூங்க - தொங்க.
5. வம்பு - புதுமணம்; செம்புலம் - செம்மண் நிலம்; புறவு - முல்லை நிலம்.
6. நீர் அணி - நீர் நிறைந்த; நீள்இடை - நீண்ட வழி; போழ - சுவடு உண்டாகும்படி பிளந்து.
7. செய்வினை - தொழில் சிறப்பு வாய்ந்த.
9. மின் ஒளிர் - மின்னல் போலும் ஒளிர்கின்ற; நல்நகர் - நல்ல மாளிகை.
10. நடைநாள் செய்த - நடக்கத் தொடங்கி; நவிலா - பழகியறியாத, தரையில் பொருத்தி நடந்து அறியாத; சீறடி - சிறிய அடிகள்.
11. பூங்கண் - பூவைப் போன்ற கண்; உறங்குவயின் - துயிலும்போது; ஒல்கி - நுடங்கி நடந்து வந்து.
12. வந்தீக - வருக; என்னும் - என்று அழைக்கும்.
13. அம்தீம் கிளவி - அழகிய இனிய பேச்சு; கேட்கம் நாமே - நாம் கேட்க வேண்டும்.

கூற்று

வினைமுற்றி மீள்வான் தேர்ப் பாகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருளீட்டச் சென்ற பணி முடிந்தது. வீட்டில் தலைவி வருந்தியிருப்பாளே என்ற கவலை அவனை வாட்டுகிறது. அவளைக் காணப் பாகனை விரைவாய்த் தேரைச் செலுத்துமாறு அவன் கூறியது.

செந்நிலப் புறவின் புன்மயிர்ப் புருவை
பாடுஇன் தெள்மணித் தோடுதலைப் பெயரக்,
கான முல்லைக் கயவாய் அலரி
பார்ப்பன மகளிர் சாரற்புறத்து அணிய,
கல்சுடர் சேரும் கதிர்மாய் மாலைப்
புல்லென் வறுமனை நோக்கி, மெல்ல
வருந்தும் கொல்லோ, திருந்துஇழை அரிவை?
வல்லைக் கடவுமதி தேரே; சென்றிக,
குருந்துஅவிழ் குறும்பொறை பயிற்றப்
பெருங்கலி மூதூர் மரம்தோன் றும்மே.

தெளிவுரை

"செம்மண் நிறைந்த முல்லை நிலத்தில், மென்மையான முடியினைக் கொண்ட தெளிந்த மணிகள் கட்டப்பெற்ற ஆட்டுக் கூட்டம் மேய்வதை விட்டு இடம் பெயர்ந்து தொழுவத்தைச் சேரும். காட்டிலுள்ள முல்லையின் விரிந்த மலரை மலைச் சாரலுக்குப் புறத்தேயுள்ள பார்ப்பன மகளிர் சூடியிருப்பர். கதிரவன் மேற்கு மலையில் மறைந்தனன். மாலைப்பொழுதில் நான் அங்கு இல்லாமையால் வெறுமையாய்த் தோன்றும் வீட்டினை நோக்கித் திருத்தமான அணிகலன்களை அணிந்த என் காதலி வருந்திக்கொண்டிருப்பாள். எனவே, பாக! தேரை நீ விரைந்து செலுத்து. அழகிய குருந்தம் பூக்கள் மலர்கின்ற

காட்டினை நெருங்கியதும் ஆரவாரம் மிக்க நம்மூர் மரங்களும் அதோ தோன்றுகின்றன பார்."

கருத்து

பாக! காட்டுவழியே திரும்பிக்கொண்டிருக்கிறோம்! கதிரவன் மறையும் நேரம்; நம்மூரைச் சூழ்ந்துள்ள மரங்களும் அதோ தோன்றுகின்றன; ஊரை நெருங்கிவிட்டோம்; தேரினை விரைவில் செலுத்து.

சொற்பொருள்

1. செந்நிலம் - செம்மண் நிலம்; புறவு - முல்லை நிலம்; புன்மயிர் - மென்மையான மயிர்; புருவை - ஆடு.
2. பாடுஇன் - இனிதாய் ஒலிக்கும்; தோடு - கூட்டம், தொகுதி; தலைப்பெயர - இடம் பெயர்ந்து (தொழுவம் சேரும்).
3. கயவாய் அலரி - விரிந்து மலர்ந்த பூ.
4. சாரற்புறத்து - மலைச்சாரலுக்குப் புறத்தேயுள்ள (பார்ப்பன மகளிர் சூடிக் கொள்வர்).
5. கல் - மலை; சுடர் சேரும் - பகலவன் சென்றடையும்; கதிர்மாய் - சூரியக் கதிர்கள் மறைகின்ற.
6. வறுமனை - பொலிவிழந்த இல்லம்.
7. அரிவை - பெண், தலைவி.
8. வல்லை - விரைவாய்; கடவு - செலுத்து; சென்றிக - சென்றடைக.
9. குருந்து - குருந்த மரம்; அவிழ் - மலரும்; குறும்பொறை - சிறிய காட்டுப்பகுதி; பயிற்ற - பேரொலி உண்டாக.
10. பெருங்கலி மூதூர் - பெரிய ஆரவாரத்தினைக் கொண்ட பழைய ஊர்.

தலைவன் கூற்று

கார் நாற்பது 36 **மதுரைக் கண்ணங்கூத்தனார்**

திணை : முல்லை

கூற்று

வினை முற்றி மீளும் தலைமகன் பாகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள் ஈட்டுவதற்காகச் சென்ற தலைவன் தன் பணி முடிந்து திரும்பும்போது, தன் பாகனிடம் சொன்னது.

சிரல்வாய் வனப்பின ஆகி நிரல்ஒப்ப
ஈர்ந்தண் தளவம் தகைந்தன – சீர்த்தக்க
செல்வ மழைமதர்க்கண் சின்மொழிப் பேதையூர்
நல்விருந் தாக நமக்கு.

தெளிவுரை

குளிர்ச்சி மிக்க செம்முல்லைப் பூக்கள் மீன்கொத்திப் பறவை யின் வாய் போன்ற அழகினைக் கொண்டனவாகி வரிசையாய் அரும்பின. கார் காலம் தொடங்கிவிட்டது. சிறந்த செல்வத்தைக் கொண்ட மழைபோலக் குளிர்ந்த மதர்த்த கண்களையும், சிலவான மொழிகளையும் கொண்ட என் காதலியின் ஊர் எனக்கு நல்ல விருந்து தரும் இடமாய் அமையட்டும் (என்று தலைவன் பாகனிடம் சொன்னான்.)

கருத்து

தலைவியின் ஊர் நமக்கு விருந்து தரும் இடமாகட்டும்; அதனால் பாகனே! தேரை விரைவில் செலுத்து.

குறிப்பு

தளவம் (செம்முல்லை) மலர் மீன்கொத்தியின் மூக்குப் போன்றிருக்கும்.

சொற்பொருள்

1. **சிரல் – சிச்சிலி – மீன்கொத்திப்பறவை; வாய் – மூக்கு; நிரல் ஒப்ப – வரிசையாய்.**

2. ஈர்ந்தண் - ஈரமான குளிர்ந்த; தளவம் - செம்முல்லைப் பூ; தகைந்தன - அழகுடையனவாய் விளங்கின.
3. மழை - மழை போலக் குளிர்ந்த; மதர் - மதர்த்த (செருக்குமிக்க); பேதை - இளம் பருவத்தினளாகிய தலைவி.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 328 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

'மழை வீழ்தலாற் சுரம் தண்ணென்றது, இனி வருத்தமின்றிப் போகலாம்' என்ற உழையர்க்குத் தலைமகன் சொல்லியது.

கூற்று விளக்கம்

'வெம்மையான வழியில் சிறிதளவு மழை பெய்து நிலம் குளிர்ச்சி பெற்றுள்ளது; இனி வருத்தமில்லாமல் செல்லலாம்' என்று உடன் வந்தவர் கூறினர். தலைவனோ தன் காதலி அருகிலில்லாததால், குளிர்ச்சி பொருந்திய அவ்வழியும் தனக்கு வெம்மை கொண்டதாய் இருப்பதாய்க் கூறியது.

நுண்மழை தளித்தென நறுமலர் தாஅய்த்
தண்ணிய ஆயினும் வெய்ய மன்ற
மடவரல் இன்துணை ஒழியக்
கடமுதிர் சோலைய காடுஇறந் தேற்கே.

தெளிவுரை

"என் காதலியின் இனிய துணையில்லாது, வெப்பம் மிக்க பாலை நிலத்தில் சோலைகளைக் கொண்ட காட்டுவழியைக் கடந்து கொண்டிருக்கிறேன். நுண்ணிய மழைத்துளிகள் வீழ்ந்ததனால் நறிய மலர்கள் உதிர்ந்து பரந்து, வழி குளிர்ச்சி கொண்டதாய் இருந்தாலும் (என் தலைவி அருகிலில்லாததால்) இக்காடு எனக்கு வெம்மை வாய்ந்ததாகவே தோன்றுகிறது!"

கருத்து

வழி குளிர்ச்சி பொருந்தியதாயிருந்தாலும், அவளைப் பிரிந்து வந்த நினைவின் வெம்மை என்னைத் தகிக்கின்றது.

குறிப்பு

சிறு தூறல் மேலும் வெப்பத்தையே மிகுவிக்கும். கார் காலம் தொடங்குவதற்குள் வந்துவிடுவேன் என்று சொல்லிச் சென்ற தலைவன் இன்னும் திரும்பவில்லையே என்று தலைவி துடித்துப் புலம்புவாள் என்று கருதித் தலைவன் வேதனையுற்றனன்.

சொற்பொருள்

1. நுண்மழை - சிறு தூறல்; தளித்தல் - வீழ்தல்; தாஅய் - உதிர்ந்து.
2. தண்ணிய ஆயினும் - குளிர்ச்சி பொருந்திய தன்மை கொண்டதாயினும்; வெய்ய - வெப்பம் வாய்ந்தது.
3. மடவரல் - இளம்பெண்; துணை ஒழிய - தலைவியைப் பிரிந்து; கடம் - அரிய வழி; இறந்தேற்கு - காட்டைக் கடந்த எனக்கு.

தலைவன் கூற்று

குறுந்தொகை 400 **பேயனார்**

திணை : பாலை

கூற்று

வினைமுற்றி வந்த தலைமகன் தேர்ப்பாகனைத் தலையளித்தது. (தலையளித்தல் - பாராட்டி அன்பு செய்தல்).

கூற்று விளக்கம்

தலைவியைப் பிரிந்து வினைமேற்சென்ற தலைவன் அச்செயல் முடிந்து மீண்டுவந்து தலைவியைக் கண்ட பின்னர்த் தன் கருத்திற்கியையத் தேரினை விரைந்து செலுத்திவந்த பாகனைப் பாராட்டியது.

'சேயாறு செல்வாம் ஆயின், இடர்இன்று,
களைகலம் காமம், பெருந்தோட்கு' என்று,
நன்றுபுரிந்து எண்ணிய மனத்தை ஆகி,
முரம்புகண் உடைய ஏகி, கரம்பைப்
புதுவழிப் படுத்த மதியுடை வலவோய்!
இன்று தந்தனை தேரோ
நோய்உழந்து உறைவியை நல்க லானே.

தெளிவுரை

நீண்ட (சுற்று) வழியில் செல்வோமாயின் தலைவியின் காமமாகிய நோயை இன்றே நீக்க இயலாது என்று கருதி, நல்லதை விரும்பும் எண்ணத்தினைக் கொண்டு, முருடான மேடுகள் உடையும்படி, கரம்பை நிலத்தில் புதுவழி உண்டாக்கித் தேரைச் செலுத்தி வந்த அறிவுமிக்க பாகனே! இன்று நீ தேரை மட்டுமா செலுத்தினை; அன்று; பிரிவுத் துயரால் உழந்து வருந்தியிருந்த தலைவியையும் அன்றோ காத்துத் தந்தாய்! (அறிவுமிக்க வலவ! என் பாராட்டுகள்.)

கருத்து

பாக! குறுகிய வழி கண்டு தேரைச் செலுத்தித் தலைவியை என்னுடன் சேர்த்து வைத்தனை. வாழ்க!

விளக்கம்

"தொலைவைக் குறைக்கும் நோக்கில் புதிய வழியை உண்டாக்கித் தேரை விரைந்து செலுத்தி இன்றே வந்து சேர்ந்தாய்! இன்றேல் தலைவி துயர்மிகுதியால் இறந்திருப்பாள். நீ தேரை மட்டுமா இன்று ஒட்டி வந்துள்ளாய்; என் தலைவி யையும் உயிருடனன்றோ எனக்கு மீட்டுத் தந்துள்ளாய்!"

சொற்பொருள்

1. சேயாறு - நீண்ட வழி, சுற்று வழி; இடர் இன்று - இடர் இல்லாமல்.
2. பெருந்தோட்கு - பெரிய தோளைக் கொண்ட தலைவியின்; காமம் களை கலம் - காம நோயைக் களைய மாட்டோம்.
3. நன்று புரிந்து - நன்மையை விரும்பி; எண்ணிய மனத்தை ஆகி - நினைத்த மனத்தைக் கொண்டவனாகி.
4. முரம்புகண் - பருக்கைக் கற்களைக் கொண்ட மேட்டுநிலம்; உடைய - பிளக்கும்படி; ஏகி - சென்று; கரம்பை - கரம்பை நிலத்திலே.
5. புதுவழிப் படுத்த - புது வழியை உண்டாக்கிய; மதியுடை - அறிவு மிகுந்த; வலவோய் - பாகனே!
6. இன்று தேரா தந்தனை - இன்று தேரை மட்டுமா செலுத்தினாய்.

7. நோய் உழந்து - பிரிவுத் துயரால் துன்பப்பட்டு; உறைவியை - தங்கி யிருப்பவளாகிய தலைவியை; நல்கலான் - (தலைவியை) உயிரோடு மீட்டுத் தந்ததால்.

ஊர் அடைந்த தலைவன்.

தோழி கூற்று

அகநானூறு 269 **மதுரை மருதனிளநாகனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

பொருள் தேடுவதற்காகத் தலைவன் சென்றான். திரும்பி வர நீண்ட காலம் ஆனது. அதனால் தலைவியின் உடல் நிலை வேறுபட்டது. தலைவன் திரும்பி வந்ததைத் தோழி அறிந்தாள். அச்செய்தியைத் தலைவியிடம் மகிழ்ச்சியோடு கூறுகின்றாள்.

தொடிதோள் இவர்க! எவ்வமும் தீர்க!
நெறிஇருங் கதுப்பின் கோதையும் புனைக!
ஏறுஉடை இனநிரை பெயர, பெயராது,
செறிசுரை வெள்வேல் மழவர்த் தாங்கிய
தறுக ணாளர் நல்இசை நிறுமார்,
பிடிமடிந் தன்ன குறும்பொறை மருங்கின்,
நட்ட போலும் நடாஅ நெடுங்கல்
அகல்இடம் குயின்ற பல்பெயர் மண்ணி,
நறுவிரை மஞ்சள் ஈர்ம்புறம் பொலிய
அம்புகொண்டு அறுத்த ஆர்நார் உரிவையின்
செம்பூங் கரந்தை புனைந்த கண்ணி
வரிவண்டு ஆர்ப்பச் சூட்டி, கழற்கால்
இளையர்பதிப் பெயரும் அருஞ்சுரம் இறந்தோர்,
தைஇ நின்ற தண்பெயல் கடைநாள்,
பொலங்காசு நிரைத்த கோடுஏந்து அல்குல்

நலம்கேழ் மாக்குரல் குழையொடு துயல்வர,
பாடுஊர்பு எழுதரும் பகுவாய் மண்டிலத்து
வயிர்இடைப் பட்ட தெள்விளி இயம்ப,
வண்டற் பாவை உண்துறைத் தரீஇ,
திருநுதல் மகளிர் குரவை அயரும்
பெருநீர்க் கானல் தழீஇய இருக்கை,
வாணன் சிறுகுடி, வணங்குகதிர் நெல்லின்
யாணர்த் தண்பணைப் போதுவாய் அவிழ்ந்த
ஒண்செங் கழுநீர் அன்ன, நின்
கண்பனி துடைமார் வந்தனர், விரைந்தே.

தெளிவுரை

"நம் தலைவர் பொருளீட்டுவதற்காகச் சென்றுள்ள காட்டு வழியில் மலைகள் உயர்ந்து நிற்கின்றன. அங்கு வேடர்கள் வாழ் கின்றனர். அவர்களுள் ஓர் ஊராருக்கும், மற்றோர் ஊராருக்கும் இடையே பகை மூளும். ஒரு சாரார் மற்றொரு சாராரின் ஊரினில் நுழைந்து இரவில் பசுக்கூட்டங்களைக் கொள்ளை கொண்டு வருவர். இவர்கள் வெட்சியார் எனப்படுவர். அங்ஙனம் கொள்ளை கொள்ளும் வேடுவரை, அவ்வூரார் துரத்தி வந்து தாக்கிக் காளைமாடு தலைமை தாங்கும் பசுக்கூட்டத்தை மீட்டுச் செல்வர். இவர் கரந்தையார் எனப்படுவர்.

"வெண்மை நிற வேலை ஏந்திய, நிரை கவர்ந்து சென்ற வெட்சி வீரர்கள் துரத்திவர, பசுக்களை மீட்டுச் சென்ற கரந்தை வீரர்கள் அஞ்சாமையோடு, அவர்களைத் தடுத்து நிறுத்தினர். அப்பொழுது விளைந்த போரில் கரந்தை வீரர்கள் சிலர், உயிர் கொடுத்துப் புகழ் கொண்டனர்.

"அவர்கள் புகழை நிலை நிறுத்துவதற்காகக் கரந்தை வீரர்கள், பெண்யானை படுத்துக் கிடப்பது போன்ற குன்றுகளுக்கு அருகில் நடுகல்போல் இயற்கையாகவே நிற்கும் அகலமான ஒரு கல்லில் உயிர் துறந்த வீரர்களின் வடிவங்களைச் செதுக்கினர். அதை நீராட்டி, மஞ்சளோடு குழைத்த சாந்தைப் பூசி, ஆத்தி மரப்

பட்டையில் உள்ள நாரில் கரந்தைப் பூவைத் தொடுத்து ஆக்கிய மாலையைச் சூட்டினர்; பிறகு, தம் ஊருக்குத் திரும்பினர். அத்தகைய அரிய வழியில் நம் தலைவர் சென்றுள்ளார்.

“சென்றவர், எஞ்சி நிற்கும் மழை பெய்கின்ற தை மாத இறுதி நாள்களில் திரும்பி வந்துவிட்டார்.

“வாணன் என்பவனது சிறுகுடியில் வாழும் கன்னிப் பெண்கள் பொற்காசுகளைத் தொடுத்த மேகலையைத் தம் இடையில் அணிந்திருப்பர். அதனோடு நன்னிறம் கொண்ட பூங்கொத்துகளும் இலைகளும் சேர்த்துத் தைக்கப்பட்ட தழை ஆடையையும் உடுத்தியிருப்பர். அவர்கள் இக்காலத்தில் வண்டற்பாவையை நீர் உண்ணும் துறையில் கொண்டுவந்து வைத்து, வட்ட வடிவமும் பெரிய வாயும் உடைய ஊது கொம்புகள் முழங்க, அங்குக் குரவைக் கூத்து ஆடுவர். அக்காட்சி நிகழும் கடற்கரை ஊர் வாணனது சிறுகுடியாகும்.

“அவ்வூரில் வயல்களில் நெற்கள் விளைந்து முதிர்ந்து வளைந்து கிடக்கும். அத்தகைய நீர்வளம் கொண்ட வயல்களில் செங்கழுநீர்ப் பூக்கள் இதழ் விரிந்து மலரும். அம்மலர்போலத் தோன்றும் உன் கண்களிலிருந்து சொரியும் கண்ணீரைத் துடைக்க நம் தலைவர் வந்துவிட்டார்.

“ஆதலால், உன் தோளில் வளைகள் ஏறட்டும். உன் துன்பம் தீரட்டும். உன் நெளிந்த கரிய கூந்தலில் மாலையைச் சூட்டிக் கொள்” எனக் கூறித் தோழி, தலைவியைத் தேற்றினாள்.

கருத்து

தலைவர் திரும்பி ஊர் வந்து சேர்ந்தார்; வருந்தாதே.

விளக்கம்

“தலைவியே! அரிய காட்டைக் கடந்து பொருளீட்டச் சென்ற நம் தலைவர், எஞ்சி நிற்கும் குளிர்ச்சி பொருந்திய மழையினைப் பெய்யும் தைத் திங்கள் இறுதி நாள்களில், உன் கண்களில் வடியும் நீரைத் துடைத்து, ஆற்றுவிக்க விரைந்து வந்துள்ளார். ஆதலின், நெகிழ்ந்த உன் வளைகள் தோளில் ஏறி இறுகட்டும்;

உன் துன்பம் நீங்கட்டும்; உன் கரிய கூந்தலில் நீ மாலையையும் புனைக" என்று கூறினாள்.

குறிப்பு

1. பசுக் கூட்டத்தைக் கவர்ந்து சென்ற வெட்சி வீரர்களிடமிருந்து, கரந்தை வீரர்கள் அதனை மீட்டனர். அவ்வெட்சி வீரர் மீண்டும் பசுவைக் கவர்ந்து செல்வதைத் தடுத்து நின்று வீரத்தோடு போரிட்ட கரந்தை வீரர்கள் சிலர், அப் போரில் இறந்தனர். அவர்கள் புகழை நிலை நிறுத்த அவரைச் சார்ந்த வீரர்கள் கல்லிலே அவர் வடிவத்தை வடித்து, அதை நீராட்டி, அதற்கு மஞ்சள் பூசி, கரந்தைப்பூ மாலை சூட்டி வழிபட்டனர் என அறிகிறோம். (பல்லவர் காலத்தைப் போல இயல்பாய் அமைந்த பாறையைக் குடைந்து படிவம் இயற்றும் வழக்கம் சங்க காலத்திலும் இருந்திருக்கிறது என்பது புலனாகிறது.)

2. பண்டைக் காலத்தில் தைத் திங்களின் கடைநாள் காலையில் மகளிர் நீராடி, வண்டற்பாவையை நீர் உண்ணும் துறைக்குக் கொண்டுவந்து வைத்துக் கூத்தாடுவர் என்பதனை இப்பாடல்வழி அறிகிறோம்.

சொற்பொருள்

1. தொடி - தோள் வளை; தோள் இவர்க - தோளில் ஏறட்டும் (இறுகட்டும்); எவ்வம் - துன்பம்.
2. நெறி இருங் கதுப்பு - நெளிந்த கரிய கூந்தல்; கோதை - மாலை; புனைக - சூடுக.
3. பெயர - (பசுக்கூட்டம்) மீண்டு வர; பெயராது - தாம் திரும்பாது.
4. செறிசுரை - சுரைகள் செறிந்த; வெள்வேல் - வெள்ளிய வேல்; மழவர் - வெட்சி வீரரை; தாங்கிய - தடுத்துப் பொருது, இறந்துபட்ட.
5. தறுகண் ஆளர் - அஞ்சாமை கொண்ட கரந்தை வீரர்; நல்லிசை - நல்ல புகழ்; நிறுமார் - நிலை நிறுத்துமாறு (நிலை பெறச் செய்ய).
6. பிடி - பெண்யானை; மடிந்தன்ன - படுத்துக் கிடந்தது போன்ற; குறும்பொறை - சிறு குன்று; மருங்கு - அருகே.
7. நட்ட போலும் - நட்டவை போன்ற; நடாஅக் கல் - (நடாது) இயற்கையாய் எழுந்த நெடிய கல்.
8. அகல் இடம் - அகன்ற இடம்; குயின்ற - செதுக்கிச் செய்த; பல்பெயர் - பல வடிவுகளையும்; மண்ணுதல் - நீராட்டுதல்.
9. நறுவிரை - இனிய மணம்; ஈர்ம்புறம் பொலிய - (அவற்றின்) ஈரமான பக்கத்தில் விளங்குமாறு.

10. ஆர் நார் உரிவை - ஆத்தி மரப் பட்டையாகிய நாரினால் (ஆர் - ஆத்தி).
11. செம்பூங் கரந்தை - கரந்தையின் சிவந்த பூ; கண்ணி - மாலை.
12. ஆர்ப்ப - ஒலிக்க; கழல்கால் - வீரக்கழலணிந்த காலைக் கொண்ட (கரந்தை வீரர்கள்).
13. இளையர் - வீரர்; பதி - ஊர்; பெயரும் - திரும்பும்; அருஞ்சுரம் - அரிய காடு; இறந்தோர் - கடந்து சென்றவர் (தலைவர்).
14. தை - தைத் திங்கள்; நின்ற - எஞ்சி நிற்கும்; தண்பெயல் - குளிர்ச்சி பொருந்திய மழை; கடைநாள் - இறுதி நாள்கள்.
15. பொலன் - பொன்; நிரைத்த - தொடுத்து அணிந்த; கோடு ஏந்து - பக்கம் உயர்ந்த.
16. நலம் கேழ் - நல்ல நிறம் (வாய்ந்த); மாக் குரல் - சிறந்த பூங்கொத்துகள் (கூடிய); குழை - தழை ஆடை; துயல்வர - அசைய.
17. பாடு ஊர்பு எழும் - ஓசை பரந்து எழுகின்ற; பகுவாய் மண்டிலம் - பெரிய வாய் வட்டத்தைக் கொண்ட.
18. வயிர் - ஊதுகொம்பு; இடைப் படல் - இடையில் சேர்தல்; தெள்விளி - தெளிந்த இசை; இயம்ப - ஒலிக்க.
19. வண்டல் - ஒரு வகை விளையாட்டு; பாவை - பொம்மை; உண் துறை - நீர் உண்ணும் துறை; தரீஇ - கொண்டுவந்து.
20. குரவை - ஒரு வகைக் கூத்து; அயரும் - ஆடும்.
21. பெருநீர் - கடல்; கானல் - கடற்கரைச் சோலை; தழீஇய - சூழ்ந்த; இருக்கை - ஊர்.
22. வாணன் - வீரருள் ஒருவன், வள்ளல்; சிறுகுடி - வாணனுடைய ஊர்; வணங்குகதிர் - வளைந்த கதிர்.
23. யாணர் - புது வருவாய்; தண் - (நீர் வளஞ்சான்ற) குளிர்ந்த; பணை - வயல்; போது - அரும்பு; வாய் அவிழ்ந்த - மலர்ந்த.
24. ஒண் - ஒள்ளிய; செங்கழுநீர் - செங்கழுநீர்ப்பூ.
25. பனி - நீர்; துடைமார் - துடைப்பதற்கு; வந்தனர் - வந்து சேர்ந்து விட்டார்.

தோழி கூற்று

நற்றிணை 212 **குடவாயிற்கீரத்தனார்**

திணை : பாலை

கூற்று

பொருள் முடித்துத் தலைமகனோடு வந்த வாயில்கள்வாய் வரவு கேட்ட தோழி தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள் காரணமாய்ப் பிரிந்து சென்ற தலைவன் மீண்டு வரும்போது அவனுடன் வந்த இளைஞர் முதலான வாயிலோர் முன்னரே வந்து தலைவன் வருகையைத் தெரிவிக்க, அது கேட்ட தோழி தலைவியிடம், 'நம் தலைவர் வந்துகொண்டிருக்கிறார்; நீ அவருடன் சேர்ந்து நெடுங்காலம் வாழ்க' என மகிழ்ந்து கூறியது.

பார்வை வேட்டுவன் படுவலை வெரீஇ,
நெடுங்கால் கணந்துள்அம் புலம்புகொள் தெள்விளி
சுரம்செல் கோடியர் கதுமென இசைக்கும்
நரம்பொடு கொள்ளும் அத்தத்து ஆங்கண்
கடுங்குரல் பம்பைக் கதநாய் வடுகர்
நெடும்பெருங் குன்றம் நீந்தி நம்வயின்
வந்தனர்; வாழி தோழி! கையதை
செம்பொன் கழல்தொடி நோக்கி, மாமகன்
கவவுக்கொள் இன்குரல் கேட்டொறும்
அவவுக்கொள் மனத்தேம் ஆகிய நமக்கே.

தெளிவுரை

"தலைவி! வேடன் ஒருவன் பார்வைப் புள்ளை வைத்து வலையை விரித்தான். அவ்வலையைக் கண்ட கணந்துள் பறவை அச்சம் கொண்டு தன் துணையை அழைத்துப் புலம்பியது. அந்த ஒலி காட்டுவழியே செல்லும் கூத்தர், தம் வழிநடை வருத்தம் தெரியாமலிருக்க இசைக்கும் யாழிசையோடு சேர்ந்து ஒலிக்கும். இத்தகைய வழியில் கடுமையாய் ஒலிக்கும் பம்பையுடன் சினமிகுந்த நாயையும் கொண்ட வடுகர் கூட்டம் தங்கும் பெரிய குன்றம் உள்ளது. அக்குன்றத்தைக் கடந்து நம் தலைவர்

வந்துகொண்டிருக்கிறார். உன் கையில் உள்ள செம்பொன் வளையல் கழன்று விழுவதைக் காணும் புதல்வன், 'அது ஏன்?' என்று கேட்பான். அந்த இனிய மழலைக் குரலைக் கேட்கும் போதெல்லாம் அவாவினைக் கொண்ட மனத்தினராய் இருந்தோம். அக்குரலைக் கேட்கத் தலைவரும் இப்பொழுது விரைந்து வந்துகொண்டிருக்கிறார். நீ தொடி கழலும் வருத்தம் நீங்கத் தலைவருடன் சேர்ந்து நெடுங்காலம் வாழ்க" என்று தோழி தலைவியிடம் மகிழ்ச்சியோடு கூறினாள்.

கருத்து

தலைவர் வந்துகொண்டிருக்கிறார்; மகிழ்ச்சியோடு இரு.

விளக்கம்

பொருள்வயிற் பிரிந்த தலைவன் குறித்த காலத்தில் மீண்டு வருதலை அவனுடன் சென்றிருந்தோர் முன்னரே வந்து கூறினர். அதுகேட்ட தோழி, தலைவியிடம், 'வடுகர் வாழும் நெடுங் குன்றம் கடந்து தலைவர் வந்துகொண்டிருக்கிறாராம்! இனி உன் தொடி கழலும் வருத்தம் நீங்கவும், புதல்வன் களித்திருக்கவும் அவரோடு சேர்ந்து நெடுங்காலம் வாழ்க!' என்று உவந்து கூறினாள்.

இறைச்சி

கணந்துள் பறவையின் ஓசை யாழிசையோடு சேர்ந்து ஒலிக்கும் என்றது, நீ தலைவனொடு கூடி என்றும் இசை பரவி வாழ்க எனப் பொருட்புறத்தே இறைச்சி தோற்றுவித்து நின்றது.

குறிப்பு

பார்வை - பார்வைப் புள். வேடுவர் பறவைகளைத் தாம் சொல்லியபடி செயல்படப் பழக்கி வைத்திருப்பர். அப்பறவையை வைத்து வலையை விரிப்பர். அப்பறவையைக் காணும் பிற பறவைகள் அதைத் தம் இனம் என்று கருதி, அதற்கு அருகே வந்து வலையில் சிக்கிக்கொள்ளும். பழக்கிய ஒன்றனைப் பார்வையாய்க் காட்டி மற்ற பறவைகளைப் பிடிக்க வைத்திருக்கும் புள், பார்வைப் புள் எனப்படும். இதேபோன்று விலங்குகளைப் பிடிக்க விலங்குகளையும் பழக்கி வைத்திருப்பர். அவை 'பார்வை விலங்கு' எனப்படும்.

சொற்பொருள்

1. பார்வை வேட்டுவன் - ஒரு பறவை இனத்தைப் பிடிப்பதற்காக அந்த இனத்தில் தான் பழக்கி வைத்துள்ள பறவையை அடைத்துச் செல்லும் வேட்டுவன்; வெரீஇ - அஞ்சி.
2. நெடுங்கால் - நீண்ட கால்; கணந்துள் - ஒரு வகைப் பறவை; புலம்புகொள் - வருத்தம் கொண்டு; தெள்விளி - தெளிவாய்க் கூப்பிடும் குரல்.
3. கோடியர் - ஊதுகொம்பினையுடைய கூத்தர்; கதுமென - விரைந்து.
4. நரம்பு - நரம்புகளைக் கொண்ட யாழ்; அத்தம் - காட்டுவழி.
5. கடுங்குரல் - கொடிய குரல்; பம்பை - ஒரு வகை வாத்தியம்; கதநாய் - சினங்கொண்ட நாய்; வடுகர் - ஓர் இனத்தவர்.
6. நீந்தி - கடந்து; நம்வயின் - நம்மிடம்.
7. கையதை - கையில் உள்ள.
8. கழல் கொடி - கழன்று விழும் வளையல்; மா மகன் - நம் சிறந்த மகன்.
9. கவவுக்கொல் - அணைக்கும் கைகள்.
10. அவவுக்கொள் - அன்புமிகக் கொள்ளும்.

தோழி கூற்று

நற்றிணை 367 **நக்கீரர்**

திணை : முல்லை

கூற்று

வரவு மலிந்தது.

கூற்று விளக்கம்

பொருளீட்டப் பிரிந்து சென்ற தலைவன் பல நாள் திரும்பி வாராத நிலையில் தலைவி மிகவும் கலங்கினாள். அவள் துயரை மாற்றக் கருதிய தோழி, தலைவனோடு சென்ற வீரர்கள் முல்லை சூடித் திரும்பியதைச் சுட்டிக்காட்டி, அவனும் விரைவில் வருவான் எனத் தேற்றியுரைத்தது.

கொடுங்கண் காக்கைக் கூர்வாய்ப் பேடை
நடுங்குசிறைப் பிள்ளை தழீஇக் கிளைபயிர்ந்து
கருங்கண் கருணைச் செந்நெல் வெண்சோறு
சூருடைப் பலியொடு கவரிய குறுங்கால்
கூழுடை நன்மனை குழுவின இருக்கும்
மூதில் அருமன் பேரிசைச் சிறுகுடி
மெல்லியல் அரிவைநின் பல்இருங் கதுப்பில்
குவளையொடு தொடுத்த நறுவீ முல்லைத்
தளையவிழ் அலரித் தண்நறும் கோதை
இளையரும் சூடி வந்தனர்; நமரும்
விரியுளை நன்மா கடைஇப்
பரியாது வருவர்இப் பனிபடு நாளே.

தெளிவுரை

தலைவி! சாய்த்துப் பார்க்கும் தன்மையும் கூர்மையான வாயும் கொண்ட காக்கைப்பேடை, நடுங்கும் சிறகுகளைக் கொண்ட தன் குஞ்சினைத் தழுவிக்கொண்டு, தன் சுற்றத்தைக் கரைந்து அழைக்கும்; அதனால், கருங்கண்ணைக் கொண்ட கருணைக் கிழங்கின் கறியொடு கூடிய வெண்சோற்றுத்திரளையும் தெய்வத்திற்கிடப்படும் பலியையும் ஒருங்கு உண்ணும் பொருட்டுக் கூட்டமாய் அமர்ந்திருக்கும். இத்தகைய நல்ல பழமையான வீடுகளைக் கொண்டது, 'அருமன்' என்பவனது பெரும் புகழ் பெற்ற 'சிறுகுடி' என்னும் ஊர். அவ்வூரைப் போலும் மென்மையான சாயலைக் கொண்ட தலைவியே! கரிய உன் கூந்தலில் சூடிய மாலைபோல, குவளையொடு கலந்து தொடுத்த, மலர்ந்துள்ளதும் குளிர்ச்சி பொருந்தியதுமான முல்லை மாலையைச் சூடியவராய் நம் தலைவனுடன் சென்ற வீரர்கள் வந்துகொண்டுள்ளனர். நம் தலைவனும் விரிந்த பிடரி மயிரைக் கொண்ட குதிரையைச் செலுத்தியபடி, இடையில் எங்கும் தங்காது இம்முன்பனிக் காலத்தில் வந்து சேர்வான். ஆதலால், நீ வருந்தாதே!" எனத் தோழி தலைவியிடம் கூறி அவளைத் தேற்றினாள்.

கருத்து

நம் தலைவன் இன்றே வருவான்; வருந்தாதிரு.

உள்ளுறை

காக்கைப்பேடை தன் குஞ்சினைத் தழுவி, சுற்றத்தை அழைத்து, அவற்றோடு கூடியிருந்து வெண்சோற்றையும் தெய்வத்திற்கிடப்படும் பலியையும் உண்பதற்குக் குழுமி யிருக்கும். அதுபோலத் தலைவியும் நன்மகப்பெற்று, சுற்றம் சூழப் பல்வளம் நுகர்ந்து மாண்புற வேண்டும் என்பது உள்ளுறைப் பொருளாகும்.

சொற்பொருள்

1. கொடுங்கண் - சாய்த்துப் பார்க்கப்படும் கண்; பேடை - பெட்டை.
2. சிறை - சிறகு; பிள்ளை - குஞ்சு; தழீஇ - தழுவி; கிளை - சுற்றம்; பயிர்ந்து - கரைந்து அழைத்து.
3. கருங்கண் கருணை - கருங்கண்ணைக் கொண்ட கருணைக்கிழங்கு.
4. சூருடைப் பலி - தெய்வப்பலியாகக் காக்கைக்கு இடப்படும் சோறு; கவரிய - கவர்வதற்காக; குறுங்கால் - குறுகிய கால்.
5. கூழ் - உணவு; குழுவின - கூட்டமாய்க் கூடி.
6. மூதில் - மூதுஇல் - பழமையான வீடு; அருமன் - ஒரு தலைவன்; பேரிசை - பெரும் புகழ்; சிறுகுடி - ஓர் ஊர்.
7. மெல்இயல் - மென்மையான தன்மை; அரிவை - பெண், தலைவி; பல் இருங் கதுப்பு - பலவாகிய (நெருங்கிய) கரிய கூந்தல்.
8. குவளை - குவளை மலர்; நறுவீ - நன்மலர்.
9. தளைஅவிழ் - முறுக்கவிழ்ந்த; அலரி - நன்கு மலர்ந்த மலர்; கோதை - மாலை.
10. இளையர் - ஏவலாளர், வீரர்; நமர் - நம் தலைவன்.
11. விரிஉளை - விரிந்த பிடரி மயிர்; நன்மா - குதிரை; கடைஇ - செலுத்தி.
12. பரியாது - இடையே தங்காது; பனிபடுநாள் - பனிக்காலம்.

தோழி கூற்று

நற்றிணை 164 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : பாலை

கூற்று

பொருள் முடித்து வந்தான் என்பது வாயில்கள்வாய்க் கேட்ட தோழி, தலைமகளுக்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

பொருள்வயிற் பிரிந்த தலைவன் வினை முடித்து மீண்டு வந்து கொண்டிருப்பதை அவனுடன் சென்றவர்களுள் முன் திரும்பியவர்கள் வாயிலாய்த் தோழி அறிந்தாள். அவள் தலைவியிடம் சென்று, ‘கோடையிலே தலைவர் சென்றாராயினும் நல்லதே செய்தார் என்று முன்பு நான் சொன்ன போது நீ ஏற்கவில்லை. அவர் தடைகளையெல்லாம் கடந்து குறித்த பருவத்தில் இங்கு வந்துள்ளார்; நீ மகிழ்ந்திரு’ எனத் தோழி தலைவியிடம் கூறியது.

‘உறைதுறந் திருந்த புறவில், தனாது
செங்கதிர்ச் செல்வன் தெறுதலின், மண்பக
உலகுமிக வருந்தி உயாவுறு காலைச்
சென்றனர் ஆயினும், நன்றுசெய் தனர்’எனச்
சொல்லின் தெளிப்பவுந் தெளிதல் செல்லாய்
செங்கோல் வாளிக் கொடுவில் ஆடவர்
வம்ப மாக்கள் உயிர்த்திறம் பெயர்த்தென,
வெங்கடற்று அடைமுதல் படுமுடை தழீஇ,
உறுபசிக் குறுநரி குறுகல் செல்லாது
மாறுபுறக் கொடுக்கும் அத்தம்
ஊறுஇலர் ஆகுதல் உள்ளா மாறே.

தெளிவுரை

“தலைவி! மழை பெய்யாது ஒழிந்த பாலை நிலத்தில் கதிரவன் மிகுதியாய்க் காய்தலால் நிலம் பிளவுபட்டு உலகம் மிக வருந்தும். அந்தக் காலத்தில் பாலைநிலக் கொடிய வழியில் நம் தலைவர் பொருளீட்டுதற்காகச் சென்றார்; காலம் கோடை யாயினும் அவர் பொருள் தேடச் சென்றாராதலின் ‘அது நன்று’

என்றேன். என் சொல்லால் அப்போது நீ தெளிவடையவில்லை. வளைந்த வில்லைக் கொண்ட வழிப்பறி கள்வர், கோலாகிய அம்பினால் வழியினில் செல்வோரைக் கொன்று, உயிரைப் போக்குவர். உயிர் பிரிந்த அவ்வுடல்களிலிருந்து இலைகளால் மூடப்பெற்ற முடைநாற்றம் வீசும். அவ்வுடல்களைத் தின்ன வந்த நரிகள் முடை நாற்றத்தைத் தாங்க இயலாது, அவற்றிற்கு அருகே செல்லாது பெயர்ந்து போகும். இத்தகைய பாலை வழியில் அவர் எவ்விதத் துன்பமுமின்றி வருவார் என்று நான் சொன்ன தைக்கூட நீ ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால், தடை பல கடந்து குறித்த பருவத்தில் அவர் வந்துள்ளார் என்பது மிகவும் மகிழ்ச்சிக் குரியது" என்று தோழி தலைவியிடம் கூறினாள்.

கருத்து

கொடுமையான வழியை இடரேதுமின்றித் தலைவர் கடந்து திரும்பி விட்டார்; இனியும் வருந்தாதே.

விளக்கம்

"தலைவர் கொடிய காட்டுவழியே சென்றாராயினும், அங்குள்ள கொடியவர்களால் ஊறு ஏதுமின்றி இனிதே சென்று மீளும் ஆண்மையும் வலிமையும் கொண்டவர் என்றதால் அவர் சென்றது நன்றே என்றேன். அப்போது என் சொல்லில் உனக்குத் தெளிவு ஏற்படவில்லை. அவர் இப்பொழுது திரும்பி வந்துள்ளார் என்பதால், நான் சொன்னது சரி என்பதை உணர்ந் திருப்பாய். இனி அவருடன் கூடி மகிழ்ந்திரு" என்று தோழி தலைவியிடம் கூறினாள்.

இறைச்சி

பிணத்தைத் தின்ன வந்த நரி அதனில் உண்டாகும் முடை நாற்றத்தினைத் தாங்க இயலாமல் அகன்று போகும் என்பதிலி ருந்து, தலைவனைப் பிரிந்துபோது தலைவிக்கு ஏற்பட்ட பசலை நோய், தலைவன் மீண்டு வந்ததும் அவள் அழகைக் கெடுக்காமல் அஞ்சி மறையும் என்னும் இறைச்சிப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. உறைதுறந்து இருந்த - மழை பெய்யாது ஒழிந்த; புறவு - முல்லை நிலம்.
2. செங்கதிர்ச் செல்வன் - கதிரவன்; தெறுதலின் - சுட்டு எரித்தலால்; மண்பக - நிலம் பிளவுபட்டு.
3. உயாவுறு - வருத்தமுற்றிருக்கும்; காலை - பொழுது.
5. தெளிப்பவும் - தெளிவுபடுத்தியும்; தெளிதல் செல்லாய் - தெளிவு கொள்ளவில்லை.
6. செங்கோல் - வளைதலில்லாத கோலினைக் கொண்ட; வாளி - அம்பு; கொடுவில் - வளைந்த வில்; ஆடவர் - ஆறலைகள்வர்.
7. வம்ப மாக்கள் - வழிப்போக்கராகிய புதிய மக்கள்; பெயர்த்து - நீக்கினர்.
8. வெங்கடறு - வெம்மையான காடு; அடை முதல் - இலைகளால் மூடப்பட்ட உடல்; படுமுடை - மிக்க முடைநாற்றம்.
9. உறுபசி - மிக்க பசியைக் கொண்ட; குறுநரி - சிறிய நரிகள்; குறுகல் செல்லாது - (நாற்றம் பொறுக்க இயலாமல் அப்பிணங்களின்) அருகே செல்லாது.
10. மாறுபுறக் கொடுக்கும் - பின்னே சென்று நிற்கும்.
11. ஊறுஇலர் ஆகுதல் - துன்பம் இல்லாதவராய்க் கடந்து வருவார்; உள்ளாமாறு - நினையாமையால் (நான் தெளிவுபடச் சொல்லியும் தெளியாதிருந்தாய்).

தோழி கூற்று

அகநானூறு 363 **மதுரைப் பொன்செய் கொல்லன் வெண்ணாகனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருள்வயிற் பிரிந்தான்; சொல்லிய பருவத்து வாராது காலம் நீட்டித்தான்; அதனால் தலைவி மிகவும் வருந்தினாள்; அப்பொழுது தலைவன் மீண்டு வருகின்றான் என்னும் செய்தி கேட்ட தோழி, அச் செய்தியைத் தலைவியிடம் எடுத்துக் கூறி அவளை ஆற்றுவித்தது.

நிரைசெலல் இவுளி விரைவுடன் கடைஇ,
அகல்இரு விசும்பில் பகல்செலச் சென்று,
மழுகுசுடர் மண்டிலம் மாமலை மறைய,
பொழுதுகழி மலரின் புனையிழை! சாஅய்,
அணைஅணைந்து இனையை ஆகல்–கணைஅரைப்
புல்இலை நெல்லிப் புகர்இல் பசுங்காய்
கல்அதர் மருங்கில் கடுவளி உதிர்ப்ப,
பொலம்செய் காசின் பொற்பத் தாஅம்
அத்தம் நண்ணி, அதர்பார்த்து இருந்த
கொலைவெங் கொள்கைக் கொடுந்தொழில் மறவர்
ஆறுசெல் மாக்கள் அருநிறத்து எறிந்த
எஃகுஉறு விழுப்புண் கூர்ந்தோர் எய்திய,
வளைவாய்ப் பருந்தின், வள்உகிர்ச் சேவல்
கிளைதரு தெள்விளி கெழுமுடைப் பயிரும்
இன்னா வெஞ்சுரம் இறந்தோர், முன்னிய
செய்வினை வலத்தர் ஆகி, இவண்நயந்து
எய்தவந் தனரே– தோழி!– மைஎழில்
துணைஏர் எதிர்மலர் உண்கண்
பிணைஏர் நோக்கம் பெருங்கவின் கொளவே.

தெளிவுரை

“தலைவி! திரண்ட அடி மரத்தையும், சிறிய இலையையும் கொண்ட நெல்லியின் குற்றமிலாப் பசிய காய்கள் கல்லுடை வழியில் கடுங்காற்று வீசுதலால் உதிர்ந்து பொன்னாலான காசுகள்போல அழகு பெறப் பரவிக்கிடக்கும்; கொலை செய்து பொருளைக் கொள்ளை கொள்ளும் கொடிய தொழிலைக் கொண்ட மறவர், அவ்வழிச்செல்லும் மக்களது அரிய மார்பிலே வேல் கொண்டு எறிந்தமையால் அவர்கள் விழுப்புண்பட்டு இறப்பர்; வீழ்ந்து கிடக்கும் உடல்களின் ஊனினை உண்ணுதற்கு வளைந்த வாயும், கூர்மையான நகமும் கொண்ட பருந்தின் சேவல் தன் சுற்றத்தைத் தெளிந்த குரல் கொடுத்து அழைக்கும்; அத்தகைய துன்பம் மிகுந்த காட்டினை நம் தலைவர் கடந்து சென்றார்.

"சென்றவர், பொருளீட்டும் முயற்சியில் வெற்றியும் கண்டார்; மையுண்ட உன் கண்ணிரண்டின் மான்போலும் பார்வை பேரழகு பெறுமாறு நம்மை விரும்பி நம்மிடத்தே வந்து கொண்டுள்ளார்.

"குதிரைகள் பூட்டப்பட்ட தேரினைப் பாகன் விரைவாய்ச் செலுத்திக் கொண்டு வருகிறான். அகன்ற பெருவானில் பகற்பொழுது கழியவே, ஞாயிற்றின் ஒளி குன்றியமையால் அது பெரிய மலையிலே மறைகிறது. அழகிய அணிகளை அணிந்த தலைவியே! மங்கிய இம்மாலை நேரத்தில் குவியும் மலரினைப் போல நீ வாடிப் பொலிவிழந்து பள்ளியறை சென்று வருத்தம் கொள்ளாதே! (மலர்ச்சியோடு இரு; தலைவர் வந்துவிட்டார்)" என்று சொல்லித் தலைவியைத் தோழி தேற்றுகிறாள்.

கருத்து

தலைவர் பொருளீட்டித் திரும்பி வந்துகொண்டிருக்கிறார்; ஆதலின், வருந்தாதே!

விளக்கம்

தலைவி! துன்பம் தரும் கொடிய சுரத்தைக் கடந்து சென்ற நம் தலைவர், தாம் கருதிச் சென்ற பொருளீட்டும் தொழிலில் வெற்றி பெற்றவராய், உன் பார்வை அழகெய்தும்படியாக நம்மை விரும்பி இங்கே வந்து சேர்ந்தார்; ஆதலின், ஞாயிறு மலையில் மறைய, பகற்பொழுது கழிந்ததும், பள்ளியறை சென்று வருத்தம் கொண்டிராதே! (வந்துவிட்டார், தலைவர்).

சொற்பொருள்

1. நிரைசெலல் இவுளி - வரிசையாய்ச் செல்லும் குதிரை; கடைஇ - செலுத்தி.
2. அகல் இரு - அகன்ற பெரிய; விசும்பு - வானம்; பகல்செல - பகற்பொழுது கழிய.
3. மழுகுசுடர் - மழுங்கிய ஒளியினைக் கொண்ட; மண்டிலம் - ஞாயிறு; மாமலை - பெரிய மலை.
4. பொழுதுகழி மலரின் - பகற்பொழுது கழிந்ததும் குவியும் மலரைப் போல; புனை இழை - அழகிய அணிகலன்களை அணிந்துள்ள தலைவியே!; சாஅய் - வாடி.

5. அணை அணைந்து - பள்ளியறை சென்று; இனையை ஆகல் - இத்தன்மை கொண்டவள் ஆகாதே (வருந்தி இராதே); கணைஅரை - திரண்ட அடிமரம்.
6. புல்இலை - சிறிய இலை; நெல்லி - நெல்லி மரத்தின்; புகர்இல் - குற்றம் அற்ற; பசுங்காய் - பசுமையான காய்.
7. மருங்கில் - வழியிடத்தே; கடுவளி - கடுங்காற்று.
8. பொலம்செய் - பொன்னால் செய்யப்பட்ட; காசின் - காசு போல; பொற்ப - அழகு பெற; தாஅம் - பரவிக் கிடக்கும்.
9. நண்ணி - அடைந்து; அதர் பார்த்திருந்த - வழிவருவாரைப் பார்த்துக் கொண்டிருந்த.
10. கொலை வெம்கொள்கை - கொலையை விரும்பும் கோட்பாடு; மறவர் - வீரர்.
11. அருநிறம் - அரிய மார்பிலே.
12. எஃகுஉறு - வேலால் உற்ற; விழுப்புண் - சிறந்த புண்; கூர்ந்தோர் - பட்டவரை; எய்திய - அடைந்த.
13. வளைவாய் - வளைந்த வாய்; வள்உகிர் - கூரிய நகம்; சேவல் - பருந்தின் சேவல்.
14. கிளை - தன் சுற்றத்தை; தரு - அழைத்தற்கு; தெள்விளி - தெளிந்த குரலால்; கெழுமுடை - அங்கே உள்ள ஊனை (உண்ணுவதற்கு); பயிரும் - மென்குரலால் அழைக்கும்.
15. இன்னா - கொடிய; வெஞ்சுரம் - வெம்மையான காட்டுவழி; முன்னிய - கருதிச் சென்ற.
16. செய்வினை - பொருளீட்டும் செயல்; வலத்தர் - வெற்றி பெற்றவர்; இவண் - இங்கே; நயந்து - (நம்மை) விரும்பி.
17. எய்த வந்தனர் - வந்து சேர்ந்தனர்; மைஎழில் - கரிய அழகிய.
18. துணைஏர் - இணையொத்த; எதிர்மலர் - எதிரெதிர் பொருந்திய மலர்; உண்கண் - மையுண்ட கண்.
19. பிணை - பெண்யானை; நோக்கம் - பார்வை; பெருங்கவின் - மிக்க அழகு; கொளவே - கொள்வதற்கு (இங்கே வந்தடைந்தார்).

தோழி கூற்று

அகநானூறு 125 **பரணர்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் வினைமுற்றி மீண்டமை உணர்ந்த தோழி தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பிரிந்து சென்ற தலைவன் மீண்டு வருவதாய்க் கூறிய கார் காலமும் தொடங்கியது. வாடையின் வருத்தம் மிகத் தலைவியும் வருந்தினாள். தலைவன் வந்ததை அறிந்த தோழி, தலைவி கேட்ப வாடைக்காற்றிடம் கூறியது.

அரம்போழ் அவ்வளை தோள்நிலை நெகிழ,
நிரம்பா வாழ்க்கை நேர்தல் வேண்டி—
இரங்காழ் அன்ன அரும்புமுதிர் ஈங்கை
ஆலி அன்ன வால்வீ தாஅய்,
வைவால் ஓதி மைஅணல் ஏய்ப்பத்
தாதுஉறு குவளைப், போதுபிணி அவிழ,
படாஅப் பைங்கண் பாஅடிக் கயவாய்க்
கடாஅம் மாறிய யானை போல,
பெய்துவறிது ஆகிய பொங்குசெலற் கொண்மூ
மைதோய் விசும்பின் மாதிரத்து உழிதர,
பனிஅடூஉ நின்ற பானாள் கங்குல்
தமியோர் மதுகை தூக்காய், தண்ணென
முனிய அலைத்தி; முரண்இல் காலை,
கைதொழு மரபில் கடவுள் சான்ற
செய்வினை மருங்கின் சென்றோர் வல்வரின்—
விரிஉளைப் பொலிந்த பரியுடை நல்மான்
வெருவரு தானையொடு வேண்டுபுலத்து இறுத்த
பெருவளக் கரிகால் முன்னிலைச் செல்லார்,
சூடா வாகைப் பறந்தலை, ஆடுபெற
ஒன்பது குடையும் நன்பகல் ஒழித்த

பீடுஇல் மன்னர் போல,
ஓடுவை மன்னால்– வாடை!நீ எமக்கே.

தெளிவுரை

"வாடைக் காற்றே! இலவம் பழத்தின் விதை போன்ற அரும்புகளைக் கொண்ட இண்டங்கொடி மலர்ந்து ஆலங்கட்டி போன்ற வெள்ளைப் பூக்களைத் தரையில் உதிர்த்தது. மகரந்தப் பொடி நிறைந்த குவளைப்பூ ஒந்தியின் கருமையான தாடையைப் போல் நீல நிறம் காட்டி மலர்ந்தது. உணவுக்காக நெடுகத் திரிந்து வறண்ட பாதத்தையும் வாயையும் கொண்ட மெலிந்த யானை போல, வெண் மேகம் மழை பெய்து ஒய்ந்து, நீலம் படர்ந்த ஆகாயத்தில் உயர்ந்து திசைகளில் சாய்ந்தது. இத்தகைய பனிக்காலங் கொண்ட நடுச்சாமத்தில் தனித்திருந்து வருந்தும் மகளிர் எவ்வளவு துன்பத்தைத் தாங்க இயலும் என்று நீ சிந்திக்காமல் சில்லென்று வீசி அவர்களைக் கொல்கின்றாய். அரத்தால் சங்கு அறுக்கப்பட்டுச் செய்யப்பட்ட அழகிய சங்கு வளைகள் தோள்களிலிருந்து நெகிழ்ந்து விழும்படியாக எம்மைப் பிரிந்து சென்றுள்ள எம் தலைவர் விரைந்து வந்தால் நீ என்ன ஆவாய்?

"தலையாட்டம் என்னும்அணிகலனைப் பூண்ட குதிரைப் படை உட்பட பகைவர் அஞ்சத்தக்க பெரும் படையுடன் சென்று தான் விரும்பும் நாட்டில் பாசறை அமைத்துப் போரிட வல்ல கரிகால்வளவனை எதிர்த்துப் போரிட இயலாதவராய், வாகைப் பறந்தலை என்னும் போர்க்களத்தில் அவன் வாகை சூட, ஒரே நாள் பகலில் தம் குடைகளைப் போட்டுவிட்டு உயிர் பிழைக்க ஓடிய பெருமையில்லாத மன்னர்கள் ஒன்பதின்மரைப் போல நீயும் எமக்கு முன் நிற்கமாட்டாமல் ஓடுவாய்."

கருத்து

எம்மை வருத்தும் பனியே! தலைவன் விரைந்து வந்துகொண்டிருக்கிறான். கரிகால் வளவன் முன்னர்த் தோற்றோடிய பகை மன்னர்போல நீயும் தோற்றோடுவாய் எம்மிடம்.

விளக்கம்

தோழி நேராய்த் தலைவியிடம் கூறாமல் வாடைக்காற்றை நோக்கிப் பேசுகிறாள்:

"ஏ வாடையே! மழை பெய்து வறிதாகிய மேகம் வானில் சுற்றித் திரிய, பனி வருத்துகின்ற நள்ளிரவில், தனிமையாய் இருப்பவர்மீது வீசி வெறுப்புக் கொள்ளுமாறு துன்புறுத்துகிறாய்.

தன் வளை நெகிழ, கல்வி கற்று வரத் தலைவன் பிரிந்தமையால் தலைவி வாடிக்கொண்டிருக்கிறாள். அவன் இதோ திரும்பி விட்டான். வாகைப் போர்க்களத்தில் கரிகாற்பெருவளத்தானோடு போரிட இயலாது, புறங்கொடுத்து அஞ்சி ஓடிய மன்னர்களைப் போல, இப்போது நீயும் எம்மிடம் தோற்று ஓடப்போகிறாய்" என்று வாடைக் காற்றை நோக்கிப் பேசுவது போல, தோழி, தலைவன் வந்துவிட்டான் என்பதைத் தலைவிக்கு அறிவிக்கிறாள்.

சொற்பொருள்

1. போழ் - பிளந்து; அவ்வளை - அழகிய வளையல்.
2. நிரம்பா வாழ்க்கை - முற்றுப்பெறாத இல்வாழ்க்கை; நேர்தல் - முற்றுவித்தல்.
3. இர - ஒரு வகை மரம் (இலவம் எனலாம்); காழ் - விதை (கொட்டை); ஈங்கை - ஒரு வகைக் கொடி (இண்டங்கொடி).
4. ஆலி - ஆலங்கட்டி; வால் - வெள்ளை; வீ - மலர்; தாஅய் - பரவிக் கிடக்க.
5. வை - கூரிய; வால் - வாலினைக் கொண்ட; ஓதி - பச்சோந்தி; மை - கரிய; அணல் - தாடி.
6. போது - மலர்; பிணிஅவிழ - கட்டவிழ்ந்து மலர.
7. படாஅ - உறங்காத; பாஅடி - பரந்த அடி; கயவாய் - பெரிய வாய்.
8. கடாஅம் - மதம்; மாறிய - ஒய்ந்த.
9. பொங்குசெலல் - பரவிச் செல்லுதல்; கொண்மூ - மேகம்.
10. மைதோய் - கருமை பொருந்திய; மாதிரம் - திசைகள்; உழிதர - திரிய.
11. அடூஉ - நடுங்குகின்ற; பானாள் - நள்ளிரவு; கங்குல் - இருள்.
12. தமியோர் - தனித்திருப்போர்; மதுகை -வலிமை; தூக்காய் - ஆராயாது.

13. முனிய - வெறுக்கும்படி; முரண்இல் காலை - மாறுபாடு இல்லாத காலத்தும்.
14. கடவுள் சான்ற - கடவுள் தன்மை நிரம்பிய.
15. செய்வினை - செய்ய வேண்டிய தொழில், ஓதல்.
16. விரிஉளை - விரிந்த தலையாட்டம்; பரியுடை - விரைந்தோடும்; நல்மான் - குதிரை.
17. வெருவரு - அஞ்சத்தக்க; வேண்டுபுலத்து - தான் விரும்பும் இடத்தில்; இறுத்த - தங்கிய.
18. கரிகால் - கரிகால் வளவன் என்னும் சோழ மன்னன்; முன்னிலை - (போரில்) முன்பு நிற்றலை; செல்லார் - ஆற்றாதவர்.
19. வாகைப் பறந்தலை - வாகை என்னும் ஊர்ப்புறத்தே நிகழ்ந்த போர்க்களம்; ஆடுபெற - வெற்றி பெற.
20. ஒன்பது குடை - ஒன்பது குடைகளையும்; ஒழித்த - போட்டுச் சென்ற.
21. பீடுஇல் - பெருமையில்லாத; மன்னர்போல - மன்னர் ஒன்பதின்மரைப் போல.
22. ஓடுவை - (தோற்று) ஓடுவாய்.

தோழி கூற்று

நற்றிணை 89 **இளம்புல்லூர்க் காவிதியார்**

திணை : முல்லை

கூற்று

'பொருள் முற்றி மறுத்தந்தான்' எனக் கேட்ட தோழி தலைமகட்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

பொருளீட்டி வருவதற்காகப் பிரிந்த தலைவன் மீண்டும் வந்தான் என்பதைக் கேட்ட தோழி, தலைவியிடம் சென்று, 'தலைவன் வந்துவிட்டான். இனி வாடையால் உன்னை வருத்த இயலாது' என்று மகிழ்ச்சியோடு சொல்லியது.

கொண்டல் ஆற்றி விண்தலைச் செறீஇயர்,
திரைப்பிதிர் கடுப்ப முகடுஉகந்து ஏறி,
நிரைத்துநிறை கொண்ட கமஞ்சூழ் மாமழை
அழிதுளி கழிப்பிய வழிபெயல் கடைநாள்
இரும்பனிப் பருவத்த மயிர்க்காய் உழுந்தின்
அகல்இலை அகல வீசி, அகலாது
அல்கலும் அலைக்கும் நல்கா வாடை,
பரும யானை அயாஉயிர்த் தாஅங்கு,
இன்னும் வருமே தோழி! வாரா
வன்க ணாளரோடு இயைந்த
புன்கண் மாலையும் புலம்பும்முந் துறுத்தே!

தெளிவுரை

“தலைவி! நிரம்பிய சூல் கொண்ட கருமேகம், கீழ்க்காற்று வீசிச் செலுத்தும் வழியில் சென்று வானத்தில் செறிவுற்றது; அலைகள் தம்முள் மோதி உடைவதால் எழும் நீர்த்துளி, புகைப் படலம்போலப் பரந்து உயர்ந்து மலைமுகட்டினை அடைந்தது. அம்மேகம் மழையை நிரம்பப் பெய்து, மழை நீங்கிய கார்ப் பருவமும் தொடங்கியது. அதற்குப் பின்பு வந்த முன்பனிப் பருவத்தில் முடி போன்ற துய்யினைக் கொண்ட காய்களைப் பெற்றுள்ள உழுந்தின் அகன்ற இலைகள் சிதையும்படியாக வீசிய வாடைக்காற்று நம்மை விட்டு அகலாது, அன்பின்றி வருத்திக்கொண்டிருந்தது. இதுவரை நம்மிடம் வந்து சேராத வன்கண்மை மிக்க தலைவரை ஒத்த பண்பினைக் கொண்ட துன்பத்தைச் செய்யும் மாலைப் பொழுதினையும் தனிமைத் துயரத்தினையும் முற்படச் செலுத்தி வந்துகொண்டிருந்தது, அவ்வாடைக்காற்று. அவர் வந்த பிறகும் அந்தக் காற்று அம்பாரம் பூட்டப்பெற்ற யானை பெருமூச்சு விட்டாற்போல இன்னும் வருமோ? வரட்டுமே! வந்தாலும் யாதொரு தீமை யையும் அவ்வாடைக்காற்றால் நமக்குச் செய்ய இயலாது.”

கருத்து

தலைவன் வந்தான்; இனி வாடையால் நம்மை வருத்த இயலாது.

விளக்கம்

"*தலைவி! நாள்தோறும் தனிமையில் உழன்றுகொண்டிருந்த நம்மை மாலைப் பொழுதிலெல்லாம் வாடை வருத்திக் கொண்டேயிருந்தது. நம்மைப் பிரிந்து சென்ற தலைவர் வந்து விட்டார். இனி மாலைப்பொழுதொடு அந்த வாடைக்காற்றும் சேர்ந்து வந்தாலும் நம்மை வருத்த முடியாது" என்று தலைவியிடம் தோழி உவந்து கூறினாள்.*

சொற்பொருள்

1. கொண்டல் - கீழ்க்காற்று; ஆற்றி - செலுத்தும் வழியில் சென்று; விண்தலை - வானத்தில்; செறீஇ - செறிந்து.
2. திரைப் பிதிர் - அலைகளின் சிறுபிசிர்; முகடு - மலையுச்சி; உகந்து ஏறி - உயர்ந்து ஏறி.
3. கமஞ்சூல் - நீர் நிறைந்த; மாமழை - நிறைந்த மழைமுகில்.
4. அழிதுளி - மிக்க பெயலை; கழிப்பிய - பொழிந்த; வழி நாள் - பிற்றை நாள்.
5. இரும்பனிப் பருவத்த - பெரிய பனிக்காலத்தே; மயிர்க்காய் - முடி போன்ற துய்யினைக் கொண்ட காய்.
6. அகலாது - நீங்காமல்.
7. அல்கலும் - நாள்தோறும்; அலைக்கும் - வருத்தும்; நல்கா - அன்பு காட்டாத.
8. பருமம் - அம்பாரம் பூட்டப்பெற்ற; அயா உயிர்த்தல் - பெருமூச்சு விடுதல்.
9. வாரா - இதுவரை வாராதிருக்கும்.
10. இயைந்த - ஒன்றுசேர்ந்த.
11. புன்கண் - துன்பம்; புலம்பு - வருத்தம்.

தோழி கூற்று

நற்றிணை 181 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : முல்லை

கூற்று

வினைமுற்றிப் புகுந்தது கண்ட தோழி மகிழ்ந்து உரைத்தது.

கூற்று விளக்கம்

வினை முடித்துத் திரும்பும் தலைவனைக் கண்ட தோழி, இனித் தலைவியின் துன்பம் அனைத்தும் தீரும் என்று தனக்குள் மகிழ்ந்து சொல்லிக்கொண்டது.

உள்இறைக் குரீஇக் கார்அணல் சேவல்
பிறபுலத் துணையோடு உறைபுலத்து அல்கி,
வந்ததன் செவ்வி நோக்கி, பேடை
நெறிகிளர் ஈங்கைப் பூவின் அன்ன
சிறுபல் பிள்ளையொடு குடம்பை கடிதலின்,
துவலையின் நனைந்த புறத்தது அயலது
கூரல் இருக்கை அருளி, நெடிதுநினைந்து,
ஈர நெஞ்சின் தன்வயின் விளிப்ப,
கையற வந்த மையல் மாலை
ஈரீஇய ஆகலின், இன்ஒலி இழந்த
தார்அணி புரவி தண்பயிர் துமிப்ப
வந்தன்று, பெருவிறல் தேரே;
உய்ந்தன்று ஆகும்இவள் ஆய்நுதல் கவினே.

தெளிவுரை

"வீட்டில் உள்ள கூரையின் இறைப்பினில் தங்கியிருக்கும் கருமையான கழுத்தைக் கொண்ட குருவியின் சேவல் வேற்றுப் புலம் சென்றது. அங்கிருந்த ஒரு குருவிப்பேடையோடு தங்கிப் புணர்ந்து பொழுதைக் கழித்து வந்தது. சேவல் வேறொரு குருவிப் பேடையை இணைந்து வந்ததன் அடையாளத்தன்மை களைக் கண்ட அதன் பேடை, அடர்ந்திருக்கும் ஈங்கையின் பூவைப் போன்ற தன் குஞ்சுகளுடன் கூடி நின்று சேவலைக் கூட்டுக்குள் வாராதவாறு தடுத்தது. அதனால், அச்சேவல்

கூட்டிற்கு வெளியே மழையில் நனைந்தபடி நடுங்கியிருந்தது. அதனைக் கண்ட பெண்குருவி நன்கு சிந்தித்துப் பார்த்துத் தன் அன்பு நெஞ்சினால் சேவலைத் தன்னிடத்தில் வர அழைத்தது. அதனால், ஆண்குருவி பேடையை அணுகியது. இத்தகைய நிகழ்ச்சிக்குரிய கார் கால மாலைப்பொழுதில் மழை ஈரத்தில் நனைந்ததால் மணியின் இனிய ஒலியில்லாது, மாலையணிந்த குதிரைகள் மென்மையான பயிர்களை மிதித்து வர, வெற்றி யினைக் கொண்ட தலைவரது தேர் வந்து சேர்ந்தது. இனித் தலைவியினது அழகிய நெற்றியில் உண்டாகியுள்ள பசலை நீங்கும் (தலைவியின் துயரம் யாவும் நீங்கும்)" என்று தோழி மகிழ்ச்சியுடன் தன்னுள் சொல்லிக் கொண்டாள்.

கருத்து

மாலைப்பொழுதில் தலைவன் தேர் வருவது கண்ட தோழி, 'இனிப் பசலையால் தலைவியின் நெற்றி அழகு கெடாதிருக்கும்' எனத் தனக்குள் சொல்லி மகிழ்ந்தாள்.

விளக்கம்

முன்பொருகால் தலைவன் பரத்தையுறவு காரணமாய்ப் பிரிந்து சென்றிருந்தான். அவன் திரும்பத் தன் இல்லம் வந்த போது தலைவி அவனைச் சினந்து ஒதுக்கினாள். அவன் வருத்த முற்றவனாய் வீட்டிற்கு வெளியிலேயே நின்றிருந்தான். அவள் மனம் இரக்கமுற்றது. அவனைத் தானே வலியச் சென்று ஏற்றுக் கொண்டாள். அந்நிகழ்ச்சி இப்போது தோழியின் நினைவில் எழுந்தது. தலைவனை இப்போது தலைவி முன்புபோலச் சினந்து ஒதுக்க மாட்டாள். பொருளீட்டி வெற்றியோடு வரும் அவனை எதிர் கொண்டு வரவேற்பாள் என்று நினைந்து தோழி இன்புறுகிறாள்.

உள்ளுறை

தன் சேவலின் பரத்தமைச் செயலைக் கண்டு சினமுற்று அதனை ஒதுக்கிய குருவிப்பேடை பின்னர், அதன்மீது இரக்கம் கொண்டு ஏற்றுக்கொண்டது. அவ்வாறே, தலைவன் பரத்தை யரிடம் சென்று திரும்பியபோது தலைவி ஒதுக்கி வைத்தாள். இப்போதோ வினை மேற்சென்று வெற்றியோடு மீண்டு

வருகிறான் என்பதால் மகிழ்வுடன் விரும்பி ஏற்றுக்கொள்வாள் என்பது உள்ளுறைப் பொருளாகும்.

உவமை

சிட்டுக்குருவிக்குஞ்சு பஞ்சு போன்ற தன்மையினைக் கொண்டிருத்தலாலும், வெண்மை நிறத்தைக் கொண்டிருத்தலாலும், கொத்தாயுள்ள திரட்சியினாலும் ஈங்கைப்பூ போன்றுள்ளது எனப்பட்டது.

சொற்பொருள்

1. உள் இறை - வீட்டுக்கூரையின் உள் இறைப்பு; குரீஇ - குருவி; கார்அணல் - கரிய கழுத்து.
2. பிறபுலத்துணை - வேற்றிடத்தில் உள்ள பெண்குருவி; அல்கி - தங்கி.
3. செவ்வி - நேரம்; பேடை - பெண்.
5. சிறுபல் பிள்ளையொடு - சிறிய பல குஞ்சுகளுடன் சேர்ந்து; குடம்பை கடிதலின் - கூட்டுக்குள் நுழைய இயலாதவாறு விரட்டின.
6. துவலை - மழை; புறத்தது - வெளியே இருந்தது.
7. கூரல் இருக்கை - மழையால் நனைந்து நடுங்கியபடி இருக்கும் இருப்பு; அருளி - அருள்கொண்டு.
8. ஈர நெஞ்சு - இரக்கங்கொண்ட நெஞ்சு; தன்வயின் - தன்னிடம்; விளிப்ப - அழைக்க.
9. கையற - செயலற்று விடுதல்; மையல் - மயக்கம்.
10. ஈரீஇய - ஈரத்தால் நனைந்தது.
11. தார்அணி - மாலை அணிந்த; புரவி - குதிரை; துமிப்ப - மிதித்துச் சிதைக்கும்.
12. வந்தன்று - வருகின்றது; விறல் - வெற்றி.
13. உய்ந்தன்று - பிழைத்தது; ஆய்நுதல் - அழகிய நெற்றி.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 354 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

பிரிந்த தலைமகன் வரவுணர்ந்த தோழி தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனுடன் சென்ற சிலர், அவன் ஊரினை நோக்கி நெருங்கி வந்து கொண்டிருக்கிறான் எனத் தோழியிடம் சொல்ல, அவள் அந்நற்செய்தியை மகிழ்வோடு தலைவியிடம் சொல்லியது.

ஈர்ம்பிணவு புணர்ந்த செந்நாய் ஏற்றை
மறியுடை மான்பிணை கொள்ளாது கழியும்
அரிய சுரன்வந் தனரே
தெரியிழை அரிவை,நின் பண்புதர விரைந்தே.

தெளிவுரை

"ஆய்ந்தணிந்த அணிகளையுடைய தலைவியே! தன் காதல் கூடியதனால் மனம் குளிரப் பெற்ற ஆண்செந்நாய், குட்டியினைக் கொண்ட பெண்மானைக் கொல்ல விரும்பாது, அதனை ஒதுக்கி விலகிச் சென்றது. அத்தகைய அஞ்சத்தக்க தன்மையினைக் கொண்ட கடத்தற்கரிய கானத்தைக் கடந்து, உன் பண்புநலன்கள் தம் நினைவில் எழுந்தமையால் நம் காதலரும் விரைவாகவே மீண்டு வந்துகொண்டிருக்கிறார்."

கருத்து

தலைவர் ஊரருகே வந்துகொண்டிருக்கிறார்; கவலையைக் கைவிடு.

விளக்கம்

தன் பெண்நாயைக் கூவி உள்ளம் குளிரப் பெற்ற கொடிய செந்நாய் பிற விலங்கினத்துப் பெண்ணினத்திடமும் அருள் கொண்டதால், அவற்றைக் கொல்லாததோடு அவை அச்சமுற்று நலியாதபடி ஒதுங்கியும் செல்லும். அதனைக் கண்ட தலைவன் உள்ளத்திலே, தன் காதலியின் பெண்மைநலத்தின் பண்பு எழுந்து

தோன்ற, அதனால் அவளை அடைய வேண்டும் என்னும் மனவேகம் எழுந்து தூண்ட அவனும் விரைந்து மீண்டான்.

சொற்பொருள்

1. பிணவு, பிணை - பெட்டையைக் குறிக்கும் சொற்கள்; ஏற்றை - ஆணைக் குறிப்பது.
2. மறி - குட்டி; கொள்ளாது - பற்றிக்கொள்ளாது; கழியும் - விலகிப் போகும்.
3. அரிய சுரன் - கடத்தற்கு அரிய காடு.
4. பண்பு - பெண்மைப்பண்பு.

தலைவி கூற்று

கைந்நிலை 28 **புல்லங்காடனார்**

திணை : முல்லை

கூற்று

தோழியைப் பார்த்துத் தலைமகள் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவர் வந்துகொண்டுள்ளார்; இனி என் துன்பம் தணியும் எனத் தலைவி கூறியது.

....
.........பெய்த புறவில் சுடுமான்தேர்
ஒல்லைக் கடவார்; இவர்காணின் காதலர்
சில் ....

தெளிவுரை

மழை நன்கு பொழிகின்ற முல்லை நிலத்தில் விரைந்தோடும் குதிரைகள் பூட்டப்பட்ட தேரினைச் செலுத்தி வருபவர், என் காதலரே. (இனி என் துன்பம் நீங்கிவிடும்.)

கருத்து

தலைவரின் தேர் வந்துகொண்டிருக்கிறது; இனி என் துன்பம் நீங்கும்.

சொற்பொருள்

2. பெய்த - மழை பெய்கின்ற; புறவு - முல்லைக்காடு; கடுமான் - விரைந்தோடும் குதிரை.
3. ஒல்லை - விரைவாய்; கடவுதல் - செலுத்துதல்.

தலைவி கூற்று

கைந்நிலை 27 **புல்லங்காடனார்**

திணை : முல்லை

கூற்று

தோழிக்குத் தலைமகள் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் வந்துகொண்டிருப்பதைத் தலைவி தோழியிடம் கூறியது.

....
......................ா ஒல்கப் புகுதரு
கார்தரு மாலை கலந்தார் வர(வு)உள்ளி,
ஊர்தரும், மேனி பசப்பு.

தெளிவுரை

நிலம் நனைந்து குழையுமாறு மழை பொழியும் மாலை நேரத்தில், என்னைக் கலந்தவர் வருவார் என்று எண்ணி என் மேனியில் பசலை பரவுகின்றது.

கருத்து

தலைவன் வந்ததும் என் மேனியில் ஊர்ந்துள்ள பசலை மறையும்.

விளக்கம்

தலைவன் வந்ததும் நீங்க வேண்டும் என்பதற்காக மேனியில் பசலை படர்கிறது.

சொற்பொருள்

2. ஒல்க - (நிலம்) குழைய.
3. கார் தரு - மழை பொழியும்; மாலை - மாலைப்பொழுது; கலந்தார் - என்னைக் கூடியவர்; வரவு உள்ளி - வருவதை நினைந்து.
4. மேனி - உடல்; பசப்பு - பசலை; ஊர்தரு - படர்கிறது.

இல்லம் சேர்ந்த தலைவன் இன்புற்றிருத்தல்.

தோழி கூற்று

கலித்தொகை 16 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பொருள்வயிற் பிரிந்த இடத்து அவன் போகிய காட்டது கடுமை நினைந்து ஆற்றாளாகிய தலைமகள், 'அவர் பொருட்டாக நாம் இவ்வகைப்பட்ட தெய்வங்களைப் பரவுதல் நம் கற்புக்கு இயைவதோ?' எனக் கேட்ட தோழி, 'அவ்வாற்றானே மீண்டனர், நீ கவல வேண்டா' எனக் கூறியது. (அவ்வாற்றானே - அப்பொழுதே; கவல வேண்டா - வருத்த மடையாதே.)

கூற்று விளக்கம்

தலைவன், பொருள்வயிற் பிரிந்தபோது அவன் சென்ற காட்டின் கடுமையை நினைந்து தலைவி ஆற்றாதவள் ஆயினாள். 'தலைவன் பொருட்டுத் தெய்வங்களை வேண்டுதல் நம் கற்புக்குப் பொருந்தியது ஆகுமோ?' என்று தோழியிடம் கேட்டாள். தோழி, 'தலைவர் திரும்பி விட்டார்; நீ கவலைப்பட வேண்டா' எனத் தலைவியிடம் கூறியது.

தரவு

பாடின்றிப் பசந்தகண் பைதல பனிமல்க,
வாடுபு வனப்புஓடி வணங்குஇறை வளைஊர,
ஆடுஎழில் அழிவுஅஞ்சாது, அகன்றவர் திறத்து,இனி
நாடுங்கால், நினைப்பதுஒன்று உடையேன்மன்? அதுவுந்தான்.

தாழிசை

தொன்னலம் தொலைபு,ஈங்குயாம் துயர்உழப்பத் துறந்து,உள்ளார்,
துன்னி,நம் காதலர், துறந்துஏகும் ஆர்இடைக்
'கன்மிசை உருப்புஅறக் கனைதுளி சிதறு'என,
இன்னிசை எழிலியை இரப்பவும் இயைவதோ?

புனைஇழாய்! ஈங்குநாம் புலம்புறப், பொருள்வெஃகி
முனைஎன்னார் காதலர் முன்னிய ஆற்றிடைச்
'சினைவாடச் சிறக்கும்நின் சினம்தணிந் தீக!'எனக்
கனைகதிர்க் கனலியைக் காமுறல் இயைவதோ?

ஒளியிழாய்! ஈங்குநாம் துயர்கூரப் பொருள்வயின்
அளிஒரீஇக் காதலர் அகன்றுஏகும் ஆரிடை
'முளிமுதல் மூழ்கிய வெம்மைதீர்ந்து உறுக!'என
வளிதரும் செல்வனை வாழ்த்தவும் இயைவதோ?

எனஆங்கு–

சுரிதகம்

செய்பொருள் சிறப்புஎண்ணிச் செல்வார்மாட்டு இனையன
தெய்வத்துத் திறம்நோக்கித் தெருமரல், தேமொழி!
வறன்ஓடின் வையத்து வான்தரும் கற்பினாள்
நிறன்ஓடிப் பசப்பூர்தல் உண்டுஎன
அறன்ஓடி விலங்கின்றுஅவர் ஆள்வினைத் திறத்தே.

தெளிவுரை

"உறக்கம் இல்லாமையால் என் கண்கள் பசப்புற்றன; கண்ணீரால் நிறைந்து, நிறம் மாறப் பெற்று, அழகு கெட்டுள்ளது. வளைந்த முன்கைகளின்றும் வளைகள் கழன்று விழுகின்றன; என் அழகு கெடுமே என்னும் வருத்தமின்றித் தலைவர் பிரிந்து சென்றார். அவர் பொருட்டு இப்போது ஒரு செயலைச் செய்யலாமா எனக் கருதுகின்றேன்; ஆராயுங்கால் அது நம் கற்புக்குப் பொருந்துவதாய் இல்லை" என்று கூறித் தலைவி தோழியிடம் பேசுகிறாள்.

"நம் காதலர் நம் பழைய அழகெலாம் கெட்டு நாம் வருத்தத்திலே அழுந்தும்படி நம்மைக் கைவிட்டுப் போயினார்.

நம்மைத் துறந்து அவர் செல்லும் வழியில், 'கல்லின்மேல் உண்டான வெப்பம் நீங்குமாறு, மிகுதியான மழைத்துளியைச் சிதறு' என்று இனிய ஓசையைக் கொண்ட மேகத்தை இரந்து வேண்டினால் அது நம் கற்பிற்குப் பொருந்தியது ஆகுமா?

"அணிகளை அழகுறப் புனைந்துள்ள தோழியே! நாம் இங்குத் தனிமைத் துன்பத்தால் வருந்துகிறோம். அவர் பொருளை விரும்பிப் பகைப்புலம் என்று கருதாதவராய்ச் செல்லுதற்கரிய வழியிலே சென்றுவிட்டார். அவ்வழியில் 'மரக்கொம்புகளை வாடச்செய்யும் உன் சினம் தணியட்டும்' என்று செறிந்த கதிர்களைக் கொண்ட ஞாயிற்றினை நாம் வேண்டினால் அது நம் கற்பிற்குப் பொருந்தியது ஆகுமோ?

"ஒளி பொருந்திய அணிகளை அணிந்துள்ள தோழியே! இங்கே நாம் தனித்திருந்து வருந்தும்படியாக, நம்மிடம் அருள் இன்றி, பொருள்மீது ஆசை கொண்டு தலைவர் நம்மை விட்டு அகன்று போயுள்ளார். அவர் செல்லும் வழியில், 'புதர்களில் பற்றி எரிகின்ற நெருப்பிலிருந்து எழும் வெப்பத்தைப் போக்கிட, 'அவர்மீது குளிர்ந்து வீசு' என்று நாம் காற்றுத் தேவனை வேண்டினால் அது தம் கற்பிற்குப் பொருந்தியது ஆகுமோ?" என்று தலைவி தோழியிடம் வினவினாள்.

அதற்குத் தோழி, "தேன் போன்ற மொழியாளே! பொருளால் உண்டாகும் சிறப்புகளை நினைத்துப் பொருள்தேடப் போயுள்ள வரை நினைத்து மனஞ்சுழலாதே! உலகமே பஞ்சத்தால் வறட்சி யுற்றுத் துன்புறுங்காலத்தில், மழையைப் பெய்விக்கும் கற்புடைய வளான உன் அழகு கெட்டுப் பசலை பாய்ந்துவிடுமே என்று அந்த அறக்கடவுள் கருதி, தானே தலைவன் பொருள் தேடி யிருக்கும் இடத்திற்கு விரைந்து சென்று அவனைப் பொருள் தேடும் முயற்சியினின்றும் விலக்கியது; ஆதலின், தலைவர் திரும்பிவிட்டார். நீ கவலை கொள்ள வேண்டா" என்று பதில் கூறினாள்.

கருத்து

தலைவியே! கலங்காதே; தலைவர் திரும்பிவிட்டார்.

விளக்கம்

'மழையையும் ஞாயிற்றினையும் காற்றினையும் தலைவர் செல்லும் வழியில் நலமருள வேண்டிக்கொள்வது நம் கற்புக்கு இயைந்ததாய் இருக்குமா?' என்று கேட்ட தலைவியிடம் தோழி, 'நீ வேண்டுதல் எதற்கு? வேண்டா. உன் கற்பின் பெருமையால் அறக்கடவுள் தானே சென்று உதவியுள்ளார். தலைவர் திரும்பி விட்டார்' என்று தலைவியின் கற்பின் உயர்வு கூறி, அவள் மனக்கலக்கத்தைப் போக்குகின்றாள், தோழி!

சொற்பொருள்

1. பாடு - தூக்கம்; பைதல் - வருத்தம்; பனி - கண்ணீர்; மல்க - பெருக.
2. வாடுபு - கெட்டு; ஓடி - அழிந்து; வணங்குஇறை - வளைந்துள்ள முன்கை; ஊர - கழல.
3. திறத்தில் - சார்பாக.
4. நாடுங்கால் - ஆராயுமிடத்து.
5. தொலைபு - அழிய, கெட; உழப்ப - அழுந்த.
6. துன்னி - (பொருள் மேல்) ஆசை கொண்டு; ஆர் இடை - வழிஇடத்தே.
7. கன் - கல் - மலை; உருப்பு - வெப்பம்; கனை - மிகுதி.
8. எழிலி - மேகம்; இரத்தல் - வணங்கிக் கேட்டல்; இயைவதோ? - பொருத்தமானது ஆகுமோ?
9. புலம்புற - தனிமையுற; வெஃகி - விரும்பி.
10. முன்னிய - செல்லக் கருதிய.
11. சினை - கொம்பு, கிளை; தணிந்தீக - தணிக.
12. கனை - மிகுதி; கனலி - ஞாயிறு; காமுறுதல் - விருப்பமுறுதல், வேண்டுதல்.
14. அளி - அருள்; ஒரீஇ - நீங்கி.
15. முளி - மரக்கணு, புதர்.
16. வளிதரும் செல்வன் - காற்றைத் தரும் கடவுள், காற்றுக்கடவுள்.
18. இனையன - இத்தன்மையன.
19. தெருமரல் - மனம் சுழலுதல்.
20. வறன் - வறட்சி; வான் - மழை.
21. நிறன்ஓடி - அழகு கெட்டு; பசப்பூர்தல் - பசலை பூத்தல்.
22. அறன் - அறக்கடவுள்; விலங்கின்று - விலக்கிற்று; ஆள்வினை - முயற்சி.

தலைவன் கூற்று

திணைமாலை நூற்றைம்பது 115 **கணிமேதாவியார்**

திணை : முல்லை

கூற்று

வினைமுற்றி மீண்ட தலைமகன் தலைமகட்குத் தூது விடுகின்றானாய்த் தூதிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தன் செயலை முடித்துத் திரும்பி வந்து சேர்ந்த தலைவன், தான் வந்து விட்டதைத் தலைவியிடம் கூறுமாறு தோழியிடம் சொல்லியது.

படுந்தடங்கண் பல்பணைபோல் வான்முழங்கல், மேலும்
கொடுந்தடங்கண் கூற்றுமின் ஆக – நெடுந்தடங்கண்
நீர்நின்ற நோக்கி! நெடும்பணைமென் தோளாட்(கு)த்
தேர்நின்ற(து) என்னாய் திரிந்து.

தெளிவுரை

"அடிப்பதால் ஒலி எழும்பும் பாகத்தையுடைய பல முரசுகளைப் போன்று மேகங்கள் இடித்து ஆரவாரம் செய்கின்றன; மேலும், கொடிய பெருங்கண்களைக் கொண்ட எமனைப் போல் மின்னல் பளிச்சிடுகிறது. அவற்றைக் காணும் தலைவி வருந்தியிருப்பாள். அதனைக் கண்டு பொறுத்திட இயலாது, நீர்த்துளி நிறைந்து நிற்கின்ற நீண்ட பெரிய கண்களைக் கொண்ட தோழியே! நீண்ட மென்மையான தோள் களைக் கொண்ட தலைவியிடம் என் தேர் திரும்பி வந்து இல்லத்து வாயிலில் நின்றிருக்கின்றது எனச் சொல்" என்று தலைவன் தோழியைப் பார்த்துச் சொன்னான்.

கருத்து

தலைவன் தான் வந்துவிட்ட செய்தியைத் தலைவியிடம் சொல்லுமாறு தோழியிடம் கேட்டுக்கொள்கிறான்.

குறிப்பு

கார் காலம் தொடங்கியதால் மயங்கிய தலைவியைக் கண்டு கலங்கிய தோழி, வீட்டு வாயிலின் முன்னே தலைவன் வரவை எதிர்நோக்கி

நின்றிருந்தாள். அவ்வளவில் தலைவன் தேரோடும் திரும்பி வந்து சேர, அவன் அவளை நோக்கித் தான் வந்திருப்பதைத் தலைவியிடம் கூறுமாறு கேட்டுக்கொண்டான்.

சொற்பொருள்

1. படும் - ஒலிக்கின்ற; தடங்கண் - இமைப்புறும் அகன்ற கண் (கொண்ட); பல்பனைபோல் - பலவாகிய முரசங்களைப் போல் (ஒலியெழுப்பி); வான் - முகில்கள்; முழங்க - இடித்து ஆரவாரிக்க.
2. கொடுந்தடங்கண் - கொடிய பெரிய கண்களைக் கொண்ட; கூற்று - எமனைப் போன்று தலைவியை வருத்த, அது பொறாது; நெடும் - நீண்ட; தடம் - பெரிய; கண் - கண்களில்.
3. நீர் நின்ற - கண்ணீர்த்துளி நிற்கும்படியான; நோக்கி - பார்வையைக் கொண்டவளே!; நெடும்பணை - நீண்ட மூங்கிலையொத்த; மென் தோளாட்கு - மெல்லிய தோள்களைக் கொண்ட தலைவிக்கு.
4. தேர் - என் தேர்; நின்றது - வந்து வாயிலிலே நிற்கிறது; என்னாய் - என்று கூறுவாய்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 352 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

பிரிந்த தலைமகன் வரவுணர்ந்த தோழி தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

ஊரினை நோக்கித் தலைவன் நெருங்கி வந்துகொண்டிருப்பதை முன் வந்தார் சிலர் தோழியிடம் கூறினர். அவள் அந்நற்செய்தியை மகிழ்வோடு தலைவியிடம் சொல்லியது.

விழுத்தொடை மறவர் வில்லிடத் தொலைந்தோர்
எழுத்துடை நடுகல் அன்ன விழுப்பிணர்ப்
பெருங்கை யானை இருஞ்சினம் உறைக்கும்
வெஞ்சுரம் அரிய என்னார்
வந்தனர் தோழி!நம் காத லோரே!

தெளிவுரை

"தலைவி! நம் தலைவன் வரும் வழியில் அம்பு தொடுத்தலில் வல்லவரான மறவர்கள், வில்லிலிருந்து அம்புகளைத் தொடுக்க, அதனால் வீரமரணம் எய்திய வீரர்களின் பீடும் பெயரும் பொறிக்கப்பட்ட எழுத்தைக் கொண்ட நடுகல் நடப்பட்டிருக்கும். அந்தக் கல்லைப் போன்ற சொரசொரப்பான பெருங்கையினைக் கொண்ட யானை, பெருஞ்சினம் கொண்டதாய்ச் சுழன்று திரியும் வெம்மையான காடு அது. அது கடத்தற்கு அரியது என்று கருதிக் காலம் தாழ்த்தாது, நம் காதலர் துணிவோடு கடந்து விரைவாகவே நம்மிடம் வந்து விட்டார். (இனி வருத்தம் ஒழிக.)"

கருத்து

நம்மைக் காணும் ஆர்வத்தால் எவ்விதத் துயரையும் ஒரு பொருட்டாகக் கருதாது, நம் காதலர் துணிந்து காட்டைக் கடந்து வந்துவிட்டார்.

சொற்பொருள்

1. தொடை - தொடுக்கப்படும் அம்பு; வில்லிடத் தொலைந்தோர் - எதிரிகள் ஏவிய வில்லை எதிரேற்று வீரமரணம் அடைந்தோர்.
2. எழுத்துடை நடுகல் - பீடும் பெயரும் பொறிக்கப்பட்டுள்ள நடுகல் (நடுகல் - நினைவுக்கல்); பிணர் - சருச்சரை, சொரசொரப்பு.
3. இருஞ்சினம் - கடுங்கோபம்; உறைக்கும் - மிகும்.
4. அரிய - கடத்தற்கு அரிய; என்னார் - என்று கருதாதவராய்.

தோழி கூற்று

அகநானூறு 314 மதுரை அளக்கர் ஞாழார் மகனார் அம்மள்ளனார்

திணை : முல்லை

கூற்று

வினை முற்றிப் புகுந்த தலைமகற்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

பிரிந்து சென்ற தலைவனை நினைந்து தலைவி வாடி நலிவுற்றாள்; அவன் பாணனிடம், 'அவர் இன்னும் வந்திலரே! என் செய்வேன்?' என்று

கேட்டுத் துடிக்கின்றாள். அப்போது தலைவன் தேரூர்ந்து வந்து சேரக் கண்ட தோழி, அவனை வாழ்த்திக் கூறியது.

'நீலத்து அன்ன நீர்பொதி கருவின்,
மாவிசும்பு அதிர முழங்கி, ஆலியின்
நிலம்தண் என்று கானம் குழைப்ப,
இனம்தேர் உழவர் இன்குரல் இயம்ப,
மறியுடை மடப்பிணை தழீஇ, புறவின்
திரிமருப்பு இரலை பைம்பயிர் உகள,
ஆர்பெயல் உதவிய கார்செய் காலை,
நூல்நெறி நுணங்கிய கால்நவில் புரவி,
கல்லெனக் கறங்குமணி இயம்ப வல்லோன்
வாய்ச்செல வணக்கிய தாப்பரி நெடுந்தேர்
ஈர்ம்புறவு இயங்குவழி அறுப்ப, தீம்தொடைப்
பையுள் நல்யாழ் செவ்வழி பிறப்ப,
இந்நிலை வாரார் ஆயின், தம்நிலை
எவன்கொல்? பாண! உரைத்திசின், சிறிது'என,
கடவுள் கற்பின் மடவோள் கூற,
செய்வினை அழிந்த மையல் நெஞ்சின்
துனிகொள் பருவரல் தீர, வந்தோய்!
இனிதுசெய் தனையால் வாழ்க!நின் கண்ணி
வேலி சுற்றிய வால்வீ முல்லைப்
பெருந்தார் கமழும் விருந்துஒலி, கதுப்பின்
இன்நகை இளையோள் கவவ,
மன்னுக, பெரும!நின் மலர்ந்த மார்பே!

தெளிவுரை

“நீருண்ட மேகம் நீலமணிபோலும் கருக்கொண்டு, கருமையான வானில் இடி அதிர முழங்கி மழையினைப் பெய்தது. நிலம் குளிர்ச்சி பெற்று, காடு தழைத்தது. கால்நடைகளை இனவாரியாகப் பிரிக்கும் உழவர் குரல் இனிமையாய் ஒலித்தது. முறுக்கப் பட்ட கொம்புடன் காட்டில் திரிகின்ற கலைமான், குட்டியோடு கூடிய இளைய பெண்மானைத் தழுவிப் பசிய பயிரிலே துள்ளித்

திரிந்தது. இவ்வாறாய், மேகம் மழையைப் பெய்து கார்ப் பருவத்தைத் தோற்றுவித்தது.

“ ‘பாணனே! குதிரை நூல் இலக்கணம் கூறுகின்ற முறைப்படி, வேகத்தால் காற்று என்று கூறத்தக்க குதிரைகளில் கட்டப்பட்ட மணி ‘கல்’ என இடைவிடாமல் ஒலிக்குமாறு தாவிச் செல்ல, வலிய பாகனால் அவை அடக்கிச் செலுத்தப்படுகின்றன. அவ்வாறு தாவிச் செல்லும் செலவினைக் கொண்ட நீண்ட தேர், ஈரம் உள்ள வழித்தடங்களை அறுத்துச் செல்கிறது. இனிய நரம்புத் தொடை கொண்ட யாழில் இனிமை தரும் செவ்வழிப்பண் தலைவனைப் பிரிந்திருப்பார்க்குத் துன்பத்தைத் தருகிறது. இந்த மாலைப் பொழுதில் அவர் வந்து சேராராயின், அவர், ‘குறித்த காலத்தில் வந்துவிடுவேன்’ என்று சூளுரைத்துச் சென்றாரே, அச்சூளின் நிலை என்னாகுமோ? சிறிது கூறு’ என்று தெய்வக் கற்பினளான இளமை வாய்ந்தவளாகிய எம் தலைவி பாணனைக் கேட்டுக் கொண்டிருப்பாள் என்று சொல்லியவாறு, தலைவனே! நீ இங்கு விரைந்து வந்து சேர்ந்துள்ளாய்!

“பெருமை வாய்ந்தவனே! தலைவ! செய்யும் செயல்கள் அழிதற்குக் காரணமான மயக்கம் பொருந்திய நெஞ்சில், வெறுப்பைத் தரும் துன்பம் அகல நீ வந்து சேர்ந்தாய்! அதனால் எம் தலைவிக்கு இனியது செய்தாய்! உன் கண்ணி வாழ்க! நம் வீட்டு வேலியில் படர்ந்துள்ள முல்லையின் வெண்மையான மலர்களாலாகிய மாலையைச் சூடியதால் கமழும் தழைத்த கூந்தலையும், இனிய புன்னகையையும் கொண்ட இளைய வளான எம் தலைவி உன் அகன்ற மார்பினைத் தழுவிக்கொள்ள உன் மார்பு நிலை பெறுக.”

கருத்து

‘தலைவியின் துன்பம் அகல வந்து சேர்ந்துள்ள தலைவனே! நீ தலைவியை என்றும் பிரியாது இனிதே வாழ்ந்திரு’ என்று தோழி தலைவனை வாழ்த்திக் கூறினாள்.

விளக்கம்

‘பாண! மான்கள் துள்ளி விளையாடுவதற்கு ஏற்ற கார் காலம் தொடங்கியது. காற்றெனக் கடுகிச் செல்லும் குதிரைகள்

பூட்டிய தேர் உள்ளது. அதனைச் செம்மையாய் இயக்கும் திறன் கொண்ட வளவனும் இருக்கிறான். செவ்வழிப்பண் இனிமை யாய் ஒலிக்கிறது. இந்நிலையிலும் தலைவன் வாராதிருப்பானா யின், என் நிலை என்ன ஆவது?' என்று தலைவி பாணனிடம் கேட்டாள். அச்சமயம் தலைவனும் வந்து சேர்ந்தான். அவனிடம் தோழி, "ஐய! தலைவி துன்பம் தீர நீ வந்து சேர்ந்தாய்; இனிது செய்தாய்; உன் கண்ணி வாழ்க! இளைய தலைவி உன் அகன்ற மார்பினைத் தழுவிக் கொள்ளுமாறு நீ என்றும் பிரியாதிரு" என்று கூறி வாழ்த்தினாள்.

சொற்பொருள்

1. நீலம் - நீல மணி; நீர்பொதி - நீர் நிறைந்த.
2. மாவிசும்பு - கரிய வானம்; அதிர முழங்கி - அதிர இடித்து; ஆலி - மழைத் துளி.
3. தண்என்று - தட்பமுற்று, குளிர்ந்து; கானம் - காடு; குழைப்ப - தழைத்திட.
4. இனம்தேர் - மாடுகளை ஆராய்கின்ற; இயம்ப - ஒலிக்க.
5. மறி - குட்டி; மடப்பிணை - இளைய பெண்மான்; புறவு - காடு.
6. திரிமருப்பு - முறுக்கப்பட்டுள்ள கொம்பு; இரலை - கலைமான், ஆண்மான்; பைம்பயிர் - பசிய பயிர்; உகள - துள்ளித் திரிய.
7. ஆர்பெயல் - மிக்க பெயல் (மழை); காலை - பொழுது.
8. நூல் நெறி - புரவி நூல் கூறும் முறைப்படி; நுணங்கிய - நுண்ணிதின் அமைந்த; கால்நவில் - வேகத்தால் காற்று என்று சொல்லும்படியான; புரவி - குதிரை.
9. கல் என - 'கல்' என்னும் ஒலியுடன்; கறங்கும் - ஒலிக்கும்; இயம்ப - (இடையறாது) ஒலிக்க; வல்லோன் - வல்லமை வாய்ந்த பாகன்.
10. வாய்ச்செல - தாவிச் செல்ல; வணக்கிய - அடக்கிய; தாப்பரி - தாவும் செலவினைக் கொண்ட.
11. ஈர்ம் புறவு - ஈரம் பொருந்திய முல்லைக்காடு; இயங்குவழி - (தான்) செல்லும் வழியினை; அறுப்ப - அறுத்துச் செல்ல; தீம்தொடை - இனிய நரம்புத்தொடை (நரம்புக்கட்டு).
12. பையுள் - துன்பம், வருத்தம்; செவ்வழி - செவ்வழிப்பண்; பிறப்ப - எழ, தோன்ற.
13. இந்நிலை - இத்தகைய மாலைப்பொழுதில்; தம்நிலை - அவர் (தலைவர்) நிலை.

14. உரைத்திசின் - உரைப்பாய்.
15. கடவுள் கற்பு - தெய்வக்கற்பு; மடவோள் - இளையோள் (எம் தலைவி).
16. செய்வினை - செய்யும் செயல்; அழிந்த - தளர்வதற்குக் காரணமான; மையல் - மயக்கம்.
17. துனி கொள் - வெறுப்பைத் தரும்; பருவரல் - துன்பம்; தீர - நீங்கிட; வந்தோய் - நீ வந்து சேர்ந்தாய்.
18. கண்ணி - தலைமாலை.
19. சுற்றிய - படர்ந்த; வால் - வெண்மை; வீ - பூ.
20. பெருந்தார் - பெரிய மாலை; கமழும் - மணம் வீசும்; விருந்து - புதுமை (உண்டாகும்படி); ஒலி - தழைத்த; கதுப்பு - கூந்தல்.
21. நகை - முறுவல்; கவவ - தழுவிக்கொள்ள.
22. மன்னுக - நிலை பெறுக; மலர்ந்த - அகன்ற.

தோழி கூற்று

அகநானூறு 184 **மதுரை மருதனிளநாகனார்**

திணை : முல்லை

கூற்று

தலைமகன் வினைவயிற்பிரிந்து வந்து எய்திய இடத்துத் தோழி புல்லு மகிழ்வு உரைத்தது.

கூற்று விளக்கம்

பொருள்வயிற்பிரிந்து சென்ற தலைவன் தான் குறித்துச் சொல்லிச் சென்ற பருவத்தே தப்பாது மீண்டு வந்தான்; அதனால் மகிழ்ச்சியுற்ற தோழி, தலைவன் பண்புகளைப் பாராட்டிக் கூறியது.

கடவுள் கற்பொடு குடிக்குவிளக்கு ஆகிய
புதல்வற் பயந்த புகழ்மிகு சிறப்பின்
நன்ன ராட்டிக்கு அன்றியும், எனக்கும்
இனிதுஆ கின்றால்; சிறக்க,நின் ஆயுள்!
அருந்தொழில் முடித்த செம்மல் உள்ளமொடு
சுரும்புஇமிர் மலர கானம் பிற்பட,
வெண்பிடவு அவிழ்ந்த வீகமழ் புறவில்

குண்டைக் கோட்ட குறுமுள் கள்ளிப்
புல்தலை புதைத்த கொழுங்கொடி முல்லை
ஆர்கழல் புதுப்பூ உயிர்ப்பின் நீக்கி,
தெள்அறல் பருகிய திரிமருப்பு எழிற்கலை
புள்ளிஅம் பிணையொடு வதியும் ஆங்கண்,
கோடுடைக் கையர், துளர்எறி வினைஞர்,
அரியல் ஆர்கையர், விளைமகிழ் தூங்க,
செல்கதிர் மழுகிய உருவ ஞாயிற்றுச்
செக்கர் வானம் சென்ற பொழுதில்,
கற்பால் அருவியின் ஒலிக்கும் நல்தேர்த்
தார்மணி பலஉடன் இயம்ப–
சீர்மிகு குரிசில்!நீ வந்துநின் றதுவே.

தெளிவுரை

"சிறப்புமிக்க தலைவனே! வெள்ளிய பிடவ மரத்தின் விரிந்த மலர் மணக்கும் முல்லை நிலத்தில், சிறிய கிளைகளையும் குறுகிய முள்களையும் கொண்ட கள்ளிச்செடியின் புன்மையான உச்சியினை வளமான முல்லைக்கொடி படர்ந்து மூடியது; அக்கொடியினின்றும் காம்பு கழன்று உதிர்ந்த பூக்கள் நீர்நிலையில் பரவலாய் மிதந்தன. முறுக்குண்ட கொம்பினைக் கொண்ட அழகிய கலைமான் ஒன்றதன் மூச்சுக்காற்றினால் அப்பூக்களை ஒதுக்கி,அவ்விடம் இருந்த தெளிந்த நீரினைக் குடித்து, புள்ளிகளைக் கொண்ட தன் அழகிய பெண்மானுடன் அங்குத் தங்கியிருந்தது.

"அவ்விடத்தே, களைக்கொட்டியைக் கையில் கொண்டு களை பறித்து எறியும் உழவர், கள்ளை நிறையக் குடித்து, அதனால் உண்டான களிப்போடு ஆடிக்கொண்டிருப்பர். மேற்குத்திசையில் சென்று மறையும் வெம்மை குறைந்த கதிர்களுடன், ஒளி மழுங்கிச் செந்நிறம் கொண்ட ஞாயிற்றினைக் கொண்ட செவ்வானம் பரந்திருக்கும் மாலைக்காலம் தோன்றியுள்ளது.

"இக்காலத்தே மலையிலிருந்து வீழும் அருவியைப் போன்று ஒலிக்கும் மணிகள் கட்டப்பட்ட தேரில் ஏறி, செயற்கரிய

செயலைச் செய்து முடித்த தலைமைத் தன்மை பொருந்திய உள்ளத்தோடு நீ இங்கு வந்து நிற்கிறாய்.

"இவ்வாறு நீ வந்து நிற்கும் தன்மை, தெய்வக் கற்பு வாய்ந்து, உங்கள் குடிக்கு விளக்கம் தரும் மகனைப் பெற்ற தலைவிக்கு மட்டுமன்று, எனக்கும் இனிமையைத் தந்தது; தலைவ! நீ நீடூழி வாழ்க!

கருத்து

பிரிந்தபோது சொன்னபடி நீ தப்பாது வந்து நிற்பது, கற்புமிக்க தலைவிக்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது.

விளக்கம்

"சிறப்பு மிகுந்த தலைவனே! செவ்வானம் பரவியுள்ள இம் மாலைப்பொழுதில், நல்ல தேரில் கட்டப்பட்டு மணிகள் ஒலிக்க வண்டு ஒலிக்கும் மலர்களைக் கொண்ட கானம் பிற்பட, அரிய வினை முடித்த பெருமிதத்தோடு நீ வந்து நிற்கிறாய்.

"இச்செயல் தெய்வக் கற்புடன் குடிக்கு விளக்கம் ஆகிய புதல்வனைப் பெற்றெடுத்த புகழ் மிகுந்த சிறப்பினைக் கொண்ட தலைவிக்கே அல்லாமல் (இதுவரை அவள் வருந்தியபோது வருந்தி, அவளை ஆற்றுவித்துக்கொண்டிருந்த) எனக்கும் இனிமையைத் தருகின்றது. உன் ஆயுள் பெருகட்டும்!" எனப் பொருள்வயிற் பிரிந்து சென்ற தலைவன் மீண்டும் இல்லம் வந்தபோது தோழி மகிழ்ந்து கூறினாள்.

குறிப்பு

1. காட்டில், கள்ளிச்செடியின் காய்ந்த உச்சியை முல்லைக் கொடி மறைத்திருப்பது, தலைவன் பிரிவால் உண்டான வருத்தத்தைப் பிறர் அறியா வண்ணம் தலைவி தன் கற்பினால் ஆற்றியிருந்த தன்மையைக் குறிக்கும்.

2. மறைந்திருந்த பூக்களைத் தன் மூச்சினால் விலக்கி, நீரினைப் பருகிய ஆண்மான் தன் பெண்மானுடன் தங்குவது, தலைவன் தலைவியின் வாட்டத்தைப் போக்கி, அவளுடன் தங்கி இன்ப வாழ்வு வாழவிருப்பதைப் புலப்படுத்துவதாய் அமைகிறது.

சொற்பொருள்

1. குடிக்கு விளக்கு - குடும்ப விளக்காகிய தலைவி.
2. பயந்த - பெற்றெடுத்த.
3. நன்னராட்டி - நற்பண்புகளை ஆள்பவள் (நன்னர் - நன்மை), தலைவி.
4. இனிது ஆகின்று - இனிமை செய்கின்றது.
5. செம்மல் - தலைமைத் தன்மை.
6. சுரும்பு - வண்டு; இமிர் - ஆரவாரிக்கும்; கானம் - காடு.
7. பிடவு - பிடவ மலர்; அவிழ்ந்த - மலர்ந்த; வீ - மலர்.
8. குண்டை - குட்டையான; கோட்ட - கிளைகளைக் கொண்ட; கள்ளி - முள்ளில் ஒரு வகைச் செடி.
9. தலை - உச்சி; புதைத்த - மறைத்த; முல்லை - முல்லைக்கொடி.
10. ஆர்கழல் - காம்பு கழன்ற; உயிர்ப்பு - பெருமூச்சு.
11. தெள்அறல் - தெளிந்த நீர்; பருகிய - குடித்த; கலை - ஆண்மான்.
12. பிணை - பெண்மான்; வதியும் - தங்கும்; ஆங்கண் - அவ்விடத்தே.
13. கோடு - களைக்கொட்டு; துளர் - களை; வினைஞர் - தொழிலாளர் (உழவர்).
14. அரியல் - கள்; ஆர்தல் - உண்ணுதல், குடித்தல்; விளைமகிழ் - மகிழ்வை விளைவிக்கும்; தூங்கல் - ஆடல்.
15. மழுகிய - வெம்மை குறைந்த.
16. செக்கர் வானம் - சிவந்த வானம்.
17. கல் - மலை.
18. தார்மணி - மாலையாகிய மணிகள்; இயம்ப - ஒலிக்க.
19. சீர்மிகு - சிறப்பு வாய்ந்த; குரிசில் - தலைவன்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 362 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

சேணிடைப் பிரிந்த தலைமகன், இடைநிலத்துத் தங்காது இரவின்கண் வந்துழித் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தொலைவிடம் நோக்கிப் பிரிந்து சென்ற தலைவன் தான் சென்ற பணி முடிந்து திரும்பினான்; வழியிடையே இரவில் தங்கினால் தலைவியைக் காண மிகுந்த நேரம் ஆகும் என்பதால், தொடர்ந்து பயணம் செய்து இரவிலேயே தன் இல்லத்தை அடைந்தான். அதைக் கண்ட தோழி, அவனைப் பாராட்டிக் கூறியது.

பதுக்கைத்து ஆய ஒதுக்கரும் கவலைச்
சிறுகண் யானை உறுபகை நினையாது,
யாங்குவந் தனையோ பூந்தார் மார்ப!
அருள்புரி நெஞ்சம் உய்த்தர
இருள்பொர நின்ற இரவி னானே?

தெளிவுரை

“பூமாலை அணிந்து பொலிவுடன் விளங்கும் மார்பினைக் கொண்ட தலைவனே! நீ வந்த வழியில் கற்குவியல் நிரம்பி யிருக்கும்; கடந்து செல்லுதற்கு அரிதானது; கவர்த்த வழிகளைக் கொண்டது; சிறிய கண்களைக் கொண்ட யானை திரியும்; இவற்றால் உண்டாகும் துன்பங்கட்கு அஞ்சாமல் எமக்கு அருள் புரிய வேண்டுமென உன் நெஞ்சம் தூண்டிச் செலுத்தியதால் வந்துள்ளாய்; இருள் தடுத்து நிறுத்தும் இந்த இரவிலும் எப்படித் தான் வந்தாயோ?” எனத் தோழி தலைவனைப் பாராட்டிக் கூறினாள்.

கருத்து

இரவையும் பகலையும் பொருட்படுத்தாது எமக்கு அருள் புரிய வந்துள்ளாய்.

விளக்கம்

"ஆறலை கள்வராலும் யானைகளாலும் ஏற்படும் துன்பங் களுக்கு அஞ்சாது, பகற்போதிலுங்கூடக் கடப்பதற்கு அரிய வழியினைக் கடந்து, இருள் பரவி எதிராய் நிற்கும் இரவையும் பொருட்படுத்தாது வந்துள்ள நீ எம்மீது கொண்டுள்ள அருள் உள்ளத்தை எண்ணி மிகவும் வியப்புக் கொள்கிறோம்" என்கிறாள், தோழி.

சொற்பொருள்

1. பதுக்கை - கற்குவியல்; வழிப்பறி கள்வர், தாம் கொன்றதனால் உயிர் பிரிந்த பிணங்களின் மேல் குவிக்கப்படுவது; ஆய - உடையது ஆன; ஒதுக்கு அரும் - செல்லுதற்கு இயலாத; கவலை - கவர்த்த வழி.
2. உறுபகை - பெரும்பகை.
3. யாங்கு - எவ்வாறு?; தார் - மாலை.
5. பொர - தடுக்க.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 500 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

வினைமுற்றி வந்த தலைமகற்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

கருதிச் சென்ற செயலை முடித்துத் திரும்பி வந்த தலைவனை நோக்கித் தோழி சொல்லியது.

கொன்றைப் பூவில் பசந்த உண்கண்
குன்றக நெடும்சுனைக் குவளை போலத்
தொல்கவின் பெற்றன இவட்கே, வெல்போர்
வியல்நெடும் பாசறை நீடிய
வயமான் தோன்றல்நீ வந்த மாறே.

தெளிவுரை

“வெல்லும் போரினை மேற்கொண்டு அகன்ற நீண்ட பாசறையில் நீண்ட காலம் தங்கியிருந்த வலிமைமிக்க புலியைப் போன்ற தலைவனே! நீ திரும்பி வந்துவிட்ட காரணத்தால் கொன்றைப்பூவைப் போலப் பசலை பாய்ந்திருந்த தலைவியின் கண்கள் குன்றச்சுனையிலுள்ள குவளை மலர்போலப் பழைய அழகைப் பெற்றுவிட்டன, பார்!” என்று தோழி தலைவனிடம் கூறினாள்.

கருத்து

நீ மீண்டதால் தலைவி தான் இழந்த அழகினைத் திரும்பப் பெற்றாள்.

சொற்பொருள்

2. குன்றக நெடும்சுனை - குன்றினிடத்தேயுள்ள நெடிய சுனை.
3. தொல்கவின் - முன்பிருந்த அழகு; இவட்கு - இவளுக்கு.
4. வியல்நெடும் பாசறை - அகன்ற நீண்ட பாசறை; நீடிய - நீண்ட (காலம் தங்கியிருந்த).
5. வயமான் தோன்றல் - வலிமை மிக்க புலி போன்ற தலைவன்; வந்த மாறே - வந்துவிட்ட காரணத்தால்.

தலைவி கூற்று

கைந்நிலை 34 **புல்லங்காடனார்**

திணை : முல்லை

கூற்று

கார் காலத்தில் தலைமகன் வரத் தலைமகள் மகிழ்வுற்றது.

கூற்று விளக்கம்

பொருளீட்டப் பிரிந்து சென்ற தலைவன் தான் சொன்னவாறு கார் காலத்தில் திரும்ப வந்தான். அதுகண்ட தலைவி மகிழ்ந்து கூறியது.

முல்லை எயிறுஈன, ...
...................................ன மல்கி
கடல்முகந்து கார்பொழிய, காதலர் வந்தார்;
உடன்இயைந்த கெ.......................

தெளிவுரை

முல்லைக்கொடிகள் வெண்பற்களைப் போல அரும்புகளை ஈன்றன. கடல் நீரை முகந்த மேகங்கள் மழையைக் கொட்டு கின்றன. (கார் காலம் தொடங்கியமையால்) தலைவர் என்னை வந்தடைந்தார். இனி அவருடன் பொருந்தி (மகிழ்வேன்).

கருத்து

கார் காலம் தொடங்கியது; தலைவரும் வந்தார்.

சொற்பொருள்

1. முல்லை - முல்லைக்கொடிகள்; எயிறு ஈன - பற்களைப் போன்ற அரும்புகளை ஈன்றன.
2. மல்கி - பெருகி.
3. கார் - மேகம்.
4. இயைதல் - பொருந்துதல்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 358 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

தலைமகள் ஆற்றாமை கண்டு, பிரிந்த தலைமகன் வந்தனனாகத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

பிரிந்து சென்றிருந்த தலைவன், தலைவி ஆற்றாதிருப்பாள் எனக் கருதித் திரும்பி வந்தபொழுது, தோழி தலைவியிடம் சொல்லியது.

கோடுயர் பன்மலை இறந்தனர் ஆயினும்
நீட விடுமோ மற்றே; நீடுநினைந்து
துடைத்தொறும் துடைத்தொறும் கலங்கி
உடைத்தெழு வெள்ளம் ஆகிய கண்ணே.

தெளிவுரை

"நம் காதலர் உயர்ந்த உச்சிகள் பலவற்றைக் கொண்ட மலைகளைக் கடந்து பொருள் தேடச் சென்றிருந்தார். அவர் பிரிந்து போன புதிதில் நீ அவரையே நினைந்து உள்ளம் உருகினாய். உன் கண்களிலிருந்து கண்ணீர் துடைக்கத் துடைக்க நில்லாமல் மடைதிறந்த வெள்ளம்போல் பெருகிக்கொண்டே இருந்தது. அக்கண்ணீர், அவரை அவ்விடத்தே நெடிது காலம் தங்குவதற்கு விடுமோ? விடாதாதலின், அவரும் விரைந்து தம் செயலை முடித்துக்கொண்டு மீண்டும் வந்து சேர்ந்தார்."

கருத்து

உன் கண்ணீர் அவரை விரைவாகவே மீட்டுக் கொணர்ந்தது.

சொற்பொருள்

1. கோடு - மலையுச்சி; பன்மலை - பல மலை.
2. நீட விடுமோ - நீட்டிக்கவிடுமோ?; நீடு நினைந்து - ஓயாமல் அவர் பிரிவை நினைந்து.
3. துடைத்தொறும் - துடைக்குந்தோறும்.
4. உடைத்து எழு வெள்ளம் - அணையை உடைத்து எழும் வெள்ளம்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 499 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

குறித்த பருவத்தின்கண் தலைமகன் வந்துழித் தோழி தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தன் சொல் பிழையாமல் கார் காலத்தில் வந்தமைக்கு மகிழ்ந்து, தோழி தலைவியிடம் சொல்லியது.

பிடவம் மலரத் தளவம் நனையக்
கார்கவின் கொண்ட கானங் காணின்
வருந்துவள் பெரிதென வருந்தொழிற்கு அகலாது
வந்தன ரால்,நங் காதலர்
அம்தீம் கிளவி,நின் ஆய்நலங் கொண்டே.

தெளிவுரை

"அழகும் இனிமையும் அமைந்த பேச்சினைக் கொண்டவளே! முல்லைநிலக் காடு கார் காலத்தால் அழகு பெற்றுத் திகழ்கிறது. பிடவங்கள் மலர்ந்துள்ளன; செம்முல்லைகள் அரும்புகளைத் தோற்றுவித்துள்ளன. கார்ப்பருவத் தொடக்கத்தாலே அழகு கொண்ட காட்டினைக் கண்டால், தலைவி மிகவும் வருந்துவாள் என்று கருதினார், நம் காதலர். அதனாலேயே, தாம் மேற்கொண்ட செயல் முற்றுப்பெற்ற பின்னரும் மேற்கொண்டு முயலாமல் உன் அழகிய நலத்தினைத் துய்ப்பது ஒன்றையே கருதி விரைந்து வந்துள்ளார்" எனத் தோழி தலைவியிடம் கூறினாள்.

கருத்து

கருதிச் சென்ற பணி முற்றுப்பெற்ற பின்னரும் மேலும் முயலாது தலைவியை இன்புறுத்துவதே இனித் தம் கடமையெனக் கருதித் தலைவன் திரும்பி வந்தான்.

சொற்பொருள்

1. நனைய - அரும்பு விட

2. கார் - கார் காலம்; கவின் - அழகு.
3. வருந்தொழில் - மேலும் பணியினை விரும்பி; அகலாது - நீங்கிப்போகாது
5. அம்தீங் கிளவி - அழகிய இனிய பேச்சு; ஆய்நலம் - அழகிய நலம்.

தோழி கூற்று

அகநானூறு 317 **வடமோதங்கிழார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் வரவுணர்ந்த தோழி தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள் தேடச் சென்ற தலைவன் காலம் நீட்டித்தமையால் தலைவி மிகவும் வருந்தினாள். அப்பொழுது தலைவன் வந்தான். அவனது வரவு கண்ட தோழி, தலைவியிடம் மகிழ்ச்சியுடன் கூறியது.

மாக விசும்பின் மழைதொழில் உலந்தென,
பாஅய் அன்ன பகல்இருள் பரப்பி,
புகைநிற உருவின் அற்சிரம் நீங்க,
குவிமுகை முருக்கின் கூர்நுனை வைஎயிற்று
நகைமுக மகளிர் ஊட்டுஉகிர் கடுக்கும்
முதிராப் பல்இதழ் உதிரப் பாய்ந்து,உடன்
மலர்உண் வேட்கையின் சிதர்சிதர்ந்து உகுப்ப,
பொன்செய் கன்னம் பொலிய, வெள்ளி
நுண்கோல் அறைகுறைந்து உதிர்வன போல,
அரவ வண்டினம் ஊதுதொறும் குரவத்து
ஓங்குசினை நறுவீ கோங்குஅலர் உறைப்பத்
துவைத்துஎழு தும்பி, தவிர்இசை விளரி
உதைத்துவிடு நரம்பின், இம்மென இமிரும்
மான்ஏ முற்ற காமர் வேனில்,
வெயில்அவிர் புரையும் வீததை மராஅத்துக்
குயில்இடு பூசல் எம்மொடு கேட்ப

'வருவேம் என்ற பருவம் ஆண்டை
இல்லை கொல்?'என மெல்ல நோக்கி,
நினைந்தனம் இருந்தன மாக,நயந்து ஆங்கு
உள்ளிய மருங்கின் உள்ளம் போல,
வந்துநின் றனரே காதலர்; நந்துறந்து
என்னுழி யதுகொல் தானே; பல்நாள்
அன்னையும் அறிவுற அணங்கி,
நல்நுதல் பாஅய பசலை நோயே?

தெளிவுரை

வானிலிருந்து பெய்யும் மழை முடிவுற்றது; பகலிலும் இருளினைப் பரப்பி வைத்தாற்போன்று புகையின் நிறம்போலும் உருவினைக் கொண்ட பனிக்காலமும் நீங்கியது. கூரிய பற்களை யும், ஒளி பொருந்திய முகத்தையும் கொண்ட பெண்களின் செம்பஞ்சிக் குழம்பு ஊட்டப்பட்ட நகம்போல, முருக்க மரத்தின் குவிந்த அரும்புகள் விளங்குகின்றன, தேனை உண்ணும் விருப்பம் கொண்ட வண்டுகள் ஒன்றுசேர்ந்து மொய்த்துக் கிண்டி முதிராத அவற்றின் பல இதழ்களை உதிர்க்கின்றன. மெல்லிய வெள்ளிக் கம்பிகளை அறுத்தலால் அவை சிறு துண்டுகளாகிப் பொன்னால் செய்யப்பட்ட அழகிய தராசு தட்டினுள் விழுவதுபோல அழகு பெற, கோங்கு மலரினுள் குரவ மரத்தின் உயர்ந்த கிளையில் உள்ள நறும் பூக்கள் உதிர்ந்து விழுகின்றன. ஒலித்து எழுகின்ற வண்டின் கூட்டம், விட்டி சைக்கும் விளரி நரம்பின் ஒலிபோல, இம்மென ஒலிக்கின்றன. மான் இனங்களும் இன்பமுறும் அழகிய வேனிற்காலம் இது.

வெயிலின் ஒளியை ஒத்த மலர்கள் செறிந்த மாமரத்திலிருந்து குயில்கள் ஆரவாரம் செய்கின்றன. இதை நம்முடன் இருந்து கேட்க, 'நான் வந்து சேர்வேன்' என்று தலைவர் சொல்லிச் சென்றார். அவர் சென்ற இடத்தில் இவ்விளவேனில் இல்லை போலும் என நினைந்து வருந்தி இருந்தோம்.

மனத்திண்மை கொண்டோர் உள்ளத்தில் ஒன்றை விரும்பி அதை நினைத்தபோதே அது வந்து சேர்வதுபோல, நம் காதலரும் வந்து சேர்ந்தார்.

பல நாளாக, நம் அன்னையும் அறிந்து வருந்தும் அளவிற்கு நம்மை வருத்தி நம் நல்ல நெற்றியில் பரவியிருந்த பசலை நோய், நம்மை விட்டுப் பிரிந்து இப்போது எங்கே சென்றதோ?

கருத்து

தலைவன் வந்து சேர்ந்தான்; தலைவியின் நெற்றியில் பசலை மறைந்தது.

விளக்கம்

"வேனிற்காலம் வந்துற்றது; 'இளவேனிற்காலத்தில் குயிலின் குரலை உம்மோடு சேர்ந்து கேட்க நான் வந்துவிடுவேன்' என்று சொல்லிச் சென்ற தலைவர் இன்னும் வரவில்லை. அவர் சென்ற இடத்தில் இவ்விளவேனில் இல்லையோ? இருந்தால் திரும்பி யிருப்பாரே" என்று தலைவியும் தோழியும் நினைத்து வருந்தி யிருந்த வேளையில் தலைவன் வந்து நின்றான்.

தோழி, தலைவியை நோக்கி, 'இதுவரை உன் நெற்றியில் நம் அன்னையும் அறியுமாறு பரவி உன்னைத் துன்புறுத்தி வந்த பசலை நோய் இப்பொழுது எங்கே போய்விட்டது?' என்று சொல்லித் தோழி மகிழ்ந்தாள். (தலைவன் வந்தான்; தலைவியின் பசலை நீங்கியது.)

உவமை விளக்கம்

கோங்க மலர்கள் மலர்ந்திருக்கின்றன. அம்மலர்களில் குரவ மரத்தின் உயர்ந்த கிளைகளிலிருந்து அதன் வெண்மையான மலர்கள் உதிர்ந்து கிடக்கின்றன. இக்காட்சி, பொன்னால் செய்த தராசுத்தட்டில், வெள்ளிக்கம்பியின் சிறு சிதறல்கள் கிடப்பன போன்றிருக்கிறது. (கோங்க மலர் - பொன் தட்டு; குரவ மலர்கள் - அத்தட்டில் கிடக்கும் வெள்ளிக் கம்பியின் சிறு சிதறல்கள்).

கோங்க மலர் : *இப்பூ பொன்னிறமானது. மலரிதழ்கள் விரிந்துள்ள நிலையில் விரிந்த குடை போன்றிருக்கும். இம்மலர் இளவேனிற் காலத்தில் மலரும். கோங்க மரம் மலையில் வளரும்.*

குரவ மலர் : *இஃது இளவேனிற்பருவ மலர்; வெண்ணிறம் கொண்டது. குரவம், கோங்கோடு சேர்ந்து வளரும் மரம். குரவ*

மரம் உயர்ந்து வளர்வது; கோங்க மரம் குரவ மரத்தைவிட உயரம் குறைவானது.

சொற்பொருள்

1. மாகம் - விசும்பு; உலந்தென - முடிந்ததாக.
2. பாஅய் அன்ன - பரப்பி வைத்தாற்போன்று.
3. அற்சிரம் - பனிக்காலம்.
4. முருக்கு - முருக்க மலர்; வை - கூரிய.
5. நகைமுகம் - ஒளி பொருந்திய முகம்; ஊட்டு உகிர் - செம்பஞ்சி ஊட்டப்பட்ட நகம் (உகிர் - நகம்); கடுக்கும் - ஒக்கும்.
6. பாய்ந்து - மொய்த்து.
7. சிதர் - வண்டு; சிதர்ந்து - கிண்டி; உகுப்ப - உதிர்க்க.
8. கன்னம் - தராசுக்கோல் தட்டு; பொலிய - அழகு செய்ய.
9. நுண்கோல் - மெல்லிய கம்பி; அறைகுறைந்து - அறுப்பதால் துண்டு பட்டு.
10. அரவம் - ஒலி; குரவம் - ஒரு வகை மரம்.
11. ஓங்கு - உயர்ந்த; சினை - கிளை; வீ - மலர்; கோங்கு - ஒரு வகை மரம்; அலர் - பூக்கள்.
12. துவைத்து - ஒலித்து; தவிர்இசை - விட்டு ஒலிக்கும்; விளரி - ஒரு வகைப் பண்.
13. உதைத்துவிடு - மீட்டி விடும்; இமிரும் - ஒலிக்கும்.
14. ஏமுறுதல் - மகிழ்தல்; காமர் - அழகு.
15. அவிர் - ஒளி; புரையும் - ஒக்கும்; வீ - மலர்; ததை - செறிந்த; மராஅம் - மரா மரம்.
16. பூசல் - ஆரவாரம்.
17. பருவம் - வேனிற்பருவம்; ஆண்டை - (அவர் சென்றுள்ள) அங்கே.
19. நினைந்தனம் - நினைத்து; இருந்தனம் - இருந்தோம்; நயந்து - விரும்பி.
20. உள்ளிய மருங்கின் உள்ளம்போல - உள்ளத்தில் நினைத்த பொருள் நினைத்தபடியே கிடைத்தல்போல.
21. துறந்து - நீங்கி.
22. என்உழியதுகொல் - எவ்விடத்துச் சென்றதோ?
23. அறிவுற - அறியும்படியாக; அணங்கி - வருத்தி.
24. பாஅய - பரவிய, படர்ந்த; பசலை - பிரிவாற்றாமையால் உண்டாகும் வேறுபாடான பொன்னிறம்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 351 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

பிரிந்த தலைமகன் வரவுணர்ந்த தோழி தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பிரிந்து சென்ற தலைவன் ஊரினை நோக்கி நெருங்கி வந்துகொண்டிருந்தான். அதை முன் வந்தார் சிலர் தோழியிடம் சொல்ல, அவள் அந்நற்செய்தியை மகிழ்வோடு தலைவியிடம் சொல்லியது.

அத்தப் பலவின் வெயில்தின் சிறுகாய்
அருஞ்சுரம் செல்வோர் அருந்தினர் கழியும்
காடுபின் ஒழிய வந்தனர், தீர்க,இனிப்
பல்இதழ் உண்கண் மடந்தை!நின்
நல்எழில் அல்குல் வாடிய நிலையே!

தெளிவுரை

“பல இதழ்களைக் கொண்ட குவளை மலர்போலும் மையுண்ட கண்களைக் கொண்ட தலைவியே! அரிய பாலை வழியில் செல்வோர் காட்டுப்பலாவின் வெயிலால் வெம்பிய சிறிய காயைத் தின்று அவ்வழியைக் கடப்பர். அத்தகைய காடுகளைத் தாண்டி நம் தலைவர் திரும்பிவிட்டார். எனவே, நல்லிணக்கமும் அழகும் கொண்ட உன் அல்குல் வாடியிருந்த துன்ப நிலை இனித் தீரட்டும்!”

கருத்து

தலைவர் வந்துகொண்டிருக்கிறார்; அவரை வரவேற்கத் தயாராய் இரு.

குறிப்பு

தலவைன் பிரிந்ததால் வாடிய தலைவி இனி நிலைமாறிப் புதிய எழில் பெறும் வகையில் தலைவன் வந்துகொண்டிருக்கிறான். ஆதலின், ‘உன் வாட்டம் தீர்வது உறுதி’ எனத் தோழி தலைவியிடம் கூறுகிறாள்.

சொற்பொருள்

1. அத்தம் பலவு - வழியில் உள்ள பலா மரம்; வெயில் தின் சிறுகாய் - வெயில் வெப்பத்தால் வெம்பிச் சிறுத்த பலாக் காய்.
2. அருஞ்சுரம் - அரிய பாலை வழி; அருந்தினர் - தின்றவராய்; கழியும் - நீங்கும்.
3. பின் ஒழிய - பிற்பட்டதாய் நிற்க, காடு பிற்படத் தான் முன்னேற; தீர்கினி - தீர்க + இனி - இனி உன் வாட்டம் தீரட்டும்.
4. மடந்தை - பெண் (தலைவி).
5. நல்எழில் - சிறந்த அழகு.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 353 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

பிரிந்த தலைமகன் வரவுணர்ந்த தோழி தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் ஊரினை நோக்கி நெருங்கி வந்துகொண்டிருந்தான். அதை முன் வந்தார் சிலர் தோழியிடம் சொல்ல, அவள் அந்நற்செய்தியை மகிழ்வோடு தலைவியிடம் சொல்லியது.

எரிக்கொடி கவைஇய செவ்வரை போலச்
சுடர்ப்பூண் விளங்கும் ஏந்தெழில் அகலம்
நீஇனிது முயங்க வந்தனர்;
மாஇருஞ் சோலை மலைஇறந் தோரே

தெளிவுரை

"எரியும் நெருப்புக்கொடி சுற்றிச் சூழ்ந்திருக்கும் சிவந்த ஒரு குன்றினைப் போல, ஒளி பொருந்திய அணிகலன் சூழ்ந்து விளங்கும் எழில் மிகுந்த மார்பினைக் கொண்டவன், நம் தலைவன். (அம்மார்பினை நீ இனிதாய்த் தழுவி) மகிழும் வண்ணம், இருள் அடர்ந்த பெருஞ்சோலைகளைக் கொண்ட மலைகளைக் கடந்து சென்ற நம் காதலர் திரும்பவும் வந்து விட்டார்."

கருத்து

தலைவர் வந்துவிட்டார். அவரைத் தழுவி இன்புற்று இனிதே மகிழ்க.

சொற்பொருள்

1. எரிக்கொடி - மலையில் கொழுந்துவிட்டுப் பற்றி எரியும் நெருப்பு வரிசை; கவைஇய - பொருந்திய; செவ்வரை - சிவந்த மலை.
2. சுடர்ப்பூண் - ஒளி பொருந்திய அணிகலன்; ஏந்துஎழில் - மிகுதியான அழகு; அகலம் - மார்பு.
3. முயங்க - தழுவ.
4. மாஇருஞ்சோலை - இருள் அடர்ந்த பெரிய சோலை; மலை இறந்தோர் - மலையைக் கடந்து சென்றவரான (நம் காதலர்).

தோழி கூற்று

ஐங்குறுநூறு 496 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

குறித்த பருவத்தின்கண் தலைமகன் வந்துழித் தோழி தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தன் சொல் பிழையாமல் கார் காலத்தில் வந்தமைக்கு மகிழ்ந்து, தோழி தலைவியிடம் சொல்லியது.

மாபுதல் சேர வரகுஇணர் சிறப்ப
மாமலை புலம்பக் கார்கலித்து அலைப்பப்
பேர்அமர்க் கண்ணி நின்பிரிந்து உறைநர்
தோள்துணை ஆக வந்தனர்
போதுஅவிழ் கூந்தலும் பூவிரும் புகவே.

தெளிவுரை

“விரும்பத்தக்க பெரிய கண்களைக் கொண்ட தலைவியே! விலங்குகள் புதர்களுக்குள்ளே புகுந்துகொள்ளவும், வரகுப் பயிர் கதிர்களை ஈன்று சிறப்படையவும், பெரிய மலைகள் தம்மிடம்

உயிரினங்கள் இயங்காமையால் தனிமையுற்றுத் திகழவும் கார் மேகங்கள் முழக்கமிட்டு மழையினைப் பொழிந்து வருத்து கின்றன. நீ வருந்தும்படியாக உன்னைப் பிரிந்து சென்ற தலைவர் உன் தோள்களுக்குத் துணையாக வந்து சேர்ந்துவிட்டார். இதுவரை பூவின்றி அவிழ்ந்து கிடந்த உன் கூந்தல், பூக்கள் அணியப்பெற்றுப் பொலிவு பெறட்டும்."

கருத்து

நீ உன் கூந்தலைப் பின்னி முடித்துப் பூச் சூடி ஒப்பனை செய்.

சொற்பொருள்

1. மா - விலங்கினம்; புதல்சேர - புதர்களை அடைய; வரகு இணர் - வரகின் கொத்து.
2. மாமலை புலம்ப - பெரிய மலை (இயங்குவாரற்றுத்) தனிமை யுற்றிருக்க; கார் கலித்து அலைப்ப - மேகங்கள் முழக்கமிட்டனவாய் வருத்த.
3. பேர் அமர்க்கண்ணி - மிகவும் விரும்பத்தக்க கண்களைக் கொண்ட தலைவியே; பிரிந்து உறைநர் - பிரிந்து தங்கியிருப்பவர் (தலைவர்).
5. போதுஅவிழ் கூந்தல் - பூச்சூடலின்றி அவிழ்ந்து கிடந்த கூந்தல்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 357 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

பொருள்வயிற்பிரிந்து ஆண்டு உறைகின்ற தலைமகன், குறித்த பருவ வரவு கண்டு கடிதின் மீண்டு வந்தமை, தோழி, தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள் தேடச் சென்ற தலைவன், தான் திரும்புவதாய்க் குறிப்பிட்டுச் சொன்ன பருவம் வந்தது கண்டு, விரைந்து மீண்டு வந்ததைத் தோழி தலைவியிடம் உரைத்தது.

குரவம் மலர, மரவம் பூப்பச்
சுரன்அணி கொண்ட கானம் காணூஉ,
'அழுங்குக செய்பொருட் செலவென' விரும்பி,நின்
அங்கலிழ் மாமை கவின
5 வந்தனர் தோழி,நங் காத லோரே.

தெளிவுரை

"*தலைவி! இளவேனிற்காலம் தொடங்கியதை அறிவிப்பன போல குரவ மரங்கள் மலர்ந்தன; மரவ மரங்கள் பூத்தன. அதனாலே வழியெல்லாம் எழிலுற்று விளங்குவதைக் கண்டு நம் காதலர் இளவேனிற் காலம் தொடங்கியதனை அறிந்தார். 'பொருள் தேடும் முயற்சி இனி அடங்குக' என்று தன் மனத்தைத் தடுத்து, உன்னை வந்து சேர்தலையே விரும்பி, அழகு மிகுந்த உன் மாமை நிறம் வனப்பெய்துமாறு விரைவில் வந்தடைந்தார்.*"

கருத்து

தலைவர் வந்துவிட்டார்; இனிச் சோர்வு நீங்கி, நீயும் அழகு பெறுவாய்!

சொற்பொருள்

1. குரவம், மரவம் - மரங்கள்.
2. அணி கொண்ட கானம் - அழகினைக் கொண்ட காடு; காணூஉ - கண்டு.
3. அழுங்குக - அடங்கி ஒழிக; செய் பொருள் செலவு - பொருள் தேடுவதற்காகப் புறப்பட்ட பயணம்.
4. அம்கலிழ் மாமை - அழகு மிகுந்த மாமை; கவின - மேலும் அழகுபெற.

தோழி கூற்று

நற்றிணை 86 **நக்கீரர்**

திணை : பாலை

கூற்று

குறித்த பருவத்தின் வினை முடித்து வந்தமை கேட்ட தோழி தலைமகளுக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

'இளவேனிற் பருவத்தே வருவேன்' என்று கூறிப் பிரிந்து சென்றான், தலைவன். சொன்னபடியே அவன் வந்ததறிந்த தோழி, தலைவியிடம் சென்று அவனைப் பாராட்டிக் கூறியது.

அறவர் வாழி தோழி! மறவர்
வேல்என விரிந்த கதுப்பின் தோல
பாண்டில் ஒப்பின் பகன்றை மலரும்
கடும்பனி அற்சிரம் நடுங்கக் காண்தகக்
கைவல் வினைவன் தையுபு சொரிந்த
சுரிதக உருவின ஆகிப் பெரிய
கோங்கம் குவிமுகை அவிழ, ஈங்கை
நல்தளிர் நயவர நுடங்கும்
முற்றா வேனில் முன்னிவந் தோரே!

தெளிவுரை

"தலைவி! வீரர்கள் தம் கையில் கொண்டுள்ள வேலினைப் போல விரிந்த மேற்கதுப்பாகிய தோலைக் கொண்டது, பகன்றை மலர். அப்பகன்றை வெள்ளி வட்டிலைப் போல மலர்ந்து விளங்கிய கடுமையான முன்பனிக்காலத்தில் நாம் நடுங்குமாறு நம் தலைவர் பிரிந்து சென்றார். பின்பு, அழகு பொருந்துமாறு அணிகலன்களைச் செய்யும் கைவினை வல்ல கம்மியன், பல வண்ணக் கற்களை இட்டிழைத்துச் செய்த 'சுரிதகம்' என்னும் அணி போன்ற வடிவினைக் கொண்ட அரும்புகள் பெரிய கோங்க மரத்தில் மலர, ஈங்கையின் நல்ல தளிர்கள் கண்டார்க்கு விருப்பம் தருமாறு வளைந்து நிற்கும் இளவேனிற்பருவத்தில் நம் தலைவர் நம்மை நினைந்து திரும்பிவிட்டார். ஆதலால், அவர்

அறவழி நடப்பவரே! அவர் வாழ்க" என்று தோழி தலைவியிடம் கூறினாள்.

கருத்து

"உடலை நடுங்குமாறு செய்யும் முன்பனிக் காலத்தில் நம்மைப் பிரிந்து சென்றார், நம் தலைவர்; சொன்ன சொல் பிழையாது அவர் குறித்துச் சென்ற இளவேனிற் காலத்தே திரும்பிவிட்டார். நீயும் உன் வாட்டத்தைக் கைவிட்டு அவரோடு கூடி மகிழ்ந்திரு" எனத் தலைவியிடம் தோழி கூறினாள்.

குறிப்பு

முன்பனிக் காலத்தில் பகன்றை வெள்ளித்தட்டுப்போல மலரும். இளவேனிலில் கோங்க மரம் பூக்கும்; ஈங்கை தளிர்க்கும்.

பகன்றை மலரின் அகவிதழ்கள் வேலின் இலைபோலவும், புறவிதழ்கள் தோல்போலவும் இருக்கும்.

சொற்பொருள்

1. அறவர் - அறவழி நடப்பவர்; மறவர் - வீரர்.
2. கதுப்பு - பூவின் புற இதழ்; தோல - தோலைக் கொண்டது.
3. பாண்டில் - வட்டில்; பகன்றை - பகன்றைப் பூ.
4. அற்சிரம் - முன்பனிக்காலம்.
5. கைவல் வினைவன் - கைவினைத்தொழிலில் வல்லவன்; தையுபு சொரிந்த - இழைத்துச் செய்த; சுரிதகம் - தலையில் அணியப்பெறும் அணிகலன் வகை.
7. கோங்கம் - கோங்க மரத்தின்; குவிமுகை - குவிந்த மொட்டு; அவிழ - மலர; ஈங்கை - ஈங்கை மரம்.
8. நயவர - காண்பார்க்கு விரும்புமாறு; நுடங்கும் - வளைந்திருக்கும்.
9. முற்றாவேனில் - இளவேனில்; முன்னி - நினைந்து; வந்தோர் - வந்த நம் தலைவர்.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 494 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

வினைமுற்றிப் புகுந்த தலைமகன் தலைமகளுக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

கருதிச் சென்ற செயலை முடித்துத் திரும்பிய தலைவன் தலைவியிடம் கூறியது.

வண்டுதாது ஊதத் தேரை தெவிட்டத்
தண்கமழ் புறவின் முல்லை மலர
இன்புறுத் தன்று பொழுதே
நின்குறி வாய்த்தனம் தீர்கஇனிப் படரே.

தெளிவுரை

"வண்டுகள் தேனையுண்டு பாடவும்; தேரை இனிதே ஒலிக்கவும்; மணம் கமழும் முல்லை நிலத்தில் முல்லை மலரவும்; கார் காலம் தொடங்கி இன்பத்தைக் கொடுக்கிறது. நீ விரும்பிய படி நான் தவறாமல் வந்து சேர்ந்துவிட்டேன். இனி வருந்துவதை விடுக" என்று தலைவன் தலைவியிடம் கூறினான்.

கருத்து

நான் வந்து சேர்ந்தேன்; இனித் துயர் தீர்க.

விளக்கம்

"கார் காலம் தொடங்கியுள்ளது; நானும் வந்துவிட்டேன். உன் கவலை தீர்ந்தது; இனி இன்புற்று வாழ்வோம்" என்று கூறித் தலைவன் தலைவியை மகிழ்விக்கிறான்.

சொற்பொருள்

1. தாது - மகரந்தம்; ஊத - நுகர; தேரை - தவளை இனம்; தெவிட்ட - இனிதே ஒலிக்க.
2. தண்கமழ் - குளிர்ந்து மணம் வீசும்; புறவு - முல்லை நிலம்; முல்லை - முல்லைப்பூ.

3. இன்புறுத்தன்று - இன்பத்தைக் கொடுக்கிறது; பொழுது - கார்ப்பருவம்.
4. நின்குறி - நான் உன்னிடம் குறிப்பிட்ட பருவம்; வாய்த்தனம் - வந்து சேர்ந்துவிட்டேன்; படர் - துன்பம்.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 495 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

வினைமுற்றிப் புகுந்த தலைமகன் தலைமகளுக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

கருதிச் சென்ற செயலை முடித்துத் திரும்பிய தலைவன் தலைவியிடம் கூறியது.

செல்நில மருங்கில் பல்மலர் தாஅய்ப்
புலம்புதீர்ந்து இனிய ஆயின புறவே
பின்இரும் கூந்தல் நல்நலம் புனைய
உள்ளுதொறும் கலிழும் நெஞ்சமொடு
முள்எயிற்று அரிவை,யாம் வந்த மாறே.

தெளிவுரை

“முள் போன்ற கூர்மையான பற்களைக் கொண்ட தலைவியே! பிரிவை நினைந்து நினைந்து இதுவரை வருந்திய மனத்தோடு இருந்தாய். பின்னி முடிக்கும் உன் கருமையான கூந்தலைப் பூச் சூட்டி அழகு செய்ய நான் வந்துவிட்டேன். வந்த வழியெல்லாம் பலவகை மலர்களும் பரவிக் கிடந்து வரவேற்றுத் தனிமையை நீக்கி இனிமை தருவதாய் முல்லை நிலமும் விளங்கிற்று” என்று *தலைவன் தலைவியிடம் கூறி அவளை மகிழ்வித்தான்.*

கருத்து

உன் கூந்தலைப் பின்னி, அதில் மலர் சூட்டி அழகு செய்ய நான் வந்துவிட்டேன்.

குறிப்பு

வெம்மையுற்றுக் கிடந்த முல்லை நிலம் கார் காலம் தொடங்கியதும் இனிதாய் விளங்கியதுபோல, தலைவனின் பிரிவால் வருந்தியிருந்த தலைவியும் அவன் வந்துவிட்டதால் இனி மகிழ்ந்திருக்க வேண்டும் என்பது குறிப்பு.

சொற்பொருள்

1. செல் நிலம் மருங்கு - பிரிந்து சென்று திரும்பி வரும் வழி; தாஅய் - பரவி.
2. புலம்பு - தனிமை; புறவு - முல்லை நிலம்.
3. பின் - பின்னும்; இரும்கூந்தல் - கருமையான கூந்தல்; நலம் - அழகு; புனைய - சூட்ட.
4. உள்ளுதல் - நினைத்தல்; கலிழும் - வருந்தும்.
5. முள் - கூரிய; எயிறு - பல்; வந்தமாறு - வந்ததால்.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 356 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

வினைமுற்றி மீண்டுவந்த தலைமகன் தலைமகளுக்கு அவள் குணம் புகழ்ந்து கூறியது.

கூற்று விளக்கம்

பொருள் தேடும் செயலை முடித்து மீண்டுவந்த தலைவன், தலைவியிடத்தில் அவள் குணநலன்களைப் புகழ்ந்து கூறியது.

உள்ளுதற்கு இனிய மன்ற செல்வர்
யானை பிணித்த பொன்புனை கயிற்றின்
ஒள்எரி மேய்ந்த சுரத்திடை
உள்ளம் வாங்கத் தந்தநின் குணனே.

தெளிவுரை

“செல்வ வளம் கொண்டவர்கள் யானைகளைத் தங்கக் கயிற்றால் கட்டுத்தறியில் கட்டி வைப்பர். அந்தக் கயிற்றைப்

போல, வரிசையாகவும் மஞ்சள் நிறத்தோடும் காட்டுத்தீ பரவிக் காட்டிலுள்ள அனைத்தையும் அழிக்கும். அத்தகைய காட்டு வழியில் சென்று கொண்டிருந்த என் உள்ளத்தை உன் குணத்தின் நினைவு தடுத்து, என்னையும் இங்கே கொண்டுவந்து சேர்த்து விட்டது."

கருத்து

உன் குணநலனே என்னை இங்கே கொண்டுவந்து சேர்த்தது.

சொற்பொருள்

1. உள்ளுதல் - நினைத்தல்.
2. பிணித்த - கட்டிய; பொன்புனை கயிறு - பொன்னாலே செய்யப்பெற்ற கயிறு.
3. ஒள்ளரி - ஒளி பொருந்திய காட்டுத்தீ; மேய்ந்த - தின்ற.
4. வாங்க - மீட்டுக்கொள்ள; குணம் - பண்பும் காதலும் பிறவும்.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 360 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

வினைமுற்றி மீண்டுவந்த தலைமகன், 'சுரத்தருமை நோக்காது வந்தவாறு என்னை?' என வினவிய தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

கருதிச் சென்ற வேலையை முடித்துத் தலைவன் மீண்டான். அவனை நோக்கித் தலைவி, 'வரும் வழியின் கடுமையைக் கருதாது வந்தது எப்படி?' என்று வினவினாள். அதற்கு விடையாகத் தலைவன் கூறியது.

எரிகவர்ந்து உண்ட என்றூழ் நீளிடை
அரிய ஆயினும் எளிய அன்றே
அவவுறு நெஞ்சம் கவவுநனி விரும்பிக்
கடுமான் திண்தேர் கடைஇ
நெடுமான் நோக்கி,நின் உள்ளி,யாம் வரவே!

தெளிவுரை

"மானது கண்கள் போன்று நீண்ட கண்களைக் கொண்ட தலைவியே! என் நெஞ்சத்தில் உன்னைத் தழுவ வேண்டும் என்னும் விருப்பம் மிகுந்து எழுந்தது. ஆதலால், விரைந்தோடும் குதிரைகள் பூட்டப் பெற்ற வலிமையான தேரினை விரைவாய்ச் செலுத்தி வந்தேன். நான் வந்த வழி, காட்டுத் தீப்பற்றி அழிவு செய்ததாயும், வெப்பம் மிகுந்து நீண்டதாய்க் கடப்பதற்கு அரியதாயும் இருந்தாலும் எனக்கு அஃது எளியதாகவே தோன்றியது."

கருத்து

உன்னைத் தழுவும் ஆசையோடு வந்ததால் கடுமையான காடும் எனக்கு எளிமையாகவே தோன்றியது.

சொற்பொருள்

1. எரி - காட்டுத்தீ; கவர்ந்துண்ட - பற்றி அழித்த; என்றூழ் - வெயில்; நீளிடை - நீண்ட பாலை வழி.
2. அரிய - கடப்பதற்கு அரிய.
3. அவவுறு - ஆசை கொண்ட; கவவு - தழுவுதல்.
4. கடுமான் - விரைந்து செல்லும் குதிரை; திண்தேர் - வலிமையான தேர்; கடைஇ - செலுத்தி.
5. நெடுமான் நோக்கி - மான் கண் போன்று நீண்ட கண்களைக் கொண்ட தலைவியே!; உள்ளி - நினைந்து.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 492 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

வினைமுற்றிப் புகுந்த தலைமகன் தலைமகளுக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

கருதிச் சென்ற காரியத்தை முடித்துத் திரும்பிய தலைவன் தலைவியிடம் கூறியது.

நின்னே போலும் மஞ்ஞை ஆல,நின்
நல்நுதல் நாறும் முல்லை மலர,
நின்னே போல மாமருண்டு நோக்க,
நின்னே உள்ளி வந்தனென்;
நல்நுதல் அரிவை காரினும் விரைந்தே.

தெளிவுரை

"நல்ல நெற்றி அமைந்த தலைவியே! உன்னைப் போன்ற சாயலைக் கொண்ட மயில் ஆடும்; உன் நெற்றியின் மணம் போலவே மணக்கும் முல்லைப்பூக்கள் மலரும்; உன்னைப் போலவே மான்களும் மருண்டு பார்க்கும். இத்தகைய இனிய காட்சிகளைக் கண்டு உன்னையே நினைத்தபடி கார்ப்பருவ மேகத்தையும் முந்தி விரைந்து வந்து சேர்ந்துவிட்டேன்."

கருத்து

உன்னை நினைந்து நினைந்து மேகத்தினும் விரைந்து வந்து சேர்ந்தேன்.

விளக்கம்

கார் காலம் தொடங்கியதும் காட்டு நிகழ்ச்சிகள் உன்னைப் பற்றிய நினைவுகளை என்னிடம் மிகுதிப்படுத்தியதால், உன்னைக் காண விரைந்து வந்தேன்.

மயில் களித்தாடியது உன் சாயலை நினைவூட்டியது.

முல்லை மலர்ந்து மணத்தை வீசியது, உன் நெற்றியை நினைவுக்குக் கொண்டுவந்தது.

மான்கள் மருட்சியோடு நோக்கியது உன் பார்வை என்னை விரைந்தழைப்பதுபோல் தோன்றியது.

இவற்றிற்குக் காரணமாய் அமைந்த கார் கால வரவும் என் பயணத்தைத் தூண்டியது.

சொற்பொருள்

1. மஞ்ஞை ஆலும் - மயில் ஆடும்.
2. நுதல் - நெற்றி; நாறும் - மணக்கும்.
3. மா - மான்; மருண்டு நோக்க - மருட்சியோடு பார்க்க.
4. உள்ளி - நினைத்து.
5. அரிவை - பெண், தலைவி; கார் - மேகம்.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 493 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

வினைமுற்றிப் புகுந்த தலைமகன் தலைமகளுக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

கருதிச் சென்ற காரியத்தை முடித்துத் திரும்பிய தலைவன் தலைவியிடம் கூறியது.

ஏறுமுரண் சிறப்ப ஏறுஎதிர் இரங்க
மாதர் மான்பிணை மறியொடு மறுகக்
கார்தொடங் கின்றே காலை
நேர்இறை முன்கைநின் உள்ளியாம் வரவே.

தெளிவுரை

"நேரிய தொடியை அணிந்த முன்கையைக் கொண்ட தலைவியே! உன்னை நினைத்து நான் மீண்டு வரும்போது, இடி முழக்கம் கேட்டு எருதுகள் பகையுணர்ச்சி கொண்டு எதிர் முழக்கமிட்டன; அன்பு மிக்க பெண்மான் அதன் கன்றோடும் மறுகிற்று. கார் காலமும் கால் வைக்கத் தொடங்கியது."

கருத்து

கார் காலம் தொடங்குவதற்கு முன்னரே வந்துவிட்டேன்.

விளக்கம்

"இடி முழக்கத்தினைக் கேட்ட ஏற்றினம் (காளைகள்) அதனைத் தம் போலும் காளைக்கூட்டத்தின் குரல் எனக் கருதி எதிர்க்குரல் கொடுத்து முழங்கி ஆரவாரிக்கும்; அவ்வொலி கேட்டு அஞ்சிய பெண்மான்கள் செய்வதறியாது கன்றுகளோடு மயங்கித் திரியும். இத்தகைய கார் கால நிகழ்ச்சிகள் தொடங்கு முன்னரே நான் உன்னை வந்தடைந்தேன்" என்று தலைவன் தன் வருகையைச் சிறப்பித்துக் கூறினான்.

சொற்பொருள்

1. ஏறு - இடி; முரண்சிறப்ப - மாறுபாட்டுடன் மிகுதியாய் முழங்க; ஏறு - எருது; எதிர் - அதற்கெதிராய்.
2. மாதர் - அழகு; மான்பிணை - பெண்மான்; மறி - குட்டி; மறுக - மயங்க.
3. கார் - கார்ப்பருவம்.
4. நேர் இறை முன்கை - நேரிய தொடியை அணிந்த முன்கையைக் கொண்ட தலைவியே!

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 491 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

வினைமுற்றிப் புகுந்த தலைமகன் தலைமகளுக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

கருதிச் சென்ற காரியத்தை முடித்துத் திரும்பிய தலைவன் தலைவியிடம் கூறியது.

கார்எதிர் காலையாம் ஓவின்று நலிய
நொந்துநொந்து உயவும் உள்ளமொடு
வந்தனெம் மடந்தைநின் ஏர்தர விரைந்தே.

தெளிவுரை

"இளமை பொருந்திய தலைவியே! கார்முகில் முழங்கி எழுந்து பொழியும் கார் காலம் இடையீடின்றி என்னை வருத்தியது. மிகவும் நொந்து வருந்தும் மனத்தோடு, உன் அழகு துணையாய் நிற்க விரைவாய் வந்து சேர்ந்துவிட்டேன்."

கருத்து

குறித்த பருவத்தே வந்து சேர்ந்துவிட்டேன்.

விளக்கம்

"இன்ன பருவத்தில் வருவேன் என உன்னிடம் குறித்துச் சொல்லப்பட்ட பருவம் தவறினால், உன் துன்பம் மிகுமே என்னும் எண்ணம் இடையறாது வருத்தியது; உன் அழகைத் துய்க்க வேண்டும் எனும் ஆர்வம் என் பயணத்தை விரைவு படுத்தியது" எனத் தலைவன் தலைவி மகிழுமாறு கூறுகிறான்.

சொற்பொருள்

1. கார் எதிர் காலை - மழைமேகம் முழங்கி மழை பெய்யும் கார் காலம்; ஓவின்று - இடையீடு இன்றி; நலிய - வருத்த.
2. நொந்து நொந்து - மிகவும் நொந்து; உயவும் - வருந்தும்.
3. ஏர்தர - அழகு துணை நிற்க; வந்தனெம் - வந்து சேர்ந்தேன்.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 415 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்குறித்துப் பிரிந்த தலைமகன், அப்பருவத்திற்கு முன்னே வந்து தலைமகளொடு கூடிச் செல்லாநின்றுழிப் பருவம் வந்ததாகத் தான் பருவத்திற்கு முன்னே வந்தமை தோன்றக் கூறுவான், தலைமகளுக்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் தான் கார்ப்பருவத்தில் திரும்புவதாய்ச் சொல்லிச் சென்றான். ஆனால், அப்பருவம் தொடங்குவதற்கு முன்னரே வந்து தலைவியோடு மகிழ்ந்திருந்தான். அப்போது கார் காலம் தொடங்கியது. தான் அப்பருவத் திற்கு முன்னரே வந்தது தோன்றுமாறு தலைவன் தலைவியிடம் சொல்லியது.

இதுவே, மடந்தைநாம் மேவிய பொழுதே;
உதுவே, மடந்தைநாம் உள்ளிய புறவே;
இனிதுடன் கழிக்கின் இளமை
இனிதால் அம்ம இனியவர்ப் புணர்வே.

தெளிவுரை

“தலைவியே! நாம் கூடி மகிழ விரும்பிய பொழுது, கார் காலமாகிய இதுவே! நாம் இனிது மகிழ்ந்திருக்கக் கருதிய முல்லை நிலமும் அதுவே! இப்பருவத்தில் இந்நிலத்தில் நாம் ஒன்றுகூடிப் பொழுது கழித்தல் இனிமை தரும். இம்முல்லை நிலத்திலிருந்து இனிய காதலரைக் கூடிக் களித்து இன்புற்றிருந் தால், அவ்விளமையும் மிகவும் இனியதாகும்.”

கருத்து

இளமை, இனிய காதலியோடு கூடி நுகர்வார்க்கு இனிது.

சொற்பொருள்

1. நாம் மேவிய பொழுது இதுவே!; மேவுதல் - பொருந்துதல்.
2. நாம் உள்ளிய புறவு இதுவே!; உது - அது, சேய்மைக்கும் அண்மைக்கும் நடுவிலுள்ளதைக் குறிக்கும் ஒரு சுட்டுப் பெயர்; உள்ளிய - கருதிய.

3. இனிதுடன் கழிக்கின் இளமை இனிது.
4. இனியவர்ப் புணர்வு இனிது; ஆல், அம்ம - அசைச்சொற்கள்.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 419 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

இன்ப நுகர்ச்சிக்கேற்ற பருவம் வந்துழித் தலைமகளொடு புறவிற் சென்ற தலைமகன், அவ்விடத்து மாக்களை அவட்குக் காட்டிச் சொல்லியது.

கூற்று விளக்கம்

கூடி இன்பம் துய்த்தற்குரிய கார்ப்பருவம் வந்தது. தலைவன் தலைவியோடு சேர்ந்து முல்லைநிலக் காட்டிற்குச் சென்றான். அவன் அங்கு ஒன்றோடொன்று இணைந்து மகிழ்ந்திருந்த விலங்குகளைத் தலைவிக்குக் காட்டிச் சொல்லியது.

உயிர்கலந்து ஒன்றிய செயிர்தீர் கேண்மைப்
பிரிந்துஉறல் அறியா விருந்து கவவி
நம்போல் நயவரப் புணர்ந்தன
கண்டிகு மடவரல்! புறவின் மாவே.

தெளிவுரை

"இளமைமிக்க தலைவியே! இக்காட்டிலுள்ள விலங்குகள் உயிரோடு கலந்து ஒன்றிய குற்றமற்ற நட்பினைக் கொண்டுள்ளன. ஒன்றை விட்டு ஒன்று பிரிந்திருத்தலையே அறியாதிருப்பன. நம்மைப் போலவே விருப்பம் எழத் தாமும் கூடியிருக்கின்றன. அதனைப் பார்! (நாமும் கூடி மகிழ்வோம்)."

கருத்து

காட்டு விலங்குகளையும் தம்முட் பிரியாதே கூடியிருந்து இன்புறச் செய்யும் கார்ப்பருவத்தே, நானும் காதலியைக் கூடி இன்புற வந்து சேர்ந்தேன்.

சொற்பொருள்

1. செயிர் - குற்றம்; தீர் - அற்ற; கேண்மை - நட்பு.

2. பிரிந்து உறல் அறியா - பிரிந்துவிடுதலை அறியாத; கவவி - அணைத்து.
3. நயவர - விருப்பம் வர.
4. கண்டிகு - காண்பாய்; மா - விலங்கு.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 416 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்குறித்துப் பிரிந்த தலைமகன், பருவத்திற்கு முன்னே வந்து தலைமகளொடு கூடிச் செல்லாநின்றுழி, அதற்கு இனியனாய்த் தன்னுள்ளே சொல்லுவான் போன்று தலைமகள் அறியுமாற்றாற் கூறியது.

கூற்று விளக்கம்

குறித்த பருவத்திற்கு முன்பே வந்து தலைவன் தலைவியைக் கூடினான். அதுபற்றித் தன்னிடம் நிரம்பியிருந்த மகிழ்ச்சியைத் தன் நெஞ்சுக்குக் கூறுவான்போல, தலைவி கேட்குமாறு அவன் சொல்லியது.

போதார் நறுந்துகள் கவினிப் புறவில் தாதுஆர்ந்து
களிச்சுரும்பு அரற்றும் காமர் புதலின்
மடப்பிடி தழீஇய மாவே.
சுடர்த்தொடி மடவரல் புணர்ந்தனம் யாமே!

தெளிவுரை

"முல்லை நிலத்தில் பூத்திருக்கும் புதுப் பூக்களிலே நறுமணம் மிக்க பூந்துகள்கள் நிறைந்துள்ளன. அத்துகள்களிலே படிதலால், வண்டுகள் புதிய அழகினைப் பெறுகின்றன. அவ்வண்டுகள் பூக்களிலே தேனையுண்டு ஆரவாரிக்கும் காட்டிலே, அழகினைக் கொண்ட புதர்களிடையே இனிய தம் பிடியினைக் களிறுகள் தழுவி மகிழ்கின்றன. நானும் ஒளி வீசும் வளையல்களை அணிந்த இளையோளான என் காதலியைப் புணர்ந்து இன்புற்றிருக்கிறேன்" என்று தலைவன் தன் மகிழ்ச்சியைப் புலப்படுத்தினான்.

கருத்து

மடப்பிடியைத் தழுவி நிற்கிறது, களிறு; நானும் மடவரலைப் புணர்ந்து மகிழ்ந்திருக்கிறேன்.

சொற்பொருள்

1. போதுஆர் நறுந்துகள்; போது - பூ; ஆர் - நிறைந்த, துகள் - பூந்தாது; தாது ஆர்ந்து - தேனைக் குடித்து.
2. களிச்சுரும்பு - தேனையுண்டு களித்த வண்டு; அரற்றும் - ஒலிக்கும்.
3. மடப்பிடி - இளமை பொருந்திய பெண்யானை; தழீஇய - தழுவிய; மா - ஆண்யானை.
4. சுடர்த்தொடி - ஒளி வெளிப்படும் வளையல்கள்; மடவரல் - இளையவள்.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 412 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்குறித்துப் பிரிந்த தலைமகன், அப்பருவத்திற்கு முன்னே வந்து தலைமகளொடு கூடிச் செல்லா நின்றுழிப்பருவம் வந்ததாகத் தான் பருவத்திற்கு முன்னே வந்தமை தோன்றக் கூறுவான், தலைமகளுக்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் தான் கார்ப்பருவத்தில் திரும்பி வருவதாய்ச் சொல்லிச் சென்றான். ஆனால், அப்பருவம் தொடங்கிடும் முன்னரே வந்து தலைவியோடு மகிழ்ந்திருந்தான். அப்போது கார் காலம் தொடங்கியது. தான் அப்பருவத்திற்கு முன்னரே வந்தது தோன்றுமாறு தலைவன் தலைவியிடம் சொல்லியது.

காயா கொன்றை நெய்தல் முல்லை
போதுஅவிழ் தளவமொடு பிடவுஅலர்ந்து கவினிப்
பூஅணி கொண்டன்றால் புறவே;
பேரமர்க் கண்ணி ஆடுகம் விரைந்தே.

தெளிவுரை

"மிகுந்த விருப்பம் தரும் கண்களைக் கொண்ட தலைவியே! காயா, கொன்றை ஆகிய மரங்களிலும், நெய்தல், முல்லை ஆகிய கொடிகளிலும், தளவம், பிடவம் ஆகிய செடிகளிலும் பூக்கள் மலர்ந்து முல்லை நிலம் பூவணிந்தாற்போல அழகு கொண்டுள்ளது. நாமும் பொழிலில் விளையாடி இன்புறலாம், வா!"

கருத்து

பொழிலாடி விளையாடுவோம், வா.

குறிப்பு

கோடை வெப்பத்தால் வாடிய மரமும் செடியும் கொடியும் கார் மழையால் தழைத்து மிகுந்த பூக்களைக் கொண்டு நிறைந்து அழகு பெற்றுள்ளபடியால், அவ்வழகை நுகர்ந்து இன்புறுதற்குத் தலைவன் தன் காதலியை அழைக்கிறான். அதே வேளை, தான் சொன்ன கார் காலம் வருவதற்கு முன்னரே தான் வந்துவிட்டதையும் குறிப்பிட்டுச் சொல்கிறான்.

சொற்பொருள்

1. காயா, கொன்றை - முல்லைநிலப் பூமரங்கள்; நெய்தல் - நீர்ப்பூ; முல்லை - முல்லை நில மலர்க்காடு.
2. தளவம், பிடவம் ஆகியவை முல்லைநிலச்செடிகள்
3. நீர்ப்பூ, நிலப்பூ, செடிப்பூ, கொடிப்பூ என எல்லாம் மலர்ந்து முல்லை நிலம் பூவணி கொண்டதுபோல் உள்ளது; புறவு - முல்லை நிலம்.
4. பேரமர்க்கண்ணி - விருப்பம் தரும் பெரிய கண்களைக் கொண்டவள்.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 414 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்குறித்துப் பிரிந்த தலைமகன், அப்பருவத்திற்கு முன்னே வந்து தலைமகளொடு கூடிச் செல்லாநின்றுழிப் பருவம் வந்ததாகத் தான் பருவத்திற்கு முன்னே வந்தமை தோன்றக் கூறுவான், தலைமகளிடம் உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் தான் கார்ப்பருவத்தில் திரும்பி வருவதாய்ச் சொல்லிச் சென்றான். ஆனால், அப்பருவம் தொடங்கிடும் முன்னரே வந்து தலைவியோடு மகிழ்ந்திருந்தான். அப்போது கார் காலம் தொடங்கியது. தான் அப்பருவத்திற்கு முன்னரே வந்தது தோன்றுமாறு தலைவன் தலைவியிடம் சொல்லியது.

புள்ளும் மாவும் புணர்ந்துஇனிது உகளக்
கோட்டவும் கொடியவும் பூப்பல பழுனி
மெல்லியல் அரிவை! கண்டிகும்
மல்லல் ஆகிய மணங்கமழ் புறவே.

தெளிவுரை

"மென்மையான இயல்பினைக் கொண்ட தலைவியே! பறவையினமும் விலங்கினமும் தம்முள் கூடிக் கலந்தனவாய் இன்புற்று மகிழ்கின்றன. கிளையிலும் கொடியிலும் பல்வேறு பூக்கள் பூத்துள்ளன. இத்தகு வளமை கொண்ட மணம் கமழும் காட்டினை நாமும் சென்று காண்போம்" என்று தலைவன் தலைவியிடம் கூறி, தான் குறித்த காலத்திற்கு முன்பே வந்து சேர்ந்ததைக் குறிப்பாய்க் கூறியது.

கருத்து

முல்லைக்காட்டின் இனிய காட்சிகளைக் கண்டு நாம் இன்புற்றிருப்போம்.

குறிப்பு

கார் காலம் தொடங்குவதற்கு முன்பே தலைவன் வந்துவிட்டதால், 'இப்பொழுது கார் காலக் காட்சிகளை இனிதே காண்போம்' எனத் தலைவியிடம் கூறுகிறான்.

சொற்பொருள்

1. புள் - பறவை; மா - விலங்கு; புணர்ந்து + இனிது+ உகள; உகள - துள்ள.
2. கோட்டவும் - கிளையிலுள்ளவையும்; கொடியவும் - கொடியி லுள்ளவையும்; கோடு - கிளை; பழுனி - பழுத்து.
3. மெல் இயல் - மென்மையான இயல்பினைக் கொண்ட; கண்டிகும் - காண்போம்.
4. மல்லல் - வளம்.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 413 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்குறித்துப் பிரிந்த தலைமகன், அப்பருவத்திற்கு முன்னே வந்து தலைமகளொடு கூடிச் செல்லாநின்றுழிப் பருவம் வந்ததாகத் தான் பருவத்திற்கு முன்னே வந்தமை தோன்றக் கூறுவான், தலைமகளுக்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் தான் கார்ப்பருவத்தில் திரும்பி வருவதாய்ச் சொல்லிச் சென்றான். ஆனால், அப்பருவம் தொடங்குவதற்கு முன்னரே வந்து, தலைவியோடு மகிழ்ந்திருந்தான். அப்போது கார் காலம் தொடங்கியது. தான் அப்பருவத்திற்கு முன்னரே வந்தது தோன்றுமாறு தலைவன் தலைவியிடம் சொல்லியது.

நின்நுதல் நாறும் நறுந்தண் புறவில்
நின்னே போல மஞ்ஞை ஆல
கார்தொடங் கின்றால் புறவே
பேர்இயல் அரிவை நாம்நயத் தகவே!

தெளிவுரை

“பெருமைக்குரிய இயல்புகளைக் கொண்ட தலைவியே! உன் நெற்றியைப்போல் மணம் கமழ்கின்ற அழகிய குளிர்ச்சி பொருந்திய முல்லைக்காட்டில் உன்னைப் போலவே சாயலைக் கொண்ட மயில்கள் அகவியபடி இருக்கக் கார் காலமும் தொடங்கிவிட்டது. இக்கார் கால நலத்தையெல்லாம் நாம் துய்த்து மகிழ்வோம்” என்று தலைவன் தலைவியிடம் தான் கார் காலத்திற்கு முன்னரே வந்து சேர்ந்ததைக் குறிப்பாய்க் கூறினான்.

கருத்து

கார் கால அழகு கண்டு களிப்புறுவோம்.

குறிப்பு

தலைவன் வரக் காலம் தாழ்ந்திருப்பின் கார் காலத்தில் தலைவி பெரும் துன்பமுற்றிருப்பாள். இப்போது தலைவன் தலைவியுடன் சேர்ந்திருப்ப தால், இனிமை மிகுந்த கார் காலம் மேலும் இனிமை வாய்ந்ததாயிற்று.

சொற்பொருள்

1. நின்நுதல் - உன் நெற்றியைப் (போன்று); நாறும் - மணக்கும்; புறவு - முல்லை நிலம்.
2. நின்னே போல - உன்னைப் போல; மஞ்ஞை - மயில்; ஆல - அகவ.
3. கார் - கார்காலம்; தொடங்கின்று - தொடங்கிற்று.
4. பேர்இயல் அரிவை - பெருமைக்குரிய இயல்புகளைக் கொண்ட தலைவி; நயத்தக - விரும்ப.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 411 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்குறித்துப் பிரிந்த தலைமகன், அப்பருவத்திற்கு முன்னே வந்து தலைமகளொடு கூடிச் செல்லாநின்றுழிப் பருவம் வந்ததாகத் தான் பருவத்திற்கு முன்னே வந்தமை தோன்றக் கூறுவான், தலைமகளுக்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் தான் கார்ப்பருவத்தில் திரும்பி வருவதாய்ச் சொல்லிச் சென்றான். ஆனால், அப்பருவம் தொடங்குவதற்கு முன்னரே வந்து, தலைவியோடு மகிழ்ந்திருந்தான். அப்போது கார் காலம் தொடங்கியது. தான் அப்பருவத்திற்கு முன்னரே வந்தது தோன்றுமாறு தலைவன் தலைவியிடம் சொல்லியது.

ஆர்குரல் எழிலி அழிதுளி சிதறிக்
கார்தொடங் கின்றால், காமர் புறவே
வீழ்தரு புதுப்புனல் ஆடுகம்
தாழ்இருங் கூந்தல் வம்மதி விரைந்தே.

தெளிவுரை

"தாழ்ந்து தொங்கும் கரிய கூந்தலைக் கொண்ட தலைவியே! மிகுந்த இடி முழக்கத்தைக் கொண்ட மேகங்கள் மிகுதியாய் மழையைப் பெய்தமையால் அழகான முல்லைநிலப்பகுதியிலே கார் காலம் தொடங்கிவிட்டது. பாய்ந்தோடி வீழ்கின்ற அருவியின் புதுப்புனலிலே சென்று நாமும் நீர்விளையாட்டை மேற்கொண்டு இன்புறலாம். விரைந்து வருக!" என்று தலைவன் தலைவியை அழைத்தான்.

கருத்து

கார் காலப் புதுப் புனலில் பாய்ந்து ஆடிக் களித்திடத் தலைவன் தன் விருப்பத்தைத் தெரிவித்தான். தலைவியும் தன் கருங்கூந்தலைத் தவழவிட்டவாறே நீராடப் புறப்பட்டாள்.

குறிப்பு

குறித்துச் சென்ற பருவம் தான் வந்த பின்னர்தான் தொடங்கியது என்பது தோன்ற, ‘கார் தொடங்கின்று’ என்றான்.

சொற்பொருள்

1. ஆர் குரல் - மிகுந்த (இடி) முழக்கம்; எழிலி - மேகம்; அழிதுளி - பெரு மழை.
2. கார் - கார் காலம்; தொடங்கின்று - தொடங்கிவிட்டது; காமர் - அழகிய; புறவே - முல்லை நிலம்.
3. வீழ்தரு - வீழ்கின்ற; புதுப்புனல் - புதிய அருவிநீர்; ஆடுகம் - ஆடுவோம்.
4. தாழ் இருங்கூந்தல் - தாழ்ந்து தொங்கும் கருமையான கூந்தல்.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 417 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்குறித்துப் பிரிந்த தலைமகன், பருவத்திற்கு முன்னே வந்து தலைமகளொடு கூடிச் செல்லாநின்றுழி, அதற்கு இனியனாய்த் தன்னுள்ளே சொல்லுவான் போன்று தலைமகள் அறியுமாற்றாற் கூறியது.

கூற்று விளக்கம்

தான் குறித்துச் சென்ற பருவத்திற்கு முன்பே வந்து தலைவன் தலைவியைக் கூடினான். அதுபற்றி அவனிடம் நிரம்பியிருந்த மகிழ்ச்சியைத் தன் நெஞ்சுக்குக் கூறுவான்போல, தலைவி கேட்குமாறு அவன் சொல்லியது.

கார்கலந் தன்றால் புறவே; பலவுடன்
ஏர்பரந் தனவால் புனமே; ஏர்கலந்து
தாதுஆர் பிரசம் மொய்ப்பப்
போதுஆர் கூந்தல் முயங்கினள் எம்மே!

தெளிவுரை

"முல்லை நிலத்திலே கார் காலம் தொடங்கியுள்ளது. புனங்கள் செழுமையுடன் அழகு பெற்றுள்ளன. அழகிய பூக்களில் தேனுண்ணும் வண்டினங்கள் வந்து மொய்க்கின்றன. புதுப் பூக்களை மிகுதியாய் அணிந்துள்ள கூந்தலைக் கொண்டவளான தலைவியும் என்னைத் தழுவி நிற்கின்றாள்."

கருத்து

கார் காலக் களிப்பில் தலைவி என்னைத் தழுவி நிற்கின்றாள்.

விளக்கம்

கார் காலம் தோன்றுவதற்கு முன்னரே, தான் வந்துவிட்டதைத் தலைவன் தலைவிக்குப் புலப்படுத்துகிறான்.

குறிப்பு

கார் காலத்தால் காடு அழகு பெற்றுள்ளதுபோலத் தலைவி தழுவியதால் தலைவனும் புதிய அழகு பெற்று மிளிர்கின்றான்.

சொற்பொருள்

1. கார் கலந்தன்றால் புறவே - கார்காலம் முல்லை நிலத்தில் தொடங்கியுள்ளது.
2. ஏர் - அழகு; ஏர் கலந்து - அழகிய மலர்களைச் சேர்ந்து.
3. தாது ஆர் பிரசம் - மகரந்தத்துகளை உண்ணும் வண்டுகள், (பிரசம் - வண்டு).
4. போது ஆர் - பூக்கள் நிறைந்த; கூந்தல் - கூந்தலைக் கொண்ட தலைவி; முயங்கினள் - தழுவினள்.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 355 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

நினைந்த எல்லையளவும் பொருள் முற்றி நில்லாது, பெற்ற பொருள் கொண்டு தலைமகளை நினைந்து மீண்ட தலைமகன் அவட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தான் விரும்பிய அளவு பொருளைத் தேடிப் பெறும்வரை சென்ற நாட்டிலேயே தங்காது, தான் அதுகாறும் தேடிப் பெற்ற பொருளாலேயே நிறைவு பெற்று, தலைவியை நினைத்துத் திரும்பிய தலைவன், தலைவியிடம் கூறியது.

திருந்துஇழை அரிவை நின்நலம் உள்ளி
அருஞ்செயற் பொருட்பிணி பெருந்திரு உறுகெனச்
சொல்லாது பெயர்தந் தேனே பல்பொறிச்
சிறுகண் யானை திரிதரும்
நெறிவிலங்கு அதர கானத் தானே.

தெளிவுரை

“திருத்தமான அணிகலன்களை அணிந்துள்ள தலைவியே! அரிதில் ஈட்டத்தக்க பொருளின்மேல் கொண்ட ஆசை எப்படியோ கெட்டொழியட்டும் என்று விட்டுவிட்டேன். பல புள்ளிகளையும் சிறுத்த கண்களையும் கொண்ட யானைகள் நான் சென்ற வழியில் திரிந்தபடியிருந்தன. அந்த வழியில் சிறுசிறு பாதைகள் குறுக்கிட்டன. எதையும் பொருட்படுத்தாது, உன் நலத்தை மட்டுமே நினைந்து, உடன் வந்தவரிடமும் சொல்லிக்கொள்ளாமலேயே நான் திரும்ப வந்துவிட்டேன்.”

கருத்து

தலைவியே! உன் நலனை எண்ணி, ‘ஈட்டிய பொருளே போதும்; இதற்கு மேல் வேண்டா’ என்று கருதி, உடன்வந்தவரிடமும் சொல்லாது தனியே திரும்பிவிட்டேன்.

சொற்பொருள்

1. திருந்துஇழை - திருத்தமான அணி வகைகள்; நின்நலம் உள்ளி - உன் நலத்தை நினைத்து.
2. இனிமேல் என் ஆசை வேண்டுமானால் அங்கேயே தங்கிப் பெரும் அளவில் பொருள் தேடிக்கொள்ளட்டும்; இதுவரை தேடியதே போதும் என முடிவெடுத்து நான் திரும்பிவிட்டேன்.
3. சொல்லாது - உடன் வந்தவரிடமும் சொல்லாமல்; பெயர் தந்தேன் - மீண்டேன்; பல்பொறி - பல புள்ளிகள்.
4. திரிதரும் - திரிந்தபடியிருக்கும்.
5. நெறி விலங்கு - பாதைகள் குறுக்கிடும்; அதர - வழியைக் கொண்ட; கானம் - காடு.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 418 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

குறித்த பருவத்திற்கு உதவ வாராநின்ற வழிக்கண், உருவு வெளிப்பாடு கண்ட தலைமகன், இல்லத்துப் புகுந்துழித் தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன், தான் குறிப்பிட்ட பருவத்திற்குள் வந்துவிட வேண்டும் என்று திரும்ப வந்துகொண்டிருந்தான். இடைவழியில் தலைவியை நினைந்து கொண்டிருந்ததால் ஓர் உருவ வெளித்தோற்றம் அவன் கண்முன் தோன்றுகிறது. வீட்டிற்கு வந்து சேர்ந்ததும் அவன் தலைவியிடம் அதைப்பற்றிக் கூறியது.

வானம் பாடி வறங்களைந்து ஆனாது
அழிதுளி தலைஇய புறவில், காண்வர
வான்அர மகளோ நீயே
மாண்முலை அடைய முயங்கி யோயே.

தெளிவுரை

“வானம்பாடியின் நீர்வேட்கை என்னும் வறுமையைப் போக்கி, பெரு மழை பொழியத் தலைப்பட்ட முல்லைநிலக்

காட்டின் வழியே நான் வந்துகொண்டிருந்தேன். அப்போது நான் கண்ணாரக் காணுமாறு வானர மகள்போல என்முன் வந்து தோன்றித் தன் மாண்பான மார்பகங்கள் முற்றும் பொருந்த என்னைத் தழுவியவள் நீதானோ? இதனை எனக்குக் கூறு!"

கருத்து

கானத்தில் என்னை முழுமையாய்த் தழுவியவளே, நீ வானர மகளோ?

குறிப்பு

தலைவி இல்லத்திலிருந்தாள். எனினும் முல்லை நிலத்தில் தலைவி தன்னை மார்போடு இறுகத் தழுவியது போன்ற உருவெளித் தோற்றத்தைக் காண்கிறான், தலைவன்; அதனால் அவளை நீ ஒரு வானர மகளோ என்று கேட்கிறான்.

முல்லை நிலத்தில் தலைவி தன்னைத் தழுவியதாய்த் தலைவன் கூறுவது உண்மை நிகழ்ச்சியன்று; அக்காட்சி ஒரு மாயத் தோற்றமே. தான் விரும்பும் ஒருவர் உருவம் தன் முன்னே நிற்பதுபோலக் காண்பது உருவெளிக் காட்சி எனப்படும்.

சொற்பொருள்

1. வானம்பாடி - ஒரு வகைப் பறவை; வறம் - வறுமை; களைந்து - நீக்கி; ஆனாது - அமையாது.
2. அழிதுளி - மிகுந்த துளி; தலைஇய - பெய்துவிட்ட; புறவு - முல்லை நிலம்; காண்வர - காட்சி தோன்ற.
3. வானர மகள் - தெய்வ மங்கை.
4. அடைய - முழுவதும்.

தலைவன் கூற்று

அகநானூறு 29 **வெள்ளாடியனார்**

திணை : பாலை

கூற்று

வினை முற்றி மீண்ட தலைமகன், 'எம்மையும் நினைத்தறிதிரோ?' என்ற தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள் தேடச் சென்ற தலைவன் மீண்டும் இல்லம் வந்தபோது, 'எம்மையும் நினைத்தீர்களா?' என்று கேட்ட தலைவியிடம் விடையாகத் தலைவன் சொல்லியது.

'தொடங்குவினை தவிரா, அசைவுஇல், நோன்தாள்,
கிடந்துஉயிர் மருகுவது ஆயினும், இடம்படின்
வீழ்களிறு மிசையாப் புலியினும் சிறந்த,
தாழ்வுஇல் உள்ளம் தலைத்தலைச் சிறப்பு,
செய்வினைக்கு அகன்ற காலை, எஃகுஉற்று
இருவேறு ஆகிய தெரிதகு வனப்பின்
மாவின் நறுவடி போல, காண்தொறும்
மேவல் தண்டா மகிழ்நோக்கு உண்கண்
நினையாது கழிந்த வைகல், எனையதூஉம்,
வாழலென் யான்எனத் தேற்றி, பல்மாண்
தாழக் கூறிய தகைசால் நல்மொழி
மறந்தனிர் போறிர் எம்'எனச் சிறந்தநின்
எயிறுகெழு துவர்வாய் இன்நகை அழுங்க
வினவல் ஆனாப் புனையிழை! கேள்இனி
வெம்மை தண்டா எரிஉகு பறந்தலை,
கொம்மை வாடிய இயவுள் யானை
நீர்மருங்கு அறியாது, தேர்மருங்கு ஓடி,
அறுநீர் அம்பியின் நெறிமுதல் உணங்கும்
உள்ளுநர்ப் பனிக்கும் ஊக்குஅருங் கடத்திடை,
எள்ளல் நோனாப் பொருள்தரல் விருப்பொடு
நாணுத்தளை ஆக வைகி, மாண்வினைக்கு
உடம்பு ஆண்டு ஒழிந்தமை அல்லதை,
மடம்கெழு நெஞ்சம் நின்உழை யதுவே!

தெளிவுரை

வினை முடித்து வந்த தலைவனிடம் தலைவி, 'பிரிந்திருந்த போது எம்மை நினைத்தீரோ' எனக் கேட்டபோது, 'உடல் அங்கேயும் உயிர் இங்கேயுமாக இருந்தேன்' எனத் தலைவன் கூறிய பாடல் இது.

'தலைவ! மாவடு போன்ற என் அழகிய கண்களை நினையாது வினையின்பொருட்டு நீங்கியபோது, 'பிரியேன், பிரிந்தால் உயிர் வாழேன்' என்று கூறிப் பிரிந்தீர். பட்டினி கிடந்து உயிர் நீங்கும் நிலை ஏற்படினும் புலி தான் தொடங்கிய வினையை விட்டு விடாது; விடாமுயற்சியை மேற்கொண்டிருப்பது; தான் கொன்ற யானை இடப்பக்கம் விழுந்தால் அதை உண்ணாது. அப்புலி போன்ற ஊக்கத்துடன் பொருள் ஈட்டும்போது முன்பு நீர் கூறிய மொழியையும் எம்மையும் மறந்திருந்தீர் போலும்' எனக் கேட்டாள், தலைவி.

"தலைவியே! நீர் இல்லாத ஆற்றில் சிக்கித் தவிக்கும் ஓடம் போல், வெப்பத்தால் உண்டான கானல்நீரால் அலைப்புண்டு திரியும் யானைகள் நிறைந்துள்ள காட்டுவழியே சென்றேன். பிறர் நம்மை இகழாதபடி வாழப் பொருள் ஈட்டத் தொடங்கினேன். அப்போது என் உடல் அங்கேயும் என்னுள்ளம் உன்னிடத்தேயும் இருந்ததை அறியாமல் நீ என்னிடம் இவ்வாறு வினவுகிறாயே" என்றான் தலைவன்.

கருத்து

பொருளீட்டச் சென்றிருந்தபோது, என் உடல் பொருளீட்டுமிடத்திலும், என் உயிர் உன்னிடத்தேயும் தங்கியிருந்தன.

விளக்கம்

பொருள்வயிற் பிரிந்து சென்று பொருள் தேடித் திரும்பிய தலைவன் தன் இல்லத்திற்கு வந்து சேர்ந்தான். அப்பொழுது, 'பிரிந்திருந்தபோது எம்மையும் நினைத்தீர்களா?' என்று தலைவி தலைவனிடம் கேட்டாள். அதற்குத் தலைவன், "தான் வீழ்த்திய யானை இடப்பக்கம் வீழின் உண்ணாத புலியின் சிறந்த ஊக்கத்துடன் பொருள் தேடச் சென்றேன். அப்போது, 'உன்னை நினையாது கழிந்த நாள்கள் நான் வாழா நாள்களே என்று

என்னைத் தேற்றிப் பிரிந்தீர்களே! அச்சொற்களை மறந்தீர் போலும்' எனக் கூறி வினவுகின்ற தலைவியே! கேள். காட்டு வழியில் பொருள் தேடிச் சென்றபோது என் உடல்தான் அங்குத் தங்கியிருந்ததே தவிர, என் மனம் உன் அருகிலேயேதான் இருந்தது" என்று கூறித் தேற்றினான்.

சொற்பொருள்

1. தொடங்குவினை தவிரா - தான் தொடங்கிய வினையைக் கைவிடாத; அசைவுஇல் - தளர்ச்சி இல்லாத; நோன்தாள் - வலிய முயற்சி.
2. கிடந்து - பட்டினி கிடந்து; மறுகுவது - வருந்துவது; இடம்படின் - தன் இடப்பக்கம் விழுந்தால்.
3. வீழ்களிறு - தான் வீழ்த்திய களிறு; மிசையா - உண்ணாத.
4. தாழ்வுஇல் உள்ளம் - தளர்தலில்லாத ஊக்கம் (உள்ளம் - ஊக்கம்).
5. காலை - பொழுது; எஃகுஉற்று - கத்தியால் அறுக்கப்பெற்று.
6. இருவேறு - இரு பிளவுகள்.
7. மா - மாமரம்; நறுவடி - இனிய மாவடு.
8. மேவல் தண்டா - (காணும்தோறும் களிப்பு) மேவுதல் குறையாத.
9. வைகல் - நாள்; எனையதூஉம் - சிறிதும்.
10. தேற்றி - தெளிவித்து.
12. போறிர் - போலும்.
13. எயிறுகெழு - பற்கள் விளங்கும்; துவர்வாய் - பவளம் போன்ற வாய்; அழுங்க - கெட.
14. ஆனா - நீங்காத.
15. தண்டா - குறையாத; உகு - பரந்த; பறந்தலை - பாழிடம்.
16. கொம்மை வாடிய - பெருமை இழந்த; இயவுள் - வழியிடம்.
17. மருங்கு - இருக்கும் இடம்; தேர் - பேய்த்தேர், கானல் நீர்.
18. அறுநீர் - நீரற்ற (ஆற்றில் கிடக்கும்); அம்பி - படகு; நெறிமுதல் - வழியிடத்தில்; உணங்கும் - வருந்திக் கிடக்கும்.
19. பனிக்கும் - நடுங்கச்செய்யும்; ஊக்குஅரும் - ஊக்கம் அழியும்; கடம் - காடு.
20. எள்ளல் - பிறர் இகழ்தல்; நோனா - பொறாத.
21. நாணம் - மானம்; தளை ஆக - பிணிப்பு ஆக; வைகி - கட்டுண்டிருந்து.
22. உடம்பு - உடல்; ஆண்டு - அங்கே; ஒழிந்தமை - பிரிந்து நின்றது.
23. மடம்கெழு - அறியாமை பொருந்திய; நின்உழை - உன் பக்கத்தி லேயே (இருந்தது).

தலைவன் கூற்று

அகநானூறு 39 **மதுரைச் செங்கண்ணனார்**

திணை : பாலை

கூற்று

பொருள் முற்றிய தலைமகன், தலைமகளைக் கண்டு சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருளீட்டச் சென்ற தலைவன், பொருள் ஈட்டி வந்து தலைவியுடன் இருந்தான். அப்போது தலைவி, தலைவனை நோக்கி, "பொருளீட்டும் காலத்தில் எம்மை நினைத்ததும் உண்டா?" என்று வினவியபோது தலைவன் கூறியது.

'ஒழித்தது பழித்த நெஞ்சமொடு வழிப்படர்ந்து
உள்ளியும் அறிதிரோ, எம்?'என, யாழநின்
முள்எயிற்றுத் துவர்வாய் முறுவல் அழுங்க;
நோய்முந் துறுத்து நொதுமல் மொழியல்;நின்
ஆய்நலம் மறப்பனோ மற்றே? சேண்இகந்து
ஒலிகழை பிசைந்த ஞெலிசொரி ஒண்பொறி
படுஞெமல் புதையப் பொத்தி, நெடுநிலை
முளிபுல் மீமிசை வளிசுழற் றுறாஅக்
காடுகவர் பெருந்தீ ஓடுவயின் ஓடலின்,
அதர்கெடுத்து அலறிய சாத்தொடு ஒராங்கு
மதர்புலி வெரீஇய மையல் வேழத்து
இனம்தலை மயங்கிய நயந்தலைப் பெருங்காட்டு
ஞான்றுதோன்று அவிர்சுடர் மான்றால் பட்டெனக்
கள்படர் ஓதி! நிற்படர்ந்து உள்ளி,
அருஞ்செலவு ஆற்றா ஆர்இடை, ஞெரேரெனப்
பரந்துபடு பாயல் நவ்வி பட்டென,
இலங்குவளை செறியா இகுத்த நோக்கமொடு,
நிலம்கிளை நினைவினை நின்றநிற் கண்டு,
'இன்னகை! இனையம் ஆகவும், எம்வயின்
ஊடல் யாங்குவந் தன்று?'என, யாழநின்
கோடுஏந்து புருவமொடு குவவுநுதல் நீவி,
நறுங்கதுப்பு உளரிய நன்னர் அமையத்து,

வறுங்கை காட்டிய வாய்அல் கனவின்
ஏற்றுஏக் கற்ற உலமரல்
போற்றாய் ஆகலின், புலத்தியால், எம்மே!

தெளிவுரை

“வண்டுகள் மொய்க்கும் கூந்தலைக் கொண்ட தலைவியே! பெண்களுக்குப் பிரிவுத் துயரைத் தரக்கூடாது என்று ஆன்றோர் கூறிய சொற்களையும் கடந்து பொருள் தேடிச் சென்ற என்னிடம் ‘பிரிந்து இருந்தபோது எம்மை நினைத்தீரோ?’ எனக் கேட்கிறாய். கூர்மையான பற்களைக் கொண்ட, பவளம் போன்ற உன் வாயில் நான் எதிர்பார்க்கின்ற புன்முறுவல் இல்லை. உன் கண்ணிலும் முகத்திலும் துன்பத்தைக் காட்டி இவ்வினாவைக் கேட்கிறாய். உன் நலன்கள் எல்லாவற்றையும் கொண்ட நான் உன்னை மறப்பேனா? மறவேன்.

“உன்னை மறக்கவில்லை என்பதற்கு ஒரு சான்று தருகிறேன், கேள். காட்டுவழியில் மூங்கில்கள் அசையும்போது ஒன்றுடன் ஒன்று உராய்ந்து தேய்வதால் அவை சொரியும் தீப்பொறிகள் அங்குக் கீழே விழுந்து கிடக்கும் சருகுகள் மறையும்படி தீப்பற்றி எழுந்தது. அத்தீ ஊகம் புல்லின் பகுதிகளையும் பற்றி மூண் டெழுந்து காற்றுப் பரவும் இடமெல்லாம் பரவி எரித்தது. அதைக் கண்டு வாணிகக் கூட்டம் அலறி அழுது பயந்து ஓடியது. அதோடு செருக்குற்ற புலியைக் கண்டு யானைக்கூட்டம் பல இடங்களுக்கும் பரவிச் சென்றது. அந்நிலையில் கதிரவன் மறைந்தான்.

“அப்போது உன்னை நினைத்துக்கொண்டிருந்ததால் மேற் கொண்டு பயணம் செய்ய இயலாத நிலையில் வழியில் படுத் துறங்கினேன். அப்போது ஒரு பெண்மான் தோன்றினாற்போல் தோன்றி, என்னைப் பார்க்காமல் நிலத்தினைப் பார்த்துக் கொண்டு, உடல் மெலிந்ததால் கழன்று விழும் வளையலை விழாதபடி மேலே ஏற்றி நிறுத்தி, நிலத்தைக் காலால் கீறிக் கொண்டு வருத்தம் கொண்டவளாய் நின்ற உன்னைக் கனவில் கண்டேன். அப்போது இனிமையான சிரிப்பை உன்னிடமிருந்து பெற்றேன். இவ்வாறு இருக்க என்னோடு உனக்கு ஏன் ஊடல் ஏற்பட்டது?

"நான் அழகிய உன் புருவங்களையும், சிறிய நெற்றியையும், நறுமணக் கூந்தலையும் தடவ முயன்றேன். உன்னைத் தழுவுதல் போன்ற என் கைகளை வெறுமை ஆக்கிய பொய்யான அக்கனவை நினைத்து ஏற்பட்ட மனச்சுழற்சியை நீ அறிய மாட்டாய். அதனால் நீ, 'என்னை நினைத்ததும் உண்டோ?' என்று ஊடல் கொள்கின்றாய்" என்று தலைவன் தலைவியிடம் கூறினான்.

கருத்து

பொருளீட்டச் சென்ற உன்னைக் கனவில் கண்டு உன் புன்முறுவலைப் பெற்றேன். அவ்வாறு நீண்டது கனவு, உண்மையன்று என்பது புரிந்ததும் நான் உற்ற வருத்தம் அளவற்றது. அப்படியிருக்க என்னை நீ நினைத்த துண்டோ? என்று நீ கேட்கிறாயே?

விளக்கம்

"என் தலைவியே! பொருளீட்டச் சென்றபோது, என்னை நினைத்ததும் உண்டா என்னும் துன்பமான வினாவினைக் கேட்காதே! உன் நலங்கள் எல்லாவற்றையும் கொண்ட நான் உன்னை மறப்பேனா? செல்லும்போது காட்டுவழியில், மாலை நேரத்தில், பெண்மான் தோன்றியதுபோல் தோன்றி நிலத்தைக் காலால் கீறிக்கொண்டு, கழன்று விழும் கைவளையை மேலேற்றிச் செறித்துக் கொண்டு, வருத்தத்தோடு நின்ற உன்னைக் கனவில் கண்டு, உன் இனிமையான சிரிப்பையும் பெற்றேன். இவ்வாறு இருக்க உனக்கு என்னோடு ஊடல் ஏற்பட்டது ஏன்? மேலும், உன் புருவத்தோடு நெற்றியையும் நான் தடவ முயன்ற பொழுதில் அதுவரை கண்ட அனைத்தும் பொய்க் கனவு என அறிந்தேன். அப்போது எனக்கு ஏற்பட்ட மனச்சுழற்சியை நீ அறியாய்; அறிந்தால் இப்படியொரு வினாவை நீ கேட்டிருக்க மாட்டாய்" எனத் தலைவன் தலைவி யிடம் கூறி அவள் ஊடலைப் போக்க முற்படுகின்றான்.

சொற்பொருள்

1. ஒழித்தது பழித்த நெஞ்சமொடு - பெண்களுக்குப் பிரிவுத்துயரைத் தரக் கூடாது என்று ஆன்றோர் சொல்லிய சொல்லைப் பழித்த நெஞ்சொடு (பழித்தல் - அதனை இகழ்தல்); வழிப்படர்ந்து - வழிச் சென்று.

2. உள்ளுதல் - நினைத்தல்; எம் - எம்மை; யாழ - முன்னிலை அசைச் சொல்.
3. முள் எயிறு - கூர்மையான பல்; துவர் - பவளம்; முறுவல் - புன்னகை; அழுங்க - அழிய.
4. நோய் - துன்பம்; முந்துறுத்து - தோற்றுவித்து; நொதுமல் - உண்மைக்கு புறம்பானது ஒன்று.
5. ஆய்நலம் - ஆராயப்படும் அழகு; சேண் - நெடுந்தொலைவு; இகந்து - கடந்து, தாண்டி.
6. கழை - மூங்கில்; பிசைதல் - ஒன்றோடொன்று உராய்தல்; ஞெலி - உரா(யப்பட்டதால் உண்டான); ஒண்பொறி - ஒள்ளிய தீப்பொறி.
7. படுஞெமல் - மிக்க சருகுகள்; புதைய - மறையும்படி; பொத்தி - மூள; நெடுநிலை - நீண்ட இடத்தில்.
8. முளிபுல் - உதிர்ந்த ஊகம்புல்; வளி- காற்று; கழற்றுறா - சுழன்று பரவச் செய்ய (உறா - உறுத்தி).
9. ஓடுவயின் - காற்று ஓடுமிடமெல்லாம்.
10. அதர் - வழி; கெடுத்து - அற்று, கைவிட்டு; சாத்து - வாணிகர் கூட்டம்; ஓராங்கு - ஒரு சேர.
11. மதர் - செருக்கு; வெரீஇய - அஞ்சிய; மையல் - மயக்கம் பொருந்திய; வேழம் - ஆண்யானை.
13. ஞான்று தோன்று அவிர் - மறைகின்ற போது ஒளி குன்றித் தோன்றும்; சுடர் - ஞாயிறு; மான்று பட்டென - மயங்கி மறைந்ததாக (ஆல் - ஆசை).
14. கள் - வண்டு; படர் - படிகின்ற; படர்ந்து உள்ளி - நினைந்து நினைந்து.
15. ஆற்றா - இயலாது; ஆர்இடை - வழியில்; ஞெரேரென - பொதுக்கென.
16. பரந்துபடு - வேண்டினபடி கிடந்து; பாயல் - உறக்கம்; நவ்வி - பெண்மான்; பட்டென - கண்ணில் கண்டதுபோல.
17. செறியா - (கழன்று விழுகின்ற வளையலை எடுத்து) அடுக்கி, செறித்து.
18. நிலம்கிளை - நிலத்தைக் காலால் கீறுகின்ற; நினைவினை நின்ற - வருத்தமுடன் நின்ற; நிற்கண்டு - உன்னைக் கண்டு.
19. இனையம் ஆகவும் - நான் இங்ஙனமிருப்பவும்; எம்வயின் - என்னிடம்.
20. யாங்கு வந்தன்று - எவ்வாறு ஏற்பட்டது?

21. கோடு - பக்கம்; ஏந்து - உயர்ந்த; குவவு நுதல் - வளைந்த நெற்றி; நீவி - துடைத்து.
22. உளரிய - கோதிய; நன்னர் அமையம் - நல்ல பொழுது.
23. வறுங்கை காட்டிய கனவு - உண்மை போல இருந்து பொய்யாகிய கனவு (கையால் ஒன்றைப் பற்றியதுபோலத் தோன்றிப் பின் வெறுங்கை ஆதல்); வாய் அல் - உண்மை அல்லாத.
24. உலமரல் - வருத்தம்.
25. போற்றாய் ஆகலின் - நீ அறிவில் கொள்ளவில்லையாதலின்; புலத்தி - ஊடுகின்றாய்.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 324 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

பிரிந்து வந்த தலைமகன் தலைமகளை நலம் பாராட்டக் கண்டு தோழி, 'இவள் குணத்தினை மறந்து அமைந்தவாறு யாது?' என வினாவினாட்கு அவன் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருளீட்டப் பிரிந்து சென்ற தலைவன் மீண்டுவந்து தலைவியின் நலத்தைப் பாராட்டினான். அதைக் கண்ட தோழி, 'இவள் குணத்தை மறந்து நீ இவ்வளவு காலம் பிரிந்திருந்தது எவ்வாறு?' என்று வினவினாள். அவளிடம் தலைவன் சொல்லியது.

எரிகவர்ந்து உண்ட என்றூழ் நீள்இடைச்
சிறிதுகண் படுப்பினும் காண்குவென் மன்ற
நள்ளென் கங்குல் நளிமனை நெடுநகர்
வேங்கை வென்ற சுணங்கின்
தேம்பாய் கூந்தல் மாஅ யோளே!

தெளிவுரை

"*உள்ளனவாய அனைத்தையும் காட்டுத்தீ பற்றி அழித்து, வெப்பத்தைக் கூட்டும். கடுங்கோடை வருத்தும் நீண்ட வழியில் சோர்வுற்றுச் சற்று நேரந்தான் கண் அயர முடியும். அவ்வாறு*

அயர்ந்தாலும், நள்ளிரவில் பெரிய வீட்டில் உறங்கிக்கொண்டிருக்கும் வேங்கைப் பூக்களை வெல்லும் தலைவியின் மார்புச் சுணங்கினையும், தேன் சொரியும் கூந்தலையும், மாமை நிறத்தையுமே கனவில் காண்பேன்!" என்று தலைவன் தோழியிடம் கூறினான்.

கருத்து

சற்று நேரமே தூங்கினேனாயினும், அந்நேரத்திலும் தலைவியைப் பற்றியே கனவு கண்டு கொண்டிருந்தேன்.

சொற்பொருள்

1. எரி - நெருப்பு; என்றூழ் - கடுங்கோடை; நீள்இடை- நீண்ட வழி.
2. கண்படுத்தல் - தூங்குதல்; காண்குவென் - (கனவில்) காண்பேன்.
3. நள்ளென் கங்குல் - இருள் செறிந்த இரவு; நளிமனை - பெருமனை; நெடுநகர் - நெடிதான உட்பகுதி.
4. வேங்கை - வேங்கைப்பூக்கள்; சுணங்கு - தேமல்.
5. தேம்பாய் - தேன்பாய் - தேன் சொரியும்; மாஅ யோள் - மாமை நிறம் கொண்டவள்.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 359 — **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

மீண்டுவந்த தலைமகன், அவளைப் பிரிகின்ற காலத்துச் சுரத்துச் சேய்மையும், வருகின்ற காலத்து அதன் அணிமையும் கூறியது.

கூற்று விளக்கம்

பொருளீட்டி வரத் தலைவியைப் பிரிந்து செல்லும்போது தன் மனத்தில் ஏற்பட்ட அவல நிலையால் செல்லும் வழி தொலைவாகத் தனக்குத் தோன்றியதையும், அவ்வழியே தலைவியைச் சென்றணைந்து மகிழவிருக்கிறோம் என்னும் ஆர்வத் துடிப்போடு திரும்பி வரும்போது மிகவும் அருகில் இருப்பதாகத் தோன்றியதையும், 'செலவு எவ்வாறு அமைந்தது' என்று வினவிய தலைவியிடம் தலைவன் உரைத்தது.

அரும்பொருள் வேட்கையம் ஆகி,நின் துறந்து
பெருங்கல் அதரிடைப் பிரிந்த காலை
தவநனி நெடிய ஆயின; இனியே
அணியிழை உள்ளி, யாம் வருதலின்
நணிய ஆயின சுரத்திடை ஆறே.

தெளிவுரை

"பெறுவதற்கு அரிதாகிய பொருளிடத்துக் கொண்ட வேட்கையால் உன்னை இங்கிருந்து வாடும்படியாகக் கைவிட்டுப் பிரிந்து சென்ற போதில், காட்டிடையே அமைந்த பெருங்கற்களைக் கொண்ட வழிகள் மிகமிக நெடியனவாய் எனக்குத் தோன்றின. ஆனால், திரும்புங்காலத்தே, அழகிய இழையினைக் கொண்டவளான உன்னையே நினைந்து நான் வருதலினாலே அவ்வழிகளே மிகவும் அருகில் இருப்பன போலத் தோன்றின" என்று தலைவன் தலைவியிடம் கூறினான்.

கருத்து

தலைவியைப் பிரிந்து செல்லும்போது மிக நீண்டதாய்த் தோன்றிய அதே வழி, தலைவியை நினைந்து திரும்பி வந்ததால் மிகமிகக் குறுகியதாய்த் தோன்றிற்று.

சொற்பொருள்

1. வேட்கையம் - விருப்பத்தை உடையேமாக; துறந்து - பிரிந்து .
2. அதர் - வழி.
3. தவநனி நெடிய - மிகவும் நீண்டனவாய் இருந்தன.
4. உள்ளி - நினைந்து.
5. நணிய ஆயின - அண்மையில் இருப்பன ஆயின; ஆறு - வழி.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 325 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

பிரிந்து வந்த தலைமகன், 'சுரத்தின் வெம்மை எங்ஙனம் ஆற்றினீர்' என்ற தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பிரிந்து சென்ற தலைவன் செயல் முடித்து மீண்டு வந்தான். அவனிடம், 'பிரிந்து சென்ற நீர் பாலையின் வெம்மையை எவ்வாறு தாங்கிக்கொண்டீர்?' என்று வினவினாள், தோழி. அவளிடம் தலைவன் கூறியது.

வேனில் அரையத்து இலைஒலி வெரீஇப்
போகில்புகா உண்ணாது பிறிதுபுலம் படரும்
வெம்பலை அருஞ்சுரம் நலியாது
எம்வெங் காதலி பண்புதுணைப் பெற்றே.

தெளிவுரை

“வேனிற் காலத்திலே மேல்காற்று அலைத்தலாலே அரச மரத்தின் இலை ஒலி கேட்டு அச்சமுற்றன, பறவைகள். அப் பறவைகள் தாம் பற்றி வந்த இரையை அங்கிருந்து உண்ணாது வேற்று நிலங்களை நோக்கிப் பறக்கும். அத்தகைய கொடிய வெம்மையைக் கொண்டது, நான் சென்ற பாலை வழி. அருஞ்சுர வழியிலும் என் ஆசைக்காதலியின் நல்ல குணங்களைத் துணை யாகப் பெற்றுச் சென்றேன்; ஆதலால், அக்கொடிய வழி எனக்கு வருத்தம் தருவதாய் இல்லை” எனத் தலைவன், தலைவியின் குணங்களை நினைந்தே தான் வழியில் வருத்தமின்றிச் சென்ற தாய்த் தோழியிடம் கூறினான்.

கருத்து

வழி முழுதும் உன் பண்பு நலன்கள் எப்போதும் எனக்குத் துணை நின்றன.

சொற்பொருள்

1. அரையம் - அரச மரம்; வெரீஇ - அச்சமுற்று, அஞ்சி.

2. போகில் - பறவை இனம்; புகா - தங்கா; புலம் - இடம்; படரும் - பறந்து செல்லும்.
3. வெம்பலை - கொதித்தலைக் கொண்ட; நலியாது - வருந்தாது.
4. எம்வெங் காதலி - என் விருப்பத்துக்குரிய காதலி; பண்பு - குணநலன்கள்.

தோழி கூற்று

குறுந்தொகை 210 **காக்கை பாடினியார் நச்செள்ளையார்**

திணை : முல்லை

கூற்று

பிரிந்துவந்த தலைமகன், 'நன்கு ஆற்றுவித்தாய்' என்றாற்குத் தோழி உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் மீண்டுவந்த பின்னர்த் தோழியை நோக்கி, 'நான் வருமளவும் தலைவியை மிகவும் முயன்று ஆற்றுவித்தாய்' என்று பாராட்டினான். அப்போது தோழி தலைவனிடம் கூறியது.

திண்தேர் நள்ளி கானத்து அண்டர்
பல்ஆ பயந்த நெய்யின், தொண்டி
முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோறு
எழுகலத்து ஏந்தினும் சிறிதுஎன் தோழி
பெருந்தோள் நெகிழ்த்த செல்லற்கு
விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே.

தெளிவுரை

"தலைவ! என் தலைவியின் பருத்த தோளினை இளைக்கச் செய்த பிரிவுத்துன்பத்தை நீக்கும்பொருட்டு நல் நிமித்தமாய் விருந்தினர் வருகையை உணர்த்தும் வகையில் கரைந்த காக்கைக்கு, திண்ணிய தேரினையுடைய நள்ளி என்னும் வள்ளலது காட்டில் இடையர்களால் வளர்க்கப்படும் பல பசுக்கள் தந்த நெய்யுடன், தொண்டி என்னும் ஊரில் உள்ள வயல்களில் நன்றாய் விளைந்த

வெண்ணெல்லால் ஆக்கிய விரும்பத் தகுந்த சோற்றினை ஏழு பாத்திரங்களில் ஏந்திக் கொடுத்தேன். அவ்வாறு கொடுத்ததும் (காக்கை செய்த நன்மைக்குச்) சிறிதே ஆகும்."

கருத்து

காக்கை கரைதலை உன் வரவுக்குரிய நிமித்தமாய்க் காட்டித் தலைவியின் துயரத்தை ஆற்றுவித்தேன்.

விளக்கம்

தலைவன் இன்னும் வரவில்லையே எனத் தலைவி வருந்தாமலிருக்க, தோழி நாள்தோறும் காக்கைக்கு உணவிட்டு வந்தாள்; அவ்வுணவை உண்ணும் காக்கைகள் கரைவதைச் சுட்டி, அது தலைவன் வருவதற்கான நன்னிமித்தம் என்று தலைவியிடம் கூறி, அவள் துயரைத் தோழி ஆற்றிவந்தாள். (வீட்டுக்கூரையில் காக்கை கரைந்தால் விருந்தினர் வருவர் என்பது பண்டையோர் நம்பிக்கை.)

'காக்கை கரைந்த நன்னிமித்தமே தலைவி ஆற்றியிருந்ததற்குக் காரணம்; என் தேற்றுதலுரையால் அன்று' எனத் தோழி தலைவனிடம் கூறினாள். காக்கைக்குத் தரப்பட்ட உணவு பெரிய அளவினதாயினும் 'காலத்தினாற் செய்த நன்றியாதலின்' அது சிறிது எனக் கூறப்பட்டது.

காக்கையைச் சிறப்பித்துப் பாடியுள்ளதால் இப்பாடலை இயற்றிய ஆசிரியர் 'காக்கை பாடினியார்' என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப் பெற்றார். இவரது இயற்பெயர் நச்செள்ளையார்.

நள்ளி கடையெழு வள்ளல்களில் ஒருவன். தொண்டி சேரர்களின் துறைமுகப்பட்டினமாய் விளங்கி வந்தது.

சொற்பொருள்

1. திண்தேர் - வலிமையுள்ள தேர்; நள்ளி - வள்ளல்களில் ஒருவன்; கானத்து - காட்டில்; அண்டர் - ஆயர்.
2. பல்ஆ - பல பசுக்கள்; பயந்த - தந்த; தொண்டி - சேரர்களின் துறைமுகப்பட்டினம்.

3. முழுதுடன் விளைந்த - முற்றி நன்றாக விளைந்த; வெஞ்சோறு - விரும்பத் தகுந்த சோறு.
4. எழு கலத்து - ஏழு பாத்திரங்களில்.
5. நெகிழ்த்த - இளைக்கச் செய்த; செல்லல் - துன்பம்.
6. பலி - உணவு.

தலைவன் கூற்று

குறுந்தொகை 99 **ஔவையார்**

திணை : முல்லை

கூற்று

பொருள் முற்றிப் புகுந்த தலைமகன், 'எம்மை நினைத்தும் அறிதிரோ?' என்ற தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள் தேடச் சென்ற தலைவன் மீண்டு வந்ததன்பின் அவனை நோக்கி, "நீ பிரிந்திருந்தபோது எங்களை நினைத்ததுண்டோ?" என்று வினவிய தோழியிடம், 'நான் உங்களையே எப்போதும் நினைத்திருந்தேன்' என்று தலைவன் சொல்லியது.

உள்ளினென் அல்லனோ யானே? உள்ளி,
நினைந்தனென் அல்லெனோ பெரிதே? நினைத்து,
மருண்டனென் அல்லனோ உலகத்துப் பண்பே?
நீடிய மரத்த கோடுதோய் மலிர்நிறை
இறைத்துஉணச் சென்றுஅற் றாங்கு,
அனைப்பெருங் காமம் ஈண்டுகடைக் கொளவே.

தெளிவுரை

"நீண்டு உயர்ந்த மரக்கிளையைத் தொட்டுச் செல்லும் வெள்ளம் செல்லச் செல்ல அளவில் சுருங்கி, கையில் இறைத்துப் பருகுமாறு ஆகி, இறுதியில் முற்றிலும் வற்றித் தீர்ந்துவிட்டது போல, முன்பு பிரிந்திருந்தபோது பெருவெள்ளம்போல் அத்துணைப் பெரிதாய் இருந்த காம உணர்வு, திரும்ப இங்கு வந்து முற்றிலும் தீரவேண்டுமென்று நான் தலைவியையே எண்ணிக்கொண்டிருந்தேன். மீண்டும் மீண்டும் அதனையே

நினைத்துக்கொண்டிருந்தேன்; எனினும், பொருள் தேடிச் சென்று இடையில் திரும்ப இயலாத இவ்வுலக இயல்பை நினைத்து மிகுதியாய் மயங்கியும் இருந்தேன்! (உலகியலால் செய்வதறியாது மருண்டு மயங்கியிருந்தேனே அன்றி நான் எப்போதும் உங்களை மறந்ததே இல்லை.)"

கருத்து

நான் எப்பொழுதும் உங்களையே நினைத்திருந்தேன்.

விளக்கம்

மரக்கிளையைத் தொட்டுச் சென்ற வெள்ளம் செல்லச் செல்லச் சுருங்கி, கையில் இறைத்துண்ணுமாறு குறைந்து, இறுதியில் முற்றிலும் வற்றியதுபோல, உங்களைப் பிரிந்திருந்த போது வெள்ளம்போல் அத்துணைப் பெரிதாயிருந்த காம உணர்வு நான் திரும்பும் போது வரவரக் குறைந்து, நான் தலைவியைச் சேர்ந்ததும் முற்றிலும் அற்றுவிட்டது.

சொற்பொருள்

1. உள்ளினென் அல்லனோ? - சென்ற இடத்தில் உங்களை நினைக்காமலா இருந்தேன்; உள்ளி - அவ்வாறு எண்ணி.
2. பெரிதே நினைந்தனன் அல்லனோ? - (உங்களைப்பற்றியே) பெரிதும் நினைத்திருந்தேன்;
3. மருண்டனென் - மயங்கியிருந்தேன்; உலகத்துப் பண்பே நினைந்து - உலகியலை நினைந்து.
4. நீடிய மரத்த - உயர்ந்த மரத்தினுடைய; கோடுதோய் - கிளையைத் தொட்டுச் செல்லும்; மலிர்நிறை - நிறைந்த வெள்ளம்.
5. இறைத்துணை - கையில் இறைத்து உண்ணுமளவுக்கு; அற்றாங்கு - வற்றிவிட்டதுபோல.
6. அனைப் பெருங்காமம் - அத்துணைப் பெரிய காமம் (வெள்ளம் போன்ற); ஈண்டு - இங்கு வந்ததும்; கடைக்கொள - முடிவடை யும்படி.

தலைவன் கூற்று

குறுந்தொகை 209 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

பொருள் முற்றி மறுத்தரும் தலைமகன் தோழிக்கு உரைப்பானாய்க் கிழத்தியைத் தெருட்டியது. (மறுத்தரும் - திரும்பும்; தெருட்டியது - தெளிவித்தது.)

கூற்று விளக்கம்

பொருள் தேடச் சென்று திரும்பி வந்த தலைவன் தோழியை நோக்கி, 'நான் பிரிந்திருந்த காலத்திலும் தலைவியையே நினைத்திருந்தேன்' என்று கூறித் தலைவியிடம் தான் கொண்டிருந்த அன்பினை உணர்த்தியது.

அறம்தலைப் பட்ட நெல்லிஅம் பசுங்காய்
மறப்புலிக் குருளை கோள்இடம் கறங்கும்
இறப்புஅருங் குன்றம் இறந்த யாமே,
குறுநுடைப் புள்உள் எலமே, நெறிமுதல்
கடற்றில் கலித்த முடச்சினை வெட்சித்
தளைஅவிழ் பல்போது கமழும்
மைஇருங் கூந்தல் மடந்தை நட்பே.

தெளிவுரை

தோழி! கேள்! வழிப்போவாரது உயிரைக் காத்தற்குரிய அறத்தைச் செய்யும் நெல்லி மரத்தின் அழகிய பசிய காய்கள் உருண்டு கிடக்கும். அவற்றை வலிமை மிக்க புலிக்குட்டிகள் பற்றிக்கொள்ளும். கடத்தற்கரிய மலைப்பகுதியை நான் கடந்து சென்றேன். அக்காட்டைக் கடந்து சென்றபோது, நான் அங்குத் திரிந்த குறுக அடியிட்டு நடக்கும் பறவைகளைப் பார்த்து அவற்றின் நினைவாய் இருக்கவில்லை. (பின்னர் எதை நினைந்தேன் எனில்) காட்டுவழியில் தழைத்த வளைந்த கிளைகளைக் கொண்ட வெட்சி மரத்தில் கட்டவிழ்ந்து மலர்ந்த பல பூக்களைப் போன்று மணம் கமழும் மைபோலும் கரிய கூந்தலைக் கொண்ட காதலியின் நட்பையே நினைந்திருந்தேன்.

கருத்து

நான் பொருள் தேடப் போன இடத்தில் தலைவியின் நட்பையே நினைத் திருந்தேன்.

விளக்கம்

தோழி! நான் பொருளீட்டச் சென்றபோது வழியில் நினைத் தற்குரியன பற்பல இருந்தும், அவற்றையெல்லாம் நினையாமல் தலைவியின் நட்பொன்றையே இடையறாது நினைத்திருந்தேன்.

குறிப்பு

அக்காலத்தில் பாலை வழியில் செல்வோர் நெல்லிக்காயை உண்டு அதனையே உணவாகவும் நீராகவும் பயன்படுத்தினர். பாலை வழியில் நெல்லி மரங்களை நட்டு வளர்ப்பதை ஓர் அறமாகப் பண்டைத் தமிழர் பின்பற்றி வந்தனர். அதனாலேயே நெல்லி மரம் 'அறம் செய்யும் மரமாகக்' கூறப்பட்டுள்ளது.

சொற்பொருள்

1. அறம் தலைப்பட்ட - (வழிப்போவாரது உயிரைக் காக்கும்) அறத்தைச் செய்கின்ற.
2. குருளை - குட்டி; கோள் இடம் - கொள்ளுதற்குரிய இடத்தில்; கறங்கும் - வீழ்ந்து உருளும்.
3. இறந்த - கடந்த.
4. உள்ளல் - நினைத்தல்; நெறிமுதல் - வழியினிடத்தே.
5. கடறு - காடு; கலித்த - தழைத்த; முடம் - வளைந்த; வெட்சி - வெட்சி மரம்.
6. பல்போது - பல பேரரும்புகள்.
7. மடந்தை - பெண், தலைவி.

கண்டோர் கூற்று

கலித்தொகை 120 **நல்லந்துவனார்**

திணை : நெய்தல்

கூற்று

பிரிவிடையாற்றாத தலைமகள், மாலைப்பொழுது கண்டு கழிய ஆற்றாளாயின இடத்து, தலைமகன் வரவும் அவளது அகமலர்ச்சியும் கண்டார் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் மாலை நேரத்தில் வருவதாய்ச் சொல்லிச் சென்றான். அவன் வாராததால் தலைவி மிகவும் வருந்தியிருந்தாள். தலைவன் வந்து சேர்ந்ததும் அவள் பெருமகிழ்வு கொண்டனள். அதைக் கண்டோர் கூறியது.

அருள்தீர்ந்த காட்சியான், அறன்நோக்கான், நயம்செய்யான்,
வெருவுற உய்த்தவன் நெஞ்சம்போல், பைபய
இருள்தூர்பு, புலம்புஊரக் கனைசுடர் கல்சேர—
உரவுத்தகை மழுங்கித்தன் இடும்பையால் ஒருவனை
இரப்பவன் நெஞ்சம்போல் புல்லென்று, புறம்மாறிக்
கரப்பவன் நெஞ்சம்போல், மரம்எல்லாம் இலைகூம்பத்
தோற்றம்சால் செக்கருள் பிறைநுதி எயிறாக,
நாற்றிசையும் நடுக்குறூஉம் அடங்கற் காலை,
கூற்றுநக் கதுபோலும், உட்குவரு கடுமாலை!

மாலைநீ— உள்ளம்கொண்டு அகன்றவர் துணைதாராப் பொழுதின்கண்,
வெள்ளமான் நிறம்நோக்கிக் கணைதொடுக்கும் கொடியான்போல்,
அல்லற்பட்டு இருந்தாரை அயர்ப்பிய வந்தாயோ?

மாலைநீ — ஈரம்இல் காதலர் இகந்து,அருளா இடன்நோக்கிப்
போர்தொலைந்து இருத்தாரைப் பாடுஎள்ளி நகுவார்போல்,
ஆர்அஞர் உற்றாரை அணங்கிய வந்தாயோ?

மாலைநீ — கந்தாதல் சான்றவர் களைதாராப் பொழுதின்கண்,
வெந்ததோர் புண்ணின்கண் வேல்கொண்டு நுழைப்பான்போல்,
காய்ந்தநோய் உழப்பாரைக் கலக்கிய வந்தாயோ?

என வாங்கு,

இடன்இன்று அலைத்தரும் இன்னாசெய் மாலை,
துனிகொள் துயர்தீரக் காதலர் துனைதர—
மெல்லியான் பருவத்து மேல்நின்ற கடும்பகை
ஒல்லென நீக்கி, ஒருவாது காத்துஆற்றும்
நல்இறை தோன்றக் கெட்டாங்கு—
இல்லா கின்றால், இருள்அகத்து ஒளித்தே.

தெளிவுரை

"கணவன் பிரிந்தமையால் வருந்திக்கொண்டிருந்த தலைவி, மாலைக்காலம் வந்ததும் வருந்தித் தன்னுள் பேசுகிறாள்: "அருள் முழுவதும் அற்றுப்போன அறிவு கொண்டவன்; அறம் செய்தல் இம்மைக்கும் மறுமைக்கும் பயன்தரும் என்று கருதாதவன்; பிறர்க்கு நல்லது எதையும் செய்யாதவன்; பலரும் கண்டு அஞ்சுமாறு செயல்களைச் செய்பவன். அத்தகையவனது மயங்கிய நெஞ்சம்போல உலகில் மெல்ல மெல்ல இருள் வந்து நிறைந்தது. கணவரைப் பிரிந்தோர்க்குத் தனிமை மேலிடும்படி, செறிந்த கதிர்களைக் கொண்ட ஞாயிறு மேலை மலையைச் சேர்ந்தது."

"வறுமையினால் வாடியபோதும் பிறரை இரப்பதற்கு அஞ்சிய ஒருவன் வறுமையின் கொடுமை எல்லை கடந்தபோது, தன் மன வலிமை குன்றி இரக்கத் துணிவான். அப்பொழுது அவன் நெஞ்சம் எத்துணைப் பொலிவற்றுக் காணப்படுமோ அந்த அளவுக்கு மரங்கள் பொலிவிழந்தன. தன்னிடம் ஒருவன் இரப்பதற்கு வருகின்றான் என்பதைக் குறிப்பால் அறிந்து கொண்டு அவர்க்குக் கொடுக்க மனமின்றி, இருந்த இடத்திலிருந்து எழுந்து போய் மறைகின்றவன் நெஞ்சு இரக்கமின்றிக் குவிவதுபோல் அம்மரங்களின் இலைகள் எல்லாம் குவிந்தன.

"செவ்வானத்திலே தோன்றிய பிறையைத் தன் கோரைப் பல்லாய்க் கொண்டு, நாற்றிசையும் நடுங்கும்படி, ஊழிக் காலத்தில் கூற்றுவன் உயிர்களைப் பார்த்துச் சிரித்தது போன்று, நான் நடுங்குமாறு மாலையே, நீ வந்து என்னைப் பயமுறுத்து கின்றாய்.

"மாலைக்காலமே, என் நெஞ்சத்தை என்னிடமிருந்து பிரித்துத் தன்னுடன் கொண்டுசென்ற என் கணவர் எனக்குத் துணையாய் இல்லாத இந்த நேரத்திலே நீ, வெள்ளத்தில் அகப்பட்டுக் கரையேற மாட்டாத மானின் நெஞ்சை நோக்கி அம்பைத் தொடுக்கும் கொடியவனைப் போல, துன்பத்திலே அழுந்தியிருக்கின்ற எனக்கு மேலும் துன்பம் விளவிக்க வந்தாயோ?

"மாலைக்காலமே, அன்பு இல்லாத காதலர் என்னை விட்டு நீங்கி, அருள் செய்யாத காலம் பார்த்து, போரிலே தோல்வி உற்றாரைப் பார்த்து, அவர் பட்ட தோல்வியை இகழ்ந்து சிரிப்பாரைப் போலப் பொறுத்தற்கரிய வருத்தமுற்றுள்ள என்னை, நீ, மேலும் வருத்துதற்கு வந்தாயோ?

"மாலைக்காலமே, என்னைப் பாதுகாக்கும் பற்றுக்கோடாய் இருந்து என் துன்பத்தைப் போக்காது என்னைப்பற்றிய கவலை யின்றிப் பிரிந்து சென்ற காதலர், என் நெஞ்சத்தில் புண்ணை ஏற்படுத்தியுள்ளார். வெந்த புண்ணிலே வேலைப் பாய்ச்சும் கொடியவர்போல என்னை, மேலும் நீ துன்புறுத்துவதற்கு வந்தாயோ?" என்றெல்லாம் சொல்லிச் சொல்லித் தலைவி வருந்திக்கொண்டிருந்த நிலையில், தன்னை அலைத்து வருத்தும் மாலைமீது அவள் கொண்டிருந்த வெறுப்பு நீங்கும்படியாக, கணவன் வந்து சேர்ந்தான். படை வலிமையற்ற ஒருவன் தன் நாட்டைப் பகைவன் ஒருவன் தன் வலிமையால் கைக்கொண்ட போது, தன்னை முற்றுகையிட்டவனை, வலிமை மிக்க நல்ல அரசன் ஒருவன் வந்து அந்தப் பகைமன்னனை விரட்டி ஓட்டி அவனைக் காப்பாற்றினால் அவன் எத்தகைய மகிழ்ச்சியடை வானோ, அத்தகைய மகிழ்ச்சியைத் தலைவி அடையுமாறு இருள் விலகி ஓடி மறைந்தது. தலைவி மிகவும் மகிழ்ச்சி கொண்டாள். (தலைவியின் இந்த நிலையைக் கண்டவர்களும் மகிழ்ச்சி கொண்டனர்.)

கருத்து

மாலைக்காலத்தில் வந்துவிடுவதாய்ச் சொல்லிச் சென்ற தன் தலைவன், மாலை வந்த பிறகும் வாராததை எண்ணி வருந்திய தலைவி, அந்தத் தலைவனை நொந்துகொள்ளாமல் மாலைக்காலத்தை நொந்துகொள்கிறாள்.

மாலை, கொடுமை செய்யும் தன்மை கொண்டது என்று கூறி வருந்துகின்றாள். அவ்வாறு வருந்திக்கொண்டிருந்தபோது அவள் கணவன் வந்து சேர்ந்தான்; அவள் அகமகிழ்ந்தாள். அவள் மகிழ்ந்த காட்சியைக் கண்டவர்கள், 'இந்த மாலைக் காலம், இனி இவளைத் தன்னால் கொடுமை செய்ய இயலாது என்பதை உணர்ந்து வருந்தி இரவுக்குள் சென்று தன்னை மறைத்துக் கொண்டது' எனக் கூறினர்.

சொற்பொருள்

1. காட்சியான் - அறிவு கொண்டவன்; அறன் - அறம்; நயம் - நல்லது.
2. வெருவுதல் - அஞ்சுதல்; பைபய - மெல்ல மெல்ல.
3. இருள் தூர்பு - இருள் மறைந்து; ஊர - அதிகமாய்; கனைசுடர் - செறிந்த கதிர்களைக் கொண்ட ஞாயிறு; கல் - மலை.
4. உரவுத்தகை - வலிமைத் தன்மை; மழுங்கி - குன்றி; இடும்பை - வறுமை.
5. புல்என்று - பொலிவு இழந்து; புறம் மாறுதல் - இடம் மாறுதல்.
6. கரப்பவன் - மறைப்பவன்; கூம்ப - குவிய.
7. செக்கர் - செவ்வானம்; நுதி - கூரிய; எயிறு - பல்.
8. அடங்கற் காலை - ஊழிக்காலம்.
9. கூற்று - கூற்றுவன், எமன்; நகுதல் - சிரித்தல்; உட்குவரு - துன்பம் தரும்; கடு - வெறுப்பு, நஞ்சு.
10. அகன்றவர் - பிரிந்தவர், கணவன்.
11. வெள்ள மான் - வெள்ளத்தில் அகப்பட்ட மான்; நிறம் - நெஞ்சு; கணை - அம்பு.
12. அயர்ப்பிய - துன்புறுத்த.
13. ஈரம் - அன்பு; இகந்து - பிரிந்து.
14. பாடு - தோல்வி.
16. கந்தாதல் - பற்றுக்கோடாதல்; களைதாரா - போக்காத.
18. உழத்தல் - வருத்துதல்.
20. அலைத்தரும் - துன்புறுத்தும்.
21. துனி - வெறுப்பு; துனைதர - விரைந்து வர.
23. மெல்லியான் - ஆற்றல் குறைந்தவன்; ஒல்லென - விரைவாய்; ஒருவாது - நீங்காது.
24. இறை - அரசன்.
25. இல்லாகின்று - இல்லையாகிறது.

வாயில்கள் கூற்று

கலித்தொகை 134 **நல்லந்துவனார்**

திணை : நெய்தல்

கூற்று

பிரிவிடை மாலைப்பொழுது கண்டு ஆற்றாத தலைமகள், 'இவ்வகைப் பட்டனவும் நமதிடுக்கண் கண்டு எவ்வங்கொண்டன போன்ற அவரும் நமக்கருளுவார்கொல்லோ?' எனச் சொல்லிய நேரத்துக்கண் தலைமகன் புக, அவ்வளவில் அவள் அவலம் நீங்கியமை கண்டு வாயில்கள் தம்முள்ளே கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்து சென்ற நிலையில் மாலைப்பொழுது கண்டு ஆற்றாத தலைவி, 'கடலும் மணலும் மரமும் எனது இடுக்கண் கண்டு வருந்தியிருக் கின்றனவே! தலைவனும் இவைபோல எனது பிரிவுத்துயர் நீங்க அருள் செய்வானோ?' என்று சொல்லிய அளவிலே தலைவன் வர, தலைவி துயர் நீங்கியது கண்டு வாயில்கள் தம்முள் மகிழ்ந்து கூறிக்கொண்டது.

தரவு

மல்லரை மறம்சாய்த்த மலர்த்தண்தார் அகலத்தோன்,
ஒல்லாதார் உடன்றுஓட, உருத்து,உடன் எறிதலின்,
கொல்யானை அணிநுதல் அழுத்திய ஆழிபோல்,
கல்சேர்பு ஞாயிறு கதிர்வாங்கி மறைதலின்,
இருங்கடல் ஒலித்துஆங்கே இரவுக்காண் பதுபோலப்
பெருங்கடல் ஓதநீர் வீங்குபு கரைசேரப்
போஒய வண்டினால் புல்லென்று துறையவாய்,
பாயல்கொள் பவைபோலக் கயமலர் வாய்கூம்ப,
ஒருநிலையே நடுக்குற்று,இவ் வுலகெலாம் அச்சுற,
இருநிலம் பெயர்ப்பன்ன எவ்வம்கூர் மருள்மாலை—

தாழிசை

தவலில்நோய் செய்தவர்க் காணாமை நினைத்தலின்,
இகல்இடும் பனிதின, எவ்வத்துள் ஆழ்ந்து,ஆங்கே
கவலைகொள் நெஞ்சினேன் கலுழ்தரக் கடல்நோக்கி,
அவலம்மெய்க் கொண்டது போலும்,அஃது எவன்கொலோ?

நடுங்குநோய் செய்தவர் நல்காமை நினைத்தலின்,
கடும்பனி கைம்மிகக் கையாற்றுள் ஆழ்ந்து,ஆங்கே
நடுங்குநோய் உழந்தஎன் நலன்அழிய, மணல்நோக்கி,
இடும்பைநோய்க்கு இகுவன போலும்,அஃது எவன்கொலோ?

வையினர் நலன்உண்டார் வாராமை நினைத்தலின்
கையறு நெஞ்சினேன் கலக்கத்துள் ஆழ்ந்துஆங்கே,
மையல்கொல் நெஞ்சோடு மயக்கத்தால், மரன்நோக்கி,
எவ்வத்தால் இயன்றபோல், இலைகூம்பல் எவன்கொலோ?

எனவாங்கு,

சுரிதகம்

கரைகாணாப் பௌவத்துக் கலம்சிதைந்து ஆழ்பவன்,
திரைதரப் புணைபெற்றுத் தீதுஇன்றி உய்ந்தாங்கு
விரைவனர் காதலர் புகுதர,
நிரைதொடி துயரம் நீங்கின்றால், விரைந்தே.

தெளிவுரை

“அலர்ந்த குளிர்ச்சி பொருந்திய மாலையணிந்த மார்பினனாகிய திருமால் தன்னுடன் பகைத்து எதிர்த்துப் போர்செய்த பகைவர்களின் வலிமையை அழித்தான்; பகைவர் ஒருசேர வந்து சினந்து போரிட்ட போது அவர்கள் தோற்றோடும்படியாக அவர்களுடைய யானைகளின் மத்தகத்திலே தன் சக்கரப்படையை அழுத்தினான்; மத்தகம் பிளந்து செந்நிறம் கொண்டது. அச்சக்கரம் போன்ற ஞாயிறு கதிர்களை ஒடுக்கிக் கொண்டு மலை சேர்ந்ததால் செவ்வானம் தோன்றியது.

“சூரியன் மேற்கு மலையில் மறைந்தான். கடல் நீர் பெருகிக் கரையில் உள்ள உப்பங்கழியைச் சேர்ந்தது. அக்கழியில் பூக்களை விட்டு வண்டுகள் நீங்கியமையால் கடல்துறை பொலிவிழந்தது. நீர்நிலையில் உள்ள மலர்கள் யாவும் உறங்குபவை போலக் குவிந்தன. ஊழி முடிவில் கடல் பொங்கிப் பேரோசை எழுப்ப, உலகத்து உயிர்கள் எல்லாம் அஞ்சி நடுங்க, தான் தோற்றுவித்த பெரிய உலகத்தை மீண்டும் தன்னிடத்தே ஒடுக்கிக்

கொள்வதுபோல, இரவு நேரம் இருளால் அனைத்தையும் மறைத்து நின்றது. இராக்காலம் தோன்றுமுன்னே துணையைப் பிரிந்த காதலரை வருத்த, மயக்கம் நிறைந்த மாலை வந்தது.

(மருட்சியைத் தரும் மாலைக்காலத்தில், தலைவி, தன் தலைவனைப் பிரிந்திருக்கும்போது உண்டாகும் துன்பத்தை எண்ணித் தான் காணும் பொருள்களும் தன்னைக் கண்டு இரங்கு கின்றனவோ எனக் கலங்குகிறாள்.)

தலைவி, "அன்பின் மிகுதியைத் தந்த தலைவனைக் காண முடியாமையால் அடைந்த கவலையையே பற்றுக்கோடாய்க் கொண்டு பனிக்காலம் என்னை வாட்டுகிறது. நான் துயரத்தில் மிகுந்த கவலை நிறைந்த நெஞ்சுடன் வருந்துவதைக் கண்ட கடல் எனது கலக்கத்தைத் தானும் கொண்டதால் அலை எழுப்பி ஒலிக்கிறதோ? அஃது ஏன்?

"நான் நடுங்குதற்குக் காரணமாகிய, காம நோயைத் தந்தவர் அருளாமையால் என்னை இப்பனிக்காலம் மிகுதியாகவும் வருத்துகின்றது. அதனால் என் அழகு சிதைவதைப் பார்த்து, மணல் குன்றுகள் கரைகின்றனவே! அவை என் துன்பத்தைக் கண்டு இரக்கம் கொண்டனவோ? அஃது ஏன்?

"என் அழகுநலத்தைக் கொண்டுசென்றவர் இங்கு வாராமல் என்னைத் துன்புறுத்துகின்றார். நான் மயங்கிச் செயலற்றுக் கலக்கத்தில் உள்ளேன். இதனை நோக்கித் தாமும் வருந்து பவைபோல மரத்திலுள்ள இலைகள் காணப்படுகின்றன. அதனால்தான் அவை குவிந்துள்ளனவோ? அஃது ஏன்?" என்று கூறினாள்.

இவ்வாறெல்லாம் சொல்லித் தலைவி கலங்கியிருக்கும் வேளையில் தலைவன் அங்கு வந்து சேர்ந்தான். கடலின் நடுவில் மரக்கலம் சிதைய, கண்ணுக்கு எட்டிய தூரம்வரை கரையைக் காணாமல் தண்ணீரில் மூழ்கித் துன்புறும் ஒருவன், அலையில் மிதந்து வந்த ஒரு கட்டையைப் பற்றிக்கொண்டு உயிர் பிழைப்பது போல, தலைவி வருத்தம் நீங்கி மகிழ்ச்சியுற்றாள். (அவள் மகிழ்ந்தது கண்டு வாயிலோரும் மகிழ்ந்தனர்.)

கருத்து

தலைவன் பிரிந்திருந்தபோது மாலை நேரம் தோன்றியது; தலைவியின் ஆற்றாமை மிகுந்தது. அப்போது அவள் துயரம் கண்டு தோழியர் முதலிய வாயில்கள் வருந்தினர். அந்த நேரத்தில் தலைவன் வந்து தலைவியின் துன்பத்தை நீக்கினான். அது கண்ட வாயில்கள் தமக்குள் மகிழ்ச்சி கொண்டனர்.

குறிப்பு

மாலையில் இயற்கையில் தோன்றும் காட்சிகள், தன் துன்பம் கண்டு இரங்குவதாய்த் தலைவி கருதுகிறாள். கடல் அலைகள் ஒலிக்கின்றன. அவ்வொலியைக் கடல் தன் துயரம் கண்டு அழுவதாய்க் கருதுகிறாள்; மணற் குன்றுகள் காற்றால் சரிகின்றன; இவள், தன் துன்பம் கண்டுதான் அவை வருந்திச் சரிவதாய்க் கருதுகின்றாள். மாலை நேரத்தில் மர இலைகள் குவிகின்றன. இவள் தன் வருத்தம் கண்டே அவை தலை குனிந்து துன்புறுகின்றன என்று கருதுகிறாள்.

சொற்பொருள்

1. மல்லர் - வீரர்; மறம் சாய்த்த - வீரத்தை அழித்த; மலர்த் தண் தார் அகலத்தோன் - மலரால் ஆன குளிர்ச்சி பெற்ற மாலையை அணிந்த மார்பினைக் கொண்ட திருமால்.
2. ஒல்லாதார் - பகைவர்; உடன்று - வெகுண்டு; உருத்து - சினந்து.
3. ஆழி - சக்கரம்.
4. கல் - மலை; கதிர் வாங்கி - கதிர்களை உள்ளடக்கி.
6. ஓதநீர் - அலை; வீங்குபு - பெருகி.
8. பாயல் - உறக்கம்; கயமலர் - நீர்ப்பூக்கள்; கூம்ப - குவிய.
10. பெயர்ப்பு - அழிவு; எவ்வம் - துன்பம்; மருள் மாலை - மயக்கம் தரும் மாலைப்பொழுது.
11. தவல்இல் - கேடில்லாத; காணாமை - கண்ணால் காணாமல்; நினைத்தலின் - நெஞ்சு நினைக்கையினாலே.
12. இகல்இடும் - மாறுபட்டுத் துயர் தரும்; தின - துன்புறுத்த.
13. கலுழ்தர - வருந்த.
14. அவலம் மெய்க் கொண்டது - என் அவலத்தைத் தன் உடலிலே ஏற்று.
15. நல்காமை - அருளாமை.
16. கையறுதல் - செயலறுதல்.

17. நலன் - அழகு.
18. இருவன - கரைவன.
19. வையினர் - என்னோடிருந்து.
24. பௌவம் - கடல்; கலம் - மரக்கலம்; ஆழ்பவன் - நீருள் அழுந்துபவன்.
25. புணை - தெப்பம்; உய்தல் - பிழைத்தல்.
26. விரைந்து - விரைந்தன.

வாயில்கள் கூற்று

கலித்தொகை 130 **நல்லந்துவனார்**

திணை : நெய்தல்

கூற்று

பிரிவிடை ஆற்றாத தலைமகளது ஆற்றாமை தலைமகன் வந்து சார்தலின் நீங்கினமை கண்டு, வாயில்கள் தம்முள்ளே கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்திருந்த காலத்தில் தலைவி ஆற்றாமை கொண்டிருந்தாள். தலைவன் வந்ததும் அவ்வாற்றாமை நீங்கியது. இதனைக் கண்டு வாயில்கள் தம்முள் கூறியது. (வாயில்கள் - தோழியர், பாணர்கள் முதலியோர்.)

'நயனும், வாய்மையும், நன்னர் நடுவும்,
இவனின் தோன்றிய, இவை'என இரங்கப்
புரைதவ நாடிப் பொய்தபுத்து, இனிதுஆண்ட
அரைசனோடு உடன்மாய்ந்த நல்லூழிச் செல்வம்போல்,
நிரைகதிர்க் கனலி பாடொடு பகல்செலக்
கல்லாது முதிர்ந்தவன் கண்இல்லா நெஞ்சம்போல்,
புல்இருள் பரத்தரூஉம்—புலம்புகொள் மருள்மாலை.

இம்மாலை,
ஐயர் அவிர்அழல் எடுப்ப, அரோ,என்
கையறு நெஞ்சம் கனன்றுதீ மடுக்கும்!

இம்மாலை,

இருங்கழி மாமலர் கூம்ப, அரோ,என்
அரும்படர் நெஞ்சம் அழிவொடு கூம்பும்!

இம்மாலை,
கோவலர் தீங்குழல் இனைய, அரோ,என்
பூவெழில் உண்கண் புலம்புகொண்டு இனையும்!

எனவாங்கு—
படுசுடர் மாலையொடு பைதல்நோய் உழப்பாளைக்
குடிபுறம் காத்துஓம்பும் செங்கோலான் வியன்தானை
விடுவழி விடுவழிச் சென்றாங்கு,அவர்
தொடுவழித் தொடுவழி நீங்கின்றால் பசப்பே.

தெளிவுரை

"*நீதி, உண்மை, நடுவுநிலைமை ஆகியவையெல்லாம் இவனிடத்திலிருந்துதான் தோன்றின' என்று உலகினர் கூறுமாறு ஒருவன் நன்மையையே நாடி, பொய்ம்மையை அறவே போக்கி அரசாண்டிருந்தான். அவன் மறையும்போது அவனோடு அந்நாட்டின் செல்வமும் மறைவதுபோல, கதிவரன் மறைந்தவுடன் பல நன்மைகளைச் செய்த பகற்பொழுதும் மறைந்தது. அதன் பின் நல்லனவற்றைக் கல்லாத மூத்தவனின் அருளற்ற நெஞ்சத்தைப் போல, இருள் பரவித் தனிமைத் துன்பத்தை மிகுதியாய்த் தரும் மாலைப்பொழுது வந்தது.*

"*மாலைப்பொழுதில் அந்தணர் எழுப்பும் வேள்வித்தீயைப் போலச் செயலற்ற என் நெஞ்சமும் கொதித்து என் காமத்தீயை மிகுதிப்படுத்திற்று.*

"*இவ்வேளையில் உப்பங்கழியின் கரையில் பெரிய மலர்கள் எல்லாம் குவிவனபோல, அருந்துயர் படர்ந்த என் நெஞ்சமும் அழிந்து மலர்ச்சியற்றுக் குவிகின்றது.*

"*இவ்வேளையில், பசுக்கூட்டங்களை மேய்க்கும் ஆயரின் குழல் எழுப்பிய பண், பூப்போன்ற என் கண்களின் தனிமைத் துன்பத்தை மிகுதிப்படுத்தி வருத்துகின்றது.*"

இவ்வாறு பலவும் கூறித் தலைவி வருந்திக்கொண்டிருந்த மாலை வேளையில் தலைவன் வந்து சேர்ந்தான்; வந்ததும் அவளை அவன் தழுவினான்; அவள் வருத்தம் முழுவதும் எங்கோ மறைந்தது.

"குடிமக்களைக் காப்பாற்றும் நீதி நிறைந்த பாண்டிய மன்னன் படைகள் செல்லச்செல்லப் பகைவர் ஓடி ஒளிந்துகொண்டனர். அதுபோலத் தலைவன் தலைவியைத் தீண்டுந்தோறும் அவளது நெற்றியில் படர்ந்திருந்த பசலை நீங்கிக்கொண்டே இருக்கின்றதே" என்று வாயில்கள் தமக்குள் சொல்லிச்சொல்லி மகிழ்ந்திருந்தனர்.

கருத்து

தலைவனைப் பிரிந்திருந்த தலைவி மாலை நேரத்தில் வருந்தியிருந்தாள். அவள் தோழியரும் பாணர் சிலரும் அங்கே வந்தனர். அவர்கள் தலைவியின் துன்பம் கண்டு வருந்தினர். அந்நிலையில் தலைவன் வந்து சேர்ந்து தலைவியைத் தழுவ அவள் மிகவும் இன்பமடைந்தாள்.

தலைவி மகிழ்ந்திருந்தமையைத் தோழியரும் பாணரும் கூறித் தம்முள் மகிழ்ந்திருந்தனர் என்பதை இப்பாடல் கூறுகிறது.

குறிப்பு

கல்லாதான் நெஞ்சை இருளுக்கு உவமையாக்கியிருப்பது சிறப்பு.

சொற்பொருள்

1. நயன் - நல்லுறவு; நடுவு - நடுவு நிலை.
3. புரை - உயர்வு; தவ - மிகுமாறு; தபுத்து - கெடுத்து (நீக்கி).
4. நல்லூழிச் செல்வம் - நல்ல முறையாக வந்த செல்வம்.
5. கனலி - சூரியன்; பாடொடு - மறைவோடே.
6. கண்இல்லா - அருள் இல்லாத.
7. பரத்தரூஉம் - பரவும்; புலம்பு - தனிமை; மருள் - மயக்கம்.
9. ஐயர் - அந்தணர்; எடுப்ப - எழுப்ப.
10. கையறு - செயலற்ற; கனன்று - கொதித்து; மடுக்கும் - கொளுத்தும்.
12. இருங்கழி - கரிய உப்பங்கழி; கூம்ப - குவிய.
15. கோவலர் - இடையர்; இனைய - வருந்த.

18. படுசுடர் - மறையும் சூரியன்; பைதல் - துன்பம்.
19. குடி - மக்கள்; புறம் காத்து - ஆட்சி செய்து; ஓம்பும் - பாதுகாக்கும்; வியன் - பெரிய; தானை - படை.
20. விடுவழி - செல்ல; சென்றாங்கு - (பகைவர்) நீங்கினாற்போல.
21. பசப்பு - பசலை நோய்.

காதல் உணர்ந்தோர் கூற்று

ஐங்குறுநூறு 421 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

வினை பலவற்றிற்கும் பிரிந்தொழுகும் தலைமகன் பின்பு மனைவயின் நீங்காது ஒழுகுகின்ற காதலுணர்ந்தோர் சொல்லியது.

கூற்று விளக்கம்

முன்னர்ப் பல்வேறு கடமைகளை முன்னிட்டுத் தலைவன் தலைவியைப் பிரிந்து செல்வதுண்டு. இப்போது பிரிதலின்றி மனையிலேயே தங்கியிருக்கிறான். அது கண்டோர், அதற்குக் காரணம் அவன் காதலி மேற்கொண்ட மிகு காதலே என்று கூறியது.

மாலை வெண்காழ் காவலர் வீச
நறும்பூம் புறவின் ஒடுங்குமுயல் இரியும்
புன்புல நாடன் மடமகள்
நலங்கிளர் பணைத்தோள் விலங்கின செலவே!

தெளிவுரை

“மாலை நேரத்தில் புனத்தைக் காப்பவர்கள் தம் கையில் உள்ள வெள்ளிய தடியைத் தரையில் வீச, அதனால் உண்டான ஒலியைக் கேட்டு முல்லைக்காட்டில் ஒளிந்திருந்த முயல்கள் அஞ்சி ஓடும். அத்தகைய முல்லை நிலத் தலைவனின் இள மகளாகிய தலைவியின் அழகிய பருத்த தோள்கள் தலைவனின் செலவினைத் தடுத்து விட்டன.”

கருத்து

தலைவியின் தோளழகு இல்லை விட்டு வெளியே செல்ல விடாமல் தலைவனைத் தடுக்கிறது.

சொற்பொருள்

1. மாலை - மாலைப்பொழுது; வெண்காழ் - வெள்ளிய தடி; காவலர் - புனம் காவல் செய்பவர்; வீச - எரிய.
2. புறவு - முல்லை நிலம்; ஒடுங்குமுயல் - ஒளிந்திருந்த முயல்; இரியும் - ஓடும்.
3. புன்புலம் - புன்செய், முல்லை நிலம்; மடமகள் - இளைய மகள்.
4. நலங்கிளர் - அழகு மிக்க; பணைத்தோள் - பெரிய தோள்; விலங்கின - தடுத்தன; செலவு - தலைவன் பிரிவு.

உழையர் கூற்று

அகநானூறு 324 **ஒக்கூர் மாசாத்தியார்**

திணை : முல்லை

கூற்று

வினைமுற்றிய தலைமகன் கருத்துணர்ந்து, உழையர் கூறியது. (உழையர் - அருகிருப்பார்).

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியைப் பொருளீட்டி வரப் பிரிந்தான்; தொழில் முடிந்ததும் மீள்வதற்கு முனைந்தான்; அவனது கருத்தை உணர்ந்த அவன் அருகிருப்பார், இனித் தலைவி வருத்தம் தீர்ந்து மகிழ்ச்சி பெறுவாள் என மகிழ்வுடன் தம்முள் கூறிக்கொள்வது.

விருந்தும் பெறுகுநள் போலும், திருந்துஇழைத்
தடமென் பணைத்தோள் மடமொழி அரிவை—
தளிர்இயல் கிள்ளை இனிதின் எடுத்த
வளராப் பிள்ளைத் தூவி அன்ன,
வார்பெயல் வளர்த்த, பைம்பயிர்ப் புறவில்
பறைக்கண் அன்ன; நிறைச்சுனை தோறும்
துளிபடு மொக்குள் துள்ளுவன சால,

தொளிபொரு பொகுட்டுத் தோன்றுவன மாய,
வளிசினை உதிர்த்தலின் வெறிகொள்பு தாஅய்,
சிரற்சிறகு ஏய்ப்ப அறல்கண் வரித்த
வண்டுஉண் நறுவீ துமித்த நேமி
தண்நில மருங்கில் போழ்ந்த வழியுள்,
நிரைசெல் பாம்பின் விரைபுநீர் முடுக,
செல்லும், நெடுந்தகை தேரே –
முல்லை மாலை நகர்புகல் ஆய்ந்தே!

தெளிவுரை

தளிரின் தன்மையைக் கொண்ட கிளி, இனிதாய் வளர்த்த இளங் குஞ்சின் சிறகினைப் போன்று மழை பெய்து வளர்ந்துள்ள பசுமை நிறப் பயிர்களைக் கொண்ட முல்லைநிலக் காடு; அங்குப் பறையின் கண் போன்ற நீர் நிறைந்த சுனைகள் மிக்குண்டு; மழை பெய்தமையால் அச்சுனைதோறும் மழைநீர் விழுந்து உண்டாகிய குமிழிகள் குதிப்பனவற்றை ஒப்ப, சேற்றில் விழுந்த நீர்த்துளிகளால் உண்டான குமிழிகள் தோன்றி மறைந்தன; காற்று வீசுதலால் கிளைகளினின்றும் மணம் கொண்ட மலர்கள் சிச்சிலிப் பறவையின் சிறகுகள் போன்று, கருமணல் கொண்ட நிலத்தின்மீது உதிர்ந்து வீழ்ந்து அழகு செய்தன; தேன் உண்ண வண்டுகள் படிந்த அம்மலர்களை அறுத்துச் செல்லும் தேர்ச் சக்கரங்கள், குளிர்ச்சி பொருந்திய அம்முல்லை நிலத்தைப் பிளந்து செல்லும்; அவ்வாறு பிளந்து சென்ற சக்கரத்தின் சுவட்டில் மழைநீர் விரைந்து ஊர்ந்து செல்லும். அக்காட்சி, ஒன்றன்பின் ஒன்றாய் ஊர்ந்து செல்லும் பாம்புகள்போலக் காணப்படும்.

அத்தகைய சூழலில், முல்லை மலரும் மாலைக்காலத்தே, பெருந்தகையாகிய நம் தலைவன் தேர் ஊர்ந்து தலைவியின் இல்லத்திற்குச் செல்லத் துணிந்தனன்.

திருத்தமாய்ச் செய்யப்பெற்ற அணிகலன்களையும், மூங்கிலை ஒத்த அழகு பெற்ற மென்மை வாய்ந்த பெருத்த தோள்களையும், மடப்பம் வாய்ந்த மொழியினையும் கொண்ட தலைவி இன்று

தலைவனுக்கு விருந்து அளிக்கும் பேற்றினைப் பெறுவாள் போலும்!

கருத்து

'தலைவன் இன்று திரும்பிச் செல்கிறான். தலைவி அவனுக்கு விருந் தளித்து மகிழ்வாள்' என ஏவலர் கூறி மகிழ்கின்றனர்.

விளக்கம்

தலைவன் வீடு திரும்புகிறான். அவன் தேர் முல்லைநிலக் காட்டினைப் பிளந்து செல்லும். அப்போது தேர்ச்சக்கரம் உண்டாக்கும் பள்ளமான வழியில் மழைநீர் விரைந்து ஊர்ந்து செல்லும். இத்தகைய சூழலில் முல்லை மலரும் மாலை நேரத்தில் இல்லம் சென்றடைவான், தலைவன். இதனால் தலைவி இன்று தலைவனுக்கு விருந்தளிக்கும் பேறு பெறுவாள்.

சொற்பொருள்

3. இயல் - தன்மை; கிள்ளை - கிளி; எடுத்த - வளர்த்த.
4. வளராப் பிள்ளை - இளைய குஞ்சு; தூவி - சிறகு.
5. வார்பெயல் - பெய்த மழை; புறவு - முல்லைநிலக் காடு.
6. நிறை - நீர் நிறைந்த.
7. துளிபடு - மழைத்துளி விழுந்ததால் உண்டாகிய; சால - போன்று.
8. தொளி - சேறு; பொகுட்டு - குமிழிகள்; மாய - மறைய.
9. வெறிகொள்பு - மணம் கொண்டு; தாஅய் - பரவி.
10. சிரல் - சிச்சிலிப்பறவை; அறல்கண் - கருமணல்மீது; வரித்த - அழகு செய்த.
11. துமித்த -அறுத்த; நேமி - (தேர்ச்) சக்கரம்.
12. மருங்கில் - இடத்தில்; போழ்ந்த - பிளந்த.
13. நிரைசெல் - வரிசையாய்ச் செல்லும்; விரைபு - விரைந்து.
14. நெடுந்தகை - பெருந்தகையாகிய தலைவன்.
15. நகர் - இல்லம்.

தோழி கூற்று

நற்றிணை 361 **மதுரைப் பேராலவாயர்**

திணை : முல்லை

கூற்று

வாயில்களோடு தோழி உறழ்ந்து சொல்லியது.

கூற்று விளக்கம்

தான் குறித்துச் சென்ற பருவம் கடந்து பிரிந்து சென்ற தலைவன் வீடு திரும்புகின்றான். அதனால் தலைவி அவனை மகிழ்ந்து வரவேற்காமல் ஊடிச் சினத்தலும் கூடும் என்றஞ்சிய தோழி, பணியாளர்களிடம், 'தலைவன் வந்து சேர்ந்தான்; தலைவியின் துன்பங்களெல்லாம் நீங்கின' எனக் கூறியது.

சிறுவீ முல்லைப் பெரிதுகமழ் அலரி
தானும் சூடினன்; இளைஞரும் மலைந்தனர்;
விசும்புகடப் பன்ன பொலம்படைக் கலிமா,
படுமழை பொழிந்த தண்நறும் புறவில்,
நெடுநா ஒண்மணி பாடுசிறந்து இசைப்ப,
மாலை மான்ற மணம்மலி வியல்நகர்த்
தந்தன நெடுந்தகை தேரே; என்றும்
அரும்படர் அகல நீக்கி,
விருந்துஅயர் விருப்பினள், திருந்துஇழை யோளே.

தெளிவுரை

"தலைவன் மிகவும் மணம் கமழும் சிறிய முல்லை மலரினைத் தானும் சூடிக்கொண்டான்; உடன் வந்த இளைஞரும் சூடிக் கொண்டனர். தலைவன் தேரேறினான்; குதிரைகளுக்குப் பொன்னாலாகிய முகபடாத்தினை அணிவித்திருந்தனர்; நீண்ட நாவையும் ஒளியையும் கொண்ட மணியினது ஓசை மிக்கொலித்தது; மிக்க மழை பொழிந்த தண்ணிய நறுமணம் கமழும் காட்டில், குதிரைகள் வானத்தைக் கடந்து செல்வது போன்ற வேகத்துடன் ஓடின; மாலைப்பொழுது மயங்கிய நேரத்தில் மணல் பரப்பப் பெற்ற அகன்ற இல்லத்தின் வாயிலில் தலைவனது தேரைக் கொண்டுவந்து நிறுத்தின. அதுவரை தன்னை வாட்டிய துயரத்தைத் துறந்து, திருந்திய அணிகலன்களை அணிந்த

தலைவி, விருந்து படைக்கும் விருப்பம் மேலோங்க நின்றனள்" என்று தலைவன் வரவைக் குறித்துத் தோழி வாயில்களிடம் கூறினாள்.

கருத்து

தலைவன் வந்து சேர்ந்தனன்; தலைவி விருந்து படைக்க விரும்பி நிற்கிறாள்.

விளக்கம்

வினை முடித்த தலைவன் முல்லை மலர்களைச் சூடி, இளையரோடு தேரேறி வந்தனன். அவன் வரவைத் தேரின் மணியொலி அறிவித்தது. குதிரைகள் விரைந்து தேரைக் கொணர்ந்தன. தலைவி துன்பமெல்லாம் தீர்ந்து விருந்தயரும் விருப்பினளாயினள்.

குறிப்பு

தலைவன் பொருள் தேடப் பிரிந்து சென்றான். கார்ப்பருவம் தொடங்கியது. அது கண்ட வாயில்கள் தலைவன் வாராமைபற்றித் தம்முள் உரையாடலுற்றனர்; தலைவி ஆற்றாமை மிக்கு வருந்துகிறாள் என்றும் கூறினர். தலைவன் வினைமுற்றி மீண்டு வருவதைத் தூதுவர் முன்னரே வந்து கூறினமையின், தோழி, மிக்க தெளிவுடன் வாயில்கள் கூற்றை மறுத்து, தலைவன் வந்து சேர்ந்ததைக் கூறினாள்.

சொற்பொருள்

1. சிறுவீ - சிறிய மலர்; கமழ் - மணம் வீசும்; அலரி - மலர்ந்த முல்லை மலர்.
2. தானும் - தலைவனும்; இளைஞர் - பணியாளர்; மலைந்தனர் - சூடினர்.
3. கடப்பன்ன - கடத்தலைப் போல; பொலம்படை - பொன்னாலான முகபடாம்; கலிமா - குதிரை.
4. படுமழை - பெருமழை; புறவு - கானம்.
5. நெடுநா - நீண்ட நா; ஒண்மணி - ஒள்ளிய மணி; பாடு - ஒலி.
6. மாலை - மாலைப்பொழுது; மான்ற - மயங்கிய; மலி - நிறைந்த; வியல் - இடம் அகன்ற; நகர் - மாளிகை.
7. தந்தன - சேர்த்தன; நெடுந்தகை - தலைவன்.
8. அரும்படர் - தலைவனைப் பிரிந்த தலைவியின் மிக்க துயரம்.

9. **விருந்து அயர் விருப்பினள் - விருந்து பேணும் விருப்பினளாயினள்; திருந்து இழையோள் - திருத்தமான அணிகலன்களை அணிந்துள்ள தலைவி.**

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 123 **கணிமேதாவியார்**

திணை : முல்லை

கூற்று

குறித்த பருவத்தின்கண் வந்த தலைமகனைப் புணர்ந்திருந்த தலைமகள் முன்பு தன்னை நலிந்த குழலோசை அந்திமாலைப் பொழுதின்கண் கேட்டதனால் துயர் உறாதாளாய்த் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

குறித்த பருவத்தின்கண் வந்த தலைவனைப் புணர்ந்திருந்த தலைவி, அந்திமாலையில் முன்பு தன்னை நலித்த குழலோசை இப்போது துயருறுத்து வதில்லை எனத் தோழியிடம் சொல்லியது.

இம்மையால் செய்ததை இம்மையே ஆம்போலும்;
உம்மையே ஆம்என்பார் ஓரார்காண்; – நம்மை
எளியர் எனநலிந்த ஈர்ங்குழலாளர், ஏடி!
தெளியச் சுடப்பட்ட வாறு.

தெளிவுரை

“என் தோழியே! தலைவரைப் பிரிந்திருந்த நம்மை எளியவர் என கருதிப் புல்லாங்குழல் வருத்தியது. அதனாலேயே உலகினர் பலரும் அறியுமாறு அது தீயில் இடப்பட்ட சூட்டுக்கோலால் துளையிடப்பட்டது. இப்பிறப்பில் ஒருவன் தீவினை செய்வானாயின் அதற்குரிய தண்டனையை இப்பிறவியிலேயே அடைந்து விடுவான் என்பதை இது காட்டுகிறது. இதனை அறியாதவரே அத்தீவினை மறுபிறவியில் பயன் அளிக்கும் எனக் கூறுவர். இதனை நன்கு தெளிவாய்” எனத் தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

பிரிவுக்காலத்தில் குழலோசையால் தான் வருத்தமுற்றதுபோல் இப்போது வருத்தமுறவில்லை எனத் தோழியிடம் தலைவி கூறினாள்.

குறிப்பு

இம்மையில் செய்ததன் பயன் இம்மையிலேயே வரும். தலைவனைப் பிரிந்திருந்த தலைவியைப் புல்லாங்குழல் துன்புறுத்தியது. அதனால் உலகோர் சூட்டுக்கோலால் அதன்மீது துளையிட்டுத் துன்பம் தந்தனர்.

சொற்பொருள்

1. இம்மையில் செய்ததன் பயன் இம்மையிலேயே விளையும்.
2. உம்மையே ஆம் - மறுமையில் விளையும் (என்பார்); ஓரார் - அறியாதவர்; காண் - தெரிவாய்.
3. நலிந்த - வருத்திய; ஈர்ங்குழலாளர் - குளிர்ந்த புல்லாங்குழலார்; ஏடி - தோழியே.
4. தெளிய - (பிறர்) அறியும் வண்ணம்; சுடப்பட்டவாறு - சுட்டுத் துளை செய்யப்பட்ட முறையால்.

தலைவன் கூற்று

குறுந்தொகை 270 **பாண்டியன் பன்னாடுதந்தான்**

திணை : முல்லை

கூற்று

வினை முற்றிப் புகுந்த தலைமகன் கிழத்தியொடு உடனிருந்து கூறியது.

கூற்று விளக்கம்

பொருள் தேடச் சென்ற தலைவன் திரும்ப வந்து தலைவியொடு இன்புற்றிருந்தான். அப்போது பெய்த மழையை அவன் வாழ்த்திக் கூறியது.

தாழ்இருள் துமிய மின்னித் தண்ணென
வீழ்உறை இனிய சிதறி, ஊழின்
கடிப்புஇகு முரசின் முழங்கி, இடித்துஇடித்துப்
பெய்கஇனி; வாழியோ, பெருவான்! யாமே,

செய்வினை முடித்த செம்மல் உள்ளமோடு
இவளின் மேவினம் ஆகி, குவளைக்
குறுந்தாள் நாள்மலர் நாறும்
நறுமென் கூந்தல் மெல்அணை யேமே.

தெளிவுரை

உயர்ந்த வானமே வாழ்க! பொருள் தேடச் சென்று செயலை வெற்றிகரமாய் முடித்தேன்; நிறைவான உள்ளத்துடன் தலைவியை அடைந்தேன்; சிறிய காம்பினைக் கொண்ட புதிய குவளை மலர்களின் மணம் பொருந்திய தலைவியின் நல்ல மெல்லிய கூந்தலாகிய மென் படுக்கையில் பொருந்தியிருக்கிறேன். ஆதலால், வானமே! மிக்க இருளைக் கிழிப்பதுபோல மின்னி, குளிர்ச்சி பொருந்தக் கொட்டும் மழைத்துளிகளை இனிதாய் எங்கும் சிதறி, முறையாக அடுத்தடுத்துக் குறுந்தடியால் அடிக்கப்பெறும் முரசினைப்போல முழங்கி, அடுத்தடுத்து இடி இடித்து, இனிய மழையைப் பெய்விக்கின்ற நீ வாழ்க!

கருத்து

நான் இன்பம் பெற்றிருக்கிறேன்; மழையே இனி நன்கு பெய்வாயாக!

விளக்கம்

தலைவன் பொருள்தேடச் சென்றபோது மழை பெய்திருக்குமாயின் அவன் பெரிதும் துன்புற்றிருப்பான். அவ்வாறின்றி அவன் திரும்பித் தன் மனைவியுடன் படுக்கையில் இருக்கும்போது பெய்வதால் அவன் இன்பத்தை மழை மேலும் இன்பமாக்குகிறது. ஆதலின், அவன் மழையை வாழ்த்துகிறான்.

சொற்பொருள்

1. தாழ் இருள் - தங்கியிருந்த இருட்டு; துமிய - அழியும்படி.
2. வீழ் - வீழ்கின்ற; உறை சிதறி - பெருந்துளிகளைச் சிதறி; ஊழின் - முறைப்படி.
3. கடிப்புஇகு - குறுந்தடியால் அடிக்கப்படும்.
4. பெருவான் - பெரிய வானம்.
5. செய்வினை - செய்ய வேண்டிய செயல்; செம்மல் - நிறைவான.
6. மேவினம் - பொருந்தினோம்.

7. குறுந்தாள் - சிறிய காம்பு; நாள் மலர் - புதிய மலர்.
8. மெல் அணையேம் - மென் படுக்கையில் இருக்கிறேன்.

தலைவன் கூற்று

நற்றிணை 139 **பெருங்கௌசிகனார்**

திணை : முல்லை

கூற்று

தலைமகன் வினைமுற்றிவந்து பள்ளியிடத்தானாக, பெய்த மழையை வாழ்த்தியது.

கூற்று விளக்கம்

பொருள் தேடச் சென்றிருந்த தலைவன் மீண்டு வந்து, தன் மனைவியோடு பள்ளியறையில் இருந்தபோது நிலங்குளிரப் பெய்த மழையை அவன் வாழ்த்தியது.

உலகிற்கு ஆணி யாகப் பலர்தொழ,
பலவயின் நிலைஇய குன்றின் கோடுதோறு
ஏயினை, உரைஇயரோ! பெருங்கலி எழிலி!
படுமலை நின்ற நல்யாழ் வடிநரம்பு
எழீஇ அன்ன உறையினை! முழவின்
மண்ஆர் கண்ணின் இம்மென இமிரும்
வணர்ந்துஒலி கூந்தல் மாஅ யோளொடு
புணர்ந்துஇனிது நுகர்ந்த சாரல் நல்ஊர்,
விரவுமலர் உதிர வீசி –
இரவுப்பெயல் பொழிந்த உதவி யோயே!

தெளிவுரை

“மேகமே! மத்தளத்தில் மண்ணால் பூசப்பெற்றுள்ள கண்போல ‘இம்’மென முழங்குகின்றாய்! நெறித்துத் தழைத்த கூந்தலையும் மாமை நிறத்தையும் கொண்ட என் காதலியுடன் முயங்கி அவளது நலனை இனிதாய் நுகர்ந்துகொண்டுள்ளேன்.

இவ்வேளையில் மலைச்சாரலில் அமைந்துள்ள ஊர்களில் மலர்கள் உதிரும்படி இரவில் மழை பொழிந்துகொண்டுள்ளாய்! நல்ல யாழில் படுமலைப்பண்ணை எழுப்பினாற்போன்ற ஓசையைக் கொண்ட மழையைப் பெய்து பேருதவி புரிந்துள்ளாய்! ஆதலால், உலகுக்கு ஆதாரமாய் அமைந்து, யாவரும் தொழும்படியாக நிலைபெற்று நின்று குன்றுதோறும் பொருந்தி உலா வருவாயாக!"

கருத்து

இரவு மழை பெய்வதால் உலகு முழுதும் குளிர்ச்சி பெறுகிறது. தலைவியோடு இன்பம் நுகரும் தலைவனுக்கு இக்குளிர்ச்சி மேலும் இன்பத்தைத் தருகிறது. ஆதலால், அவன் மழையை மனங்குளிர வாழ்த்துகிறான். குன்றுதோறும் பரவிப் பெய்து உலகை வளப்படுத்துமாறும் வேண்டிக்கொள்கிறான்.

சொற்பொருள்

1. ஆணி - ஆதாரம்.
2. நிலைஇய - நிலைபெற்று நிற்கும்; கோடு - உச்சி.
3. ஏயினை - பொருந்தி; கலி - ஆரவாரம்; எழிலி - மேகம்.
4. படுமலை - ஒரு வகைப்பண்; வடி - தடவப்பட்ட.
5. எழீஇஅன்ன - எழுப்பினாற்போல; உறையினை - பெய்தனை.
6. மண்ஆர் - மண்ணால் பூசப்பெற்ற; கண்ணின் - (முழவுக்) கண் போல; இமிரும் - ஒலிக்கும்.
7. வணர்ந்து - நெளிந்து, வளைந்து; மாஅயோள் - மாமை நிறம் கொண்டவள்.
8. புணர்ந்து - கூடி; சாரல் - மலைச்சாரல்
9. விரவு - நெருங்கிய; உதிர - உதிரும்படியாக.
10. இரவுப்பெயல் - இரவில் பெய்யும் மழை; பொழிந்த - பெய்த; உதவியோய் - உதவி செய்த (மழையே).

தலைவி கூற்று

குறுந்தொகை 107 **மதுரைக் கண்ணனார்**

திணை : மருதம்

கூற்று

பொருள்முற்றி வந்த தலைமகனுடைய கிழத்தி காமம் மிக்க கழிபடர் கிளவியால் கூறியது. (காமம் மிக்க கழிபடர் கிளவி - காம உணர்வு மிகுதிப்பட்டதால், மிகுந்த துன்பமுற்று, அஃறிணைப்பொருள்களை விளித்துத் தனக்குத்தானே பேசுவது.)

கூற்று விளக்கம்

பொருள் தேடித் திரும்ப வந்த தலைவனோடு தலைவி கூடியிருந்தபோது, சேவல் கூவ, அதனாலேயே பொழுது விடிந்ததாகக் கருதி, சேவலை, 'நீ அழிந்து போ' என்று தலைவி கடிந்து கொண்டது.

குவிஇணர்த் தோன்றி ஒண்பூ அன்ன
தொகுசெந் நெற்றிக் கணம்கொள் சேவல்!
நள்ளிருள் யாமத்து இல்எலி பார்க்கும்
பிள்ளை வெருகிற்கு அல்குஇரை ஆகி,
கடுநவைப் படீஇயரோ, நீயே நெடுநீர்
யாணர் ஊரன் தன்னொடு வதிந்த
ஏம இன்துயில் எடுப்பி யோயே!

தெளிவுரை

குவிந்து கொத்தாய் ஒளிவீசும் செங்காந்தள் மலரினைப் போன்ற சிவந்த கொண்டையைக் கொண்டு தன் கூட்டத்தோடு சேர்ந்து நிற்கும் சேவலே! ஆழமான நீர்நிலையுடன் புது வருவாயைக் கொண்ட மருதநிலத் தலைவனாகிய என் காதலனுடன் சேர்ந்து அனுபவித்த இனிய உறக்கத்திலிருந்து என்னை எழுப்பிவிட்டாயே! நீ இருள் செறிந்த நள்ளிரவில் வீட்டு எலியைத் தின்னக் காத்திருக்கும் காட்டுப் பூனைக் குட்டிக்கு, சில நாள் வைத்திருந்து உண்ணும் இரையாகி, மிகுந்த துன்பத்தை அடைக!

கருத்து

என் துயிலைக் கெடுத்த சேவல், துண்டுதுண்டாய் அழிந்தொழியட்டும்.

விளக்கம்

பற்பல நாள் பிரிந்திருந்து திரும்பிய தலைவனுடன் தலைவி இரவில் இனிதே கூடியிருந்தாள். பொழுது விடிந்தது. தலைவி, 'இதற்குள் பொழுது விடிந்துவிட்டதே' என ஏங்கினாள். பொழுது இயற்கையாய் விடிகிறது; என்றாலும் சேவல் கூவியதாலே விடிந்ததாய் அதன்மீது எரிந்து விழுகிறாள். அவள், சீற்றத்தின் உச்சத்தில் இருந்து அச்சேவல் துண்டுதுண்டாய்க் கொஞ்சம் கொஞ்சமாய் அழிந்து ஒழிய வேண்டுமென்கிறாள்.

சொற்பொருள்

1. குவி - குவிந்த; இணர் - கொத்து; தோன்றி - செங்காந்தள்; ஒண்பூ - ஒளி வீசும் பூ.
2. செந்நெற்றி - சிவந்த கொண்டை; கணம் - கூட்டம்.
3. இல்எலி - வீட்டு எலி; பார்க்கும் - (உணவுக்காகத்) தேடும்.
4. பிள்ளை - குட்டி; வெருகு - காட்டுப்பூனை; அல்கு இரை - சில நாள்களுக்குப் பயன்படும் இரை.
5. கடு - மிகுதியான; நவை - துன்பம்.
6. யாணர் - புது வருவாய்; வதிந்த - கூடியிருந்த.
7. ஏமம் - அமைதியான, பாதுகாவலான; துயில் எடுத்தல் - தூக்கத்திலிருந்து எழுப்புதல்.

தலைவி கூற்று

நற்றிணை 174 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : பாலை

கூற்று

வினைமுற்றி வந்தெய்திய காலத்து ஆற்றாளாய தலைமகளைத் தோழி வற்புறீஇ நின்றாட்கு அவள் சொல்லியது.

கூற்று விளக்கம்

வினைமேற்சென்ற தலைவன் திரும்பிய பின்னரும் தலைவி ஆற்றாமை யால் மிகவும் வருந்தியிருந்தாள். அதனையறிந்த தோழி, 'அவ்வாறிருப்பது ஏன்?' என்று கேட்டபோது, தலைவி தன் மனத்துள் மறைத்து வைத்திருந்த உண்மையைக் கூறியது.

'கற்றை ஈந்தின் முற்றுக்குலை அன்ன
ஆள்இல் அத்தத் தாளிப் போந்தைக்
கோளுடை நெடுஞ்சினை ஆண்குரல் விளிப்பின்,
புலிஎதிர் வழங்கும் வளிவழங்கு ஆர்இடைச்
சென்ற காதலர் வந்துஇனிது முயங்கி,
பிரியாது ஒருவழி உறையினும், பெரிதுஅழிந்து
உயங்கினை, மடந்தை! என்றி தோழி!'
அற்றும் ஆகும்அஃது அறியா தோர்க்கே;
வீழாக் கொள்கை வீழ்ந்து கொண்டி
மல்லல் மார்பு மடுத்தனன்
புல்லுமற்று எவனோ, அன்புஇலங் கடையே?

தெளிவுரை

"தோழி! மக்கள் இயக்கமற்ற வழியில் முற்றிய ஈந்தின் காய்க் குலையைப் போல விளங்கும் கற்றையான குலைகளுடன் கூடிய தாளிப்பனையின் நெடிய மடலிலிருந்து ஆண் பறவை ஒன்று தன் பெடையைக் கூவி அழைக்கும். அவ்வொலியைக் கேட்ட புலி அதற்கு எதிரோசை தோன்றும்படி முழங்கும். கோடைப் பருவக் காற்று வீசும் அத்தகைய அரிய காட்டுவழியில் சென்ற நம் காதலர் மீண்டு வந்து, இனிதாய்த் தழுவி, உன்னை விட்டுப் பிரியாது ஒன்றாய் இருக்கும்போதும், 'நீ ஏன் மனம் மிகவும் வருந்தியிருக்கிறாய்?' என்று கேட்கிறாய். காரணம் அறியாத வர்க்கு அஃது அப்படித்தான் தோன்றும். முன்பு நம் தலைவன் பிற பெண்டிரை விரும்பாத கொள்கையைக் கொண்டவனாய் இருந்தான். இப்போது தன் வளமைமிக்க மார்பினைப் பரத்தைக்குத் தருகின்றான். இவ்வாறு பிறள் ஒருத்திமீது அன்பு செலுத்தும் அவன் எவ்வாறு என்மீது அன்பு செலுத்த இயலும் என்று தோன்றுகிறது. அன்பு இல்லாதவிடத்து அவன் என்னைத் தழுவிக் கொள்வதாலும், நான் அவனைத் தழுவிக்கொள் வதாலும் யாது பயன் விளையும்?" என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

உள்ளத்தால் அன்பில்லாதவர் எத்துணை நெருங்கிப் புல்லினும் அஃது இன்பம் தாராது.

விளக்கம்

வினை முற்றி வந்த தலைவனுடன் தலைவியும் ஓரிடத்திலிருந்த போதும் தலைவி மிகவும் நெஞ்சழிந்து வருந்தியிருப்பதைக் கண்ட தோழி, அவள் அவ்வாறிருக்கக் காரணம் யாது என்று கேட்டாள். அதற்குத் தலைவி, "தலைவன் பரத்தையை முயங்கி வந்த பிறகு என்னை அன்பின்றித் தழுவுகின்றான். அத்தழுவலால் என்ன பயன் உண்டாகும்?" என்று தலைவி தன் உள்ளக் கருத்தைத் தெரிவிக்கிறாள்.

இறைச்சி

1. 'ஈந்தின் முற்றிய குலையைப் போன்றது தாளிப்பனை' என்றது, பரத்தையும் என்போலத் தலைவனுக்குரியவளானாள் என்றதாம்.

2. தாளிப்பனை மடலிலிருந்து ஆண்பறவை பெண் பறவையைக் கூவி அழைக்கும். அவ்வொலியைக் கேட்ட புலி, எதிரோசை தோன்றும்படி முழங்கும் என்றது, இல்லத்திலிருக்கும் தலைவி கணவனை விரும்பி ஏற்பின், அயலே பரத்தை முழக்கத்தோடு தலைவனை அழைத்து நிற்பாள் என்பதாம்.

சொற்பொருள்

1. கற்றை - குலை; ஈந்து - ஈச்ச மரம்; முற்றுக்குலை - முற்றிய குலை.
2. போந்தை - தாளிப்பனை.
3. கோள் - குலை; நெடுஞ்சினை - நெடிய மடல்; ஆண் - ஆண்பறவை.
4. எதிர் வழங்கும் - எதிர்க்குரலாய் ஒலிக்கும்; வளி - காற்று; ஆர்இடை - கடத்தற்கரிய வழி.
5. முயங்கி - தழுவி.
6. ஒரு வழி - ஒன்று சேர்ந்து; அழிந்து - கலங்கி.

7. உயங்குதல் - வருந்துதல்.
8. அற்றும் - அத்தன்மைத்தும்.
9. வீழாக் கொள்கை - விருப்பமில்லாத கோட்பாடு; கொண்டி - திருட்டு (பரத்தையுடன் கூடுதல்)
10. மல்லல் - வளப்பம்; மடுத்தல் - நல்குதல்.
11. அன்பு இலங்கடை - அன்பு இல்லாதபோது; புல்லு எவனோ? - தழுவுதல் என்ன பயனைத் தரும்?

திருக்குறள், அதிகாரம் 128 குறிப்பு அறிவுறுத்தல்

தலைவன் கூற்று

திருக்குறள் 1271 **திருவள்ளுவர்**

திணை : நெய்தல்

கூற்று

பிரிந்து கூடிய தலைமகன் வேட்கை மிகுவினால் புதுவது பன்னாளும் பாராட்டத் தலைமகள், 'இஃது ஒன்று உடைத்து' என அஞ்சியவழி அதனை அவள் குறிப்பான் அறிந்து அவன் அவட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

முன்பொருமுறை பிரிந்து சென்று திரும்பிய தலைவன், இயல்புக்கு மாறாய்த் தலைவியை ஒவ்வொரு நாளும் புதிது புதிதாய் பாராட்டினான்; மீண்டும் அவன் பிரிய நினைத்துள்ளான் என்பதையே எல்லை மீறிய இப்பாராட்டுகள் குறிப்பாய் உணர்த்துகின்றன என்று கருதித் தலைவி அஞ்சினாள். அதனை அவள் வெளிப்படக் கூறவில்லை. ஆயினும் அவளுடைய கண்கள் அவள் எண்ணத்தைக் குறிப்பாய் உணர்த்துவது கண்ட தலைவன் கூறியது.

கரப்பினும் கைஇகந்(து) ஒல்லா,நின் உண்கண்
உரைக்கல் உறுவ(து)ஒன்று உண்டு.

தெளிவுரை

மை தீட்டிய கண்களையுடைய தலைவியே! நீ என்னிடம் சொல்லாது மறைத்தாலும் உன்னையும் மீறி உன் கண்கள் என்னிடம் கூறுகின்ற செய்தி ஒன்று இருக்கிறது.

கருத்து

நீ மறைத்தாலும் உன் கண்கள் எனக்கு ஒரு செய்தியைக் குறிப்பால் அறிவிக்கின்றன.

விளக்கம்

தலைவி தன்னுடைய எண்ணத்தை மறைக்கிறாள். அதை அவள் சொல்லாவிட்டாலும் அவளுடைய கண்கள் குறிப்பால் வெளிப் படுத்தி விடுகின்றன.

குறிப்பு

உள்ளத்தில் உள்ளதைக் கண்கள் காட்டிவிடும்.

சொற்பொருள்

1. கரப்பினும் - (நீ) மறைத்தாலும்; ஒல்லா - உடன்படாது; கை இகந்து - உன்னையும் மீறி (கட்டுக்கு அடங்காமல்); நின் உன்கண் - மை தீட்டிய உன் கண்கள்.
2. உரைக்கல் உறுவது - சொல்லக்கூடிய செய்தி; உண்டு - (ஒன்று) இருக்கிறது.

தலைவன் கூற்று

திருக்குறள் 1272 **திருவள்ளுவர்**

திணை : நெய்தல்

கூற்று

நாணால் அவள் அது சொல்லாய வழி, அவன் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவி, தன் மனத்தில் ஒரு செய்தி கொண்டிருப்பதை அவளுடைய கண்களின் குறிப்பால் அறிந்த தலைவன், அதனைத் தோழியிடம் சொல்லியது.

கண்நிறைந்த காரிகைக் காம்(பு)ஏர்தோள் பேதைக்குப்
பெண்நிறைந்த நீர்மை பெரிது.

தெளிவுரை

'கண் நிறைந்த அழகும், மூங்கிலை ஒத்த தோளும் உடைய உன் தோழியிடம் (தலைவியிடம்) பெண்மை நிறைந்த தன்மை மிகுதியாய் உள்ளதை அறிகிறேன்' எனத் தலைவன் தோழியிடம் கூறினான்.

கருத்து

தலைவியிடம் பெண்மை நலம் மிகுதியாயுள்ளது.

விளக்கம்

தலைவி, தலைவன் மீண்டும் பிரிவனோ என்று அஞ்சிக் கவலைப்படுகிறாள். அதனால் உள்ளத்தில் உள்ளவற்றை நாணம் காரணமாய்ச் சொல்லாது மறைக்கிறாள்.

குறிப்பு

தலைவன் பிரிவனோ என்ற அச்சமும், இல்லாத பிரிவை நினைத்ததால் மடமையும், அதைச் சொல்லாமையால் நாணமும் மிகுந்தவளாய்த் தலைவி இருப்பதால், 'பெண்மை நிறைந்த நீர்மை பெரிது' என்றான், தலைவன்.

சொற்பொருள்

1. கண் நிறைந்த காரிகை - கண் நிறைந்த அழகும்; காம்பு ஏர் தோள் - மூங்கில் போன்ற தோள்களும் உடைய; பேதைக்கு - தலைவிக்கு.
2. பெண் நிறைந்த நீர்மை பெரிது - பெண்மை நிறைந்த இயல்பு (நாணம்) மிகுதியாக உள்ளது.

தலைவன் கூற்று

திருக்குறள் 1273 **திருவள்ளுவர்**

திணை : நெய்தல்

கூற்று

நாணால் அவள் அது சொல்லாய வழி, அவன் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவி, தன் மனத்தில் ஒரு செய்தி கொண்டிருப்பதை அவளுடைய கண்களின் குறிப்பால் அறிந்த தலைவன், அதனைத் தோழியிடம் சொல்லியது.

மணியில் திகழ்தரு நூல்போல் மடந்தை
அணியில் திகழ்வ(து)ஒன்று உண்டு.

தெளிவுரை

கோக்கப்பட்டுள்ள பளிங்கு மாலையின் உள்ளே இருக்கும் நூல் வெளியில் தெரிவதுபோல, என் தலைவியின் அழகிய மேனியில் அவள் உள்ளத்தில் உள்ள ஒரு குறிப்புத் தோன்று கின்றது.

கருத்து

தலைவியின் உள்ளத்தே உள்ள ஒரு குறிப்பு வெளிப்படுகிறது.

விளக்கம்

நல்ல பளிங்கு மணியை நூலில் கோத்தால் அந்நூலின் தோற்றம் பளிங்கின் வெளியே தெரிவதுபோல, என் தலைவியின் உள்ளத்தே உள்ள குறிப்பு ஒன்று வெளிப்படத் தெரிகிறது.

குறிப்பு

தலைவியின், 'உள்ளக் கிடக்கை என்ன என்று அறிந்து சொல்' எனத் தோழியைத் தலைவன் கேட்கிறான் என்பது குறிப்பு.

சொற்பொருள்

1. மணியில் திகழ்தரும் நூல்போல் - கோக்கப்பட்டுள்ள பளிங்கு மணிமாலையின் உள்ளே இருக்கும் நூல் வெளியே தெரிவதுபோல; மடந்தை - என் தலைவி.
2. அணியில் திகழ்வது ஒன்று உண்டு - அழகிய மேனியில் அவள் உள்ளக்கிடக்கை ஒன்று வெளிப்படுகிறது.

தலைவன் கூற்று

திருக்குறள் 1274 **திருவள்ளுவர்**

திணை : நெய்தல்

கூற்று

நாணால் அவள் அது சொல்லாய வழி, அவன் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவி, தன் மனத்தில் ஒரு செய்தி கொண்டிருப்பதை அவளுடைய கண்களின் குறிப்பால் அறிந்த தலைவன், அதனைத் தோழியிடம் சொல்லியது.

முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல் பேதை
நகைமொக்குள் உள்ள(து)ஒன்று உண்டு.

தெளிவுரை

மலர் மொட்டில் மறைந்திருக்கும் மணம்போல, என் தலைவியின் முகத்தில் அரும்பும் புன்முறுவலிலும் குறிப்பு ஒன்று அடங்கியுள்ளது.

கருத்து

தலைவியின் புன்சிரிப்பில் ஏதோ ஒரு குறிப்பு அடங்கியுள்ளது.

விளக்கம்

மலர் மொட்டில் அடங்கியுள்ள மணம் வெளியில் வீசுவதில்லை. அதுபோல என் தலைவியின் புன்முறுவலுள் அடங்கியுள்ள எண்ணம் சொல்லால் வெளிப்படவில்லை. மொட்டினுள் மணம் பொதிந்திருப்பதைக் குறிப்பால் உணர்வது போலத் தலைவியின் புன்சிரிப்பில் உள்ள எண்ணமும் குறிப்பாய் உணரப்பட வேண்டும்.

குறிப்பு

'தோழியே! தலைவியின் எண்ணம் என்ன என்பது தெரியவில்லை. அவளிடம் பேசி நீதான் அதனை அறிந்து சொல்ல வேண்டும்' என்று, தலைவன் கூறுகிறான்.

சொற்பொருள்

1. முகை மொக்குள் - விரியவுள்ள மலர் மொட்டினுள்; உள்ளது நாற்றம்போல் - (மறைந்து) இருக்கும் மணம் போல; பேதை - என் தலைவி.
2. நகை மொக்குள் - புன்முறுவலுக்குள்ளே; உள்ளது ஒன்று உண்டு - உட்குறிப்பு ஒன்று அடங்கியுள்ளது.

தலைவன் கூற்று

திருக்குறள் 1275 **திருவள்ளுவர்**

திணை : நெய்தல்

கூற்று

நாணால் அவள் அது சொல்லாய வழி, அவன் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவி, தன் மனத்தில் ஒரு செய்தி கொண்டிருப்பதை அவளுடைய கண்களின் குறிப்பால் அறிந்த தலைவன், அதனைத் தோழியிடம் சொல்லியது.

செறிதொடி செய்(து)இறந்த கள்ளம் உறுதுயர்
தீர்க்கும் மருந்(து)ஒன்று உடைத்து.

தெளிவுரை

நெருங்கிய வளையலணிந்த என் தலைவி செய்து சென்ற குறிப்பு, என் துன்பத்தைத் தீர்க்கும் மருந்தாய் இருக்கிறது.

கருத்து

தலைவி என் நோய்க்கு மருந்துமாய் இருக்கிறாள்.

விளக்கம்

தலைவன் பிரிய இருப்பதை அறிந்தால் தலைவி உடன்படாது மறுப்பாள். அவள் வருத்தம் என்னைப் பெரிதும் துன்பத்திற் குள்ளாக்கும் என்று கருதியிருந்தான். அவள் குறிப்பால் தன் இசைவை வெளிப்படுத்திச் சென்றாள். 'இஃது என் துன்பத்தை

யெல்லாம் போக்குகிறது' என்று தலைவன் தோழியிடம் கூறினான்.

குறிப்பு

தலைவி தன் பிரிவுக்கு இசைந்துள்ளதைத் தலைவன் தோழிக்குக் குறிப்பாய் அறிவிக்கிறான்.

சொற்பொருள்

1. செறிதொடி - நெருங்கிய வளையலணிந்த தலைவி; செய்து இறந்த கள்ளம் - செய்து சென்ற குறிப்பு; உறுதுயர் - எனக்கு நேர்ந்த துயரத்தை.
2. தீர்க்கும் மருந்து ஒன்று - போக்கும் ஒரு மருந்தாய்; உண்டு - உள்ளது.

தலைவி கூற்று

திருக்குறள் 1276 **திருவள்ளுவர்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகன் குறிப்பு அறிந்த தலைமகள் அதனை அது தெளிவிக்கச் சென்ற தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்து செல்ல நினைப்பதை அவன் செய்த குறிப்புகளால் அறிந்த தலைவி, அதனைத் தோழிக்குக் கூறியது.

பெரி(து)ஆற்றிப் பெட்பக் கலத்தல் அரி(து)ஆற்றி
அன்பின்மை சூழ்வ(து) உடைத்து.

தெளிவுரை

பெரிதாய் அன்பு செய்து, புணரும் காலத்தே மேன்மேலும் விரும்புமாறு என்னைத் தலைவர் தழுவுகிறார். இச்செயல்கள் முன்பு பிரிந்து சென்று என்னைப் பெரிதும் துன்பத்துக்கு

ஆளாக்கிய தலைவர் மீண்டும் பிரிய இருக்கிறாரோ என்று என்னை நினைக்க வைக்கிறது.

கருத்து

தலைவன் அளவுக்கு மிஞ்சி அன்பு காட்டி நடந்து கொள்வது அவன் பிரிய இருப்பதற்கு அடையாளம் என்று தலைவி கருதுகிறாள்.

விளக்கம்

"தலைவன் வழக்கத்தினும் மேம்பட்டுத் தலைவியிடம் அன்பு காட்டிச் செயல்களைச் செய்தால், அவை அவன் பிரிதற்கான குறிப்புகளாம். முன்பு இவ்வாறு பிரிந்து பிரிவுத் துன்பத்தைத் தந்துள்ளார். இப்போது செய்யும் இன்பம் பிரிதல் குறிப்போடு இருத்தலால், இச்செய்கை மீண்டும் அத்துன்பத்தை நினைக்கும் தன்மையுடையதாய் இருக்கிறது" எனத் தலைவி தோழியிடம் கூறினாள்.

குறிப்பு

தலைவன் அளவுக்கு மிஞ்சிய அன்பு காட்டிச் செயல்களைச் செய்வது, அவன் பிரிய இருப்பதைக் குறிப்பாற் புலப்படுத்துவதாம்.

சொற்பொருள்

1. பெரிது ஆற்றி - பெரிதாக அன்பு செய்து; பெட்பக் கலத்தல் - மிகுந்த விருப்பமுடன் கூடும் அவர் செய்கை; அரிது ஆற்றி - அரிதாகிய (பிரிவுத் துன்பத்தினைச்) செய்த.
2. அன்பின்மை - (அவரது) அன்பின்மையை; சூழ்வது உடைத்து - நினைவுறுத்தும் தன்மை உடையதாகும்.

தலைவி கூற்று

திருக்குறள் 1277 **திருவள்ளுவர்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகன் குறிப்பு அறிந்த தலைமகள், அதனை அது தெளிவிக்கச் சென்ற தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்து செல்ல நினைப்பதை அவன் செய்த குறிப்புகளால் அறிந்த தலைவி, அதனைத் தோழிக்குக் கூறியது.

தண்அம் துறைவன் தணந்தமை நம்மினும்
முன்னம் உணர்ந்த வளை.

தெளிவுரை

"குளிர்ந்த துறையையுடைய நெய்தல் நிலத் தலைவன் என்னை விரைவில் பிரிய இருக்கிறான் என்பதை நான் குறிப்பால் அறிவதற்கு முன்பே, நான் அணிந்திருக்கும் வளையல்கள் அறிந்து கொண்டன போலும். (அதனால்தான் கழன்று விழுந்துவிட்டன)" என்று, தலைவி தோழிக்குக் கூறுகிறாள்.

கருத்து

தலைவன் பிரியப் போகின்றான் என்பதை, நம்மைவிட நம் வளையல்கள் முன்பே அறிந்து கொண்டன.

விளக்கம்

தலைவன் பிரிய இருக்கிறான் என்பதை அறிந்த அளவிலேயே தலைவியின் உடல் இளைத்துக் கைகள் சுருங்கி, வளையல்கள் கழன்று விழுந்துவிட்டன.

குறிப்பு

தலைவன் உடலால் கூடியிருந்து மனத்தால் பிரிந்தமையைக் குறிப்பால் அறியும்போதே தலைவியின் உடல் இளைத்து விடுகிறது என்பது குறிப்பு.

சொற்பொருள்

1. தண்அம் துறைவன் - குளிர்ந்த அழகிய துறையையுடைய நெய்தல் நிலத் தலைவன்; தணந்தமை - பிரிய இருக்கிறான் என்பதை; நம்மினும் - நம்மைக் காட்டிலும்.
2. முன்னம் - முன்னமே; உணர்ந்த வளை - வளையல்கள் உணர்ந்து (கழன்று விட்டன).

தலைவி கூற்று

திருக்குறள் 1278 **திருவள்ளுவர்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகன் குறிப்பு அறிந்த தலைமகள் அதனை அது தெளிவிக்கச் சென்ற தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்து செல்ல நினைப்பதை அவன் செய்த குறிப்புகளால் அறிந்த தலைவி, அதனைத் தோழிக்குக் கூறியது.

நெருநற்றுச் சென்றார்எம் காதலர்; யாமும்
எழுநாளேம் மேனி பசந்து.

தெளிவுரை

என் காதலர் நேற்றுத்தான் பிரிந்து சென்றார். என் மேனி பசந்து, ஏழு நாள்கள் ஆயின.

கருத்து

நேற்றுத்தான் காதலர் பிரிந்தார்; மேனி பசலையுற்று ஏழு நாள்கள் ஆயின.

விளக்கம்

'ஒருநாள் பிரிவு ஏழுநாள் பிரிவுபோல என்னை வாட்டுகிறது' என்றாள் தலைவி.

குறிப்பு

'தலைவன் பிரிய இருக்கிறான்' என்பதைத் தலைவன் குறிப்புகளால் தலைவி முன்னரேயே உணர்ந்து தோழியிடம் கூறியது, இப்போது உண்மையாயிற்று.

சொற்பொருள்

1. எம் காதலர் - என் காதலர்; நெருநற்று - நேற்றுத்தான்; சென்றார் - பிரிந்து சென்றார்; யாமும் - எனக்கு.
2. மேனி பசந்து - மேனி பசலையுற்று; எழுநாளேம் - ஏழுநாள்கள் ஆயின.

தலைவி கூற்று

திருக்குறள் 1257 **திருவள்ளுவர்**

திணை : நெய்தல்

கூற்று

பிரிந்து வந்த தலைமகனோடு நிறையழிவாற் கூடிய தலைமகள், நீ புலவாமைக்குக் காரணம் யாதென்ற தோழிக்குத் தலைவி சொல்லியது.

கூற்று விளக்கம்

பிரிந்து சென்று திரும்பிய தலைவனிடம் ஊடல் கொள்ளாது நாணமின்றிக் கூடியது ஏன் என்று கேட்ட தோழிக்குத் தலைவி சொல்லியது.

நாண்என ஒன்றோ அறியலம் காமத்தால்
பேணியார் பெட்ப செயின்.

தெளிவுரை

நான் விரும்பிய தலைவன், (பிரிந்து சென்று திரும்பியதும்) காமத்தால் தான் விரும்பியவற்றைச் செய்யும்போது, நாணம் என்னும் ஒன்று மறந்து போய்விடுகிறது. (அதனால் அவன் செயலைத் தடுக்க முடிவதில்லை.)

கருத்து

காதலர் வந்து, விரும்பியவற்றைச் செய்யும்போது நாணத்தைத் துறந்து விடுகிறேன். (அதனால் ஊடல் கொள்வதில்லை.)

விளக்கம்

பிரிந்த தலைவன் வந்து கூடியிருக்கும்போது நாணத்தை இழந்து விடுவதால், ஊடுதலை விடுத்துக் கூடுதலை மேற்கொண்டு விடுகிறேன்.

குறிப்பு

'ஆசை வெட்கம் அறியாது' என்பது பழமொழி.

சொற்பொருள்

2. பேணியார் - (நாம்) விரும்பிய காதலர்.
1. காமத்தால் - காமத்தால்.
2. பெட்ப செயின் - (தான்) விரும்பியவற்றைச் செய்யும்போது.
1. நாண் என ஒன்றோ - நாணம் என்ற ஒன்றை; அறியலம் - அறிய முடிவதில்லை. (மறந்து விடுகிறோம்).

தலைவி கூற்று

திருக்குறள் 1258 **திருவள்ளுவர்**

திணை : நெய்தல்

கூற்று

பிரிந்து வந்த தலைமகனோடு நிறையழிவாற் கூடிய தலைமகள், நீ புலவாமைக்குக் காரணம் யாதென்ற தோழிக்குத் தலைவி சொல்லியது.

கூற்று விளக்கம்

பிரிந்து சென்று திரும்பிய தலைவனிடம் ஊடல் கொள்ளாது நாணமின்றிக் கூடியது ஏன் என்று கேட்ட தோழிக்குத் தலைவி சொல்லியது.

பன்மாயக் கள்வன் பணிமொழி அன்றோநம்
பெண்மை உடைக்கும் படை.

தெளிவுரை

பொய்மொழிகள் பல பேசவல்ல கள்வனைப் போலும் தலைவனின் இனிய மொழி, உறுதிமிக்க என் பெண்மையை உடைக்கும் படையாய் இருக்கிறது.

கருத்து

தலைவனின் இனிய மொழி, என்னைப் பணிய வைத்துவிட்டது.

விளக்கம்

"தலைவன் வரும்வரை அவனிடம் ஊடல் கொள்ளவேண்டு மென்றுதான் எண்ணியிருந்தேன். அவன் வந்தான்; இனிய மொழி பேசினான். அவ்வளவுதான், அப்பேச்சில் மயங்கிப் பணிந்தேன்" என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

குறிப்பு

அவன் சொற்கள்முன் அவள் மனஉறுதி அழிந்தது.

சொற்பொருள்

1-2. நம் பெண்மை உடைக்கும் படை - நம் (என்) பெண்மையை உடைக்கும் படைக்கலம்.

1. பன்மாயக் கள்வன் - மாயங்கள் பல செய்யவல்ல தலைவன்; பணிமொழி அன்றோ - பணிவுமிக்க சொல்லன்றோ (சொல்லே).

தலைவி கூற்று

திருக்குறள் 1259 **திருவள்ளுவர்**

திணை : நெய்தல்

கூற்று

பிரிந்து வந்த தலைமகனோடு நிறையழிவாற் கூடிய தலைமகள், நீ புலவாமைக்குக் காரணம் யாதென்ற தோழிக்குத் தலைவி சொல்லியது.

கூற்று விளக்கம்

பிரிந்து சென்று திரும்பிய தலைவனிடம் ஊடல் கொள்ளாது நாணமின்றிக் கூடியது ஏன் என்று கேட்ட தோழிக்குத் தலைவி சொல்லியது.

புலப்பல் எனச்சென்றேன் புல்லினேன் நெஞ்சம்
கலத்தல் உறுவது கண்டு.

தெளிவுரை

பிரிந்து வந்த தலைவனோடு ஊடல் கொள்வோம் என்றுதான் சென்றேன். ஆனால் என் நெஞ்சம் விரைந்து சென்று அவனோடு கலந்துறவாடுவது கண்டு, அவனைத் தழுவி நின்றேன்.

கருத்து

ஊடல் கொள்ளத்தான் சென்றேன்; ஆனால் நெஞ்சு உறவாடுவது கண்டு, நானும் தழுவிக் கொண்டேன்.

விளக்கம்

“நெடுங்காலம் பிரிந்து என்னைத் துன்பப்படுத்திய தலைவன் திரும்ப வந்தபோது, அவனோடு பிணங்குவோம் என்றுதான் சென்றேன். அவனைக் கண்டதும் என் நெஞ்சு அவன் நெஞ்சோடு கலந்துறவாடியது கண்டு, நானும் அவனைத் தழுவிக் கொண்டேன்” என்று, தலைவி தோழியிடம் கூறினாள்.

குறிப்பு

நெஞ்சு முடிவெடுத்ததும் அதற்குக் கட்டுப்படுவதுதான் நடப்பு என்பது குறிப்பு.

சொற்பொருள்

1. புலப்பல் எனச் சென்றேன் - ஊடுவேன் என்றுதான் எண்ணிச் சென்றேன்; நெஞ்சம் - (ஆனால்) என் நெஞ்சம்.
2. கலத்தல் உறுவது கண்டு - அவரோடு கலப்பதைக் கண்டு; புல்லினேன் - (நானும்) தழுவினேன்.

தலைவி கூற்று

திருக்குறள் 1260 **திருவள்ளுவர்**

திணை : நெய்தல்

கூற்று

பிரிந்து வந்த தலைமகனோடு நிறையழிவாற் கூடிய தலைமகள், நீ புலவாமைக்குக் காரணம் யாதென்ற தோழிக்குத் தலைவி சொல்லியது.

கூற்று விளக்கம்

பிரிந்து சென்று திரும்பிய தலைவனிடம் ஊடல் கொள்ளாது நாண மின்றிக் கூடியது ஏன் என்று கேட்ட தோழிக்குத் தலைவி சொல்லியது.

நிணம்தீயில் இட்டன்ன நெஞ்சினார்க்(கு) உண்டோ
புணர்ந்(து)ஊடி நிற்பேம் எனல்.

தெளிவுரை

நெருப்பிலிட்ட நிணத்தைப்போல் உருகிடும் இளகிய நெஞ்சம் உடையவர்களுக்குத் தலைவன் வந்து கூடியபோது, ஊடல் கொண்டு, அதில் உறுதியாக நிற்க முடியுமா?

கருத்து

இளகும் உள்ளம் படைத்த மகளிர்க்கு, ஊடிய பின் கூடுவோம் என்று உறுதியாக நிற்கும் நிலை உண்டாவதில்லை.

விளக்கம்

"*நிணத்தைத் தீயில் இட்டால் அஃது உருகுவதுபோலத் தம் தலைவரைக் கண்டால் நிறையழிந்து உருகுகின்ற நெஞ்சினை யுடைய மகளிர்க்குப் பிணங்கிப் பின் புணர்ந்திருப்போம் என்ற*

உறுதியான மனம் இருக்காது" எனத் தலைவி தோழிக்குக் கூறுகிறாள்.

குறிப்பு

இளகிய நெஞ்சம் ஊடல் கொள்வதில் உறுதி கொண்டு நிற்காது.

சொற்பொருள்

1. நிணம் தீயில் இட்டு அன்ன நெஞ்சினார்க்கு - கொழுப்பினைத் தீயில் இட்டாற்போல உருகும் நெஞ்சினையுடைய மகளிர்க்கு.
2. ஊடி - பிணங்கிப் பின்பு; புணர்ந்து நிற்பேம் - புணர்ந்திருப்போம்; எனல் - என்று கருதும் (உறுதியான மனம்); உண்டோ - உண்டா (இல்லை).

போர்வயிற்பிரிவு

அரசன் பிற நாடுகளின்மீது படையெடுத்துப் போர்க் களம் செல்லும்போது, அவன் படையில் ஒருவனாய்த் தலைவன் தலைவியைப் பிரிந்து செல்லுதல் போர்வயிற் பிரிவு எனப்படும்.

தோழி கூற்று

அகநானூறு 215 **இறங்குகுடிக் குன்ற நாடன்**

திணை : பாலை

கூற்று

செலவு உணர்த்திய தோழி, தலைமகள் குறிப்பறிந்து, தலைமகனைச் செலவு அழுங்குவித்தது.

கூற்று விளக்கம்

அரசன் வினை காரணமாய்த் தலைவன், தலைவியைவிட்டுப் பிரியக் கருதினான். அதனைக் குறிப்பால் உணர்ந்த தோழி அதனைத் தலைவியிடம் தெரிவித்தாள். அதனால் தலைவி மிகவும் வருந்தித் தான் ஆற்றியிருக்க இயலாதிருப்பதைத் தோழியிடம் உணர்த்தினாள். தோழி தலைவனிடம் சென்று, 'நீ இப்போது பிரிந்தால் அவள் இறந்துவிடக்கூடும்' எனக் குறிப்பால் உணர்த்தி அவனைப் பிரியாதவாறு செய்தது.

விலங்குஇருஞ் சிமையக் குன்றத்து உம்பர்,
வேறுபல் மொழிய தேஎம் முன்னி,
வினைநசைஇப் பரிக்கும் உரன்மிகு நெஞ்சமொடு
புனைமாண் எஃகம் வலவயின் ஏந்தி,
செலல்மாண்பு உற்ற நும்வயின் வல்லே,
வலன்ஆக என்றலும் நன்றுமன் தில்ல—
கடுத்தது பிழைக்குவது ஆயின், தொடுத்த
கைவிரல் கவ்வும் கல்லாக் காட்சி,
கொடுமரம் பிடித்த கோடா வன்கண்
வடிநவில் அம்பின் ஏவல் ஆடவர்,
ஆள்அழித்து உயர்த்த அஞ்சுவரு பதுக்கை,
கூர்நுதிச் செவ்வாய் எருவைச் சேவல்
படுபிணப் பைந்தலை தொடுவன குழீஇ,
மல்லல் மொசிவிரல் ஒற்றி, மணிகொண்டு,
வல்வாய்ப் பேடைக்குச் சொரியும் ஆங்கண்,
கழிந்தோர்க்கு இரங்கும் நெஞ்சமொடு
ஒழிந்துஇவண் உறைதல் ஆற்று வோர்க்கே.

தெளிவுரை

"தலைவனே! நீ செல்லவிருக்கும் வழியில், வழிப்பறி கொள்ளையராகிய மறவர் திரிவர். அவர், தம் கையில் வில்லையும், அம்பையும் கொண்டிருப்பர். வைத்த குறி தப்பினால் தம் கைவிரலை வாயில் வைத்துக் கடித்துக்கொள்வர்; அவர் கல்லாதவர்; அஞ்சாமை கொண்டவர்; வில்லை ஏந்திய மாறாக் கொடுமையர்; வடித்தமைத்த கூர்மையான அம்பினையும், அம்பு விடுதலில் வன்மையும் கொண்டோர். அவர் வழிச்செல்வாரைக் கொன்றதனால் உயிர் பிரிந்த பிணங்களின்மீது அச்சம் தோன்றுமாறு கற்களைக் குவிப்பர். அக்குவியலின்மீது கூர்மையான முனையைக் கொண்ட சிவந்த வாயைக் கொண்ட ஆண் பருந்துகள் அமர்ந்து பிணங்களின் பசிய தலையைத் தோண்டி எடுக்கும்; வலிமையான தம் நெருங்கிய கால் விரல்களால் கண்களைத் தோண்டிச் சென்று கூட்டில் வாழும் தம் பேடைகளுக்கு ஊட்டும். தம்மைப் பிரிந்து அவ்வழியாய்ச் சென்றவர்களுக்காக இரங்கும் நெஞ்சத்தோடு, இங்கே பொறுமையாய்த் தங்கி வாழும் வல்லமை கொண்டவர் வேண்டுமானால், 'வினைமேற்சென்று வெற்றி பெறுக' என்று கூறி வாழ்த்தலாம்.

"செல்லும் வழியில், குறுக்கே உள்ள பெரிய உச்சியைக் கொண்ட மலைக்கு அப்பால் உள்ள வேற்று மொழி பேசும் நாட்டைக் கைப்பற்ற எண்ணித் துணிந்த நெஞ்சுடன் செல்கிறாய். தொழிற்சிறப்பமைந்த வேலினை வலக்கையில் ஏந்தி, மாட்சிமையுடன் செல்கின்ற உன்னை, 'விரைந்து வெற்றி பெறுக' என்று வாழ்த்தி விடை கொடுப்பதும் நன்றே. ஆனால், எங்களால் அப்படிச் செய்ய இயலவில்லையே!" என்று தோழி தலைவனிடம் கூறினாள்.

கருத்து

அரசனுக்காகப் போர்க்களம் செல்லும் உன்னை வாழ்த்தி அனுப்பலாம்; என்றாலும், எங்களால் இயலவில்லையே! என் செய்வோம்?

விளக்கம்

'தலைவனே! அரிய வழியில் பிரிந்து சென்றவர்க்காக இரங்கும் நெஞ்சத்தோடு பிரிவைப் பொறுத்துத் தங்கியிருக்க

வல்லவர் இருந்தால், அவரால், மலைகளுக்கு அப்பால் வேற்று மொழி பேசுபவர் நாட்டைக் கைப்பற்றப் போர்த்தொழிலை விரும்பிச் செல்பவரைப் பார்த்து, 'வெற்றி பெற்று வருக' என்று வாழ்த்த இயலும். அவ்வாறு பிரிந்துறைய இயலாதவர்களாய் யாம் உள்ளோம். என் செய்வோம்?' என்று தோழி, தலைவனிடம் கூறி, அவன் பிரிவைத் தடுத்தாள்.

சொற்பொருள்

1. விலங்கு - குறுக்கிடும்; இரும் - பெரிய; சிமையம் - உச்சி; உம்பர் - அப்பால்.
2. பல் மொழிய - பல மொழிகள் வழங்கும்; தேஎம் - தேசம்; முன்னி - நினைத்து.
3. வினை - போர்ச்செயல்; நசைஇ - விரும்பி; பரிக்கும் - செல்லும்; உரன் - வலிமை.
4. புனைமாண் - தொழிற்சிறப்பமைந்த; எஃகம் - வேல்; வலவயின் - வலப் பக்கத்தே (வலக்கையில்).
5. செலல் மாண்பு உற்ற - செல்லுகின்ற மாட்சிமை பொருந்திய; நும்வயின் - உன்னிடம்; வல்லே - விரைந்து.
6. வலன் ஆக - வெற்றி பெறுக; நன்று - நன்றேயாம்.
7. கடுத்தது - எண்ணியது (குறித்த இலக்கு); பிழைக்குவது ஆயின் - தப்பினால், தவறினால்; தொடுத்த - அம்பைத் தொடுத்த.
8. கவ்வும் - வாயால் கௌவிக் கடித்துக்கொள்வர்; கல்லாக் காட்சி - கல்லாத அறிவு.
9. கொடுமரம் - வளைந்த வில்; கோடா - மாறாத; வன்கண் - கொடுமை.
10. வடிநவில் - வடித்து அமைத்த; ஏவல் ஆடவர் - அம்பைச் செலுத்தும் மறவர்.
11. ஆள்அழித்து - வழிச்செல்வாரைக் கொன்று; உயர்த்த - (அவர்கள்மீது இட்டு) உயர்த்திய; பதுக்கை - கற்குவியல்.
12. கூர்நுதி - கூர்மையான முனை; செவ்வாய் - சிவந்த வாய்; எருவை - பருந்து; சேவல் - ஆண்.
13. பைந்தலை - பசுந்தலை; குழீஇ - கூடி.
14. மல்லல் - வலிய; மொசிவிரல் - நெருங்கிய கால் விரல்.
15. வல்வாய் - வலிய வாய்; பேடை - பெண்பருந்து; ஆங்கண் - அவ்வழியே.
16. கழிந்தோர்க்கு - பிரிந்து சென்றோர்க்கு.
17. ஒழிந்து இவண் - (அவர் தம்மைப்) பிரிந்து இங்கே தங்குதல்.

தோழி கூற்று

கலித்தொகை 17 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

பகைவர் திறைதந்த நாடுகாத்தற்குப் பிரிகின்றமையுணர்ந்து, தலைமகள் வேறுபட்டமை கண்டு, தோழி அவனை எதிர்ப்பட்டு, அவளது ஆற்றாமையும் இளமையதருமையும் கூறிச் செலவழுங்குவித்தமை தலைமகட்குக் கூறியது.

கூற்று விளக்கம்

பகைவரை வென்று கப்பம் பெற்ற அரசன் தான் வென்ற நாட்டைக் காப்பாற்ற வீரர்களை அனுப்பினான். தலைவன் வேந்தன்பொருட்டுப் பிரிய விருப்பதை உணர்ந்த தலைவி வருத்தமுற்று அழகு கெட்டாள். அதனைக் கண்ட தோழி, தலைவனை எதிர்ப்பட்டு, தலைவியது ஆற்றாமையையும், அவளது இளமைக்காலத்து அருமையையும் எடுத்துக் கூறி, அவன் பிரிவைத் தடுத்ததைத் தோழி, தலைவியிடம் கூறியது.

தரவு

படைபண்ணிப் புனையவும், பாமாண்ட பயில்அணைப்
புடைபெயர்ந்து ஒடுங்கவும், புறஞ்சேர உயிர்ப்பவும்
உடையதை எவன்கொல்?என்று ஊறுஅளந்து அவர்வயின்
நடைசெல்லாய் நனிஏங்கி நடுங்கல்காண் – நறுநுதால்.

தாழிசை

தொல்எழில் தொலைபுஇவள் துயர்உழப்பத் துறந்துநீ
வல்வினை வயக்குதல் வலித்திமன், வலிப்புஅளவை
நீள்கதிர் அவிர்மதி நிறைவுபோல் நிலையாது
நாளினும் நெகிழ்புஒடும் நலன்உடன் நிலையுமோ?

ஆற்றல்நோய் அட,இவள் அணிவாட, அகன்றுநீ
தோற்றம்சால், தொகுபொருள் முயறிமன், முயல்வுஅளவை
நாற்றம்சால் நளிபொய்கை அடைமுதிர் முகையிற்குக்
கூற்றுஊழ்போல் குறைபடூஉம் வாழ்நாளும் நிலையுமோ?

வகைஎழில் வனப்புஎஞ்ச, வரைபோக வலித்துநீ
பகையறு பயவினை முயறிமன், முயல்வுஅளவைத்

தகைவண்டு புதிதுண்ணத் தாதுஅவிழ் தண்போதின்
முகைவாய்த்த தடம்போலும் இளமையும் நிலையுமோ?

எனவாங்கு

சுரிதகம்

பொருந்தியான் தான்வேட்ட பொருள்வயின் நினைந்தசொல்,
திருந்திய யாக்கையுள் மருத்துவன் ஊட்டிய
மருந்துபோல், மருந்தாகி மனன்உவப்பப்
பெரும்பெயர் மீளி பெயர்ந்தனன் செலவே.

தெளிவுரை

தலைவன் பிரிவானோ என்று அஞ்சியுள்ள தலைவியிடம், "தலைவி! தலைவன் படைக்கலங்களைப் புதியனவாய் வடித்து அவற்றை அணிந்து சரிபார்த்தல், சிறந்த இன்பம் நுகரும் மலர்ப் படுக்கையில் ஒருபுறமாய் ஒதுங்கிப் படுத்து உறங்குதல், முதுகுப் புறமாய் நீ அணையும்போது அவன் பெருமூச்சு விடுதல் ஆகிய இவற்றையெல்லாம் கவனித்து, 'அவன் மனத்தில் என்ன எண்ணி யிருக்கிறானோ?', 'வாழ்க்கையில் என்ன இடையூறு நேருமோ' என்றெல்லாம் எண்ணித் தலைவனிடம் இயல்பாய் நடந்துகொள் வதில் தவறாதே! எதையும் எண்ணி ஏங்கி நடுங்காதே!" எனத் தோழி கூறினாள்.

"நறிய நுதலைக் கொண்டவளே! நான் சொல்வதைக் கேள்! உன் துயரத்தைக் கண்டு நான் தலைவனிடம் சென்று, 'தலைவியின் பண்டைய அழகு குன்றி வருந்தும்படி நீ பிரிந்து சென்று வலிய செயல் ஒன்றைச் செய்யத் துணிந்துள்ளாய். நீ திரும்பி வரும்வரை இவளது இளமை நலம், நிறைநிலவு நாளுக்கு நாள் நிலைகெட்டு அழிவதுபோல அழிவதன்றி நிலைத்திருக்கு மென்றா கருதுகின்றாய்?

"ஆற்ற இயலாத காமநோய் இவளை வருத்துவதால் அழகு முழுதும் வாடியிருக்கிறது. நீ அதனைப் பொருட்படுத்தாது இவளை விட்டுப் பிரிந்து சென்று மிக வல்லாண்மையான செயல்களைச் செய்து பொருள் ஈட்ட முயல்கிறாய். அப்படி முயன்று திரும்பி வரும்வரை, பொய்கையில் இலைகளுக்கு மேலே தோன்றிய பூ மொட்டு, சிறிது நேரமே அப்படியிருந்து,

அதற்கு எமனாய் அதன் மலர்ச்சியே அமைந்து அஃது அழிவது போல, இவ்வளவு காலந்தான் வாழ்நாள் என விதிக்கப்பட்ட காலம் நிலைத்திருக்கும் என்றா கருதுகின்றாய்?"

"இவளது அழகு குறையும்படியாகப் பிரிந்து, நீ மலைகளின் வழியாகச் சென்று, பகையரசன் பகை மாறும்பொருட்டுத் தந்த நாட்டைக் காத்தற்கான பணியை மேற்கொண்டிருக்கிறாய். அப்பணியை முடித்து நீ திரும்பி வரும்வரை இவள் நிலை என்ன ஆகும்? வண்டுகள் தேன் உண்ணுமாறு பூக்கள் மலர்ந்து விளங்கும் செடிகளில் புதுப்புது மொட்டுகள் அரும்புவதற்குக் காரணமாய் உள்ள பொய்கை நீர் நாளுக்கு நாள் குறைவது போல் இவளது இளமை நீங்குமே அன்றி நிலைத்திருக்கும் என்றா கருதுகின்றாய்?

"இவ்வாறு பொருத்தமாய் நான் அவனது பொருளார்வத்தினால் விளையும் கேடுகளை நினைந்து கூறிய சொற்கள், நல்ல உடம்பில் மருத்துவர் கொடுத்த மருந்து உடனே வேலை செய்வதுபோல் பயன் தந்தது. தலைவன் மனம் உவந்து பிரிவை நீக்கினான்" என்று தோழி தலைவியிடம் சொல்லி அவள் கவலையைப் போக்கினாள்.

கருத்து

தலைவ! நீ பிரிந்தால் தலைவியின் உடல் மெலிந்து உயிர் நீங்கும்.

விளக்கம்

அரசனுக்குத் துணையாகப் படையில் செல்லக் கருதியிருந்த தலைவனிடம் தோழி, "நீ பிரிந்தால் நிறைநிலவு குறைந்து குறைந்து, முடிவில் ஒரு நாள் இல்லாதது ஆகும். அதுபோலத் தலைவியின் உடல் நாள்தோறும் வருத்தத்தால் மெலிந்து உயிர் பிரியும்.

"குளத்தில் இலைகளிடையே மலரும் தாமரைமொட்டுச் சூரிய வெப்பத்தால் அழகிழந்து அழியும். அதுபோல் தலைவியும் உன் பிரிவென்னும் வேதனை வெப்பத்தால் தாக்குண்டு அழிவினை எய்துவாள்.

மலர்கள் நிறைந்த பொய்கையில், தண்ணீர் நாளுக்கு நாள் குறைவதுபோல் இவளது இளமையும் கழிந்து கொண்டிருக்கும்"

எனத் தோழி சொல்லித் தலைவன் பிரிந்து செல்லவிருப்பதைத் தவிர்க்கும்படி செய்தாள்.

சொற்பொருள்

1. படை - படைக்கருவி; பாமாண்ட - பல்வகைச் சிறப்பினைக் கொண்ட; அணை - படுக்கை.
2. புடை - ஒருபுறமாய்; புறஞ்சேர - முதுகை அணைக்க; உயிர்ப்ப - பெருமூச்சு விட.
3. ஊறு - இடையூறு.
4. நடைசெல்லாய் - இயல்பாய் நடப்பதிலிருந்து மாறாதே; நனி - மிகவும்.
5. தொல்எழில் - பண்டைய அழகு; தொலைபு - அழிய, நீங்க; உழப்ப - வருந்த.
6. வல்வினை - வலிமையான செயல்; வயக்குதல் - (அரசன் வென்ற நாட்டை) நன்றாய் இருக்கும்படி பாதுகாத்தல்; வலித்தி - துணிந்தாய்.
7. மதி நிறைவு - முழு மதி; நிறைவுபோல் - முழுதாய் இருப்பதுபோல.
8. நெகிழ்பு - குறைந்து; நிலையுமோ? - நிலைத்து இருக்குமோ?
9. ஆற்றல் நோய் - ஆற்ற இயலாத நோய்; அட - வருத்த; அணி - அழகு.
10. முயறி - முயற்சி செய்கிறாய்; முயல்வு அளவு - முயன்று தேடி முடிக்கும் வரை.
11. நளி - பெருமை; அடைமுதிர் - இலையை விட்டு நீங்கி முதிர்ந்த; முகை - மொட்டு.
12. கூற்று ஊழ் - கூற்றமாகிய அலர்ச்சி.
13. வகை எழில் - ஒப்பனை செய்யப்பட்ட அழகு; வரை - மலை.
14. பயவினை - பயன்தரு தொழில்; முயறி - முயல்கின்றாய்.
15. தகை - அழகு; தாது - மகரந்தத்தூள்; போது - மலர்.
16. முகை - மலர் மொட்டு; தடம் - குளம் (குளத்து நீர்).
18. வேட்ட - விரும்பிய.
19. யாக்கை - உடல்; ஊட்டிய - செலுத்திய.
20. மனன் உவப்ப - மனம் மகிழ.
21. மீளி - பாலைநிலத் தலைவன்; பெயர்ந்தனன் - தவிர்த்தனன்; செலவு - பயணம்.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 429 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

குறிப்பினால் பிரிவுணர்ந்து வேறுபட்ட தலைமகள் உடம்படுவாளாக, வேந்தற்குற்றுழிப் பிரியும் தலைமகன் சொல்லியது.

கூற்று விளக்கம்

அரச கடமையை மேற்கொண்டு தலைவன் பிரியவிருக்கிறான் என்பதைக் குறிப்பால் உணர்ந்தாள், தலைவி. தலைவன் பிரியவிருப்பதை அறிந்து அவள் வருந்தினாள். அவள் உடம்படும் வகையில் அவளிடம் தலைவன் கூறியது.

பல்இருங் கூந்தல் பசப்பு நீவிடின்
செல்வேம் தில்ல யாமே, செற்றார்
வெல்கொடி அரணம் முருக்கிய
கல்லா யானை வேந்துபகை வெலற்கே.

தெளிவுரை

"*அடர்ந்த கருங்கூந்தலைக் கொண்டவளே! நீ உன் மேனி நிறம் மாற்றம் கொண்டு பசப்படையாவண்ணம் ஆற்றியிருப்பாயாயின், பகைவருடைய வெற்றிக்கொடிகள் விளங்கும் கோட்டைகளை அழித்தனவும், இயல்பிலேயே போர்க்குணம் கொண்டனவுமான யானைகளை உடைய நம் வேந்தனோடு கொண்டுள்ள பகையை வெல்லுவதற்கு நானும் செல்வேன்.*"

கருத்து

பகையழிக்கும் படையை நடத்திச் செல்ல நீ உடம்படின் நானும் செல்வேன்.

சொற்பொருள்

1. பல் இருங்கூந்தல் - அடர்ந்த கரிய கூந்தல்; பசப்பு - என் பிரிவை நினைப்பதால் உன் உடம்பில் ஏற்படும் பசலையை.
2. செல்வேம் - செல்வேன்; செற்றார் - பகைவர்.
3. அரணம் - கோட்டை; முருக்கிய - அழித்த.

4. கல்லாயானை - போர்ப்பயிற்சியன்றி வேறொரு பயிற்சி பெறாத யானை; வேந்து - (நம்) அரசன்; பகை - பகை அரசன்; வெலற்கே - வெல்லுதற்கு.

தலைவன் கூற்று

நற்றிணை 341 **மதுரை மருதனிளநாகனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

வினைவயிற்பிரிந்து ஆற்றானாகிய தலைமகன் சொல்லியது.

கூற்று விளக்கம்

அரசனது பணியை மேற்கொண்டு போர்முனைக்குச் சென்றிருந்த தலைவன், தலைவியைப் பிரிந்து ஆற்றானாய்த் தனக்குள் வருந்திக் கூறியது.

வங்க வரிப்பறைச் சிறுபாடு முனையின்
செம்பொறி அரக்கின் வட்டுநா வடிக்கும்
விளையாடு இன்நகை அழுங்கா, பால்மடுத்து,
அலையா, உலவை ஓச்சிச்சில கிளையாக்
குன்றக் குறவனொடு குறுநொடி பயிற்றும்
துணைநன்கு உடையள், மடந்தை; யாமே
வெம்பகை அருமுனைத் தண்பெயல் பொழிந்தென,
நீர்இரங்கு அரைநாள் மயங்கி, கூதிரொடு
வேறுபுல வாடை அலைப்பத்
துணைஇலேம், தமியேம், பாசறை யேமே.

தெளிவுரை

“குன்றக்குறவனாகிய என் மகன் வெள்ளியால் செய்யப்பெற்ற வரிகளைக் கொண்ட பறையினை முழக்கிச் சிறிது நேரம் விளையாடுவான். அவ்விளையாட்டில் வெறுப்படைந்தால், சிவந்த புள்ளிகளைக் கொண்ட அரக்கினால் இயற்றப்பட்ட வட்டுப் போன்றுள்ள ஈரத் துணியால் வேறு விளையாட்டில் முனைந்திருக்கும்போதே பாலையும் பருகுவான். பிறகு, அங்குமிங்கும் உலாவியபடியே கையில் ஒரு சிறு குச்சியை எடுத்துக்கொண்டு

பிறரை அச்சுறுத்தியும், இடையிடையே சில சில சொற்களைப் பேசியும் விளையாடிக் கொண்டிருப்பான். என் மனைவி அவனது அன்பைப் பெற்று மகிழ்ந்திருப்பாள். ஆனால் நானோ, பகைவர் நாட்டுப் போர்முனையில் இருக்கிறேன்; இங்கே குளிர்ச்சி பொருந்திய மழை பெய்து மழைநீர் ஓடியபடியே இருக்கிறது; நடுயாமப்போதில், குளிரோடு வாடைக்காற்றும் வீசித் துன்புறுத்துகிறது; துணையில்லாது தனியனாய்ப் பாசறையில் வருந்தியிருக்கிறேன்" என்று தலைவன் தனக்குள் கூறிக் கொள்கிறான்.

கருத்து

ஓடி விளையாடும் மகனோடு என் மனைவி மகிழ்ந்திருப்பாள். ஆனால் நானோ, குளிரோடு வாடைக்காற்றும் வீச, துணையாருமின்றித் தனியனாய்ப் பாசறையில் இருக்கிறேன்.

சொற்பொருள்

1. வங்கம் - வெள்ளி; வரிப்பறை - வரிகளைக் கொண்ட பறை; சிறுபாடு - சிறிதளவு; முனையின் - வெறுப்படைந்தால்.
2. செம்பொறி - சிவந்த புள்ளி; வட்டுநா - வட்டுப் போன்றுள்ள நாக்கு.
3. விளையாடு இன்நகை - விளையாட்டிலே பெறுகின்ற இனிய மகிழ்ச்சி; அழுங்கா - நீங்கப்பெறாதபடி; மடுத்து - குடித்து.
4. அலையா - அங்குமிங்குமாய்ச் சுற்றியலைந்து; உலவை - சிறுகோல்; ஓச்சி - ஓட்டி; சில கிளையா - சிலசில பேசி.
5. குன்றக் குறவன் - குன்றக் குறவனாகிய என் மகன்; குறுநொடி - குறுகிய சொற்கள் (கதைகள்); பயிற்றும் - சொல்லுகின்ற.
6. மடந்தை - தலைவி.
7. வெம்பகை - கொடிய பகை; அருமுனை - போர்முனை; தண்பெயல் - குளிர்ச்சி பொருந்திய மழை.
8. நீர் இரங்கு - நீர் ஒலிக்கும்; அரைநாள் - நடு யாமம்; கூதிரொடு - பனியொடு.
9. வேறு புல - வேற்றுப் புலத்திலுள்ள; வாடை - வாடைக்காற்று; அலைப்ப - வருத்த.
10. தமியேம் - தனியே உள்ளேன்; பாசறையேம் - பாசறையில் இருக்கிறேன்.

தலைவன் கூற்று

அகநானூறு 84 **மதுரை எழுத்தாளன்**

திணை : முல்லை

கூற்று

தலைமகன் பாசறையிருந்து சொல்லியது.

கூற்று விளக்கம்

அரசனோடு போருக்குச் சென்ற தலைவன், போர்முகத்தின் பாசறையில் இருந்தவாறு தலைவியைப் பிரிந்திருப்பதை எண்ணி வருந்தித் தன் நெஞ்சத்தினிடம் கூறியது.

மலைமிசைக் குலைஇய உருகெழு திருவில்
பணைமுழங்கு எழிலி பௌவம் வாங்கி,
தாழ்பெயல் பெருநீர், வலன்ஏர்பு, வளைஇ,
மாதிரம் புதைப்பப் பொழிதலின், காண்வர
இருநிலம் கவினிய ஏமுறு காலை—
நெருப்பின் அன்ன சிறுகண் பன்றி,
அயிர்க்கண் படாஅர்த் துஞ்சுபுறம் புதைய
நறுவீ முல்லை நாள்மலர் உதிரும்
புறவுஅடைந் திருந்த அருமுனை இயவின்
சீறூ ரோளே, ஒண்ணுதல்!— யாமே,
எரிபுரை பன்மலர் பிறழ வாங்கி,
அரிஞர் யாத்த அலங்குதலைப் பெருஞ்சூடு
கள்ஆர் வினைஞர் களம்தொறும் மறுகும்
தண்ணடை தழீஇய கொடிநுடங்கு ஆர்எயில்
அருந்திறை கொடுப்பவும் கொள்ளான் சினம்சிறந்து,
வினையின் பெயர்க்கும் தானை,
புனைதார் வேந்தன் பாசறை யேமே!

தெளிவுரை

வளைந்த வானவில் மலையின் மேலே நிறம் சிறக்கத் தோன்றி யுள்ளது. மேகங்கள் கடல்நீரை உறிஞ்சி உலகின் வலப்பக்கமாய் எழுந்து வளைந்து திசையெல்லாம் மறைய இடிமுழக்கத்தோடு மழையைப் பொழிகிறது. பெரிய நிலப்பரப்பு இனிதாய்க் காட்சி நல்கும்படி கார் காலம் தொடங்கியது.

நெருப்பினை ஒத்த சிறிய கண்களைக் கொண்ட பன்றி நுண்ணிய மணலிலுள்ள புதரிலே மகிழ்ந்து படுத்துறங்குகிறது. அதன் முதுகுப் புறம் மறையுமாறு நறுமணம் கொண்ட முல்லை மலர்கள் உதிர்ந்து கிடக்கின்றன. இக்காலத்தே, ஒளி பொருந்திய நெற்றியைக் கொண்ட என் தலைவி அரிய முனைகள் கொண்ட வழியைக் கொண்ட முல்லை நிலச் சிறிய ஊரில் இருக்கிறாள்.

நானோ, நெல்லை அறுக்கும் தொழிலாளர் நெருப்பை யொத்த சிவந்த நிறம் கொண்ட மலர்கள் இடைப்படக் கட்டிய கதிர்க் கட்டுகளைக் களங்களிலே போட்டுவிட்டுக் கள்ளுண்டு செல்லும் மருத நிலத்திலே உள்ளேன். பகைவர், கொடி அசையும் கோட்டையினைத் திறையாய்க் கொடுக்கவும் கொள்ளாதவனாய் அரசன் சினம் மிகக் கொண்டு மேலும் போரிட முனைந்துள்ளான். அவனுடைய படையுடன் பாசறை யில் தங்கித் தலைவியை எண்ணி வருந்திக் கொண்டிருக்கிறேன்.

கருத்து

பகையரசன் தோற்றுத் திறை கொடுக்கவும் கொள்ளாது, மேலும் அரசன் போரைத் தொடர்ந்துள்ளான். அதனால் தலைவியிடம் சென்று சேர இயலாது பாசறையிலே படுத்துக்கிடக்கிறேன்.

விளக்கம்

நிலமெல்லாம் அழகு பெறும் கார் காலத்தில் தலைவி முல்லை நிலச் சிற்றூரில் இருக்கிறாள். அவளோடு இருந்து இன்பம் துய்க்க வேண்டிய இந்நாளில், அரசன் போரை நிறுத்தாமை யால், பகைவனுடைய மருத நிலத்தில் பாசறையில் தங்கியிருக் கிறேன்.

சொற்பொருள்

1. மிசை - மேலே; உருகெழு - நிறம் பொருந்திய; திருவில் - வானவில்.
2. பணை - முரசம்; எழிலி - மேகம்; பெளவம் - கடல்; வாங்கி - நீரை முகந்துகொண்டு.
3. தாழ்பெயல் பெருநீர் - இறங்கிப் பெய்யும் பெருமழை; வலன்ஏர்பு - உலகினை வலப்பக்கமாய்ச் சூழ்ந்து எழுந்து.
4. மாதிரம் - திசை; புதைப்ப - மறைய.

5. இரு - பெரிய; கவின் - அழகு; ஏமம் - இன்பம்; காலை - கார்ப்பொழுது.
7. அயிர் - நுண்மணல்; படாஅர் - சிறு தூறு, புதர்; புறம் - (பன்றியின்) முதுகு.
8. நாள்மலர் - புதிய மலர்.
9. புறவு - முல்லை நிலம்; அருமுனை இயவு - அரிய முனைகளைக் கொண்ட வழி.
11. எரிபுரை மலர் - நெருப்புப் போன்ற நிறம் கொண்ட மலர் - தாமரை, செங்கழுநீர் முதலாயின; பிறழ என்றது பூவோடு அரியப்பட்ட நெல்லாதலால், அரிமாற்றி வைத்துக் கட்டுதலின் பூக்கள் தம்முள் மாறுபட என்றவாறு.
12. அரிஞர் - நெல் அறுப்போர்; யாத்த - கட்டிய; பெருஞ்சூடு - பெரிய நெற்கட்டு.
13. கள்ஆர் வினைஞர் - கள்ளினை உண்ட தொழிலாளர்; களம் - நெல்லடிக்கும் களம்.
14. தண்ணடை - மருத நிலம்; நுடங்குதல் - ஆடுதல், அசைதல்; எயில் - கோட்டை, ஊர் (ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் நண்பருள் ஒருவனான ஆந்தை என்பானது ஊர்; சிறுபாணாற்றுப் படைத் தலைவனான நல்லியக்கோடனின் தலைநகரமும் எயிற்பட்டினம் எனப்படும்).
15. திறை - கப்பப்பொருள்; சிறந்து - மிக்கு.
16. வினையின் பெயர்க்கும் - போரிடத்தே செலுத்தும்; தானை - சேனை.

தலைவன் கூற்று

அகநானூறு 304 **இடைக்காடனார்**

திணை : முல்லை

கூற்று

பாசறைக்கண் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

வேந்தனுக்குத் துணையாகப் போர்க்களம் சென்ற தலைவன் தான் மீண்டு வருவதாய்ச் சொன்ன கார் காலம் தொடங்கியபோது பாசறையிலிருந்து தலைவியை நினைந்து தன் நெஞ்சத்தினிடம் சொல்லியது.

இருவிசும்பு இவர்ந்த கருவி மாமழை,
நீர்செறி நுங்கின் கண்சிதர்ந் தவைபோல்,
சூர்பனிப் பன்ன தண்வரல் ஆலியொடு
பரூஉப்பெயல் அழிதுளி தலைஇ, வான்நவின்று,
குரூஉத்துளி பொழிந்த பெரும்புலம் வைகறை,
செய்துவிட் டன்ன செந்நிலம் மருங்கில்,
செறித்து நிறுத்தன்ன தெள்அறல் பருகி,
சிறுமறி தழீஇய தெறிநடை மடப்பிணை,
வலம்புரி மருப்பின் அண்ணல் இரலையொடு,
அலங்குசினைக் குருந்தின் அல்குநிழல் வதிய,
சுரும்புஇமிர்பு ஊத பிடவுத்தளை அவிழ,
அரும்பொறி மஞ்ஞை ஆல, வரிமணல்,
மணிமிடை பவளம் போல, அணிமிகக்
காயாஞ் செம்மல் தாஅய், பலஉடன்
ஈயல் மூதாய் ஈர்ம்புறம் வரிப்ப,
புலன்அணி கொண்ட கார்எதிர் காலை,
'ஏந்துகோட்டு யானை வேந்தன் பாசறை
வினையொடு வேறுபுலத்து அல்கி, நன்றும்
அறவர் அல்லர்,நம் அருளா தோர்'என
நம்நோய் தன்வயின் அறியாள்,
எம்நொந்து புலக்கும்கொல், மாஅ யோளே?

தெளிவுரை

பெரிய வானத்தில் மேகங்கள் தொகுதியாய் எழுந்தன. குளிர்ச்சி பொருந்திய பனிக்கட்டியோடு பெருமழை பெய்தது. தெய்வம் ஏறப்பெற்று அருள் வந்து நடுங்குவதுபோலக் குளிர் நடுக்கியது.

மழைத்துளியுடன் விழுந்த ஆலம்பனிக்கட்டிகள், நீர் செறிந்த நுங்கின் கண்கள்போலச் சிதறி வீழ்ந்தன. இருள் புலர்ந்த வைகறைப் பொழுதில் இம்மழைக்காலத்தில் வலமாய்த் திரிந்த கொம்புகளைக் கொண்ட ஆண்மான்கள், குட்டிகளைத் தழுவி நின்ற இளமையான பெண்மான்களுடன், கையால் செய்து வைத்தது போன்ற செம்மண் நிலப்பள்ளங்களில் தேங்கிக்

கிடந்த, தெளிந்த, சிறிய அலை தவழும் நீரைப் பருகின; குருந்த மர நிழலில் இளைப்பாறின.

ஆரவாரத்துடன் வண்டினம் ஊதுதலால், பிடவத்தின் மலர் மொட்டுகள் பிணிப்பவிழ்ந்து மலர்ந்தன; அரிய புள்ளிகளைக் கொண்ட தோகைகளை விரித்து மயில்கள் ஆடின.

ஈரம் பட்ட நிலத்தில் அழகு விளங்கும் நீல நிறக் காயாம் பூக்களின் இடையிடையே தம்பலப்பூச்சிகள் ஊர்ந்து சென்றன. இக்காட்சி, வரிவரியான மணற்பரப்பின்மீது, நீலமணியுடன் செம்பவளத்தினை வைத்திழைத்தது போன்று இருக்கிறது. இவ்வாறு முல்லை நிலம் அழகு பெறக் கார் காலம் வந்துற்றது.

(இக்காலத்தில் திரும்புவதாய் நான் தலைவியிடம் கூறிவிட்டு வந்தேன்.) ஆனால், யானைப்படையையுடைய வேந்தனுடன் நான் போர் செய்தல் பொருட்டாக வேற்று நாட்டில் பாசறையில் தங்க நேரிட்டுவிட்டது.

அதனால் நாம் படும் பிரிவுத்துயரைத் தலைவி அறியாதவளாய், 'நம்மிடம் அருள் இல்லாத தலைவர் அறவோர் அல்லர்' எனக் கருதி, நம்மீது வருத்தம் கொண்டு வெறுப்பாளோ? (என் செய்வது? போர் முடியாத நிலையில் திரும்ப இயலாதே.)

கருத்து

கார் காலம் தொடங்கியது; போர் முடியவில்லை என்பதை அறியாது, நான் சொன்ன காலத்தில் திரும்பவில்லையென்று தலைவி என்னை வெறுப்பாளோ?

விளக்கம்

"நெஞ்சே! மழை பெய்து கார் காலம் தொடங்கி நானிலமே அழகு பெற்று விளங்குகிறது. வேந்தனுக்கு உதவியாக வந்து அவனுடைய போர்ப்பாசறையிலே நான் தங்கியிருக்கிறேன். வேந்தன் இன்னும் போரை முடிக்கவில்லையாதலால் நான் திரும்ப இயலவில்லை. தலைவியிடம் கூறி வந்தவாறு கார் காலத்தில் அவளைச் சென்றடையாதலால், 'நமக்கு அருள் செய்யாதவர் அறவோர் அல்லர்' என்று கூறி என்னை அவள்

வெறுப்பாளோ? அறியேன்!" என்று பாசறையிலுள்ள தலைவன் தன் நெஞ்சத்தினிடம் கூறுகின்றான்.

குறிப்பு

தெறித்து விழுந்த நுங்கின் துண்டுகள் ஆலங்கட்டிக்கு உவமை.

சொற்பொருள்

1. இருவிசும்பு - பெரிய வானம்; இவர்ந்த - எழுந்த; கருவி மாமழை - தொகுதியான மேகம்.
2. சிதர்ந்தவைபோல் - சிதறி விழுந்தனபோல.
3. சூர்பனிப்பன்ன - தெய்வம் ஏறப் பெற்று அருள் வந்து நடுங்குவது போல; ஆலி - ஆலங்கட்டி, பனிக்கட்டி.
4. பரூஉப்பெயல் - பெரிய மழை; அழிதுளி - மிகுந்த துளிகள்; தலைஇ - பொருந்தி; நவின்று - பயின்று.
5. குரூஉ - நிறம்.
6. செய்துவிட்டன்ன - செய்து வைத்தாற்போன்ற; செந்நிலம் - செம்மண் நிலம்.
7. செறித்து நிறுத்தல் - தேக்கி வைத்தல்; தெள்அறல் - தெளிந்து அலை வீசும் நீர்; பருகி - குடித்து.
8. மறி - குட்டி; தெறிநடை - துள்ளு நடை; மடப்பிணை - இளமையான பெண்மான்.
9. வலம்புரி - வலமாய்த் திரிந்துள்ள; மருப்பு - கொம்பு; அண்ணல் - பெருமை; இரலை - ஆண்மான்.
10. அலங்குதல் - அசைதல்; குருந்து - ஒரு வகை மரம்; அல்குநிழல் - பொருந்திய நிழல்; வதிய - தங்க.
11. சுரும்பு - வண்டு; இமிர்ப - ஊத; பிடவு - பிடவம் - ஒரு வகைச் செடி.
12. மஞ்ஞை - மயில்; ஆல - ஆட.
13. மணிமிடை - நீலமணியுடன் கலந்த.
14. காயாஞ்செம்மல் - காயாவின் உதிர்ந்த பூ; தாஅய் - பரந்து கிடக்க.
15. ஈயல் மூதாய் - தம்பலப்பூச்சி; ஈர்ம்புறம் - ஈரம் பட்ட பகுதி; வரிப்ப - அழகு செய்ய.
16. புலன் - புலம் - நிலம்; கார் - கார்ப்பருவம்.
17. கோடு - கொம்பு; பாசறை வினை - போர்த்தொழில்.
18. அல்கி - தங்கி.
19. அறவர் - அற உள்ளம் கொண்டவர்; நம் - நம்மை.

20. நோய் - வருத்தம்; தன்வயின் - தான்.
21. நொந்து - வெறுத்து; புலக்கும் - வெறுப்பாளோ?; மாஅயோள் - மாமை நிறம் கொண்டவள்.

தலைவன் கூற்று

அகநானூறு 214 **வடமவண்ணக்கன் பேரி சாத்தனார்**

திணை : முல்லை

கூற்று

பாசறைக்கண் தலைமகன், தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியைப் பிரிந்து மன்னனின் போர்ப்படைத் தலைவனாகப் போர்க்களத்துக்குச் சென்றான். அங்குப் போர் முடிவு பெறாது இருக்கும் நிலையில் தலைவியை எண்ணிச் சொல்லியது.

அகல்இரு விசும்பகம் புதையப் பாஅய்,
பகல்உடன் கரந்த, பல்கதிர், வானம்
இருங்களிற்று இனநிரை குளிர்ப்ப வீசி,
பெரும்பெயல் அழிதுளி பொழிதல் ஆனாது;
வேந்தனும் வெம்பகை முரணி, ஏந்துஇலை,
விடுகதிர் நெடுவேல் இமைக்கும் பாசறை,
அடுபுகழ் மேவலோடு கண்படை இலனே;
அமரும் நம்வயி னதுவே; நமர்என
நம்அறிவு தெளிந்த பொம்மல் ஓதி
யாங்கு ஆகுவள்கொல் தானே— ஓங்குவிடைப்
படுசுவல் கொண்ட பகுவாய்த் தெள்மணி
ஆபெயர் கோவலர் ஆம்பலொடு அளைஇ,
பையுள் நல்யாழ் செவ்வழி வகுப்ப,
ஆர்உயிர் அணங்கும் தெள்இசை
மாரி மாலையும் தமியள் கேட்டே?

தெளிவுரை

நெஞ்சமே! கருமேகம் அகன்ற பெரிய வானில் திரண்டு இடமெங்கும் பரந்து சூரியனை முழுவதுமாய் மறைத்தது. பெரிய

களிறுகளும், பெண்யானைகளும் குளிர் எய்துமாறு பெருமழை பொழிகின்றது. நம் வேந்தனும் பகைமை மாறாமல் இரவெல்லாம் பாசறையில் இலைப்பகுதியைக் கொண்ட நீண்ட வேல்கள் ஒளி வீச, பகையை வெல்லுதலால் உண்டாகும் புகழினை எண்ணியபடி கண் விழித்திருக்கிறான். இப்போரினை நடத்தும் பொறுப்பு நம்மிடம் உள்ளது. இந்நிலையில், நான் மீள்வேன் என்று தலைவியிடம் சொல்லி வந்த கார் காலமும் தொடங்கிவிட்டது. அழகிய கூந்தலைக் கொண்ட நம் தலைவி (நான் வாராதது கண்டு) எந்நிலையை அடைவாளோ?

அவளிருக்கும் ஊரில் இக்கார் கால மாலை வேளையில் கோவலர் மேய்வதற்காக ஓட்டிச் சென்ற தம் பசுக்கூட்டத்தை ஒருங்குசேர்த்து ஊருக்குள் ஓட்டிச் செல்வர். அப்பசுக்கூட்டத்தோடு வரும் காளைகளின் பிடரியில் கட்டப்பட்டிருக்கும் மணிகள் ஒலிக்கும். பசுக்களை ஒன்றுசேர்க்கக் கோவலர் புல்லாங்குழல் ஊதுவர்; அவ்விசைக்குப் பொருந்துமாறு, பிரிந்தவர்க்குத் துன்பம் தரும் செவ்வழிப்பண்ணைச் சிலர் யாழில் இசைப்பர். உயிரை வாட்டும் அந்த இசையையும் மணியோசையையும் கேட்டு, மழைக் காலத்து மாலை வேளையில் தனியளாய் இருந்து தலைவி எந்நிலையினை அடைவாளோ?

கருத்து

கார் காலத்தில் திரும்பி வருவதாய்ச் சொல்லிவிட்டுப் போர் புரிய வந்தேன். போர் முடியவில்லை. இக்காலத்தில் தனித்திருக்கும் தலைவி எந்நிலையினை அடைவாளோ?

விளக்கம்

“நெஞ்சமே! வானம் பெருமழை பொழிந்து துளிகளைச் சொரிகிறது. நம் வேந்தனும் பாசறையில் போர்வெற்றிப் புகழை விரும்பியவனாய் உறங்காதிருக்கின்றான். போரின் பொறுப்பும் நம்மைச் சார்ந்துள்ளது. நம்மையே உறவு என்று கொண்டு வாழும் தலைவி, மாரிக்காலத்து மாலையில் கோவலர் எழுப்பும் குழலிசையையும், பசுக்களுக்கு அணிவிக்கப்பட்டுள்ள மணிகளிலிருந்து எழும் தெளிந்த ஓசையையும் தனியளாய் இருந்து கேட்டு எந்நிலையை அடைவாளோ?” என்று தலைவன் தன் நெஞ்சத்தினிடம் சொல்லுகின்றான்.

சொற்பொருள்

1. அகல் - அகன்ற; இரு - பெரிய; விசும்பு - வானம்; புதைய - மறைய; பாஅய் - பரந்து.
2. பகல் - ஞாயிறு; கரந்த - முழுவதும் மறைத்த.
3. இனநிரை - தொகுதி, கூட்டம்; குளிர்ப்ப - குளிர் அடையும்படியாக.
4. பெயல் - மழை.
5. முரணி - மாறுபட்டு; ஏந்துஇலை - இலை வடிவப் பகுதியைக் கொண்டுள்ள (ஏந்தியுள்ள).
6. விடுகதிர் - ஒளி விடுகின்ற; இமைக்கும் - மின்னும்.
7. அடுபுகழ் - எய்தும் புகழ்; கண்படை - துயிலுதல்.
8. அமர் - போர்; நம்வயின் - நம்மைச் சார்ந்துள்ளது; நமர் - உறவினர்.
9. பொம்மல் ஓதி - அடர்ந்த கூந்தலைக் கொண்ட தலைவி.
10. ஓங்குவிடை - உயர்ந்த எருது (காளை).
11. சுவல் - கழுத்து; பகுவாய் - பிளவுபட்ட வாய்; தெள்மணி - தெளிந்த ஓசையைக் கொண்ட மணி.
12. பெயர் - வீட்டுக்கு ஓட்டிச் செல்லும்; ஆம்பல் - குழல்; அளைஇ - பொருந்தி.
13. பையுள் - துன்பம்; செவ்வழி - செவ்வழிப்பண்; வகுப்ப - இசைக்க.
14. அணங்கும் - வருந்தும்; தெள்இசை - தெளிந்த இசை.
15. மாரி - மழை; மாலை - மாலைப்பொழுது; தமியள் - தனியள்.

தலைவன் கூற்று

அகநானூறு 174 **மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார்**

திணை : முல்லை

கூற்று

பாசறைக்கண் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

போர்மேற்சென்ற தலைவன் தன் வினை முடித்துக் கார்ப்பருவம் தொடங்குமுன் திரும்புவதாய்த் தலைவியிடம் சொல்லிச் சென்றான். கார்ப் பருவம் வந்தும் வினை முடியவில்லை என்பதால் பாசறையிலிருக்கும் தலைவன் தலைவியை நினைந்து இரங்கித் தன் நெஞ்சினை நோக்கிக் கூறியது.

'இருபெரு வேந்தர் மாறுகொள் வியன்களத்து,
ஒருபடை கொண்டு, வருபடை பெயர்க்கும்
செல்வம் உடையோர்க்கு நின்றன்று விறல்'என,
பூக்கோள் ஏய தண்ணுமை விலக்கிச்
செல்வேம் ஆதல் அறியாள், முல்லை
நேர்கால் முதுகொடி குழைப்ப,நீர் சொரிந்து,
காலை வானத்துக் கடுங்குரல் கொண்மூ
முழங்குதொறும் கையற்று, ஒடுங்கிநப் புலந்து,
பழங்கண் கொண்ட பசலை மேனியள்,
யாங்குஆ குவள்கொல் தானே– வேங்கை
ஊழுறு நறுவீ கடுப்பக் கேழ்கொள,
ஆகத்து அரும்பிய மாசுஅறு சுணங்கினள்,
நல்மணல் வியலிடை நடந்த
சில்மெல் ஒதுக்கின், மாஅ யோளே?

தெளிவுரை

நெஞ்சே! பேரரசர் இருவர் தம்முள் மாறுபாடு கொண்டு போர் செய்யும் போர்க்களத்தே, தன்னுடைய ஒப்பற்ற படையைக் கொண்டு மாற்றார் படையைப் புறமுதுகிட்டு ஓடச்செய்யும் வெற்றி என்னும் செல்வம் என்றென்றும் நிலைத்து நிற்கக்கூடிய பெருமைக்குரியது. போரிட்ட வீரர்களுக்கு அரசன் பொற்பூ வழங்க முரசறைந்து விழாவினை அறிவித்துள்ளான். நான் அதனைப் பெறாமல் விலக்கி, தலைவியைப் பார்க்க விரைகின்றேன். அவள் இதனை அறிய மாட்டாள்.

நட்டு வைத்த கால்களில் படர்ந்த முல்லைக்கொடி தளிர்க்கும்படி கீழ்த்திசை வானத்தில் எழுந்த மேகம், இடியிடித்து மழை பெய்யுந்தோறும் என்னை வெறுத்துச் செயலற்றிருப்பாள்; துன்பமுற்றுப் பசலை படர்ந்த மேனியைக் கொண்டவளாய் மணல் நிறைந்த முற்றத்தில் நடக்கும் அவள் என்ன ஆவாளோ?

கருத்து

வெற்றிக்கான பொற்பூவையும் பெறாது அவளைக் காண விரைந்து கொண்டிருக்கிறேன். இதனை அறியாத அவள் இக்கார் காலத்தில் என்னைக் காணாது என்ன ஆவளோ?

விளக்கம்

“போர் வெற்றிக்காக அரசன் அளிக்கும் பொற்பூவினையும் பெறாது, தலைவியிடம் விரைந்து செல்ல நினைக்கிறேன். இதனை அவள் அறியாள். மாமை நிறங்கொண்ட அவள், கார் காலத்து மேகம் முழங்குந்தோறும் செயலற்று, ஒடுங்கி, நம்மைப் பிரிந்துறையும் துன்பத்தால் பசலை பூத்த மேனியளாய் எவ்வாறு ஆற்றியிருப்பாளோ?” எனத் தலைவியை நோக்கி விரையும் தலைவன் தன் நெஞ்சத்தினிடம் கூறுகிறான்.

குறிப்பு

மாற்றாரை வென்று வெற்றியைத் தேடித் தந்த வீரர்க்கு அரசன் பொற்பூ அளித்துச் சிறப்புச் செய்வான். அப்பூவினைப் பெறுதல் ‘பூக்கோள்’ எனப்படும்.

சொற்பொருள்

1. மாறுகொள் - மாறுபட்டுப் பகைகொண்டு; களம் - போர்க்களம்.
2. வருபடை - எதிர்த்து வரும் படை; பெயர்க்கும் - புறமுதுகிட்டு ஓடச் செய்யும்.
3. செல்வம் - வெற்றி என்னும் செல்வம்; நின்றன்று - நின்றது; விறல் - பெருமை, வெற்றி.
4. பூக்கோள் - அரசன் பொற்பூ அளித்தலைப் பெறுதல்; தண்ணுமை - முரசறைந்து தெரிவிக்கும் அறிவிப்பு.
6. குழைத்தல் - தளிர்த்தல்; நீர் சொரிந்து - கண்ணீர் பெருக்கி.
7. காலை வானம் - கீழ்த்திசை வானம்; கடுங்குரல் - இடி முழக்கம்; கொண்மூ - மேகம்.
8. கையற்று - செயலற்று; நப்புலந்து - நம்மை வெறுத்து.
9. பழங்கண் - துன்பம்.
11 ஊழுறு - நன்கு மலர்ந்த; கேழ் - நிறம்.
12. ஆகம் - மார்பு; சுணங்கு - தேமல்.
13. வியலிடை - அகன்ற இடம் (முற்றம்).
14. ஒதுக்கு - நடை.

தலைவி கூற்று

அகநானூறு 194 **இடைக்காடனார்**

திணை : முல்லை

கூற்று

பருவம் கண்டு ஆற்றாமை மீதூரத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

அரசன் செயலை முடித்தற்குச் சென்ற தலைவன் கார்ப்பருவத்தே திரும்பி வருவதாய்க் கூறிச் சென்றான். கார்ப்பருவம் தொடங்கியும் தலைவன் வரவில்லை. அதனால் மனங்கலங்கி வருந்திய தலைவி, தோழியை நோக்கிக் கூறியது.

பேர்உறை தலைஇய பெரும்புலர் வைகறை,
ஏர்இடம் படுத்த இருமறுப் பூழிப்
புறம்மாறு பெற்ற பூவல் ஈரத்து,
ஊன்கிழித் தன்ன செஞ்சுவல் நெடுஞ்சால்,
வித்திய மருங்கின் விதைபல நாறி,
இரலை நல்மான் இனம்பரந் தவைபோல்,
கோடுடைத் தலைக்குடை சூடிய வினைஞர்,
கறங்குபறைச் சீரின் இறங்க வாங்கி,
களைகால் கழீஇய பெரும்புன வரகின்
கவைக்கதிர் இரும்புறம் கதூஉ உண்ட,
குடுமி நெற்றி, நெடுமாத் தோகை
காமர் கலவம் பரப்பி, ஏமுறக்
கொல்லை உழவர் கூழ்நிழல் ஒழித்த
வல்இலைக் குருந்தின் வாங்குசினை இருந்து,
கிளிகடி மகளிரின் விளிபடப் பயிரும்
கார்மன் இதுவால்– தோழி! 'போர்மிகக்
கொடுஞ்சி நெடுந்தேர் பூண்ட கடும்பரி
விரிஉளை நல்மான் கடைஇ
வருதும்' என்றுஅவர் தெளிந்த போழ்தே.

தெளிவுரை

தோழி! போர் மிகுந்து மூள, கொடுஞ்சி என்னும் உறுப்பினைக் கொண்ட நெடிய தேரில், விரைந்த செலவினையும்,

விரிந்த பிடரி மயிரினையும் கொண்ட குதிரைகளைப் பூட்டிச் செலுத்தியவாறு, 'இன்ன பருவத்தில் வருவேன்' என்று கூறித் தலைவன் நம்மைத் தெளிவித்துச் சென்றான்.

பெருமழை பொழிந்த வைகறைப்போதில், உழவர் தம் நிலத்தைக் கலப்பைகளால் மண் கீழ்மேலாக மாறும்படி உழுதனர். பெய்த மழையால் செம்மண் நிலத்தில் நன்கு ஈரம் படிந்தது; ஊனைக் கிழித்ததுபோலப் பிளவுண்டாகுமாறு அச் செம்மண் நிலத்தை மீண்டும் உழுதனர். உழுத சாலில் அவர்கள் விதைத்த விதைகள் ஒன்று பலவாக முளைத்து வளர்ந்தன. கலைமான்களின் கூட்டத்தினைப் போலத் தோன்றுமாறு, மழை பெய்தபோது தம் தலைகளில் பனங்குடைகளைக் கவிழ்த்துக் கொண்ட உழவர்கள் பறையை ஒலித்துக் கொண்டு களைகளைக் களைந்தனர். அவ்வாறு அவர்கள் செம்மைப்படுத்திய தோட் டத்தில் விளைந்த வரகுக் கதிர்கள் கவடுபட்டு நின்றன. அக்கதிர்களின் வெளிப்புறத்தை, உச்சிக்கொண்டையும் நீண்ட தோகையும் கொண்ட மயில்கள் பற்றி உண்டன; அவை விரும்பத்தக்க தம் தோகையை விரித்து ஆடின; பின்னர், உழவர்கள் தாம் இருந்து உண்பதற்கு நிழல் தரும் என வெட்டாது விட்டு வைத்திருந்த வலிய இலைகளைக் கொண்ட குருந்த மரத்தின் கிளைகளில் அமர்ந்து அகவின. அத்தோற்றம், கிளைகளில் அமர்ந்து கிளிகளை ஓட்டும் மகளிர் போன்றி ருந்தது. தலைவர் சொன்ன கார் காலம் இதுவே! அவர்தம் சொற்படி இன்னும் வரவில்லையே!

கருத்து

குருந்த மரத்தின் கிளைகளில் மயில் தங்கி அகவுகின்ற கார் காலம் தொடங்கி விட்டது; அவர் இன்னும் வந்திலர்.

விளக்கம்

"தோழி! போர் மூண்டபோது நம் தலைவர் நெடிய தேரில் ஏறிக் குதிரைகளைச் செலுத்தியவாறு, 'இன்ன பருவத்தில் வந்து சேர்வேன்' என்று சொல்லிச் சென்றார். வரகின் கதிர்களை உண்ட மயில் குருந்த மரத்தின் கிளைகளில் தங்கி அகவுவது, கிளி கடியும் மகளிர் ஒலி எழுப்புவதுபோலக் காட்சி தருகிறது.

தலைவர் கூறிச் சென்ற கார் காலம், இதுதானே! அவர் இன்னும் வந்திலரே" என்று தலைவி தோழியிடம் சொல்லுகிறாள்.

சொற்பொருள்

1. பேர்உறை - பெரிய மழை; தலைஇய - பெய்த; பெரும்புலா் - இருள் நீங்கிய.
2. ஏர்இடம் படுத்த - ஏரால் உழப்பட்ட; இருமறு - பெரிய வடு; பூழி - புழுதி.
3. புறம்மாறு பெற்ற - (மண்) கீழ் மேலாய்ப் புரண்ட; பூவல் - செம்மண் நிலம்.
4. செஞ்சுவல் - செந்நிற மேட்டுநிலம்; நெடுஞ்சால் - நீண்ட உழுசால்.
5. வித்திய மருங்கின் - விதைத்த இடத்தில்; நாறி - முளைத்து வளர்ந்து.
6. இரலை - கலைமான்; இனம் - கூட்டம்.
7. கோடுடை - உச்சிகளைக் கொண்ட; தலைக்குடை - ஓலைக்கூடை; வினைஞர் - தொழில் செய்வோர் (உழவர்).
8. கறங்கும் - ஒலிக்கும் (பறை); சீரின் இறங்க வாங்கி - சீராக ஒலிக்கும்படி முழக்கி.
9. களைகால் கழீஇய - களையை முற்றிலுமாய் நீக்கிய; புனம் - வயல்.
10. கவை - பிளவுபட்ட; இரும்புறம் - வெளிப்புறம்; கதூஉ - பற்றி இழுத்து.
11. குடுமி - உச்சிக்கொண்டை; நெற்றி - தலை; நெடுமா - நீண்ட கரிய; தோகை - மயில்.
12. காமர் - விருப்பம் தரும்; கலவம் - தோகை; ஏமுற - இன்பம் பெற (ஏம் - இன்பம்).
13. கொல்லை - முல்லை நிலம்; கூழ்நிழல் - கூழ் உண்பதற்கு நிழலாய்; ஒழித்த - விட்டு வைத்த.
14. வல்இலை - வலிய இலை; குருந்து - குருந்த மரம்; வாங்குசினை - வளைந்த கிளை.
15. கிளிகடி - கிளியை விரட்டும்; விளிபட - ஒலியுண்டாக; பயிரும் - அகவும்.
16. கார் - கார் காலம்; போர் மிக - போர் மிகுந்து மூள.
17. கொடுஞ்சி - தேரின் ஓர் உறுப்பு, தேர்த்தட்டில் இருப்பார் பிடித்துக் கொள்வதற்கு ஏற்பத் தாமரை மொட்டுப்போலச் செய்யப்பெற்ற உறுப்பு; பூண்ட - பூட்டப்பெற்ற; கடும்பரி - விரைந்த செலவு.

18. விரிஉளை - விரிந்த பிடரி மயிர்; நல்மான் - குதிரை; கடைஇ - செலுத்தி.
19. வருதும் - (இன்ன பொழுதில்) வருவேன்; தெளிந்த - தெரிவித்த; போழ்து - காலம்.

தோழி கூற்று

கார் நாற்பது 37 **மதுரைக் கண்ணங்கூத்தனார்**

திணை : முல்லை

கூற்று

தோழி பருவங் காட்டித் தலைமகளை வற்புறுத்தது.

கூற்று விளக்கம்

கார்ப் பருவம் வந்தது. அதனைத் தோழி தலைவிக்குக் காட்டித் தலைவன் இனி வருவான் என்பதற்குரிய காரணங்களை எடுத்துக்காட்டி, வருந்தாது இருக்குமாறு கட்டாயப்படுத்திக் கூறியது.

கருங்கடல் மேய்ந்த கமஞ்சூல் எழிலி
இருங்கல் இருவரை ஏறி உயிர்க்கும்
பெரும்பதக் காலையும் வாரார்கொல் வேந்தன்
அருந்தொழில் வாய்த்த நமர்.

தெளிவுரை

கருமையான கடல் நீரைப் பருகி அதனால் சூல் கொண்ட கருமையுள்ள மேகம், பெரிய பாறைகளைக் கொண்ட மலை மேல் ஏறி மழை நீரைச் சொரியும் கார் காலத்தில் தலைவன் வருவான். வேந்தன் போருக்காகப் பிரிந்து சென்ற தலைவன் திரும்பும் காலம் வந்துவிட்டது.

கருத்து

அரசன் செய்த போர் இன்னும் முடியாதிருக்கலாம்; அதனால், தலைவன் வருவதில் சிறிது காலம் தாழலாம்!

குறிப்பு

தலைவன் போர்வயின் பிரிந்திருக்கிறான்.

சொற்பொருள்

1. மேய்ந்த - படிந்த; கமஞ்சூல் - நீரைக் கர்ப்பமாகக் கொண்ட; எழிலி - கருமேகம்.
2. இருங்கல் - பெரிய பாறை; இருவரை - பெரிய மலை; உயிர்க்கும் - நீரைச் சொரியும்.
3. பெரும்பதம் - பக்குவம் மிகுந்த; காலை - கார் காலம்.
4. அருந்தொழில் - போர்த் தொழில்; நமர் - நம் தலைவர்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 467 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

தலைமகன் வினைவயிற்பிரிய ஆற்றாளாகிய தலைமகளைத் தோழி வற்புறீஇயது.

கூற்று விளக்கம்

தலைவன் போர்த்தொழில் காரணமாய்ப் பிரிந்தான். தலைவி வருந்தினாள். தலைவன் விரைவில் வந்து சேர்வான் என வற்புறுத்தித் தோழி தேற்றியது.

புனைஇழை நெகிழச் சாஅய் நொந்துநொந்து
இனையல் வாழியோ இகுளை; வினைவயின்
சென்றோர் நீடினர் பெரிதெனத் தங்காது
நம்மினும் விரையும் என்ப;
வெம்முரண் யானை விறல்போர் வேந்தே!

தெளிவுரை

"*தலைவி! நீ வாழ்க! கொடிய பகைக்குணம் கொண்ட யானைப் படையாலே சிறந்த போரைச் செய்யும் நம் வேந்தன், தனக்காகப் போர் செய்ய வந்தவர் தம் வீட்டைப் பிரிந்து நெடுங்காலம் தங்கினர் என்பதை உணர்ந்து, மேலும் பாசறைக்கண்ணே நீடித்துத் தங்கவிடாது திருப்பி அனுப்பிவிட்டார். ஆதலால், நம் தலைவனைக் காண நாம் விரும்புவதைக் காட்டிலும் நம்மைக்*

காண விரைவாய் அவன் நாடு திரும்பி வருகிறான் என்று சொல்கிறார்கள். ஆதலினாலே, புனைந்துள்ள இழைகள் நெகிழுமாறு மெலிவுற்று நீ உள்ளம் நொந்து நொந்து வருந்திக்கொண்டிராதே!"

கருத்து

தலைவன் நாம் எதிர்பார்க்கும் நாளினும் விரைந்து வந்தடைவான்; வருந்தாதே.

சொற்பொருள்

1. புனை இழை - புனைந்துள்ள அணி வகைகள்; சாஅய் - மெலிந்து, கழலுமாறு.
2. இனையல் - வருந்தாதே!; இகுளை - தோழி.
3. வினைவயின் சென்றோர் - போர்வினை குறித்துச் சென்ற மறவர்; நீடினர் - காலம் தாழ்த்தினர்; தங்காது - மேலும் பாசறைக்கண் இருப்புக் கொள்ளாது.
5. வெம்முரண் யானை - கொடிய பகை கொண்ட போர்யானை; விறல் போர் - வெற்றி பெறும் போர் (செய்யும் வேந்தன்).

தோழி கூற்று

ஐங்குறுநூறு 463 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

குறித்த பருவம் வரவும், தலைமகன் தாழ்த்துழித் தோழி காரணங்கூறி வற்புறீஇயது.

கூற்று விளக்கம்

தலைவன் தான் சொல்லிச் சென்ற பருவம் தொடங்கிய பிறகும், அவன் வாராது காலம் தாழ்த்தியமையால் அதற்குரிய காரணத்தைக் கூறி அவன் வருவான் என்று தோழி தலைவியிடம் வற்புறுத்திக் கூறித் தேற்றியது.

புதல்மிசை நறுமலர் கவின்பெறத் தொடரிநின்
நலமிகு கூந்தல் தகைகொளப் புனைய,
வாராது அமையலோ இலரே; நேரார்
நாடுபடு நன்கலம் தரீஇயர்
நீடினர் தோழி!நங் காத லோரே.

தெளிவுரை

"தலைவி! புதர்களின் மேலே பூத்துள்ள புதிய மலர்களைக் கொய்து அழகுபெறத் தொடுத்து, வனப்பு மிகுந்த உன் கூந்தல் அழகு கொள்ளுமாறு புனைந்து மகிழ்வதற்குத் தலைவர் வாராது இரார். பகைவரது நாட்டை வென்று அங்குக் கைப்பற்றப்படும் நல்ல அணிகலன்களை உனக்குக் கொண்டுவந்து தருதற்காகவே, நம் காதலரும் வீடு திரும்புதற்குரிய காலத்தினை நீட்டித் துள்ளார். அதனாலேதான் அவர் இன்னும் வரவில்லை."

கருத்து

தலைவி! பகைவர் நாட்டில் அணிகலன்களைத் திறையாகப் பெறக் காலம் நீண்டுள்ளது; பெற்றதும் உடனே வருவார்.

சொற்பொருள்

1. புதல்மிசை - புதர்களுக்கு மேலாய்; தொடரி - தொடுத்து.
2. தகை கொளப் புனைய - அழகு பெறுமாறு சூட்ட.
3. வாராது அமையல் - வாராது இருத்தல்; நேரார் - பகைவர்.
4. நன்கலம் - நல்ல அணிகலன்; தரீஇயர் - தருதற்பொருட்டு.
5. நீடினர் - நீட்டித்துள்ளார்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 461 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

பிரிவிடை வேறுபட்ட கிழத்தியைத் தோழி வரவு கூறி, 'உரைத்த பருவம் வந்ததாகலான் அவர் வருவர்' என வற்புறீஇயது.

கூற்று விளக்கம்

'கார் தொடங்கிவிட்டது. பாசறையோரான காதலர் இனியும் பிரிந்திரார். வருந்தல் வேண்டா' என ஆற்றியிருக்குமாறு தலைவியிடம் தோழி வற்புறுத்தியது.

வான்பிசிர்க் கருவியில் பிடவுமுகை தகையக்
கான்பிசிர் கற்பக் கார்தொடங் கின்றே
இனையல் வாழி தோழி; எனையதூஉம்
நின்துறந்து அமைகுவர் அல்லர்
வெற்றி வேந்தன் பாசறை யோரே.

தெளிவுரை

"வானம் பெய்த மழைத்துளிகளால் பிடவ மலரின் மொட்டுகள் பூக்கத் தொடங்கின; காட்டுச் செடிகொடிகள் மழைத்துளியை ஏற்று நீர்த்திவலைகளைச் சிதறின; இவ்வாறாய்க் கார்ப்பருவம் தொடங்கி விட்டது. வெற்றி வேந்தனுடைய பாசறையில் நம் தலைவர் சிறிது நேரங்கூட உன்னைப் பிரிந்து இனியும் தங்கமாட்டார். வருந்தாதே."

கருத்து

வேந்தன் வெற்றி பெற்றான். தலைவர் இனி உன்னைப் பிரிந்து பாசறையில் இருக்கமாட்டார்; உடனே வருவார்.

சொற்பொருள்

1. பிசிர் - நுண்ணிய மழைத்துளி; பிடவு முகை - பிடவ மலரின் மொட்டுகள்; தகைய - அழகு மிகுந்து விளங்க.
2. கான் - காடு; கற்ப - துவலையாய்த் தூவ; தொடங்கின்றே - தொடங்கிவிட்டது.

3. இனையல் - வருந்தாதே; எனையதூஉம் - சிறிது நேரமும்.
4. நின்துறந்து - உன்னைப் பிரிந்து; அமைகுவர் - தங்கியிருப்பவர்.
5. பாசறையோரே - பாசறையில் இருப்பவராகிய நம் தலைவர்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 465 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்கண்டு வேறுபட்ட தலைமகளை, வேந்தன் வினைமுடித்தான் எனக் கேட்ட தோழி, வருவரென வற்புறீஇயது.

கூற்று விளக்கம்

கார்ப்பருவம் தொடங்கிய பின்னரும் பிரிந்த தலைவன் வந்து சேரவில்லை. வேந்தன் போர்த்தொழிலை முடித்துவிட்டான் என்று கேள்விப்பட்ட தோழி, அதனால் தலைவன் விரைவில் வந்துவிடுவான் என்று தலைவியிடம் வற்புறுத்திச் சொல்லியது.

நீர்இகுவு அன்ன நிமிர்பரி நெடுந்தேர்
கார்செய் கானம் பிறபடக் கடைஇ
மயங்குமலர் அகலம் நீ,இனிது முயங்க,
வருவர்; வாழி, தோழி!
செருவெம் குருசில் தணிந்தனன் பகையே.

தெளிவுரை

"*தலைவி! போர்முனையிலே வீரம் விளைத்த அரசன், தன் பகைமையை விடுத்துத் தணிவெய்தினன் என்று சொல்லுகின்றனர். எனவே, தலைவன், நீர் ஓடுவதுபோல விரைந்து செல்லக்கூடிய குதிரைகள் பூட்டப் பெற்ற நெடிய தன் தேரினைக் கார்ப்பருவத்தால் அழகு பெற்ற காடு பிற்படச் செல்லுமாறு - அஃதாவது காட்டினைத் தான் முந்திச் செல்லுமாறு - விரைந்து ஓட்டி வருவான். அகன்ற தன் மார்பினை நீ இனிது தழுவிக் கொள்ளுமாறு இப்பொழுதே வந்து சேர்வான்; வருந்தாதே!*"

கருத்து

மாற்றார் மீது வேந்தன் கொண்டிருந்த பகை தணிவுற்றது; தலைவன் உடனே வருவான்.

சொற்பொருள்

1. நீர் இகுவு அன்ன - தண்ணீர் மேலேயிருந்து கீழே விழுவதைப் போல; இகுதல் - தாழ்தல்; நிமிர் பரி - பாயும் குதிரை.
2. கானம் பிற்பட - காடு பின்னே இருக்குமாறு அக்காட்டைக் கடந்து; கடைஇ - (வேகமாய்ச்) செலுத்தி.
3. மயங்கு மலர் அகலம் - மயங்கித் தழுவுவதற்கு ஏற்ப விரிந்த மார்பு; முயங்க - தழுவ.
5. செரு வெம் குருசில் - போரிடத்திலே வெம்மை காட்டி நிற்கும் அரசன்; பகை தணிந்தனன் - பகைவர் பணிந்து கப்பம் செலுத்த ஒப்புக்கொள்ள அவர் பணிவை ஏற்றுப் பகைமையை விடுத்தனன்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 466 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

பிரிவின்கண் ஆற்றாளாகிய தலைமகளை, 'அவர் போன காரியம் இடையூறின்றி முடித்து வருதல் பல்லாற்றானும் தெளிந்தேன்' எனத் தோழி சொல்லி ஆற்றுவித்தது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிவினால் தலைவி பொறுமை இழந்து வருந்தினாள். 'தான் விரும்பிச் சென்ற காரியத்தை இடையூறு இல்லாமல் முடித்து அவன் திரும்புவதைப் பலவகையிலும் ஆராய்ந்து உண்மையெனக் கண்டேன்' என்று சொல்லித் தோழி தலைவியைத் தேற்றியது.

வேந்துவிடு விழுத்தொழில் எய்தி, ஏந்துகோட்(டு)
அண்ணல் யானை அரசுவிடுத்து இனியே
எண்ணிய நாளகம் வருதல், பெண்ணியல்
காமர் சுடர்நுதல் விளங்கும்
தேமொழி அரிவை! தெளிந்திசின் யானே.

தெளிவுரை

“பெண்மையின் இயல்புகளையெல்லாம் ஒருங்கே பொருந்தப் பெற்றுள்ளவளும், அழகான ஒளி பொருந்திய நெற்றியோடு விளங்குபவளும், இனிய மொழியினைக் கொண்டவளுமாகிய தலைவியே! வேந்தனால் விடுக்கப்பட்ட விழுமிய தூதுத் தொழிலினை மேற்கொண்டு நம் காதலர் சென்றார். (அதனை இனிதே முடித்தார்.) உயர்ந்த கொம்புகளையுடைய பெரிய யானைகளைக் கொண்ட மாற்று அரசனிடம் விடைபெற்று வந்து கொண்டிருக்கிறார். நாம் கருதியுள்ள நாள்களுக்கு உள்ளாகவே வந்து சேர்வார் என்பதைப் பலவகையிலும் ஆராய்ந்து உண்மையெனத் தெரிந்துகொண்டேன். ஆதலின், நீயும் கவலையை விட்டிரு.”

கருத்து

அரசனுக்காகச் சென்ற தூதுப்பணியை முடித்துக்கொண்டு தலைவன் திரும்ப வந்துகொண்டிருக்கிறான். நாம் கருதிடும் நாள்களுக்குள்ளாகவே வந்து சேர்வான்.

சொற்பொருள்

1. வேந்து விடு தொழில் - அரசன் விடுக்கும் தூது போதலாகிய அரச காரியம்; விழுத்தொழில் - சிறப்பான கடமை; எய்தி - முடித்து; ஏந்துகோடு - உயர்ந்த கொம்பு.
2. அண்ணல் - பெருமை வாய்ந்த.
3. எண்ணிய நாளகம் வருதல் - நாம் கருதியுள்ள நாளுக்கு உள்ளாகவே வருதல்.
4. காமர் - அழகிய.
5. தேமொழி - இனிய மொழி; தெளிந்திசின் - தெளிவாய் அறிந்தேன்.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 442 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

வேந்தற்கு உற்றுழிப் பிரிந்த தலைமகன் வினைமுடியாமையின் பாசறைக் கண் இருந்து, பருவ வரவின்கண் சொல்லியது.

கூற்று விளக்கம்

வேந்தனுக்குப் போர்த்துணைவனாய்ச் சென்ற தலைவன் போர் முற்றுப் பெறாமையால் பாசறையில் இருந்தான். அப்பொழுது தான் திரும்புவதாய்த் தலைவியிடம் கூறியிருந்த கார்ப்பருவம் தொடங்க, அதைக் கண்டு தலைவன் தனக்குள் சொல்லி வருந்தியது.

பெருஞ்சின வேந்தன் அருந்தொழில் தணியின்
விருந்துநனி பெறுதலும் உரியள் மாதோ,
இருண்டுதோன்று விசும்பின் உயர்நிலை உலகத்து
அருந்ததி அனைய கற்பின்
குரும்பை மணிப்பூண் புதல்வன் தாயே!

தெளிவுரை

"கார் காலம் தொடங்கியதாலே இருண்டு காணப்படுகிறது, வானம். அவ்வானத்திடத்தே உயர்ந்த நிலையினதான தேவருலகில் உள்ளவள், அருந்ததி. அந்த அருந்ததிபோலும் கற்பினைக் கொண்டவள், என் மனைவி. தென்னங்குரும்பை போல் செய்யப்பெற்றுள்ள மணிகள் கோக்கப் பெற்றுள்ள கிண்கிணியை அணிந்துள்ள என் புதல்வன் தாய், அவள். பகைவன்மேற் பெருஞ்சினத்தோடே படையெடுத்துள்ள நம் வேந்தன் போர் முடிந்து, வெற்றி பெற்றுச் சினந்தணிந்து போரை நிறுத்தினால் என் மனைவி மிகப்பெரிதான கூடலின்பமாகிய விருந்தைப் பெற்று மகிழ்வாள்."

கருத்து

அரசன் வெற்றி பெற்றுப் போரை நிறுத்தியதும் நான் உடனே வீடு திரும்புவேன். தலைவி என்னோடு கூடி இன்பம் பெறுவாள்.

சொற்பொருள்

1. அருந்தொழில் - போர்த்தொழில்; தணியின் - முடிவுறின்.
2. விருந்து - கூடலின்பமும் பிறவும்; நனி - மிகவும்.
3. விசும்பு - ஆகாயம்; உயர்நிலை உலகம் - உம்பருலகம்.
4. அருந்ததி - கற்பரசியருள் சிறந்தவள்.
5. குரும்பை மணிப்பூண் - தென்னங்குரும்பை போன்ற வடிவுள்ள மணிகளைக் கொண்ட கிண்கிணி; பூண் - அணிந்துள்ள; புதல்வன் தாயே - மகனுக்குத் தாய் (என் மனைவி).

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 443 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

வேந்தற்கு உற்றுழிப் பிரிந்த தலைமகன் வினைமுடியாமையின் பாசறைக்கண் இருந்து, பருவ வரவின்கண் சொல்லியது.

கூற்று விளக்கம்

வேந்தனுக்குப் போர்த்துணைவனாய்ச் சென்ற தலைவன் போர் முற்றுப் பெறாமையால் பாசறையில் இருந்தான். அப்பொழுது தான் திரும்புவதாய்த் தலைவியிடம் கூறிய கார்ப்பருவம் தொடங்க, அதைக் கண்டு தலைவன் தனக்குள் சொல்லி வருந்தியது.

நனிசேய்த்து என்னாது நற்றேர் ஏறிச்சென்று
இலங்கு நிலவின் இளம்பிறை போலக்
காண்குவெம் தில்அவள் கவின்பெறு சுடர்நுதல்
விண்ணுயர் அரண்பல வௌவிய
மண்ணுறு முரசின் வேந்துதொழில் விடினே.

தெளிவுரை

“கழுவப்பெற்ற வெற்றி முரசங்களைக் கொண்ட நம் வேந்தன், பகையரசர்களுக்குரிய வானளாவிய அரண்கள் பலவற்றையும் வென்றுள்ளான். அவன் தன் போர்த்தொழிலைக் கைவிட்டனன் என்றால், மிகத் தொலைவில் உள்ளது எனத் தயங்காது நல்ல

தேரின்மேல் ஏறி விரைந்து செல்வேன்; இளம்பிறை நிலவு போல விளங்கும் அழகினைப் பெற்ற தலைவியின் சுடர்நுதலைக் காண்பேன்."

கருத்து

போர் முடிந்ததும் மிகவும் விரைந்து சென்று தலைவியின் அழகைத் துய்ப்பேன்.

சொற்பொருள்

1. நனி சேய்த்து - மிகவும் தொலைவில் உள்ளது; என்னாது - என்று தயங்காது; நற்றேர் - நல்ல தேர்.
2. இளம்பிறை நிலவு போல விளங்கும்; இலங்குதல் - விளங்குதல்.
3. கவின் - அழகு; சுடர் நுதல் - ஒளி பொருந்திய நெற்றி.
4. அரண் - கோட்டை; வௌவுதல் - கைப்பற்றுதல்.
5. மண்ணுறு முரசு - கழுவப்பட்ட முரசு; வேந்து முரசு தொழில் விடின் - முரசொலிக்கும் போர்த்தொழிலை வேந்தன் விடுவானாயின்.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 444 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

வேந்தற்கு உற்றுழிப் பிரிந்த தலைமகன் வினை முடியாமையின் பாசறைக் கண் இருந்து, பருவ வரவின்கண் சொல்லியது.

கூற்று விளக்கம்

வேந்தனுக்குப் போர்த்துணைவனாய்ச் சென்ற தலைவன் போர் முற்றுப் பெறாமையால் பாசறையில் இருந்தான். அப்பொழுது தான் திரும்புவதாய்த் தலைவியிடம் கூறியிருந்த கார்ப் பருவம் தொடங்க, அதைக் கண்டு தலைவன் தனக்குள் சொல்லி வருந்தியது.

பெருந்தோள் மடவரல் காண்குவெம் தில்ல;
நீள்மதில் அரணம் பாய்ந்தெனத் தொடிபிளந்து
வைந்நுதி மழுகிய தடங்கோட்டு யானை
வெல்வேல் வேந்தன் பகைதணிந்து
இன்னும் தன்நாட்டு முன்னுதல் பெறினே.

தெளிவுரை

"நீண்ட மதில்களைத் தாக்கியமையால், தம் கொம்புகளிலுள்ள பூண்கள் சிதையப் பெற்ற, தம் கூர்மையான கொம்புகளின் முனையும் மழுங்கப் பெற்ற பெரிய கொம்புகளைக் கொண்ட யானைப் படையினையும் வெற்றி தரும் வேற்படையினையும் கொண்டவன், நம் வேந்தன். அவன், தன் பகைமை முற்றிலும் தணியப் பெற்று இப்போதேனும் தன் நாட்டிற்குச் செல்ல விரும்பினானாயின், நானும் உடனே சென்று பெருத்த தோள்களைக் கொண்டவளான என் இளம் காதலியைக் காண்பேன்!"

கருத்து

வெற்றி பெற்றுள்ள நம் வேந்தன் பகை நீங்கி நாடு செல்ல விரும்பினானாயின், நானும் அப்பொழுதே சென்று என் மனைவியின் பெருத்த தோள்களை அணைத்து மகிழ்வேன்.

சொற்பொருள்

1. பெருந்தோள் - பெரிய தோள்கள்; மடவரல் - இளமை பொருந்திய பெண், தலைவி; காண்குவெம் - காண்பேன்.
2. நீள் மதில் - நெடிய மதில்களைக் கொண்ட; அரணம் - கோட்டை; பாய்ந்தென - பாய்ந்து தாக்கியதால்; தொடி - (களிற்றின் கொம்பின் முனையிலே செறிந்திருக்கும் இரும்புப்) பூண்.
3. வைந்நுதி - கூர்மையான முனை; மழுகிய - மழுங்கிய; தடங்கோடு - பெரிய கொம்பு.
4. வெல்வேல் - வெற்றிவேல்; பகை தணிந்து - பகைமை குறைந்து (நீங்கி).
5. தன்நாட்டு முன்னுதல் - தன் நாட்டுக்குத் திரும்ப நினைத்தல்.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 447 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

வேந்தற்கு உற்றுழிப் பிரிந்த தலைமகன் அவன் வினைமுற்றி மீளும் வேட்கையனாய்ப் பருவ வரவின்கண் தலைமகளை நினைத்துச் சொல்லியது.

கூற்று விளக்கம்

வேந்தனுக்கு உதவும்பொருட்டுப் பாசறையிலிருந்த தலைவன், தான் மீள்வதாய்க் குறிப்பிட்ட பருவம் தொடங்கியதும், தான் மேற்கொண்டுவந்த கடமை முடியாமையால் அக்கடமை விரைவில் முடிய வேண்டும் என்னும் விருப்பத்தோடு, காதலியை நினைத்துச் சொல்லியது.

பிணிவீடு பெறுக மன்னவன் தொழிலே
பனிவளர் தளவின் சிரல்வாய்ச் செம்முகை
ஆடு சிறைவண்டு அவிழ்ப்ப
பாடு சான்ற காண்கம்,வாள் நுதலே.

தெளிவுரை

“பனியாலே வளர்ச்சி கொள்ளும் செம்முல்லையின் சிவந்த அரும்புகள் சிச்சிலிப் பறவையின் வாயைப்போல விளங்கு கின்றன. அசைகின்ற சிறகுகளைக் கொண்ட வண்டுகள் அவ்வரும்புகளை மொய்த்து மலரச்செய்தலால் இப்பொழுது அவை அழகுமிகப் பெற்றிருக்கின்றன. இக்கால முடிவிற்குள் ளாகவே மன்னவன் போர்த்தொழில் பிணிப்பிலிருந்து விடுபடுக. ஒளி பொருந்திய நெற்றியைக் கொண்ட தலைவியே! நாமும் கூடியிருந்து பெருமை மிகுந்த நலன்களைக் காண்போம்” என்று காதலியிடம் சொல்வதுபோலத் தன் நெஞ்சத்தினிடம் சொல்லிக்கொள்கிறான்.

கருத்து

அரசன் போர்த்தொழிலை விரைவில் முடித்தால், நெஞ்சே! நாமும் தலைவியுடன் கூடியிருந்து பெருமை மிகுந்த இன்பம் காண்போம்.

சொற்பொருள்

1. பிணிவீடு பெறுக - போர்த்தொழிலில் கட்டுண்டு இருக்கும் வேந்தன் உள்ளம் அதிலிருந்து விடுதலை பெறுக.
2. பனி வளர் - பனிக்காலத்துச் செழித்து வளர்கின்ற; தளவு - செம்முல்லை; சிரல் - மீன்கொத்தி; வாய் - வாய் போன்ற; செம்முகை - சிவந்த மொட்டு.
3. ஆடு சிறை - அசைகின்ற சிறகுகள்; அவிழ்ப்ப - கட்டவிழ்த்து மலருமாறு செய்ய.
4. பாடுசான்ற - பெருமை மிகுந்த; காண்கம் - நலன்களைக் காண்போம்!

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 449 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

பாசறைக்கண் வேந்தனொடு வினைப்பொருட்டாற் போந்திருந்த தலைமகன், அவ்வேந்தன் மாற்றுவேந்தர் தருதிறை கொண்டு மீள்வானாகப் பொருந்துழித் தானும் மீட்சிக்குத் தேர்சமைத்த எல்லைக்கண்ணே, அவ்வரசன் பொருத்தம் தவிர்ந்து, மீண்டும் வினை மேற்கொண்டானாகத் தலைவன் சொல்லியது.

கூற்று விளக்கம்

வேந்தனுக்கு உதவியாகச் சென்ற தலைவன் பாசறையில் இருந்தான். தன் வேந்தன் முதலில் பகைவேந்தர் தருகின்ற கப்பப் பணத்தைப் பெற்றுக் கொண்டு ஊர் திரும்ப முடிவு செய்திருந்தான். ஆனால், பின்னர்த் தன் முடிவை மாற்றிக் கொண்டு போர் செய்ய முடிவெடுத்தான். அவ்வாறு அரசன் செய்யாதிருந்தால், தான் தன் காதலியைச் சென்று காணலாம் என்று தலைவன் சொல்லியது.

முரம்புகண் உடையத் திரியும் திகிரியொடு
பணைநிலை முனைஇய வயமாப் புணர்ந்து
திண்ணிதின் மாண்டன்று தேரே,
ஒள்நுதல் காண்குவம் வேந்துவினை விடினே.

தெளிவுரை

"*பரற்கற்கள் கொண்ட நிறைந்த மேட்டுநிலம் தகரும்படி செல்லும் உருளைகளைக் கொண்ட தேர், கட்டுத்தறியில் நிற்பதை வெறுக்கும் குதிரைகள் பூட்டப்பெற்றுப் புறப்படுவதற்கு ஆயத்தமாய் உள்ளது. இப்பொழுது வேந்தன் தான் மேற் கொண்டுள்ள போரினை விட்டுவிடுவான் என்றால் ஒளி பொருந்திய நெற்றியைக் கொண்ட தலைவியை உடனே சென்று காணலாம்.*"

கருத்து

தேர் தயாராகப் பூட்டப்பட்டு நிற்கிறது; வேந்தன் போரை மேற்கொள்ளா விட்டால் உடனே சென்று காதலியைக் காணலாம்.

சொற்பொருள்

1. முரம்பு - பரற்கற்கள்; கண் - இடம்; உடைய - உடையுமாறு; திரியும் - சுழலும்; திகிரி - உருளை, சக்கரம்.
2. பணை நிலை - பந்தியாய்க் கட்டுத்தறியில் நிற்றலை; முனைஇய - வெறுத்த; வயமா - வலிமையான குதிரை; புணர்ந்து - பூட்டப்பட்டு.
3. மாண்டன்று - மாட்சிமை பொருந்தியது.
4. ஒள்நுதல் - ஒளி வீசும் நெற்றியைக் கொண்ட தலைவி; வேந்து - அரசன்; வினைவிடின் - போரை நிறுத்துவானாயின்.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 450 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

வேந்தற்கு உற்றுழிப் பிரிந்த தலைமகன் வினைமுற்றாமையிற் பாசறைக் கண் இருந்து தன் மனக்கருத்து உரைத்தது.

கூற்று விளக்கம்

வேந்தனுக்கு உதவியாய்ப் போர்க் கடமையாற்றுவதற்காகத் தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன், கருதி வந்த செயல் முடியாதபோது, பாசறையிலிருந்து தன் மனக்கருத்தை உரைத்தது.

முரசுமாறி இரட்டும் அருந்தொழில் பகைதணிந்து
நாடுமுன் னியரோ பீடுகெழு வேந்தன்
வெய்ய உயிர்க்கும்நோய் தணியச்
செய்யோள் இளமுலைப் படீஇயர்,என் கண்ணே.

தெளிவுரை

முரசுகள் மாறுபட்டு முழங்குதற்கு இடனான போர்த் தொழிற்குக் காரணமாகிய பகை தணிந்து பெருமைமிக்க வேந்தன் தன் நாடு திரும்பட்டும். என் காதலியைப் பிரிந்ததனால் பெருமூச்சு விட்டு வருந்தும் என் காமநோய் கெட்டொழியுமாறு, செவ்விய பண்புகளைக் கொண்ட என் காதலியின் இளங் கொங்கைகட்கிடையே கிடந்து என் கண்கள் இனிதே தூங்கட்டும்.

கருத்து

வேந்தன் நாடு திரும்பட்டும்; என் கண்கள், தலைவியின் கொங்கை யிடைக் கிடந்து தூங்கட்டும்.

சொற்பொருள்

1. முரசு மாறி இரட்டும் - முரசுகள் மாறி மாறி ஒலிக்கின்ற; அருந் தொழில் - போர்த்தொழில்; பகை தணிந்து - பகைக்குக் காரணமான சினம் தணிந்து.
2. முன்னியரோ - நினைக்கட்டும்; பீடுகெழு - பெருமை பொருந்திய.
3. வெய்ய உயிர்க்கும் நோய் - வெம்மையான பெருமூச்சை ஏற்படுத்தும் நோய், காமம்.
4. செய்யோள் - செவ்விய பண்புகளைக் கொண்ட தலைவி; முலைப் படீஇயர் - கொங்கைகளிடையே கிடந்து தூங்கட்டும்.

தலைவன் கூற்று

திருக்குறள் 1268 **திருவள்ளுவர்**

திணை : நெய்தல்

கூற்று

வேந்தற்கு உற்றுழிப் பிரிந்த தலைமகன், வினைமுடிவு நீட்டித்துழித் தலைமகளை நினைந்து தன்னுள்ளே சொல்லியது. (நீட்டித்துழி - நீட்டித்த விடத்து.)

கூற்று விளக்கம்

தலைவன் அரசனுக்குத் துணையாய்ப் போர்க்களம் சென்றவன் போர் முடியாது காலம் நீட்டித்த நிலையில், தலைவியை நினைந்து, தன்னுள் கூறியது.

வினைகலந்து வென்றீக வேந்தன்; மனைகலந்து
மாலை அயர்கம் விருந்து.

தெளிவுரை

நம் வேந்தன் முனைந்து போர் புரிந்து வென்றானானால், நானும் ஊர் சென்று தலைவியொடு கூடி மாலைப் பொழுதினை மகிழ்வொடு கழிப்பேன்.

கருத்து

நெஞ்சே! வேந்தன் விரைவில் வெற்றி பெறட்டும்; நாமும் ஊர் திரும்பித் தலைவியைக் கூடி மகிழலாம்.

விளக்கம்

போர் முடியாது தலைவன் வீடு திரும்ப முடியாதாதலால், அரசன் விரைவில் வெல்லட்டும் என்கிறான். தலைவன் தலைவி சேர்ந்திருக்கும்போது மாலை நேரமே அவர்கட்கு மிக்க மகிழ்ச்சி தரும் பொழுதாதலின், மாலைப் பொழுதை மகிழ்வுடன் கழிப்பேன் என்கிறான்.

குறிப்பு

காதலர்க்கு மாலைப் பொழுது மற்றப் பொழுதுகளிலும் மகிழ்ச்சி மிக்கது.

சொற்பொருள்

1. வேந்தன் - அரசன்; வினைகலந்து - போர் புரிந்து; வென்றீக - வெற்றி கொள்ளட்டும்.
2. மனைகலந்து - (நாமும்) தலைவியோடு கூடி; மாலை - மாலைப் பொழுதில்; விருந்து அயர்கம் - விருந்து உண்போம்! (மகிழ்ச்சியில் திளைப்போம்).

தலைவன் கூற்று

திருக்குறள் 1269 **திருவள்ளுவர்**

திணை : நெய்தல்

கூற்று

வேந்தற்கு உற்றுழிப் பிரிந்த தலைமகன், வினைமுடிவு நீட்டித்துழித் தலைமகளை நினைந்து தன்னுள்ளே சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் அரசனுக்குத் துணையாய்ப் போர்க்களம் சென்றவன் போர் முடியாது காலம் நீட்டித்த நிலையில், தலைவியை நினைந்து, தன்னுள் கூறியது.

ஒருநாள் எழுநாள்போல் செல்லும்;சேண் சென்றார்
வருநாள்,வைத்(து) ஏங்கு பவர்க்கு.

தெளிவுரை

பிரிந்து, நெடுந்தொலைவு சென்ற காதலர் திரும்பிவரும் நாளை எதிர்பார்த்து ஏங்குபவர்க்கு, ஒருநாள் பொழுது ஏழுநாள் பொழுது போல மிக நீண்டு தோன்றும்.

கருத்து

பிரிந்திருப்போரின் வரவை எதிர்பார்த்திருப்பவர்க்கு, ஒருநாள் பொழுது ஏழுநாள் பொழுதுபோல நீண்டு தோன்றும்.

விளக்கம்

அரசனுக்குத் துணையாய்ப் போர்க்களம் சென்ற தலைவன், தன் தலைவியிடம் தான் திரும்பச் செல்லும்வரை ஒவ்வொரு

நாளும் அவளுக்கு ஏழுநாள்போல நீண்டு தோன்றுமே என வருந்தி, அவளைச் சென்றடைய, போர் உடனே முடிய வேண்டுமெனக் கருதுகிறான்.

குறிப்பு

காலம் எப்போதும் ஒரே அளவுதான். ஆனால் அது கூடியிருக்கும் காதலர்க்கு விரைந்து ஓடிவிடுவதாயும், பிரிந்திருப்போர்க்கு நீண்டு வளர்வதாயும் தோன்றும்.

சொற்பொருள்

1. சேண் சென்றார் - நெடுந்தொலைவு சென்ற காதலர்; ஒருநாள் - ஒருநாள் செல்லுதல்; எழுநாள்போல் கழியும் - ஏழுநாள்
2. வருநாள் - வரும் நாளை; வைத்து ஏங்குபவர்க்கு - (மனத்து) வைத்து ஏங்கியிருப்பவர்களுக்கு நீண்டு தோன்றும்.

தலைவன் கூற்று

திருக்குறள் 1270 **திருவள்ளுவர்**

திணை : நெய்தல்

கூற்று

வேந்தற்கு உற்றுழிப் பிரிந்த தலைமகன், வினைமுடிவு நீட்டித்துழித் தலைமகளை நினைந்து தன்னுள்ளே சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் அரசனுக்குத் துணையாய்ப் போர்க்களம் சென்றவன் போர் முடியாது காலம் நீட்டித்த நிலையில், தலைவியை நினைந்து, தன்னுள் கூறியது.

பெறின்என் ஆம், பெற்றக்கால் என் ஆம், உறின்என் ஆம்
உள்ளம் உடைந்(து)உக்கக் கால்?

தெளிவுரை

நம் தலைவி மனமுடைந்து மெலிந்த பின் அவளைச் சேர்வதாலோ, சேர்ந்து வாழ்தலாலோ, மெய்யுறத் தழுவுவதாலோ பயனில்லை.

கருத்து

என்னைப் பிரிந்திருக்கும் தலைவி தாளாத் துயரால் மனம் உடைந்து உடல் நலிந்து மெலிவுற்ற பின், அவளுடன் சேர்வதால் என்ன பயன்?

விளக்கம்

தலைவி மனம் உடைந்து விட்டால் அதன்பின் அவளைச் சென்று கூடுவதால் பயன் ஒன்றும் இருக்கப் போவதில்லை. ஆதலால் விரைவில் சென்று கூடவேண்டும் என்று தலைவன் கருதுகிறான்.

குறிப்பு

இளமை கழிந்தபின் உடலின்பம் ஏது?

சொற்பொருள்

1. பெறின் என்ஆம் - நெருங்கினால்தான் என்ன பயன்?; உறின் என் ஆம் - (அவளை நாம்) மெய்யுறத் தழுவுவதால் என்ன பயன்? (ஒன்றுமில்லை.)
   (இவற்றாலெல்லாம் பயனடைய வேண்டுமெனின், அவள் மனமுடைந்து நலியுமுன் நாம் சென்று அவளைச் சேர வேண்டும்.)
2. உள்ளம் உடைந்து உக்கக்கால் - (தலைவி) மனம் உடைந்து உடல் நலிந்து மெலிவுற்ற பின்.

தலைவன் கூற்று

அகநானூறு 164 **மதுரைத் தமிழ்க்கூத்தன் நாகன் தேவனார்**

திணை : முல்லை

கூற்று

பாசறைக்கண் இருந்த தலைமகன், தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியை நீங்கி அரசனுக்கு உதவியாகப் போர்முனைக்குச் சென்றான். போர் முடிந்தது; ஆயினும், அரசன் நாடு திரும்பிலன். அந் நிலையில் கார்ப்பருவம் தொடங்கியது கண்டு பாசறையிலிருந்த தலைவன் தலைவியை நினைந்து தன் நெஞ்சை நோக்கிக் கூறியது.

கதிர்கை யாக வாங்கி, ஞாயிறு
பைதுஅறத் தெறுதலின், பயம்கரந்து மாறி,
விடுவாய்ப் பட்ட வியன்கண் மாநிலம்
காடுகவின் எதிரக் கனைபெயல் பொழிதலின்,
பொறிவரி இனவண்டு ஆர்ப்ப, பலஉடன்
நறுவீ முல்லையொடு தோன்றி தோன்ற,
வெறிஏன் றன்றே வீகமழ் கானம்.
'எவன்கொல் மற்றுஅவர் நிலை?'என மயங்கி,
இகுபனி உறைக்கும் கண்ணொடு இனைபு,ஆங்கு
இன்னாது உறைவி தொல்நலம் பெறூஉம்
இதுநற் காலம், கண்டிசின்– பகைவர்
மதில்முகம் முருக்கிய தொடிசிதை மருப்பின்,
கந்துகால் ஒசிக்கும் யானை,
வெஞ்சின வேந்தன் வினைவிடப் பெறினே.

தெளிவுரை

"*கதிரவன் தன் கதிர்களையே கையாகக்கொண்டு அகன்ற நிலப்பரப்பின் ஈரத்தினைக் கவர்ந்து பசுமையைக் காய்தலின், தண்ணீரில்லாத நிலை ஏற்பட்டுத் தரையெங்கும் பிளவுபட்டுப் பசுமையற்ற காடு தன் பழைய நிலையினை எய்துமாறு மிகுதியான மழையை மேகங்கள் பொழிந்தன. அதனால் மணமிகு முல்லையும், காந்தளும் ஏனைய மலர்களும் மலர்ந்தன.*

காடெங்கும் நறுமணம் கமழ்ந்தது. வண்டுக்கூட்டம் மலர்களில் தேனைப் பருகி இன்னிசை பாடுகிறது. நம் இல்லத்தலைவி, 'தலைவர் நிலை என்னாயிற்றோ' என்னும் கவலையாய் மனம் குழம்பிப் பிரிவுத் துன்பம் வாட்டக் கண்ணீர் சிந்தி வருந்தி யிருப்பாள்.

நம் வேந்தனுடைய போர் யானை பகைவர் கோட்டைக் கதவை, பூண் மாட்டப் பெற்ற தனது தந்தத்தால் குத்திப் பிளந்தது; தான் கட்டப்பட்டிருத்தலை விரும்பாததுபோல் கட்டுத்தறியையும் முறித்தது. இத்தகைய யானைகளால் பகைவரை வேந்தன் வென்று விட்டனன்; போரை முடிப்பானே யானால், நான் உடனே மீள்வேன்; தலைவி தன் பழைய அழகை மீண்டும் பெறும் நற்காலம் இதுவே.

கருத்து

சினத்தோடுள்ள மன்னன் போரினை முடிப்பானானால் நான் உடனே மீள்வேன்.

விளக்கம்

"நெஞ்சே! வறண்ட காடு கவின்பெற மழை மிகப்பெய்தலால் வண்டுகள் ஒலிக்க, முல்லையோடு காந்தளும் பிற மலர்களும் மலர்ந்து காடெங்கும் மணத்தை வீசுகின்றன. வெஞ்சின வேந்தன் போர்த் தொழில் விடுவானாயின், 'என் தலைவர் நிலை என்னா யிற்றோ' என மயங்கி, கண்ணீர்த்துளி சிந்தி இல்லத்தே உறையும் என் காதலி இழந்த தன் நலத்தைப் பெறுவதற்கு இதுவே நல்ல காலம்."

சொற்பொருள்

1. கதிர் - கதிரவன்; வாங்கி - கவர்ந்து.
2. பைது அற - பசுமை நீங்க; தெறுதலின் - காய்தலின்; பயம் கரந்து மாறி - நீர் இல்லையாகி அழிய. (பயம் - பயன் - நீர்).
3. விடுவாய்ப் பட்ட - பிளத்தல் பொருந்திய.
4. கவின் எதிர - (பண்டைய) அழகு பெற; கனைபெயல் - மிக்க மழை.
5. இனவண்டு - வண்டுக்கூட்டம்; ஆர்ப்ப - ஆரவாரிக்க.
6. தோன்றி - காந்தள் பூ.
7. வெறிஎன்றன்று - மலர் நாற்றம் பொருந்தியது; வீ - மகிழ்.
8. எவன்கொல் மற்றுஅவர் நிலை - தலைவர் நிலை என்ன ஆயிற்றோ?

9. இருபனி - விழும் நீர்; உகுக்கும் - சிந்தும்; இனைபு - வருந்தி.
10. உறைவி - வாழ்ந்துகொண்டிருப்பவள்; தொல்நலம் - பழைய அழகு.
12. மதில்முகம் - கோட்டைக்கதவு; முருக்கிய - சிதைத்த; தொடி - பூண்; மருப்பு - கொம்பு.
13. கந்துகால் - கட்டுத்தறி; ஒசிக்கும் - முரிக்கும்.
14. வினைவிடப் பெறின் - போரினை முடிப்பானேயானால்.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 445 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

பாசறைக்கண் இருந்த தலைமகன் பருவ வரவின்கண் தலைமகளை நினைந்து நெஞ்சொடு புலந்து சொல்லியது.

கூற்று விளக்கம்

பாசறையில் தங்கியிருந்த தலைவன், கார்ப்பருவம் தொடங்கியபோது தலைவியை நினைத்துத் தன் நெஞ்சுக்குள் வருந்திச் சொல்லியது.

புகழ்சால் சிறப்பின் காதலி புலம்பத்
துறந்துவந் தனையே அருந்தொழில் கட்டூர்
நல்ஏறு தழீஇ நாகுபெயர் காலை
உள்ளுதொறும் கலிழும் நெஞ்சம்
வல்லே எம்மையும் வரவுஇழைத் தனையே.

தெளிவுரை

“அரிதான காவல் ஏற்பாடுகளைக் கொண்டுள்ள பாசறையில் இருந்துகொண்டு, பசுக்கள் நல்ல ஏறுகளைத் தழுவியபடியே செல்லும் மாலைப்போதினை நினைக்குந்தோறும் கலங்குகின்ற என் நெஞ்சமே! புகழ் மிகுந்த சிறப்பினைக் கொண்ட என் காதலியைத் தனியேயிருந்து வருந்துமாறு விட்டுவிட்டு என்னை இங்கே வரச் செய்தது நீதானே! (இப்போது நீ இவ்வாறு வருந்துவானேன்?)”

கருத்து

நெஞ்சமே! முன்பு இங்கே என்னை வரச்செய்த நீயே இப்போது வருந்துவது ஏன்?

குறிப்பு

மாலைக்காலத்தில் ஏறுகளும் பசுக்களும் கார் காலத் தூண்டலால் தம்முள்ளே தழுவி இன்புற்றுச் செல்லும் காட்சியைக் கண்டு, தான் தன் தலைவியோடு ஒன்றுசேர்ந்து இல்லையே என எண்ணித் தலைவன் வருந்துகின்றான்.

சொற்பொருள்

1. புகழ்சால் சிறப்பு - புகழ்மிக்க சிறப்பினைக் கொண்ட.
2. துறந்து வந்தனையே என்பது நெஞ்சத்தினிடம் கூறியது; கட்டூர் - பாசறை.
3. ஏறு - காளை; நாகு - பசு; பெயர் காலை - செல்லும்போது.
4. உள்ளுதொறும் - நினைக்குந்தோறும்; கலிழும் - கலங்கும்.
5. வல்லே - விரைவாய்; இழைத்தனை - செய்தாய்!

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 448 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

வேந்தற்கு உற்றுழிப் பிரிந்த தலைமகன் பருவம் வந்தவிடத்தினும் மீளப் பெறாது, அரசன் செய்தியும், பருவத்தின் செய்தியும், தன்செய்தியும் கூறி ஆற்றானாயது.

கூற்று விளக்கம்

தலைவன், வேந்தனுக்குப் போர்த்துணைவனாய்ப் பிரிந்தபோது தலைவியிடம் கார்ப் பருவத்தில் மீள்வதாய் உறுதி கூறியிருந்தான். கார் காலம் தொடங்கிய பின்னும் கடமை முடியாத நிலையில், தன் அரசன் நிலை, கார்ப்பருவ நிலை, தன் நிலை ஆகியவற்றைச் சொல்லித் தலைவன் ஆற்றாது வருந்தியது.

தழங்குகுரல் முரசம் காலை இயம்பக்
கடுஞ்சின வேந்தன் தொழில்எதிர்ந் தனனே;
மெல்அவல் மருங்கின் முல்லை பூப்பப்
பொங்குபெயல் கனைதுளி கார்எதிர்ந் தன்றே;
அஞ்சில் ஓதியை உள்ளுதொறும்
துஞ்சாது அலமரல் நாம்எதிர்ந் தனமே!

தெளிவுரை

"முழங்கும் குரலைக் கொண்ட முரசங்கள் நாள்காலைப் பொழுதிலேயே ஒலித்தன; சினம் மிக்க நம் வேந்தன் போர்க் கடமையை மேற்கொண்டான்; மெல்லிய பள்ளங்களின் அருகிலே முல்லைப் பூக்கள் பூத்தன; கார்ப்பருவ ஆரவாரத் தினைக் கொண்ட மேகம் மேலெழுந்து துளிகளைக் கொண்ட கடுமழையினைப் பொழியத் தொடங்கியது. இந்நிலையில், அழகிய நுண்ணிய கூந்தலைக் கொண்ட என் தலைவியை நினைக்கும்பொழுதெல்லாம் கண் துஞ்சாது அவளை எண்ணி எண்ணி என் மனம் சுழல்கின்றது."

கருத்து

வேந்தன் போரைத் தொடங்கினான்; முல்லை பூக்கும்படியாகக் கார்ப் பருவம் தோன்றிவிட்டது; காதலியை நினைந்து தூங்காது மயங்குகின்றேன்.

குறிப்பு

கார்ப்பருவம் தொடங்கியும் அரசன் போரை நிறுத்த விரும்பாது முரசுகளை முழக்கிப் பாசறையில் தங்கியுள்ளான்; அதனால் தலைவனால் தான் கூறி வந்தவாறு கார்ப்பருவத்தில் திரும்ப இயலாததாகிவிட்டது; எனவே, தலைவன் தன் காதலியை நினைத்து நினைத்து வருந்தி மயங்கினான்.

சொற்பொருள்

1. தழங்கு குரல் - முழங்குகின்ற ஓசை; இயம்ப - முழங்க.
2. தொழில் எதிர்ந்தனன் - போர்க்கடமையை மேற்கொண்டான்.
3. மெல் அவல் - மென்மையான பள்ளம்; மருங்கில் - அருகில்.
4. பொங்கு பெயல் - மேல் எழுந்த மேகம்; கனைதுளி - பெய்த மழைத் துளி; கார் எதிர்ந்தன்று - கார்ப்பருவத்தைத் தோற்றுவித்தது.

5. அம்சில் ஓதி - அழகிய நுண்ணிய கூந்தலைக் கொண்ட தலைவி; உள்ளு தொறும் - நினைக்குந்தோறும்.
6. துஞ்சாது - தூங்காது; அலமரல் - மனச்சுழற்சி; நாம் எதிர்ந்தனம் - நாம் மேற்கொண்டோம்.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 446 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

பாசறைக்கண் இருந்த தலைமகன் பருவ வரவின்கண் உருவு வெளிப்பாடு கண்டு சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பாசறையிடத்தே இருக்கிறான். தலைவியின் நினைவாகவே இருந்த அவன் முன்னே, அவள் சோகத்துடன் வருந்தி வாடி நிற்பது போன்றதோர் உருவம் தோன்றி அவன் நெஞ்சை மயக்குகின்றது. அந்த உருவத் தோற்றத்தைக் கண்டு அவன் சொல்லியது.

முல்லை நாறுங் கூந்தல் கமழ்கொள
நல்ல காண்குவம் மாஅ யோளே
பாசறை அருந்தொழில் உதவி,நம்
காதல்நன் னாட்டுப் போதரும் பொழுதே.

தெளிவுரை

"மாயத்தோற்றம் காட்டிக்காட்டி என்னை மிகவும் வருத்தும் தலைவியே! பாசறையில் தங்கி இருந்து போர்த்தொழிலில் நம் வேந்தனுக்கு நம்மால் இயன்ற உதவியினைச் செய்துகொண்டிருக் கிறேன். வினை முடிந்து நம் காதலுக்குரிய நல்ல நாட்டிற்குத் திரும்பும் பொழுதில், முல்லை மணம் நாறுகின்ற உன் கூந்தல், மேலும் புதுமணம் கொள்ளும்படியாக நல்ல இன்பங்கள் பலவற்றையும் நுகர்வோம்! (வருந்த வேண்டா) என்று தன் முன்னே மெய்போலத் தோன்றிய பொய்த்தோற்றத்திடம் கூறுகின்றான்."

கருத்து

மாமை நிறத்தவளே! நம் நாடு திரும்பும்போது நல்லன காண்போம்.

குறிப்பு

தலைவன் தன் காதலியை இடைவிடாது நினைந்திருந்தமையால், அவன் கண்களுக்கு எதிரே தலைவியே வந்து நிற்பது போன்ற உருவத்தைக் கண்டான். இஃது உருவெளித் தோற்றம் எனப்படும். எதுவுமே இல்லாத வெட்ட வெளியில் தான் விரும்பியவரின் உருவம் தோன்றுதல், 'உருவெளித் தோற்றம்' ஆகும்.

சொற்பொருள்

1. முல்லை நாறும் - முல்லை மலரின் மணம் பரப்பும்; கமழ்கொள - மணக்க.
2. மாஅயோளே - மாமை நிறத்தைக்கொண்டவளே!
3. அருந்தொழில் - போர்த்தொழில்; உதவி - அரசனுக்கு உதவி.
4. போதரும் - திரும்பும்; பொழுது - காலம்.

தலைவன் கூற்று

அகநானூறு 24 **ஆவூர் மூலங்கிழார்**

திணை : முல்லை

கூற்று

தலைமகன் பருவங்கண்டு சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியைப் பிரிந்து வினைவயிற் சென்ற தலைவன் வேற்று நாட்டில் வேந்தன் பாசறையில் இருந்தவன், தான் திரும்பி வருவதாய்க் கூறிச் சென்ற பருவத் தொடக்கத்தினைக் கண்டு தலைவியை நினைத்துக் கூறியது.

வேளாப் பார்ப்பான் வாளரந் துமித்த
வளைகளைந்து ஒழிந்த கொழுந்தின் அன்ன,
தளைபிணி அவிழா, சுரிமுகப் பகன்றை,
சிதரல்அம் துவலை தூவலின், மலரும்

தைஇ நின்ற தண்பெயல் கடைநாள்,
வயங்குகதிர் கரந்த வாடை வைகறை,
விசும்புஉரி வதுபோல், வியல்இடத்து ஒழுகி,
மங்குல் மாமழை, தென்புலம் படரும்
பனிஇருங் கங்குலும் தமியள் நீந்தி,
தம்ஊ ரோளே, நன்னுதல்! யாமே,
கடிமதில் கதவம் பாய்தலின், தொடிபிளந்து,
நுதிமுகம் மழுங்கிய மண்ணை வெண்கோட்டு,
சிறுகண் யானை நெடுநா ஒண்மணி,
கழிப்பிணிக் கறைத்தோல் பொழிகணை உதைப்ப,
தழங்குகுரல் முரசமொடு முழங்கும் யாமத்து,
கழித்துஉறை செறியா வாளுடை எறுழ்த்தோள்,
இரவுத்துயில் மடிந்த தானை,
உரவுச்சின வேந்தன் பாசறை யேமே.

தெளிவுரை

நெஞ்சே! வேள்வித் தொழிலை விடுத்த பார்ப்பான் ஒருவன் வெண்மையான சங்கின் அகன்ற வாய்ப்புறத்திலிருந்து வளையல்களை அறுத்தெடுத்தபின் எஞ்சியிருக்கும் சங்கின் நுனிப் பகுதியைப் போலப் பகன்றை மலர்களின் அரும்புகள் திகழ்ந்தன. அவ்வரும்புகள் கட்டுடன் பிணிப்பு அவிழாது, வலப்பக்கம் சுரிந்துள்ளன. அவை தைத்திங்களில் வைகறையில் சிதறுகின்ற மழைத் துளிகள் தூவுதலால் மலர்வன.

வாடையுடன் கூடிய வைகறைப்பொழுதில், இருண்ட பெரிய மேகங்கள், வானம் தோல் உரிவதுபோல அகன்ற வானத்தே இயங்கித் தென்திசையில் போய்ச் சேருகின்றன. பனியுடன் கூடிய கரிய இருளாகிய வெள்ளத்தை நீந்தியவண்ணம் அழகிய நெற்றியைக் கொண்ட நம் தலைவி தன்னந்தனியளாய் நமது ஊரிடத்தே உள்ளாள்.

நாமோ வலிய சினம் கொண்ட வேந்தனது பாசறையில் உள்ளோம். இங்கே எதிரிகளினுடைய காவல் கொண்ட மதிலைக் குத்துதலால் பிளக்கப்பட்ட பூணையும், முனையின் கூர்மை மழுங்கிய தந்தங்களையும் கொண்ட யானைகள்

உள்ளன; சிறிய கண்களையும் கொண்ட அந்த யானைகளின்மீது தொங்குகின்ற மணிகள் ஒலிக்கின்றன.

கரிய தோல்கேடகத்தில் தைக்கின்ற அம்புகள் எழுப்பும் ஓசை நள்ளிரவில் முரசு முழங்கும் ஒலியுடன் சேர்ந்தொலிக்கும். அவ்விரவில், உறையினின்றும் உருவப்பட்டு மீண்டும் உறைக்குள் இடப்படாத வாளினையும், வலிய தோளினையும், இரவில் தூங்காது காவல் செய்யும் சேனையினையும், மிக்க சினத்தினையும் கொண்ட வேந்தனது பாசறையில் உள்ளோம். (தலைவி எவ்வாறு ஆற்றியிருக்கின்றாளோ? அறியோம்!)

கருத்து

நாம் பாசறையில் உள்ளோம்; தலைவியோ, தன்னந்தனியளாய் ஊரில் உள்ளாள். (விரைவில் அவளைச் சென்றடைய வேண்டும்.)

விளக்கம்

போர்வினைமேற்சென்ற தலைவன் போர்ச்செயல் முடிவுற்ற பின்னர்த் தலைவியை நினைந்து தன் நெஞ்சத்தினிடம் கூறுகிறான்:

"நெஞ்சே! இது மழை பெய்யாது ஒழிந்த தை மாதத்து இறுதி நாளின் வைகறைக் காலம். இக்காலத்தே விசும்பு உரிவதுபோல மழை மேகங்கள் வானில் தென்திசை நோக்கி விரைந்து செல்லுகின்றன. இப்பனிக் காலத்துக் கரிய இரவில் தலைவி ஊரிலே தனித்திருக்கிறாள். நாமோ, யானைமீது கட்டப்பட்ட மணியினது ஓசையும், முரசொலியும் கேட்கும் நடு இரவில், உருவிய வாளுடன் காவல் காக்கும் காவலர் பலரைக் கொண்டுள்ள வேந்தனின் பாசறையில் உள்ளோம்.

குறிப்பு

பகன்றை மலர் : *இதன் அரும்பு சங்கின் நுனிபோல இருக்கும். இதன் முனை சுரிந்திருக்கும். இது பனிக்காலப் பூ; வைகறையில் மலரும்; அம்மலர்ச்சியும் மழைச் சிறுதூறலால் தோன்றும்.*

சொற்பொருள்

1. வேளா - யாகம் பண்ணாத; துமித்த - அறுத்தெடுத்த.

2. வளை - வளையல்கள்; களைந்து - அறுத்து; ஒழிந்த - எஞ்சிய; கொழுந்து - நுனி.
3. தளை - கட்டு; அவிழா - விரியாத; சுரிமுகம் - சுரிந்த நுனி; பகன்றை - ஒரு வகைக் கொடிமலர்.
4. சிதரல் - சிதறுகின்ற; துவலை - மழைத் துளிகள்; தூவல் - வீசுதல்.
5. தைஇ - தைத்திங்கள்.
6. கரந்த - மறைந்திருக்கும்; வாடை - வாடைக்காற்று.
7. விசும்பு - ஆகாயம்; வியல்இடம் - அகன்ற இடம்; ஒழுகி - இயங்கி.
8. மங்குல் - இருண்ட; மாமழை - பெரிய மேகம்; தென்புலம் - தெற்குப் பக்கம்.
9. கங்குல் - இருள் (ஆகிய வெள்ளம்); தமியள் - தனியள்.
11. பாய்தலின் - குத்துதலின்; தொடி - பூண்.
12. நுதி - முனை; மண்ணை மழுங்கிய - கூர்மை மழுங்கிய.
14. கழிப்பிணி - கழிகளுடன் பிணிக்கப்பட்ட; கறைத்தோல் - கரிய தோலால் ஆகிய கேடகம்; கணை - அம்பு; உதைப்ப - தைத்தலால்.
15. தழங்குகுரல் - முழங்கும் ஓசை.
16. கழித்து - (உறையினின்றும்) உருவி; செறியா - மீண்டும் உள்ளிடாத; எறுழ் - வலிமை.
17. இரவுத்துயில் மடிந்த - (காவல் செய்வதால்) இரவுத்தூக்கம் நீங்கிய; தானை - சேனை, படை.
18. உரவு - மிக்க; பாசறையேம் - பாசறையில்.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 441 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

சென்றவினை முடியாமையின் கார்காலம் வந்தவிடத்து மீளப்பெறாத தலைமகன், தலைமகளுழை நின்றும் வந்த தூதர் வார்த்தை கேட்டு இரங்கியது.

கூற்று விளக்கம்

தலைவன் வரக் காணாதாளான தலைவியோ பெரிதும் மனங்கலங்கிய வளாய், தலைவன் நிலையறிந்தும் தன் துயர் சொல்லியும் வருமாறு தூதனை அனுப்புகிறாள். தூதன் வந்து சொல்லக் கேட்ட தலைவன், தலைவியின்

துயரத்தை அறிந்து இரங்கினான். தன் நிலையை மாற்ற இயலாதிருப் பதையும் உணர்ந்தான். அதனைத் தலைவியிடம் சென்று சொல்லுமாறு தூதுவனிடம் சொல்லியது.

ஐய ஆயின செய்யோள் கிளவி
கார்நாள் உருமொடு கையறப் பிரிந்தென
நோய்நன்கு செய்தன எமக்கே;
யாம்உறு துயரம்அவள் அறியினோ நன்றே.

தெளிவுரை

"கார் காலத்தில் இடி இடித்து மழை பெய்யும் போதிலே செயலற்றுத் தனிமையளாய் இருக்குமாறு நான் அவளை விட்டுப் பிரிந்தேன். அப்பிரிவுத்துயரம் மேலெழச் செம்மைப் பண்புள்ளவளான என் தலைவி என்னிடம் சொல்லிவிட்டு வருமாறு உன்னிடம் கூறிய சொற்களும் மிக அழகியனவாய் உள்ளன; ஆயின், அச்சொற்கள் தனித்துறையும் எனக்குத் துன்பத்தையே மிகுதியாய் அளித்தன. இத்துயர மிகுதியை அவளும் அறிந்தாளாயின் நன்று. இதனை நீ சென்று அவளிடம் சொல்!"

கருத்து

தலைவியை நினைந்து தலைவன் கொள்ளும் வருத்தம், தூதனின் வரவாலும் பேச்சாலும் மிகுதியாகி அவனை வாட்டுகின்றது.

சொற்பொருள்

1. ஐய ஆயின - மென்மையும் அழகும் வாய்ந்த; செய்யோள் - செம்மை யான தலைவி; கிளவி - சொற்கள்.
2. உரும் - இடி; கையற - செயலற; பிரிந்தென - பிரிய.
3. நோய் - பிரிவினாலாகும் துயரம்.
4. அறியினோ - அறிந்தால்.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 478 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

பிரிந்துறையும் தலைமகன், தலைமகள் விட்ட தூதாய்ச் சென்ற பாணனை 'அவள் சொல்லிய திறம் கூறு' எனக் கேட்டது.

கூற்று விளக்கம்

தலைவியைப் பிரிந்து சென்று போர்ப்பாசறையில் தங்கியிருக்கும் தலைவனிடம் தலைவி அனுப்பிய பாணன் தூதாய் வந்தான். அவனிடம் தலைவன், "தலைவி என்ன சொன்னாள், கூறு" எனக் கேட்டது.

நீடினம் என்று கொடுமை தூற்றி
வாடிய நுதலள் ஆகிப் பிறிதுநினைந்து
யாம்வெம் காதலி நோய்மிகச் சாஅய்ச்
சொல்லியது உரைமதி நீயே
முல்லை நல்யாழ்ப் பாணமற்று எமக்கே.

தெளிவுரை

"முல்லைத்திணைக்கு உரிய நல்ல யாழை ஏந்திய பாணனே! தலைவி நான் விரும்பும் காதலி. அவள், 'நான் திரும்பக் காலம் தாழ்த்தினேன், கொடியவன்' என்று பலரும் அறியத் தூற்றி யிருப்பாள். அவள் நெற்றி வாட்டமுற்றிருக்கும். பிரிவு என்மீது வெறுப்பினை ஏற்படுத்தியிருக்கும். உள்ளத்துயரம் மிகுந்து உடலும் மெலிவுற்றிருக்கும். அந்த நிலையில் மேலும் அவள் உன்னிடம் சொன்னதை விரைந்து என்னிடம் சொல்."

கருத்து

பாண! தலைவி உன்னிடம் கூறியவற்றுள் ஒன்றுவிடாமல் அனைத்தையும் சொல்.

விளக்கம்

வேந்தனுக்காகப் போர்மேற்சென்ற தலைவன், குறித்த பருவத்தில் மீளாது பாசறையில் தங்கியிருந்தான். தலைவனைக்

காணாது ஏங்கிய தலைவி பாணனைத் தூதாய் அவனிடம் விடுத்தாள். தலைவன் பாணனிடம் தலைவி சொன்ன அனைத்தையும் கூறுமாறு ஆர்வத்தோடு கேட்கிறான்.

சொற்பொருள்

1. நீடினம் - திரும்பக் காலம் தாழ்த்தினோம்; தூற்றி - பலரும் அறியுமாறு கூறி.
2. நுதலள் - நெற்றியைக் கொண்டவள்; பிறிது நினைந்து - என்னை மாறுபட நினைந்து.
3. யாம் வெம் - நான் மிகவும் விரும்பும்; சாஅய் - உடல் மெலிந்து.
4. சொல்லியது - அவள் உன்னிடம் சொன்ன அனைத்தையும்; உரைமதி - உரைப்பாய்.
5. முல்லை யாழ்ப்பாண! - முல்லைத்திணைக்குரிய யாழினை ஏந்திய பாணனே!

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 479 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

தலைமகள் விடத் தூதாய்ச் சென்ற பாணன் மாற்றம் கூறக் கேட்ட தலைமகன், 'இவ்வாடை வருத்தத்திற்கு மருந்தாக இன்னும் கூற வேண்டும்' எனக் கூறியது.

கூற்று விளக்கம்

வினைமேற் சென்ற தலைவன் பாசறையில் தங்கினான். ஆற்றாமை மிக்க தலைவி அவனிடம் பாணனைத் தூதாய் அனுப்பினாள். அவள் சொன்ன வற்றைக் கேட்ட தலைவன், தனிமையில் தன்னை வருத்தும் வாடைக்கு மருந்தாய் அமையும் தலைவியின் வார்த்தைகளை மேலும் கூறுமாறு கூறியது.

சொல்லுமதி பாண சொல்லுதோறு இனிய
நாடுஇடை விலங்கிய எம்வயின் நாள்தொறும்
அரும்பனி கலந்த அருள்இல் வாடை
தனிமை எள்ளும் பொழுதில்
பனிமலர்க் கண்ணி கூறியது எமக்கே.

தெளிவுரை

"பாணனே! நாடுகள் இடையே குறுக்கிட்டு அமைந்திருக்கத் தொலைவில் இருக்கும் வேற்று நாட்டில் உள்ளேன். நாள்தோறும் பொறுத்தற்கரிய பனியோடு கலந்து வருத்தும் அருளில்லாத வாடைக்காற்று இம்மாலை நேரத்தில் என்னை எள்ளி நகையாடுகின்றது. குளிர்மலர்போலும் கண்களைக் கொண்ட தலைவி கூறியவற்றை எத்தனை முறை கூறினாலும் எனக்கு அவை இனிமை பயத்தலால், அவற்றை மீண்டும் எனக்குக் கூறு."

கருத்து

தலைவி கூறியதை மீண்டும் மீண்டும் கூறு.

விளக்கம்

பாண! தலைவி சொன்னவற்றை மீண்டும் மீண்டும் சொல். தனித்திருக்கும் எனக்கு அது மிகுந்த இன்பத்தைத் தரும். முன்பு என் பேச்சைக் கேட்டு மகிழ்ந்திருந்தவள், இப்போது என்னைக் குறைகூறிப் பேசியிருந்தாலும் இந்த நேரத்தில் அதைக் கேட்பதில் ஓர் இன்பமே ஏற்படுவதை உணர்கிறேன். ஆதலின், அவள் கூறியதை மீண்டும் மீண்டும் சொல்.

சொற்பொருள்

1. சொல்லுமதி - சொல்லுக; சொல்லுதோறு இனிய - சொல்லும் தோறும் இனிமையாய் இருக்கின்றது.
2. நாடு இடை விலங்கிய - பல நாடுகள் இடையே அமைய வேற்று நாட்டில் தங்கிய; எம்வயின் - என்னிடம்.
3. வாடை - வாடைக்காற்று.
4. எள்ளும் பொழுதில் - எள்ளி நகையாடும் காலத்தில்.
5. பனிமலர்க் கண்ணி - குளிர்ந்த மலர் போலும் கண்களைக் கொண்டவள்.

தலைவி கூற்று

அகநானூறு 294 **கழார்க்கீரன் எயிற்றியார்**

திணை : முல்லை

கூற்று

பருவ வரவின்கண் வற்புறுக்கும் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் குறித்த பருவத்தில் வாராதது கண்டு துன்பமுற்ற தலைவியைத் தேற்றியிருக்குமாறு, தோழி வற்புறுத்திக் கூறினாள். அது கேட்ட தலைவி, தன் ஆற்றாமையைத் தோழியிடம் கூறியது.

மல்குல் மாமழை விண்அதிர்பு முழங்கித்
துள்ளுப்பெயல் கழிந்த பின்றை, புகைஉறப்
புள்ளிநுண் துவலை பூவகம் நிறையக்
காதலர்ப் பிரிந்த கையறு மகளிர்
நீர்வார் கண்ணின் கருவிளை மலர,
துய்த்தலைப் பூவின் புதல்இவர் ஈங்கை
நெய்த்தோய்த் தன்ன நீர்நனை அம்தளிர்
இருவகிர் ஈருளின் ஈரிய துயல்வர,
அவரைப் பைம்பூப் பயில, அகல்வயல்
கதிர்வார் காய்நெல் கட்குஇனிது இறைஞ்ச,
சிதர்சினைத் தூங்கும் அற்சிர அரைநாள்,
காய்சின வேந்தன் பாசறை நீடி,
நம்நோய் அறியா அறனி லாளர்
இந்நிலை களைய வருகுவர் கொல்?என,
ஆனாது எறிதரும் வாடையொடு
நோனேன்– தோழி!– என்தனிமை யானே.

தெளிவுரை

தோழி! மிகவும் கறுத்த மேகம் வானில் அதிர்ந்து முழங்கி, துள்ளுகின்ற மழையைப் பெய்து கழிந்தது. புகையைப் போலப் புள்ளியாய் நுண்ணிய பனித்துளிகள் பூக்களின் உள்ளே தங்கி நிற்கின்றன. தம் காதலரைப் பிரிந்து, செய்வது அறியாது திகைத்துக் கிடக்கின்ற கண்ணீர் சிந்தும் மகளிர் கண்களைப்

போல் கருவிளை மலர் பூத்துள்ளது. புதர்களில் படரும் ஈங்கை, பஞ்சு போன்ற தலையினைக் கொண்ட பூவினைக் கொண்டது. அக்கொடியின் எண்ணெய் தேய்த்தாற்போன்ற தளிர்கள் இரு பிளவாய் உள்ள ஈரலைப் போலக் காட்சியளித்து ஈரத்தோடு அசைகின்றன. அவரையின் அழகிய பூக்கள் எங்கும் செறிந் துள்ளன. அகன்ற வயல்களில் கதிர்விட்டு முற்றிய நெற்பயிர்கள் கண்ணுக்கினியவாய்ச் சாய்ந்து கிடக்கின்றன. வண்டுகள் கிளைகளில் மலர்களைச் சுவைத்துப் பறந்து பாடுகின்றன. இவையெல்லாம் முன்பனிக்காலம் தொடங்கிவிட்டதற்கான அடையாளங்கள்.

இக்காலத்தில் நள்ளிரவு வேளையில் சினம் மிக்க வேந்தனின் பாசறையில் தங்கி, நமது துன்பத்தை அறியாத, அறனில்லாத் தலைவர் என் துயரை நீக்க வருவாரோ என்றெண்ணித் தனிமையில் தவிக்கும் எனக்கு இப்பொழுது இடைவிடாது வீசும் வாடைக் காற்றும் மேலும் மேலும் துன்பம் தருகிறது.

கருத்து

கார் காலம் கடந்தும் நம்மை விட்டுச் சென்றவர் வந்து சேரவில்லை.

விளக்கம்

“தோழி! இருண்ட மேகம் பெய்து கழிந்த பிறகு வரும் முன்பனிக் கால நள்ளிரவில், பாசறையில் தலைவர் என் நோய் அறியாத அறனற்றவராய்த் தங்கியிருக்கிறார். அவர் வருவாரோ என்றெண்ணி வருந்தும் என்னை வாடைக்காற்றோடு தனிமையும் வருத்த நான் துன்பத்தைப் பொறுக்க இயலாதவளாய் உள்ளேன்” என்று தலைவி கூறுகிறாள்.

சொற்பொருள்

1. மல்குல் - மிக்க இருள்; அதிர்பு - அதிர்ந்து.
2. பெயல் - மழை; புகைஉற - புகையைப் போல.
3. புள்ளிநுண் துவலை - பனித்துளி.
4. கையறுதல் - செயலற்று விடுதல்.
5. கருவிளை - கருவிள மலர்.
6. துய்த்தலை - பஞ்சு போன்ற தலை; புதல் - புதர்; இவர் - படர்கின்ற; ஈங்கை - ஒரு வகைக் கொடி.

8. இருவகிர் - இரண்டாய்ப் பிளக்கப்பட்ட; ஈருள் - ஈரல்; ஈரிய - ஈரத்துடன்; துயல்வர - அசைய.
9. பைம்பூ - பசிய பூ; பயில - நெருங்கியிருக்க; அகல் - அகன்ற.
10. கட்குஇனிது - கண்ணுக்கு இனிதாய்; இறைஞ்ச - வளைந்து தரையை நோக்க.
11. சிதர் - வண்டு; சினை - கிளை; தூங்கும் - பாடும்; அற்சிரம் - முன்பனிக் காலம்; அரைநாள் - நள் இரவு.
12. காய்சினம் - மிக்க சினம்; பாசறை - போர்ப்பாசறை; நீடி - நீண்டு தங்கி.
13. நோய் - துன்பம்; அறனிலாளர் - அறன் இல்லாதவர், தலைவர்.
14. களைய - நீக்க; வருகுவர் கொல்? - வருவாரோ?
15. ஆனாது - விடாது; எறிதரும் - வீசும்; வாடை - வாடைக்காற்று.
16. நோனேன் - பொறுக்க இயலாதவளானேன்.

தலைவி கூற்று

அகநானூறு 264 **உம்பற்காட்டு இளங்கண்ணனார்**

திணை : முல்லை

கூற்று

பருவம் கண்டு, வன்புறை எதிர் அழிந்து, தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் வினைவயிற் பிரிந்து செல்ல, அதனை ஆற்றாது தலைவி வருந்தினாள். தோழி, 'அவன் வருவான்; ஆற்றியிரு' என்று தலைவியிடம் வற்புறுத்திக் கூறினாள். தலைவி, தோழியின் சொல்லை மறுத்துக் கூறியது.

மழைஇல் வானம் மீன்அணிந் தன்ன,
குழைஅமல் முசுண்டை வாலிய மலர,
வரிவெண் கோடல் வாங்குகுலை வான்பூப்
பெரிய சூடிய கவர்கோல் கோவலர்,
எல்லுப்பெயல் உழந்த பல்ஆன் நிரையொடு,
நீர்திகழ் கண்ணியர் ஊர்வயின் பெயர்தர,
நனிசேண் பட்ட மாரி தளிசிறந்து,

ஏர்தரு கடுநீர் தெருவுதொறு ஒழுக,
பேர்இசை முழக்கமொடு சிறந்துநனி மயங்கி,
கூதிர்நின் றன்றால் பொழுதே! காதலர்
நம்நிலை அறியார் ஆயினும், தம்நிலை
அறிந்தனர் கொல்லோ தாமே– ஓங்குநடைக்
காய்சின யானை கங்குல் சூழ,
அஞ்சுவர இறுத்த தானை
வெஞ்சின வேந்தன் பாசறை யோரே?

தெளிவுரை

“மேகமில்லாது தெளிந்த வானத்தில் விண்மீன்கள் கண் சிமிட்டுவனபோல, தழை நிறைந்த முசுண்டைச் செடிகளில் வெண்மையான பூக்கள் மலர்ந்துள்ளன. வெண்காந்தள் செடியின் வளைந்த பூங்கொத்துகளிலுள்ள பூக்களைப் பறித்துத் தொடுத்து ஆயர்கள் மாலை சூடிக்கொண்டுள்ளனர். கவடுள்ள நீண்ட கோல் ஒன்றைத் தம் கையில் வைத்துள்ள அவர்கள், பகலெல்லாம் பெய்த மழையில் நனைந்து வருந்திய பசுக் கூட்டத்தினொடு, தம் தலையில் அணிந்துள்ள மாலையில் நீர் சொட்ட மாலை நேரத்தில் ஊருக்குத் திரும்புகின்றனர். எங்கேயோ தொலைவில் இடியிடித்துப் பெய்த மழையால் சேர்ந்த வெள்ளம் ஊர்த்தெருக்களில் ஓடி வருகின்றது. இவ்வாறு கூதிர்க்காலம் வந்து நிலை பெற்றுள்ளது. (இக் காலத்தில் தலைவரின்றி நாம் வருந்தியுள்ளோம்.)

தலைவரோ, உயர்ந்த நடையினையும் கடுமையான சினத் தினையும் கொண்ட யானைகள் இராக்காலத்தே சூழ்ந்து நிற்க, பகைவர்க்கு அச்சமுண்டாக்கும் அரசனது படையுடன் பாசறை யில் தங்கியுள்ளார்.

“காதலர், நான் படும் வேதனையை அறியார் ஆயினும், தன் நிலையினையாவது அறிந்துள்ளாரோ?” எனத் தலைவி தன் ஆற்றாமையைக் கூறுகிறாள்.

கருத்து

கார் காலம் தொடங்கிவிட்டது; ஆனால், காதலன் இன்னும் வந்து சேர வில்லையே!

விளக்கம்

முசுண்டை மலர, பசுக்கூட்டம் மாலையில் ஊர் திரும்ப, மழை நீர் தெருக்களில் வெள்ளமாய் ஓடக் கூதிர்ப்பருவம் தொடங்கியது. தலைவனோ படைகளுடன் அரசனது போர்ப் பாசறையில் தங்கியிருக்கிறான். அவன் நம் துன்ப நிலையை அறியவில்லையென்றாலும் தன் நிலையையாவது எண்ணி யிருக்க வேண்டாவா? (கூதிர்க்காலத்தில் பிரிந்திருத்தல் அவராலும் இயலாதே!)

குறிப்பு

"நம் துன்பத்தை அவர் அறியாவிட்டாலும், அவர் திரும்பும்போது நாம் உயிரோடிருக்க மாட்டோம்; அதனால் அவர் துன்பப்படும் நிலை ஏற்படும் என்பதையாவது எண்ணிப் பார்த்திருக்க வேண்டாவா?" என்று தலைவி தோழியிடம் கூறுகிறாள்.

சொற்பொருள்

1. மீன் - உடுக்கள்; அணிந்தன்ன - அணிந்தாற்போல.
2. குழை அமல் - தழை நிறைந்த; முசுண்டை - ஒரு செடி; வாலிய மலர - வெண்ணிறப் பூக்கள் மலர.
3. வரி - வரிகளைக் கொண்ட; வெண்கோடல் - வெண்காந்தள்; வாங்கு - வளைந்த; வான் பூ - தூய வெண் பூ.
4. கவர் - வளைந்த; கோவலர் - இடையர்.
5. எல் - பகல்; பெயல் - மழை; உழந்த - துன்பப்பட்ட; ஆன்நிரை - பசுக் கூட்டம்.
6. கண்ணி - தலைமாலை; பெயர்தர - திரும்பி வர.
7. நனிசேண் - மிகு தொலைவில்; மாரி - மழை; தளி - மழைத்துளி.
8. கடுநீர் - நீர்ப்பெருக்கு, வெள்ளம்.
9. பேர் இசை முழக்கம் - மிகுந்த ஒலியுடன் கூடிய இடி முழக்கம்.
10. கூதிர் - கூதிர்ப்பருவம்; நின்றன்று - வந்துற்றது.
12. ஓங்கு நடை - உயர்ந்த நடை.
13. காய்சினம் - மிக்க சினம்; கங்குல் - இரவு.
14. இறுத்த - தங்கிய; தானை - சேனை.
15. பாசறையோர் - போர்ப்பாசறையில் உள்ளவர்.

தலைவி பொழுது கண்டு மயங்கல்.

தலைவி கூற்று

அகநானூறு 364 மதுரை மருதங்கிழார் மகனார் பெருங்கண்ணனார்

திணை : முல்லை

கூற்று

பருவம் கண்டு அழிந்த தலைமகள், தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

அரசன் பணியாகச் சென்ற தலைவன் தான் குறித்த நாளில் திரும்ப வில்லை. அதனால் மிகவும் வருந்தியிருந்த தலைவியைத் தோழி தேற்ற, அவளிடம் தலைவி கூறியது.

மாதிரம் புதையப் பாஅய்க் கால்வீழ்த்து,
ஏறுடைப் பெருமழை பொழிந்தென, அவல்தோறு
ஆடுகளப் பறையின் வரிநுணல் கறங்க,
ஆய்பொன் அவிர்இழை தூக்கி அன்ன,
நீடுஇணர்க் கொன்றை கவின்பெற, காடுஉடன்
சுடர்புரை தோன்றிப் புதல்தலைக் கொளாஅ,
முல்லை இல்லமொடு மலர, கல்ல
பகுவாய்ப் பைஞ்சுனை மாஉண மலிர,
கார்தொடங் கின்றே காலை; காதலர்
வெஞ்சின வேந்தன் வியன்பெரும் பாசறை,
வென்றி வேட்கையொடு நம்மும் உள்ளார்;
யாதுசெய் வாம்கொல்?– தோழி!– நோதகக்
கொலைகுறித் தன்ன மாலை
துனைதரு போழ்தின், நீந்தலோ அரிதே!

தெளிவுரை

தோழி! திசைகள் யாவும் மறையுமாறு பரவி, மேகம் கால் இறங்கி, இடியுடன் கூடிய பெருமழையைப் பொழிந்தது. ஆடுகளம்தோறும் ஒலிக்கின்ற பறையைப் போலப் பள்ளங்கள் தோறும் தேரைகள் ஒலிக்கின்றன. சிறந்த பொன்னாலாகிய

அணிகலன்களைத் தொங்கவிட்டாற்போன்று நெடிய பூங் கொத்துகளைக் கொண்ட கொன்றை மரங்கள் காட்டினை அழகு செய்கின்றன. காடு முழுவதும் தோன்றிச் செடிகளில் விளக்கைப் போன்ற மலர்கள் பூத்துள்ளன. முல்லை மலர்களும் தேற்றாவின் மலர்களும் மலர்ந்துள்ளன. மலையில் உள்ள அகன்ற வாயைக் கொண்ட சுனைகள் விலங்குகள் உண்ணும்படி நீரால் நிறைந்துள்ளன. இவ்வாறாய்க் கார் காலம் தொடங்கி விட்டது.

நம் தலைவரோ, கொடிய சினம் கொண்ட அரசனுடைய மிகப் பெரிய பாசறையிலே பகைவரை வெற்றி கொள்ளும் விருப்பத்தினால் நம்மை நினைத்திடாது இருக்கிறார். நாம் வருந்தும்படி, நம்மைக் கொலை செய்வதையே நோக்கமாய்க் கொண்டு மாலைப் பொழுதும் விரைந்து வருகின்றது. அதனைக் கடந்து செல்லுதல் நமக்கு அரியதன்றோ? நாம் என்ன செய்வோம்?

கருத்து

காதலன் இன்னும் வரவில்லை; கார் கால மாலைப்பொழுதோ நம்மைக் கொல்வதுபோல வருகிறது.

விளக்கம்

“தோழி! கார் காலம் தொடங்கிவிட்டது; காதலரோ வேந்தனின் பாசறையில் பகைவரை வெற்றி பெறும் வேட்கையோடு நம்மை நினையாது தங்கியிருக்கிறார். நம்மைக் கொல்லக் கருதி வரும் மாலைப்பொழுதைக் கடக்க நாம் என்ன செய்வது?” என்று தலைவி தோழியிடம் வருந்திக் கூறுகிறாள்.

சொற்பொருள்

1. மாதிரம் - திசை, திக்கு; புதைய - மறைய; பாஅய் - பரவி; கால்வீழ்த்து - மழைக்கால் இறங்கி.
2. ஏறுடை - இடியுடன் கூடிய; அவல் - பள்ளம்.
3. நுணல் - தேரை; கறங்க - ஒலிக்க.
4. ஆய்பொன் - சிறந்த பொன்; அவிர்இழை - விளங்கும் அணிகலன்; தூக்கி அன்ன - தொங்கவிட்டாற்போல.
5. நீடுஇணர் - நீண்ட பூங்கொத்து; கவின் - அழகு; காடுஉடன் - காடு முழுவதும்.

6. சுடர்புரை - விளக்குப் போல; தோன்றி - தோன்றிப்பூ; புதல் - புதர்; தலைக் கொளாஅ - மலர, பூக்க.
7. முல்லை - முல்லைப்பூ; இல்லம் - தேற்றா; கல் - மலை.
8. பகுவாய் - பிளந்த வாய், அகன்ற வாய்; மாஉண - விலங்குகள் நீரருந்த; மலிர - நிறைய.
9. கார் - கார் காலம்.
10. வெஞ்சினம் - கடுஞ்சினம்; வியன் - அகன்ற.
11. வென்றி - வெற்றி; வேட்கை - விருப்பம்; நம்மும் - நம்மையும்; உள்ளார் - நினையார்.
12. நோதக - வருந்த.
13. மாலை - மாலைப்பொழுது.
14. துனைதரு - விரைந்து வருதல்; நீத்தல் - கடத்தல்.

தலைவி கூற்று

அகநானூறு 74 **மதுரைக் கவுணியன் பூதத்தனார்**

திணை : முல்லை

கூற்று

தலைமகன் பிரிவின்கண் அழிந்த கிழத்தி, வற்புறுக்கும் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் வினைவயிற் பிரிந்து செல்லத் தலைவி பிரிவாற்றாது வருந்தினாள். அதனைக் கண்ட தோழி தலைவிக்கு ஆறுதல் சொல்ல, அதனைக் கேட்ட தலைவி தன் ஆற்றாமையைத் தோழியை நோக்கிக் கூறியது.

வினைவலம் படுத்த வென்றியொடு மகிழ்சிறந்து,
போர்வல் இளையர் தாள்வலம் வாழ்த்த,
தண்பெயல் பொழிந்த பைதுறு காலை,
குருதி உருவின் ஒண்செம் மூதாய்
பெருவழி மருங்கில் சிறுபல வரிப்ப,
பைங்கொடி முல்லை மென்பதப் புதுவீ
வெண்களர் அரிமணல் நன்பல தாஅய்,
வண்டுபோது அவிழ்க்கும் தண்கமழ் புறவில்,

கருங்கோட்டு இரலைக் காமர் மடப்பிணை
மருண்டமான் நோக்கம் காண்தொறும் நின்நினைந்து,
'திண்தேர் வலவ கடவு'எனக் கடைஇ,
இன்றே வருவர் ஆன்றிகம் பனிஎன,
வன்புறை இன்சொல் நன்பல பயிற்றும்
நின்வலித்து அமைகுவன் மன்னோ– அல்கல்
புன்கண் மாலையொடு பொருந்தி, கொடுங்கோல்
கல்லாக் கோவலர் ஊதும்
வல்வாய்ச் சிறுகுழல் வருத்தாக் காலே!

தெளிவுரை

"தலைவி! குளிர்ச்சி பொருந்திய மழை பொழிந்து பசுமை யுற்றுள்ள காலம்; குருதியைப் போலும் சிவந்த நிறம் கொண்ட பெரிய தம்பலப்பூச்சிகள் பெரிய வழிதோறும் வரிவரியாய் ஊர்ந்து சென்று அழகூட்டும். பசிய முல்லைக் கொடியின் மென்மைத் தன்மை வாய்ந்த புதிய, நல்ல மலர்கள் வெண் மணலில் பலவாய்ப் பரவிக் கிடக்கும். குளிர்ந்து மணம் வீசும் முல்லை நிலத்தில் வண்டுகள் அரும்புகளை ஊதி மலரச் செய்யும். இக்காட்சிகளோடு கரிய கொம்பினைக் கொண்ட ஆண்மான் தான் விரும்பும் பெண்மானை மருட்சியுடன் நோக்கு வதையும் தலைவர் காண்பார். உடனே உன்னை நினைப்பார். போரில் வெற்றி பெற்ற மகிழ்ச்சியுடன் போர்வீரர்கள் வாழ்த்த, வந்து கொண்டிருக்கும் அவர், தேர்ப்பாகனை நோக்கி, 'விரைந்து தேரைச் செலுத்து' எனக் கூறி இன்றே வந்து சேர்வார். ஆதலின், நீ துன்புற்று நடுங்குவதை நீக்கி அமைதி கொள்" என்று தோழியே நீ வற்புறுத்திக் கூறுகிறாய்.

"என்றாலும், மாலைப்பொழுதுடன் கூடி, வளைந்த கோலினைக் கொண்ட ஆயர்கள் ஊதும் குழல் ஒலி வருத்தா திருக்குமாயின், உன் வற்புறுத்தலை ஏற்று வருந்தாமல் இருப்பேன்" எனத் தன்னைத் தேற்றும் தோழியிடம் தலைவி கூறுகிறாள்.

கருத்து

வெற்றி பெற்ற தலைவர் விரைந்து வருவார்; என்றாலும், இப்போது மாலைப் பொழுதும் ஆயர் குழலும் என்னை வருத்துகின்றனவே!

விளக்கம்

"வினை முடித்த வெற்றியினை வீரர்கள் வாழ்த்தத் தலைவன் வந்துகொண்டிருப்பான். மழை பொழிந்ததால் வழியெங்கும் பசுமை; செந்நிறமுள்ள தம்பலப்பூச்சிகள் வழியில் வரிவரியாய் ஊர்ந்திருக்கும்; மணலிடமெல்லாம் முல்லையின் புதுமலர்கள் பரவிக் கிடக்கும்; வண்டுகள் ஊதி அரும்புகளை மலர்த்தும். ஆண்மான், தன் பெண்மானைத் தன் மருண்ட பார்வையால் நோக்கியிருப்பதைக் காணுந்தோறும் தலைவர் உன்னை நினைந்து உன் அருகில் இல்லையே என்று ஏங்குவார். 'பாகனே! தேரை விரைந்து செலுத்து' என்று சொல்லி இப்போதே வந்து சேர்வார்; நடுக்கத்தினைப் போக்கி அமைதி கொள் என்று என்னை ஆற்றுவிக்கும் தோழியே! உன் சொற்களைக் கேட்டு நானும் ஆற்றியிருப்பேன். ஆனால், மாலையில் கோவலர்கள் ஊதும் குழல் என்னை வருத்துகிறது. அதனால் ஆற்ற முடியாதவளாயுள்ளேன்" என்றாள் தலைவி.

சொற்பொருள்

1. வினைவலம் - செயலில் வெற்றி; படுத்தல் - நிலைபெறச் செய்தல்.
2. இளையர் - வீரர், ஏவலாளர்; தாள் - முயற்சி; வலம் - வெற்றி.
3. தண்பெயல் - குளிர்ச்சி பொருந்திய மழை; பைதுறு - பசுமையுற்ற.
4. உரு - நிறம்; மூதாய் - தம்பலப்பூச்சி.
5. வரிப்ப - வரிகளாய்ப் பரவிக் கிடக்க.
6. மென்பதம் - மென்மைத் தன்மை; புதுவீ - புதுமலர்.
7. வெண்களர் - வெள்ளிய களர் நிலம்; அரிமணல் - அறல்பட்ட மணல்.
8. போது - மலரும் பருவத்து அரும்பு; அவிழ்க்கும் - மலரச் செய்யும், இதழை விரிக்கும்; புறவு - முல்லை நிலம்.
9. கோடு - கொம்பு; இரலை - ஆண்மான்; காமர் - விருப்பம்; மடப் பிணை - இளமையான பெண்மான்.
10. மருண்ட - மருட்சி கொண்ட; நோக்கம் - பார்வை.
11. வலவ - பாகனே!; கடவு - (விரைந்து) ஓட்டு; கடைஇ - செலுத்தி.

12. ஆன்றல் - நீங்கல்; பனி - நடுக்கம்.
13. வன்புறை - வற்புறுத்திச் சொல்லல்; பயிற்றும் - சொல்லும்.
14. வலித்து - (சொல்லுக்கு) உடன்பட்டு; அமைகுவன் - பொறுத்திருப்பேன்; அல்கல் - நாள்தோறும்.
15. புன்கண் - வருத்தம்; கொடுங்கோல் - வளைந்த கோல்.
16. கல்லாக் கோவலர் - தம் தொழிலன்றிப் பிற தொழிலைக் கல்லாத இடையர்.
17. வல்வாய் - வலிய வாய்; வருத்தாக்கால் - வருத்தாதிருந்தால்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 474 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

பிரிவின்கண் ஆற்றாமை கண்டு, 'தூதாகிச் சென்று அவனைக் கொணர்வல்' என்ற பாணன் கேட்பத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியின் துயர் கண்டு, தான் தூது சென்று, அவனைக் கொண்டு வருவதாய்க் கூறிய பாணனைத் தலைவி பாராட்டிச் சொல்லியது.

மையறு சுடர்நுதல் விளங்கக் கறுத்தோர்
செய்அரண் சிதைத்த செருமிகு தானையொடு
கதழ்பரி நெடுந்தேர் அதர்படக் கடைஇச்
சென்றவர்த் தருகுவல் என்னும்
நன்றால் அம்ம, பாணனது அறிவே!

தெளிவுரை

"பகை மன்னர் தம் காப்பிற்கென அமைத்துக்கொண்ட அரண்கள் பலவும் கெட்டழியுமாறு, போர்வன்மை மிக்க படைகளோடு விரைவாய்ச் செல்லும் குதிரைகள் பூட்டப்பட்ட நெடுந்தேரினைச் செலுத்தி வழிகள் பலவற்றையும் கடந்து சென்றவர், நம் தலைவர். அத்தகைய தலைவரை, 'குற்றமற்ற என் சுடர்நுதல் ஒளியோடு பொலிவுற்று விளங்குமாறு அவரை

இங்கே கொண்டு வருவேன்' என்று கூறிய இப்பாணனது அறிவு துயருற்றார் மனத்துக்கு மிகவும் நலம் தருவதாயிருக்கின்றது."

கருத்து

தலைவியின் நிலையினை உரைத்துத் தலைவனை விரைவிலே மீண்டு வருமாறு தான் தூது செல்வதாய்க் கூறுகிறான், பாணன். அவன் அறிவு தனக்கு ஆறுதல் தருவதாய்த் தலைவி கூறுகிறாள்.

சொற்பொருள்

1. மை அறு - குற்றம் அற்ற; விளங்க - விளக்கமுற; கறுத்தோர் - பகைத்தோர்.
2. செய்அரண் - பாதுகாப்பாய் அமைத்துக்கொண்ட கோட்டை; சிதைத்தல் - அழித்தல்; செருமிகு - போர் செய்வதில் மிகுந்த திறமை கொண்ட; தானை - சேனை, படை.
3. கதழ் பரி - விரைந்து செல்லும் குதிரை; அதர்பட - வழியில் வர; கடைஇ - செலுத்தி.
4. சென்றவர் - போர் மேல் சென்றிருப்பவர்; தருகுவல் - கொண்டுவந்து சேர்ப்பேன்.
5. நன்றால் - நன்று.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 451 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

வேந்தற்கு உற்றுழிப் பிரிந்த தலைமகன் குறித்த பருவம் நினைந்து ஆற்றியிருந்த தலைமகள், அப்பருவ வரவின்கண் பாசறையினின்றும் வந்தார், அரசன் செய்தி கூறக்கேட்டு ஆற்றாளாய்ச் சொல்லியது.

கூற்று விளக்கம்

வேந்தன் எதிரிமீது போர் தொடுத்தபோது அவனுக்கு உதவி செய்வதற் காகத் தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் கார்ப்பருவம் தொடங்கியும் வந்து சேராமையால் தலைவி வாடிச் சோர்ந்திருக்கிறாள். அவ்வேளை போர் நீடிக்கலாம் என அரசன் சொன்னதாகச் சிலர் உரைக்கின்றனர். அதுகேட்ட தலைவி துயரம் தாங்காது தன்னுள்ளே கூறிக்கொள்வது.

கார்செய் காலையொடு கையறப் பிரிந்தோர்
தேர்தரு விருந்தில் தவிர்குதல் யாவது?
மாற்றரும் தானை நோக்கி
ஆற்றவும் இருத்தல் வேந்தனது தொழிலே!

தெளிவுரை

"பாசறையிலிருந்து வந்தோர், பகைவரால் வெல்ல இயலாத தன் படையைக் கார் காலம் தொடங்கிவிட்ட பிறகும் சிறிது காலத்திற்குப் பாசறையிலேயே தங்க வைப்பது வேந்தனது விருப்பமாய் இருக்கிறது என்பர். ஆதலால், நாம் செயலற்று வருந்துமாறு நம்மைப் பிரிந்து சென்ற தலைவர் கார் காலம் தொடங்கி விட்டதென்று தேரில் வந்து சிறிது காலம் நம்மோடு தங்கியிருப்பது எவ்வாறு இயலும்? (இயலாது)."

கருத்து

அரச வினை என்பதால் அரசன் திரும்பினாலன்றித் தான் விரும்பிய போது அவரால் வர இயலாதே!

சொற்பொருள்

1. கார்செய் காலை - கார்ப்பருவத்தை நிகழச் செய்யும் பொழுது; கையற - செயலற்று வருந்த; பிரிந்தோர் - பிரிந்தோரான தலைவர்.
2. தேர் தருவிருந்தில் - தேர் கொண்டுவந்து தருதலாலே அவரைப் பெறும் விருந்தாக; தவிர்குதல் - என்னோடு தங்குதல்; யாவது - எவ்வாறு இயல்வது?
3. மாற்றரும்தானை - பகையால் வெல்லற்கரிய வலிமை மிகுந்த படை.
4. ஆற்றவும் - சிறிது காலம்; வேந்தனது தொழில் - பகை தணிவதாகிய போர்த்தொழில்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 455 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

ஆற்றுவிக்கும் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் குறித்துச் சென்ற கார்ப்பருவத்தில் வாராத போது தேற்றிய தோழியிடம் தலைவி கூறியது.

அரசுபகை தணிய, முரசுபடச் சினைஇ
ஆர்குரல் எழிலி கார்தொடங் கின்றே
அளியவோ அளிய தாமே ஒளிபசந்து
மின்இழை ஞெகிழச் சாஅய்த்
தொல்நலம் இழந்தஎன் தடமென் தோளே.

தெளிவுரை

"அரசன் மேற்கொண்ட போர் முடிந்தது. போர்முரசங்களின் ஒலி அடங்கியது; மேகங்கள் மிக்க இடி முழக்கத்தோடு பெருமழை பொழிந்தன. கார் காலம் தொடங்கிவிட்டது. தலைவர் தாம் பிரிந்தபோது சொல்லியபடி வாராமையினால் என் மேனியின் நிறம் மாறி பசலையாலே கெட்டது. மின்னிடும் அணிகலன்கள் கழலுமாறு என் பெரிய மெல்லிய தோள்களும் தம் பழைய அழகினை இழந்தன. தோழி! அவை மிகவும் இரங்கத்தக்கன."

கருத்து

அரசு பகை தணிந்தது. எல்லாரும் மீளும் வகையில் கார்ப்பருவம் தொடங்கியது. நம் தோளுக்குரியவரோ இன்னும் திரும்பவில்லை.

சொற்பொருள்

1. முரசுபட - முரசு ஒலியவிந்திருப்ப; சினைஇ - கோபித்து.
2. ஆர்குரல் - ஒலிக்கும் இடிக்குரல்; எழிலி - மேகம்; கார் தொடங் கின்றே - கார்ப்பருவமும் தொடங்கியது.
3. அளியவோ அளிய - மிகவும் இரங்கத்தக்கன; பசந்து - பசலை நிறமுற்று.

4. மின்இழை - மின்னிடும் அணிகலன்; சாஅய் - வருந்தி.
5. தொல்நலம் - முன்பிருந்த நலம்; தட மென் தோள் - அகன்ற மென்மையான தோள்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 460 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

வேந்தற்கு உற்றுழிப் பிரிந்த தலைமகனைப் பருவ முதிர்ச்சியினும் வரக் காணாது தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

வேந்தனுக்கு உதவியாகத் தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் கார் காலம் முடியவிருக்கும் தறுவாயிலும் திரும்பி வரக் காணாமல் தலைவி சொல்லியது.

பெருஞ்சின வேந்தனும் பாசறை முனியான்
இருங்கலி வெற்பன் தூதும் தோன்றா
ததைஇலை வாழை முழுமுதல் அசைய
இன்னா வாடையும் அலைக்கும்
என்ஆ குவென்கொல் அளியென் யானே!

தெளிவுரை

“மிகுந்த சினத்தைக் கொண்ட வேந்தனும் பாசறையில் தங்குவதை வெறுக்கவில்லை; மிகுந்த ஆரவாரம்மிக்க மலைநாடனான நம் தலைவனிடமிருந்து தூதும் வரவில்லை; நெருங்கிய இலையைக் கொண்ட வாழையின் அடிமுதல் உச்சிவரை அசையுமாறு வாடையும் சுழன்று வீசுகிறது. இரங்கத்தக்கவளான நான் என்னாவேனோ?”

கருத்து

வாடை வீசுகிறது; வந்து சேர்ந்திருக்க வேண்டிய தலைவன் இன்னும் வரவில்லை.

சொற்பொருள்

1. பெருஞ்சின வேந்தன் - மிகுந்த சினத்தைக் கொண்ட வேந்தன்; பாசறை முனியான் - பாடி வீட்டில் இருத்தலை வெறுக்க மாட்டான்.
2. இருங்கலி வெற்பன் - மிகுந்த ஆரவாரத்தைக் கொண்ட மலைநாட்டுத் தலைவன்.
3. ததைஇலை வாழை - நெருங்கிய இலைகளைக் கொண்ட வாழை மரங்கள்.
4. இன்னா வாடை - துன்பத்தைத் தரும் வாடைக்காற்று; அலைக்கும் - வருத்தும்.
5. என்ஆகுவென் கொல் - என்னாவேனோ; அளியென் - இரங்கத் தக்கவள்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 452 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

குறித்த பருவத்து வாராது தலைமகன் பகைமேல் முயல்கின்ற முயற்சி கேட்ட தலைமகள் கூறியது.

கூற்று விளக்கம்

அரசன் காலத்தை நீட்டிக்கொண்டே இருத்தலால், தலைவன் இல்லம் மீளும் காலமும் நீடிக்க, அதனால் தான் வருந்தியழியும் காலமும் நீளுவதை எண்ணித் தலைவி வருந்திச் சொல்லியது.

வறந்த ஞாலம் தெளிர்ப்ப வீசிக்
கறங்குகுரல் எழிலி கார்செய் தன்றே
பகைவெம் காதலர் திறைதரு முயற்சி
மென்தோள் ஆய்கவின் மறையப்
பொன்புனை பீரத்து அலர்செய் தன்றே.

தெளிவுரை

"கோடையின் வெம்மையால் மிகவும் வறட்சியுற்ற நிலம் செழுமையுறுமாறு மழைத்துளிகளை வீசியபடி இடி முழக்கம் செய்யும் மேகங்கள் வானத்தே எழுந்து கார்ப்பருவத்தை ஏற்படுத்தின. பகையினை விரும்பிப் போரிடுதலை வரவேற்கும் நம் காதலர், பகைவர் பணிந்து திறை தருதற்குத் தூண்டும் முயற்சி யிலேயும் ஈடுபட்டுள்ளார் என்றும் கூறுகின்றனர். பகையை முடி வுறச் செய்யாமல் காலம் நீட்டிப்பது என் மெல்லிய தோள்களின் அழகைத் தொலைத்தது. மேலும், பொன்னிறங்கொண்ட பீர்க்கின் பூப்போலும் பசலை படருமாறும் செய்துவிட்டது."

கருத்து

தலைவரின் முயற்சி விரைவில் நிறைவேறும். அவர் வரவால் பசலை மறைந்து அழகு மீளட்டும்.

நம் காதலர் மாற்று வேந்தரை வென்று திறை பெற மேற்கொள்ளும் முயற்சி, நம் மெல்லிய தோள்களின் அழகினை மறையச்செய்து பசலை யையும் உண்டாக்கிவிட்டது.

சொற்பொருள்

1. வறந்த ஞாலம் தெளிர்ப்ப - நீர் வற்றிய உலகம் செழிப்ப.
2. கறங்கு குரல் - ஒலிக்கின்ற ஓசையைக் கொண்ட (முழங்கும் இடிக் குரலை); எழிலி - மேகம்; கார் செய்தன்று - கார்ப்பருவத்தைத் தோற்றுவித்தது.
3. பகை வெம்காதலர் - தன்னோடு போரிட வருவாரை விரும்பும் காதலர்; திறை - கப்பம்.
4. ஆய்கவின் - சிறந்த அழகு.
5. பொன்புனை பீரத்து அலர்- பொன் நிறம் கொண்ட பீர்க்கம் பூப்போலப் படர்ந்துள்ள பசலை நோய்; செய்தன்று - செய்தது.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 459 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

'வேந்தன் வினை முற்றினான்; நின் காதலர் கடுக வருவர்' எனக் கேட்ட தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

வேந்தன் போரினை முடித்ததால் தலைவன் விரைவில் வருவான் என்றாள், தோழி; ஆனால், தலைவன் திரும்புவானா, தொடர்ந்து போர் புரிவானா என்று தலைவி மயங்கிச் சொல்லியது.

மெல்இறைப் பணைத்தோள் பசலை தீரப்
புல்லவும் இயைவது கொல்லோ; புல்லார்
ஆர்அரண் கடந்த சீர்கெழு தானை
வெல்போர் வேந்தனொடு சென்ற
நல்வயல் ஊரன் நறுந்தண் மார்பே!

தெளிவுரை

"நம் வேந்தன் பகையரசர்களுடைய கடத்தற்கரிய அரண்களைக் கடந்து வெற்றி கொண்ட சிறப்புப் பொருந்திய படையினைக் கொண்டவன். போர்களில் வெற்றி பெற்றவன். அவனோடு சென்ற நம் தலைவன் நல்ல வயல்களைக் கொண்ட ஊரினை உடையவன். மென்மையான தொடிகளை அணிந்த என் தோள்களின் பசலை தீரும்படி மணம் கமழும் குளிர்ந்த நம் தலைவனது மார்பு எனக்குத் தழுவக் கிட்டுமா?"

கருத்து

தலைவன் விரைந்து வருவானா? அவன் மார்பினைத் தழுவும் வாய்ப்பினைப் பெறுவேனா?

குறிப்பு

வெற்றி கொண்ட தலைவன் திரும்புவானா, தொடர்ந்து போரிலே ஈடுபடுவானா என்று தலைவி மயங்குகிறாள். அதனாற்றான், 'புல்லவும் இயைவது கொல்லோ?' என்கிறாள்.

சொற்பொருள்

1. இறை - சந்து; பணைத்தோள் - பருத்த தோள்.
2. புல்லவும் - தழுவவும்; இயைவது - பொருந்துவது; புல்லார் - பகை மன்னர்.
3. ஆர்அரண் - கடப்பதற்கு அருமையான அரண்; *சீர்* - சிறப்பு; கடத்தல் - அரணை அழித்துப் பகையை வென்று நாட்டைத் தம்மகப் படுத்திக் கொள்ளல்.
4. வெல்போர் வேந்தன் - போர்களில் வெற்றி பெறுகின்ற அரசன்.
5. நறுந்தண் மார்பு - மணம் கமழும் குளிர்ச்சி பொருந்திய மார்பு.

பாணன் கூற்று

கலித்தொகை 30 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

பருவ வரவின்கண் ஆற்றாத தலைமகள் இறந்தது சிந்தித்து, 'நம்மாட்டு அன்பிலராயினும், இக்காலத்து இவ்வூரின்கண், பண்டு தாம் விளையாடியவாறு நினைந்து வருவர், இக்காலவரவு சொல்லுவார் உளாராயின்' எனக் கேட்ட பாணன் பாசறைக்கட் சென்று, தலைவனைக் கண்டு கூறியது.

(இறந்தது சிந்தித்து - முன்பு நடந்ததை எண்ணி)

கூற்று விளக்கம்

இளவேனிற்காலம் தொடங்கியது; இப்பருவத்தே 'திரும்பி வருவேன்' எனக் கூறிச் சென்ற தலைவன் வாராமையின் ஆற்றாத தலைவி கடந்த கால நிகழ்ச்சிகளைச் சிந்தித்தனள்; தலைவன் நம்மிடம் அன்பில்லாதவராய் இருந்தாலும், இதே இளவேனிற்காலத்தில் இவ்வூரில் பண்டு தாம் விளையாடியவற்றை நினைந்து பார்த்து வருதல் கூடும் என்று தலைவி எண்ணினள்; 'இப்பருவ வரவைத் தலைவனிடத்துச் சென்று கூறுவார் உளரோ' என, அது கேட்ட பாணன் பாசறைக்கண் தலைவனைக் கண்டு கூறியது.

தரவு

அருந்தவம் ஆற்றியார் நுகர்ச்சிபோல், அணிகொள
விரிந்துஆனாச் சினைதொறூஉம், வேண்டும்தாது அமர்ந்துஆடி
புரிந்தார்க்கும் வண்டொடு, புலம்புதீர்ந்து எவ்வாயும்,
இருந்தும்பி, இறைகொள எதிரிய வேனிலான்–

தாழிசை

துயிலின்றி யாம்நீந்தத் தொழுவைஅம் புனல்ஆடி,
மயில்இயலார் மருவுண்டு, மறந்தமைகு வான்மன்னோ–
வெயில்ஒளி அறியாத விரிமலர்த் தண்காவில்
'குயில்ஆலும் பொழுது'எனக் கூறுநர் உளராயின்.

பானாள்யாம் படர்கூரப் பணைஎழில் அணைமென்தோள்
மான்நோக்கின் அவரோடு மறந்துஅமைகு வான்மன்னோ–
'ஆனாச்சீர்க் கூடலுள் அரும்பவிழ் நறுமுல்லைத்
தேன்ஆர்க்கும் பொழுது'எனத் தெளிக்குநர் உளராயின்.

உறல்யாம் ஒளிவாட உயர்ந்தவன் விழவினுள்
விறல்இழை யவரோடு விளையாடு வான்மன்னோ
'பெறலரும் பொழுதோடு பிணங்குஇணர்த் துருத்திசூழ்ந்து,
அறல்வாரும், 'வையை'என்று அறையுநர் உளராயின்.

எனவாங்கு–

சுரிதகம்

தணியாநோய் உழந்துஆனாத் தகையவள்– தகைபெற,
அணிகிளர் நெடுந்திண்தேர் அயர்மதி– பணிபுநின்
காமர் கழல்அடி சேரா
நாமம்சால் தெவ்வரின் நடுங்கினள் பெரிதே.

தெளிவுரை

"செய்தற்கரிய தவத்தை மேற்கொள்பவர்கள் சிறந்த இன்பங்களை நுகர்ந்து மகிழ்வர். அவர்களைப்போல, வண்டுகள் மலர்த் தேன் உண்டு மகிழ்ந்து ஆரவாரிக்கின்றன. வண்டுகளும் கருநிறத் தும்பிகளும் தேனுண்டு களிக்குமாறு, மரக்கொம்பு தோறும் அழகான மலர்கள் மலர்ந்துள்ள இளவேனிற்காலம் தொடங்கிவிட்டது. இதனை அறியாது தலைவன் பாசறை யிலேயே இன்னும் தங்கியுள்ளான்.

"இளவேனிற்காலங்களில், நான் தூக்கம் கொள்ளாமல் வருந்துமாறு, மயிலனைய மாதர்களான பரத்தையர்களுடன் கூடி மகிழ்ந்து மடுக்களிலே நீராடி மகிழ்ந்தவன் அவன். என்றாலும், அவன் இவ்வூரிலேயே இருக்கின்றான் என்று எண்ணியாவது ஆறுதல் கொள்வேன். இதுபோழ்து அந்த ஆறுதலும் இன்றி வாடுகின்றேன்.

"வெயிலின் ஒளியைக் காணவியலாத விரிந்த பூஞ்சோலை களில் குயில்கள் கூவுகின்றதை அறிந்து, இளவேனிற்காலம் தொடங்கிவிட்டது என்பதை என் கணவனுக்குக் கூறுபவர் யாரையும் காணேனே!

"குன்றாத புகழ் கொண்ட மதுரை மாநகரிலே அரும்பவிழும் மணமுல்லையில் தேன் துளிர்க்கும் இளவேனிற்காலம் இது. என் தலைவன் நள்ளிரவிலும், நான் வருந்துமாறு, மூங்கிலின் அழகினைக் கொண்ட அணைபோலும் மெல்லிய தோளையும், மானின் கண் போன்ற நோக்கினையும் கொண்ட பரத்தையர் களுடன் கூடி மகிழ்ந்து என்னையே மறந்துவிடுவான். அத்தகைய இன்பத்தை நுகர்வதற்காகவாவது அவன் இவ்வூர் வருமாறு, இளவேனிற் காலம் தொடங்கிவிட்டதை அவனிடம் கூறுவோர் யாரும் இலரே! என் துன்பத்தை நீக்காவிடினும், இவ்வூரில் உள்ளான் என்றெண்ணியாவது இருக்கலாமே!"

"வையை ஆற்றில் ஆற்றிடைக்குறையான மேடுகளைச் சூழ்ந்து பூங்கொத்துகளுடன் வெள்ளம் பெருக்கெடுக்கும் இந்த இளவேனிற் காலத்தில் காமன் திருநாளைக் கொண்டாடுவர். அந்நாளில் என் தலைவன் பரத்தையருடன் கூடிக் காமக் களியாட்டத்தில் ஈடுபடுவான். அப்பொழுது என் மேனியழகு கெடுவதையும் காணான். அத்தகைய காமன் திருநாளைப்பற்றிய செய்தியை என் தலைவனிடம் கூறுவோர் இங்குளரோ? அவ்வாறு கூறினாலாவது அவன் இவ்வூரை அடைவானே!" என்று தலைவி பலவாறாகப் புலம்பியவற்றைக் கேட்டுக்கொண்டி ருந்த பாணன், தலைவியின் துயரைத் தீர்க்க எண்ணி, பாசறைக்குச் சென்று, தலைவி புலம்பிக் கூறிய யாவற்றையும் தலைவனிடம் எடுத்துரைத்தான்.

"தலைவனே! உன் தலைவி தணியாத காமநோய் கொண்டு வருந்திக்கொண்டிருக்கிறாள். உன் பாதத்தைப் பணியாத பகைவர் பலரும் நடுங்கி வருந்துவதுபோல உன் மனைவியும் உன்னைக் காணாது வருந்தி உள்ளம் நடுங்கிக்கொண்டிருக் கிறாள். ஆகவே, வருத்தம் தீர்ந்து அவள் பொலிவு பெறுமாறு உன் அழகிய தேரை உன் இல்லம் நோக்கி இனிதே செலுத்து" என்று பாணன் தலைவனை வேண்டினான்.

கருத்து

இளவேனிற்காலத்தில் எவ்வாறேனும் திரும்பி வந்துவிடுவேன் என்று உறுதி கூறிப் போர்ப்பாசறைக்குச் சென்ற தன் கணவன், சொன்னவாறு வாராததை எண்ணி வருந்துகின்றாள், மனைவி. தலைவனின் கடந்த காலச் செயல்களையும் நிகழ்வுகளையும் எண்ணிக் கலங்குகிறாள். தலைவி பலவாறாய்ப் புலம்பியவற்றைக் கேட்டுக்கொண்டிருந்த பாணன், தலைவியின் துயரை நீக்க விரும்பி, பாசறைக்குச் சென்று, 'தலைவ, உன் மனைவி உன்னைக் காணாது நடுங்கிக் கொண்டிருக்கிறாள். உன் அழகிய தேரை இல்லம் நோக்கி இனிதே செலுத்து' என்று தலைவனை வேண்டினான்.

சொற்பொருள்

1. நுகர்ச்சி - அனுபவித்தல்; அணிகொள - அழகு கொள்ள.
2. விரிந்து ஆனா - விரிந்து அமையாத; சினை - கிளை.
3. புரிந்தார்க்கும் - புரிந்து + ஆர்க்கும் - விரும்பி ஆரவாரிக்கும்; புலம்பு - துன்பம்; எவ்வாயும் - எவ்விடத்தும்.
4. இறைகொள - தங்க; எதிரிய - எதிர் கொள்ள.
5. துயிலின்றி - தூக்கமின்றி; யாம் நீந்த - நான் யாமக் கடலை நீந்த; தொழுவை - நீர்நிலை.
6. மயில்இயலார் - மயில் போன்ற தன்மையினைக் கொண்டவர், பரத்தையர்; மருவுண்டு - பொருந்தி.
9. பானாள் - நடுயாமம்; படர்கூர - வருத்தம் மிக; பணைஎழில் - மூங்கில் போலும் அழகினைப் பெற்ற.
10. மான் நோக்கின் அவரோடு - மான் போன்ற நோக்கினைக் கொண்ட பரத்தையருடன்.
11. ஆனாச்சீர் - குறையாத புகழைக் கொண்ட; கூடல் - மதுரை.
12. தெளிக்குநர் - தெளிவிப்பவர்.

13. உறல்யாம் - அவனை அடைதற்குரிய உறவுடைய யாம்; உயர்ந்தவன் விழவினுள் - காமன் விழாவில்.
14. விறல் இழை அணி - வெற்றியைக் கொண்ட இழையினாலான அணிகலனை அணிந்த; அவரொடு - பரத்தையருடன்.
15. பிணங்குஇணர் - மாறுபட்ட மலர்க்கொத்துகள்; துருத்தி - ஆற்றிடைக் குறை.
16. அறையுநர் - சொல்லுபவர்.
18. தணியா நோய் - குறையாத நோய்; தகையவள் - தகைமையைக் கொண்டவள் (தலைவி).
19. அயர்மதி - செலுத்துக.
21. நாமம் சால் - (உன்னிடம்) அச்சம் மிகுதியும் கொண்டுள்ள; தெவ்வர் - பகைவர்.

பாணன் கூற்று

ஐங்குறுநூறு 480 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

தலைமகட்குத் தூதாய்ப் பாசறைக்கண் சென்ற பாணன், தலைமகனை நெருங்கிச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனிடம் தூது சென்ற பாணன் தலைவி படும் வேதனை மிகுதியை அவனிடம் உரைத்தான். இடையிலே சில நாள் அளவிலேனும் சென்று தலைவியின் துயரத்தைப் போக்குமாறு வேண்டினான். தலைவனோ தன் பணியின் கடுமை கூறி, இயலா நிலையைச் சொல்லி, அவளை ஆற்றி யிருக்குமாறு கேட்டுக்கொண்டதாய்ச் சொல்லுமாறு கூறுகிறான். இதைக் கேட்டதும் பாணன் தன் தூதுப்பணியை வெறுத்தவன்போலச் சொல்லியது.

நினக்குயாம் பாணரேம் அல்லேம்; எமக்கு
நீயும் குருசிலை அல்லை மாதோ;
நின்வெம் காதலி தன்மனைப் புலம்பி
ஈர்இதழ் உண்கண் உகுத்த
பூசல் கேட்டும் அருளா தோயே.

தெளிவுரை

"தலைவ! உன்னையே விரும்பும் காதலியாகிய தலைவி தன் மனையில் தனித்துக் கிடந்து குளிர்ச்சி பொருந்திய மலர்போலும் மையுண்ட தன் கண்கள் கலங்கக் கண்ணீர் சொரிந்ததைப்பற்றி நான் இதுவரை கூறினேன். அதனைக் கேட்ட பின்னும், நீ அவளுக்கு அருள் காட்டாமல் உள்ளாய். ஆதலால், இரக்க மில்லாத உனக்கு நான் பணி செய்யும் பாணனும் அல்லேன்; நீ எனக்கு உதவும் தலைவனும் அல்லன்."

கருத்து

தலைவியின் வருத்தம் கண்டும் அதனைப் போக்க முன்வாராத உனக்குப் பணி புரிவதிலிருந்து இப்போதே நான் விலகிக்கொள்கிறேன் என்றான், பாணன்.

சொற்பொருள்

1. பாணரேம் அல்லேம் - பாணன் அல்லன்.
2. குருசில் - தலைவன்.
3. நின்வெம்காதலி- உன்னை மிகவும் விரும்பும் காதலி; புலம்பி - தனிமையுற்று, வருந்தி.
4. ஈர் இதழ் - குளிர்ச்சியான கண் இமைகள்; உண்கண் - மையுண்ட கண்; உகுத்த - சொரிந்த.
5. பூசல் - வருத்தம்.

தோழி கூற்று

கலித்தொகை 26 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

"மேவிய சிறப்பின் ஏனோர்" என்னுஞ் சூத்திரத்தில், பகைமேற்சென்ற அரசன் திறை பெற்ற நாடு காத்து, அதன்கண் தன் நெறி முறைமை அடிப்படுத்து வருதற்குப் பிரிவன் என்றலின், பிரிவின்கண் தலைவன் இளவேனிற்காலத்துப் பிரிய, அக்கால வரவின்கண் தலைவி ஆற்றாளாய், 'அவர் நமக்கு அருளுங் காலையில் அருளார் காண்' என்றாட்குத் தோழி, அவர் வரவிற்கு இக்காலந் தூதாயன்றே வந்தது, நீ ஆற்றுவாயாக' என வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

தலைவன், வேந்தன் கைப்பற்றிய நாட்டினைக் காக்கும்பொருட்டுப் பிரிந்தனன்; பிரியும்போது இளவேனிற்காலத்தில் வந்துவிடுவதாய்க் கூறிச் சென்றான்; அப்பருவம் தொடங்கியும் அவன் வாராததால் தலைவி ஆற்றாளாய், 'அவர் நமக்கு அருள் செய்ய வேண்டிய காலத்தில் அருள் செய்யவில்லை' என்றாள். அது கேட்ட தோழி, 'அவர் வரவிற்கு இக்காலம் தூதாய் அன்றோ தொடங்கியிருக்கிறது; அவர் வந்துவிடுவார்; ஆற்றியிரு' என்று வற்புறுத்திக் கூறியது.

தரவு

'ஒருகுழை ஒருவன்போல், இணர்சேர்ந்த மராஅமும்,
பருதியம் செல்வன்போல், நனைஊழ்த்த செருந்தியும்,
மீனேற்றுக் கொடியோன்போல், மிஞிறுஆர்க்கும் காஞ்சியும்,
ஏனோன்போல், நிறம்கிளர்பு கஞலிய ஞாழலும்,
ஆனேற்றுக் கொடியோன்போல், எதிரியஇலவமும், ஆங்குஅத்
தீதுதீர் சிறப்பின் ஐவர்கள் நிலைபோலப்
போதுஅவிழ் மரத்தொடு பொருகரை கவின்பெற,
நோதக வந்தன்றால், இளவேனில் மேதக,

தாழிசை

பல்வரி இனவண்டு புதிதுஉண்ணும் பருவத்துத்
தொல்கவின் தொலைந்தஎன் தடமென்தோள் உள்ளுவார் –
ஒல்குபு நிழல்சேர்ந்தார்க்கு உலையாது காத்துஓம்பி,
வெல்புகழ் உலகுஏத்த, விருந்துநாட்டு உறைபவர்.

திசைதிசை தேன்ஆர்க்கும் திருமருத முன்துறை,
வசைதீர்ந்த என்நலம் வாடுவது அருளுவார்,
நசைகொண்டு தம்நிழல் சேர்ந்தாரைத் தாங்கித்தம்
இசைபரந்து, உலகுஏத்த, ஏதில்நாட்டு உறைபவர்.

அறல்சாஅய் பொழுதோடு,எம் அணிநுதல் வேறாகித்
திறல்சான்ற பெருவனப்பு இழப்பதை அருளுவார்,
ஊறுஅஞ்சி நிழல்சேர்ந்தார்க்கு உலையாது காத்துஓம்பி,
ஆறுஇன்றிப் பொருள்வெஃகி, அகன்றநாட்டு உறைபவர்.

எனநீ–

சுரிதகம்

தெருமரல் வாழி, தோழி!நம் காதலர்,
பொருமுரண் யானையர் போர்மலைந்து எழுந்தவர்
செருமேம் பட்ட வென்றியர்;
'வரும்'என வந்தன்று,அவர் வாய்மொழித் தூதே.

தெளிவுரை

தலைவன் உரிய காலத்தில் வந்து சேராததனால் மிகவும் வருந்திய தலைவி தோழியிடம், "தோழி! ஒரு காதில் மட்டும் குழையணிந்துள்ள பலராமனைப் போல வெண்கடம்ப மரத்தில் வெண்ணிறப் பூக்கள் மலர்ந்துள்ளன; பகலவன் தன் கதிர்களை விரித்தாற் போன்று செருந்தி மரத்தில் பூக்கள் நிரம்பிவிட்டன. சுறாமீனைக் கொடியாகக் கொண்டுள்ள காமவேளைப் போன்ற கருநிறம் கொண்ட வண்டுகள் காஞ்சி மரங்களில் தேனை உண்டு ஆரவாரிக்கின்றன. காமவேளின் தம்பியாகிய சாமனின் நிறத்தையொத்த பூக்கள் ஞாழல் மரத்தில் நிறைந்துள்ளன. எருதுக்கொடி கொண்ட சிவனின் நிறம் போன்ற சிவந்த பூக்களை இலவ மரத்தில் காண்கிறோம். இவ்வாறு குற்றமற்ற ஐவரின் நிறத்தன்மைபோலப் பூத்துக் குலுங்கும் மரங்களால் ஆற்றங் கரைகள் அழகு மிளிரத் தோன்றும் இவ்விளவேனில் எனக்கு மட்டும் துன்பத்தைத் தருவானேன்?

"திறை தந்து தம் ஆளுகைக்கு உட்பட்ட பகைநாட்டு மக்கட்கும் துன்பம் எதுவும் நேராமல் காக்கும் கடமையினை மேற்கொண்டு உலகம் போற்றுமாறு, புதிய நாட்டிலே வாழ்ந்து வருகின்றார், நம் தலைவர். பல வரிகளைக் கொண்ட வண்டினங்கள் புதிய புதிய பூந்தாதுகளை உண்டு மகிழும் இந்த இளவேனிற்காலத்தில், பழைய அழகையும் இழந்து நிற்கும் என் தடமென்தோள்களை நினைத்துப் பார்ப்பாரோ?

"உலகெங்கும் தம் புகழ் ஓங்கி நிற்குமாறு தம்மிடம் விரும்பி வந்த அயல்நாட்டு மக்களைக் காத்து நிற்கும் தலைவர், அங்கே இருக்கிறார். இங்கே, திசைதோறும் வண்டுகள் ஆரவாரிக்கும் திருமருதத்துறையில் குற்றமற்ற என் அழகு அழிந்துகொண்டிருப்பதை எண்ணிப் பார்த்து என்னிடம் அன்பு காட்டி அருள் புரிவாரோ?

"பகைநாட்டரசன் நெறி தவறிப் பொருள் விரும்பித் தன் நாட்டு மக்களுக்குத் துன்பம் இழைத்தான். அதனால், அந்நாட்டு மக்கள் நம் தலைவரை வந்தடைந்தனர். தலைவரும் அப்பகை யரசனை ஓட்டி அங்குள்ள மக்களுக்கு மகிழ்ச்சியூட்டி வருகிறார். என் அழகிய நெற்றியில் பசலை படர்ந்து அழகு நீங்குதற்குக் காரணமான இவ்விளவேனிற்காலத்தில் என் துன்பத்தையும் நீக்கி என்னை மகிழ்விப்பாரா?" என்று கூறித் தலைவி புலம்பினாள்.

இவ்வாறு வருந்திக்கொண்டிருக்கும் தலைவியை நோக்கித் தோழி, "என்னோடு தோழமை கொண்டவளே! நீ மனம் சுழன்று வருந்தாது வாழ்க! போரில் யானைப்படையோடு எதிர்த்து வந்த பகைவரை வென்று சிறந்து விளங்கும் நம் தலைவர் விரைவில் வந்து நமக்கு அருளவிருக்கிறார் என்ற செய்தியைச் சொல்லத் தூதாய் வந்ததுதான், இந்த இளவேனிற்காலம்' என்று கூறித் தலைவியின் துன்பத்தை நீக்குகிறாள்.

கருத்து

தலைவன் அரசனாவான்; தான் வெற்றி கொண்ட நாட்டினை மேம்படுத்தும் பொருட்டுத் தலைவியை நீங்கியிருக்கிறான். தான் வென்ற நாட்டு மக்கள் கவலையைத் தீர்த்து ஆவன செய்து புகழ் பெற்று அங்கே வாழ்ந்து கொண்டிருக்கிறான். இந்நிலையில் அவன் திரும்பி வருவதாய்ச் சொன்ன இளவேனில் தொடங்கிவிட்டது. ஆனால் அவன் வந்து சேரவில்லையே எனத் தலைவி வருந்துகிறாள். அயல் நாட்டில் அறத்தை நிறுத்திப் புகழொடு இருந்து கொண்டிருப்பவன் இங்கே வந்து, 'எனக்கு எங்கே அருளுவான்?' என்று மனம் கலங்கி நிற்கிறாள். தோழி, 'தலைவியே! வருந்தாதே! அவன் வந்து கொண்டிருக்கிறான் என்பதை அறிவிக்கும் தூதாகத்தான் இந்த இளவேனில் தொடங்கியுள்ளது' என்று சொல்லித் தேற்றுகிறாள்.

சொற்பொருள்

1. ஒரு குழை ஒருவன் - ஒரு காதிலே மட்டும் குழையை அணிந்தவன், பலராமன்.
2. பருதி - சூரியன்; நனை - அரும்பு; ஊழ்த்த - மலர்ந்துள்ள.

3. மீன் ஏற்றுக் கொடியோன் - சுறாமீனைக் கொடியாய்க் கொண்டுள்ள காமன்; மிஞிறு - வண்டு.
4. ஏனோன் - தம்பி, காமன் தம்பியான சாமன்; கிளர்பு - தோன்றும்; கஞலிய - நிறைந்த.
5. ஆன் ஏற்றுக் கொடியோன் - எருதினைக் கொடியாய்க் கொண்டுள்ள சிவன்; எதிரிய - நிறம் போன்ற.

1-5 மராம், செருந்தி, காஞ்சி, ஞாழல், இலவம் ஆகியன மரங்களாகும்.

7. பொருகரை - நீர் அலைக்கும் கரை.
8. நோதக - வருந்த; மேதக - மேன்மையுற.
9. புதிது - தேன்; பருவம் - இளவேனில்.
10. தொல் கவின் - பழைய அழகு.
11. ஒல்குபு - தளர்ந்து, வருந்தி; உலையாது - வருந்தாது.
12. விருந்து நாடு - புதிய நாடு.
13. தேன் - தேனீக்கள்; திருமருதத்துறை - வையையாற்றில் உள்ள ஒரு துறை.
14. வசை - குற்றம்.
15. நசை - விருப்பம்; தாங்கி - பாதுகாத்து.
16. இசை - புகழ்; ஏதில் நாடு - பகைவர் நாடு.
17. அறல் - ஆற்றில் விட்டுவிட்டு ஓடும் தண்ணீர்; சாஅய் - குறைந்த.
18. திறல் சான்ற - பெருமை மிக்க.
19. ஊறு - துன்பம்; உலைதல் - வருந்துதல்.
20. ஆறு இன்றி - முறையில்லாமல்; வெஃகுதல் - பேராசைப்படுதல்.
22. தெருமரல் - மனச்சுழற்சி கொள்ளாதே, மனம் கலங்கி வருந்தாதே.
23. பொரு முரண் - மாறுபட்டுப் போர் செய்த; யானையர் - யானைப்படை கொண்டவர்; மலைந்து - எதிர்த்து; எழுந்தவர் - வெற்றி பெற்றவர்.
24. செரு - போர்.

தலைவன் கூற்று

அகநானூறு 144 **மதுரை அளக்கர் ஞாழலார் மகனார் மள்ளனார்**

திணை : முல்லை

கூற்று

வினைமுற்றிய தலைமகன், தன் நெஞ்சிற்கு உரைப்பானாய்ப் பாகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தான் சென்ற வினை முடிந்து திரும்புகின்ற தலைவன், தன் பாகன் கேட்குமாறு நெஞ்சத்தினிடம் சொல்லியது.

'வருதும்' என்ற நாளும் பொய்த்தன;
அரிஏர் உண்கண் நீரும் நில்லா;
தண்கார்க்கு ஈன்ற பைங்கொடி முல்லை
வைவாய் வால்முகை அவிழ்ந்த கோதை
பெய்வனப்பு இழந்த கதுப்பும் உள்ளார்,
அருள்கண் மாறலோ மாறுக– அந்தில்
அறன்அஞ் சலரே! ஆயிழை! நமர்எனச்
சிறிய சொல்லிப் பெரிய புலப்பினும்,
பனிபடு நறுந்தார் குழைய, நம்மொடு,
துனிதீர் முயக்கம் பெற்றோள் போல,
உவக்குநள் – வாழிய, நெஞ்சே! விசும்பின்
ஏறுஎழுந்து முழங்கினும் மாறுஎழுந்து சிலைக்கும்
கடாஅ யானை கொட்கும் பாசறை,
போர்வேட்டு எழுந்த மள்ளர் கையதை
கூர்வாள் குவிமுகம் சிதைய நூறி,
மான்அடி மருங்கில் பெயர்த்த குருதி
வானமீனின் வயின்வயின் இமைப்ப,
அமர்ஓர்த்து அட்ட செல்வம்
தமர்விரைந்து உரைப்பக் கேட்கும் ஞான்றே.

தெளிவுரை

"நெஞ்சே! வாழ்க! தலைவி தோழியிடம், 'தோழி, நம் தலைவன் நாம் வருவோம் என்று குறித்துச் சென்ற நாளும்

பொய்த்தது. செவ்வரி படர்ந்த மை தீட்டப்பட்ட கண்கள் நீர் சொரிவது நிற்கவில்லை. கார் கால மழை பெய்தவுடன் பசிய முல்லைக் கொடியில் அரும்புகள் வெண்மையாய் மலர்ந்தன. அம்மலர்களை எடுத்துத் தொடுத்து அணியும் அழகை என் கூந்தல் இழந்தது. முல்லைமாலை சூட்டப்பட்ட கூந்தலுடன் என்னைப் பார்க்க வேண்டும் என்னும் நினைப்பும் அவருக்கு ஏற்படவில்லை. என்மீது அவர் அருள் இல்லாதவராயினும் ஆகட்டும்; தமக்குரிய அறத்திலிருந்து பிறழக் கூட அவர் அஞ்சவில்லையே' என்று சிறிய அளவில் சொல்லிப் பெரிய அளவில் வருத்தமுற்றிருப்பாள்.

"நம் வீரர்கள் தங்கும் பாசறைக்குக் காவலாய்ச் சுற்றிச் சுற்றி வரும் ஆற்றல் மிக்க யானைகள் இடி இடித்தாலும், அது பகைவரின் போர் முரசு எனக் கருதி அதற்குப் போட்டியாகப் பிளிறும். நம் போர் வீரர், போர் அறிவிப்பு வந்தவுடன் அதை விரும்பிக் கிளர்ந்து எழுந்தனர். அவர்கள் கையில் உள்ள கூரிய வாள்முனை பகைவர்களைக் கொன்றழித்து, அவர்களது இரத்தம், குதிரைகள் கால் பதித்ததால் உண்டாகிய சிறு குழிகளில் நிரம்பி, பார்க்கும் இடந்தோறும் நட்சத்திரங்கள் போல மின்னுமாறு செய்தது. எம் போர்த்திறனை நன்கு ஆராய்ந்து, பகைவர் படையை வென்று அதனால் நான் பெற்ற செல்வம் இத்துணையது என்று நம்முடன் உள்ளவர் விரைந்து சென்று உரைப்பர். அதைக் கேட்கும் நாளில், என் பிரிவால் உண்டாகிய வாட்டம் நீங்கப் பெற்று என்மீது உள்ள வெறுப்பினை ஒழித்து குளிர்ச்சி பொருந்திய மாலை குழைய என்னைத் தழுவியதுபோல மகிழ்வாள்; இதை நீ காண்பாய்" என்று தன் நெஞ்சத்தினிடம் கூறுவதுபோலத் தலைவன் கூறினான்.

கருத்து

"நெஞ்சே! நாம் பகைவரை அழித்ததனால் பெற்ற செல்வத்தை நம்முடனிருப்பவர் சென்று சொல்லக் கேட்டால், தலைவி நம்மீது கொண்டுள்ள வெறுப்பை நீக்கி நம்மைத் தழுவியது போன்ற மகிழ்ச்சி அடைவாள்" என்று தேர்ப்பாகன் கேட்குமாறு தன் நெஞ்சத்தினிடம்

தலைவன் கூறினான். (அது கேட்ட பாகன், தேரை விரைந்து செலுத்தித் தன்னைத் தலைவியிடம் சேர்க்க வேண்டுமென்பது தலைவனின் கருத்து.)

விளக்கம்

தன் மன்னனுக்காகப் போர் புரிந்து வெற்றி பெற்றுப் பரிசுப் பொருள்களுடன் திரும்பும் தலைவன், தன் பாகன் கேட்க தன் நெஞ்சத்தினிடம் கூறியது:

“நெஞ்சே! என் தலைவி தன் தோழியிடம், ‘தோழி! நம் தலைவன் தான் குறிப்பிட்ட நாளில் வரவில்லை. கார் காலம் தொடங்கி முல்லை மலர்ந்ததையும், என் கூந்தல் முல்லை மலர் சூடும் அழகை இழந்தது என்பதையும் அவர் கருதினாரில்லை’ என்று சொல்லிப் புலம்பிக் கொண்டிருப்பாள். ஆயினும், நான் பகைவரை அழித்துப் பெற்ற செல்வம் இத்துணையது என நம்முடன் உள்ளவர் சென்று உரைப்பர். அப்பொழுது அவள் வெறுப்புத் தீர்ந்து என் தார் குழையப் புணர்ச்சி பெற்றதுபோல மகிழ்ச்சி அடைவாள். அவள் வாழ்க” என்றான். (அது கேட்டுப் பாகன் தேரை விரைந்து செலுத்துவான் என்பது தலைவன் கருத்து. மற்றவர் தன் வெற்றியைத் தலைவியிடம் சொல்லுமுன் தான் அவளைச் சென்றடைய வேண்டும். அதற்கேற்பப் பாகன் தேரைச் செலுத்த வேண்டும் என்பது தலைவனின் எதிர்பார்ப்பு.)

சொற்பொருள்

1. வருதும் - வருவேன்.
2. அரிஏர் - செவ்வரி பொருந்திய அழகிய; நீர் - கண்ணீர்.
3. தண்கார் - குளிர்ச்சி பொருந்திய கார்ப்பருவம்.
4. வைவாய் - கூரிய முனை; வால்முகை - வெண்ணிற மொட்டு; கோதை - தலைமாலை.
5 கதுப்பு - கூந்தல்; உள்ளார் - நினையார்.
6. அந்தில் - அவ்விடம் (ஓர் அசைச்சொல்).
7. நமர் - நம் உறவினர், தலைவர்.
8. புலப்பினும் - வருத்தமுற்றாலும்.
9. பனிபடு - குளிர்ச்சி பொருந்திய.
10. துனிதீர் - வெறுப்பு நீங்கிய.
11. உவக்குநள் - மகிழ்ச்சியடைவாள்.

12. ஏறு - இடி; மாறுஎழுந்து - அதற்கு எதிராய் எழுந்து; சிலைக்கும் - முழங்கும்.
13. கடாஅம் - மதம்; கொட்கும் - சுழலும்.
14. வேட்டு - விரும்பி; மள்ளர் - வீரர்; கையதை - கையிடத்திலுள்ள.
15. குவிந்த - முனை; சிதைய - அழிந்திட; நூறி - வீசிக் கொன்று.
16. மான்அடி - குதிரைகளின் கால் அடி; மருங்கில் - பதிந்த பள்ளங்களில்; பெயர்த்த குருதி - பாய்ந்த இரத்தம்.
17. வயின்வயின் - இடந்தோறும் இடந்தோறும்; இமைப்ப - மின்ன.
18. அமர் - போர்; ஓர்த்து - ஆராய்ந்து; அட்ட - வென்ற.
19. தமர் - சுற்றத்தார், உடனிருக்கும் வீரர்கள்; ஞான்று - அப்பொழுது.

தலைவன் கூற்று

அகநானூறு 44 **குடவாயில் கீரத்தனார்**

திணை : பாலை

கூற்று

வினை முற்றி மீளும் தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் கருதிச் சென்ற போர்ச்செயல் முடிவுற்றதால் தான் தலைவியை அடைந்து இன்புற, தேர்ப்பாகனிடம் தேரினை விரைந்து செலுத்துமாறு கூறியது.

வந்துவினை முடித்தனன் வேந்தனும்; பகைவரும்
தம்திறை கொடுத்துத் தமர்ஆ யினரே;
முரண்செறிந் திருந்த தானை இரண்டும்
ஒன்றுஎன அறைந்தன பணையே; நின்தேர்
முன்இயங்கு ஊர்தி பின்னிலை ஈயாது,
ஊர்க, பாக! ஒருவினை, கழிய—
நன்னன், ஏற்றை, நறும்பூண் அத்தி,
துன்அருங் கடுந்திறல் கங்கன், கட்டி,
பொன்அணி வல்வில் புன்றுறை என்றுஆங்கு,
அன்றுஅவர் குழீஇய அளப்புஅருங் கட்டூர்ப்
பருந்துபடப் பண்ணிப் பழையன் பட்டென,

கண்டது நோனான் ஆகி, திண்தேர்க்
கணையன் அகப்பட, கழுமலம் தந்த
பிணைஅல்அம் கண்ணிப் பெரும்பூட் சென்னி
அழும்பில் அன்ன அறாஅ யாணர்,
பழம்பல் நெல்லின் பல்குடிப் பரவை,
பொங்கடி படிகயம் மண்டிய பசுமிளை,
தண்குட வாயில் அன்னோள்,
பண்புடை ஆகத்து இன்துயில் பெறவே!

தெளிவுரை

"தேர்ப்பாகனே! நம் அரசன் பகைவருடன் போரிட்டு வெற்றி பெற்றான். எதிர்த்த பகைவரும் அவனுக்குரிய திறைப் பொருளைக் கொடுத்துச் சுற்றத்தார் ஆயினர். முரண்பட்ட படைகள் இரண்டும் ஒன்றுசேர்ந்து உறவாயின. சோழரோடு சேரர் நிகழ்த்திய போரில் சோழன் பெரும்பூண் சென்னியின் படைத்தலைவன் பழையன் என்பானைச் சேரர் படைத் தலைவர்கள் நன்னன், ஏற்றை, அத்தி, கங்கன், கட்டி, புன்றுறை என்னும் அறுவரும் கூடிச் சிறப்பு வாய்ந்த கட்டூர் என்னும் போர்க்களத்தில் கொன்றுவிட்டனர்.

"அதனால் மனம் பொறாதவனாகிய சோழ மன்னன், வலிய தேரினையுடைய சேரர் படைத்தலைவன் கணையனைக் கைப் பற்றியதோடு சேர நாட்டின் சிறந்த ஊராகிய கழுமலத்தையும் கைப்பற்றினான். இவ்வாறு போர் முடிந்தது. வெற்றி கொண்ட சோழனின் குடவாயில் என்னும் ஊரைப் போன்ற அழகினைப் பெற்றவள், நம் தலைவி.

"குடவாயில், பாண்டியரது அழும்பில் என்னும் ஊரைப் போன்று நீங்காத வருவாயையும், நீர் வளத்தால் நெல் வளத்தை யும், சிறந்த குடிகளையும், யானைகள் படியும் குளங்களையும், அடர்ந்த காவற்காடுகளையும் கொண்ட அழகும் சிறப்பும் வாய்ந்த ஊர். இக்குடவாயில் போன்ற அழகினைப் பெற்ற தலைவியுடன் இணைவதற்கு, உன் தேரினை முந்திச் செல்லும் தேர் இல்லை என்று சொல்லும்படியாக எல்லாத் தேர்களுக்கும் முன்னே செல்லுமாறு தேரை விரைந்து செலுத்துக" என்று தலைவன் பாகனிடம் கூறினான்.

கருத்து

பாக! கருதி வந்த வேலை முடிந்தது. தலைவியின் மார்பில் நான் துயின்று இன்புற உன் தேரினை, மற்றெல்லாத் தேர்களுக்கும் முன்னால் செல்லுமாறு விரைந்து செலுத்து.

விளக்கம்

'பாக! அரசனும் போர் முடித்தனன்; பகைவர்களும் திறைப் பொருளைத் தந்து நண்பர்கள் ஆயினர்; தம்முள் பகை கொண் டிருந்த சேனைகளும் ஒன்றுபட்டன. இனிப் போர்க்களத்தில் வேலையில்லை. அதனால் உன் தேரை முன்னால் செல்கின்ற எல்லா ஊர்திகளுக்கும் முன்னே செல்லுமாறு செலுத்து. குடவாயிலையொத்த அழகினைக் கொண்ட தலைவியின் மார்பிலே நான் இனிய துயிலைப் பெறும்படி, உன் தேரினை விரைந்து செலுத்து' என்று போர்ச்செயல் முடித்துத் திரும்பு கின்ற தலைவன் தேர்ப்பாகனை நோக்கிக் கூறினான்.

குறிப்பு

நன்னன் : சேரர் படைத்தலைவன்; **ஏற்றை** - சேரர் படைத்தலைவன்.

அத்தி : இவன் சேர இளவரசன்; சோழ இளவரசி ஆதிமந்தி காதலன்; இவனை ஆட்டனத்தி என்பர். காவிரி வெள்ளம் இவனை இழுத்துச் சென்று மறைத்தமையால், ஆதிமந்தி இவனை எங்கும் தேடினள். (அகநா. 396, 13; புறநா. 31).

கங்கன் : கங்கர் என்பவர்க்குத் தலைவனாய் இருப்பான் என ஊகிக்கப்படுகின்றான்.

புன்றுறை : சேரர் படைத்தலைவன்.

பழையன் : காவிரிக்கரையிலிருந்த போஓர் என்னும் ஊரிலிருந்தவன்; இவன் சோழர் படைத்தலைவன்; குறுநில மன்னன்.

கணையன் : இவன் ஆரியப் பொருநன் ஆவான். பாணன் என்பவனோடு இவன் பொருது, கை வேறு, தோள்வேறாகக் கிடந்தபோது அதைக் கண்டு நாணினன் என அகநா. 386ஆம் பாட்டால் தெரிகிறது.

கழுமலம் : இது சோழன் செங்கணான், சேரமான் கணைக்காலிரும் பொறையோடு போர் செய்த இடம். தோற்றுச் சிறையிலிடப்பட்ட சேரமான்,

காவலர் நீர் தரத் தாமதித்ததால், மானமிழந்து வாழ்வதினும் இறப்பதே மேல் என்று உயிர் துறந்தனன்.

அழும்பில் : இவ்வூரிலிருந்த வேளாளன் ஒருவன் சேரன் செங்குட்டுவனுக்கு நண்பனாயிருந்தான் என்று அறிகிறோம். சோழ நாட்டிலும் இப்பெயரில் ஓர் ஊர் இருந்துள்ளது.

சொற்பொருள்

1. வினை - போர்ச்செயல்.
2. திறை - கப்பம்; தமர் - நட்பினர், உறவினர்.
3. முரண் - வேறுபாடு; தானை - படை.
4. பணை - முரசம்.
5. இயங்குதல் - செல்லுதல்; ஊர்தி - தேர்; பின்நிலை ஈயாது - பின்னே செல்லாது (எல்லாவற்றுக்கும் முன்னே).
6. ஊர்க - செலுத்துக.

7-9 நன்னன், ஏற்றை, நறும்பூண் அத்தி, கங்கன், கட்டி, புன்றுறை இவர்கள் சேரன் படைத்தலைவர்கள்.

7. பூண் - அணிகலன் அணிந்த.
8. துன்அரும் - நெருங்குதற்கரிய; கடுந்திறல் - மிக்க வலிமை.
9. பொன்அணி - பொன் அணி அணிந்த.
10. குழீஇய - கூடி (போர் செய்தற்கு நின்ற); கட்டூர் - ஒரு போர்ப்பாசறை.
11. பட - சுற்ற; பண்ணி - போரிட்டு; பழையன் - சோழர் படைத் தலைவன்; பட்டென - இறந்தனன்.
12. நோனான் - பொறாதவன் ஆகி.
13. கணையன் - சேரர் படைத்தலைவன்; கழுமலம் - ஒரு போர்க்களம்
14. பிணைஅல்அம் கண்ணி - கட்டப்பட்ட தலைமாலை; பெரும்பூட் சென்னி - சோழ மன்னன்.
15. அழும்பில் - பாண்டியரது ஊர்; அறாஅ - நீங்காத; யாணர் - புது வருவாய்.
16. பல்குடிப் பரவை - பல குடிப்பரப்பினைக் கொண்டது.
17. பொங்கடி படிகயம் - யானை படியும் குளம்; மண்டிய - நெருங்கிய பசுமிளை - பசிய காவற்காடு.
18. தண் - குளிர்ந்த; குடவாயில் - ஓர் ஊர்.
19. அகம் - மார்பு.

தலைவன் கூற்று

அகநானூறு 54 **மாற்றூர்கிழார் மகனார் கொற்றங் கொற்றனார்**

திணை : முல்லை

கூற்று

வினை முடித்து மீளும் தலைமகன், தேர்ப்பாகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

வேந்தன்பொருட்டுத் தலைவன் சென்றிருந்த போர்ப்பணி முடிவுற்றது. அவன் வீடு திரும்பிக்கொண்டிருக்கிறான். மாலை நேரம். தன் வரவை எதிர்பார்த்து வாயிலிலே தலைவி நின்றுகொண்டிருப்பாள் என நினைத்துத் தலைவன் தேர்ப்பாகனிடம் கூறியது.

விருந்தின் மன்னர்அருங்கலம் தெறுப்ப,
வேந்தனும் வெம்பகை தணிந்தனன், தீம்பெயற்
காரும் ஆர்கலி தலையின்று, தேரும்
ஓவத் தன்ன கோபச் செந்நிலம்
வள்வாய் ஆழி உள்உறுபு உருள,
கடவுக காண்குவம்– பாக! மதவுநடைத்
தாம்புஅசை குழவி வீங்குசுரை மடியக்
கனையலங் குரல கால்பரி பயிற்றி,
படுமணி மிடற்ற; பயநிரை ஆயம்
கொடுமடி உடையர் கோல்கைக் கோவலர்
கொன்றைஅம் குழலர் பின்றைத் தூங்க,
மனைமனைப் படரும் நனைநகு மாலை,
தனக்கென வாழாப் பிறர்க்குஉரி யாளன்
பண்ணன் சிறுகுடிப் படப்பை நுண்இலைப்
புன்காழ் நெல்லிப் பைங்காய் தின்றவர்
நீர்குடி சுவையில் தீவிய மிழற்றி,
'முகில்நிலாத் திகழ்தரும் மூவாத் திங்கள்!
பொன்னுடைத் தாலி என்மகன் ஒற்றி
வருகுவை ஆயின், தருகுவென் பால்'என,
விலங்குஅமர்க் கண்ணன் விரல்விளி பயிற்றித்
திதலை அல்குல்எம் காதலி
புதல்வற் பொய்க்கும் பூங்கொடி நிலையே.

தெளிவுரை

"பாகனே! புதிய பகை மன்னர்கள் திறைப்பொருளைக் கொடுத்ததால் வேந்தனும், பகை தணியப்பெற்றான். எனவே, வினை முடிந்தது. கார் காலத்திற்கு ஏற்ப மழை பெய்ததால், சிவந்த இந்திரக் கோபப் பூச்சிகள் ஓவியம் போல் பரந்து திரிகின்றன. ஈரப்பசை கொண்ட செம்மண் தரையில் தேர்ச்சக்கரம் பதியுமாறு தேர் விரைவாய்ச் செல்லட்டும்.

"மடித்துக் கட்டிய ஆடையுடன், கொன்றைத் தீங்குழலை ஊதியவாறு இடையர்கள் கையில் கோலுடன் மெதுவாய் நடந்து சென்று கொண்டிருக்கின்றனர். அவர் முன்னே, மேய்ச்சலுக்கு விடப்பட்ட பசுக்கூட்டங்கள் தம் கழுத்தில் கட்டப்பட்ட மணிகள் ஒலிக்கச் சென்று கொண்டுள்ளன.

"அப்பசுக்கள், வீட்டில் கயிற்றினால் பிணிக்கப்பட்டுள்ள தம் கன்றுகளை நினைத்துப் பால் சுரந்த மடிகளுடன் சென்று கொண்டுள்ளன. இத்தகைய மாலைப்பொழுதில், தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் பண்ணனது சிறுகுடியில் உள்ள தோட்டத்தில் நெல்லிக்கனியைத் தின்று நீர் குடித்தவர் பெறும் சுவையைப் போல, இனிய சொற்களைச் சொல்லி என் மனைவி, மகனுக்குச் சோறு ஊட்டிக்கொண்டிருப்பாள். அப்போது அவள் அவனுக்கு நிலவைக் காட்டியும், 'நிலவே! நீ என் மகனுடன் விளையாட வந்தால் உனக்கும் பால் தருவேன்' என்று நிலாவை விரல் நீட்டி அழைத்தும் சோறூட்ட முற்படுவாள்.

"ஒருக்கணித்த பார்வையுடன் புதல்வனின் அழுகையை மறைக்கும் என் மனைவியின் நிலையைக் காண, பாகனே, நீ தேரை விரைந்து செலுத்து" என்று தலைவன் கூறினான்.

கருத்து

நிலவைக் காட்டி மகனுக்கு உணவூட்டும் என் தலைவியைக் காணு தற்குப் பாகனே! தேரினை விரைவாய்ச் செலுத்து.

விளக்கம்

வினைமுடித்துத் திரும்பும் தலைவன் தேர்ப்பாகனை நோக்கிச் சொல்லுகிறான்: "பாக! பகைவர்கள் தோற்றுத் திறை கொடுப்ப

அரசனும் பகை நீங்கினான். கார்ப்பருவ மழையும் பெய்யத் தொடங்கிவிட்டது. கோவலர் குழலிசைத்துச் செல்ல, பசுக் கூட்டங்கள் அவர் முன்னே வீடு நோக்கிச் செல்லுகின்றன. என் மனைவி, தன் புதல்வனை வைத்துக்கொண்டு நிலவை நோக்கி, "நிலவே! பொன் தாலியணிந்த என் மகனோடு விளையாட வருவாயாயின் உனக்கும் பால் தருவேன்" என்றழைப்பாள். அப்போது அவள் பேச்சு, வள்ளல் பண்ணனின் தோட்டத்து நெல்லிக்காயைத் தின்று தண்ணீர் குடிக்கும்போது உண்டாகும் சுவையைப் போன்றதாயிருக்கும். இவ்வாறு, சுவையான பேச்சுகளை மெல்ல இனிதாய்ப் பேசி, நிலவை மகனுடன் விளையாட அழைக்கும் என் காதலியைக் காண விரும்புகிறேன்; நீ தேரினை விரைவாய்ச் செலுத்து."

குறிப்பு

பண்ணன் : இவன் சிறுகுடிகிழான் பண்ணன் என்று வழங்கப்படுவான். இவன் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனால், 'யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய' எனவும், 'பசிப்பிணி மருத்துவன்' எனவும் பாராட்டப்பட்டவன் (புறநா. 173). தன்னை நாடி வந்தவர்க்கு இவன் வரையாது சோறு ஈயும் வள்ளலாய் விளங்கியிருக்கிறான்.

சிறுகுடி : இவ்வூர் பண்ணனுக்குரியது;, காவிரியின் வடகரையில் அமைந்திருந்தது. இப்பாடலில் குழந்தைக்கு நிலவைக் காட்டிச் சோறு ஊட்டப்பட்டது என்னும் குடும்பச்சூழலும், நெல்லிக்காய் தின்ற பின்னர் நீர் குடித்தால் வாய் இனிக்கும் எனும் தாவர இயல் குறிப்பும் சுட்டப்பட்டுள்ளன.

சொற்பொருள்

1. விருந்தின் மன்னர் - புதிய அரசர்; கலம் - அணிகலன்; தெறுப்ப - (கப்பமாய்க்) குவிப்ப.
2. தீம்பெயல் - இனிய மழை.
3. காரும் - மேகமும்; ஆர்கலி - மிக்க ஆரவாரத்துடன்; தலையின்று - பெய்தது.
4. ஓவம் - சித்திரம்; கோபம் - இந்திரகோபம், தம்பலப்பூச்சி.
5. வள்வாய் - உறுதி வாய்ந்த; ஆழி - சக்கரம்; உள்உறுபு - நிலத்திலே பதிந்து.
6. மதவுநடை - செருக்கிய நடை.

7. தாம்பு அசை - கயிற்றிலே கட்டப்பெற்ற; குழவி - கன்று; வீங்குசுரை மடி - (பால் சுரத்தலால்) பெருத்த காம்பினைக் கொண்டுள்ள பால்மடி.
8. கால்பரி பயிற்றி - காலால் விரைந்து நடந்து.
9. மிடறு - கழுத்து; பயநிரை - பயன் தரும் பாற்பசுக்கள்.
10. கொடுமடி - வளைத்துக் கட்டப்பட்ட உடை; கோல்கை - கையிலே கோலைக் கொண்ட; கோவலர் - இடையர்.
11. கொன்றைஅம் குழல் - கொன்றைக்கனியால் ஆக்கப்பட்ட இசைக்குழல்; பின்றை - பின்னே; தூங்க - மெதுவாய் நடந்து வர.
12. படரும் - செல்லும்; நனைநகு - அரும்புகள் மலரும்.
14. பண்ணன் - வள்ளல்களுள் ஒருவன்; சிறுகுடி - பண்ணனுக்குரிய ஊர்; படப்பை - தோட்டம்.
15. புன்காழ் - புல்லிய வித்து; தின்றவர் - உண்டவர்.
16. நீர்குடி - நீர் குடிக்கும்போது; தீவிய - இனிய; மிழற்றுதல் - கூறுதல்.
17. முகில்நிலா - அரும்பும் நிலா; மூவா - இளைய (முதுமையுறாத).
18. ஒற்றி - நினைந்து.
20. விலங்கு - ஒருக்கணித்து நோக்கும்; அமர் - விரும்பத்தக்க; விரல் விளி - விரலால் அழைத்தல்.
21. திதலை - தேமல்.
22. பொய்க்கும் - தன் கருத்துணராமை மறைக்கும்.

தலைவன் கூற்று

அகநானூறு 124 — **மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்**

திணை : முல்லை

கூற்று

தலைமகன் தேர்ப்பாகற்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

வேந்தனுக்குத் துணையாகப் போர்மேற்சென்ற தலைவன், பகைவர் பணிந்தமையால் போரும் நின்றதாதலின், உடனே திரும்பித் தலைவியைக் காண வேண்டும் என்னும் மகிழ்ச்சியால் தேர்ப்பாகனை நோக்கிக் கூறியது.

'நன்கலம் களிற்றொடு நண்ணார் ஏந்தி,
வந்துதிறை கொடுத்து, வணங்கினர், வழிமொழிந்து,
சென்றீக' என்ப ஆயின், வேந்தனும்
நிலம்வருத் துறாஅ ஈண்டிய தானையொடு
இன்றே புகுதல் வாய்வது; நன்றே,
மாட மாண்நகர்ப் பாடுஅமை சேக்கைத்
துனிதீர் கொள்கைநம் காதலி இனிதுற,
பாசறை வருத்தம் வீட, நீயும்—
மின்னுநிமிர்ந் தன்ன பொன்இயற் புனைபடைக்
கொய்சுவல் புரவி, கைகவர் வயங்குபரி,
வண்பெயற்கு அவிழ்ந்த பைங்கொடி முல்லை
வீகமழ் நெடுவழி ஊதுவண்டு இரிய,
காலை எய்த, கடவுமதி— மாலை
அந்திக் கோவலர் அம்பணை இமிழ்இசை
அரமிய வியலகத்து இயம்பும்
நிரைநிலை ஞாயில் நெடுமதில் ஊரே.

தெளிவுரை

"பாகனே! பகைவர் அணிகலன்களையும் யானைகளையும் கப்பமாய்ச் செலுத்திப் பணிந்து வணங்கிப் பணிவுமொழிகள் கூறித் 'தாங்கள் சென்று எமக்கு அருள் செய்க' என வேண்டி நின்றதால் நம் வேந்தனும் திரண்ட சேனையுடன் இன்றே ஊர்க்குத் திரும்புதல் கூடும்.

"என் தலைவி என் பிரிவுக்காக வெறுப்புறாமல் அமைதியாய், மாடங்களைக் கொண்ட நமது மாளிகையில் நன்கு அமைக்கப் பெற்ற படுக்கையில் படுத்திருப்பாள். அவள் மகிழ்ச்சி அடையவும், அவள் துன்பத்தைத் தீர்க்கவும் நாமும் உடனே செல்லலாம்.

"நீயும் பொன்னாலாகிய மின்னுகின்ற சேணத்தையும், கத்தரித்த பிடரிமயிரையும், வார் பிடித்துச் செலுத்துவோரின் கைக்கு இதமான ஓட்டத்தையும் கொண்டுள்ள குதிரையைப் பூட்டிய தேரினை ஓட்டு. வழியெங்கும் மழை பெய்தலால் மலர்ந்து மணம் கமழும் முல்லைப் பூக்களில் தேனுண்ணும் வண்டுகள் பறந்து ஓடுமாறு தேர் செல்லட்டும்.

"கோவலர் அந்தி நேரத்தில் பசுக்களை ஒன்றுசேர்ப்பதற்காக இசைக்கும் புல்லாங்குழலின் இசை, காட்டைக் கடந்து நிலா முற்றத்தில் கேட்கும். அங்குப் பாதுகாப்பினைக் கொண்ட சூட்டுகளைக் கொண்ட மதில் சூழ்ந்திருக்கும். அத்தகைய ஊர்க்கு மாலையில் சென்றடையும்படி தேரைச் செலுத்துக.

கருத்து

பாக! மாலை நேரத்தில் தேர் மாளிகையைச் சென்றடையுமாறு தேரினைச் செலுத்து.

விளக்கம்

பாக! நல்ல பல பொருள்களையும், யானைகளையும் திறைப் பொருளாய்க் கொடுத்துப் பகைவர் வணங்கினர்; நம் வேந்தனும் சேனையுடன் இன்று ஊர் திரும்புதல் கூடும்.

நம் ஊரில் நம் மாளிகையில் நன்கு அமைக்கப்பட்டிருக்கும் படுக்கையில் என் தலைவி, நான் அருகில் இல்லை என்னும் துன்பத்துடன் படுத்திருப்பாள். அவள் இனிமை கொள்ளவும், பாசறையில் நாமுற்ற துன்பம் நீங்கவும், மாலை நேரத்தில் நாம் ஊர் சென்றடையுமாறும் நீ தேரினைச் செலுத்து.

சொற்பொருள்

1. நன்கலம் - நல்ல அணிகலன்; நண்ணார் - பகைவர்.
2. திறை - கப்பம்; வழிமொழி - வழிபடும் (பணிவான) சொற்கள்.
4. நிலம் வருத்துறாஅ - பாரமிகுதியால் நிலத்தை வருத்திய; ஈண்டிய - திரண்ட; தானை - சேனை.
5. புகுதல் - தன் ஊர்க்குச் செல்லுதல்; வாய்வது - உண்மையாகும், கூடும்.
6. பாடு அமை - நன்கு அமைக்கப்பட்ட; சேக்கை - படுக்கை.
7. துனி - வெறுப்பு.
8. வீட - நீங்க.
9. மின்னு - மின்னல்; புனை - சேணம்.
10. சுவல் - பிடரி மயிர்.
11. வண்பெயல் - மிகுந்த மழை; அவிழ்ந்த - மலர்ந்த.
12. வீ - மலர்; இரிய - ஓட.
13. கடவு - ஓட்டு.

14. அம்பணை - அழகிய குழல்.
15. அரமியம் - நிலா முற்றம்; வியல் அகம் - அகன்ற மாளிகை; இயம்பும் - ஒலிக்கும்.
16. நிரைநிலை - வரிசையாய் நிற்கும்; ஞாயில் - சூடு, மதில் - உறுப்பு.

தலைவன் கூற்று

அகநானூறு 204 **மதுரைக் காமக்கணி நப்பாலத்தனார்**

திணை : முல்லை

கூற்று

வினை முற்றிய தலைமகன், தேர்ப்பாகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

போர் வினைமேற்சென்ற தலைவன், வினை முடிந்தவழி மீண்டு வருகின்றவன், தேர்ப்பாகனை நோக்கிக் கூறியது.

உலகுஉடன் நிழற்றிய தொலையா வெண்குடை,
கடல்போல் தானை, கலிமா வழுதி
வென்றுஅமர் உழந்த வியன்பெரும் பாசறைச்
சென்று,வினை முடித்தனம் ஆயின், இன்றே
கார்ப்பெயற்கு எதிரிய காண்டகு புறவில்,
கணம்கொள் வண்டின் அம்சிறைத் தொழுதி
மணம்கமழ் முல்லை மாலை ஆர்ப்ப,
உதுக்காண் வந்தன்று பொழுதே; வல்விரைந்து,
செல்க பாகநின் நல்வினை நெடுந்தேர்—
வெண்ணெல் அரிநர் மடிவாய்த் தண்ணுமை
பல்மலர்ப் பொய்கைப் படுபுள் ஓப்பும்
காய்நெல் படப்பை வாணன் சிறுகுடித்
தண்டலை கமழும் கூந்தல்,
ஒண்தொடி மடந்தை தோள்இணை பெறவே.

தெளிவுரை

பாகனே! உலகம் முழுவதற்கும் நிழல் தரும் வெண்குடையையும், கடல் போன்ற சேனையையும், செருக்கிய குதிரையையும்

கொண்டவன், பாண்டிய மன்னன். அவன் போரில் முயன்று வென்ற அகன்ற பெரிய பாசறையில் சென்று நம் பணியை வெற்றி பெற முடித்தோம். (அதனால் நம் வேலை முடிவுற்றது.)

காட்டில் கார் கால மழை பெய்தமையால் அது தழைத்து, காண்பதற்கு இனிதாய் உள்ளது. கூட்டம் கூட்டமாய் வரும் அழகிய சிறகினைக் கொண்ட வண்டின் தொகுதி மணம் வீசும் முல்லை மலரில் மாலை நேரத்தில் மொய்த்து ஆரவாரிக்கிறது. இதோ பார், (நான் திரும்புவதாய்ச் சொல்லிவிட்டு வந்த) கார் காலமும் தொடங்கிவிட்டது.

வெண்ணெல் அரிவோர் அடிக்கும் தோல் மடங்கிய வாயினைக் கொண்ட கிணைப்பறையின் ஒலி, பல்வகையான மலர்களைக் கொண்ட பொய்கையில் பொருந்தியிருக்கும் பறவைகளை ஓட்டும். விளைந்த நெல் வயல்களைக் கொண்ட சிறுகுடி என்னும் ஊர், வாணன் என்பவனுக்குரியது. அவ்வூரில் உள்ள சோலை போன்று மணக்கும் கூந்தலையும், ஒளி பொருந்திய வளையலையும் கொண்டவள், என் தலைவி. அவள் தோளிரண்டனையும் தழுவுவதற்கு இப்பொழுதே, நல்ல தொழிற்சிறப்பமைந்த நீண்ட தேர் விரைந்து செல்லட்டும்.

கருத்து

"கருதி வந்த வேலை முடிந்தது. கார் காலமும் தொடங்கிவிட்டது. பாகனே! நான் தலைவியின் தோளை அணைய உன் தேர் விரைந்து செல்லட்டும்."

விளக்கம்

"பாக! வழுதியின் பாசறைக்குச் சென்று, என் வினை முடித்தேன். இதோ, திரும்புவதாய் நான் குறிப்பிட்ட பருவமும் தொடங்கிவிட்டது. தலைவியின் தோளிணையைத் தழுவி இன்பம் பெற நெடுந்தேர் விரைந்து செல்லட்டும்" என்று தலைவன் பாகனிடம் கூறினான்.

சொற்பொருள்

1. உலகு உடன் - உலகம் முழுதும்; நிழற்றிய - நிழல் செய்த; தொலையா - தோல்வி அறியாத.
2. தானை - படை; கலிமா - செருக்கிய குதிரை; வழுதி - பாண்டியன்.

3. அமர் - போர்; உழத்தல் - செல்லுதல்; வியன்பெரும் - அகன்ற பெரிய.
4. வினை - செயல் (போர்).
5. பெயல் - மழை; எதிரிய - ஏற்றுக்கொண்ட.
6. கணம் - கூட்டம்; அம்சிறை - அழகிய சிறகு; தொழுதி - தொகுதி.
7. ஆர்ப்ப - ஒலிக்க.
8. உதுக்காண் - இதோ பார்; வல் - மிக.
9. நல்வினை - நல்ல தொழிற்சிறப்பமைந்த.
10. அரிநர் - அறுப்போர்; மடிவாய் - தோல் மடங்கிய வாய்; தண்ணுமை - முழவு, கிணைப்பறை.
11. படுபுள் - பொருந்திய பறவை; ஓம்பும் - ஓட்டும்.
12. காய் - முற்றிய, விளைந்த; படப்பை - வயல்; வாணன் - குறுநிலத் தலைவன்; சிறுகுடி - வாணனுடைய ஊர்.
13. தண்டலை - குளிர்ந்த சோலை.
14. தோள் இணை - தோள் இரண்டனையும்.

தலைவன் கூற்று

அகநானூறு 224   ஆவூர் மூலங்கிழார் மகனார் பெருந்தலைச் சாத்தனார்

திணை : முல்லை

கூற்று

வினைமுற்றிய தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் போர்ச்செயல் காரணமாய்ப் பிரிந்தான். அப்போர் முடிந்ததும், பாசறையில் தலைவியை நினைத்துத் தேர்ப்பாகனிடம் கூறியது.

செல்க, பாக! எல்லின்று பொழுதே—
வல்லோன் அடங்குகயிறு அமைப்பக் கொல்லன்
விசைத்துவாங்கு துருத்தியின் வெய்ய உயிரா,
கொடுநுகத்து யாத்த தலைய, கடுநடை,
கால்கடுப்ப அன்ன கடுஞ்செலல் இவுளி,
பால்கடை நுரையின் பரூஉமிதப்பு அன்ன,
வால்வெண் தெவிட்டல் வழிவார் நுணக்கம்
சிலம்பி நூலின் நுணங்குவன பாறிச்

சாந்துபுலர் அகலம் மறுப்பக் காண்தக,
புதுநலம் பெற்ற வெய்துநீங்கு புறவில்,
தெறிநடை மரைக்கணம் இரிய, மனையோள்
ஐதுஉணங்கு வல்சி பெய்துமுறுக்கு உறுத்த
திரிமரக் குரல்இசை கடுப்ப, வரிமணல்
அலங்குகதிர்த் திகிரி ஆழி போழ,
வரும்கொல் தோழி,நம் இன்உயிர்த் துணைஎன,
சில்கோடு எல்வளை ஒடுக்கிப் பல்கால்
அருங்கடி வியல்நகர் நோக்கி,
வருந்துமால், அளியள் திருந்திழை தானே.

தெளிவுரை

" 'தோழி! நம் தலைவர் கலந்துகொண்ட போர் இனிது முடிந்திருக்கும். அவர் ஊருக்குத் திரும்ப வலவன் தேரை ஆயத்தப் படுத்துவான். குதிரைகளின் கழுத்தில் அவற்றின் வேகத்தைக் கட்டுப்படுத்தப் பயன்படும் கடிவாளத்தைக் கட்டியவுடன் அவை கொல்லனது உலைக்களத்தில் உள்ள துருத்தியைப்போல் வெப்பப் பெருமூச்சு விடும். அவற்றை வலவன் தேரில் பூட்டுவான். மிக விரைவாய்ச் செல்லவல்ல குதிரைகளின் வாயிலிருந்து, பாலைக் கடையும்போது மேலேதோன்றும் வெண்ணெய் மிதப்பைப் போன்ற நுரை தெவிட்டலாக அதன் பின்புறத்தில் வழியும். அந்நுரை குதிரை செல்லும் விரைவால் சிலந்தி நூலைப் போல மெல்லிதாகிப் பக்கங்களில் சிதறித் தேரில் செல்வோரின் சந்தனம் பூசப்பட்ட மார்பைக் களங்கப் படுத்தும்.

" 'கார் கால மழை பெய்ததால் புது அழகு பெற்று வெம்மை நீங்கிய முல்லை நிலத்தின் வழி அத்தேர் வரும் காட்டில் திரியும் மான் கூட்டம், குடிசையில் வாழும் இல்லத்தரசி பதமாய்க் காய்ந்த அரிசியைத் திரிகையில் இட்டுச் சுழற்றும்போது உண்டாகும் ஒலியைக் கேட்டு அஞ்சி ஓடும். அந்த ஓசையைப் போலத் தலைவரின் தேர்ச்சக்கரங்கள் மணலில் ஆழ்ந்து உண்டாக்கும். இவ்வாறு நம் இனிய உயிர்த்துணைவராகிய காதலர் இன்று வருவாரோ?' என்று தோழியிடம் கேட்டுத் தலைவி என்னை எதிர்பார்த்திருப்பாள்.

“பாகனே! தலைவி வளையல் ஒலி எழுப்பாதவாறு நெருக்கி வைத்துக்கொண்டு காவல் பொருந்திய நம் வீட்டின் வாயிலை நோக்குவாள். என்னைக் காணாமல் வருந்துவாள். நான் விரைந்து சென்று காண வேண்டும். பொழுது சாய்கிறது. அதனால் தேரை விரைந்து செலுத்து.”

கருத்து

போர் முடிந்துவிட்டது. தலைவி நம்மை எதிர்நோக்கிக் காத்திருப்பாள். பாக! தேரைப் பூட்டி விரைவாய்ச் செலுத்து. அவளைக் காணவேண்டும்.

விளக்கம்

வினைமுற்றி மீண்டு வருகின்ற தலைவன் தேர்ப்பாகனை நோக்கிச் சொல்லுகிறான்: “என் தலைவி, தோழியிடம், தோழி! நம் இன்னுயிர்த் துணையாகிய தலைவர் வருவரோ!’ என்று அகன்ற நம் இல்லத்தின் வாயிலைப் பல முறையும் நோக்கி வருந்துவள்; அவள் மிகவும் இரங்கத்தக்கவள்; அத்துடன் இரவுப் பொழுதும் ஏற்பட்டது. ஆதலின் பாக! விரைந்து நம் தேர் செல்லட்டும்.”

சொற்பொருள்

1. எல்லின்று - இரவாயிற்று.
2. வல்லோன் - வல்லவனாகிய பாகன்; அடங்கு கயிறு - குதிரையை அடக்கிச் செலுத்துவதற்குரிய கடிவாளம்.
3. விசைத்துவாங்கு - வலித்து இழுக்கும்; வெய்ய - வெப்பமாய்; உயிரா - பெருமூச்சு விட்டு.
4. கொடுநுகம் - வளைந்த நுகம்; கடுநடை - விரைந்த ஓட்டம்.
5. கால் - காற்று; கடுப்ப - ஒப்ப; இவுளி - குதிரை.
6. பரூஉமிதப்பு - வெண்ணெயின் பருத்த மிதப்பு.
7. வால்வெண் - மிக வெள்ளிய; தெவிட்டல் - நுரை; வழிவார் - பின்னே வழிந்திடும்.
8. பாறி - சிதறி; நுணங்கல் - நுண்மை.
9. சாந்து - சந்தனம்; புலர் - உலர்ந்த; அகலம் - மார்பு; மறுப்ப - களங்கப்படுத்த.
10. வெய்துநீங்கு - வெப்பம் நீங்கிய; புறவு - முல்லை நிலம்.
11. தெறிநடை - குதித்துச் செல்லும்; மரைக்கணம் - மான் கூட்டம்; இரிய - ஓட.

12. ஐதுஉணங்கு - பதமாய்க் காய்ந்த; வல்சி - அரிசி; முறுக்கு உறுத்த - சுற்றுதல் செய்ய.
13. திரிமரம் - சுழலும் திரிகை; வரிமணல் - வரிப்பட்ட மணற்பரப்பில்.
14. திகிரி - சுழலும் வட்டச் சக்கரம்; போழ - அறுத்துச் செல்ல.
16. சில்கோடு - கழன்று வீழ்ந்ததுபோக எஞ்சிய சில; எல்வளை - ஒளி பொருந்திய வளையல்; ஒடுக்கி - நெருக்கி.
17. கடி - காவல்; வியல்நகர் - அகன்ற வீடு.
18. அளியள் -இரங்கத்தக்கவள்.

தலைவன் கூற்று

அகநானூறு 334 **மதுரைக் கூத்தனார்**

திணை : முல்லை

கூற்று

வினைமுற்றிய தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

வேந்தனுக்குப் படைத்துணையாய்த் தலைவன் சென்ற போர் முடிந்தது. கார் காலமும் தொடங்கிவிட்டது; தலைவியைக் காணவிழைந்த தலைவன் தேர்ப்பாகனிடம் தேரினை விரைந்து செலுத்துமாறு கூறியது.

ஓடா நல்ஏற்று உரிவை தைஇய,
ஆடுகொள் முரசம் இழுமென முழங்க;
நாடுதிறை கொண்டனம் ஆயின்– பாக!–
பாடுஇமிழ் கடலின் எழுந்த சும்மையொடு
பெருங்களிற்றுத் தடக்கை புரையக் கால்வீழ்த்து,
இரும்பிடித் தொழுதியின் ஈண்டுவன குழீஇ,
வணங்குஇறை மகளிர் அயர்ந்தனர் ஆடும்
கழங்குஉறழ் ஆலியொடு கதழ்உறை சிதறி,
பெயல்தொடங் கின்றால், வானம்; வானின்
வயங்குசிறை அன்னத்து நிரைபறை கடுப்ப,
நால்குஉடன் பூண்ட கால்நவில் புரவிக்
கொடிஞ்சி நெடுந்தேர் கடும்பரி தவிராது,

இனமயில் அகவும் கார்கொள் வியன்புனத்து
நோன்சூட்டு ஆழி ஈர்நிலம் துமிப்ப,
ஈண்டே காணக் கடவுமதி– பூங்கேழ்ப்
பொலிவன அமர்த்த உண்கண்,
ஒலிபல் கூந்தல் ஆய்சிறு நுதலே!

தெளிவுரை

"ஒலி முழங்கும் கடலில் சென்று நீரை முகந்த மேகங்கள் ஆரவாரத்துடன் எழுந்து, கரிய பெண்யானைகளின் கூட்டம் போல, வானத்தில் ஒன்றுகூடி, பெரிய ஆண்யானையின் நீண்ட துதிக்கையைப் போலக் கால் இறக்கி மழையைப் பொழிந்தன; மகளிர் விரும்பி விளையாடும் கழங்கு போன்ற பனிக்கட்டி களாகிய மழைத்துளிகளை விரைவாய்ச் சிதறின. கார்ப்பருவம் தொடங்கியது.

"புறங்கொடுக்காத வீரம் பொருந்திய எருதின் தோலால் போர்த்தப்பெற்ற வெற்றி முரசம் ஒலிக்கப் பகைவர் நாட்டை வென்று திறைப்பொருளைப் பெற்றோம்.

"அழகிய நிறத்தால் பொலிவுற்றவளும், மை தீட்டிய கண் களையும், செறிந்த கூந்தலையும், அழகிய சிறு நெற்றியையும் கொண்டவளுமான நம் தலைவியை நாம் இப்போது காண விரும்புகின்றோம்.

"அதனால் பாகனே! சிறகினைக் கொண்ட அன்னப்பறவை யின் கூட்டம், வானில் வரிசையாய்ப் பறந்து செல்லுவதைப் போல, விரைந்து செல்லும் காற்றுப் போன்ற நான்கு குதிரைகள் ஒருசேரப் பூட்டப் பெற்ற கொடிஞ்சியைக் கொண்ட நீண்ட தேரை, வேகம் குறைவுறாமல் ஓட்டு. மயில் கூட்டங்கள் அகவிக்கொண்டிருக்கும் கார் காலத்தில் முல்லை நிலத்தில், வலிமை வாய்ந்த வட்டையினைக் கொண்ட உருளைகள் ஈர நிலத்தைக் கிழித்துச் செல்லுமாறு செலுத்து."

கருத்து

பகைவர் நாட்டினை வென்று திறை பெற்றோம். தலைவியை உடனே காண விழைகிறேன்! ஆதலால், பாகனே! தேரினை விரைவாய்ச் செலுத்து.

விளக்கம்

வினை முடித்து வருகின்ற தலைவன் தன் தலைவியை விரைந்து காண வேண்டும் என்னும் வேட்கை புலப்படும் வண்ணம் தேர்ப் பாகனிடம் சொல்லுகின்றான்: "பாக! வானம் மழை பெய்யத் தொடங்கிவிட்டது. பகைவர் நாட்டை வென்று திறைப் பொருளைப் பெற்றோம். நம் தலைவியை இப்பொழுதே காண வேண்டும். நீண்ட தேர்ச்சக்கரம் அகன்ற முல்லை நிலத்தைக் கிழித்துச் செல்லுமாறு தேரை விரைவாய்ச் செலுத்து."

சொற்பொருள்

1. ஓடா - புறமுதுகு காட்டாத; உரிவை - தோல்; தைஇய - போர்த்த.
2. ஆடுகொள் - வெற்றி கொண்ட.
3. திறை - கப்பம்.
4. இமிழ் - ஒலிக்கும்; சும்மை - முழக்கம்.
5. தடக்கை - பெரிய கை; புரைய - போல; கால்வீழ்த்து - கால் இறக்கி.
6. இரும்பிடி - கரிய பெண்யானை; தொழுதி - கூட்டம்; ஈண்டுவன - சேர்ந்து.
7. வணங்குஇறை - வளைந்த முன்கை; அயர்ந்தனர் - விரும்பி.
8. உறழ் - ஒத்த; ஆலி - பனிக்கட்டி; கதழ் உறை - பெரிய மழைத்துளி.
10. வயங்குசிறை - விளங்குகின்ற சிறகு; நிரைபறை - வரிசையாகப் பறத்தல்.
11. நால்கு - நான்கு; கால்நவில் - வேகத்தால் காற்று எனக் கூறப்படும் (கால் - காற்று; நவில்தல் - சொல்லுதல்).
12. கொடிஞ்சி - தேரின் ஓர் உறுப்பு.
13. இனமயில் - மயிலின் கூட்டம்; அகவும் - ஒலிக்கும்; வியன்புனம் - அகன்ற முல்லை நிலம்.
14. நோன் - வலிய; சூடு - வட்டை; ஆழி - சக்கரம்; ஈர் - ஈரமான; துமிப்ப - கிழித்துச் செல்ல.
15. ஈண்டே - இப்பொழுதே; கடவு - செலுத்து; பூங்கேழ் - பூ நிறம்.
17. ஒலிபல் கூந்தல் - தழைத்த நெருங்கிய கூந்தல்.

தலைவன் கூற்று

அகநானூறு 374 **இடைக்காடனார்**

திணை : முல்லை

கூற்று

பாசறை முற்றிய தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

போரினை மேற்கொண்டு சென்ற தலைவன் பகைவரை வென்று, வெற்றி பெற்று மகிழ்ந்தான். அந் நிலையில் தலைவியைக் காண விரும்பித் தேர்ப் பாகனிடம் தேரினை விரைவாய்ச் செலுத்துமாறு கூறியது.

மாக்கடல் முகந்து மாதிரத்து இருளி,
மலர்தலை உலகம் புதைய, வலன்ஏர்பு,
பழங்கண் கொண்ட கொழும்பல் கொண்மூ
போழ்ந்த போலப் பலஉடன் மின்னி,
தாழ்ந்த போல நணிநணி வந்து,
சோர்ந்த போலச் சொரிவன பயிற்றி,
இடியும் முழக்கும் இன்றி, பாணர்
வடிஉறு நல்யாழ் நரம்புஇசைத் தன்ன,
இன்குரல் அழிதுளி தலைஇ, நன்பல
பெயல்பெய்து கழிந்த பூநாறு வைகறை,
செறிமணல் நிவந்த களர்தோன்று இயவில்,
குறுமோட்டு மூதாய் குறுகுறு ஓடி,
மணிமண்டு பவளம் போல, காயா,
அணிமிகு செம்மல் ஒளிப்பன மறைய,
கார்கவின் கொண்ட காமர் காலை,
செல்க தேரே நல்வலம் பெறுந!—
பெருந்தோள், நுணுகிய நுசுப்பின்
திருந்துஇழை, அரிவை விருந்துஎதிர் கொளவே!

தெளிவுரை

“*திறமை வாய்ந்த பாகனே! கடலில் நீரை முகந்து, திசைகள் எங்கும் சென்று, உலகம் மறையும்படி, வலமாய் எழுந்து, நீர்ச் சுமையால் வருந்திய மேகங்கள் வானைப் பிளந்ததுபோல,*

ஒன்றாய்த் திரண்டு மின்னின. மேலும், கீழே இறங்குவனபோல மிக நெருங்கி வந்து இடியும் முழக்கமும் இன்றிப் பாணரின் நல்ல யாழின் நரம்பு ஒலிப்பதுபோல இனிய குரலுடன் பெரும் துளிகளோடு நன்றாய்த் தொடர்ந்து மழை பெய்தது. மழை நீங்கிய பின் பூக்கள் மணக்கின்ற காலைப்பொழுது புலர்ந்தது.

மணல்மேட்டுடன் சேற்றுமண் தோன்றும் வழியில் சிறிய வயிற்றினைக்கொண்ட தம்பலப்பூச்சிகள் குறுகக் குறுக ஓடிச் சென்றன. அவை நீல மணியோடு சேர்ந்த பவளம் போல் காயாஞ் செடியின் அழகுமிக்க வாடிய பூக்களுக்கு இடையே சென்று மறைந்தன. அத்தகைய அழகு பெற்ற இக்கார்ப் பருவத்தில் பருத்த தோள்களையும், நுண்ணிய இடையினையும், திருத்தமான அணிகளையும் கொண்ட நம் தலைவி நம்மை, விருந்தாய் ஏற்றுக் கொள்ளுமாறு, நம் தேரை விரைவில் செலுத்து.”

கருத்து

“பாகனே! போர் முடிந்து வெற்றி கண்டோம்; நம்மை எதிர்பார்த்திருக்கும் தலைவியைச் சென்று காணத் தேரினை விரைவாய் ஓட்டு.”

விளக்கம்

போர்க்களத்துப் பாசறையில் வினை மேற்கொண்ட தலைவன் அது முடிந்ததும் தேர்ப்பாகனிடம் சொல்லுகின்றான்:

‘திறமைமிகு பாகனே! கார்ப்பருவம் அழகு பெற்று விளங்கு கிறது. விருந்தாய் நம்மை எதிர்பார்த்துக் காத்திருப்பாள், நம் தலைவி; ஆதலின், தேரினை விரைவில் செலுத்து.’

சொற்பொருள்

1. மாதிரம் - திசைகள்.
2. வலன்ஏர்பு - வலமாய் எழுந்து.
3. பழங்கண் கொண்ட - (சுமையால்) துன்பம் கொண்ட; பழங்கண் - துன்பம்; கொழும்பல் - வளவிய பல; கொண்மூ - மேகம்.
4. போழ்ந்த போல - கீழே இறங்கி வருவது போல.
5. நணிநணி - நெருங்கி நெருங்கி.
6. சொரிவன பயிற்றி - மிக்குப் பொழிந்து.

8. வடிஉறு - நன்றாய் இழுத்துக் கட்டப்பெற்ற.
9. அழிதுளி - மிக்க துளி; தலைஇ - பொருந்தி.
10. பூநாறு - பூக்கள் மணம் கமழும்.
11. நிவந்த - மேடுபட்ட; இயவு - வழி.
12. குறுமோடு - சிறிய வயிறு; மூதாய் - தம்பலப்பூச்சி.
13. மணிமண்டு - நீலமணியுடன் கூடிய.
14. ஒளிப்பன - ஒளிந்து.
15. கார் - கார்ப்பருவம்; காமர் - விருப்பம்.
16. நல்வலம் பெறுந - நல்ல திறமை பொருந்திய மகனே!
17. நுணுகிய - நுண்ணிய.
18. திருந்துஇழை - திருத்தமான அணிகள்; அரிவை - பெண், தலைவி; விருந்து எதிர் கொள - விருந்தாய் நம்மை ஏற்றுக்கொள்ள.

தலைவன் கூற்று

நற்றிணை 21 **மருதனிளநாகனார்**

திணை : முல்லை

கூற்று

வினைமுற்றி மீள்வான் தேர்ப்பாகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

அரசுப்பணிக்காகச் சென்றிருந்த தலைவன் பணி முடிந்ததும் தன்னை எதிர்பார்த்திருக்கும் தலைவியைச் சென்று காணும் ஆவல் மிகுதியால் தேர்ப்பாகனிடம் தேரை விரைந்து செலுத்துமாறு கூறியது.

விரைப்பரி வருந்திய வீங்குசெலல் இளையர்
அரைச்செறி கச்சை யாப்புஅழித்து அசைஇ,
வேண்டுஅமர் நடையர் மென்மெல வருக;
தீண்டா வைமுள் தீண்டிநாம் செலற்கு
ஏமதி, வலவ, தேரே! உதுக்காண்
உருக்குறு நறுநெய் பால்விதிர்த் தன்ன
அரிக்குரல் மிடற்ற அம்நுண் பல்பொறிக்
காமரு தகைய கான வாரணம்

பெயல்நீர் போகிய வியல்நெடும் புறவில்
புலரா ஈர்மணல் மலிரக் கெண்டி,
நாள்இரை கவர மாட்டித்தன்
பேடை நோக்கிய பெருந்தகு நிலையே!

தெளிவுரை

“வலவ! விரைந்து நடந்ததால் உடல் வருந்தி, நெடுந்தொலைவு கடந்துள்ள நம் வீரர், இடுப்பில் கட்டியுள்ள கச்சையைத் தளரச் செய்து, ஆங்காங்குத் தங்கி இளைப்பாறித் தாம் விரும்பியவாறு மெல்ல நடந்து வரட்டும்! உருக்கிய நெய்யில் பாலைச் சிதறினால் உண்டாகும் ஒலி போன்ற குரலைக் கொண்டதாய், உடலில் அழகிய நுண்ணிய பல பொறிகளைக் கொண்டிருக்கும் அழகு பொருந்திய காட்டுச்சேவலை, அதோ, அங்குப் பார்! மழை பெய்து நீர் வடிந்த நீண்ட காட்டில் ஈரம் உலராத மணலை நன்றாய்க் கிளறியதால் வெளிப்பட்ட புழுவைக் கவர்ந்து தன் அலகிடையே பற்றிக் கொண்டு தன் பேடையை அழைத்துப் பெருமிதத்தோடு ஊட்டுவதைப் பார்! (நானும் தலைவியை இந் நிலையில் பேண வேண்டாவா?) அதனால் இதுவரை தீண்டாத தாற்றுக்கோலால் குதிரையைத் தீண்டித் தேரை விரைவில் செலுத்து” என்று வலவனிடம் தலைவன் கூறினான்.

கருத்து

நம் தலைவியைக் காணத் தேரை விரைவில் செலுத்து.

விளக்கம்

“வலவ! நாம் கருதி வந்த பணி முடிந்துவிட்டது. பணியாளர்கள் மெல்ல வரட்டும். காட்டுச்சேவல் தன் பேடைக்கு உணவூட்டும் பெருமிதத்தைப் பார். நானும், என்னை எதிர் பார்த்துக் காத்திருக்கும் தலைவியைக் காணும்பொருட்டு இதுவரை அடித்துச் செலுத்தாத குதிரையை அடித்து ஓட்டித் தேரை விரைவாய்ச் செலுத்து” என வலவனிடம் தலைவன் கூறினான்.

குறிப்பு

குதிரைகள் இயல்பாகவே வேகமாய் ஓடிக்கொண்டிருக்கின்றன. ஆனாலும் தலைவியைக் காணவேண்டும் என்னும் மன வேகத்தால் குதிரைகள் மேலும் வேகமாய் ஓடவேண்டும் எனத் தலைவன் கருதுகிறான்.

சொற்பொருள்

1. விரைப்பரி - விரைந்து நடத்தலால்; வீங்குசெலல் - நெடுந் தொலைவு நடந்த; இளையர் - வீரர்.
2. அரைச்செறி - இடுப்பில் கட்டியுள்ள; யாப்பு அழித்து - கட்டினைத் தளர்த்தி; அசைஇ - தங்கி.
3. வேண்டுஅமர் - தாம் விரும்பியவாறு; நடையர் - நடந்து.
4. தீண்டா - (இதுவரை) தொடாத; வைமுள் - கூரிய தாற்றுக்கோல்.
5. ஏமதி - செலுத்து; வலவன் - தேர்ப்பாகன்; உதுக்காண் - அதோ பார்.
6. உருக்குறு - உருக்கப்பட்ட; விதிர்த்தல் - சிதறுதல்.
7. அரிக்குரல் - தயிர் கடையும் ஒலி; மிடறு - தொண்டை; நுண் - நுண்ணிய.
8. காமர் - விருப்பம்; கான வாரணம் - காட்டுச்சேவல்.
9. பெயல் நீர் - மழை பெய்த நீர்; போகிய - வடிந்த; வியல்நெடும் - அகன்ற நெடிய; புறவு - முல்லை நிலம்.
10. புலரா - உலராத; ஈர்மணல் - ஈர மணல்; மலிர - நன்றாய்; கெண்டி - கிளறி.
11. நாள் இரை - நாள்காலை இரை (புழு); கவர - கவர்ந்து; மாட்டி - அலகிடையே பற்றிக்கொண்டு.
12. பேடை - பெட்டைக்கோழி; பெருந்தகு - பெருமிதத்துடன்.

தலைவன் கூற்று

நற்றிணை 81 **அகம்பன் மாலாதனார்**

திணை : முல்லை

கூற்று

வினை முற்றிய தலைமகன் தேர்ப்பாகற்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

அரசனுக்கு உதவுவதற்காகத் தலைவியைப் பிரிந்து சென்றிருந்த தலைவனின் செயல் முற்றிற்று. 'வீட்டில் மனைவி தன் வரவை எதிர் நோக்கிக் கண்ணீர் சிந்தியபடியே இருப்பாள்; அவள் சிரித்த முகத்தைக் காண வேண்டும். ஆகவே, தேரினை விரைவாய்ச் செலுத்து' என்று தலைவன் தேர்ப்பாகனிடம் சொல்லியது.

இருநிலம் குறையக் கொட்டிப் பரிந்தின்று
ஆதி போகிய அசைவில் நோன்தாள்,
மன்னர் மதிக்கும் மாண்வினைப் புரவி
கொய்ம்மயிர் எருத்தில் பெய்ம்மணி ஆர்ப்பப்
பூண்கதில் பாக!நின் தேரே; பூண்தாழ்
ஆக வனமுலைக் கரைவலம் தெறிப்ப
அழுதனள் உறையும் அம்மா அரிவை
விருந்துஅயர் விருப்பொடு வருந்தினள் அசைஇய
முறுவல் இன்நகை காண்கம்!
உறுபகை தணித்தனன், உரவுவாள் வேந்தே.

தெளிவுரை

"பாகனே! வலிமை வாய்ந்த வாளினால் நம் அரசன் தன் மிகுந்த பகையை முடித்தனன். மன்னனுக்காக வந்த நமது வேலை முடிந்தது. நிலத்தில் குழி உண்டாகும்படி, தன் காலால் அழுத்தி விரைந்து ஓடுபவையும், களைப்பில்லாத வலிமையான கால்களைக் கொண்டவையும், மன்னர்களால் மதிக்கப்படு பவையுமான விரைந்த நடையினைக் கொண்டவை உன் புரவிகள். கொய்து அழகு செய்யப்பட்டுள்ள பிடரியைக் கொண்ட கழுத்தில் கட்டப்பட்டுள்ள மணிகள் ஒலிக்குமாறு அவற்றைத் தேரில் பூட்டி விரைந்து ஓட்டு. இல்லத்தில் அணி

கலன்கள் தளர்ந்து தாழ்ந்துள்ள மார்பில் அழகிய நகில்களின் முகட்டில் கண்ணீர் சிந்தியபடி மாந்தளிர் மேனியைக் கொண்ட என் காதலி இருப்பாள். அவள் நம்மைக் கண்டவுடன் தன் துன்பம் நீங்கி விருந்து பேணும் விருப்புடன் இனிய முறுவல் கொள்வாள். சிரித்த அவள் முகத்தைக் காணும் பொருட்டுத் தேரினை விரைந்து செலுத்து.''

கருத்து

கருதி வந்த பணி முடிந்துவிட்டது. இல்லத்தில் தலைவி நம்மை எதிர் நோக்கி அழுதவண்ணம் இருப்பாள். நம்மைக் கண்டு, விருந்து பேணும் விருப்பால் மலர்ந்து புன்னகை செய்யும் அவள் முகத்தைக் காண, பாகனே! தேரை விரைவில் செலுத்து.

விளக்கம்

மன்னர்களே மதிக்குமளவுக்கு விரைந்தோடவல்லன, குதிரைகள். ஆயினும், தலைவன் தலைவி மீது கொண்டுள்ள காதல், அவை இன்னும் வேகமாய் ஓட வேண்டும் என விரும்பு கிறது.

சொற்பொருள்

1. இரு நிலம் - பெரிய நிலம்; குறைய - குழியாகுமாறு; கொட்டி - அழுத்தி; பரிந்தின்று - விரைந்து செல்லும்.
2. ஆதிபோகிய - 'ஆதி கதி'யிலே செல்லும்; அசைவு இல் - தளர்வு இல்லாத; நோன்தாள் - வலிய கால்.
3. மாண்வினை - பெருமையான செயல் செய்யும்; புரவி - குதிரை.
4. கொய்ம்மயிர் - கொய்து விடப்பட்ட பிடரி மயிர்; எருத்து - கழுத்து; பெய்ம்மணி - பூட்டப்பட்டுள்ள மணிகள்; ஆர்ப்ப - ஒலிக்கும்படியாக.
5. பூண்க - பூட்டுக; பூண்தாழ் - அணிகலன்கள் தளர்ந்து தாழ்ந்துள்ள.
6. ஆகம் - மார்பு; கரைவலம் - முகட்டுப் பாங்கு (முலைக் கண்களில்); தெறிப்ப - (கண்ணீர் விழுந்து) - தெறிக்கும்படி.
7. உறையும் - வாழும்.
8. அயர் - செய்யும்; அசைஇய - தளர்ந்த.
9. காண்கம் - காண்போம்.
10. உரவு - வலிமை; வாள் வேந்து - வாள் ஏந்திய அரசன்.

தேர்ப்பாகன் கூற்று

நற்றிணை 121 **ஒருசிறைப் பெரியனார்**

திணை : முல்லை

கூற்று

வினைமுற்றி மறுத்தரும் தலைமகற்குத் தேர்ப்பாகன் சொல்லியது.

கூற்று விளக்கம்

“தலைவ! வினை முடிந்ததால் நாம் திரும்பிச் செல்லுமாறு அரசன் கூறி விட்டான். நீ விரைந்து சென்று உன் மனைவியோடு கூடியிருக்க விரும்பு கின்றாய்! மயங்காதே! நீ உன் தலைவியை உடனே கண்டு மகிழுமாறு தேரை விரைவாய்ச் செலுத்துவேன்!” என்று தலைவனிடம் தேர்ப்பாகன் கூறியது.

விதையர் கொன்ற முதையல் பூழி,
இடுமுறை நிரப்பிய ஈர்இலை வரகின்
கவைக்கதிர் கறித்த காமர் மடப்பிணை,
அரலைஅம் காட்டு இரலையொடு வதியும்
புறவிற்று அம்மநீ நயந்தோள் ஊரே;
‘எல்லிவிட் டன்று வேந்து’எனச் சொல்லுபு
பரியல்; வாழ்கநின் கண்ணி! காண்வர
விரிஉளைப் பொலிந்த வீங்குசெலல் கலிமா
வண்பரி தயங்க எழீஇ தண்பெயல்
கான்யாற்று இகுமணற் கரைபிறக்கு ஒழிய,
இல்விருந்து அயரும் மனைவி
மெல்இறைப் பணைத்தோள் துயில்அமர் வோயே!

தெளிவுரை

“விதை விதைக்கும் ஆயர், பலமுறை உழுது பண்படுத்திய புழுதி நிறைந்த கொல்லையில் வரகினை விதைத்தனர். அவை முளைத்து இலை நிரம்பிக் கதிர்கள் ஈன்றுள்ளன. கண்டார்க்கு மகிழ்ச்சி தரும் அக்கதிர்களைப் பெண்மான் தின்று மகிழ்கிறது. இத்தகைய பெண்மான், கள்ளிகள் நிறைந்த காட்டில் தன் ஆண்மானுடன் மகிழ்ந்து விளையாடும் முல்லைநிலக் காட்டில் உன் தலைவியின் ஊர் உள்ளது. அரசன் போரினை முடித்து நேற்றிரவே நம்மைத் திரும்பச் சொல்லிவிட்டான். நாம் இன்னும்

தலைவியைச் சென்றடையாமல் இருக்கிறோமே என்று நீ வருந்தாதே! ஐயனே! நின் தலைமாலை வாழ்க! அழகிய தலையாட்டத்துடன் விரைந்து செல்கின்ற மனச்செருக்குக் கொண்ட குதிரை பூட்டப்பட்டுள்ளது என் தேர்! அத்தேரினை, மழை பெய்ததால் பெருகிய காட்டாற்றின் உயர்ந்த மணற் பாங்கான கரையில் விரைந்து செல்லுமாறு ஓட்டி, விருந்து பேணும் உன் மனைவியின் மெல்லிய சந்தினைக் கொண்ட பருத்த தோள்களை நீ விரும்பி அடைந்து துயிலுமாறு செய்வேன்" எனத் தேர்ப்பாகன் தலைவனிடம் கூறுகின்றான்.

கருத்து

'போர் முடிந்ததால் அரசன் நம்மைத் திரும்பச் சொல்லிவிட்டான். என் குதிரையை விரைந்து செலுத்தி உன்னை உன் மனைவி தோளில் துயிலச் செய்வேன்' என்றான், பாகன்.

விளக்கம்

"கடமை முடிந்து அரசன் நம்மை நேற்றே விடுவித்து விட்டான். இன்னும் தலைவியைச் சென்றடையவில்லையே என்று மிகவும் வருந்தியிருக்கும் தலைவனே! வருந்தாதே! மழை பெய்து ஈரமாய் உள்ள வழியிலே தேரை விரைவாய் ஓட்டி, முல்லைக்காட்டிடையே உள்ள வீட்டில் இருக்கும் உன் தலைவியின் தோளை நீ விரும்பி அணையுமாறு செய்வேன்" எனத் தேர்ப்பாகன் தலைவனிடம் கூறினான்.

அருஞ்சொற்பொருள்

1. விதையர் - விதை விதைக்கும் ஆயர்; கொன்ற - உழுத; முதையல் - பழங்கொல்லை; பூழி - புழுதி.
2. இடுமுறை நிரப்பிய - முறைப்படி விதைத்த; ஈர்இலை - குளிர்ந்த இலை.
3. கவை - பிளவுபட்ட; கறித்த - மேய்ந்த; காமர் - விருப்பம்; மடப் பிணை - இளைய பெண்மான்.
4. அரலை - அரலைக்கள்ளி; இரலை - ஆண்மான்; வதியும் - தங்கும்.
5. புறவு - முல்லை நிலம்; நயந்தோள் - விரும்பியவள், தலைவி.
6. எல்லி - இரவு; விட்டன்று - திரும்ப விடுத்தனன்; வேந்து - அரசன்.
7. பரியல் - வருந்தாதே; கண்ணி - தலைமாலை; காண்வர - காண்பதற்கு.

8. விரி உளை - விரிந்த தலையாட்டம்; வீங்குசெலல் - விரைந்து செல்லும்; கலிமா - மனச்செருக்குக் கொண்ட குதிரை.
9. வண்பரி தயங்க - வளவிய விரைவு பொருந்த; எழீஇ - செலுத்தி; தண்பெயல் - குளிர்ந்த மழை.
10. கான்யாறு - காட்டாறு; இகுமணல் - சரியும் மணல்; பிறக்கு ஒழிய - பிற்பட.
11. அயரும் - பேணும்.
12. மெல்இறை - மெல்லிய சந்து பொருந்திய; பணை - பருத்த; துயில் அமர்வோய் - தூங்குதற்கு விரும்புவனே!

தலைவன் கூற்று

நற்றிணை 161 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : முல்லை

கூற்று

வினைமுற்றிப் பெயரும் தலைமகன் தேர்ப்பாகன் கேட்பச் சொல்லியது.

கூற்று விளக்கம்

அரசன் பணி நிமித்தம் சென்ற தலைவன் அதை முடித்து திரும்புகிறான். தேர்ப்பாகனிடம், 'தலைவி நான் வந்துவிட்டதாய்ப் புதல்வனிடம் பொய்ம் மொழி கூறித் தேற்றிக்கொண்டிருப்பாள். ஆதலால், நீ தேரை விரைவாக ஓட்டிச் செல்' என்று தலைவன் கூறியது.

இறையும் அருந்தொழில் முடித்தென, பொறைய,
கண்போல் நீலம், சுனைதொறும் மலர,
வீததர் வேங்கைய வியல்நெடும் புறவின்,
இம்மென் பறவை ஈண்டுகிளை இரிய,
நெடுந்தெரு அன்ன நேர்கொள் நெடுவழி,
இளையர் ஏகுவனர் பரிப்ப, வளைஎனக்
காந்தள் வள்இதழ் கவிகுளம்பு அறுப்ப,
தோள்வலி யாப்ப, ஈண்டுநம் வரவினைப்
புள்அறி வுறீஇயின கொல்லோ, தெள்ளிதின்
காதல் கெழுமிய நலத்தள், ஏதில்
புதல்வற் காட்டிப் பொய்க்கும்
திதலை அல்குல் தேம்மொழி யாட்கே.

தெளிவுரை

“நம் அரசன் போர்த்தொழிலை நிறைவு செய்தான். மலையிலுள்ள சுனைகளிலெல்லாம் குவளை மலர்கள் மகளிர் கண்களைப்போல் மலர்ந்துள்ளன. மலர்கள் மிகுதியாய்ப் பூத்துக் குலுங்கும் வேங்கை மரங்களைக் கொண்டுள்ள அகன்ற நீண்ட காட்டில் வண்டுகள் ‘இம்’மென்று ஒலியெழுப்பியவாறு சிதறி ஓடுகின்றன. சோழ நாட்டிலுள்ள ‘நெடுந்தெரு’ என்னும் ஊர் போன்று அழகு பொருந்திய நெடிய வழியில் நம் வீரர்கள் அங்கங்கே தங்கிச் செல்கின்றனர். காட்டுப்பகுதியில் சங்கு உடைந்தாற்போலக் கிடக்கும் வெண்காந்தள் மலர்களின் வளமையான இதழ்கள் குதிரைகளின் குளம்புகள் அழுத்துந் தோறும் அறுபடுகின்றன. தேமல் பரந்த அடிவயிற்றினையும் இனிய மொழிகளையும் கொண்ட தலைவி, புதல்வனை ஆற்றுவிக்க வேண்டி நாம் வருவதாய்ப் பொய்ம்மொழி கூறிக் கொண்டிருப்பாள். வீட்டுக் கூரையில் காக்கைகள் கரைவதை நம் வருகையைத் தெரிவிக்கும் நிமித்தமாய்க் கொண்டு அவள் மகிழ்ந்திருப்பாளோ?” என்று கூறிப் பாகனைத் தேரினை விரைவாய் ஓட்டுமாறு தலைவன் கூறுகிறான்.

கருத்து

காத்திருக்கும் தலைவி மகிழும்வண்ணம் தேரினை விரைவில் செலுத்து.

விளக்கம்

‘அரசன் போர் முடித்தான். நாம் திரும்பிக்கொண்டிருக்கிறோம். நம் தலைவியோ நாம் வந்துவிட்டதாய்ப் பொய்ம்மொழி கூறி மகனைத் தேற்றிக் கொண்டிருப்பாள். வீட்டில் காக்கைகள் கரைவதை நம் வருகையைக் காட்டும் நிமித்தமாய்க் கொண்டு மகிழ்ந்திருப்பாள். அவள் மகிழ்ந்திருக்கும் இவ்வேளையிலே நாம் போய்ச் சேரும் வகையில் தேரினை விரைவாய் ஓட்டு’ எனப் பாகனிடம் தலைவன் கூறுகின்றான்.

சொற்பொருள்

1. இறை - அரசன்; அருந்தொழில் - போர்த்தொழில்; பொறை - மலை.
2. நீலம் - நீல மலர்.

3. வீ - மலர்; ததர் - கொத்து; வியல் நெடும் - அகன்று நீண்ட; புறவு - முல்லை நிலம்.
4. இம்மென் - 'இம்' என ஒலிக்கும்; பறவை - வண்டுகள்; கிளை - இனம்; பிரிய - சிதறி ஓட.
5. நெடுந்தெரு - ஓர் ஊர்.
6. இளையர் - ஏவலாளர்; பரிப்ப - தங்கிச் செல்ல; வளை - சங்கு.
7. வள் இதழ் - வளவிய இதழ்; கவி குளம்பு - குதிரையின் கவிந்த காற்குளம்புகள்.
8. தோள்வலி யாப்ப - தோளில் வலிமையைச் சேர்த்துக்கொண்டு.
9. புள் அறிவுறீஇயின - காக்கை கரைந்து நம் வரவை அறிவித்திருக்குமோ (புள் - பறவை); தெள்ளிதின் - தெளிவாய்.
10. நலத்தள் - நலம் கொண்டவள், தலைவி; ஏதில் - இயைபில்லாத வற்றை.
11. புதல்வன் - மகன்; பொய்க்கும் - பொய்ம்மொழி கூறுவாள்.
12. திதலை - தேமல்; தேம்மொழியாள் - தேன் போன்ற இனிய மொழியைக் கொண்டவள் (தலைவி).

தலைவன் கூற்று

கார் நாற்பது 20 **மதுரைக் கண்ணங்கூத்தனார்**

திணை : முல்லை

கூற்று

வினை முற்றிய தலைமகன் பாகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

அரசுப்பணியாகச் சென்ற தலைவன் தன் பணி முடிந்து திரும்பும்போது தன் பாகனிடம் சொன்னது.

வீறுசால் வேந்தன் வினையும் முடிந்தன
ஆறும் பதம்இனிய வாயின — ஏறோடு
அருமணி நாகம் அனுங்கச் செருமன்னர்
சேனைபோல் செல்லும் மழை.

தெளிவுரை

"*சிறப்பமைந்த மன்னனின் போர்ச்செயல்கள் அனைத்தும் முடிவுற்றன; செல்லும் வழிகளும் இனியனவாய் உள்ளன. போர் செய்யும் அரசரின் படை அணிவகுத்து ஆரவாரிப்பதுபோல மேகங்களும் அணிவகுத்து இடிஇடித்து ஆர்ப்பரிகின்றன. (எனவே, தேரை விரைவாய் ஓட்டு.)*"

கருத்து

வலவ! வேலை முடிந்தது; தலைவியைக் காணத் தேரை வேகமாய் ஓட்டு.

குறிப்பு

மேகம் மன்னனின் சேனை போல் செல்கிறது என்பது. சேனை வேகமாய் ஆரவாரித்துச் செல்வதுபோல் மேகமும் விரைந்து இடியிடித்துச் செல்லுகிறது என்பதாம்.

சொற்பொருள்

1. வீறு - சிறப்பு, வெற்றி; வினை - போர்ச் செயல்.
2. ஆறு - வழி; பதம் - பக்குவம்; ஏறு - இடி.
3. அனுங்க - வருந்த; செரு - போர்.
4. சேனை - படை; மழை - மேகம்.

தலைவன் கூற்று

குறுந்தொகை 189 **மதுரை ஈழத்துப் பூதன் தேவனார்**

திணை : பாலை

கூற்று

வினை தலைவைக்கப்பட்ட இடத்துத் தலைமகன் பாகற்கு உரைத்தது. (தலைவைக்கப்பட்ட இடத்து - செய்ய வேண்டுமென்று வற்புறுத்தப்பட்ட காலத்தில்.)

கூற்று விளக்கம்

அரசனால் ஒரு செயலுக்காக ஏவப்பட்ட தலைவன் தன் தேர்ப் பாகனை நோக்கிக் கூறியது.

இன்றே சென்று வருதும் நாளைக்
குன்றுஇழி அருவியின் வெண்தேர் முடுக,
இளம்பிறை அன்ன விளங்குசுடர் நேமி
விசும்புவீழ் கொள்ளியின் பைம்பயிர் துமிப்பக்
கால்இயல் செலவின் மாலை எய்திச்
சில்நிரை வால்வளைக் குறுமகள்
பல்மாண் ஆகம் மணந்துஉவக் குவமே.

தெளிவுரை

பாக! இன்றே புறப்பட்டுச் சென்று நாளை வந்துவிடுவோம்! குன்றிலிருந்து இறங்கி வரும் அருவியைப் போல வெள்ளிய தந்தத்தால் செய்யப்பட்ட தேரை விரைவாய்ச் செலுத்து. இளம் பிறையைப் போல வளைவாய் விளங்கும் சக்கரத்தால் வானிலிருந்து விழும் கொள்ளிகளால் அழிவதுபோலப் பசுமையான பயிர்கள் அழியக் காற்றைப் போலச் செல்லுமாறு தேரை ஓட்டு. மாலை நேரத்தில் வீட்டை அடைவோம். சில வரிசைகளாய் வெண்ணிறச் சங்குவளையல்களை அணிந்துள்ள நம் இளைய தலைவியின், பல வகையாலும் சிறந்த அழகுபெற்ற மார்பகத்தைத் தழுவி இன்புறுவேன்.

கருத்து

பாக! வேலை முடிந்தது! நாளை மாலைக்குள் தலைவியைச் சென்றடையத் தேரை விரைவில் செலுத்து.

விளக்கம்

பாகனே! நாம், அரசன் ஏவிய வேலைக்காக இன்றே விரைந்து சென்று நாளை மாலைப்பொழுதினுக்கு முன்பே திரும்ப வந்து தலைவியை அடைந்து மகிழ வேண்டும்.

இது, தலைவி கேட்குமாறு தலைவன் பாகனிடம் உரைத்தது என்க.

சொற்பொருள்

2. குன்றுஇழி - குன்றிலிருந்து இறங்கி வரும்; முடுக - விரைந்து செல்க.
3. விளங்கு சுடர் - ஒளி விளங்குகின்ற; நேமி - சக்கரம்.

4. விசும்பு - வானம்; பைம்பயிர் - பசிய பயிர்; துமிப்ப - துணிப்ப, அழிய.
5. கால்இயல் - காற்றைப் போன்ற இயல்பினைக் கொண்ட.
6. வால் வளை - வெண்மையான வளையல்.
7. பல்மாண் - பல வகையிலும் பெருமை பெற்ற; ஆகம் - மார்பு; மணந்து - சேர்ந்து; உவக்குவம் - மகிழ்வோம்.

தலைவன் கூற்று

அகநானூறு 254 **மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்**

திணை : முல்லை

கூற்று

வினைமுற்றி வந்து எய்திய தலைமகன், தேர்ப்பாகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

அரசனால் ஏவிய தொழிலை முடிக்கச் சென்ற தலைவன், அத்தொழில் முடிந்ததும், விரைந்து இல்லத்திற்குத் தேரைச் செலுத்தி வந்த பாகனை வாழ்த்திக் கூறியது.

‘நரைவிரா வுற்ற நறுமென் கூந்தற்
செம்முது செவிலியர் பலபா ராட்ட,
பொலன்செய் கிண்கிணி நலம்பெறு சேவடி
மணல்மலி முற்றத்து நிலம்வடுக் கொளாஅ,
மனைஉறை புறவின் செங்காற் சேவல்
துணையொடு குறும்பறை பயிற்றி, மேல்செல,
விளையாடு ஆயத்து இளையோர்க் காண்தொறும்
நம்வயின் நினையும் நல்நுதல் அரிவை
புலம்பொடு வதியும் கலங்குஅஞர் அகல,
வேந்துஉறு தொழிலொடு வேறுபுலத்து அல்கி,
வந்துவினை முடித்தனம் ஆயின், நீயும்,
பணைநிலை முனைஇய, வினைநவில், புரவி,
இழைஅணி நெடுந்தேர் ஆழி உறுப்ப,
நுண்கொடி மின்னின், பைம்பயிர் துமிய,
தளவ முல்லையொடு தலைஇ, தண்ணென

வெறிகமழ் கொண்ட வீததை புறவின்
நெடிஇடை பின்படக் கடவுமதி' என்றுயான்
சொல்லிய அளவை நீடாது, வல்லென,
தார்மணி மாஅறி வுறாஅ,
ஊர்நணித் தந்தனை, உவகையாம் பெறவே.

தெளிவுரை

"பாகனே! ஊரில் வீட்டு முற்றத்தில் மணல் பரப்பித் தலைவியின் தோழியருள் இளையவர் பொன் சதங்கை ஒலிக்க மணல் தரையில் தம் சிவந்த பாதங்கள் பதியுமாறு விளையாடிக் கொண்டிருப்பர். இடையிடையே நரைமயிர் விராவித் தோன்றும் முதிர்ந்த செவிலியர் தலைவியைப் பலப்பல வகையாகப் பாராட்டுவர். மனையில் உள்ள சிவந்த கால்களைக் கொண்ட மாடப்புறா அவர்களது ஒலியைக் கேட்டுப் பேடையோடு குறுகக்குறுகப் பறந்து பிறகு மேலே செல்லும். அழகிய நெற்றியைக் கொண்ட தலைவி இவற்றைக் காணும் போது தன் தனிமைக்காக வருந்தியிருப்பாள்.

"வேந்தற்குரிய தொழிலோடு வேற்று நாட்டிலே வந்து தங்கி, அக்கடமையை நாம் முடித்துள்ளோம். நீ முத்துமாலை முதலியவற்றால் அணி செய்யப்பட்ட தேரில், பந்தியில் கட்டப் பெற்றதை வெறுத்த, போர்ப் பயிற்சி கொண்ட குதிரைகளைப் பூட்டி ஓட்டுகிறாய். வெண்முல்லையும், செம்முல்லையும், ஏனைய பூக்களும் மலர்ந்து மணம் வீசும் முல்லைநிலக்காட்டில் தேர்ச்சக்கரங்கள் நுண்மையான மின்னல் கொடி போன்ற நிலத்தை ஊடறுத்துச் செல்லுகின்றன. வழியிடையேயுள்ள பசுமையான பயிர்கள் அறுபட்டுப் போக இக்காடு பிற்படும் படியாகத் தேரை விரைந்து செலுத்து என்று நான் கூறிய அளவில் நீயும் தாமதிக்காது குதிரையின் உள்ளமறிந்து விரைந்து செலுத்தினாய். ஊர் வந்துவிட்டது. மிகுந்த மகிழ்ச்சி. நீ வாழ்க!"

கருத்து

சொன்ன அளவில் சிறிதும் காலம் தாழ்த்தாது தேரினைச் செலுத்தி ஊரினை அடைந்துள்ள பாகனே! மகிழ்ச்சி.

விளக்கம்

“பாக! வேந்தர்க்கு உற்றுழி உதவ வேண்டி, வேற்று நாட்டில் தங்கியிருந்து வினையை முடித்தோம். ஆதலின், தனிமையோடு தங்கியுள்ள தலைவியின் வருத்தம் நீங்கத் தேரை முல்லை நிலத்தில் விரைந்து செலுத்து என்று நான் சொல்லிய அளவில் சிறிதும் தாமதிக்காது நான் மகிழ்ச்சி கொள்ளும்படி, ஊருக்கு அண்மையில் தேரினைக் கொண்டு வந்துவிட்டாய்; நீ வாழ்க” எனத் தலைவன் பாகனைப் புகழ்ந்து பாராட்டினான்.

சொற்பொருள்

1. நரைவிரா வுற்ற - நரை மயிர் கலப்புற்ற.
3. பொலன்செய் - பொன்னால் செய்யப்பட்ட; நலம் பெறு - அழகு கொள்ளும்; சேவடி - சேஅடி - சிவந்த பாதம்.
4. நிலம்வடுக் கொளாஅ - நிலத்தில் காலடிகள் பதியுமாறு.
5. புறவு - புறா.
6. துணை - பெண் புறா; குறும் பறை பயிற்றி - குறுகக் குறுகப் பறந்து; மேல்செல - மேலே செல்ல.
8. நம்வயின் - நம்மை; அரிவை - பெண், தலைவி.
9. புலம்பு - தனிமை; கலங்குஅஞர் - மிக்க துன்பம்.
10. வேறுபுலம் - வேற்று நாடு; அல்கி - தங்கி.
12. பணைநிலை - பந்தியில் (வரிசையில்) நிற்பதை; முனைஇய - வெறுத்த; வினைநவில் - போர்த்தொழில் பயின்ற.
13. ஆழி - சக்கரம்; உறுப்ப - ஊடறுத்துச் செல்ல.
14. துமிய - அறுபட்டு விழ.
15. தளவம் - செம்முல்லை; முல்லை - வெண்முல்லை; தலைஇ - கூடி.
16. வெறி - நறுமணம்; வீததை - மலர் செறிந்த; புறவு - முல்லை நிலம்.
17. நெடிஇடை - நீண்ட வழி; பின்பட - பின் ஆகும்படி; கடவு - செலுத்து.
18. நீடாது - தாழ்த்தாது; வல் - விரைவு.
19. மா - குதிரை; அறிவுறா - உள்ளமறிந்து.
20 நணி - அண்மை; தந்தனை - கொண்டுவந்துவிட்டாய்; உவகை - மகிழ்ச்சி.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 477 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

தலைமகள்மாட்டுப் பாணனைத் தூதாக விடுத்த தலைமகன் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் தன் தலைவியிடம் முற்படச் சென்று தன் வருகைபற்றிய செய்தியைக் கூறி அவள் துயரத்தைத் தணிவிக்குமாறு தன் பாணனிடம் கூறி அவனை ஏவியது.

பனிமலர் நெடுங்கண் பசலை பாயத்
துனிமலி துயரமொடு அரும்படர் உழப்போள்,
கையறு நெஞ்சிற்கு உசாஅத்துணை யாகச்
சிறுவரைத் தங்குவை ஆயின்,
காண்குவை மன்னால் பாணஎம் தேரே.

தெளிவுரை

"பாணனே! குளிர்மலர் போன்ற தன் நெடிய கண்களிலே பசலை நோய் பாயப்பெற்று, என்மேல் வெறுப்பு மிகக் கொண்டவளாய், பொறுத்தற்கரிய துன்பத்திலேயே உழன்று கொண்டிருப்பாள், என் தலைவி. செயலற்ற அவள் நெஞ்சிற்குப் பேச்சுத்துணையாகச் சிறிது நேரம் நீயும் அங்கே சென்று தங்குவையாயின், எம் தேர் அங்கே விரைந்து வந்து சேர்வதை நீயும் காண்பாய்."

கருத்து

தலைவிக்குப் பேச்சுத்துணையாய் அமைந்திரு; நான் அங்கு விரைவில் வந்து சேர்வேன்.

சொற்பொருள்

1. பனிமலர் - குளிர்ச்சி பொருந்திய மலர்; பசலை பாய - பசலை பற்றிப் படர.
2. துனி - வெறுப்பு; மலி - நிறைந்த; படர் - துன்பம்; உழப்போள் - வருந்துவோள்.

3. கையறு நெஞ்சம் - செயலற்ற நெஞ்சம்; உசாஅத்துணை - பேச்சுத் துணை.
4. சிறுவரை - சிறுபொழுது.
5. காண்குவை - காண்பாய்.

உழையர் கூற்று

அகநானூறு 354 **மதுரைத் தமிழ்க்கூத்தன் கடுவன் மள்ளனார்**

திணை : முல்லை

கூற்று

வினை முற்றிய தலைமகற்கு உழையர் சொல்லியது.

கூற்று விளக்கம்

போரில் மன்னனுக்கு உதவும்பொருட்டுத் தலைவன் தலைவியைப் பிரிந்தான்; போரில் வென்று மன்னன் வாகை சூடினான். 'வந்த வினை முடிந்தமையான், இனி நீ தலைவிபால் விரைந்து செல்லுதல் வேண்டும்' என அவன் அருகிருந்தார் தலைவனிடம் கூறியது.

மதவலி யானை மறலிய பாசறை,
இடிஉமிழ் முரசம் பொருகளத்து இயம்ப,
வென்றுகொடி எடுத்தனன், வேந்தனும்; கன்றொடு
கறவைப் புல்லினம் புறவுதொறு உகள,
குழல்வாய் வைத்தனர் கோவலர்; வல்விரைந்து
இளையர் ஏகுவனர் பரிய, விரிஉளைக்
கடுநடைப் புரவி வழிவாய் ஓட,
வலவன் வள்புவலி உறுப்ப, புலவர்
புகழ்குறி கொண்ட பொலந்தார் அகலத்து,
தண்கமழ் சாந்தம் நுண்துகள் அணிய,
வென்றிகொள் உவகையொடு புகுதல் வேண்டின்,
யாண்டுஉறை வதுகொல் தானே– மாண்ட
போதுஉறழ் கொண்ட உண்கண்
தீதி லாட்டி திருநுதற் பசப்பே?

தெளிவுரை

"மிக்க வலிமையினைக் கொண்ட யானை, பாசறையில் இடியென முழங்க, வெற்றிமுரசம் போர்க்களத்தே ஒலிக்க, வேந்தனும் போரில் வெற்றி பெற்றுக் கொடியினை உயர்த்தினன்; பசுவினங்கள் கன்றொடு காடுதொறும் தாவி வரக் கோவலர் வாயில் வைத்துக் குழலினை ஊதத் தொடங்கினர்.

"தலைவ! உன் ஏவலர் மிக விரைந்து முன்னே செல்ல, விரிந்த பிடரி மயிரினையும், விரைந்த நடையினையும் கொண்ட குதிரைகள் வழித்தடத்தே முறையாய் ஓடுமாறு தேர்ப்பாகன் கடிவாளத்தினை இழுத்துப் பிடித்துச் செலுத்த, அழகிய மாலையை அணிந்த விழுப்புண் பட்ட மார்பிலே குளிர்ச்சி பொருந்திய மணம் வீசும் சந்தனத்தைப் பூசிய வண்ணம் வெற்றிக் களிப்புத் தோன்ற நீ உன் இல்லத்துள் புகுதலை விரும்பினாய்.

"அவ்வாறு நீ விரும்பிய காரணத்தால், மாட்சிமைப்பட்ட, மையுண்ட கண்களைக் கொண்ட தலைவியின் அழகிய நெற்றியில் படர்ந்த பசலை இனி எவ்விடத்திற் சென்று தங்கும்?" என்று பாசறையில் தலைவன் அருகிலிருந்தோர் கூறினர்.

கருத்து

"தலைவன் இன்று இல்லம் சேர்வான்; தலைவியின் நெற்றியில் படர்ந்த பசலை சென்ற இடம் தெரியாமல் மறையும்" என்று தலைவனுடன் இருந்தோர் கூறி மகிழ்ந்தனர்.

விளக்கம்

'தலைவ! போர் முடிந்து வேந்தனும் வெற்றிக்கொடியை உயர்த்தினான். கோவலர், குழல் வாய்வைத்து ஊதினர். (கார் காலமும் தொடங்கியது). தலைவ! வெற்றி பெற்ற மகிழ்ச்சியோடு இல்லத்தில் புக விரும்பியுள்ளாய். இனி, தலைவியின் நெற்றியில் படர்ந்த பசலை எங்குத் தங்கும்? (நெற்றிப்பசலை மறையும்)' எனத் தலைவனின் உடனிருந்தோர் மகிழ்ச்சியுடன் கூறினர்.

சொற்பொருள்

1. மறலிய - மாறுபட்ட.
2. இடிஉமிழ் - இடி போல் முழங்கும்; பொருகளம் - போர்க்களம்.

3. எடுத்தனன் - உயர்த்தினன்.
4. புல்லினம் - பசு மாடுகள்; உகள - திரிய.
5. குழல் - புல்லாங்குழல்; கோவலர் - இடையர்; வல் - விரைவாய்.
6. இளையர் - ஏவலாளர்; பரிய - விரைந்து செல்ல; விரி உளை - விரிந்த பிடரி மயிர்.
7. கடுநடை - விரைந்த நடை; வழிவாய் - வழித்தடம்.
8. வலவன் - தேர்ப்பாகன்; வள்பு - கடிவாளம்; உறுப்ப - செலுத்த.
9. புகழ்குறி - விழுப்புண்; பொலந்தார் - பொன்னாலாகிய மாலை; அகலம் - மார்பு.
10. சாந்தம் - சந்தனம்.
12. யாண்டு - எங்கு?; மாண்ட - மாட்சிமைப்பட்ட.
13. போது - மலர்; உறழ் - ஒத்த.
14. தீதிலாட்டி - குற்றம் இல்லாதவள், பழுதற்றவள்; பசப்பு - பசலை.

உழையர் கூற்று

அகநானூறு 384 **ஒக்கூர் மாசாத்தியார்**

திணை : முல்லை

கூற்று

வினை முற்றிய தலைமகனது வரவு கண்டு, உழையர் சொல்லியது.

கூற்று விளக்கம்

மன்னனுக்கு உதவியாகப் போர்க்களம் செல்லும்பொருட்டுத் தலைவியைப் பிரிந்த தலைவன், போரில் வெற்றி பெற்ற பின்னர், தலைவியை நினைந்து விரைந்து வந்தான். தன் மனத்தின் விரைவைப்போல் பாகன் தேரை ஓட்டியதைக் கண்டு, அவனைப் பாராட்டியவாறு வீடு புகுந்தான்; அவன் வருகையால் தலைவி மகிழ்ந்தாள். அதுகண்டு தலைவனுக்கு அருகிருப்போர் தமக்குள் மகிழ்ந்து கூறியது.

'இருந்த வேந்தன் அருந்தொழில் முடித்தென,
புரிந்த காதலொடு பெருந்தேர் யானும்
ஏறியது அறிந்தன்று அல்லது வந்த,
ஆறுநனி அறிந்தன்றோ இலனே; தாஅய்,
முயல்பறழ் உகளும் முல்லைஅம் புறவில்
கவைக்கதிர் வரகின் சீறூர் ஆங்கண்,

மெல்இயல் அரிவை இல்வயின் நிறீஇ,
இழிமின்' என்றநின் மொழிமருண் டிசினே
வான்வழங்கு இயற்கை வளிபூட் டினையோ?
மான்உரு ஆகநின் மனம்பூட் டினையோ?
உரைமதி–வாழியோ, வலவ!– எனத்தன்
வரைமருள் மார்பின் நளிப்பனன் முயங்கி,
மனைக்கொண்டு, புக்கனன், நெடுந்தகை,
விருந்துஏர் பெற்றனள், திருந்திழை யோளே.

தெளிவுரை

" 'பாகனே! நீ வாழ்க!

"பாசறையில் இருந்த நம் அரசன் அரிய போரினை வென்று முடித்தான்; நானும் தலைவியிடம் கொண்ட காதலொடு தேரில் ஏறி அமர்ந்தேன்; அமர்ந்ததை அறிந்தேனேயன்றி இங்கு வந்து சேர்ந்ததை நான் அறிந்தேன் அல்லேன்; முயற்குட்டிகள் தாவித் தாவி ஓடித் திரியும் முல்லைக்காட்டில் கவர்த்த கதிரினைக் கொண்ட வரகினையுடைய சிறிய ஊரிடத்தே மென்மைத் தன்மை வாய்ந்த தலைவியின் வீட்டின்முன் தேரை நிறுத்தி, 'இறங்குக' என்ற உன் சொல்லைக் கேட்டு நான் மருட்சி அடைந்தேன். வானில் இயங்கும் இயல்பினைக் கொண்ட காற்றைக் குதிரை வடிவில் இத்தேரில் பூட்டினாயோ? அன்றி, உன் மனத்தினைக் குதிரையாகப் பூட்டினாயோ? சொல்' என்று கூறிப் பெருந்தகையாளன் நம் தலைவன் களிப்பு நிரம்பிய வனாய்த் தனது மலை போன்ற மார்போடு அவ்வலவனைத் தழுவித் தன் வீட்டினுள் உடன் அழைத்துச் சென்றனன். திருத்தமுறச் செய்யப்பட்ட அணிகளைக் கொண்ட தலைவியோ தலைவன் வரவால் உள்ளம் மகிழ்ந்து விருந்தோம்பும் சிறப் பினைப் பெற்றாள்" எனத் தலைவனுக்கு அருகிருந்தோர் கூறி மகிழ்ந்தனர்.

கருத்து

போர் முடிந்ததும் பாகன் காற்றினும் விரைவாய்த் தேரினை ஓட்டத் தலைவன் தன் வீடடைந்தான். தலைவி உள்ளம் மகிழ்ந்து விருந்தோம்பும் சிறப்பினைப் பெற்றாள்.

விளக்கம்

“‘வலவ! வாழி! நான் தேர் ஏறியதை அறிந்தேனே அன்றி, வந்து சேர்ந்ததை அறியேன். இல்லத்தில் நிறுத்தி ‘இறங்கு’ என்ற உன் சொல் கேட்டு மருண்டேன். காற்றையா, உன் மனத்தையா எதனைக் குதிரையாகப் பூட்டினாய்? சொல்க’ எனக் கேட்டுத் தலைவன் பாகனைத் தன் மார்பு செறியத் தழுவிக்கொண்டு, இல்லத்தினுள் புகுந்தான். தலைவி விருந்தோம்பும் சிறப்பினைப் பெற்றாள்” என்று தலைவனின் அருகிருந்தோர் சொல்லி மகிழ்ந்தனர்.

சொற்பொருள்

1. இருந்த - (பாசறையில்) இருந்த; அருந்தொழில் - அரிய போர்.
2. புரிந்த - விரும்பிய.
3. அறிந்தன்று - அறிந்தேனேயன்றி.
4. ஆறு - வழி; தாஅய் - தாவி.
5. பறழ் - குட்டிகள்; உகளும் - துள்ளி, தாவி.
6. கவை - கவர்த்த; சீறூர் - சிறிய ஊர்.
7. இயல் - இயல்பு; அரிவை - பெண், தலைவி; இல் - வீடு; நிறீஇ - நின்று.
8. இழிமின் - இறங்குக; மருண்டிசின் - மருட்சியுற்றேன்.
9. வழங்கும் - இயங்கும்; இயற்கை - இயல்பினைக் கொண்ட; வளி - காற்று.
10. மான் - குதிரை.
11. உரைமதி - சொல்க; வலவ - பாக.
12. வரைமருள் - மலை ஒத்த; நளிப்பனன் - களிப்பு நிரம்பியவனாய்.
13. மனை - வீடு; புக்கனன் - புகுந்தனன்; நெடுந்தகை - பெருந் தகைமையாளனான தலைவன்.
14. ஏர் - சிறப்பு; திருந்திழை - திருத்தமுறச் செய்யப்பட்ட அணி கலன்களை அணிந்த தலைவி.

தோழி கூற்று

அகநானூறு 104 **மதுரை மருதனிளநாகனார்**

திணை : முல்லை

கூற்று

வினைமுற்றி மீளும் தலைமகற்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியைப் பிரிந்து அரசனுக்காகப் போர்க்களம் சென்ற தலைவன் குறித்த பருவத்தைத் தவிர்த்திடாமல் வந்து சேர்ந்தான். அது கண்டு மகிழ்ந்த தோழி அவனைப் பாராட்டிச் சொல்லியது.

வேந்துவினை முடித்த காலை, தேம்பாய்ந்து
இனவண்டு ஆர்க்கும் தண்நறும் புறவின்
வென்வேல் இளையர் இன்புற, வலவன்
வள்புவலித்து ஊரின் அல்லது முள்உறின்
முந்நீர் மண்டிலம் ஆதி ஆற்றா
நல்நால்கு பூண்ட கடும்பரி நெடுந்தேர்,
வாங்குசினை பொலிய ஏறி, புதல
பூங்கொடி அவரைப் பொய்அதள் அன்ன
உள்இல் வயிற்ற, வெள்ளை வெண்மறி,
மாழ்கி யன்ன தாழ்பெருஞ் செவிய,
புன்தலைச் சிறாரோடு உகளி, மன்றுழைக்
கவைஇலை ஆரின் அம்குழை கறிக்கும்
சீறூர் பலபிறக்கு ஒழிய, மாலை
இனிதுசெய் தனையால்– எந்தை! வாழிய!–
பனிவார் கண்ணள் பலபுலந்து உறையும்
ஆய்தொடி அரிவை கூந்தல்
போதுகுரல் அணிய வேய்தந் தோயே!

தெளிவுரை

"எம் தலைவனே! அரசன் போர்த்தொழிலை வெற்றியுடன் முடித்தான். குளிர்ச்சி பொருந்திய நன்மணம் கமழும் முல்லை நிலத்தில் வண்டுகள் திசைதோறும் பறந்து ஆரவாரித்தன. அந் நிலத்தே, வெற்றிவேல் ஏந்திய வீரர்கள் மகிழுமாறு, தேர்ப்பாகன்

கடிவாளத்தை இழுத்துப் பிடித்துச் செலுத்தினாலோ தாற்றுக் கோலால் குத்தினாலோ, கடல் சூழ்ந்த உலகமெலாம் தம் ஒருபொழுது ஓட்டத்துக்குப் போதாது என்று கூறத்தக்க வகையில், நல்ல குதிரைகள் நான்கு பூட்டப்பட்ட விரைந்தோடும் பெரிய தேரில் வளைந்த கொடிஞ்சி பொலிவு பெறுமாறு ஏறி அமர்ந்தாய்.

"புதர்களில் படர்ந்துள்ள அவரைக்கொடியில் உள்ள அவரைப் பிஞ்சினது உள்ளீடில்லாத பொய்த் தோல் போன்று ஒட்டிய வயிற்றையும், தாழ்ந்து தொங்கும் காதுகளையும் கொண்ட வெண்ணிற வெள்ளாட்டுக்குட்டிகள் சிறிய தலை யினைக் கொண்ட சிறுவர்களோடு கூடிக் குதித்துச் சென்று, மன்றத்திலுள்ள பிளவுபட்ட இலைகளைக் கொண்ட ஆத்தி மரத்தின் அழகிய தளிர்களைக் கடித்துக்கொண்டிருக்கும். அத்தன்மையவாய சிற்றூர்கள் பல பின்னே சென்றிட அவற்றைக் கடந்து வந்துள்ளாய்.

"இம்மாலைப்பொழுதில் நீர்வார் கண்ணுடன் பலவற்றையும் எண்ணி வெறுப்புற்று வாழ்ந்துகொண்டிருக்கும் தலைவி மகிழ, அவள் கூந்தலில் மலர்க்கொத்துகளைச் சூட்டி அலங்கரிக்கும் இனிய செயலைச் செய்துள்ள தலைவ! நீ சிறப்புற்று வாழ்க!" எனத் தலைவனைத் தோழி வாழ்த்தினாள்.

கருத்து

"போர் முடிந்ததும் உடனே திரும்பி வந்து தலைவியை மகிழ்வித்த தலைவனே! வாழ்க!"

விளக்கம்

"தலைவ! அரசன் போரினை முடித்தான். இந்த உலகம் முழுதும் ஒரு நாள் ஓட்டத்துக்குப் போதாது என்று சொல்லும் படியாக விரைந்தோடும் குதிரைகள் பூட்டிய தேரில் ஏறினாய்; ஆட்டுக் குட்டிகள் சிறுவர்களோடு குதித்துச் சென்று, ஆத்தி மரத்தின் தளிர்களைக் கடிக்கும் மன்றங்களைக் கொண்ட சிற்றூர்களைக் கடந்து வந்தாய்! நீயின்றி வருந்தியிருந்த தலைவியின் கூந்தலில் மாலைப் பொழுதில் மலர்க்கொத்து களைச் சூட்டி மகிழ்வித்தாய்! நீ வாழ்க!"

சொற்பொருள்

1. வேந்து - அரசன்; வினை - போர்ச்செயல்; தேம்பாய்ந்து - திசைகள் தோறும் பறந்து.
2. தண் - குளிர்ந்த; புறவு - முல்லைக்காடு.
3. இளையர் - வீரர்; வலவன் - தேர்ப்பாகன்.
4. வள்பு - கடிவாளம்; வலித்து - இழுத்து; ஊரின் - செலுத்தினால்; முள்உறின் - கோலால் குத்தினால்.
5. முந்நீர் - கடல் (சூழ்ந்த); மண்டிலம் - நில உலகம்; ஆதி - குதிரையின் ஒரு வகை ஓட்டம்; ஆற்றா - போதாத.
6. நல் நால்கு - நல்ல நான்கு; பூண்ட - பூட்டிய; கடும்பரி - விரைந்தோடும் குதிரை.
7. வாங்கு - வளைந்த; சினை - தேரின் உறுப்பாகிய கொடிஞ்சி; புதல - புதர்.
8. பொய் அதள் - பொய்த்தோல்.
9. உள்இல் - உள்ளீடு இல்லாத; வயிற்ற - வயிற்றினையுடைய; மறி - ஆட்டுக்குட்டி.
10. மாழ்கி - மயங்கி; தாழ் - தொங்கும்; செவிய - காதுகளைக் கொண்ட.
11. உகளி - குதித்துச் சென்று; மன்று - மன்றம்.
12. கவை - பிளவுபட்ட; ஆர் - ஆத்தி; குழை - தளிர்; கறிக்கும் - கடிக்கும்.
13. பிறக்கு ஒழிய - பின் நோக்கிச் செல்ல.
14. எந்தை - தலைவ!
15. பனிவார் - நீர் ஒழுகும்; புலந்து - வெறுத்து; உறையும் - தங்கியிருக்கும்.
16. ஆய்தொடி - அழகிய வளையல்; அரிவை - பெண், தலைவி.
17. போது - பூ; குரல் - கொத்து; வேய்தந்தோய் - சூட்டினாய்.

தோழி கூற்று

கைந்நிலை 60 **புல்லங்காடனார்**

திணை : நெய்தல்

கூற்று

வினை முற்றி மீண்ட தலைமகன் வரவு அறியச் சொல்லியது.

கூற்று விளக்கம்

வினைமுற்றி மீண்ட தலைவன் வரவு கண்ட தோழி தலைவியிடம் அதனைச் சொல்லியது.

பொன்அம் பசலையும் தீர்ந்தது பூங்கொடி!
தென்னவன் கொற்கைக் குருகுஇரிய – மன்னரை
ஓடுபுறம் கண்ட ஒண்தாரான் தேர்இதோ
கூடல் அணைய வரவு.

தெளிவுரை

"பூங்கொடியென விளங்கும் தலைவியே! பகைமன்னர் அஞ்சி ஓடுமாறு புறம் கண்ட ஒளிமிக்க வாகைப் பூ மாலையைச் சூடிய நம் தலைவனின் தேர், தென்னவன் பாண்டியனின் கொற்கைக் கடல் துறையில் மேயும் குருகுகள் அஞ்சி ஓடும்படி மதுரையை நெருங்கி வந்துள்ளதை நீ காண்பாயாக! இனி பொன்போன்ற உன் பசலை நோயும் நீங்கும். வருந்த வேண்டா" எனத் தோழி தலைவியைப் பார்த்து மகிழ்ச்சியுடன் கூறினாள்.

கருத்து

தலைவியே! திரும்பி வரும் தலைவன் தேரில் வருவதைப் பார்.

குறிப்பு

இச்செய்யுளில் கூறப்படும் தலைவன், பாண்டிய மன்னனுக்குப் படைத்துணையாகச் சென்ற வீரன் என அறிகிறோம்.

சொற்பொருள்

1. பொன் அம் பசலை - உடலில் பொன்னிறமாய்த் தோன்றும் நிற வேறுபாடு.
2. தென்னவன் - பாண்டியன்; கொற்கை - கொற்கைத்துறைமுகம்; குருகு - நாரை; இரிய - அஞ்சி ஓட; மன்னரை - பகை மன்னர்களை.

3. ஓடு புறம் கண்ட - தோற்றுப் புறமுதுகிட்டு ஓடக் கண்ட; ஒண்தாரான் - ஒளி பொருந்திய (வாகைப்பூ) மாலையைக் கொண்டவன்.
4. கூடல் - மதுரை நகர்; அணைய - போன்ற.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 497 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

குறித்த பருவத்தின்கண் தலைமகன் வந்துழித் தோழி தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தன் சொல் பிழையாமல் கார் காலத்தில் வந்தமைக்கு மகிழ்ந்து, தோழி தலைவியிடம் சொல்லியது.

குறும்பல் கோதை கொன்றை மலர
நெடுஞ்செம் புற்றம் ஈயல் பகர
மாபசி மறுப்பக் கார்தொடங் கின்றே
பேரியல் அரிவைநின் உள்ளிப்
போர்வெங் குருசில் வந்த மாறே.

தெளிவுரை

"பெருமைமிக்க இயல்பினைக் கொண்ட தலைவியே! கொன்றை மரங்கள் குறிய பலவாகிய மாலைகள் போல மலர்ந்துள்ளன. உயர்ந்த செந்நிறப் புற்றுகளிலிருந்து ஈசல்கள் புறப்படுகின்றன. குளிர் மிகுதியால் விலங்கினங்கள் பசியைப் பொறுத்து இரை தேடாது ஒடுங்கின. இத்தகைய நிகழ்ச்சிகளோடு கார் காலம் தொடங்கிவிட்டது. போரை விரும்பிச் சென்ற தலைவர் உன்னை நினைந்து திரும்பி வந்து விட்டார்" எனத் தோழி தலைவியிடம் கூறினாள்.

கருத்து

கார் காலம் தொடங்கிவிட்டது; உன் நினைவால் தலைவர் திரும்பி விட்டார்.

சொற்பொருள்

1. குறும்பல் - குறிய பல (கொன்றை, தலைமாலைபோலக் குறுகியவும் பலவுமான சரங்கள் கொண்ட கொத்துகளாய் மலர்ந்து திகழும்); கோதை - மாலை.
2. நெடுஞ் செம்புற்றம் - நெடிய செந்நிற புற்று; ஈயல் பகர - ஈயல்களை அளிக்க.
3. மா - விலங்கினங்கள்; பசி மறுப்ப - பசியை மறந்து.
4. பேர்இயல் அரிவை - பெருமை வாய்ந்த இயல்பினைக் கொண்ட அரிவையே (தலைவியே).
5. போர் வெங் குருசில் - போர் புரிய விருப்பமுள்ளவனாய் இருந்த தலைவன்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 498 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

குறித்த பருவத்தின்கண் தலைமகன் வந்துழித் தோழி தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தன் சொல் பிழையாமல் கார் காலத்தில் வந்தமைக்கு மகிழ்ந்து, தோழி தலைவியிடம் சொல்லியது.

தோள்கவின் எய்தின தொடிநிலை நின்றன
நீள்வரி நெடுங்கண் வாள்வனப்பு உற்றன
ஏந்துகோட்டு யானை வேந்துதொழில் விட்டென
விரைசெலல் நெடுந்தேர் கடைஇ
வரையக நாடன் வந்த மாறே.

தெளிவுரை

“முன்பகுதி உயர்ந்த கொம்புகளைக் கொண்ட களிற்றுப் படையினைக் கொண்ட வேந்தன் போர்த்தொழிலை முடித்துவிட்டான். (அனைவர்க்கும் வீடு திரும்ப விடையும் கொடுத்தான்.) ஆகவே, விரைந்து செல்லும் நெடிய தேரினைச் செலுத்தி மலைநாடனாகிய நம் தலைவனும் திரும்பி வந்து விட்டான். அதனாலே உன் தோள்களும் தம் பழைய அழகைப் பெற்றன; நெகிழ்ந்து கழலும் உன் வளைகளும் கழலாமல் நிலை நின்றன. நீண்ட வரி படர்ந்த உன் கண்களும் பசலை நீங்கி ஒளி யினையும் வனப்பினையும் அடைந்தன. இனி எனக்கும் உன்னைக் குறித்த வருத்தமில்லை.”

கருத்து

தலைவன் திரும்பிவிட்டான்; நீ இழந்த அழகும் மீண்டும் வந்து உன்னைச் சேர்ந்துவிட்டது.

சொற்பொருள்

1. கவின் - அழகு; நிலை - ஒரு நிலையில்.
2. நீள்வரி - நீளும் வரிகளைக் கொண்ட; வாள்வனப்பு - ஒளி கலந்த அழகு.
3. ஏந்து கோடு - முன்பகுதி உயர்ந்த தந்தம்; தொழில் விட்டெனா - தொழிலினின் றும் விடுவித்தானாக.
4. கடைஇ - செலுத்தி.
5. வரையக நாடன் - மலைநாடன்.

தோழி கூற்று

கலித்தொகை 31 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

'இளவேனிற்காலத்து வருவல், அத்துணையும் ஆற்றியிரு' என்று மண் நசையால் வேந்தன் சென்றவழி, முன்பனிக்காலமும் பின்பனிக்காலமும் வந்து வருத்தலின், ஆற்றாத தலைமகளைத் தோழி, 'வருவர் என வற்புறுப்பவும்', வன்புறை எதிரழிந்தவழித் தலைமகன், 'யாம் குறித்த பருவம் வருந்துணையும் ஆற்றியிராள்' எனப் பின்பனிக்காலத்து வருகின்ற வரவுணர்ந்து, தோழி கழியுவகையால் கூறியது.

கூற்று விளக்கம்

அரசன் நாட்டை விரிவுபடுத்தும் ஆசையால் பக்கத்து நாட்டின்மீது படையெடுத்துச் சென்றபோது தலைவியிடம் தான் இளவேனிற்காலத்தில் தவறாமல் வந்துவிடுவதாய்க் கூறிச் சென்றான். அவன் பிரிந்து சென்றது கூதிர்க் காலத்தில். அடுத்து முன்பனி, பின்பனி ஆகிய காலங்கள் கடந்த பின்னரே இளவேனில் ஆகும். தலைவன் திரும்பி வருவதாய்க் குறிப்பிட்டுச் சொன்ன காலம்வரை பொறுத்திருக்க வேண்டுமெனத் தோழி தலைவியிடம் வற்புறுத்துகிறாள். தோழியின் கூற்றை மறுத்துத் தலைவி முன்பனி, பின்பனி ஆகிய காலங்கள் தன்னை வாட்டி வதைக்குமெனக் கூறுகிறாள். தலைவி ஆற்றியிராளென்பது அறிந்து, தலைவன் பின்பனிக்காலத்திலேயே திரும்புவதை அறிந்த தோழி மிகுந்த மகிழ்ச்சியோடு கூறியது.

தரவு

'கடும்புனல் கால்பட்டுக் கலுழ்தேறிக் கவின்பெற,
நெடுங்கயத்து அயல்அயல் அயிர்தோன்ற, அம்மணல்
வடுத்துஊர வரிப்பபோல் ஈங்கைவாடு உதிர்புஉகப்
பிரிந்தவர் நுதல்போலப் பீர்வீயக் காதலர்ப்
புணர்ந்தவர் முகம்போலப் பொய்கைபூப் புதிதூஉன,
மெய்கூர்ந்த பனியொடு மேல்நின்ற வாடையால்,
கையாறு கடைக்கூட்டக் கலக்குறூஉம் பொழுதுமன்—
'பொய்யேம்'என்று, ஆயிழாய்! புணர்ந்தவர் உரைத்ததை,

தாழிசை

மயங்குஅமர் மாறுஅட்டு, மண்வௌவி வருபவர்,
தயங்கிய களிற்றின்மேல், தகைகாண விடுவதோ–
பயங்கெழு பல்கதிர் பால்போலும் பொழுதொடு,
வயங்கிழை தண்ணென, வந்தஇவ் அசைவாடை;

தாள்வலம் படவென்று, தகைநன்மா மேல்கொண்டு,
வாள்வென்று வருபவர் வனப்புஆர விடுவதோ?
நீள்கழை நிவந்தபூ நிறம்வாடத் தூற்றுபு,
தோள்அதிர்பு அகம்சேரத் துவற்றும்இச் சில்மழை;

பகைவென்று திறைகொண்ட பாய்திண்தேர் மிசைஅவர்
வகைகொண்ட செம்மல்நாம் வனப்புஆர விடுவதோ–
புகைஎனப் புதல்சூழ்ந்து, பூஅங்கண் பொதிசெய்யா
முகைவெண்பல் நுதிபொர, முற்றிய கடும்பனி;

எனவாங்கு–

சுரிதகம்

வாளாதி வயங்கிழாய்! 'வருந்துவள் இவள்'என,
நாள்வரை நிறுத்துத்தாம் சொல்லிய பொய்யன்றி,
மீளிவேல் தானையர் புகுதந்தார்,
நீள்உயர் கூடல் நெடுங்கொடி எழவே.

தெளிவுரை

"*ஆராய்ந்தெடுத்த அணிகலன்களை அணிந்த என் தோழியே ஆறுகளில் நீர் குறைந்து கால்வாய்களாய் ஓடும் தண்ணீ தெளிந்து அழகாய் இருக்கிறது. குளங்களின் பக்கங்கள லெல்லாம் நுண் மணல் பரந்து கிடக்கிறது. அம்மணல்மீது வாடி உதிர்ந்த ஈங்கை மலர்கள் தென்படுகின்றன. காதலரைப் பிரிந் மகளிரின் நெற்றியைப்போல் முன்பு பூத்திருந்த பீர்க்கம்பூ இப்போது எங்கும் காணப்படவில்லை. காதலரைக் கூடிய மகளிரின் முகம்போலப் பொய்கைகளில் தாமரைப்பூக்கள் மலர்ந்து விளங்குகின்றன. இத்தகைய இளவேனிற் காலத்தில் திரும்பிவிடுவதாய்க் கூறித்தான் தலைவர் நம்மைப் பிரிந்து சென்றார். அவர் வரும்வரை நான் ஆற்றியிருக்க விரும்பினாலும் முன்பனிக்காலத்தில் வீசும் வாடைக் காற்றும், உடலை*

வளைக்கும் பின்பனிக்காலக் குளிரும் என்னைச் செயலிழக்கச் செய்து இறந்துபடவும் செய்துவிடுமோ என்று நான் கலக்க முறுகிறேன்.

"பின்பனிக்காலத்தில் சந்திரனின் ஒளிக்கதிர்கள் பால் போல விளங்கும் இரவுப்பொழுதில் என் அணிகலன்கள் குளிர்ச்சி பெறும்படி வீசும் வாடைக்காற்று, பகைவரை வென்று அவர் நாட்டைக் கைப்பற்றி ஆண்யானைமீதேறி வருகின்ற என் தலைவனின் பேரழகைக் காண என்னை விட்டுவைக்குமோ? அதுவரை உயிர் வாழ்வேனோ?"

"முன்பனிக்காலத்தில் நீண்டுயர்ந்த கரும்புகளிலே பூத்த பூக்கள் தம் நிறம் கெடும்படியாகவும், என் தோள்கள் குளிரால் நடுங்குவதால் நான் இல்லத்துள் புகும்படியாகவும் தூறல் வீசும். இக்காலம், தன் தாள் வலிமையால் போர்க்களத்தில் வெற்றி கொண்ட குதிரை யின்மீதேறிப் போரில் வாள் வீசி வெற்றி பெற்ற என் தலைவர் வரும் அழகைக் காண்பதற்கு என்னை விட்டு வைக்குமோ?

"புதர்களைச் சூழ்ந்த பனி, புகை போன்றுள்ளது. தேனை மூடி மறைத்துக்கொண்டிருக்கும் முல்லையரும்புகள் போன்று என் பற்கள் விளங்கினாலும், என் பற்களின் அடியில் ஊறும் தேனமிழ்தம் மூடி மறைக்கப்படாமலே இருக்கும். அத்தகைய பற்கள் ஒன்றோடொன்று மோதிக் கொள்ளும் வகையில் தோன்றியுள்ள பின்பனிக்காலக் கடும்பனி, பகைவரை வென்று, திறைகள் பெற்றுத் தேர் ஏறி வரும் என் தலைவனின் வீரத் தோற்றத்தைக் காண்பதற்கு என்னை விட்டுவைக்குமோ?" என்று தலைவி தோழியிடத்தில் கூறிக் கலங்கினாள்.

இவ்வாறு கூறிக் கலங்கிய தலைவியை நோக்கி, "ஒளி விடும் அணிகளையுடைய என் தலைவியே! பயனில்லாத சொற்களைப் பேசாதே! அவர் இளவேனிற்காலத்தில் திரும்புவதாய்ச் சொல்லிப் பிரிந்திருந்தாலும், அதுவரை நீ அவர் பிரிவைப் பொறுத்திருக்க மாட்டாய், வருந்துவாய் என்பதை ஆராய்ந் தறிந்து, அவர் குறித்துச் சென்ற காலத்துக்கு முன்னாலேயே வந்துகொண்டிருக்கிறார். கூற்றுவனை ஒத்த வேற்படையினர்

புடைசூழ உன் தலைவர் வருவதைப் போற்றி வரவேற்பதுபோல, கூடல் மாநகரின் மாடங்களிலே நெடுங்கொடிகள் அசைகின்றன; கண்டு மகிழ்க" என்று தோழி கூறி மகிழ்வித்தாள்.

கருத்து

கூதிர்க்காலத்தில் வேற்று நாட்டின்மீது படையெடுத்துச் சென்ற தலைவன், இளவேனிற்காலத்தில் திரும்பி வந்துவிடுவதாய்ச் சென்றான். இடையில் உள்ள முன்பனிக்காலத்திலும், பின்பனிக் காலத்திலும் பிரிவுத்துயர் மிகவும் வருத்துமே என்று தலைவி கவலையுற்றிருந்தாள். அவள் ஆற்றியிருக்க வேண்டுமெனத் தோழி வற்புறுத்திக் கூறினாள். தலைவி தான் ஆற்றியிருக்க விரும்பினாலும் உடல் நடுங்க வீசும் வாடைக்காற்றும், வீட்டினுள் அடைபட்டிருக்கச் செய்யும் குளிர்மழைத் தூறலும், பற்களைக் கிட்டியடித்துக் கொள்ளச்செய்யும் கடும்பனியும் தலைவன் வெற்றியோடு திரும்புவதைக் காணத் தன்னை உயிரோடு விட்டுவைக்குமோ என்று கூறி மிகவும் வருந்தினாள். தோழி, தலைவியை நோக்கி, "தலைவன் இளவேனிற் காலத்தில் வருவதாய்க் கூறியிருந்தாலும், நீ பிரிவாற்றமாட்டாய் என்பதை ஆராய்ந்து முன்பனிக்காலத்திலேயே திரும்பி வந்துகொண்டிருக்கிறான்" எனக் கூறித் தலைவியை மகிழ்வித்தாள்.

குறிப்பு

முன்பனிக்காலம் தோன்றிப் பின்பனிக்காலமாய் வளர்ந்து நிறையும் பொழுது குளிரால் ஏற்படும் துன்பம் மிகுந்து கொண்டிருத்தலையும் அதற்கேற்பப் பிரிவுத்துன்பம் மிகுதலையும் தாழிசைகள் நிரல்படக் கூறின.

சொற்பொருள்

1. கலுழ் - கலங்கல்; தேறி - தெளிந்து; கவின் - அழகு.
2. கயம் - குளம்; அயிர் - நுண்மணல்.
3. ஈங்கை - ஈங்கை மலர்; வாடு - வாடல் பூ.
4. பீர் - பீர்க்கு; வீய - பூக்க.
5. பொய்கை - குளம், நீர்நிலை; ஈன - பூக்க.
6. கூர்ந்த - நடுங்க.
7. கையாறு - செயல் இழத்தல்; கடைக்கூட்ட - வந்து சேர.
8. புணர்ந்தவர் - கூடியவர்.
9. அமர் - போர்; மாறுஅட்டு - மாற்றாரை வென்று; மண்வௌவி - நாட்டைக் கைப்பற்றி.

10. தகை காண - அழகினைக் காணுமாறு.
11. பால்போலும் பொழுது - பால்போல விளங்கும் நிலவுப்பொழுது.
12. அசை வாடை - வீசுகின்ற வாடைக்காற்று.
13. தாள்வலம்பட - முயற்சி வெற்றி பெற; நன்மா - நல்ல குதிரை.
14. வாள் வென்று - போரில் வெற்றி பெற்று.
15. நீள்கழை - நீண்ட கரும்பு; நிவந்த பூ - ஓங்கின பூ, மேலெழுந்த பூ.
16. அகம்சேர - வீட்டினுள் நுழைந்துகொள்ளுமாறு; துவற்றும் - தூறும்; சில்மழை - பனி.
17. திறை - கப்பம்; மிசைஅவர் - மேலே உள்ள அவர்.
18. செம்மல் - தலைமை; வனப்பு - அழகு.
19. பொதி செய்யா - மூடி மறைத்துக்கொண்டிருக்கும்.
20. நுதி - நுனி; பொர - ஒன்றோடொன்று மோத.
22. வாளாதி - பயனில பேசாதே.
23. நிறுத்து - சிந்தனை செய்து, ஆராய்ந்து பார்த்து.
24. மீளி - கூற்றுவன் (போன்ற); வேல் தானை - வேல் படை.
25. நீள் உயர் - நீண்டு உயர்ந்த; கூடல் - மதுரை.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 426 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

வேந்தற்குத் தானைத் தலைமகனாய் ஒழுகும் தலைமகன் பிரிந்து வினை முடித்து வந்து தலைமகளோடு உறைகின்றுழி, 'இன்னும் பிரியுங்கொல்' என்று கருதிய தலைமகட்குக் கவற்சிதீரச் சொல்லியது.

கூற்று விளக்கம்

வேந்தனுக்குச் சேனைத்தலைவனாய்ப் பணியாற்றும் தலைவன் தலைவியைப் பிரிந்து சென்று பணி முடிந்ததும் வீடு திரும்பித் தலைவியோடு வாழ்கிறான். 'அவன் மறுபடியும் பிரிவானோ' என்று தலைவி மயங்க, அவள் கவலை தீருமாறு தலைவன் சொல்லியது.

வெல்வேல் வேந்தன் அருந்தொழில் துறந்துஇனி
நல்நுதல்! யானே செலவொழிந் தனனே;
முரசுபாடு அதிர ஏவி
அரசுபடக் கடக்கும் அருஞ்சமத் தானே.

தெளிவுரை

"அழகிய நெற்றியைக் கொண்டவளே! போர்முரசுகள் முழங்க, தன் படையைப் பகைவர்மேற்செலுத்தி, பகை மன்னர் தோற்றோட, வெற்றி கொண்ட நம் மன்னன், போர் செய்தலைத் தவிர்த்தான். ஆதலால், நானும் போர் காரணமாய்ச் செல்லு தலை இப்பொழுது தவிர்த்துள்ளேன்."

கருத்து

போருக்கென இப்போது நான் பிரியேன். கலங்காதிரு.

சொற்பொருள்

1. வெல்வேல் - வெற்றியைத் தருகின்ற வேல்; அருந்தொழில் - போர்த்தொழில்; துறந்து - தவிர்த்து.
2. நல் நுதல் - அழகிய நெற்றியைக் கொண்டவளே!; செலவு ஒழிந்தனன் - போருக்காகச் செல்லுதலைத் தவிர்த்துள்ளேன்.
3. பாடு - முழக்கம்.
4. அரசுபட - பகையரசர்கள் அழியுமாறு; கடக்கும் - வெல்லும்; சமம் - போர்.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 427 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

பிரியுங்கொல் என ஐயுற்று உடன்படாமை மேற்கொண்டொழுகுகின்ற தலைமகட்குத் தான் பிரிவு ஒழிந்தமைக்குக் காரணம் கூறித் தேற்றியது.

கூற்று விளக்கம்

தலைவன் தன்னைப் பிரிந்து போர்க்கடமையாற்றுதற்குச் செல்வானோ என ஐயுற்று அல்லல்பட்டுக்கொண்டிருந்த தலைவிக்குத் தான் இனிப் பிரிவதில்லை என்பதற்குக் காரணம் கூறி அவள் ஐயத்தைத் தலைவன் போக்கியது.

பேரமர் மலர்க்கண் மடந்தை நீயே
கார்எதிர் பொழுதென விடல்ஒல் லாயே;
போருடை வேந்தன் பாசறை
வாரான் அவன்எனச் செலவுஅழுங் கினனே.

தெளிவுரை

"*விரும்புதற்குரிய பெரிய மலர்போலும் கண்களைக் கொண்டவளே! நீயோ இது காதலர் பிரிந்திருக்க இயலாத கார் காலம் என்று கருதி பிரிவதற்கு உடன்படாதிருக்கிறாய். அரசனும் நான் காதலியைப் பிரிந்து போர்ப்பாசறைக்கு வரமாட்டேன் என்று கருதிப் போர்மேல் செல்வதைத் தவிர்த்துவிட்டான்.*"

கருத்து

கார் காலத்தில் துணையைப் பிரிந்து நான் போர்க்களத்திற்கு வரமாட்டேன் எனக் கருதி அரசனே போரைத் தவிர்த்து விட்டான்.

குறிப்பு

இக்கார் காலத்தில் நான் பாசறை இருப்பிற்கு உடன்படேன் என்று அரசன் கருதி என்பால் கொண்ட அன்பால் தானே போரைத் தவிர்த்து விட்டான் என்கிறான், தலைவன். இதன்மூலம் தன் துணையின்றி மன்னன் போர்மேல் செல்லான் எனத் தன் காதலியிடம் சொல்லிப் பெருமிதம் கொள்கின்றான்.

சொற்பொருள்

1. பேர்அமர் - பெரிதும் விரும்புதற்குரிய.
2. கார் எதிர்பொழுது - கார்காலம் தோன்றும் பொழுது; விடல் ஒல்லாய் - என்னை விடுதற்கு ஒப்பாய்.
3. பாசறை - பாடிவீடு.
4. அழுங்கினன் - தவிர்த்தனன்.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 428 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

பிரியுங்கொல் என்று ஐயுற்ற தலைமகள் ஐயந்தீரத் தலைமகன் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் கார் காலத்தில் பிரிவானோ என ஐயுற்று வருந்திய தலைவியிடம் அவள் ஐயம் தீரத் தலைவன் சொல்லியது.

தேர்செலவு அழுங்கத் திருவில் கோலி
ஆர்கலி எழிலி சோர்தொடங் கின்றே
வேந்துவிடு விழுத்தொழில் ஒழிய
யான்தொடங் கினனால் நின்புறம் தரவே!

தெளிவுரை

"தேர்களின் சீரான இயக்கத்தினைத் தடுக்கும் வகையில் வானவில்லைத் தோற்றுவித்து, மிகுந்த ஆரவாரத்தோடு கார் கால மேகம் மழை பொழியத் தொடங்கிவிட்டது. வேந்தனும் 'தூது செல்க' என்று தான் இட்ட ஆணையை, 'இப்போது வேண்டா' என்று தவிர்த்தான். அதன் விளைவாய் நான் இனி உன்னைப் பேணும் கடமையை மேற்கொண்டேன்."

கருத்து

அரசன் தான் இட்ட தூதுப்பணியை இப்போது தவிர்த்து விட்டான்; ஆதலின் உன்னைப் பிரியேன்.

சொற்பொருள்

1. தேர் செலவு அழுங்க - தேரைச் செல்ல விடாமல் தடுக்க (மழை தொடங்கிவிட்டது); திருவில் - வானவில்; கோலி - வளைத்து.
2. ஆர்கலி எழிலி - இடி முழக்கம் செய்யும் மேகம்; சோர் தொடங் கின்றே - மழை பெய்யத் தொடங்கிவிட்டது.
3. விழுத்தொழில் - விழுமிய தொழில் (தூது).
4. நின்புறம் தர - உன்னைப் பாதுகாக்க.

சங்க இலக்கியங்கள், பழந்தமிழர் வாழ்வியலின்
பண்பாட்டுக் களஞ்சியங்கள்;

சாதாரண வரிக்குக் கூட மெருகூட்டி மிளிரச் செய்யும்
மேதை சிலம்பொலியின் முத்தான உரைகளோடு
தமிழுக்கு ஓர் அருங்கொடையாய்த்
தன் வாழ்நாளின் ஒப்பற்ற சாதனையாய்ப்

பதினான்கு தொகுதிகளாக வெளிவருகின்றன
சிலம்பொலி செதுக்கியுள்ள உரைச்சிற்பங்கள் இவை
வெறும் பொழிப்புரைகள் அன்று, பொன்னுரைகள்.

தமிழ் கூறு நல்லுலகம்
சிலம்பொலியின் சீர்மிகு படைப்புக்குச்
சிவப்புக் கம்பள வரவேற்பு நல்கிப்
பெரிதும் பயன்பெறும் அவரைப்
போற்றிப் பாராட்டும்.

இலக்கிய வீதி இனியவன்

சிலம்பொலி...

செந்தமிழர் செவிகளுக்குத் தேனொலி;
செம்மாந்த சிந்தனையின் பேரொளி;
நன்னெறியாளர்; நுண்ணறிவாளர்;
தன்னலம் கருதாத் தமிழ்ப்பேரறிஞர்.
சங்கத்தமிழின் ஆழம்கண்ட வேழம் இவர்

ஆறாயிரம் பக்கங்களில் பதினான்கு தொகுப்புகளாகச் சிலம்பொலி செல்லப்பனார் வடித்திருக்கும் "செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியம்", தமிழின் அக இலக்கிய உலகிற்கு அருளப்பட்டிருக்கின்ற அரும்பெரும் கொடை. ஐம்பதாண்டுக் காலத்திற்குமேல் தமிழின் அக இலக்கியங்களில் ஆழ்ந்து தவமிருந்து, சிலம்பொலியார் அயராமல் உழைத்ததன் காரணமாக, நமது இளம்தலைமுறையினருக்கு இப்படியோர் வரம் கிடைத்திருக்கிறது. தவமிருந்தவர் சிலம்பொலியார்; வரம் பெற்றவர்களோ தமிழர்கள்.

தமிழைத் திரட்டித் திரட்டி நிகழ்காலத்தின் கரங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற இந்நூல் வரிசை, என்றென்றைக்கும் நமது அகநூல் களுக்கான களஞ்சியமாகவும், அவற்றுக்கான அரணாகவும், அவற்றை நோக்கிப் பயணிக்க உதவுகின்ற பண்பட்ட பாதையாகவும் திகழும். இப்படைப்பு வரிசை உலகெங்கும் விரிந்து பரவுகின்ற உயிர்த்தன்மை மிக்க, உண்மைத்தன்மை மிக்க, பனிப்போரை உயர்த்தும் தன்மை மிக்கவை.வணங்குவதற்கு மட்டுமல்ல, நன்றி கூறவும் கைகூப்புவோம், சிலம்பொலியாரை நோக்கி.

கவிஞர் ஜெயபாஸ்கரன்

Set of 14 Books
ISBN: 978-81-8379-767-2
Vol-12
ISBN: 978-81-8379-779-5